# மருத்துவர் வரலாறும் வழக்காறுகளும்



மெய்யப்பன் பதிப்பகம்

















முனைவர் த.ரெஜித்குமார்

# மருத்துவர் வரலாறும் வழக்காறுகளும்

முனைவர். த. ரெஜித்குமார்

மெய்யப்பன் பதிப்பகம்
53, புதுத்தெரு, சிதம்பரம்-608001.

முதல் பதிப்பு : டிசம்பர், 2012
திருவள்ளுவர் ஆண்டு : 2043
உரிமை : ஆசிரியர்க்கு
விலை : ரூ. **150.00**
மெய்யப்பன் பதிப்பக வெளியீட்டு எண் : 467

**நினைவில் வாழும்**
**நிறுவனர்**
## ச. மெய்யப்பனார்



டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

**'வள்ளுவம்'** இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் **'தமிழவேள்'** என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் **'செந்தமிழ்க் காவலர்'** என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

**'பதிப்புச் செம்மல்'** என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

*கிடைக்குமிடங்கள்:*

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608001. ✆:04144-230069
31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600108. ✆:044-25361039
6, சிவஞானம் தெரு, தி. நகர், சென்னை - 600017. ✆:044-24357832
110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625001. ✆:0452-2622853
15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641001. ✆:0422-2397155
296/134, செரி சாலை, சேலம் - 636007. ✆:0427-4030709
28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620002. ✆:0431-2706450

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
சென்னை – 600 021, தொலைபேசி : 25954528

# சமர்ப்பணம்



வறுமைப் பிடியில் வதங்கிடக் கண்டும்
மறந்தரும் கல்வி மகன்நான் கற்கச்
சிறப்புடன் செய்வித்த சீரிய பெற்றோராம்
தர்மலிங்கம் புஷ்பம் திருவடிப் போற்றிடல்
பெற்றமெனக் கண்டேன் பணிந்து.

(பஃறொடை வெண்பா)

**முனைவர் ஆறு. இராமநாதன்,**
பேராசிரியர் - தலைவர் (ப.நி.),
நாட்டுப்புறவியல் துறை,
மேனாள் மொழிப்புலத் தலைவர்,
இயக்குநர், பதிப்புத்துறை மற்றும் தொலைநிலைக்கல்வி,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

# அணிந்துரை

இந்திய சமூகம் சாதியை அடிப்படையாகக் கொண்டது சாதிகளின் தோற்ற வரலாறு, சாதிகளிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகள், சாதிய ஒடுக்குமுறைகள் குறித்து ஏராளமான ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகள் இந்திய சமூக வரலாற்றினைப் புரிந்து கொள்ள உதவுகின்றன. தென்னிந்தி யாவைப் பொறுத்தவரை எட்கர்தர்ஸ்டன் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் "தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்" (Castes and Tribes of Southern India) என்னும் தலைப்பில் வெளியிட்ட ஏழுதொகுதிகள் ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தின் சாதீயஅமைப்பைப் புரிந்துக்கொள்ள உதவுகின்றன. தமிழ் இலக்கியங்களையும், கல்வெட்டுக்களையும் செப்பேடுகளையும் அடிப்படை ஆதாரங்களாகக் கொண்டு செய்யப்பட்ட சாதீய ஆய்வுகள் தமிழகத்தின் சாதிவரலாற்றையும் சமூகப்படி நிலைகளையும் புரிந்துகொள்ளப் பெரிதும் உதவுகின்றன.

நெடுங்காலமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்த கல்வி கற்கும் உரிமை, சுதந்திர இந்தியாவில் அனைத்து மக்களுக்கும் கிடைத்தது. இதனால் முற்பட்ட சாதிகளோடு பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களும் கல்வி கற்றனர். இதன் விளைவாகத் தத்தம் சாதியினர் சமூகத்தில் பெற்றுவரும் இடத்தையும் அதற்கான சமூகக் காரணங்களையும் பற்றிச்சிந்திக்கத் தொடங்கினர். தத்தம் சாதிகளின் வரலாற்றையும், இன்றைய நிலையினையும் பற்றிய ஆய்வில் தீவிரம் காட்டத் தொடங்கினர். வரலாற்று ஆசிரியர்களைப் போல் எழுத்து ஆதாரங்களை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல் வாய்மொழியாக மக்களிடையே வழங்கிவரும் வழக்காறுகளையும் ஆதாரங்களாக்க் கொண்டு தத்தம் ஆய்வைச் செய்து வருகின்றனர்.

நாட்டுப்புறவியல் துறையில் இதுபோன்ற ஆய்வுகள் பல நிகழ்ந்துள்ளன - நிகழ்ந்து வருகின்றன. அவ்வகையில் மருத்துவர்களைப் பற்றிய இந்த ஆய்வு குறிப்பிடத்தக்கது.

முனைவர் த. ரெஜித்குமார்-இன் கடும் உழைப்பில் உருவான நூல் இது. தமிழகத்தின் பல பகுதிகளுக்கும், தமிழகத்தை ஒட்டிய கேரள பகுதிகளுக்கும் சென்று நூற்றுக்கு மேற்பட்ட மருத்துவ இனமக்களைச் சந்தித்து, அவர்களிடமிருந்து திரட்டப்பட்ட தரவுகளை ஆதாரமாகக் கொண்டு, அவர்களைப் பற்றிய ஆய்வு நூலை உருவாக்கியுள்ளார். 'மருத்துவர்களும் மரபும்' 'மருத்துவ சமூக உறவும் ஒடுக்குமுறைகளும்' என்னும் தலைப்புகளில் அவர்களின் வரலாற்றையும் இன்றைய நிலையினையும் ஆராய்ந்துள்ள ரெஜித்குமார், 'சடங்குகளும் நம்பிக்கைகளும்', 'வாய்மொழி வழக்காறுகள்', 'நாட்டுப்புற மருத்துவம்' ஆகிய தலைப்புகளில் அவர்களின் வழக்காறுகளையும் விரிவாக ஆராய்ந்துள்ளார். மருத்துவர்களாக இருந்து சமூகப்பணியாற்றிய மக்கள் நாளடைவில் ஒடுக்கப்பட்ட மக்களாகச் சேவைச் சாதியாக எவ்வாறு மாற்றப்பட்டுள்ளனர் என்பதை இந்த நூலில் தெளிவுப்படுத்தியுள்ளார்.

இந்நூல் சமூக முக்கியத்துவம் வாய்ந்த நூலாகும். மருத்துவ இனமக்களின் வரலாற்றையும் இன்றைய நிலையினையும் தெளிவாக எடுத்துரைக்கும் நூல், நூலாசிரியரின் கடினஉழைப்பு பாராட்டத்தக்கது. இதுபோன்ற பல ஆய்வுகள் உருவாக இந்நூல் தூண்டுகோலாக அமையும். தங்களைப் பற்றித் தாழ்வுமனப் பான்மையில் உழலும் ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களைப் பற்றிப் பெருமிதம் கொள்வதற்கு அருமருந்தாக அமைவது இந்நூல். தமிழ் கூறும் நல்லுலகம் நூலாசிரியரின் கடினஉழைப்பைப் பாராட்டி ஊக்குவிக்க வேண்டும். ஆசிரியர் இதுபோன்ற பல நூற்களை எழுதி வெளியிட வாழ்த்துகிறேன்.

**முனைவர் இ. ஸ்டான்லிபாய்,**
இணைப்பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர்
தமிழாய்வுமையம்,
ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி),
நாகர்கோவில்.

## வாழ்த்துரை

இனக்குழுக்களின் வரலாறும் வழக்காறும் தமிழகத்தின் தொன்மை வரலாற்றை அறிய உதவும் சான்றாதாரங்கள். தனித்து நின்ற இனக்குழுக்கள் ஒவ்வொன்றையும் இணைத்த தொடர்பாற்றல் மிக்க சேவைச் சாதியே மருத்துவர் இனம். பன்முகத்திறன் படைத்த மருத்துவ இனமக்கள் இசை, அழகியல் ஆகிய நுண்கலைகளிலும் மருத்துவம், சிகையலங்காரம், நெசவு ஆகிய தொழில்களிலும் சிறந்து விளங்கினர். மருத்துவ இனமக்கள் செய்துவந்த தொழில்கள் அனைத்தும் பரிணாம வளர்ச்சியடைந்து, யார் வேண்டுமென்றாலும் இந்தத் தொழில்களைச் செய்யலாம் என்ற நிலைக்கு வந்துவிட்டது. ஆனால் மருத்துவ இனமக்களின் சேவை இல்லையென்றால் எந்தச் சடங்குமுறையும் நடைபெறாது என்ற நிலைமாறி, இவர்களின் வாழ்வியல் முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

மருத்துவ இனமக்கள் தகவல்களைக் கொண்டு செல்லும் ஊடகமாகச் செயல்பட்டுள்ளனர். இப்பணியே சமூகத்தில் இவர்களுக்குத் தனித்த ஓர் அங்கீகாரத்தை அளித்தது. அழிந்து கொண்டிருக்கின்ற ஒரு சமூகத்தின் வழக்காறுகளைப் பதிவு செய்து ஆவணப்படுத்தி சாகாவரம் அளித்த எமது அன்பு மாணவர் முனைவர் த. ரெஜித்குமார் பாராட்டிற்குரியவர். அவரது கடின உழைப்பும் விடாமுயற்சியும் இந்நூலை வெளிக்கொணரச் செய்துள்ளது. நாட்டுப்புறவியல் ஆய்வு மாணவர்களுக்குப் பயனுள்ள நூல் இது என்பதில் ஐயமில்லை. இன்னும் பல நூல்களை வெளியிட்டுத் தமிழ்ப்பணியாற்ற வேண்டுகிறேன்; அவரது பணிசிறக்க மனதார வாழ்த்துகிறேன்.

என்றும் அன்புடன்,
**இ. ஸ்டான்லிபாய்**

# முகவுரை

வளர்ந்து வரும் ஆய்வுத்துறைகளில் நாட்டுப்புறவியலும் ஒன்றாகும். நாட்டுப்புறவியல் பல்வேறு கூறுகளைக் கொண்டுள்ளது. இவை ஒரு சமுதாயத்தின் உள்ளார்ந்த அமைப்புகளை வெளிப்படுத்துவனவாக உள்ளன. இதனுள் இலக்கியம், கலை, பண்பாடு, பழக்கவழக்கங்கள் முதலியன அடங்கும். மரபு வழியாக வாழ்ந்து வருகின்ற மக்களின் வாழ்வையும், வாழ்வியல்க் கூறுகளையும் படம்பிடித்துக் காட்டுவது நாட்டுப்புறவியலாகும். நாட்டுப்புற மக்களின் கதைகள், பாடல்களை மட்டும் பரவலாக ஆய்வு செய்தால் குறிப்பிட்ட இனமக்களின் தொழில்கள், வாழ்வியல்க் கூறுகளை முழுமையாக அறிந்துகொள்ள வாய்ப்பு இல்லை. எனவே, ஒரு குறிப்பிட்ட குழுவினராக வாழும் மக்களைப் பற்றியும், அவர்கள் வாய்மொழியாக வழங்குகின்ற பாடல்கள், கதைகள், வாழ்வியல் கூறுகள், தொழில்கள் முதலிய பல்வேறு கூறுகளை விரிவாக ஆய்வு மேற்கொள்ளும் முறை தற்போது வளர்ந்து வருகின்றது. இனக்குழுக்களாகக் காணப்பட்ட மக்கள் 'சாதி' என்ற அடிப்படையில் பாகுபடுத்தப்பட்ட பின்பு, சாதிகள் குறித்த பலவிதமான ஆய்வுகள் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலேயே தொடங்கப்பட்டுவிட்டன. அவர்கள் இனக்குழுக்களைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டி; சாதிகளைப் பற்றிய பல்வேறு தரவுகளைப் பதிவு செய்துள்ளனர். சேவைச் சாதிகளுள் ஒன்றான மருத்துவச் சாதிக் குறித்த பதிவுகள் கி.பி. 1868-இல் இருந்து கிடைக்கின்றன. 'The Madras Country A Manual' (Nelson, J.H. 1989:73) என்ற நூலில் காணப்படுகின்றது. இதன் முதல் பதிப்பு கி.பி. 1868-இல் வெளியிடப்பட்டது. அதன் பின்னர் தென்னிந்தியச் சாதிகளைப் பற்றி ஆய்வுச் செய்த எட்கர் தர்ஸ்டன் என்பவர் தமது நூலான Castes and Tribes of Southern India (1993:32-34) என்ற பெயரில் நூலாக வெளியிட்டார். இதன் முதற்பதிப்பு கி.பி. 1909-இல் வெளிவந்தது. இதில் மருத்துவர்களின் பல்வேறு உட்சாதி பிரிவுகளைப் பற்றி சற்று விரிவாகப் பதிவு செய்துள்ளார். இஃது அகரவரிசையில் ஏழு தொகுதிகளை உள்ளடக்கியது. கி.பி.1960-இல் 'Service Relationship between Barbers and Villagers - In a Small Village in Rampur' (Patnaik; Nityananda, 1960: 737-742) என்ற கட்டுரை வெளிவந்தது. இதில் ஆதிக்கச் சாதிக்கும், மருத்துவச் சாதிக்கும் உள்ள சமூகப் பொருளாதார உறவுகள் மற்றும் எவ்வாறு

இவ்வின மக்கள் ஒடுக்கப்பட்டார்கள், ஏன் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள் ஆகியவைக் குறித்துச் செய்திகள் காணப்படுகின்றன. சிங் என்பவர் People of India என்ற நூலில் ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள சாதிகளைப் பற்றி ஆய்வுச் செய்துள்ளார். இதன் முதற்பதிப்பு கி.பி. 1992-இல் வெளியிடப்பட்டது (2001:47). அதில் மருத்துவர்களைப் பற்றிய பல செய்திகள் பதிவு காணப்படுகின்றன. எனினும், இவ்வின மக்களைப் பற்றிய முழுமையான வழக்காற்றியல் மற்றும் இனவரைவியல் அடிப்படையிலான எந்த ஒரு ஆய்வும் இதுவரை வெளிவராத நிலையில் இந்நூல் சிறப்பு மிக்கதாகும்.

சாதிய படிநிலையில் ஒரு சாதியினர் தங்களின் அடையாளம் மற்றும் அதிகாரம் பற்றிய விழிப்புணர்வைப் பெற வேண்டுமானால் தங்களின் வரலாறு எது என்ற பிரக்ஞையை அவர்கள் பெற்றாக வேண்டும். எனவே தான் இன்று ஒவ்வொரு சாதியினரும் தங்களைக் குறித்த வரலாற்றைத் தாங்களே கட்டமைப்பதில் முனைப்புடன் காணப்படுகின்றனர். அடித்தட்டு மக்களின் வரலாற்றைக் கட்டமைக்க வேண்டுமானால் அவர்களிடம் வாய்மொழியாக வழங்கப்பட்டுவரும் இலக்கியங்கள், கலைகள் முதலியவை முதன்மைச் சான்றுகளாக அமைகின்றன. இத்தகைய நிலையில் சமூகத்தில் சேவைப் பணிச் செய்து வந்த - வருகின்ற ஒடுக்குமுறைக்குள்ளாக்கப்பட்ட மருத்துவச் சாதியின் வரலாற்றை அடையாளப் படுத்தும் விதமாக அவர்களது வழக்காறுகளை முன்வைத்து வரலாற்றைப் பேச முனைகிறது இந்நூல்.

இந்நூல் வெளிவர உதவிய பலருக்கும் நன்றி சொல்ல கடமைபட்டுள்ளேன்.

நிறைய நன்றிகளைச் சொல்ல வேண்டியவர்களுள் முதன்மையானவர், என்னை மாணவனாக ஏற்றுக் கொண்ட காலம் முதல் இன்றுவரை என்னை நல்வழிப்படுத்தி இந்நூல் வெளிவருவதற்கு உறுதுணையாகவும், ஆய்வு வழிகாட்டியாகவும் விளங்கிய சுரண்டை அரசுகலைக் கல்லூரி பேராசிரியர் முனைவர் யோ. தர்மராஜ் அவர்களுக்கு எனது உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலுக்குச் சிறப்பானதொரு அணிந்துரை வழங்கியதோடு இந்நூல் வெளிவருவதற்குப் பல்வேறு வழிகளில் உதவி செய்த

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் நாட்டுப்புறவியல் துறைப் பேராசிரியர் முனைவர் ஆறு. இராமநாதன் அவர்களுக்கு என் நன்றி.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கியதோடு எனது ஆய்வு காலத்தில் பெரிதும் ஊக்கமளித்த ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியை முனைவர் இ. ஸ்டான்லி பாய் அவர்களுக்கும், இந்நூல் வெளிவர அவ்வப்போது ஊக்கமளித்து அறிவுரை வழங்கிய மா. அப்பாக்கூடம், முனைவர் ஜே. ரோஸ்லெட் டானிபாய்அவர்களுக்கும், மற்றும் குமரிமாவட்ட கலை இலக்கிய மன்ற தோழர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறேன்.

நான் ஆய்வு மேற்கொண்ட காலங்களில் எனக்குத் தேவையானத் தகவல்களைத் தந்துதவிய அனைத்து மருத்துவயின தகவலாளர்களுக்கும்; ஆய்வு காலத்திலும் நூலாக்கப் பணிகளிலும் எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்த என் அன்பு பெற்றோர் மற்றும் உடன் பிறந்த சகோதர, சகோதரிகளுக்கும், நண்பர்களுக்கும் என் நன்றி என்றும் உரியது.

இந்நூலைச் சிறந்த முறையில் தட்டச்சு செய்து தந்த நாகர்கோவில் வின்-டெக் கணிணி நிறுவனத்தாருக்கும், நூலாகப் பதிப்பித்து வெளியிட்ட மணிவாசகர் பதிப்பகத்தாருக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றியுடன்
***த. ரெஜித்குமார்***

முனைவர். யோ. தர்மராஜ்
இணைப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
அரசு கலைக்கல்லூரி,
சுரண்டை.

## மறைந்த வரலாற்றைத் தேடி

சாதிகள் தங்களது அடையாளங்களைத் தேடி, சமூகத்தில் தங்களுக்கொன்று வரலாறு என்ற ஒன்று இருக்கிறது என்பதை மெய்ப்பிக்கும் காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்தத் தேடலில் குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த ஆய்வாளர்கள் தங்கள் சாதியின் வரலாற்றை முனைப்புடன் தேடி புதிய வரலாற்றைக் கட்டமைக்க முனைகின்றனர். மற்றொரு நிலையில், பிறசாதியைச் சார்ந்த ஆய்வாளர்கள் ஆய்வுமுனைப்போடு தங்களைப் பாதித்த அல்லது தாங்கள் விரும்பிய ஒரு சாதியைப் பற்றிய ஆய்வு தேடலை நிகழ்த்தி வரலாற்றை அபரிதமான முறையில் கட்டமைப்பதும் உண்டு. நான் இங்கு குறிப்பிட்ட இருவிதமான ஆய்வாளர்களில் இரண்டாவது சொல்லப்பட்ட பிறசாதிகளின் வரலாற்றை முனைப்புடன் ஆய்வுசெய்து தமிழ்உலகில் நாட்டுப்புறவியல் சார்ந்து பல்வேறு தளங்களில் திறம்பட ஆய்வுசெய்து; வருபவர் எனது மாணவன் முனைவர் த. ரெஜித்குமார் என்பதில் பெருமை அடைகிறேன்.

சில உண்மை வரலாற்றை மறைப்பதற்கு பல வரலாற்று மோசடிகளும் நடைபெறுவது வழக்கம் என்பதற்கு ஆதாரமாக மருத்துவச் சமூகமானது 'நாசுவன்' என்ற இழிவுச் சொல்லால் அழைக்கப்பட்டு சமூகத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டனர். நூலாசிரியரின் ஆய்வுத்திறத்தால் அவன் 'ஆதிமருத்துவன்' என்ற ஆழ்ந்த வரலாற்று உண்மையை வெளிக்கொணர்ந்துள்ளார். ஒதுக்கப்பட்ட எல்லா சாதிகளுக்கும் தனித்த அடையாளங்களும், கலை, பண்பாடு, வழக்காறுகள் உள்ளன. அவை வெளிக்கொணரப்படாமல் ஆதிக்கச் சாதிகளின் தனித்தக் கூறுகள் மட்டுமே பொது புத்தியில் மீண்டும் மீண்டும் சொல்லப்படுகிறது. ஒடுக்கப்பட்டவர்களைப் போலவே அவர்களது தனித்தக்

கூறுகளும் மறைக்கப்பட்டு விடுகின்றன. நூலாசிரியர் மருத்துவர்களின் மறைக்கப்பட்ட வரலாறு, மருத்துவக்கலை, இசைக்கலை, சடங்கியல் முறைமைகள். ஆகியவற்றை வெளிக்கொணர்ந்து தந்துள்ளார்.

இந்நூல் இந்தியச் சமூகங்களில் மருத்துவச் சமூகத்திற்கான அங்கீகாரத்தை பெற்றிட துணைபுரிவதுடன், ஆய்வாளர்களுக்கு வளமிக்க குறிப்புகளை வழங்கும் பெட்டகமாக விளங்குகிறது என்றால் மிகையாகாது.

எனது மாணவர் இதற்குமுன் 'மரபுவழித்தொழில்கள்', 'புழங்குபொருள் பண்பாடு', ஆகிய இரு அரியபெரும் ஆய்வுநூல்களைத் தமிழ் உலகுக்கு ஈந்தளித்துள்ளார். தொடர்ந்து, ஆய்வுத்துறையில் அர்ப்பணிப்புடன் தமது கடின உழைப்பைக் காட்டி வருகின்றார் என்பதற்கு 'மருத்துவர் வரலாறும் வழக்காறுகளும்' என்ற நூல் தக்கச் சான்றாகும். இவரது ஆய்வுப்பணிகள் மென்மேலும் சிறக்க என்ஆசி எப்போதும் எம் மாணவருக்கு உண்டு.

பாசத்துடன்...
**முனைவர் யோ. தர்மராஜ்**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | அணிந்துரை | 4 |
| | வாழ்த்துரை | 6 |
| | முகவுரை | 7 |
| | மறைந்தவரலாற்றைத் தேடி | 10 |
| 1. | மருத்துவர்களும் மரபும் | 13 |
| 2. | மருத்துவர் சமூக உறவும் ஒடுக்குமுறைகளும் | 115 |
| 3. | சடங்குகளும் நம்பிக்கைகளும் | 163 |
| 4. | வாய்மொழி வழக்காறுகள் | 198 |
| 5. | நாட்டுப்புற மருத்துவம் | 259 |
| | துணைநூற்பட்டியல் | 284 |
| | தகவலாளர் பட்டியல் | 294 |

# 1. மருத்துவர்களும் மரபும்

இந்திய சமூகமானது சாதி அமைப்பினுள் கட்டுண்டு காணப்படுகிறது. ஏனெனில், இந்தியாவில் சுமார் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட சாதிகள் காணப்படுகின்றன. அவையாவும் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டின் அடிப்படையில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. சாதியினைப் பற்றி அறிஞர் நெஸ்பீல்டு, சாதி என்பது சமூகத்தின் ஒரு வகுப்பாகும் (Class). இவ்வகுப்பு இது போன்ற பிற வகுப்புகளுடனான எத்தகையத் தொடர்பையும் மறுதலிக்கும். எந்தவொரு வகுப்பும் மற்ற எந்த ஒரு வகுப்புடனும் திருமணம் செய்து கொள்ளாது. தன்னுடைய சொந்த வகுப்பைத் தவிர்த்து வேறு வகுப்பைச் சேர்ந்த எவருடனும் எதையும் உண்ணவோ, அருந்தவோ செய்யாது என்று கூறுகிறார். அம்பேத்கர், இந்தியாவில் சாதிகள் உள்ளவரை இந்துக்கள் கலப்புமணம் செய்யவும் மாட்டார்கள்; அன்னியருடன் சமூக உறவு கொள்ளவும் மாட்டார்கள்; இந்துக்கள் உலகின் பிற பகுதிகளுக்குப் பிழைக்கச் சென்றால் இந்திய சாதி உலகளாவிய ஒரு பிரச்சினையாக உருக்கொள்ளும் என்றும்; ரிஸ்லி, என்பவரின் கூற்றுபடி, சாதி என்பது ஒரு பொதுப் பெயர் கொண்ட குடும்பங்களின் திரட்சியையோ அல்லது அவ்வாறான குடும்பங்களை உள்ளடக்கும் குழுக்களையோ குறிக்கும்.

### சாதியின் தோற்றம்

ஆதிகாலத்தில் சமுதாயத்தில் சாதிப் பாகுபாடுகள் வலுவாகக் காணப்படவில்லை என்று திட்டவட்டமாகக் கூறலாம். இன்று சாதி என்பது மக்களிடையே பிரிக்க முடியாத ஒன்றாக இருந்து வருகிறது. ஆரியர்களின் வேள்விக் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளாத சிந்துவெளி திராவிடர்களுக்கும், ஆரியர்களுக்கும் ஏற்பட்ட மோதல்களே சாதிகள் தோன்ற வழிவகுத்தன என்று சிவகுமார் (1999:58) குறிப்பிடுகிறார். ஆதிச்சமூகத்தினர் அவரவர் வர்ணங்களுக்கு (தோலின்நிறம்) ஏற்ப,

நான்கு வர்ணாசிரமப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டனர். அதுதான் பிறகு நான்கு சாதியாக ஆயிற்று என்று 'புருஷஸக்தம்' குறிப்பிடுவதாகப் பாஸ்கல் கில்பர்ட் (1969:546) கூறுகின்றார். சாதிகள் செய்தொழிலின் அடிப்படையால் மக்களை வேறுபடுத்திக்காட்ட ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகத் தோற்றம் பெற்றன எனவும் கருதலாம்.

மனுதர்மம் மக்களிடையே காணப்பட்ட வர்ணமுறைகளை நிலைநாட்டப் படைக்கப்பட்டது. ஆரியர்கள் வெள்ளை நிறத்தவராகவும், திராவிடர்கள் கருப்பு நிறத்தவராகவும் இருந்தமைதான் தொடக்கநிலை வேறுபாடுகளுக்குக் காரணமாக அமைந்தன. இவையே பின்னாளில் நிறத்தாலும், குணத்தாலும் மக்களை வர்ணப்பிரிவிற்குள் அடக்க அடிப்படையாகி விட்டன. இன வேறுபாட்டாலும், தொழில் வேறுபாட்டாலும் அமைந்த சாதியமுறையை வரையறைப்படுத்துவதில் மனுதர்மத்தின் பங்கு அளவிடற்கரியது. பிரம்மா மனிதனைப் படைக்கும்போதே பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்கு வர்ணத்தவராகப் படைத்தார் என மனுதர்மம் குறிப்பிடுகிறது. இந்நான்கு வர்ணத்தவரும் முறையே முகம், தோள், தொடை, பாதம் என்னும் பிரம்மாவின் உடல் உறுப்புகளில் இருந்து படைக்கப்பட்டனர் என்றும் கூறுகின்றது. இவ்வாறு படைக்கப்பட்ட ஒவ்வொருவரின் கடமையையும், தொழிலையும் மனுதர்மம் பின்வருமாறு எடுத்துரைக்கின்றது.

பிராமணர் கடமையாவது வேதஞானம், வேதம்ஓதுதல், ஓதுவித்தல், வேள்விபுரிதல், புரிவித்தல், செல்வம் ஈதல், ஏற்றல் ஆகியனவாகும். சத்திரியர் கடமையாவது, உலகை ஆளுதல், மக்களைக் காத்தல், கொடை, வேள்வி செய்வித்தல், வேதம் பயிற்றுவித்தல் என்பனவாகும். வைசியர் கடமையாவது செல்வம் தேடுதல், கடல், மலை விளைப்பொருள், கனிமப்பொருள் முதலியன கொண்டு வாணிபம் செய்தல், தானம், ஆநிரைக்காத்தல், பயிர்த்தொழில், வட்டித்தொழில் ஆகியனவாகும். சூத்திரர் கடமையாவது, பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகிய மூவருக்கும் மனம் கோணாமல் பொறாமையின்றிப் பணிபுரிதல் முதற்கடனே என்பதாகவும் வகுத்துக் கூறியுள்ளன. சாதிய நிலைகள்

வலுப்பெறவும் சாதிக்குத் தகுந்த வர்ண அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் வலுப்பெறவும் மனுதர்மமே அடிப்படையாக அமைந்தது. இந்தியச் சமுதாயத்தில் ஒருவர் சமயம் மாறலாம்; ஆனால் சாதி மாறமுடியாது. சாதி ஒருவரது பிறப்பைக் கொண்டு தீர்மானிக்கப்படுவது. இந்தியாவில் சாதி அடிப்படையிலான சமுதாயமே உள்ளது. தமிழகத்தில் சாதிப் பிரிவுகள் பல்வேறு கட்டுப்பாடுகளோடு இருந்தமையினையும்; அவை பூசல்களைத் தோற்றுவித்து வலங்கை, இடங்கை என்ற பிரிவுகள் ஏற்படக் காரணமாக இருந்ததையும் வரலாறு காட்டுகிறது என்று வசந்தா (2000:61) குறிப்பிடுகிறார். இத்தகைய தொன்மக் கட்டமைப்புகளும் ஆதிக்கச் சாதிகளின் ஒடுக்குமுறை திட்டங்களுமே இந்தியா முழுமைக்கான சாதிப் பிரிவுகளை நிறுவியுள்ளன.

## தமிழகத்தில் சாதிகள்

தமிழகத்தைப் பொறுத்தவரை தொழில் அடிப்படையிலான சாதிப்பாகுபாடுகளே ஆதிக்கம் பெற்றிருந்தன. தமிழர்களின் தொன்மையான நூலான தொல்காப்பியம் நால்வகை சாதி பாகுபாட்டினையே வலியுறுத்திக் கூறியுள்ளது. இந்நால்வகை சாதிப் பிரிவுகளும் குலத்தால் அல்ல; செய்யும் தொழிலினாலும், குணத்தாலும் ஏற்பட்டதாகும்.

சங்ககாலத்தில் சாதிப்பாகுபாடுகள் அதிகமாகக் காணப்படவில்லை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சங்கம் மருவிய காலத்தில் வந்த களப்பிரர்கள், அடுத்தபடியாக வந்த பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், நாயக்கர்கள், மராத்தியர்கள் என்று ஆட்சி முறையில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. கி.பி. மூன்றாம் நூற்றாண்டு இறுதியிலிருந்து ஆறாம் நூற்றாண்டு இறுதிவரை நடந்த களப்பிரர் ஆட்சிக் காலத்தில் வைதீக வழிபாட்டை எதிர்த்துப் பல கலகங்கள் நடந்தன. பெரும்பாலும் களப்பிரர்கள் பௌத்தர்களாகவும், சமணர்களாகவும் இருந்திருக்கிறார்கள்.

ஆறாம் நூற்றாண்டு இறுதியிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டு இறுதிவரை தமிழகத்தில் ஆட்சி புரிந்த பல்லவர்கள் காலத்தில் சாதிப் பாகுபாடுகள் மிகுந்து காணப்பட்டன. பல்லவ மன்னர்கள் வைதீகச் சாத்திரங்களில் அதிக நம்பிக்கை உடையவராக இருந்தார்கள். பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற நான்கு வர்ணப் பாகுபாடும் வலுவுற்ற காலம் அது. பிராமணர்கள்

அரசு அதிகாரிகளாகவும் கோயிலில் வேதம் ஓதுபவர்களாகவும் இருந்தார்கள். பல்லவர்களின் சமூக அமைப்பில் கலை வல்லுநர்கள், தங்க ஆபரணங்கள் செய்வோர், துணி துவைக்கும் வண்ணார், வேடர், பரவர், பறையர், பாணர், ஈழவர், சாலியர் ஆகியோருக்கு நல்ல மதிப்பு இருந்தது. சமுதாயத்தின் அடித்தளத்தில் இருந்தவர்கள் புலையரும், சண்டாளரும் ஆவர்.

ஒன்பதாம் நூற்றாண்டு இறுதியிலிருந்து பன்னிரண்டாம் நூற்றாண்டு முடிய நடந்தது சோழர்கள் ஆட்சிக் காலமாகும். இந்தக் காலத்தில் பிராமணர்களுக்கு நல்ல மதிப்பிருந்தது. அவர்கள் மகாபாரத, இராமாயணக் கதைகளை வாசித்துப் பொருள் கூறி மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்தனர். இவர்களுக்குக் கோயில்களில் மதியஉணவு இலவசமாக அளிக்கப்பட்டது. தனி இடமும் தனித்தெருவும் (அக்ரகாரம்) இருந்தன. பிராமணர்களுக்கு அடுத்த படியாக வெள்ளாளர்கள், இடையர், தச்சர், கம்மாளர், தட்டான் போன்ற சாதிப் படிநிலைகள் காணப்பட்டன. வலங்கை, இடங்கை என்ற பிரிவுகளும் இக்காலத்தில் காணப்பட்டன. அடிமை வாணிகம் சோழர்கள் காலத்தில் இருந்தது. அடிமைகள் கோயில் சுற்றுப்புறங்களில் பிறரால் விற்கப்பட்டனர். தங்களைத் தாங்களே விற்றுக் கொள்வதும் உண்டு.

பாண்டியர் காலத்திலும் பிராமணர்கள் உயர்ந்த பதவிகளில் இருந்தனர். பாண்டிய மன்னர் 1200 அந்தணர் குடும்பங்களைக் குடியேற வைத்து 'இராஜ கம்பீர சதுர்வேதிமங்கலம்' எனப் பெயரிட்டனர். மட்டுமின்றி 108 பிராமணர்களுக்கு விழாக்காலங்களில் நிலம் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது. இரண்டாவது அதிகாரம் பெற்ற சமுதாயமாகச் செட்டியார் சமுதாயம் இருந்தது அதற்கு அடுத்த நிலையில் வேளாளர், ஆயர் ஆகியோருக்கு அதிகாரம் இருந்தது என்று சட்டோ பாத்யாய் (1999:61) குறிப்பிடுகிறார்.

நாயக்கர்காலம் பதிமூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விஜய நகரப் பேரரசு 'இந்துராஜ்ஜியம்' என்னும் பெயரில் உருவானது. இந்தக் கால கட்டத்தில் இசுலாமியர்களைப் பல இன்னல்களுக்கு உட்படுத்தினர். நாயக்க மன்னர்கள் வருணாசிரம முறையைப் பின்பற்றி ஆட்சி நடத்தினர். இவர்கள் காலத்திலும் பிராமணர்கள் அரசின் உயர்பதவிகளில் தளவாய்களாகவும், பிரதானிகளாகவும் அமர்த்தப்பட்டனர். அரசர்கள்

பிராமணர்களுக்கு மானியமாக நிலங்களைக் கொடுத்தனர். இதன்மூலம் அவர்கள் வேளாளர்களைப் போன்று நிலப் பிரபுக்கள் ஆயினர். வேளாளர்கள் செல்வாக்குப் பெற்ற நிலவுடமை யாளர்களாவர். நாயக்கர் ஆட்சிக்காலத்தில் இவர்கள் செல்வாக்கு சிறிது சரிந்தது. வன்னியர், கள்ளர் பிரிவினர் நிலவுடைமையாளராயினர். பறையர், சக்கிலியர் பிரிவினர்கள் தனித்து வாழ இடம் ஒதுக்கப்பட்டது. இக்காலத்தில் கோயில் தேவதாசிகளும் சேரிப் பரத்தைகளும் சேர்ந்து வாழ்ந்தனர். தண்டனை முறைகளில் கூட கீழ்ச்சாதியினருக்கென்று கடுமையான தண்டனைகள் கடைபிடிக்கப்பட்டு வந்தன.

நாயக்கர் கால வீழ்ச்சிக்குப் பிறகு வந்த மராத்தியர் காலத்திலும் பிராமணர்கள் முக்கியமானவர்களாகக் கருதப்பட்டனர். இவர்களை மன்னர்கள் பெரிதும் மதித்தனர். இவர்கள் வாழ்ந்து வந்த பகுதிகளைத் தேர்வு செய்து தங்கள் அரண்மனைகளைக் கட்டி வாழ்ந்து வந்தனர். வெள்ளாளர்களுக்கும், கம்மாளர்களுக்கும் நாயக்கர் காலத்தில் இருந்த செல்வாக்கு அப்படியே இருந்தது. மராத்தியர் காலத்தில் தான் முதன்முதலாக மருத்துவர், வண்ணார் முதலியோர் கிராமங்கள்தோறும் குடியமர்த்தப்பட்டனர். இந்தக் காலகட்டத்தில் வருணாசிரமம் வலுவுடன் செயல்பட்டது.

பதினெட்டாம் நூற்றாண்டின் முடிவுவரை தமிழகத்தின் சமுதாய அமைப்பில் கல்வியானது பிராமணர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. சமஸ்கிருதத்தின் மதிப்பு தமிழுக்கு இல்லாமல் இருந்தது. நிலக்கிழார்கள் அனைவரும் பணம் படைத்தவராகவே இருந்தனர். இவர்கள் மற்ற இனத்தவர்களை அடிமையாக நடத்தினார்கள். மறவர், கள்ளர், படையாச்சி, நாடார், பரவர், பள்ளர், பறையர் ஆகிய இனத்தவர்கள் அதிக கொடுமைகளுக்கு உள்ளானார்கள். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தந்தை பெரியாரின் பங்கு மிக முக்கியமாகும். இவர் வர்ணாசிரம முறையினைக் கடுமையாக எதிர்த்தார்: இவர் தமது புரட்சிக் கருத்துக்கள், சிந்தனைகள் மூலம் மக்களிடையே புதியமறுமலர்ச்சியினை ஏற்படுத்தினார்.

இந்திய சமுதாயத்தில் சாதியும், வர்க்கமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளன. பெரும்பாலான மக்கள் இவை இரண்டிற்குமிடையிலான வேறுபாடுகளை

என்னவென்று அறியாதவர்களாகவே உள்ளனர். பாரம்பரியமான வசதிகளும் தொழில் ரீதியான வர்க்கமும் ஒன்றல்ல. ஆரம்பத்தில் வேட்டையாடி உணவு சேகரித்து வாழ்ந்த காலத்தில் மனித கூட்டத்திற்குள் சாதிப்பாகுபாடுகள் தோன்றியிருக்கவில்லை. பின்னர் உலோகங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பின் உற்பத்திமுறை மாறியது. சிறு அளவில் விவசாயமும் கைத்தொழிலும் வளர்ந்தன. இதனால் தொழில் பிரிவினைகள் தோன்றின. ஒரு குறிப்பிட்ட வேலைச் செய்தவன் காலப்போக்கில் ஒரு சாதியாக மாறினான். ஒரு குறிப்பிட்ட சந்ததியினர் குறிப்பிட்ட ஒரே வேலையைத் தலைமுறை தலைமுறையாகச் செய்து வந்ததும் இதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். இந்த வளர்ச்சி, காலபோக்கில் செல்வாக்குப் பெற்றவர்களும் செல்வந்தர்களும் உயர்சாதி யினராயினர் என்று கோசாம்பி (1989:247) குறிப்பிடுகிறார்.

ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் நிலை பெற்ற பின்பு, அதற்கு முன்பிருந்த அரசியலமைப்பிலிருந்தபடி, ஒரு குறிப்பிட்ட இடத்தில் கட்டுப்பாடுகளுக்குட் படுத்தப்பட்டிருந்த சாதிகள் விடுவிக்கப்பட்டன. பல முக்கியமான பொருளாதார மாற்றங்கள், ஆங்கிலேயர் ஆட்சியினால் ஏற்பட்டன. அவை காரணமாகக் கிராமங்களில் சாதிகளுக்கிடையே, காணப்பட்டு வந்த பொருளாதார அடிப்படையிலான நெருங்கிய நம்பிக்கைகள், அவற்றின் தொடர்புகள் ஆகியவற்றின் பெருமை குறையத் தொடங்கின. காலப்போக்கில் பொருளாதார வாய்ப்புகள் தங்களைவிடவும் உயர்ந்த சாதியினரையே நம்பி வாழ்ந்த பரம்பரையான பொருளாதார அமைப்பிலிருந்து விடுபடுவதற்கு வேண்டிய சூழ்நிலையைத் தாழ்ந்த சாதியினருக்காக உருவாக்கித் தந்தன.

பூகோள அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களால், தொன்று தொட்டு கிராமத்தில் போட்டிக் குழுக்களிடையே நிலவி வந்த நேரான தொடர்புகள் பலவீனமடைந்தன. சாதிகளுக்கிடையே யுள்ள இணையான உறவுகள் பலப்பட்டன. சாதிகள் தங்களுக்குள் புதிய ஒற்றுமையையும், புத்துணர்ச்சியையும், தன்னம்பிக்கையையும் பெற்றுக் கொண்டன. இம்முன்னேற்றங்களுக்குப் போக்குவரத்து மற்றும் செய்தித் தொடர்புகளில் ஏற்பட்ட வளர்ச்சியே மைய ஆதாரமாக விளங்கிற்று. தேவையுள்ளபோது, பல இடங்களில்

வசிக்கும் ஒரே சாதியைச் சார்ந்தவர்கள் ஒன்று கூடுவதற்கு சாலை மற்றும் இரயில் போக்குவரத்துகள் மிகவும் உதவின. மேலும் அச்சு இயந்திரங்களின் வளர்ச்சியால் செய்தித்தாள்கள் மலிவாக வெளிவருவதற்கு உதவி புரிந்தன. சாதிகளின் மத்தியில் உள்ள நெருங்கிய இணைப்பானது பரந்துபட்ட பகுதியில் இறுக்கமான போது, சீரிய குறிக்கோள் கொண்ட சாதிகளால் அவை சார்ந்திருக்கும் பகுதிகளில் சங்கங்கள் நிறுவப்பட்டன. இவ்வாறு சாதிகள் பல படிநிலைகளில் முன்னேற்றம் அடைந்தன. ஆனால் சேவைச் சாதியினர் மட்டும் முன்னேற்றம் அடைய வாய்ப்பின்றிக் காணப்பட்டனர்.

### சேவைச் சாதி

ஒவ்வொரு சாதி மக்களும் தங்களுக்குச் சேவைச் செய்வதற்கென்று சில சாதியினரைக் குடியமர்த்திக் கொண்டனர். அவர்களில் முக்கியமானவர்கள் மருத்துவர், வண்ணார் ஆகியோர் ஆவர். இவர்கள் சேவைச் சாதியினர் என்று அழைக்கப்பட்டனர். அஃதாவது ஒரு குறிப்பிட்ட சமுதாய மக்களுக்கு அல்லது குறிப்பிட்ட இனக்குழுவிற்குச் சேவையினைச் செய்து அவர்கள் அளிக்கும் உணவினை உண்டு; அவர்களுடனேயே வாழ்வதாகும். இதில் மருத்துவர், வண்ணார் பிற இனத்தவரின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான எல்லா நிகழ்வுகளுக்கும் சேவைப்பணிச் செய்கின்றனர். இவர்களைப் பஞ்சமர் என்று அழைத்தனர். இதன் பொருள் தீண்டத்தகாத சாதியினர் என்பதாகும். நாவிதர், வண்ணார், பள்ளர், பறையர், சக்கிலியர் ஆகிய ஐந்து சாதிகளே யாழ்குடா நாட்டில் பஞ்சமர் எனப்படுகின்றன. இவர்களில் நாவிதர், வண்ணார் முதலியோர் ஒரளவு தீண்டத்தக்கவர்களாக உள்ளனர் என்று டொமினிக் ஜீவா (1982:115) குறிப்பிடுகிறார். பஞ்சமர்களைப் பற்றி நரிப்பையூர் அரிமா (1994:32) கூறும் போது, பஞ்சமர்கள் ஊருக்குள் வாழ அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் ஊருக்கு வெளியேதான் வாழ வேண்டும். பாழடைந்த இடமாக இருக்கவேண்டும்; அங்கே தமது உழைப்பிற்கான ஊதியத்தைக் கேட்கக் கூடாது. அவர்களின் எசமான்கள் என்ன கொடுக்கிறார்களோ அதை மட்டுமே வாங்கிக் கொள்ளவேண்டும் என்று குறிப்பிடுகிறார். இந்திய சமூக அமைப்பினை ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது மருத்துவ இனமக்கள் சேவைச் சாதி என்னும் பிரிவினுள் காணப்படுகின்றனர்.

***மருத்துவர்***

மருத்துவர் யார்? என்ற கேள்விக்கு முழுமையாகப் பதில் தரவேண்டியது அவசியமாகும். ஏனெனில் இன்றும் கிராமப்புறங்களில் தங்களின் உண்மையானச் சாதிப் பெயர்கூடத் தெரியாமல் மக்கள் உள்ளனர். மருத்துவர்கள் என்போர், முன்னதாக மருத்துவத் தொழில் செய்து வந்த பண்டிதர்களாவர்; அதன்பிறகு சவரத் தொழிலுக்கென்று நிர்ப்பந்திக்கப்பட்டு ஊர் வேலை செய்யும் குடிமகன்களாக ஆக்கப்பட்டனர். இவர்கள் நாவிதர், அம்பட்டர், காவுதி, நாசுவன், விளக்குத்தலை நாயர், பண்டிதர், பரியாரி எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டவர்களை இன்று மருத்துவர் என்றப் பொதுப்பெயரில் அழைக்கப் படுகின்றனர். இப்பெயர் மாற்றம் மருத்துவ இன மாமணி என்றழைக்கப்படும் பண்டிதர் எஸ்.எஸ். ஆனந்தர் முயற்சியில் நடைபெற்றது. இவர் மருத்துவ இனம் வெவ்வேறு இடத்திற்கேற்ப பலப் பெயர்களில் இழிவாக அழைத்து தரம் தாழ்த்திக் கொள்வதை விரும்பவில்லை. எனவே அனைவரும் மருத்துவ இனம் என்று பெருமிதத்துடன் அழைக்கப்பட வேண்டும் என்று எண்ணினார். எனவே அம்பட்டர் என்ற பெயர் இச்சமூகத்திற்கு உரிய பெயரல்ல. பண்டை காலம் தொட்டு இந்தச் சமூக மக்களின் தொழில் மருத்துவம்தான். இவர்களின் பெயர் மருத்துவர்கள்தான் என்பதை இலக்கியங்கள் வாயிலாக எடுத்துக்காட்டி மூதறிஞர் ராஜாஜி அவர்கள் முதல்வராக இருந்த காலத்தில் அம்பட்டன் என்ற பெயரை மாற்றி மருத்துவர் என்று அரசு பட்டியலில் இடம்பெறச் செய்தார். மேலும் மருத்துவக்குலம் என்பதற்கு தமிழ் லெக்சிகன் (1939:383) (Supplement) மருத்துவம் செய்து வந்த நாவிதச் சாதி என்று விளக்கம் அளிக்கிறது. இதிலிருந்து 1939-ஆம் ஆண்டிற்கு முன்னரே மருத்துவர் என்ற பெயர் வழக்கிலிருந்துள்ளமையை அறியமுடிகின்றது.

நோய்தீர்ப்பதில் தேர்ச்சி பெற்று மருத்துவத்தொழிலைச் செய்து வந்தவர்கள் மருத்துவர்கள் அல்லது வைத்தியர்கள் என்றழைக்கப்பட்டனர். சங்க காலத்தில் தமிழ்நாட்டு மருத்துவர்கள் சமுதாயத்தில் மதிப்பும், மரியாதையுடன் கௌரவமாகப் போற்றப்பட்டு வந்துள்ளனர். நோய்களை இனம் கண்டறியும் திறன் பெற்ற மருத்துவர்களை நோய் 'மருங்கறிஞர்' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் மருத்துவத்தொழில் புரிபவர்களை

மருத்துவன், மருத்தன், மாமாத்திரர், வைத்தியர், சவர்ணன், அறவோன் (நற்:126) வைத்தியன் (புறம்,173:11) முதலிய சொற்களால் குறிப்பிட்டுள்ளனர். இதேபோன்று மருத்துவத்தொழில் புரியும் பெண்கள் 'மருத்துவி', 'மருத்துவச்சி', 'செவிலி' என்றழைக்கப்பட்டனர். இவற்றுள் மருத்துவி என்பது பெண் மருத்துவரையும், மருத்துவச்சி என்பது பிரசவம் பார்க்கும் பெண்ணையும் குறிப்பவையாகும். பரிகாரம் என்னும் சொல் நோய் நீக்கல், பராமரித்தல் என்று பொருள் தருவதால் பரிகாரி என்னும் சொல் நோய்களை நீக்கும் மருத்துவரைக் குறிப்பிடுவதாகும். எனவே மருத்துவ இனத்தவரைப் பரியாரி என்று அழைப்பதும் உண்டு.

### *மருத்துவர் - சொல்லாட்சி*

மருத்துவர் என்னும் சொல் தமிழ் மருத்துவத்திலுள்ள மருந்து என்ற வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. நாவிதர்கள் முன்பு மருத்துவர் என்ற சிறப்புப் பெயரினைப் பயன்படுத்தி வந்தனர். இன்று அதுவே அவர்களின் முதன்மை சாதிப் பெயராகிவிட்டது. இம்மக்களிடம் மருத்துவர் என்ற சொல்லாட்சி 1931-க்கு முன்பே வழக்கிலிருந்து வருவதை மக்கள் தொகை கணக்கெடுப்பின்மூலம் அறியலாம். நாவிதர் இனமக்களின் பல்வேறு கிளை சாதியினரையும் ஒரே பெயரான மருத்துவர்கள் என்று கி.பி.1988-க்குப் பிறகு தான் நடைமுறையில் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டது குறிப்பாக. எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் இவர்கள் சாதிக்கு மருத்துவர் என்ற பெயர் சூட்டப்பட்டது என்று களஆய்வு செய்திகள் கூறுகின்றன.

இவ்வினமக்கள் பண்டைய காலத்தில் மருத்துவத்தில் அதுவும் அறுவை மருத்துவத்தில் சிறந்து விளங்கியுள்ளனர். போரில் அல்லது நோயினால் மூக்கிழந்தோருக்கு மாற்று மூக்குகள் வைத்து ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை செய்யும் முறை நாவிதரின் கண்டுபிடிப்பே என்று கோசாம்பி (1989:263) குறிப்பிடுகிறார். இவர்கள், தங்கள் வைத்தியத் தொழிலுக்கான மருத்துவக் கருவிகளையும், வெட்டு மருந்துகளையும் தன் கையிடுக்கில் சொருகிக் கொண்டு வைத்தியத் தொழில் செய்கின்றனர். குடல் புண், ராஜபிளவை ஆகிய நோய்களைத் தீர்ப்பதுடன் கண்களைப் பாதிக்கும் வியாதிகளையும் கவனிக்கின்றனர். முடி வெட்டுபவர்கள் சுளுக்கு, சிராய்ப்பு ஆகியவைகளை நீக்குவதுடன் நோயாளிகளின் நோய்களையும் குணப்படுத்துகின்றனர். தேவைப்படும் மருந்துப்

பொருட்களான மூலிகைகள், பட்டைகளைக் காடுகளில் அலைந்து எடுத்து வந்து மருந்தினை தயாரிக்கின்றனர். இதுகுறித்து, இப்பிரிவினரே எண்ணிக்கையில் அதிகமானவர்கள்; நோய்களுக்கு மருந்துகள் கொடுத்து நீக்குதல், கடவுளுக்குப் பரிகாரங்கள் செய்வது ஆகிய முறைகளால் மருத்துவம் செய்தனர். மருந்துப் பொருட்களை அவர்களே உற்பத்தி செய்தனர் (1987:380) என்று குமார் குறிப்பிடுகிறார். இவைகளை எல்லாம் பார்த்துதான் ஆதி மருத்துவரான இவர்களுக்கு மருத்துவர் என்ற பெயர் வழங்கப்பட்டது.

## *மருத்துவர்களின் சிறப்பு*

பழங்காலத்தில் மருத்துவ அறிஞர்கள் கவித்துவத்திலும் புலமை பெற்றிருந்தனர். எனவே தான் சித்த மருத்துவ நூல்கள் அனைத்தும் கவிதை வடிவிலிருப்பதைக் காணமுடிகிறது. உறையூர் மருத்துவன் தாமோதரனார் ஒரு மருத்துவ அறிஞரும், புலவரும் ஆவார். எனவே இவரின் பெயருக்கு முன்னால் மருத்துவன் என்ற அடைமொழியும் சேர்த்து அழைக்கப்படலானார். அதேபோன்று மருத்துவன் நல்லச்சுதனார் என்பவர் சங்கப் புலவரும் மருத்துவருமாவார். இவர்கள் இசையில் சிறந்தவர்களாகவும் அரசவை உறுப்பினர்களாகவும் இருந்துள்ளமைக் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்நாட்டில் வாழ்ந்த சித்தர்களில் ஒருவரான அகத்தியருக்குச் சீடராக விளங்கிய கரூராரின் வாரிசுகளே மருத்துவ இனத்தவர் ஆவர்.

அகத்தியரின் பல சீடர்களில் கரூராரே முக்கிய சீடராக இருந்தார். அவர் மிகவும் துடிப்பானவர். மிகுந்த மதிநுட்பமுடையவர். நெருப்பு பட்டவுடன் பற்றிக் கொள்ளும் கற்பூரம் போலப் பார்த்தவற்றையும், கேட்டவற்றையும் எளிதில் கற்றுக் கொள்ளக்கூடிய ஆற்றலுடையவரும் குருவிற்கு மிகவும் நெருக்கமுமானவர். மற்ற சீடர்களை விடக் கரூரார் சற்று துடுக்கானவர் என்பதால் அகத்தியர் அவரைத் தனிமையில் சற்று தூரத்தில் அமரச் செய்துவிடுவார். அவர் அவ்வாறு அமர்ந்திருந்தாலும் எல்லாவற்றையும் மற்றவர்களைவிட எளிதில் நன்கு கற்றுக்கொள்வார். பொதுவாக, அகத்தியர் தான் அரசனுக்கு மருத்துவம் செய்வது வழக்கம். ஒருநாள் அரசர் நோய்வாய்ப்படவே, அவருக்கு மருந்து தயாரித்துக் கொண்டிருக்கும்போது அகத்தியர் ஏதோ காரணத்திற்காக

வெளியே செல்ல வேண்டிவர மருந்து தயாரிப்பதைத் தொடருமாறு கரூராரைப் பணித்துவிட்டுச் சென்றார். கரூரார் அதனைத் தொடரும்போது குறும்புத்தனமான மனதுடன், மருந்தின் முக்கியமானப் பகுதியைச் சேர்க்காமல் யாருக்கும் தெரியாமல் மறைத்து வைத்துக் கொள்கிறார்.

அகத்தியர் மருந்தை எடுத்துக் கொண்டு அரசரிடம் சென்றுக் கொடுக்கிறார். பலமுறை மருந்து கொடுத்தும் நோய் குணமாகவில்லை. இதனை அறிந்த கரூரார் தான் போய் அரசருக்கு வைத்தியம் செய்வதாகக் கூற, அகத்தியரும் அதற்கு உடன்பட்டார். இதனால் கரூரார் அரசரிடம் சென்று மருந்து கொடுக்கிறார். ஓரிரு முறைகளிலேயே குணம் தெரிய ஆரம்பித்து விட்டது. அரசருக்கு மகிழ்ச்சி. செய்தியறிந்த அகத்தியர் அதைவிட பன்மடங்கு மகிழ்ச்சியடைந்தார். வாழ்வில் பலநிலைகளில் உயர்ந்து விளங்க பல வரங்களைக் கரூராருக்குக் கொடுத்தார்.

அதன்பின் கரூராரிடம் தான் செய்ய முடியாததை நீ எப்படிச் செய்தாய் என்று அகத்தியர் வினவிய போது, கரூரார் நடந்தவற்றைக் கூறினார். அகத்தியர் கோபம் கொண்டு கொடுத்த வரத்தைத் திரும்ப பெற முடியாது. ஆகையால் கரூராரும் அவரது வாரிசுகளும் செல்வச் செழிப்பில் உயர்நிலையை அடைய முடியாமல் பொருளாதாரத்தில் எப்போதும் பின் தங்கியே இருக்குமாறு அகத்தியர் சபித்து விட்டதாகக் கதை கூறப்படுகின்றது.

இத்தொன்மக் கதையினைப் பார்க்கும்போது மருத்துவ இனமக்கள் பொருளாதாரத்தில் மேல்நிலை அடையாமல் இருப்பதற்கு அகத்தியரின் சாபம்தான் காரணமாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. மேலும் சீவக சிந்தாமணி (12:2491), முனிவர் ஒருவர், தம் சுற்றத்தை நீக்கி சாபத்தினால் நாவிதனானான் என்று தோற்ற வரலாறு கூறப்பட்டுள்ளது. இஃது மேற்கருத்துக்கு வலுசேர்ப்பதாக அமைந்துள்ளது.

மனித உயிர் காக்கும் மருத்துவப் (சேவை) பணியினை மருத்துவ இனமக்கள் விருப்பு வெறுப்பின்றி ஒரு சமூக சேவையாக எந்தவித பிரதிபலனுமின்றிச் செய்து வந்தனர். காலப்போக்கில் இவர்களில் ஒரு பிரிவினர் விழா காலங்களில் சடங்கு சம்பிரதாயங்களிலும், மற்றொரு பிரிவினர் இசைக் கருவிகள் மூலம் இசை இசைக்கும் தொழிலையும் செய்து வந்தனர். மருத்துவம் செய்து வந்தபோது போர் வீரர்களுக்கு ஏற்பட்ட

விழுப்புண்களுக்கும், சின்னஞ்சிறார்களுக்குத் தலையில் ஏற்படும் இரணங்களுக்கும் வைத்தியம் செய்துள்ளனர். அவ்வாறு செய்யும்போது தலையில் உள்ள முடிகளைக் களைந்து (மழித்து) வைத்தியம் செய்தனர். இதுவே பின்னாளில் ஆண் பெண் வேறுபாடு தெரியும் வகையில் ஆண்களுக்குச் சிகையலங்காரம் மற்றும் முகம் மழித்தல் செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்டது. பின் அதுவே இவர்களின் பாரம்பரியமானத் தொழிலாக மாறியது. மேல்நிலையில் மருத்துவம், இசைத்தொழில்களைச் செய்து வந்தவர்கள் ஆதிக்கச் சாதியினரால் ஒடுக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டனர். சுதந்திர நாட்டில் இன்றும் கிராமங்களில் இவர்கள் அடிமைகளாகவே வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## இந்தியாவில் மருத்துவர்கள்

இந்தியாவில் மருத்துவ இனமக்கள் பெரும்பாலும் எல்லா இடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வாழ்கின்ற இடத்திற்கு ஏற்ப வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். கன்னட மொழி பேசும் நாவிதர்கள் தங்களைக் 'கஷ்ட மாதோவரு' (கடினமான தொழில் செய்பவர்கள்) என்று அழைத்துக் கொண்டனர். பிறர் இவர்களைக் 'கெலசியர்', 'அடபடவா' என்றும் அழைக்கின்றனர். இக்கெலசியர்கள் பேசும் மொழியின் அடிப்படையிலும், பணிபுரிகின்ற சாதியின் அடிப்படையிலும் பலவாறு அழைக்கப்படுகின்றனர். அவை, 'துணுகெலசி', 'கொங்கணி', 'கெலசி', 'இந்துஸ்தானி கெலசி', 'லிங்காயத கெலசி', 'மாப்பிள்ளை' எனப்படும் வசநாவிதன் என்று அழைப்பதாகத் தர்ஸ்டன் (1987, iii:352) குறிப்பிடுகிறார்.

ஆந்திர மாநிலத்தில் உள்ள மருத்துவர்கள் நாவி, மங்கல், கேலசி ஹைசாம் என்றும் அழைக்கப்படுகின்றனர். நாவி என்பது முடித்திருத்துபவன் என்ற பொருளில் அமைந்துள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள மருத்துவர்களை நைபாண்டே, தாகூர், நைபிராமின், பாண்டே பிராமின் என்று அழைக்கின்றனர். இவர்களின் பெண்கள் பேறுகாலம் பார்க்கும் மருத்துவச்சிகளாக உள்ளனர். இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள மருத்துவர்களை நை,

செயின், நை பிராமின் என்று அழைக்கின்றனர். நை என்பதற்குக் குடிமகன் என்று பொருள். டெல்லியில் உள்ள மருத்துவர்களை நை, நை பிராமின், சவித்தா, சரோவா செயின், பண்டார் என்று அழைக்கின்றனர். காஷ்மீரில் உள்ள மருத்துவர்களை ஹசாம், நாபித், நை, நெள, சபிதா, பிராமின் என்று பலவாறு அழைக்கின்றனர். ஓரிசா மாநிலத்தில் உள்ள மருத்துவர்களைப் பத்திரி, வரிக், பண்டார், பொந்தரியார் என அழைக்கின்றனர்.

உத்திரபிரதேசத்தில் உள்ள மருத்துவர்களை நைபாண்டே, தாகூர், நைபிராமின், பாண்டே பிராமின் போன்ற பெயர்களில் அழைக்கின்றனர். பஞ்சாப் மாநிலத்தில் உள்ள மருத்துவர்களை நை, நைபிராமின், பண்டிதராஜன், மேக்தா, தாகூர் என்று அழைக்கின்றனர். அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள மருத்துவர்களை நை, சந்துர வேதியர் என்று அழைக்கின்றனர். பீகார் மாநிலத்தில் உள்ள மருத்துவர்களைத் தாகூர், ஹைசிம், நை, நாபித், நை பிராமின் எனவும் பலவாறு அழைக்கின்றனர். கேரள மாநிலத்தில் உள்ள மருத்துவர்களை அம்பட்டன், நாசுவன், மாராயன், வெலகில்நாயர், வெளக்குத்தலைநாயர், காவுதியர், அடியோடி, அடுத்தோன் (பண்டிதம், நவ. 2004) என்று பலவாறு அழைக்கின்றனர்.

**தமிழ்நாட்டில் மருத்துவர்கள்**

தமிழ்நாட்டில் உள்ள மருத்துவர்களை இரண்டு பிரிவாக வகைப்படுத்தலாம். அவை, 1. மருத்துவர் என்ற தனிசாதிப் பிரிவு, 2. சில இனக்குழுக்கள் தங்கள் இனக்குழுவிற்குச் சேவைப்பணி செய்வதற்கு வேண்டித் தங்கள் இனக்குழுவைச் சேர்ந்த ஒருவரைச் சவரத் தொழில் செய்யுமாறு அமர்த்துதல் என்பனவாகும். மருத்துவர் என்றத் தனி சாதிப்பிரிவில் நாவிதர், அம்பட்டர், விளக்குத்தலைநாயர், கேரளமுதலி, காவுதியர், பிரர்ண உபகாரி (பரோபகாரி) பண்டிதர் பரியாரி, குடிமகன், என்று பல பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். இவற்றில் சில பட்டப் பெயர்களாகவும் சிறப்புப் பெயர்களாகவும் விளங்குகின்றன. பிற இனக்குழுவைச் சார்ந்த சவரத் தொழிலாளிகளான ஒசா (இசுலாம்) பணிமகன், குடிப்பிள்ளை, கொங்கு நாவிதன், அருந்ததியருக்குப் பணி செய்யும் நாவிதர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.




### நாவிதர்

தமிழ் மருத்துவர்களை நாவிதர், நாசுவன் என்று அழைக்கின்றனர். நாசுவன் என்பது நாசியில் (மூக்கில்) இருந்து பிறந்தவன் என்பது பொருள். இதனைத் தர்ஸ்டன் (2003.v:255) நாசுவன் என்பது தூய்மையற்றவன் என்ற பொருள் தருவது. தொட்டால் தீட்டு உண்டாக்குபவன் என்ற பொருள்களைத் தரும். இதற்குச் சமமான நாசியன் என்பது தெலுங்கு அம்பட்டர்களையும், நாவிதன் என்பது நாயர்களுக்கும் உயர்ந்த சாதியர்களுக்கும் தொழில் செய்யும் மலையாளி அம்பட்டர்களைக் குறிக்கும் பெயர்களாம் என்கிறார். நாவிதன் என்ற சொல்லுக்கு,

> ***"நாவிதன் எனும் பெயர் பூரநாளும்***
> ***கார்த்திகை நாளு மயிர் வினைஞனுமாம்" (வட.நி., ப.176)***
>
> ***"நாவிதன் பூரநாளு மறு மாறும்***
> ***இதே பதிப்பு மயிர் வினைஞனுமாம்" (பொதி.நி., 246)***

*"பெருமஞ்சிகனே மயிர் வினைஞ னுவிதன்" (பி. நி. 1968:131)*
*"பெருமஞ்சிகனே மயிர்வினைஞர்" (சே.நி 1958:158 )*

என நிகண்டுகள் அனைத்தும் நாவிதர் என்பதற்கு மயிர் வினைஞர் என்ற பொருளை மட்டுமே குறிப்பிட்டுள்ளன.

ஆனந்த விகடன் அகராதி (150) நாவிதப்பெண் என்பதற்கு அம்பட்டத்தி, அம்பட்டச்சி என்றும் மதுரைத் தமிழ்ப் பேரகராதி, நாவிதர் என்பதற்கு அம்பட்டர், மயிர் களைவோர் என்றும், பவானந்தன் தமிழ்ச்சொல்லகராதி (1925:305), நாவிதன் என்பதற்கு நாய்கர் மகளிர் பார்ப்பனரைக் கரவிற்கூடிப் பெற்றபிள்ளை என்றும் விளக்கம் அளிக்கின்றது. இவர்கள் நாவன்மை மிக்கவராக விளங்கியமையால் நாவிதர் என அழைக்கப்பட்டனர் என்றும் கூறுகின்றனர்.

## அம்பட்டர்

அம்பட்டர் என்பவர்கள் சவரத் தொழிலாளிகளும், நாட்டுப்புற மருத்துவ சிகிச்சையாளருமாவர். அம்பஷ்டர் என்ற சொல் வடமொழிச் சொற்களாகிய அம்பா (பக்கம்), ஸ்தா (இருப்பவன்), அம்பஷ்டர் என்பது பக்கத்தில் இருப்பவன் என்று பொருள். அம்பஷ்டர் என்ற சொல் நாளடைவில் மருவி அம்பட்டர் ஆனது. தன்னிடம் சவரம் செய்து கொள்பவன் அருகிலோ, மருத்துவம் பார்த்துக் கொள்பவன் அருகிலோ இருந்து தொழில் செய்வதைக் குறிப்பதாகும். இதேபோல் கேரளத்தைச் சேர்ந்த சவரத் தொழிலாளியாகிய காவுதியனும் பக்கத்திலிருப்பவன் என்ற பொருளில் அடுத்தோன் என அழைக்கப்படுகின்றான் என்று தர்ஸ்டன் (1986.i:41) குறிப்பிடுகிறார். அம்பட்டர் என்ற சொல்லுக்கு அரிமா (1994:26) பின்வருமாறு விளக்கம் அளிக்கின்றார். அம்பட்டன் = அம் + பட்டன். அம் என்றால் அழகிய, பட்டர் என்றால் பட்டத்துக்கு உரியவர் என்று அழகிய பட்டத்துக்குரியவர் என்று விளக்கம் அளிக்கின்றார்.

இப்பெயர் முதலில் இவர்கள் செய்து வந்த மருத்துவத் தொழிலுக்கு உரியதாயிருந்திருக்கலாம். பின்னர், சவரத் தொழிலும், இசைத் தொழிலும் இவர்களுக்கு உரியதாகியிருக்கக் கூடும். அம்பட்டர் வைசிய குலத்தைச் சேர்ந்த பெண் ஒருத்திக்கும் மருத்துவத் தொழிலை வாழ்க்கை நடத்துவதற்குரியதாக மேற்கொண்டிருந்த பிராமணன் ஒருவனுக்கும் பிறந்தவனின் சந்ததியர் என்று தர்ஸ்டன் (1986.i:41) குறிப்பிடுகின்றார். பிராமணர்கள் அம்பட்டர்கள் சமைத்த உணவினை உண்ணலாம்.

பூரிசகன்னாதர் ஆலயம் எல்லா மேல்சாதியினராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. பிராமணர்கள் கூட அதனைத் தீட்டாகக் கருதுவதில்லை. அந்தப் புகழ்ப் பெற்ற கோயிலின் பூசாரியும் அதிகாரப் பூர்வமான புரோகிதரும் ஓர் அம்பட்டரே என்னும் *தர்ஸ்டனின் (1986.i:43) கூற்று* இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

அம்பட்டன் என்ற சொல் பெரும்பாலும் இவ்வினமக்கள் வெறுக்கின்ற ஒரு சொல்லாகவே உள்ளது. எனவே இவர்கள் அம்பட்டன் என்று யாராவது கூப்பிட்டால் கூடத் தகாத வார்த்தைகளால் திட்டி விடுகின்றனர். தற்போது பேச்சு வழக்கில் அம்பட்டன் என்ற வார்த்தையை மிகவும் குறைவாகவே பயன்படுத்துகின்றனர்.

மதுரைத் தமிழ்ப் பேரகராதி (1956:114) அம்பட்டன் என்பதற்கு நாவிதன், ஏனாதி, பெருமஞ்சிகன், பரிகாரி; உயர்குலத் தந்தைக்கும் இழிகுலத்தாய்க்கும் பிறந்தவன் என்றும், அம்பட்டச்சி என்பதற்கு நாவிதப்பெண், ஏனாதிப்பெண் என்றும் விளக்கம் அளிக்கின்றது. அபிதான சிந்தாமணி (1981:72) அம்பட்டன் என்பதற்கு வைசியப்பெண் பிராமணனைக் கூடிப் பிறந்த குமரன். பிராமணன் சூத்திரப் பெண்ணைக் கூடியும், அரசன் வைசியப் பெண்ணைக் கூடியும் பிறந்தவன் என்பர். இவனுக்குப் பரிகாரியெனவும் பெயர். இவனது தொழில் கிராமத்தில் தலை சிரைத்தலும், வைத்தியம் செய்தலுமாம். பெண்கள் மருத்துவத் தொழில் செய்வர் என்றும் விளக்கம் தருகின்றது.

### விளக்குத்தலை நாயர்

நாயர் இன மக்களுக்குச் சேவைச் செய்யும் மருத்துவர்களை விளக்குத்தலை நாயர் என்பர். இவர்களை விளக்கத்தலைவன், விலக்க தலையன், விலக்கட்ட நாயர் என்று பலவாறு அழைக்கின்றனர். இவர்களை முதலில் விளக்கத்தலவன் என்றே அழைத்து வந்தனர். பின்னர் இவர்கள் நாயர் சமூகத்திற்குச் சேவைச் செய்வதினால் நாயர் என்பதைப் பின்னொட்டாகச் சேர்த்துக்கொண்டனர். இவர்கள் தங்களை நாயர் என்றே கூறிக்கொள்கின்றனர். இவர்கள் கேரள மாநிலம் மலபார் பகுதியிலிருந்து தமிழகத்தில் குடியேறியவர்களாவர். குமரிமாவட்டத்தில் கல்குளம், விளவங்கோடு தாலுகாக்களில் அதிகமாகக் காணப்படுகின்றனர்.

ஒரு காலகட்டத்தில் அம்பட்டர்கள் சவரத் தொழிலைச் சூத்திர இனத்தவரான நாயர்களுக்குச் செய்வதற்கு இசைவு தரவில்லை. எனவே, பிற்காலங்களில் நாயர் இனத்தவர்களுக்கு மட்டும் இத்தொழிலைச் செய்வதற்கு விளக்குத்தலை நாயர்கள் என்ற பிரிவை ஏற்படுத்திக் கொண்டனர். இவர்களிடம் குடிமகன் பணியும் தரப்பட்டு இவர்களை விளக்குத்தலைகளாகவும் (தலையை விளக்குகிறவர்கள்) மாற்றிக் கொண்டனர்.

விளக்குத் தலைநாயர் யார்? என்ற கேள்விக்கு சுகுமாறன் (2005: 481-493) என்பவர், நாயர் சமூகத்திற்குக் குடிமகன் பணிச் செய்ய அம்பட்டர்கள் மறுக்க; நாயர் சமுதாயத்தினருக்குக் குடிமகன் பணிக்காக மாற்று ஏற்பாடுகள் செய்ய வேண்டிய கட்டாயம் உருவாயிற்று. இச்சந்தர்ப்பத்தில் அயல் நாட்டினரும், போரில் தோற்கடித்து அடிமைகளாக்கப்பட்டவர்களுமான சாளுக்கிய சோழப்படையைச் சார்ந்தவர்களும் திருவிதாங்கூரில் நிரந்தரமாகத் தங்கி விட்டவர்களுமான விளாகத் தலைவர்களையும், அவரின் படைவீரர்களையும் குடிமகன் பணிக்கென நாயர்கள் அமர்த்திக் கொண்டனர். அவ்வாறு விளாகத் தலைவன் விளக்குத் தலைவன் ஆனார்கள். காலச் சுழற்சியால் விளக்குத் தலைவன் விளக்குத் தலைநாயர் ஆகவும் பரிணமித்தனர் என்று விரிவான வரலாற்று ஆய்வின் மூலம் விளக்கம் அளித்துள்ளார்.

இவர்களைப்பற்றிய களஆய்வின் போது தாங்கள் தலையினை முறையாக விளக்குவதால் விளக்குத் தலையன் என்று அழைத்தனர் என்ற கருத்துப் பரவலாக இவர்களிடம் காணப்படுகின்றது. முற்காலத்தில், கிராமங்களில் ஊர்க்கூட்டம் மற்றும் பஞ்சாயத்து கூடும் போது, தலைவர் சில பிரச்சினைகளை ஆராய்ந்து விசாரிப்பார். அக்கூட்டத்தின் கடைசியில் இவர்களிடம் அதற்கான ஆலோசனை மற்றும் விளக்கம் கேட்கும் மரபு காணப்பட்டது. இவர்களும், அதற்குச் சிறுவிளக்கம் அளிப்பார்கள். எனவே விளக்கத் தலைவன் என்று அழைத்தார்கள். கால மாற்றத்தின் போது விளக்குத் தலை நாயர் என மாற்றம் பெற்றது (த.ரமேஷ்:44). இப்பிரிவினர் பெரும்பாலும் மலையாளம் கலந்த தமிழிலேயே பேசுகின்றனர். இவர்களுடைய பழக்கவழக்கம், சடங்குகள், நம்பிக்கைகள் இவையாவும் நாயர் இனமக்களைப் போன்றே காணப்படுகின்றன.

இவர்கள் மருமக்கள் தாயம் உறவு வழிமுறையினைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். கி.பி. 1931-ஆம் ஆண்டு திருவாங்கூர் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் திருவிதாங்கூர் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் படி நாயர் சமுதாயத்தின் சட்டத் திட்டங்கள் ஒழுங்கு முறைகள் விளக்குத் தலை நாயருக்கும் பொருந்துவதாக ஆக்கப்பட்டது. இவர்கள் கி.பி. 1931-க்கு முன்பு அம்பட்டர் என்ற பிரிவின் கீழ்க் கணக்கிடப்பட்டனர். இப்போது தனித்தனியாகக் கணக்கெடுக்கப் பட்டிருக்கிறது. இவர்கள் கி.பி. 1931-ஆம் ஆண்டு எண்ணிக்கை 30,603 ஆக இருந்தது (Census of India, 1931:386). இவர்கள் சவரத் தொழிலாளர்களாகவும், மருத்துவர்களாகவும் தொழில் செய்கின்றனர். இவ்வினப் பெண்கள் அனுபவம் வாய்ந்த பேறுகாலம் பார்க்கும் மருத்துவச்சிகளாக விளங்குகின்றனர்.

### குடிமகன்

குடிமகன் என்பது தமிழ் அம்பட்டர்க்குரிய பட்டப்பெயர் ஆகும். குடிமகன் என்பதற்குத் தமிழ் லெக்சிகன் நற்குடிப் பிறந்தவன், பரம்பரையடிமை, படியாள், அம்பட்டன் என்று விளக்கம் அளிக்கிறது. எனவே பண்பாட்டிலும், ஒழுக்க நெறியிலும், செய்ந்நன்றி மறவாப் பண்பிலும், உயர்ந்து சிறந்து நின்றவனே குடிமகன் என்றும் நம்பிக்கைக்குரியவன் என்றும் கருதலாம். இவர்களைச் சுபகாரியங்கள் நடக்கும் இடங்களில் குடிமகன், ஊர்க்குடிமகன் என்றே அழைக்கின்றனர். குடிமகன் என்றால் ஊரின் மூத்தமகன் என்று பொருளாகும். அதாவது, ஊரில் உள்ள எல்லோருடைய வீடுகளிலும் நடைபெறுகின்ற இன்ப துன்ப நிகழ்ச்சிகளை இவர்களே முன் நின்று நடத்துவதால் அவ்வாறு அழைக்கின்றனர். இவர்கள் கிராமத்திற்குப் பொதுவாகவும், சில குடும்பங்களுக்கு மட்டும் தனியாகவும் சேவைச் செய்கின்றனர். ஊருக்குப் பொதுவாகச் சேவைச் செய்யும் மருத்துவரைக் குடிமகன் என்றழைப்பர். இவர்கள் பரம்பரை பரம்பரையாக இப்பணியினைச் செய்கின்றனர். இவர்களுக்குக் கூலியாகப் பூவிற்கு (ஆறு மாதத்திற்கு) இவ்வளவு நெல் என்று ஊர் பெரியவர்களால் தீர்மானித்துக் கொடுக்கப்படுகிறது.

முற்காலத்தில், குடிமகன் தமது வீட்டில் சமையல் செய்வதில்லை. அவர்கள் சேவைச் செய்யும் ஆதிக்க சாதியினர் வீடுகளில் தான் சோறு வாங்கி உண்பது வழக்கம். இதனை

'ஊர்ச்சோறு' எனக் கூறுவர். ஊர்க்குடிமகன் ஊர் வேலையினையும் பார்த்துவிட்டு வேறு வேலையான கூலி வேலைக்கும், சிலர் மேளம் அடிப்பதற்கும் செல்கின்றனர்.

## கேரள முதலி

இவர்களைச் சக்கரவர்கள் என்று அழைப்பர். இவர்கள் காவிரிப்பூம் பட்டினத்தைச் சார்ந்தவர்கள். அங்கிருந்து குமரி மாவட்டத்திற்குக் குடியேறியவர்களாவர். எனவே இவர்களைக் 'காவதி' என்று அழைப்பதும் உண்டு. சக்கரவர்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் முதன்முதலில் தோன்றியதாகவும்; அது சோழப் பேரரசின் மிகப்பெரிய வர்த்தக இடமாகவும் கருதப்பட்டது. இவர்களைச் 'சைவ செட்டி வெள்ளாளர்' என்றும் குறிப்பிடுவர். இதற்கு ஒரு கட்டுக் கதையுள்ளது. சோழ மன்னன் தன் மகளைச் சைவ செட்டியைச் சார்ந்த முதல்வரின் மகனுக்குத் திருமணம் செய்து வைத்ததால் இந்தச் சாதி வந்ததாகக் கூறப்படுகின்றது. முதல்வரின் வம்சத்தார் சைவச் செட்டி இனத்தை ஏற்க மறுத்ததால் இவர்கள் தெற்குத் திசையை நோக்கி நகர்ந்தனர். எனவே, இவர்கள் காவிரி பட்டணக்காரர்கள் அல்லது காவிரியார் (Singh, 2001:698) என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் காவுதி இனத்துடன் கி.பி. 1911-ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டனர். எனவே இவர்கள் முடிவெட்டும் நாவிதர் இனத்தைச் சேர்ந்தவகளாயினர். தங்கள் சமுதாய மதிப்பை உயர்த்த காவுதி இனத்தைச் சேர்ந்தவர்கள் தங்களைச் சக்கரவர் என்றும், பின்னர் கேரளமுதலி என்றும் மாற்றிக் கொண்டனர். இதனால் கேரளமுதலி என்ற புதிய சாதிப் பெயர் கி.பி. 1931-ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது என்று கி.பி. 1931-ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பில் கூறப்பட்டுள்ளது.

கேரளமுதலி இனத்தவர்கள் தமிழகத்தில் திருநெல்வேலி, இராமநாதபுரம், சென்னை மற்றும் பெரியார் மாவட்டத்திலும் பெரும்பான்மையாகக் கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு தாலுகாவிலும் காணப்படுகின்றனர். கி.பி.1931-ஆம் ஆண்டில் இவர்களின் மொத்த மக்கள்தொகை 5644 ஆகும். இதில் 3536 பேர் இந்துக்களாகவும், 2108 பேர் கிறித்தவர்களாகவும் இருப்பதாக மக்கள்தொகை கணக்கெடுப்பில் கூறப்பட்டுள்ளது. தற்போது இவர்களில் 90 சதவீதம் பேர் கிறிஸ்தவர்களாக மாறியுள்ளனர்.

இவர்கள் பெரும்பாலும் நெசவுத்தொழிலையே செய்து வருகின்றனர். ஒரு சிலர் மட்டும் இன்றும் சவரத்தொழில் செய்து வருவதைக் காணமுடிகின்றது. இவர்கள் ஊர்க்குடிமகனாகவும், கடைகள் வைத்தும் சவரத் தொழிலினைச் செய்து வருகின்றனர்.

**காவுதியர்**

இவர்களைக் காவிதி, காவுதீஸ் என்றும் அழைக்கின்றனர். இவர்கள் பரம்பரையாக முடிவெட்டும் தொழில் செய்து வருகின்றனர். இவர்கள் பெரும்பான்மையாகக் கன்னியாகுமரி மாவட்டத்தின் நான்கு தாலுகாக்களிலும் காணப்படுகிறார்கள். இவர்கள் தங்கள் முன்னோர்கள் பாண்டிய நாட்டிலிருந்து வந்ததாகக் கருதுகின்றனர். வீரமாமுனிவர் அருளிய சதுரகராதியில் காவிதியர் என்பதற்குக் கணக்கர், மந்திரியார் என்றும் காவிதி என்பதற்கு மந்திரி என்றும் விளக்கம் அளிக்கிறது. பாண்டியர் ஆட்சிக் காலத்தின்போது வேளாளர்களுக்கு மன்னன் 'காவிதி' என்ற பட்டத்தினை வழங்கினான். இப்பட்டம் பெற்றவர்களைக் காவிதிமக்கள் என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. ஏனாதிப் பட்டம் படைத்தலைவர்களுக்கும், காவிதிப் பட்டமானது அமைச்சர், கணக்கர் ஆகியோருக்கும் அளிக்கப்பட்டது. இப்பட்டம் வழங்கப்பட்டதற்கு அடையாளமாகப் பொன்னால் ஆகிய பூ அளிக்கப்பட்டது. இப்பூ ஏனாதிபூ, காவிதிபூ என அழைக்கப்பட்டது. இப்பட்டம் பெற்றவர்கள் வழக்குகளில் நடுவராக நியமிக்கப்பட்டனர் என்று இராமகிருட்டினன் (1983:64) குறிப்பிடுகிறார். காவிதிப்பட்டம் கொடுத்ததைக் குறித்து,

*"நறுங் சாந்து நீவிய கேழ் கிளர் அகலத்து*
*ஆவுதி மண்ணி, அவிர் துகில் முடித்து*
*மா விசும்பு வழங்கும் பெரியோர் போல*
*நன்றும் தீதும் கண்டு ஆய்ந்து அடக்கி*
*அன்பும் அறனும் ஒழியாது காத்து*
*பழி ஒரீஇ உயர்ந்து, பாய் புகழ் நிறைந்த*
*செம்மை சான்ற காவுதி மாக்களும்"*

*(மதுரைக்காஞ்சி, 494-500)*

என்னும் பத்துப்பாட்டு நூற்பாவின் மூலம் அறியலாம்.

இவ்வின பெண்கள் பேறு காலம் பார்க்கும் மருத்துவச்சிகளாக உள்ளனர். இவர்கள் எந்தச் சாதியைச்

சேர்ந்தவர்களுக்குப் பணிபுரிகின்றார்களோ அந்தச் சாதியின் பட்டப் பெயரைப் பின்னொட்டாகக் கொண்டப் பல உட்பிரிவுகள் இவர்களிடையே காணப்படுகின்றன. தச்சக் காவுதியன், கணி சக்காவுதியன் என்ற பிரிவினர் ஆசாரிகளுக்குத் தொழில் செய்பவராவர். ஈழவர்களுக்குத் தொழில் செய்பவர்களை ஈழவ காவுதியர் எனவும் அழைக்கின்றனர். இப்பிரிவுகளெல்லாம்' ஒரு பெரிய நாவிதர் சாதிப் பிரிவிலிருந்து பிரிந்த தனிச்சாதிகளாக? அல்லது அவர்கள் பணி செய்யும் சாதியினைச் சேர்ந்தனவாக அமைந்த உட்பிரிவுகளா? என்பதை முடிவு செய்ய இயலாதவர்களாக உள்ளனர். முறையான காவுதியர் தீயர்களுக்கே உரிய நாவிதர்களாக இருப்பதே இவ்வாறு முடிவு செய்ய இயலாதிருப்பதற்கான காரணம் என்று தர்ஸ்டன் (1987.iii:349) குறிப்பிடுகிறார். இவர்கள் அனைவரும் தமிழ் மொழியினைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**பரியாரி**

இப்பெயர் மருத்துவர்களைக் குடிமகன் என்று அழைப்பதற்குப் பதிலாக மதுரை, தஞ்சாவூர், சிதம்பரம் பகுதிகளில் பரிகாரி என்றே அழைக்கின்றனர். பரிகாரி என்பதற்குக் கோனார் தமிழ்க் கையகராதி (1992:434) வைத்தியன் என்று குறிப்பிட்டுள்ளது. கழகத் தமிழ் அகராதி நாவிதன், வைத்தியன் என்று குறிப்பிட்டுள்ளது. நோய்க்குரிய பரிகாரங்களைச் செய்வதால் பரியாரி என்று அழைக்கப்பட்டிருக்கலாம். இது குறித்து, இவர்கள் அம்பட்டன் பரியாரி அல்லது பரியாலி என்று அழைக்கப்படுகின்றனர். சிகை அலங்கரித்தலே இவர்களின் முதன்மையான தொழில் என்று இராமநாதன் (1982:42) கூற்றுரைப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**பண்டிதர்**

பண்டிதர், பண்டிட், பண்டுவர், பண்டுவம் என்பன கற்றவர் என்ற பொருளைத் தருவனவாகும். இது வடமொழி கற்றவர்களைக் குறிப்பதற்குரிய சிறப்புச் சொல்லாகும். தமிழ்நாட்டில் சில பகுதிகளில் மாத்வ பிராமணர்கள் பண்டிதர் என அழைக்கப்படுகின்றனர் என்று தர்ஸ்டன் (2003.vi:54) குறிப்பிடுகிறார். இதுபற்றி ஏலாதி (9),

> ***"கற்றாரைக் கற்றது உணரார் என மதியார்***
> ***உற்றாரை அன்னணம் ஓராமல்; அற்றார்கட்கு***
> ***உண்டி, உறையுள், உடுக்கை இவை ஈந்தார்***
> ***பண்டிதராய் வாழ்வார் பயின்று".***

எனக் குறிப்பிடுகிறது. இங்குப் பண்டிதர் என்று பாராட்டப்படுபவர் கற்று வல்ல புலவர்களைக் கல்விப் பொருளை அறியமாட்டாதவர் என்று இகழாமல், உறவினர்களை மட்டும் தமக்கு உதவுபவர் என்று நினையாமல், ஆதரவற்ற வறியவர்களுக்கு உண்ண உணவும், தங்குமிடமும், உடுக்க உடையும் இவற்றைக் கொடுத்து உதவுபவரே உலகத்தவரால் பண்டிதர் என மதிக்கப்பட்டு யாவருடனும் பகையின்றிப் பழகிப் புகழுடன் வாழ்பவராவர் என்றும் விளக்கம் அளிக்கின்றது.

மருத்துவ இனமக்கள் மருத்துவத் தொழில், சவரத் தொழில், இசைத் தொழில் என்று பல்வேறு விதமான தொழில்களைச் செய்து வந்தமையால் 'பண்டிதர்' என்று அழைக்கப்பட்டனர். 'கண்டதைக் கற்றவன் பண்டிதர் ஆவான்' என்ற பழமொழிக்கு ஏற்ப இவர்களுக்குப் பண்டிதன் என்ற பட்டப்பெயர் சொல்லி அழைத்தார்கள். இவர்களின் சிலருடைய பெயருக்குப் பின்னால் பண்டிதர் என்ற வார்த்தை பின்னொட்டாகச் சேர்க்கப் பட்டுள்ளதையும் காணமுடிகின்றது. கி.பி.1862-ஆம் ஆண்டு இவர்களுக்குரிய இப்பதவி ஒழிக்கப்பட்டது. ஆனால் இன்றும் இவர்களுக்குரிய பட்டப்பெயர் நிலைத்து வழக்கில் காணப்படுகிறது. மருத்துவனுக்குப் பண்டிதன் என்றும், மருத்துவத்திற்குப் பண்டிதம் என்றும் பெயருண்டு, மருந்து கொடுப்பவன் மருத்துவன்; பல் பொருள்களை அறிந்தவன் பண்டிதன். பண்டிதன் என்பது பண்டுவன் என்றும், பண்டிதம் என்பது பண்டுவம் என்றும் மருவும் என்று தேவநேயப் பாவாணரின் (1966:120) கூற்று குறிப்பிடத்தக்கது. கிராமப்புறங்களில் மருத்துவம் செய்பவர்களைப் 'பண்டுவர்' என்று அழைக்கும் வழக்கம் காணப்படுகிறது. பேச்சு வழக்கில் "பண்டுவம் ஒன்றும் பார்க்கலையா" என்று நோயுற்றவர்களைப் பார்த்துக் கேட்கும் வழக்கம் கிராமப்புறங்களில் காணமுடிகின்றது.

**பணிமகன்**

முக்குவர் சாதியினருக்குப் பணிபுரிபவரைப் பணிமகன் என்று தர்ஸ்டன் (2003.vi:57) குறிப்பிடுகிறார். மீனவ இனமக்களுக்குப் பணி செய்ய மருத்துவ இனமக்கள் மறுத்ததினால் அவர்கள் தங்கள் இனத்தில் உள்ளவர்களைக் குடிமகன்களாகத் தேர்வு செய்து பணியமர்த்திக் கொண்டனர். இவர்கள் சேவைப் பணிகளைச் செய்வதினால் பணிமகன் என்று அழைக்கப்பட்டனர்.

இவர்களுக்கு மீனவர்கள் அதிக மரியாதை கொடுக்கின்றனர். மீன்களைக் கரையில் கொண்டு வந்ததும் இவர்களுக்குப் பிடித்தமான மீன்களை எடுத்துக் கொள்ள அனுமதி அளிக்கின்றனர்.

இவர்கள் மருத்துவர்களைப் போன்று தீட்டினைப் போக்கும் உரிமை பெற்றவர்களாவர். தீட்டினைக் கடல் நீரினைத் தெளித்து நீக்குகின்றனர். அவ்வாறே பிறப்புத்தீட்டு, பூப்புத்தீட்டினையும் போக்குகின்றனர். இறந்தபின் இறந்தவரின் மனைவியின் தாலியினை அறுத்தலையும் இவ்வினப் பெண்களே செய்கின்றனர். இவர்கள் மீனவர்கள் இனத்தவராக இருந்தாலும் மருத்துவர்களைப் போன்று வாழ்வியல் சடங்கினையும், ஊர் வேலையினையும் முன்நின்று செய்வதைக் காணமுடிகின்றது.

### குடிப்பிள்ளை

பறையருள் அம்பட்ட வேலைச் செய்யும் ஒருசாரார், ஒரு சாதியில் தாங்கள் சேர்ந்துள்ளவர்களாகச் சொல்லிக் கொண்டு அதன் பட்டப்பெயரால் தங்களை வழங்கிக் கொள்ளும் இனத்தவர் என்று தமிழ் லெக்சிகன் (1987.ii:970) குறிப்பிடுகிறது. மருத்துவர்கள் தங்களைவிடத் தாழ்ந்தவர்களுக்குப் பணிசெய்ய மறுத்ததினால் பறையர்கள் தங்களுக்கென மருத்துவர்களை உருவாக்கிக் கொண்டனர். பறையருக்குச் சவரம் செய்யும் மருத்துவர்களைக் குடிப்பறையர் என்று அழைத்துள்ளனர் (மேலது, 970). களஆய்வில் குடிப்பிள்ளைகள் தற்போது பறையர்களாக மாறியுள்ள செய்தியை அறியமுடிந்தது. இன்று பெரும்பாலும் பறையர்கள் கிறிஸ்தவர்களாக மாறியுள்ளதாலும் சடங்குகளில் இவர்களின் தேவையில்லை என்பதாலும், சலூன் கடைகளின் பெருக்கத்தினாலும் குடிப்பிள்ளையாக இருந்தவர்கள் வேறு தொழிலுக்குச் சென்றுவிட்டனர். அவர்களிடம் களஆய்வு மேற்கொள்ளும்போது தாங்கள் பறையர் என்றே கூறுகின்றனர்.

### கொங்கு நாவிதர்

கோயம்புத்தூர் பகுதியில் வாழ்கின்ற கொங்கு வேளாளர்களுக்குப் பணி செய்கின்ற மருத்துவர்களைக் கொங்கு நாவிதர் என்று அழைக்கின்றனர். இவர்களின் தொன்மக் கதையாக, பெருங்குடியான் குலத்தைச் சேர்ந்த வாழி புல்லா கவுண்டர்

என்பவர் வேட்டுவ நாவிதனிடம் முகச்சவரம் செய்துக் கொண்டிருந்தார். அச்சமயம் உள்ளூர் வேட்டுவத்தலைவர் ஒருவர் குதிரையில் வந்து கொண்டிருந்தார். தலைவரைக் கண்டதும் நாவிதன் எழுந்து வணக்கம் சொன்னான். அவரும் 'வாப்பா' என்று பதில் மரியாதை கூறிச் சென்றுவிட்டார். ஊர்த்தலைவர் தன்னை வரச்சொல்லி அழைப்பதாய் நினைத்துக் கொண்ட நாவிதன் கவுண்டருக்குச் சவரம் செய்வதைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு ஊர்த்தலைவரைப் பார்க்க எழுந்து சென்றுவிட்டான். பாதிச் சவரம் செய்த நிலையில் பரிதவித்தபோது கவுண்டரின் தலைமகன் அங்கு வந்து, நாவிதன் விட்டுச்சென்ற மீதிச்சவரத்தைத் தானே செய்து முடித்துவிட்டான். ஊர்த்தலைவரின் வீட்டுக்குச் சென்ற நாவிதன் அவரைக் கண்டு வணங்கினான். நாவிதனின் வருகையைக் கண்டு ஆச்சரியமடைந்த தலைவர் "நான் வரும்போது தானே வாழி புல்லாக் கவுண்டருக்குச் சவரம் செய்து கொண்டிருந்தாய். அப்போது பாதி சவரம் கூட முடியவில்லையே அதற்குள் எப்படி இங்கு வந்து சேர்ந்தாய்? என்று கேட்டார்.

அதற்கு நாவிதன் தான் கும்பிட்டபோது 'வாப்பா' என்று வரச் சொன்னீர்கள். இதனால் சவரத்தைப் பாதியில் நிறுத்திவிட்டுத் தங்களைப் பார்க்க ஓடி வந்துவிட்டேன் என்று பதிலளித்தான். இதைக் கேட்ட தலைவர் மீதிச் சவரத்தை முடித்துவிட்டு வா என்று நாவிதனை விரட்டியடித்தார். சவரத்தை விட்டுவந்து நீண்ட நேரம் ஆகிவிட்டது; இனிப் போனால் அடி, உதைவிழும் என்று அஞ்சிய நாவிதன் வீட்டிற்குச் சென்றுவிட்டான். நாவிதன் கவுண்டர் வீட்டுப் பக்கமே செல்லவில்லை என்று அறிந்த தலைவர் மீதிச் சவரத்தை யார் முடித்திருப்பார்கள் என்று அறிய கவுண்டரின் வீட்டுக்குச் சென்றார்.

ஊர்த்தலைவர் வருவதைக் கண்டதும் கவுண்டர் 'ஊர்த்தலைவன் என்று அகம்பாவத்தினால் தானே நாவிதனைப் பாதிச்சவரத்தில் எழுந்து வரச் சொன்னாய் இனிமேல் உங்கள் நாவிதன் எங்கள் சாதி வாசலுக்கே வரக்கூடாது' என்று கர்ஜித்தார். கவுண்டரின் மகனே மீதிச்சவரத்தை முடித்துவிட்டான் என்பதை அறிந்த ஊர்த்தலைவர் அப்படியானால் எங்கள் சாதிக்கும் உங்கள் மகனே சவரம் செய்யட்டும் என்று கேலி பேசினார். அதற்குக் கவுண்டர் எங்கள் வீட்டு நாய் கூட உமது வீட்டில் தண்ணீர் குடிக்காது. அப்படியிருக்க எனது மகன் உமது சாதிக்குச் சவரம் செய்வதா? என்று ஏளனமாகப் பதிலுரைத்தார். உங்கள் நாய் எங்கள்

வீட்டில் சோறு தின்றுவிட்டால் உங்கள் மகன் எங்கள் சாதிக்குச் சவரம் செய்ய வேண்டும் ஒத்துக் கொள்கிறீர்களா? எனத் தலைவர் சொல்ல, அதற்குச் சரி என்று கவுண்டர் ஒப்புக் கொண்டார். ஊர்த்தலைவர் கொங்கு 24 நாட்டுக்கும் ஓலை அனுப்பி அனைவரையும் வரவழைத்தான். அறுசுவை உண்டியோடு 64 வகை பட்சணங்களையும் பரிமாறி வைத்தான். கவுண்டர் 24 நாட்டு வேளாளர்களையும் வணங்கி தமது நாயை அவ்விலைகளின் முன்பாக அவிழ்த்துவிட்டார். எல்லா இலைகளையும் முகர்ந்து பார்த்துவிட்டுச் சென்ற நாய் கடைசி இலையில் காலைத் தூக்கிச் சிறுநீர் கழித்துவிட்டுத் தன் எஜமானிடமே வந்து நின்றது. வேட்டுவ நாவிதன் வேளாள சாதிக்கு வேண்டாம்; கவுண்டரின் மூத்த இருமக்களுமே இத்தொழிலைச் செய்யட்டும் என வந்திருந்தவர்கள் தீர்ப்புக் கூறினர் என்று நடராசன் (2000:304-306) குறிப்பிடுகிறார். இவ்வாறு கொங்கு வேளாளர்கள் தங்களுக்கென நாவிதர்களைப் பணியமர்த்திக் கொண்டமை புலனாகிறது.

***ஒசா***

இசுலாம் சமயத்தில் சவரத்தொழில் செய்யும் மருத்துவர்களைக் குமரி மாவட்டத்தில் 'ஒசா' என்று அழைக்கின்றனர். ஒசா என்பது பாரசீக மொழிச் சொல்லாகும். பாரசீக மொழியில் சிகையலங்காரம் செய்பவர்களை 'ஒசா' என்றே அழைத்தனர். எனவே, அதே சொல்லை இசுலாமியரும் பயன்படுத்திக் கொண்டனர். இவர்கள் தங்களை இறைவனிடமிருந்து நேரடியாக இறங்கி வந்தவர்கள் என்று கூறிக் கொள்கின்றனர். ஆரம்பக் காலத்தில் முகமது நபியின் முகம் முழுவதும் ரோமங்களாக வளர்ந்து இருந்ததாம். அவரை அழகுபடுத்திப் பார்க்க இசுலாமிய சமயத் தொண்டர்கள் விரும்பினர். அதற்கு நபிகள் இசைவு தெரிவிக்க, இசுலாமிய சமயத்தைச் சார்ந்த ஒருவர் சிகையலங்காரம் செய்வதற்கு அமர்த்தப்பட்டார் (கபீர்:60). இவ்வாறு அமர்த்தப்பட்டகளுக்கு இசுலாமியரின் முக்கியச் சடங்கான 'சுன்னத்' செய்யும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. இவர்கள் மருத்துவர்களைப் போன்று இசுலாமியரின் சடங்கு நிகழ்வுகளில் பெரும்பங்கு வகிக்கின்றனர். குழந்தை பிறந்த பின்பு முதல் முடியினை எடுக்கும் பணியினை இவர்களே செய்கின்றனர். இதனை,

> ***"உதிர்ந்து விழுந்த தொப்புள்கொடி துண்டுடன்***
> ***ஒசா முதலில் இறக்கிய***
> ***தலைமுடியின் ஒற்றை இழை***
> ***ரகசியம் பேசியபடி வாழும்"***

என்று கவிஞர் ரகுல் (2000:3) குறிப்பிட்டுள்ளார். இதற்குத் தட்சணையாகப் பணம் கொடுக்கின்றனர்.

திருமணத்தின்போது மணமகனுக்கு முகம் மினுக்குதல் என்றச் சடங்கினை ஒசா செய்கின்றார். திருமணத்திற்கு முந்தின நாள் மணமகனின் வீட்டிற்குச் சென்று மணமகனின் முகத்தில் உள்ள முடியினை அகற்றிச் சுத்தம் செய்கின்றார். பின்னர் திருமணத்தன்று காலையில் மணமகனின் முகத்தில் தேங்காய் பாலினைத் தடவி முகத்தைப் பளபளப்பாக இருக்குமாறு செய்கின்றார். இதற்கு ஊதியமாகத் தானியங்கள், பணம் ஆகியவற்றைத் தட்சணையாகக் கொடுக்கின்றனர். தற்போது இவர்களிடம் முகச்சவரம் செய்து கொள்ளும் வழக்கம் குறைந்துவிட்டது. ஆண்கள் சிகையலங்கார நிலையம் அல்லது அழகு நிலையங்களில் சென்று தங்களை அழகுபடுத்திக் கொள்ளுகின்றனர்.

ஒசாவின் மனைவியை 'ஒசாத்தி' என்று அழைக்கின்றனர். இவர் பேறுகாலம் பார்க்கும் மருத்துவச்சியாகவும் விளங்குகின்றார். திருமணத்தின்போது ஒசாத்தி பெண்ணின் முகத்தைச் சுத்தம் செய்து (ரோமங்கள் இருந்தால் அகற்றிவிட்டு) முகத்தை அழகாகவும், பளபளப்பாகவும் ஆக்குகின்றாள். அதற்கு பெண்ணின் முகத்தில் கோழி முட்டையின் வெள்ளைக் கருவினை மட்டும் எடுத்து தடவுகிறார். குறிப்பிட்ட நேரம் கழித்து முகத்தைச் சுத்தம் செய்கிறார். இந்நிகழ்வினை 'முகமினுமினுப்புச் சடங்கு' என்று கூறுகின்றனர். தற்போது அழகு நிலையங்களின் (பியூட்டி பார்லர்) வருகையினால் அங்குச்சென்று தங்களை அழகுபடுத்திக் கொள்வதையே விரும்புகின்றனர். இதனால் சடங்கிற்காக ஒசாத்திக்குக் கொடுக்க வேண்டிய தட்சணையை (ஊதியம்) மட்டும் கொடுக்கின்றனர்.

### சுன்னத்

ஆண் குழந்தையின் ஆணுறுப்பின் நுனித்தோலை நீக்கிவிடுவதைச் 'சுன்னத்' என்று கூறுகின்றனர். இதனை 'மார்க்கம்', 'கத்னா' என்று பலவாறு கூறுவதுண்டு. சுன்னத் செய்வதினை மத உறுதிப்பாட்டுச் சடங்கு என்று கூறுகின்றனர். இசுலாத்தைத் தழுவிய ஒவ்வொருவரும் வயோதிகர்களானாலும் கத்னா செய்து கொள்ள வேண்டுமென்று பெருமானார் கட்டாயப்படுத்தியதாக ஹனிபா அப்துல்கறிம் (1997:194)

குறிப்பிடுகிறார். சுன்னத் செய்து கொள்ளாதவர்கள் தொழுகைக்குத் தலைமை ஏற்க முடியாது. அவர்களின் கருத்துகளும் ஏற்றுக் கொள்ளப்படாது என்பது போன்ற விதிமுறைகளைப் பெரும்பாலும் மார்க்க அறிஞர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். நபிமார்களுக்குச் சொந்தமான நான்கு நடைமுறைகளில் முதலாவது குறிப்பிடுவது 'சுன்னத்' ஆகும்.

ஆண்குழந்தைகளுக்கு மட்டுமின்றிப் பெண் குழந்தைகளுக்கும் சுன்னத் கட்டாயமானது அஹ்மது இப்னு ஹம்பல் (றலி) கருதுகிறார். நபி வழிப் பெண்கள் இதனைக் கட்டாயமாக்கவில்லை. குமரி மாவட்டத்தில் தோவாளை தாலுகாவில் உள்ள 'ஷாபி' மக்களிடையே பெண்களுக்குச் சுன்னத் செய்யும் வழக்கம் காணப்படுகிறது. குறிப்பிட்ட வயதிற்குப் பிறகு பெண்களுக்குச் சுன்னத் கல்யாணம் செய்ய முடியாதாம் என்று சுஜிதா பானு (2005:67) கூற்று இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இசுலாமியக் குழந்தைகளுக்குச் சுன்னத் சடங்கினை ஒற்றை எண் வயது அடிப்படையில்தான் செய்கின்றனர். இந்நிகழ்வினை 'அலிம்சா' (ஓதுபவர்) முன்னிலையில் நடத்துவர். ஓதி முடிந்த பின்பு இச்சடங்கு வீட்டில் வைத்து நடைபெறும். குழந்தையின் உடல்நலத்தினைப் பொறுத்து குழந்தை பிறந்த நாற்பது நாட்களுக்குள்ளோ அல்லது அதன் பின்னரோ சுன்னத் செய்கின்றனர். நாற்பது நாளில் செய்யாமல் இருந்தால் ஒன்றாவது வயதில்தான் செய்கின்றனர். பெரும்பாலும் ஏழு வயதிற்குள் சுன்னத் சடங்கினை நிறைவேற்றி வருகின்றனர். சிலர் பதிமூன்று வயதில் சுன்னத் செய்வதையும் காணமுடிகின்றது. ஒரு வயதிற்குமேல் குழந்தைக்குச் சுன்னத் செய்யும்போது அத்துடன் பெயரிடுதல் சடங்கினையும் சேர்த்து விழாவாக எடுக்கின்றனர். சுன்னத் செய்வதினைக் கவிஞர் ரசூல் (2003:34) தமது கவிதையில்,

***"வெளுத்த வெள்ளை வேட்டியை***
***ரெண்டு மூனுபேரு சுத்திபிடிக்க***
***நிக்கரை உரிஞ்சு ஸ்டூலுல பையன இருத்தி***
***சுன்னத் எடுக்க***
***ஒசாகூட தயாராகிட்டு இருப்பான்"***

என்று குறிப்பிடுகிறார்.

**சுன்னத் செய்யும்முறை**

சுன்னத் சடங்கினை விடியற்காலையில் செய்கின்றனர். இதனைச் செய்வதற்கு ஒசா மூன்று பொருள்களைப் பயன்படுத்துகின்றார். அவை, குச்சி, இடுக்கி, கத்தி ஆகியனவாகும்.

**குச்சி**



இதனைச் சோதனைக் கோல் என்று கூறுகின்றனர். இது மரத்தினால் ஆனது. ஊசி போன்ற வடிவில் ஒரு பக்கம்

## இடுக்கி

இது மூங்கில் கம்பினால் செய்யப்பட்டது. இதன் ஒரு முனைப்பகுதி V வடிவிலும், நடுப்பகுதிவரை கீறி வைத்து இருப்பர். இத்தகைய கீறியபிளவு போன்ற பகுதியை இடுக்கி போன்று பயன்படுத்துகின்றனர்.



**கத்தி**

சவரம் செய்யும் பழைய கத்தியினைப் போன்றே சுன்னத் செய்யும் கத்தியும் காணப்படுகிறது. இது நீளம் குறைவாகவும் சிறிய அளவில் கைக்கு அடக்கமாகவும் இருக்கும். இதனைச் சுன்னத் செய்வதற்கு மட்டுமே பயன்படுத்துகின்றனர். சுன்னத் செய்யும் முன்னர் சுன்னத் செய்யப்பட வேண்டிய சிறுவனை வீட்டில் ஏதேனும் தனி அறையில் கழுத்தில் மாலைபோட்டு அழைத்து வருவர். தனி அறை இல்லை என்றால் துணியினால் மறைத்துக் கொள்ளுவதும் உண்டு. சிறுவனை ஒருவர் பிடித்துக்கொள்ள ஒசா சோதனைக் கோலான குச்சியினை ஆணுறுப்பின் முன் ஓட்டை



வழியேவிட்டு முன் தோலின் நீளம், கடினத்தன்மையினை ஆராய்ந்துவிட்டு அதன்நிலை மாறாமல் அப்படியே வைத்துப் பின்னர், சோதனைக்கோலைத் தொடாதவாறு இடுக்கியினை மேலிருந்து கீழாகச் செருகி வைப்பர். இஃது ஆண்குறியின் மொட்டு பாகத்தில் எவ்விதமான பாதிப்பும் ஏற்படாதவாறு இருக்கும்.

இடுக்கிக்கும் சோதனைக் கோலுக்கும் இடையே உள்ள சிறு இடைவெளியில் கத்தியைக் கொண்டு தோலை வெட்டுவர். பின்னர், வெட்டுபட்ட இடத்தில் தேங்காய் எண்ணெயினை விட்டுக்கொண்டே இருப்பர். அதன்பிறகு வேப்பிலையின் தளிரை நன்கு மைபோல அரைத்து அதனைத் துணியில் தடவி அதன்மீது கட்டி விடுவர். தற்போது ஆங்கில மருந்துகளையே அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். மூன்றாம் நாள் இவர்கள் அதனை அவிழ்த்துக் கட்டும் மரபுமுண்டு. முன்பு,அவ்வாறு கட்டும்போது சூடாக்கிப் பொரிந்த சீனிக்காரத்தைப் பொடித்துப் பவுடர் செய்து அதில் தூவுமாறு கூறுவர். தற்போது நவீன புண்களுக்குரிய மருந்து பொடியினைப் பயன்படுத்துகின்றனர். சில நேரம் சுன்னத் செய்த இடத்தில் வீக்கம் ஏற்படும். அவ்வாறு ஏற்பட்டால் பழுத்த பூவரசம் இலையினை மட்டும் அதில் சுற்றிக் கட்டி வைப்பர். அவ்வாறு செய்தால் வீக்கம் குறையும். இவ்வாறு சுன்னத் செய்வதற்குத் தற்போது 1000 முதல் 1500 ரூபாய் வரை தட்சணையாக்க் கொடுக்கிறார்கள். தொடர்ந்து ஒவ்வொரு நாளும் மருந்து வைத்து சிறுவனைச் சுத்தம் செய்ய வரும்போதும் பணம் கொடுப்பதுண்டு.

சுன்னத் நடந்த ஏழாவது நாளில் தலைக்குத் தண்ணீர் விடும் நிகழ்ச்சி நடைபெறும். அன்று ஒசா சிறுவனைச் சுத்தப்படுத்தி, புது ஆடைகளை அணிவித்து விடுவார். வீட்டார் அவனைப் பள்ளிக்கு அழைத்துச் சென்று தொழுகை முடிந்து தூய்மையானவனாக

அழைத்து வருவர். இறுதியாக அவர்களின் மகிழ்ச்சிக்கு ஏற்ப ஒசாவுக்குப் பணம், பொருட்கள் கொடுப்பார்கள்.

சுன்னத் அல்லது கத்னா இசுலாமியருக்கு மட்டுமின்றி யூதர்களிடமும் இருந்துள்ளமை திருவிவிலியத்தில் கூறப்பட்டுள்ளது (ஆதி, 34:14). ஆணின் லிங்கத்தின் முனைத்தோலை அறுக்கும் சடங்கு பண்டைய செமிட்டி மக்களின் வழக்கமாகும். பலூச்சிஸ்தானத்தில் மாரிபாலோச்சர் (Mari baloch) என்னும் சாதியர் தங்கள் சிறுவர்களுக்கும், சிறுமியருக்கும் இச்சடங்கை மூன்று வயது முதல் ஏழு வயது வரை நடத்துகின்றனர் என்ற வாழ்வியற் களஞ்சியத்தின் (1986.iv:434) கூற்று இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. இந்துக்களான பிறன்மலைக் கள்ளர்கள் என்னும் இனத்தவரிடமும் சுன்னத் சடங்கு உள்ளது என்று தர்ஸ்டன் (1987.iii:186) குறிப்பிடுகிறார். இசுலாமியர்கள் சுன்னத் செய்வதன் அவசியமாக, ஐந்து வேளையும் தொழுகையைக் கடைபிடிப்பதற்கும், தொழுகைக்குச் செல்லும் ஒருவருடைய ஆடையும், உடலும் சுத்தமாக வைத்திருப்பதற்கும், சிறுநீர் கழித்தபின்பு முனைத்தோலில் சிறுநீர் தங்குவதைத் தடுப்பதற்காகவும், தாம்பத்திய வாழ்வு இனிமையாகவும், தோல் சம்மந்தமான நோய்கள் எளிதில் வராமல் இருக்கவும் என்று பல்வேறு விதமான காரணங்களுக்காகச் சுன்னத் செய்யப்படுவதாகத் தகவலாளிகள் குறிப்பிடுகின்றனர்.

## மக்கள் தொகை

மக்கள்தொகை கணக்கின்படி கி.பி. 1931 முதல் இவ்வின மக்கள் பல்வேறு பெயர்களில் கணக்கிட்டு வந்துள்ளமையும், இவ்வின மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றதையும் அறியமுடிகின்றது. கி.பி. 1941-க்குப் பிறகு பண்டிதர் என்ற பிரிவில் கணக்கிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மருத்துவர் என்ற எண்ணிக்கை பிற்காலத்தில் அதிகரித்து வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மக்கள் தொகை விவரப்பட்டியல்

| வ. எண் | ஆண்டு | மருத்துவர் | அம்பட்டர் | நாவிதர் | பரியாரி | விளக்குத் தலை நாயர் | கேரள முதலி | பண்டிதர் | நாகுவன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1931 | 152 | 10.242 | 102915 | 15238 | 30603 | 5644 | 3914 | 404 | 169112 |
| 2 | 1941 | 196 | 12294 | 123495 | 18288 | 131162 | 6774 | 4704 | 509 | 297422 |
| 3 | 1951 | 5900 | 14764 | 148195 | 21957 | 157394 | 7137 | - | 618 | 355965 |
| 4 | 1961 | 7110 | 17723 | 177834 | 25367 | 188872 | 8578 | - | 740 | 426224 |
| 5 | 1971 | 8542 | 21276 | 213400 | 30435 | 226646 | 10299 | - | 890 | 511488 |
| 6 | 1981 | 18253 | 23548 | 241080 | 36523 | 271975 | 12352 | - | 1070 | 614801 |
| 7 | 1991 | 36903 | 26589 | 291296 | 41822 | 326370 | 16208 | - | - | 739188 |
| 8 | 2001 | 84283 | 26903 | 320555 | 44186. | 391644 | 19359 | - | - | 886930 |

## தொன்மம்

தொன்மம் என்பது பழமைத் தன்மையினைக் குறிக்கும். இதனை, தொன்மை தானே உரையோடு புணர்ந்த பழமை மேற்றே (தொல் : 1493) என்று தொல்காப்பியம் விளக்கம் தருகின்றது. தமிழ் லெக்சிகன், தொன்மம் என்ற சொல்லிற்குப் 'பழமை உரைவிரவியப் பழமையாகிய (1982, IV:2104) கதைப் பொருளாகச் செய்யப்படுவது' என்று பொருளுரைக்கிறது. ஆங்கிலத்தில் இச்சொல் 'Myth', 'Legend' என்ற சொற்களுக்கு இணையாக அமைகிறது. ஓர் இனம் காலங்காலமாக இந்நிலவுலகில் வாழ்ந்ததினால் உருவாகிய பண்பாட்டின் விளைவால் தொன்மங்கள் தோன்றின. எனவே பழங்கதைகளாம் தொன்மங்கள், கூட்டுக்கற்பனையாலும், கூட்டு அனுபவத்தாலும் கிளர்ந்து எழுந்தவை. இவை ஒரே நாளில் உருவாகியது அல்ல; காலத்தின் கோலத்தினால் இக்கதைகள் கருவாகி வளருகின்றன என்று கதிர் மகாதேவன் (1986:4) தொன்மத்திற்கு விளக்கம் அளிக்கிறார். எனவே தொன்மத்தின் வாயிலாக நம் முன்னோர்களின் எண்ணங்கள், வரலாறு முதலியவற்றை அறிந்துக்கொள்ள முடியும். ஆனால் மருத்துவ இனமக்களைக் குறித்த தொன்மக் கதைகள் அனைத்தும் பெரும்பாலும் இவர்களை அடிமைப்படுத்தும் நோக்கிலே புனையப்பட்டுள்ளன. கள ஆய்வின்போது பல்வேறு விதமான தொன்மக் கதைகள் கிடைத்தன.

## மனுதர்மம், அகராதிகள் கூறும் தொன்மம்

மருத்துவ இனத்தோற்றம் குறித்து மனு, அகராதிகளும் ஒரே விதமான கருத்தினை முன் வைக்கின்றன. அதாவது, வைசியப்பெண் பிராமணனோடுக் கூடி பிறந்த குமரன்; பிராமணன் சூத்திரப் பெண்ணைக் கூடியும், அரசன் வைசியப் பெண்ணைக்கூடியும் பிறந்தவன் என்று அபிதான சிந்தாமணியும் (2001:72), உயர்குலத்தந்தைக்கும், இழிக்குலத்தாய்க்கும் பிறந்தவன் தமிழ் பேராகராதியும் (1937:114) விளக்கம் அளிக்கின்றது. இவை அனைத்தும் மனு கூறியுள்ளதை அடியோற்றியே கூறப்பட்டுள்ளன என்பது புலனாகிறது. எனெனில் கோயில் பூசாரிகளான மருத்துவ இனமக்களை அடிமைப்படுத்தும் நோக்கில் இக்கட்டுக்கதைகள் புனையப்பட்டுள்ளன என்பது புலனாகிறது. மேலும் பிராமணனால் சூத்திரப் பெண்ணிடத்தில் பிள்ளைப்பிறந்தால் அவனுக்குத் தந்தையின் சொத்தில் உரிமையில்லை என்று மனுதர்மசாஸ்திரம்

ஒன்பதாவது அத்தியாயம் 155 -வது சுலோகம் கூறுகிறது. மேலும் பிராமணனுக்கு சூத்திர மனைவியிடத்தில் பிறந்துள்ள புத்திரன் செய்யும் சிரார்த்தமானது பரலோகத்திற்கு உபயோகம் ஆகாததால் அந்தப்பிள்ளை உயிரோடிருந்தாலும் பிணத்திற்கு ஒப்பானவர் என்றும் மனுதர்மம் அத்தியாயம் 9-ல் 178-வது சுலோகம் கூறுகிறது. இவ்வாறு மனுதர்ம சுலோகங்களை அடிப்படையாகக் கொண்டு முதலில் இவர்களின் பிறப்பினை இழிவுப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு கட்டுக்கதைகளைக் கூறியே இவ்வின மக்களிடையே தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்திவிட்டனர்.

## இலக்கியத்தில் மருத்துவர்கள் குறித்த தொன்மம்

ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றான; மணநூல் என்னும் சிறப்புக்குரிய சீவகசிந்தாமணியில் மருத்துவர்களின் தோற்றம் குறித்த தொன்மக் கதையினைக் கூறுகின்றது. சீவக சிந்தாமணியின் பன்னிரண்டாம் இலம்பகமான இலக்கணையாரிலம்பகத்தில்,

*"குளநெல் முன்றிற் கனி தேன் சொரி சோலைக் குளிர் மணி*
*வளமை மல்கியெரி யம்பட மந்திகை காய்த்துவ்ான்*
*இளமை யாடியிருக் கும்வனத் தீர்ஞ் சடை மாமுனி*
*கிளையை நீங்கிக்கிளர் சாபத்தி னாவித னாயினான்" (சீவக, 12:2491)*

என்று நாவிதன் என்று அழைக்கப்பட்ட மருத்துவர்கள் தோன்றிய வரலாறு கூறப்பட்டுள்ளது. இஃது வனத்தில் இருந்த முனிவர் ஒருவர் தன் சுற்றத்தை நீக்கி சாபத்தினால் நாவிதனானான் என்று குறிப்பிட்டுள்ளது. இத்தொன்மக்கதை கரூரார் அகத்திய முனிவரிடம் சாபம் பெற்றக் கதையோடு ஒத்து போவதாக உள்ளது. மேலும் சாபம் பெற்ற முனிவரின் வழித் தோன்றலாக வந்த நாவிதர்களின் பெருமையினை,

*"ஆய்ந்த கேள்வியவன் கான்முளை யாய்வழித் தோன்*
*றினான், தோய்ந்த கேள்வித்துறை போயலங் காரமுந்தோற்*
*றினான், வேந்தன் நன்னாற்களிற் நூர்தி சிறப்போடு மேயினான்*
*வாய்ந்த கோலமுடை யான்பெரு மஞ்சிகர்க் கெறனான்"*
*(சீவக, 12:2492)*

*"நித்தில வடமும் பூணு மாரமு நிழன்று தாழ*
*ஒத்தொளிர் குழைகள் காதினான்றுபொன் னூசலாடப்*
*பைத்தர வல்குற் பாவைகரகநீர் சொரியப் பாங்கின்*
*வித்தகன் பூசி வெள்வேல் வேந்தனுக் கிறைஞ்சினானே"*
*(சீவக, 12:2493)*

என சீவகசிந்தாமணி சுட்டுகிறது. இதில் நாவிதன் நல்ல அறிவினையுடைய முனிவரின் மரபிலே தோன்றியவன், நுண்ணிய நூற்பல கற்றவன், அலங்காரம் என்னும் நூலில் வல்லவன், அரசனால் யானைப் பரிசு பெற்றவன், மிக்க அழகுடையவன், சிங்கம் போன்றவன் எனத் திருத்தக்க தேவர் நாவிதர்களின் பெருமைகளைக் கூறியுள்ளார். இதனைப் பார்க்கும் போது கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் தோன்றிய சீவகசிந்தாமணி நாவிதர்களை உயர்வாகக் கூறியுள்ளது. அதன்பின்பு தான் இவர்கள் மனுவின் மூலம் இனக்கலப்பினால் தோன்றிய இனம் என்று இழிவுபடுத்தப் பட்டு அடிமையாக்கப்பட்டுள்ளனர் என்பது புலனாகின்றது.

## மருத்துவரின தோற்ற தொன்மங்கள்

தமிழகத்திலுள்ள ஒவ்வொரு இனமக்களும் தங்கள் இனம் தோற்றம் குறித்த பல கதைகளைக் கூறுகின்றனர். அதில் தங்கள் சாதி உயர்வைக் கற்பிக்கும் புராணங்களைத் துணைக்கு அழைத்தனர். ஆனால் மருத்துவர்களின் தோற்றக் கதைகளிலும் புராணக் கதைகள் சாதியினை இழிவுப்படுத்தும் நிலையிலே காணப்படுகின்றது.

❖ நாவிதன் என்ற சாதி படைக்கப்படாத சமயத்தில் சிவன் திருமணம் செய்து கொள்ளாதவனாகப் பக்தி நெறிப்பட்டுக் கற்றைச் சடை முடியாகத் தன் முடியினை வளர விட்டுக் கொண்டிருந்தான். அவன் மணம் செய்து கொள்ள முடிவு செய்த சமயத்தில் மலை அரசன் மகளான மணமகள் தாடி மீசையோடு கூடிய தன்முகத் தோற்றத்தினை விரும்பமாட்டான் என நினைத்தான். இச்சமயத்தில் சிவனை அழகுத் தோற்றமுள்ள மணமகனாக்க வேண்டியும், மணநிகழ்ச்சியை நடத்தும் பிராமணனாக இருக்கவும் நாவிதன் படைக்கப்பட்டான் என்று தர்ஸ்டன் (1987, iii:354) குறிப்பிடுகிறார்.

இத்தொன்மக் கதையினைப் பார்க்கும்போது சிவபெருமான் தன்னை அழகுபடுத்தவும், தன்னுடைய திருமணத்தை நடத்துவதற்கும் மருத்துவரினம் படைக்கப் பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் அக்காலத்தில் திருமணத்தை நடத்தி வைப்பதற்கு புரோகிதர்கள் (பிராமணர்கள்)

இல்லையா? இறைவனான சிவபெருமானின் உருவம் எவ்வாறு இருக்கும் என்று சமீபத்தில்தான் வரையப்பட்டது. எனவே இக்கதையானது மருத்துவர்களை சவரத்தொழில் செய்வதற்காகப் படைக்கப்பட்ட கட்டுக்கதையாக உள்ளமைக் குறிப்பிடத்தக்க தாகும். மேலும் மலையரசன் மகளான பார்வதியினை மணம் செய்ய சிவபெருமான் தன்னை அழகுபடுத்திக் கொண்டதாக புராணங்கள் எதுவும் கூறவும் இல்லை.

❖ மலை அரசனின் மகளைத் திருமணம் செய்வதற்காக சிவன் நாவிதனைப் படைத்தான். நாவிதன் புரோகிதராக இருந்து மந்திரம் கூற திருமணம் நடந்து முடிந்த பின்பு, சிவனிடம் நாவிதர் முறையிட அவர் எல்லா விதமான கலைகளும் உள்ளடங்கிய பல ஏடுகளை இவரிடம் கொடுத்து நீ பட்டனாக இரு என்று கூறி அனுப்பினார். அவ் ஏடுகளை இவர் கிழிந்த பழைய துணியில் கட்டி எடுத்துச் சென்றான். வழியில் இவருக்குத் தெரியாமல் ஒவ்வொரு ஏடுகளாகக் (கிழிந்த துணி) ஓட்டையின் வழியே கீழே விழுந்தது. அதில் மந்திரங்கள் இருந்த ஏட்டை அந்தணரும், வேறு சில எடுகளை வழியில் வந்த பிற இனத்தவரும் எடுத்துக் கொண்டனர். இவர் வீட்டில் சென்று துணியினை அவிழ்த்துப் பார்க்கும்போது அதில் ஒரு சில மருத்துவ ஏடுகள் மட்டுமே எஞ்சி இருந்தன. உடனே இவர் மீண்டும் சிவனிடம் சென்று நடந்ததைக் கூறினார். நீங்கள் எங்களைப் பட்டனாக இருக்கும்படி கூறினீர்கள்? ஆனால் ஏடுகள் அனைத்தும் என்னை விட்டு தொலைந்து விட்டன, இனி நான் எப்படி பட்டனாக இருக்க முடியும்? என்று கேட்க, சிவன் நீ பட்டனாக இருக்க வேண்டாம் எல்லாம் இழந்து விட்டதினால் ஒன்றுமில்லாத வெறும் பட்டனாக, அதாவது அம்பட்டனாக இரு என்று கூறினார்.

***கதை கூறியவர்:*** மகேஷ்வரி, 65,<br>வலங்கைமான்,<br>கும்பகோணம்.

இக்கதையின் மூலம் இவர்கள் எவ்வாறு ஏமாற்றப்பட்டுள்ளனர் என்பது புலனாகின்றது. எல்லா விதமான கலைகளையும் உள்ளடக்கிய ஏடுகளை முறையாகக் கொண்டு சென்றால் இவன் பட்டனாக உயர்ந்து விடுவான் என்பதால்,

அதனை வழியிலே தந்திரமாக எடுத்துக் கொண்டமைப் புலனாகின்றது. இஃது மருத்துவரின மக்களை அடிமைப்படுத்தும் நோக்கிலே செய்துள்ளனர். இன்னும் இவ்வின மக்களிடம் மருத்துவம் சார்ந்த ஏடுகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

❖ கந்தர்வ குலத்தைச் சார்ந்த பெண்ணொருத்தியின்மீது சினங்கொண்ட பிரம்மன் அவளைக் கடலில் தூக்கிப்போட்டுப் பாறையாகும்படி சபித்தான். அவருடைய பணிவான கெஞ்சுதலுக்கு மனம் இரங்கிய பிரம்மன், பரசுராமன் அப்பாறையின்மீது கால் வைக்கும்போது மீண்டும் நீ மனித உருப்பெறுவாய் எனச் சாப விமோசனம் கொடுத்தார். மேற்கு கடல் நீரினைப் பின்னோக்கிச் செல்லுமாறு செலுத்தி மேற்குக் கடற்கரையினைப் பரசுராமன் உண்டாக்கியபோது, மீண்டும் மனித உருப்பெற்ற அவள் தன் நன்றியினை மிகக் கனிவோடு பரசுராமனுக்குச் செலுத்தினாள். அதனால் மனம் மகிழ்ந்த பரசுராமன் அவரிடம் வேண்டிய வரத்தினைக் கேட்கும்படி பணிந்தான். அவள் கல்லாகக் கிடந்த தன்னை மனித உருவாக்கிய பரசுராமன் பெருமையினை வருங்காலத்தினர் என்றும் நினைவில் கொள்ளும்படியான ஒரு மகனைப் பெறும் பேறு தனக்கு வேண்டும் என கேட்டுக் கொண்டாள். அவள் அவ்வாறே சிறந்த மகனைப் பெறுவாள் எனப் பரசுராமன் வரம் அருளினான். எனினும் அவளுக்குப் பிறக்கும் மக்கள் பரசுராமனைப் போல பிராமணர்களாக இல்லாவிட்டாலும் பிராமணர் செய்யும் செயலுக்கு ஒப்பானச் செயல்களை அவர்கள் செய்வர் என அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதன்படி நாவிதர்கள் சூத்திரர்களுக்குப் புரோகித செயலைச் செய்வதோடு பிராமணர்கள் ஆன்மாவினைத் தூய்மைப்படுத்துவது போல உடலைத் தூய்மைப்படுத்தும் பணியினையும் மேற்கொண்டவர்களாக உள்ளனர் (1987, iii:353, 354).

இத்தொன்மக் கதையில் கந்தர்வ குலப்பெண்ணின்மீது பிரம்மன் எதனால் சினங்கொண்டான் என்பது மறைப் பொருளாகவே உள்ளது. பரசுராமனிடம் வரமாக அப்பெண்;

பரசுராமனின் பெருமையினை தம் வம்சாவழியினர் நினைவில் கொள்ள வேண்டும் என்றே கேட்டாள். பின்னர் எப்படி இவர்கள் மனித உடலை தூய்மைப்படுத்தும் பணியில் தள்ளப்பட்டார்கள்? இவ்வின மக்களிடம் பரசுராமன் பற்றியச் சிந்தனைகள், எண்ணங்கள் எதுவும் காணப்படாமல் இருப்பதற்கானக் காரணம் தான் என்ன? அப்படியானால் இதுவும் பிராமணர்களின் சதியினால் எழுந்த கட்டுக் கதையே!! என்று எண்ணத் தோன்றுகிறது.

இம்மூன்று தொன்மக் கதைகளையும் பார்க்கும் போது, மருத்துவ இன மக்களின் முதன்மைத் தொழில் புரோகிதம்; அதாவது, கோயில் பூசாரி பணி என்பது மிகத் தெளிவாகப் புலனாகின்றது. அதன் பின்னர் மருத்துவத் தொழிலிலும் மிகவும் தேர்ச்சி பெற்று விளங்கியுள்ளமை அறிய முடிகின்றது.

## மருத்துவர்களில் உட்சாதி பெயர் குறித்த தொன்மம்

மருத்துவ இனத்தில் உட்சாதிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. அவற்றுள் நாவிதர், அம்பட்டர், விளக்குத்தலைநாயர் போன்ற பெயர்கள் எவ்வாறு வந்தன என்பதை குறித்து தொன்மக் கதைகள் விளக்குகின்றன.

❖ மருத்துவர் ஒருவர் காட்டு வழியே சென்றுக் கொண்டிருக்கும்போது வழியில் முனிவர் ஒருவர் தங்க நிற சடைமுடியுடன் எதிரே வந்தார். அவர் இவரிடம் வந்து தமக்குச் சவரம் செய்யும்படி கூறினார். சவரம் செய்வதற்காகத் தண்ணீரைக் காட்டில் எங்கு தேடியும் கிடைக்கவில்லை. ஓர் இடத்தில் தண்ணீர் இருப்பது போன்று தெரிந்தது. அங்குச் சென்று பார்த்தார் அங்கும் தண்ணீர் இல்லை. உடனே முனிவரை உட்கார வைத்த தன்னுடைய நாவினால் அவர் முகத்தை ஈரப்படுத்தினார். அப்போதுதான் எளிதாகச் சவரம் செய்ய முடியும், எனவே ஈரப்படுத்திய பின்பு சவரம் செய்தார். முனிவர் நீ நாவினால் உந்தி உந்தி ஈரப்படுத்திச் சவரம் செய்தமையால் 'இன்று முதல் நீ நாவிதன் என்று அழைக்கப்படக் கடவாய்' என்று கூறி மறைந்தார். அதன் பிறகு இன்று வரை நாவிதர் என்ற பெயர் வழங்கப்படலாயிற்று.

*கதை கூறியவர்:* தியாகராஜன், 69
குஞ்சுதமூர்த்தி விநாயகர் தெரு,
சிதம்பரம்.

இத்தொன்மக் கதை கள ஆய்வின் போது வேறு பல மாற்று வடிவங்களில் அதாவது மன்னனின் முகத்தை ஈரப்படுத்துவதாகவும், கடவுளின் முகத்தை ஈரப்படுத்துவதாகவும் தரவுகள் கிடைக்கப்பெற்றன. இக்கதையானது மருத்துவ இனத்தை இழிவுப் படுத்தும் விதமாகக் காணப்படுகின்றது. இதனை மருத்துவ இனமக்களை நாவிதர் என்று அழைப்பதற்கு காரணமாகக் கூறுகின்றனர்.

- ஒரு முனிவர் பொன்னிற முடியுடன் சவரம் செய்வதற்காக மருத்துவர் ஒருவரின் வீட்டின் முன் வந்து நின்றார். அதன் படி, மருத்துவர் சவரம் செய்யும் போது முனிவரின் பொன்னிற முடிகள் கீழே விழுந்து கறுப்பு நிறமாக மாறின. இதனைப் பார்த்த முனிவர் மனம் உடைந்து இனி நான் உயிரோடு இருக்க கூடாது என நினைத்து தற்கொலை செய்துக் கொள்வதற்காகக் குளத்தை நோக்கி ஓடினார். உடனே மருத்துவன் தான் வேலைச் செய்ததற்குக் கூலி தராமல் ஓடவா செய்கிறாய் என்று நினைத்து, குளத்தில் குதிக்கச் சென்ற முனிவரின் குடுமியைப் பிடித்துக் கொண்டு 'அம்புட்டான்' 'அம்புட்டான்' என்று கூவினான். அன்று முதல் அம்புட்டான் என்று எல்லோரும் அழைத்தனர். அது மருவி அம்பட்டன் என்று ஆயிற்று.

*கதை கூறியவர்:* மகேஷ்வரி, 65,
வலங்கைமான்,
கும்பகோணம்.

இக்கதையினை அம்பட்டன் என்ற பெயர் இவர்களுக்கு வருவதற்கான காரணத்தை வேடிக்கையாகக் கூறுகின்றனர். கிராம புறத்தில் ஒருவர் சில வார்த்தைகளை உச்சரிக்கும்போது அதுவே அவருடைய பெயராக வழங்கப்படுவது மரபு. இன்றும் இத்தகைய மரபு காணப்படுகின்றது. அதே போன்று அவர்களுக்கு அம்பட்டன் என்ற பெயர் இவ்வாறு வந்துள்ளதாகக் கூறுகின்றனர்.

குமரி மாவட்டத்தில் மருத்துவ இன உட் பிரிவுகளில் ஒன்றான விளக்குத்தலை நாயர் என்று அழைக்கப்படும் மக்கள் வாழ்கின்றனர். இவர்களுக்கு இப்பெயர் வருவதற்கானத் தொன்மக் கதையாக,

❖ இன்றைய குமரி மாவட்டம் தமிழ் நாட்டுடன் சேர்வதற்கு முன்னால் தென் திருவிதாங்கூர் என்றழைக்கப்பட்டது. அப்பொழுது எட்டு வீட்டுப் பிள்ளைமார்கள் மகாராஜாவைக் கொலை செய்வதற்கு விரட்டிக் கொண்டே வந்தனர். மகாராஜா உயிருக்குப் பயந்து ஒவ்வொரு இடமாக ஓடி ஒழிந்தார். அந்தக் கால வழக்கப்படி கிழக்குத் தெருவில் பிராமணர்களும், மேற்குத் தெருவில் கோயில் குளங்களும், வடக்குத் தெருவில் தளபதிகளும், சேனாதிபதியினரும் குடியிருப்பர். தெற்குத் தெருவில் தான் ஊர் குடிமகன், வண்ணார், சக்கிலியர் என்று தாழ்த்தப்பட்டவர்களைக் குடியமர்த்தி இருந்தனர்.

மகாராஜா தெற்குத் தெருவில் வரும்போது நாவித இன வயதான மூதாட்டியிடம் தன்னைக் காப்பாற்றும்படி வேண்டினார். சூழ்நிலையினை நன்கு அறிந்த மூதாட்டி வீட்டினுள் மகாராஜாவை மறைத்து வைத்து விட்டு, வீட்டின் முன்பு வேப்பிலையினைக் கட்டித் தொங்கவிட்டுத் தன் மகனின் மீது மஞ்சள் தடவி வைசூரி நோய் வந்த வீடு போன்று அடையாளம் காட்டினாள். வைசூரி அக்காலத்தில் மிகவும் மோசமான கொடுமையான நோய் எனவே மகாராஜாவைத் தேடி வந்த பிள்ளைமார்கள் வீட்டின் உள்ளே வரவே இல்லை. மறு நாள் காலையில் இவர்கள் திசைகளுக்குள்ள சாத்திரம் பார்த்துக் கிழக்குத் திசைப்பார்த்துச் செல்லுங்கள் எந்த வித பிரச்சனைகளும் வராது என்று கூறி அனுப்பினர். மகாராஜா போகும்போது இவர்களிடம் ஒரு மணி விளக்கினை கொடுத்துவிட்டுச் சென்றார்.

சில காலங்களுக்குப் பின் மகாராஜா ஆட்சிப் பொறுப்பில் வந்த பிறகு தான் ஆபத்துக் காலத்தில் இருக்கும்போது எனக்கு உதவி செய்தவர்களுக்குப் பரிசுப்பொருட்கள் கொடுத்திருந்தேன். அவ்வாறு பரிசுப் பொருட்கள் வாங்கியவர்கள் அப்பொருளைக் கொண்டு வந்தால் பரிசு

வழங்கப்படும் என்று முரசு அறைந்து கூறினார். நாவிதர் குல மூதாட்டி தன்னிடமிருந்த மணி விளக்கினைக் கொண்டு வந்தமையால் இவர்களுக்கு ஏதாவது பட்டம் கொடுக்க வேண்டும் என்று எண்ணிய மகாராஜா 'விளக்குத்தலைவன்' என்று பட்டம் வழங்கினார். மகாராஜா அரண்மனைக்கு வரும்போது, இவ்வினப் பெண்கள் விளக்கினைக் கையில் ஏந்திவர வேண்டும் என்ற பணியினையும் கொடுத்தார். இவ்வாறு பட்டம் கொடுக்கும்போது மருத்துவ சாத்திரம் தெரியுமா? என்று விளக்கம் கேட்டார். அப்போது அரசு சபையில் இருந்த சீனா மருத்துவர்கள், இவர்கள் கூறிய மருத்துவ சாத்திரத்தை ஏற்றுக் கொண்டனர். அன்று முதல் விளக்குத் தலைவன் என்ற பெயர் வந்தது. பின்னாளில் நாயர் இன மக்களுக்குச் சேவைச் செய்ததால் விளக்குத் தலை நாயர் என மருவியது.

*கதை கூறியவர்:* முத்துராஜ், 51
குலசேகரம்,
குமரி மாவட்டம்.

என்று கூறுகின்றனர். இக்கதையில் மருத்துவ இன மக்கள் மருத்துவ சாத்திரங்கள், திசைக்குரிய சாத்திரங்கள் பார்ப்பதில் வல்லவர்களாக இருந்துள்ளனர். இவர்கள் கூறிய மருத்துவ சாத்திரத்தைச் சீனா மருத்துவர்கள் ஏற்றுக் கொள்ளும் விதமாக அமைந்திருந்தமைக் குறிப்பிடத்தக்கதாகும். இன்றும் இவ்வின மக்கள் விளக்குத்தலைநாயர் என்றே அழைக்கப்படுகின்றனர். இத் தொன்மக் கதை வரலாற்று உண்மைகளுடன் பொருந்தி நிற்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

மருத்துவ இன மக்களைக் குறித்த தொன்மக்கதைகள் அனைத்தும் பார்ப்பனிய மயமாக்கலின் விளைவாக இவர்களை அடிமைப் படுத்தும், இழிவு படுத்தும் நோக்கத்தில் புனையப்பட்டுள்ளன. இன்று கிராமப்புறங்களில் மருத்துவ இன மக்கள் திருமணங்களை நடத்திக் கொடுக்கும் புரோகிதர் ஆகவும், கோயில் பூசாரியாகவும், மருத்துவர்களாகவும் விளங்குகின்றமைக் குறிப்பிடத்தக்கதாகும்.

## கல்வெட்டுச் செய்திகள்

மருத்துவர்களைப் பற்றிய செய்திகள் அதிக அளவில் கல்வெட்டுகளில் இல்லையெனினும், ஒருசில குறிப்புகள் இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. மருத்துவர் என்பதற்கு வைத்தியர் (Ei:781), பரியாரி - வைத்தியர் (S.i.17:585), நாவிசம் - நாவித தொழில் செய்தல் (S.i:17:1014), 'நாவிசஞ் செய்ய பங்கென்றும்' (S.II ii:278), நாவிசர்-நாவிதன், ராஜ ராஜ பெரு நாவிசனுக்குப் பங்கு என்றும் (S.II.ii:277), நாவிதன்-அம்பட்டன் (S.i:17:83), நாவிதர்காணம்-நாவிதர் செலுத்திய வரியின் பெயர் (Ei:20), கிராம வைத்தியனுக்கு இறையிலியாக விடப்பட்ட நிலம் மருத்துவப் பேறு (S.I.I.ii:43) என்னும் விளக்கங்கள் காணப்படுகின்றன.

நாவிதர்களுக்குக் கொடையாக நெல், ஊர்கள் கொடுத்துள்ளமைப் பற்றியச் செய்திகளும் கல்வெட்டில் காணப்படுகின்றன. கொட்டு மத்தளம் வாசிக்குங் குணப்புகழ் மருதனன் சிகா சிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி (1969,i:53). நாவிசஞ் செய்ய இருவருக்குச் செயதரன் செந்தானன் ஆன ராஜராஜப் பெரு நாவிசனுக்குப் பங்கு ஒன்றும் (மேலது: 97). அம்பட்டன் கொன் சடங்கவியான ராஜராஜ பிரயோகத் தரையனுக்குப் பங்கு ஒன்றும் (S.I.I.ii:66), இராஜ ராஜ தேவர் கொடுத்த ஊர்கள் மருத்துவக்குடி (S.I.I.ii:4) முதலிய கல்வெட்டுச் செய்திகள் கிடைக்கப் பெறுகின்றன.

### குடியிருப்புகள்

பொதுவாக வாழிடங்களைக் கொண்டு ஒரு சாதியின் அல்லது இனக்குழுவின் சமூகத் தகுதி நிலையினை அறியலாம். வாழிடங்கள் சமூகப் படிநிலைக்கு ஏற்ப அமைந்து இருக்கும்.

மருத்துவ இனமக்களின் வாழிடங்களை ஆதிக்கச்சாதியினர் ஊருக்கு ஒதுக்குப்புறமாக ஒதுக்கிக் கொடுத்துள்ளனர். இவர்களைக் குடியமர்த்தும் போது ஊருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள தோட்டங்களில் குடிசையமைத்துக் கொடுப்பதும் உண்டு. இவர்களாகவே குடிசை போட்டுக் கொள்வதும் உண்டு. இங்ஙனம், இவர்கள் குடியிருப்புகள் ஒதுக்குப் புறமாகவே உள்ளன; இவர்களின் குடியிருப்புகளுக்குப் பட்டா கிடையாது. எந்தவிதமான உரிமைகளும் இல்லாத, ஊருக்குரிய நிலத்தில் இவர்களை ஆதிக்கச் சாதியினர் குடியமர்த்திக் கொண்டனர்.

இவர்களுக்கு ஊதியம் எதுவும் வழங்கப்படுவதுமில்லை. எனவே இவர்கள் விருப்பத்திற்கு ஓரிடத்தில் நிலையாகக் குடியிருக்க இயலாது. ஒதுக்குப்புறமாக இருந்த இவர்களின் குடியிருப்புகள் இன்று நாகரிக, தொழில்நுட்ப வளர்ச்சியால் நகர்ப்புறங்களாக மாறி உள்ளதைக் காணமுடிகின்றது.

முன்பு ஓர் ஊரில் ஒரு மருத்துவர் வீடு மட்டுமே இருந்தது; தற்போது பல வீடுகள் காணப்படுகின்றன. இவர்கள் சேவைச் செய்ய மறுத்தால் இவர்களுக்குக் கொடுத்திருக்கும் வீடு மற்றும் நிலங்களை ஆதிக்கச்சாதியினர் அபகரித்து விடுவர். இவர்கள் வாழும் பகுதியினை அம்பட்டன் குடி, நாசுவக்குடி என்று அழைத்தார்கள். இவர்களுக்கு அரசு தற்போது தனிக் காலனிகளை அமைத்துக் கொடுத்துள்ளது. அவைகளும் ஒதுக்குப்புறமாகவே அமைந்துள்ளன. மருத்துவர் காலனிகள் கடைசி காலனியாக அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

இவர்களின் வீடுகள் ஓலைக் குடிசைகளாக இருந்தன. தற்போதும் பெரும்பாலான வீடுகள் குடிசைகளாகத்தான் இருக்கின்றன. இவர்களது குடிசை வீட்டின் முன்பு ஒரு திண்ணை அமைக்கப்பட்டிருக்கும். வீடு தேடி வருபவர்களை அதில் அமரச்செய்து தொழில் செய்வார்கள். நாகரிக, பொருளாதார வளர்ச்சியின் காரணமாக இவர்களது வீடுகள் ஓட்டு வீடுகளாகவும், மாடி வீடுகளாகவும் மாறி உள்ளன. இவர்களின் காலனிகளுக்கு மருத்துவர்காலனி, நாவிதர்காலனி எனவும் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**உடலமைப்பு**

உலகில் எல்லா உயிரினங்களும் தாம் வாழும் புவியியல் சூழலுக்கு ஏற்ப (Geographic Environment) உடலமைப்புகளைக் கொண்டுள்ளன. மனிதர்கள் தாம் வாழும் சூழலின் தட்பவெப்பநிலைக்கேற்பவும், புவியியல் அமைப்பிற்கு ஏற்பவும் உடலமைப்பு, நிறம், செயல்பாடுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளனர் என்னும் ராபர்ட்-ன் (1970:73) கூற்று இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

மருத்துவ இனமக்களுக்கென்று தனிப்பட்ட உடலமைப்பை வரையறுத்துக் கூறமுடியாது. ஏனெனில் மருத்துவ இனமக்கள் எல்லா இனமக்களுடன் சேர்ந்து வாழ்வதால் அவர்களின் உணவு, பழக்கவழக்கம், சூழ்நிலைகள், தட்பவெப்பம் ஆகியன ஒன்றுபோல் இருப்பதால் அவர்களைப் போன்றே இவர்களின் உடலமைப்புகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக நாயர் இனமக்களுக்கு சேவைத் தொழில் செய்யும் விளக்குத்தலை நாயர்களின் உடலமைப்புகள் நாயர்களைப் போன்றே காணப்படுகின்றது. தினசரி செய்யும் வேலைகளும் உடலமைப்பைப் பாதிக்கும் காரணிகளில் ஒன்றாகும். இதனைப் பிரான்ஸ் போஸின் (1959:48) இயக்கக் கோட்பாடு விளக்குகிறது.

**உணவு**

இனக்குழுக்கள் தாங்கள் வாழும் சுற்றுப்புறச்சூழலுக்கு ஏற்ப உணவுப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்கின்றனர். நெருப்பின் உபயோகத்தை அறியும் முன்னர் காய், கனி, இறைச்சி, கிழங்கு முதலியவற்றைப் பச்சையாகவும், நெருப்பின் உபயோகத்தை அறிந்த பின்னர் சமைத்தும் உண்டனர். சாதி, சமயம், தட்ப வெப்பநிலை ஆகியவற்றிற்கு ஏற்ப உணவுப் பழக்கமும் வேறுபடுகிறது. குலக்குறி அமைப்பைச் சார்ந்த சமுதாயங்களில் அவர்கள் எந்தப் பொருட்களிலிருந்து தோன்றியதாகக் கருதுகிறார்களோ அந்தப் பொருளை உணவாக உட்கொள்வதில்லை என்று பக்தவத்சல பாரதி (1990:509) குறிப்பிடுகிறார்.

உணவு முறைகள் சாதி அல்லது இனக்குழு மற்றும் காலநிலை, பொருளாதாரம் ஆகியன தட்பவெப்பநிலைக்கு ஏற்ப மாற்றம் அடைகின்றன. சில இனக்குழு மக்களின் உணவுமுறை பெரும் மாறுதலுக்குட்பட்டே காணப்படும். மருத்துவ இனமக்கள்

ஆரம்ப காலத்தில் எந்தச் சமுதாயத்திற்குச் சேவை அல்லது பணி செய்கிறார்களோ அவர்களின் உணவு பழக்கமுறையே இவர்களிடமும் காணப்படுகின்றன. இவர்கள் ஆதிக்கச் சாதி மக்களிடமிருந்து வாங்கி வரும் உணவினை உண்டார்கள். இதனை எடுப்பு சாப்பாடு அல்லது ஊர் சாப்பாடு என்று கூறுவர். ஆதிக்கச் சாதியினர் கொடுக்கின்ற உணவுத் தானியங்களை வைத்துதான் இவர்கள் உணவு சமைத்து உண்டனர். இவர்களின் காலை நேர முதன்மை உணவு 'பழங்கஞ்சி' ஆகும்.

## ஆடை, அணிகலன்கள்

பண்டைக்கால மக்கள் முப்பத்தைந்து வகையான ஆடைகளால் தங்களை அழகு செய்து கொண்டதாகப் பாலசுப்பிரமணியன் (1980:89) குறிப்பிடுகிறார். மிக நுண்ணிய ஆடைகளைக் குறிப்பிடும் சங்க இலக்கியத்தில் தழையாடை பற்றிய குறிப்பும் காணப்படுகிறது. தழை ஆடைகளை அழகுக்காகத் துணியாடைகளுக்கு மேல் அணிந்து கொண்டனர் என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மருத்துவ இனமக்கள் தாங்கள் பணி செய்யும் சமுதாயத்தினரைப் போன்றே ஆடைகளை அணிகின்றனர். முற்காலத்தில் தாழ்ந்த சாதியினர் என்ற பிரிவின் காரணமாக ஆண்களுக்கு மேலாடை அணிய உரிமை தரப்படவில்லை. இப்போதும் கிராமப்புறங்களில் இவர்கள் துண்டினைத் (டவ்வல்) தலையில் கட்டுவது இல்லை. துண்டினைக் கை இடுக்கில் வைத்து நிற்பதைக் காணமுடிகின்றது. மேளம் வாசிக்க செல்பவர்கள் இன்றும் மேலாடை போடுவது இல்லை. கோயில்களில் மற்றவர்கள் மேலாடை அணிந்திருந்தாலும் இவர்கள் மேலாடை அணியாமல்தான் வாசிக்க வேண்டும். பொதுவாக இவர்கள் வெள்ளை நிற வேட்டி, சட்டையில் காட்சியளிப்பதைக் காணமுடிகின்றது. கால மாற்றத்திற்கு ஏற்ப தற்போது பேன்ட், கோட் முதலிய நவநாகரிகமான ஆடைகளை அணிகின்றனர்.

ஒரு சமுதாயத்தின் அல்லது நாட்டின் பண்பாட்டையும், நாகரிகத்தையும் காட்டும் பலவற்றுள் ஆடைகளும் அணிகலன்களும் முக்கிய இடம் வகிக்கின்றன. அணிகள் சமுதாயத்தில் அவரவர் நிலைமையை அறிவதற்கும் மதிப்பிடுவதற்கும் ஓர் அளவுகோலாக விளங்கின என்னும் வேலம்மாளின் (1968:11) கூற்று ஏற்புடையதாக அமைகிறது. உலக மக்களில் தமிழர்களைப் போல் ஒப்பனைக்கு அணிகலன்களைப்

பயன்படுத்தியவர்கள் போல் வேறு எந்த நாட்டவரும் இல்லை. அணிகலன்கள் அழகுக்கு அழகூட்டுவனவாக விளங்குகின்றன.

மருத்துவ இனமக்கள் முன்பு அதிகப்படியான அணிகலன்களை அணிந்து கொள்வது இல்லை. இவர்கள் சேவைச் சாதியினர் என்பதால் வருமானம் ஒரே சமச்சீராகத்தான் கிடைக்கும். பெண்கள் தலைமுடியினை அலங்காரம் செய்து கொள்ளுவதுண்டு. பூவினை வைத்து அலங்காரம் செய்து கொள்வர். இப்பெண்களிடம் தங்க அணிகலன்கள் மிகக்குறைவாகவே காணப்படுகின்றன். வயதான பெண்களிடம் காது வடித்துப் பாம்படம் போடும் வழக்கமும் இவர்களிடம் காண்பதற்கில்லை. கம்மல், மெட்டி, மூக்குத்தி இவைகளே அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் பெரும்பாலும் தங்கள் பொருளாதார வசதிக்கு ஏற்ப ஆதிக்கச் சாதியினரைப் போன்று அணிகலன்களை அணிகின்றனர். இன்று நாகரிகத் தொழில், பண்பாடு, பொருளாதார வளர்ச்சியின் காரணமாக எல்லாவிதமான அணிகலன்களையும் அணிந்து வருகின்றனர்.

### தொழில்கள்

மருத்துவ இனமக்கள் பல்வேறு விதமான தொழில்களைச் செய்து வருகின்றனர். அவை 1. மருத்துவத்தொழில், 2. சவரத்தொழில் (சிகையலங்காரத் தொழில்), 3. இசைத்தொழில், 4.நெசவுத்தொழில், 5. பிறத்தொழில்கள் என்பனவாகும்.

**தொழில்கள்**

- மருத்துவத் தொழில்
- சவரத் தொழில் (சிகையலங்காரத் தொழில்)
  - பியூட்டி பார்லர் (அழகு நிலையம்)
- இசைத் தொழில்
  - நாதசுரம்
  - தவுல்
  - பம்பை
- நெசவுத் தொழில்
- பிறத் தொழில்கள்
  - மாந்திரிகத்தொழில்
  - கட்டிட வேலை
  - விவசாயம்
  - அரசு வேலை
  - பந்தல் கட்டுதல்

### மருத்துவத் தொழில்

மருத்துவ இனமக்களின் ஆதித்தொழில் மருத்துவம் செய்தல் ஆகும். இவர்கள் பரம்பரை பரம்பரையாக மருத்துவத் தொழில் செய்து வந்தனர். இவர்கள் அனுபவம் வாயிலாகப் பரம்பரை மருத்துவம் செய்து வந்தனர். நாடி பார்த்து மருத்துவம் செய்வதில் இவர்கள் கை தேர்ந்தவர்களாக இருந்தனர். பிராமணர் வீட்டுப் பெண்களின் கையில் நூல் கட்டி நூலின் மூலம் நாடி பார்த்து மருந்து கொடுத்து நோயினைக் குணப்படுத்தும் திறமையுடையவர்களாக இருந்தனர் (பிரம்மநாயகம், 58). இவ்வின பெண்கள் அறிவியல் வளர்ச்சி அடையாத காலத்தில் பெண்களுக்குப் பேறு பார்க்கும் பணியினைச் செய்தனர். தற்போது அதிகமாக அறுவைசிகிட்சை செய்து பேறு பார்க்கின்றனர். இவர்கள் எளிதாகப் பேறு பார்த்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவேதான் இவ்வின பெண்களை மருத்துவச்சி என்று அழைக்கின்றனர்.

### சவரத்தொழில்

பண்டைய தமிழர்கள் முகத்தை மழித்துக் கொள்ள அறிந்திருக்கவில்லை. மயிர்குறைக் கருவியால் (கத்திரிகோல்) உத்தேசமாக முகமயிரைக் கத்தரித்து வந்தார்கள். எனவே பெரும்பாலும் மீசை தாடி வளர்க்க நேரிட்டது. தலை முடியை எண்ணெய் தடவி பதஞ்செய்து பூவினைச் சூடிக் கொண்டனர். இதில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தாலும் சமீப காலம் வரை ஆண்கள் நீண்ட முடி வளர்த்துக் குடுமி வைத்திருந்தனர் என்று தெரிகிறது. ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர் மயிரினைக் குறைக்கும் நாகரிகம் வந்தது. இதனைக் கிராப்பு என்று கூறினர். இந்த நாகரிகம் முதன்முதலில் நகர்ப்புறங்களில் பரவியது. கிராமப்புறங்களில் கிராப்பு வைப்பதற்கு முதியவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். மக்களுக்கு அழகாகக் கிராப்பு வைத்து முடியினை அழகுபடுத்தி வந்தவர்கள் மருத்துவர் சமுதாய மக்களாவர். இவர்களுக்கு எல்லா சமுதாய மக்களின் உடலையும் உரிமையோடு தொடும் உரிமை இருந்தது. இத்தொழில் மூலம் சமுதாயத்தில் மனிதனை மனிதனாக்குவது இவர்களே. பிராமணர்கள் மனித ஆன்மாவைச் சுத்தம் செய்கிறார்கள். இவர்கள்

மனித உடலைத் தூய்மைப் படுத்துகின்றனர். இருவரது பணியும் ஒன்றே என்பது புலனாகிறது.

**மயிர் குறைத்தல்**

மயிர் குறைத்தல் என்பது அழகுணர்ச்சி நோக்கிலன்றி விருப்ப அடிப்படையில் அமைந்த ஒரு கலையாகும். கூந்தல் நீக்குதல், நீக்கியளித்தல் என்ற பாஙகும் உலகளாவிய செயலாக அமைந்துவிட்டது. கூந்தலை நீக்குதல் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் பரவலாகக் கிடைக்கின்றன. பருவ மாற்றத்தைக் குறிக்கும் நிலையில் ஆண் குழந்தையின் முடிகளைப் பெற்றதை,

***புல்லுளைக் குடுமிப் புதல்வற் றந்த*** (புறம், 273:3)

என்று புறநானூறு குறிப்பிடுகிறது. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தலைமுடியினைக் (குடுமியினை) களைந்து இளம் வயதினராக மாறி இருப்பதை இடைக்குன்னூர்க்கிழார் கூறும்போது,

***கிண்கிணி களைந்த கால் ஒண் கழல்தொட்டுக்***
***குடுமி களைந்த நுதல் வேம்பின் ஒண்தளிர்***
***நெடுஞ்கொடி உழிஞைப் பவரோடு மிலைந்து*** (புறம், 77: 1-3)

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம். பெண்துறவி, விதவை ஆகியோர் முடி எடுக்கப்பட்ட நிலையில் காட்டப்படுகின்றனர். இழப்புக் குறியீடாக மயிரிழப்பு அமையினும் முடி கொடுத்தல் தன் விருப்பப் பலியாகவும் அமைகின்றது. வேண்டுதலின் பேரில் 'உயிர்க் கொடுத்த சாமிக்கு மயிரைக் கொடுக்கணும்' என்பது மனித வாழ்வியலோடு இணைந்த செயல். பிறந்த குழந்தையின் முடியினை இறைவனுக்குக் காணிக்கையாகச் செலுத்துகின்றனர். தண்டனை கொடுப்பதற்கும் முடியினையே பயன்படுத்திக் கொண்டனர். தண்டனையின் பேரில் மொட்டையடிப்பது அவமானத்தின் சின்னமாக விளங்குகின்றது. இதே முடியானது ஒருவரின் மனநிலையினை எடுத்துக் கூறுவதாகவும் அமைகிறது. வாழ்க்கையில் விரக்தியடைந்தவர்கள் மிகுதியான தாடியையும், தலை முடியினையும் வைத்துக் கொள்ளுகிறார்கள். இவற்றை ஒப்பு நோக்குங்கால் முடி என்பது எளிதில் ஒருவரால் இழக்கக் கூடாத ஒன்றாக அமைகிறது.

மீசை என்பது தமிழருடைய வீரத்தின் அடையாளமாக விளங்குகின்றது. அரசர் முதல் பணியாளர் வரை இதனை வைத்துள்ளனர். சிலர் பணியின் தன்மை கருதி மீசை வைப்பதும் உண்டு. மீசையினை வைத்திருப்பதைப் பொறுத்து பல்வேறு பெயர்கள் கூறும் மரபு காணப்படுகிறது. அவை, முறுக்கு மீசை, ஆட்டுக்கிடா மீசை, அரும்பு மீசை, கெவீர் மீசை, கட்டை மீசை, பட்ட மீசை, உருட்டு மீசை, ஹிட்லர் மீசை என அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப வைத்துக் கொள்கின்றனர் என சுந்தரேசன் (2007:51) குறிப்பிடுகிறார்.

மனித உடலின் ஒரு பகுதியாகவே முடியமைவதால், செறிந்த கருமையான அலையலையான கூந்தல் அழகுணர்ச்சியுடன் அணுகப்படுவதாலும் முடியினைக் குறைத்தல் மற்றும் நீக்குதல் ஒரு தொழிலாக மாற்றம் பெற்றது. இத்தொழிலைப் மருத்துவ இனமக்கள் செய்து வருவதால் அவர்கள் 'பார்பர்', 'நாவிதர்' என்று அழைக்கப்படுகின்றனர்.

**தொழிற்கருவிகள்**

மருத்துவ இனமக்கள் சவரத்தொழில் செய்யும்போது பயன்படுத்தும் கருவிப் பொருட்களாகச் சீப்பு, கத்தி, கத்திரி, மிஷின், பல்மிஷின், பல் கத்தரி, சாணைக்கல், தோல் (வாரு) ஆகியனவற்றைக் குறிப்பிடுகின்றனர். இக்கருவிகளைப் பாதுகாப்பாக வைக்கும் பெட்டியினை அடப்பம் என்றும் கூறுவர். இதனை, "மயிர் மழிப்புக் கூர்வாய்க்கத்தி, மவன், சிலந்தி, கட்டிகள் கீறும் கொடுவாய்க்கத்தி, மூக்கு, காது முதலிய துளைகளில் மயிர் போக்கும் சிலம்பிக்கருவி, காலாணி, கையாணி, நகங்கள் முதலியவைகளையும் சாவனக் கூர்முனைக் கத்தி, அடிநாக்கு, உள்நாக்கு முதலியவற்றை வெட்டியெடுக்கும் கொக்கு மூக்கு வெட்டுக்குறடு, செவிப்படுவன், கண்டப்படுவன், நாக்குனை முதலியவற்றையும் அறுக்கும் பொன்வாய்க் கத்தி, தற்செயலாய் அல்லது எதிரிகளால் ஏற்படும் வெட்டுகள், குத்துகள், பிளப்புகள் முதலியவற்றைத் தைக்கும் வெள்ளி ஊசி பரு, முள், சிலந்தி, ஆணி இவற்றைப் பிடுங்கி எடுக்கும் சிமிட்டா, மயிர் வெட்டும் கத்தரிக்கோல், இரண மற்றும் களிம்புகள், மருந்துகள், மருந்து பூசிய ஒட்டுக்கள், இரணத்தைலம், இரணம் கட்டும் துணிச்சுருள் முதலியவை என்று கட்டுரையாசிரியர் ராஜகோபால் (மார்-ஏப். 15, 2003:3) கூற்றுரைப்பது குறிப்பிடத்தக்கதாக அமைந்துள்ளது.

**தொழில் செய்யும்முறை**

சவரம் என்பது முகமயிரை மழிப்பதாகும். இது 'சேவிங்' என்ற வழக்கு சொல்லால் வழங்கப்பட்டு வருகிறது. புதிதாக முடிவெட்டும் தொழிலைப் படிக்கும் ஒருவருக்கு இதைத் தான் முதலில் கற்றுக் கொடுக்கின்றனர். அதற்கு முதலில் கரிபானையினைக் கவிழ்த்து வைத்து பழைய கத்தியைக் கொடுத்து அதில் படி எதுவும் விழாமல் கரியினை இழைக்குமாறு கூறுவர். அதில் சரியாகப் பயிற்சிப் பெற்ற பிறகுத் தங்களுடைய முகத்தில் சவரம் செய்ய அனுமதிப்பர். இவ்வாறு தொழிலினைப் படித்துக் கொடுக்கின்றார்கள். சவரம் செய்ய முன்பு கத்தியினை மட்டுமே பயன்படுத்தினர். கத்தியினைத் தயார் செய்ய முதலில் அதனைச் சாணைக் கல்லில் எண்ணெய் விட்டு அதில் வைத்து நன்கு தீட்டுகின்றனர். சாணைக்கல் பெரும்பாலும் நடுப்பகுதி குழிந்து இருக்கும். இஃது அதன் நீண்டகாலப் பயன்பாட்டைக் குறிக்கும். நல்லபருவம் வரும் வரைத் தீட்டி, பின்னர் அதனை வாரில் (தோல்) நன்கு அடிப்பார்கள். அப்போது கத்தி நன்கு சூடாகும் தொடர்ந்து கத்தியினைத் தீட்டும்போது அஃது பிளேடு போன்ற பருவத்தை அடையும். அதனைத் தன்னுடைய விரலினால் தடவிப் பார்த்து பருவத்தை உறுதிச் செய்கின்றனர். அவ்வாறு சோதனை செய்யும்போது கையில் வெட்டுப்படவும் செய்கிறது. கத்தியைப் பயன்படுத்தி சவரம் செய்தவர்களின் கைகளில் இவ்வெட்டுத் தழும்பு காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அதன் பின்புதான் முகத்தில் உள்ள முடியினைச் சவரம் செய்வர்.

நாவிதன் கத்தியினைத் தீட்டி சவரம் செய்யும் அழகினைத் திருத்தக்கத்தேவர் சீவகசிந்தாமணியில்,

***ஆய்ந்தபொன் வாளை நீக்கி யவீர்மதிப் பாகக் கன்மேற்,***
***காய்ந்தவாள் கலப்பத் தேய்த்துப் பூநிறீஇக் காமர் பொன்ஞாண்,***
***தோய்ந்ததன் குறங்கில் வைத்துத் துகிலினிற் றுடைந்துத்***
***தூய்தா, வாய்ந்ததைப் புரட்டி மாதோ மருடகப் பற்றினானே***
*(சீவக, 12: 2466)*

என்ற பாடலடிகளில் நாவிதன் பொற்கத்தியினால் அரசனையும், அரசியையும் தொட்டுவிட்டுப் பிறிதோர் எஃகுக் கத்தியால் அரைத் திங்கள் போல் விளங்கும் கல்லில் தீட்டி, அழகிய பொன்ஞாண் பொருந்திய தன்துடையில் வைத்துத் துணியால் துடைத்துக்

கையிலே தூய்மையுறப் புரட்டி, கத்தி தொட்டது தெரியாதவாறு சீவகன் முகத்தில் பொருத்துகிறான் என்று குறிப்பிடுகிறார். சவரம் செய்யும்போது முகமானது சந்தனம் பூசியது போன்று குளிர்ச்சியாக இருந்ததென்றும் அதனை ஞாயிற்றைப்போல ஒளிவீசக்கூடிய முகமாக முகத்தினை அழகு செய்தான் (சீவக, 12: 2497) என்பதையும்; நாவிதன் அயலவன் என்பதால் இழிவுடன் முகத்தைப் பார்க்கின்ற இழிவினால் தன் பாதத்தை நோக்கிய முகத்தை மேலே தூக்கியதாக் (சீவக, 12: 2498) குறிப்பிடுகிறார்.

முற்காலங்களில் முகத்தை வெறும் தண்ணீரால் ஈரப்படுத்திச் சவரம் செய்வது மரபு. தற்போது சோப்பு, கிரீம், லோசன் முதலிய நுரை மற்றும் வாசனைப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். ஊர் வேலை செய்யும்போது முகம் கையிடுக்கு (அக்குள்), அந்தரங்க உறுப்புப் பகுதி ஆகியவற்றில் சவரம் செய்தனர். தற்போது முகத்தில் மட்டுமே சவரம் செய்கின்றனர். சீவகசிந்தாமணியில் இவர்கள் கண் புருவங்களில் உள்ள மயிரினையும் திருத்தியதை,

***திருவிற் போற்புரு வங்கடி ருத்தினான்*** *(சீவக, 12:2499)*

என்னும் பாடல் வரிகள் மூலம் அறியலாம். தற்போது அழகுநிலையங்களில் பெண்களின் கண் புருவங்களில் உள்ள மயிர்களை அழகுபடுத்துகின்றமை காணமுடிகிறது. கம்பர் இவர்களுடைய தொழில் திறமையினையும், அதிகாரம் செய்வதையும்,

***ஆரார் தலை வணங்காராரார் தாங்கையேடார்***
***ஆரார் தாஞ்சத்திரத் திலாநாதார் - சீராரும்***
***தென் புலியூர் மேவுஞ் சிவனருள் சோம்பட்டத்***
***தம்பிடிகான் வாசலிலே தான்*** *(தனிப். கங.அ)*

என்ற பாடலடிகள் மூலம் தலையினைச் சவரம் செய்யும்போது யாருக்கும் தலைவணங்காதவன் தலைகுனிந்தும், கை அக்குள் (கவுத்திம) சவரம் செய்யும்போது கையினை உயரே தூக்குமாறு கூறியும், கத்தியினால் சூடு தணித்தலும் உண்டு என்று குறிப்பிடுகிறார். இன்று சவரம் செய்யக் கத்திக்குப் பதிலாகப் பிளேடு கத்தியினைப் பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது. தற்போது கத்தியினைக் கொண்டு யாரும் சவரம் செய்வது இல்லை. பிளேடு கத்தியே இவர்களுக்கு மிகவும் எளிதாக உள்ளதாம்.

தலைமுடியினை அழகுபடுத்துவதற்கு அல்லது திருத்துவ தற்காகக் கத்திரியையும், சீப்பினையும் பயன்படுத்துகின்றனர். முடியினைச் சமச்சீராக வெட்டுவதற்குச் சீப்பினை அளவுகோலாகப் பயன்படுத்துவர். இவர்கள் பல் கத்திரி ஒன்றினையும் பயன்படுத்துவர். அது முடி மிகவும் அடர்த்தியாக இருப்பவர்களுக்கு முடியின் அடர்த்தியினைக் குறைப்பதற்குப் பயன்படுத்துகின்றனர். முற்காலத்தில் ஆற்றங்கரை, குளத்தங்கரை மற்றும் வீடுகளில் வைத்துத் தொழில் செய்தனர். இதனால் தலை அழகினை ஆதிக்கச் சாதியினர் பார்ப்பதற்குக் கண்ணாடி ஒன்றினை வைத்திருப்பது வழக்கம். இத்தொழிலை எளிதில் கற்றுக் கொள்ள முடியாது. எனவே இவர்கள் தங்களுடனே தன் குழந்தைகளையும் அழைத்துச் சென்று அவர்களுக்கு அனுபவப் பூர்வமாகத் தொழிலினைக் கற்றுக் கொடுக்கின்றனர். முன்பு படிவெட்டு (Step cutting) முறையில்தான் தலைமுடியினை அழகுபடுத்துவர். படிவெட்டு என்பது படிக்கட்டுப் போன்று படிப்படியாக வெட்டுவது ஆகும். தலையின் பின்புறம் உள்ள முடியினைத் தடவிப் பார்த்தால் படி போன்று இருக்கும். பின்னாட்களில் டிஸ்கோ கட்டிங், பங்கு கட்டிங், பேபி சாலினி கட்டிங், சி.ஆர்.பி.எப் (C.R.P.F) கட்டிங் அல்லது போலிஸ் கட்டிங் என்று பலவிதமான முடியலங்கார வடிவங்கள் வந்தன. இத்தகைய முடியின் அலங்கார வடிவ மாற்றத்திற்குத் திரைப்படத்துறை மூல காரணமாக அமைகின்றன. படங்களில் வருகின்ற நடிகர், நடிகைகளின் முடியின் அலங்கார வடிவத்தினைப் போன்று; மக்கள் தங்கள் முடியினையும் அழகுபடுத்த விரும்புவதே இதற்குக் காரண. க்கள் வேண்டுதலின் பேரில் முடியினை வெட்டிக் கொள் ளுவதும் காணப்படுகின்றது. கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களிடையே 'அந்தோணியார் வட்டம்' என்ற முடிவெட்டும் வழக்கம் காணப்படுகிறது. இதில் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்படும் முன்பு அவருக்குத் தலையில் அணிகட போன்று வட்ட வடிவத்தில் மட்டும் முடியினை விட்டுவி ட்டு மிதியை மழித்துவிடுவதாகும். இது குழந்தைகளுக்கான வேண்டுதலின் பேரில் செய்வதாகும்.

### *சிகை அலங்கார நிலையம்*

முடிதிருத்தம் செய்தல், சவரம் செய்தல், முகத்தை அழகு படுத்துதல் ஆகிய பணிகளைச் செய்கின்ற இடங்களை முறையே பார்பர்ஷாப், சலூன், ஹேர்டிரஸ்சிங் சென்டர், பியூட்டி பார்லர்,

அழகுநிலையம் என்று பலப் பெயர்களில் அழைக்கின்றனர். இச் சொற்களில் பார்பர்ஷாப் என்பதை முதியவர்களும், ஹேர் டிரஸ்சிங் என்பதை இளைய தலைமுறையினரும், பியூட்டி பார்லர் என்பதை இளைய தலைமுறைப் பெண்களும் அதிக அளவில் பயன்படுத்துகின்றனர். ஊர்க் குடிமகன்களாகத் தொழில் செய்த இவர்கள் நிலையான ஒரு பணித் தளத்தை ஏற்படுத்திக் கொண்டதே பார்பர்ஷாப் ஆகும்.

ஊர்க்குடிமகனாக இருக்கும் போது இவர்கள் ஆதிக்கச் சாதிகளின் வீடுகளுக்குச் சென்று கொல்லைப் புறத்தில் (வீட்டின் பின்புறத்தில்) அமர்ந்திருப்பர். வீட்டில் உள்ளவர்கள் ஒவ்வொருவராக வந்து சிகையலங்காரம், செய்து கொள்வர். மேலும் ஆற்றங்கரை, குளத்தங்கரை, மரத்தடிகள் முதலிய இடங்களில் வைத்தும் சிகையலங்காரம் செய்துக் கொள்வது உண்டு. இவர்கள் சிகையலங்காரம் செய்யும் இடங்கள் பெரும்பாலும் பலரும் வந்து செல்லும் இடங்களாக இருந்தன. இவர்கள் ஊரில் எல்லா இடத்திற்கும், எல்லாரிடமும் நன்கு பேசுவதால் முடிதிருத்த வருபவரிடமிருந்தும், சவரம் செய்ய வருபவரிடமிருந்தும் ஊரில் உள்ள செய்திகளை முழுமையாக அறிந்திருப்பர். இவ்வாறு பொது இடத்தில் வைத்து முடிதிருத்தும் போது முடிதிருத்துபவருக்கும், முடி திருத்த வருபவருக்கும் இடையே நடைபெறும் கருத்துப் பரிமாற்றமானது முடித்திருத்தக் காத்திருக்கும் மனிதருக்கும் இடையே நல்ல உறவினை ஏற்படுத்துகின்றன. இவ்வாறு எல்லாத் தகவல்களையும் இவர்கள் தெரிந்து வைத்திருப்பதால் ஊரில் முக்கியமான பஞ்சாயத்து தீர்ப்புகள் கூறும்போது இவர்களிடம் கலந்து ஆலோசிக்கும் வழக்கம் காணப்பட்டது. “இவர்களின் தகவல் பரிமாற்றங்களை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேயர்கள் பார்த்திருக்கும் வாய்ப்புகள் உள்ளன. எனவே தான் முடிதிருத்தும் மருத்துவ சாதியினரைப் ‘பார்பர்’ என்று அடையாளப்படுத்தினர் என ரகுபதி (2006:72) குறிப்பிடுகிறார். பார்பர் என்ற சொல் ஆங்கிலத்தில் ‘பார்பரியன்’ என்ற சொல்லிலிருந்து வந்திருக்கலாம். பார்பரியன் என்ற சொல்லுக்குக் காட்டுமிராண்டி என்பது பொருளாகும். காட்டுமிராண்டி போல் தோற்றமளித்தவர்களை அழகுபடுத்தும் பணியாக முடிதிருத்தும் தொழில் காணப்பட்டதால் இத்தொழிலினைச் செய்தவர்களைப் ‘பார்பர்’ என்று குறிப்பட்டிருக்கலாம்.

இவர்களிடம் முடிதிருத்தம் செய்தபின்னர் குளித்துவிட்டுதான் வீட்டிற்குள் செல்ல வேண்டும் என்ற பழக்கம் நடைமுறையில் இருந்தது. பலர் இதனை மருத்துவரின் கைப்பட்டதால் தீட்டு ஏற்பட்டுவிட்டது. எனவே குளித்தபின்புதான் வீட்டிற்குள் செல்ல வேண்டும் என்று தவறுதலாகக் கூறுகின்றனர். சிலர் முடிதிருத்தியவுடன் வீட்டிற்குள் வந்தால் வெட்டிய முடியின் சிறிய துண்டுகள் வீட்டினுள் விழும் வாய்ப்புள்ளது. அவை சாப்பிடும்போது காற்றில் பறந்து சாப்பாட்டில் விழுவதற்கும் வாய்ப்புண்டு. அது வயிறு சம்பந்தமான நோய்களை ஏற்படுத்தலாம் என்பதால் முடிதிருத்தியபின்பு குளித்துவிட்டு வீட்டிற்குள் செல்ல வேண்டும் என்று அறிவியல் பூர்வமாகவும் கூறுகின்றனர். இஃது உண்மையான செய்தியாயினும் சாதி பாகுபாட்டில் உயர்ந்த சாதியினர் தாழ்ந்த சாதியினரைத் தீட்டாகக் கருதிய சமூகச் செய்திகளையும் இது தருகிறது. "உயர்ந்த சாதியினரைத் தாழ்ந்த சாதியினர் தொடவோ, அருகில் செல்லவோ கூடாது என்ற நிலை காணப்பட்டது. அவ்வாறு தொட்டால் தீட்டாகக் கருதி 'தீட்டுக்குளியல்' என்னும் குளியலை மேற்கொண்டனர்" என்று பெருமாள் (2003:180) குறிப்பிடுகிறார். இதன் தொடர்ச்சியாக இம்முறையைக் கைக்கொண்டுள்ளனர் எனக் கூறலாம். வன்னியக் கவுண்டர்கள் நாவிதனிடம் மயிர் வெட்டிக் கொண்டபின் குளிக்கும்வரை யாரையும் தீண்டமாட்டார்கள். தீண்டினால் தீட்டாகி விடும் என்னும் விட்டல்ராவின் (1980:91) கூற்று மேற்கருத்திற்கு வலுசேர்ப்பதாகவும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்

**சலூன் கடைகள்**

கிராமங்களில் ஆதிக்கச் சாதியினருக்குச் சேவை செய்து வந்தவர்கள்; தான் சார்ந்திருக்கும் சாதியினருக்கு மட்டும்தான் சேவை செய்ய வேண்டும் என்ற கட்டாயம் விதிக்கப்பட்டிருந்தது. வேறு சாதியினருக்கு வேலை செய்தால் இவர்களை இழிவாகவும், பழித்தும், கொடுமைப்படுத்தவும் செய்தனர். அவர்கள் கொடுக்கும் சிறு ஊதியத்தில் அவர்களையே நம்பி இருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். எனவேதான் இவர்கள் முதலில் கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்து வெளியூர்களில் கடைகளை ஆரம்பித்தனர். இவ்வாறு குமரி மாவட்டத்திற்குத் திருநெல்வேலி

மற்றும் கேரளாவில் இருந்தும் மருத்துவர்கள் இடம்பெயர்ந்து வந்துள்ளதையும், இங்கு இருந்தவர்கள் வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றுள்ளதையும் களஆய்வின்போது அறியமுடிந்தது. இவ்வாறு இடப்பெயர்ச்சி அடைந்தவர்கள் தங்களுக்கென சலூன் கடைகளை அமைத்துக்கொண்டனர். ஆனால் இவர்களின் பழைய தகவல் பரிமாற்றம் மீண்டும் தொடர்ந்துக் கொண்டேதான் இருக்கிறது என்பது மறுக்க இயலாதது. "சலூன்களின் வரலாற்றுச் செய்தி கி.பி.17-ம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கிறது" (The Encyclopedia Americana, 1992, vol. 28:160) "பார்பர் ஷாப் கருத்துப் பரிமாற்றம் செய்திகளைப் பிறரிடம் சொல்லுதல், சவரம் செய்தல் முதலியவை நடைபெறும் மையமாக இருந்துள்ளது" (The New Encyclopedia Britanica, 1985, vol.1: 887). எழுத்தாளர் டொமினிக் ஜீவா 'பண்டிதம்' என்னும் மருத்துவ சமுதாய விழிப்புணர்வு தமிழ் மாத இதழில் 'எனது சவரக்கடை என்பது ஒரு சர்வகலா சாலையாகும். ஏனெனில் இங்குக் கற்றுக் கொடுக்கப்படுவதும் உண்டு; கற்றுக் கொள்வதும் உண்டு' என்று கூறியுள்ளார்.

இவ்வின மக்கள் தங்களின் மீதான ஒடுக்குதலுக்கு எதிராகத் தங்களைச் சுயமரியாதை, பொதுவுடைமை, காங்கிரஸ், திராவிடக் கழகம் முதலிய இயக்கங்களுடன் இணைத்துக் கொண்டனர். எனவே இவ்வியக்கங்கள் வெளியிடுகின்ற பத்திரிகை, பிரசுரங்கள், இதர வெளியீடுகள் முதலியவற்றைத் தங்கள் சலூன்களுக்கு வரவழைத்தனர். இதனால் மக்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் - தெரிந்து கொள்ளும் ஒரு ஊடகமாகச் சலூன்கள் மாற்றம் பெற்றன. சவரம் செய்வதற்குக் காத்திருக்கும் மக்கள் பத்திரிகைகளைப் படித்தனர். மட்டுமின்றிப் பத்திரிகைகளைப் படிப்பதற்காகவும் மக்கள் சலூன்களுக்கு வரத் தொடங்கினர். இதனால் சலூன் கடைகள் பகுத்தறிவுப் பிரச்சார மையமாகவும் மாற்றம் பெற்றன. கலைஞர் கருணாநிதி சலூன் கடைகளைப் பற்றிக் கூறும்போது "முடிதிருத்தும் நிலையங்கள் தான் திராவிட இயக்கத்தின் தொட்டில்களாக இருந்தன. ஏனென்றால் நாட்டில் இருக்கின்ற 'முடி'களைத் திருத்துவது ஒவ்வொரு மனிதனுடைய முடிகளை மாத்திரமல்ல, நாட்டை ஆளுகின்றவர்களுடைய முடியையும் திருத்த வேண்டியது அவசியம். இதற்கு நாற்றங்காலாக தொட்டிலாக இருந்த இடம், எங்களைப் பொறுத்தவரையில்

திராவிட இயக்கத்தைப் பொறுத்தவரையில், பெரியாருடைய கொள்கைகளைப் பொறுத்தவரையில், அறிஞர் அண்ணாவின் குறிக்கோளைப் பொறுத்தவரையில், எங்களுடைய செயல்பாடுகளைப் பொறுத்தவரையில் தொட்டிலாக அமைந்த இடம் மருத்துவர்களின் கடைகள். ஒவ்வொரு மருத்துவருடைய கடையிலும் அன்றைக்கு யாரும் படிக்கக் கூடாது, படித்தால் பாவம், ஆபத்து, அரசாங்கத் தடை உண்டு என்றெல்லாம் இருந்த சூழ்நிலையில் 'குடியரசு' பத்திரிகையை, பகுத்தறிவு பத்திரிகையை, சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகளைப் பெரியாரின், அண்ணாவின் புத்தகங்களை, 'திராவிடநாடு' பத்திரிகையை அன்றைக்கு இந்தக் கடைகளில் தான் படிக்க முடியும்; வேறு எங்கும் கிடையாது. நூல் நிலையங்களில் எங்கேயும் இதற்கு அனுமதி கொடுக்கமாட்டார்கள். நகராட்சி மன்றம் இருக்கும்; அங்கே நூல்நிலையம் இருக்கும்; ஆனால் அந்தப் பத்திரிகைகளை, புத்தகங்களை அங்கே படிக்க முடியாது. எனவே எங்களுக்கு நிரந்தரமான, யாராலும் தட்டிக்கேட்க முடியாத நூல் நிலையங்களாக இந்த மருத்துவர்களின் கடைகள்தான் அன்றைக்கு இருந்தன. இன்றைக்கும் இருக்கின்றன" (தினகரன், 28-12-98) என்று குறிப்பிட்டுள்ளார்.

வயதானவர்கள் நடத்தும் சலூன்களில் இன்றும் மார்க்ஸ், பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகிய தலைவர்களின் புகைப்படங்களைச் சுவர்களில் தொங்க விடப்பட்டிருப்பதை காணலாம். தற்போது இந்நிலை மாறி இளம் தலைமுறையினர் நடத்திவரும் சலூன்களில் சினிமா கதாநாயகன்-நாயகி, கிரிக்கெட் வீரர்களின் புகைப்படங்கள் மாட்டி வைக்கப்பட்டுள்ளன. அது கால மாற்றத்தின் நிலையாயினும் இவ்வித கவர்ச்சிமிக்க கடைகளுக்கே இன்று இளைஞர்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். அத்துடன், பாடல்கள் ஒலிக்கின்ற நவீன கருவிகள், தொலைக்காட்சி, வானொலி முதலியவைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. முதன்முதலில் சலூன் கடைகளுக்குப் பெயர் சூட்டப்படவில்லை. ஏனெனில் ஊரில் ஒரு சலூன் கடை மட்டுமே காணப்பட்டது. அதிக அளவில் சலூன் கடைகள் வந்தபிறகு தங்கள் விருப்பதற்கு ஏற்ப பெயர்களை வைத்துக்கொண்டனர்.

## அழகுநிலையம்

இன்றைய இளம் தலைமுறையினர் தங்களை அழகுப்படுத்திக் கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர். எனவே இத்தொழிலைச் செய்வதற்குப் 'பியூட்டிசன் டிப்ளமோ' படிப்பினைப் படித்தவர்கள்; இன்று பெரும்பாலும் செய்து வருகின்றனர். ஆண்களுக்குரிய அழகு நிலையங்களில் முகத்தினை அழகு படுத்துவதற்கு நவீன கிரீம்கள், பவுடர்களையும் பயன்படுத்துகின்றனர். பெண்களுக்கான அழகுநிலையங்களில் பெண்களுக்குச் சிகையலங்காரம், முகத்தினை அழகுபடுத்துதல், கண் புருவத்தில் இருக்கும் மயிரினை அழகுபடுத்துதல், மணப்பெண் ஆடை மற்றும் தலையலங்காரம் முதலியனவற்றைச் செய்கின்றனர். பெரும்பாலும் உயர்ந்த சாதி பெண்களே அழகு நிலையங்களை நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்தொழில் அதிக வருமானம் தரும் தொழிலாக இன்று வளர்ச்சி யடைந்துள்ளது. அழகுநிலையத் தொழிலில் மருத்துவ இனப் பெண்கள் மிகவும் குறைந்த அளவிலேயே ஈடுபடுகின்றனர். இன்றைய நவீன நாகரிக காலத்தில் பெண்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்வதை தேவையான ஒன்றாகக் கருதுகின்றனர். மணப்பெண் அலங்காரத்திற்கு ஒரு நாளைக்கு (1 முதல் 2 மணி நேரத்திற்கு) 500 முதல் 5000 ரூபாய் வரை வருமானம் பெறுகின்றனர். இன்று பியூட்டிபார்லர்கள் நவீன வசதிகளுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

## இசைத்தொழில்

இசைக்கு மயங்காத மனிதர்களே இல்லை. அந்தணர்களிடம் எல்லாவிதமான இசைக் கலைகளும் உள்ளன. எனினும் நாகசுரம், தவில் மட்டும் காண்பதற்கில்லை. ஏனெனில் இக்கருவிகளை வாசிப்பது கடினமானது, நுட்பமானதுமாகும். மங்கள இசைக்கு உரியவர்கள் மருத்துவர்களே எனலாம். இவர்கள் மரபுவழித் தொழிலாக இத்தொழிலைச் செய்து வருகின்றனர். மங்களகரமான நிகழ்வுகளுள் அனைத்திற்கும் இவ்விசை வாசிக்கப்படுகின்றது. இதனை மக்கள் மேளம், கொட்டு, நையாண்டி மேளம், பெரியமேளம் என்று அழைக்கின்றனர். இவற்றை வாசிக்கும் இசைக் கலைஞர்களை மேளக்காரன், கொட்டுக்காரன், அண்ணாவி என அழைக்கின்றனர். இவ்வின மக்கள் பெரும்பாலும் பெரிய மேளத்தையே வாசிக்கின்றனர். தமிழகத்தில் பரவலாக எல்லா இடங்களிலும் இக்கலைநிகழ்ச்சி நிகழ்த்தப்படுகின்றது.

மக்களின் வாழ்வியல் சடங்குகளான பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள எல்லா நிகழ்வுகளிலும் இவ்விசை முக்கியத்துவம் பெற்றுள்ளது. கோயில் திருவிழாக்களில் தனியாகவும், கரகாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், ராஜா ராணியாட்டம்; குறவன் குறத்தியாட்டம், ஒப்பாரிப்பாட்டு. அரசியல் கட்சிகளின் கலைநிகழ்ச்சிகள், பொது விழாக்கள் ஆகியவற்றில் பின்னணி இசையாகவும் இக்கலை நிகழ்த்தப்படுகிறது.

பெரிய மேளத்தில் நாகசுரம், தவில், தாளம் (ஜால்ரா) ஒத்து அல்லது சுதிப்பெட்டி ஆகிய இசைக்கருவிகள் பயன்படுத்தப் படுகின்றன. நையாண்டி மேளத்தில் இத்துடன் பம்பை என்னும் தோல் கருவியும் இசைக்கப்படுகின்றது. நாட்டார் கோயில் விழாக்களில் தனியாகவும், சாமியாட்டத்தை வரவழைப்பதற்காகவும், இவ்விசை பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது.

### நெசவுத்தொழில்

மனிதனின் அன்றாடத் தேவைகளுள் ஆடையும் ஒன்றாகும். இவ்வாடைகள் நெசவுத்தொழில் செய்வதன்மூலம் மக்களுக்குக் கிடைக்கின்றன. குமரி மாவட்டத்தில் பெரும்பான்மையாகக் கேரளமுதலி சமுதாய மக்கள் இத்தொழிலை முதன்மைத் தொழிலாகச் செய்துவருகின்றனர். இத்தொழில் செய்வதற்குத் ‘தறி’ என்ற கருவியினைப் பயன்படுத்துகின்றனர். பழந்தமிழர்கள் விவசாயத்திற்கு அடுத்தபடியாக நெசவுத்தொழிலுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளனர். பருத்தி, பட்டு நூலினால் ஆடைகள் நெய்யப்பட்டதை,

***நூலினும் மயிரினும் நுழைநூற் பட்டினும்***
***பால்வகை தெரியாப் பன்னூ றடுக்கத்து***
***நறுமடி செறிந்த அறுவை வீதியும்*** (சிலம்பு, ஊர்: 205-207)

என்ற சிலப்பதிகாரப் பாடல் வரிகள்மூலம் அறிய முடிகிறது. நூல்இழைகள் செல்லுகின்ற வழி பார்வைக்குத் தெரியாதபடி நுண்மையாக ஆடைகள் நெய்யப்பட்டதை,

***நோக்கு நுழை கல்லா நுண்மைய பூக்கனிந்து***
***அரவுரியன்ன அறுவை*** (பொரு., 82-83)

என்ற பொருநராற்றுப்படை பாடல் மூலம் அறியலாகும். புறநானூற்றில் ஆடைகளில் அழகிய பூ வேலைப்பாடுகள் செய்யும்

வழக்கம் இருந்துள்ளதை "நிலக்கச்சைப் பூவார் ஆடை" (புறம், 1274) என்ற பாடலடிகள் மூலம் அறியலாம். சங்க காலத்தில் ஆடைக்கு 'அறுவை' என்ற பெயரும் வழக்கில் இருந்துள்ளமைப் பாடல்களின் மூலம் அறியமுடிகின்றது.

சோழர் காலத்தில் ஆட்டு மயிர், எலி மயிர், பருத்தி, பட்டு ஆகியவற்றால் நேர்த்தியாக ஆடைகள் நெய்யப்பட்டன. இவை பாம்பின் உரித்த தோல், மூங்கிலின் உட்புறத்தேயுள்ள மெல்லிய வெண்மையான தோல், புகை, பாலாவி போன்று விளங்கின. தமிழகத்தில் முப்பத்தாறு வகையான ஆடைகள் நெய்யப்பட்டன என்பதனை அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டுள்ளார் என்று மீனா (2004:37) மேற்கோள் காட்டுகிறார்.

நெசவுத்தொழிலுக்கு இரண்டு விதமான தறிகளைப் பயன்படுத்துகின்றனர். அவைக் குழித்தறி, சட்டில்தறி என்பனவாகும். இதில் பெரும்பாலும் இம்மக்களின் வீடுகளில் குழித்தறிகள் தான் காணமுடிகின்றது. குழியின் உள்நின்று நெசவு செய்வதால் குழித்தறி என்கின்றனர். பருத்தியிலிருந்து நூலினை உற்பத்தி செய்த பின் நூலைப் பக்குவப்படுத்துகின்றனர். இதனைப் 'பாவு ஆத்தல்' என்று கூறுகின்றனர். பாவு ஆத்துகின்ற இடத்தைப் பாக்களம் என்று கூறுகின்றனர். பாக்களமாக நீண்ட நேரான வழிப்பாதைகளையும், சாலையோரங்களையும் பயன்படுத்து கின்றனர். இவ்விடங்களில் இருப்பக்கமும் கல்தூண்களையோ, கம்பிகளையோ, சீரான இடைவெளி விட்டு நாட்டி வைத்து அதன்மீது பாவினை (நூலினை) விரித்து ஆத்துகின்றனர். முதலில் நூலை இழைத்து பெரிய இராட்டில் ஒட்டி பாவாகக் கிழித்து எடுக்கின்றனர். இவ்வாறு இழைத்தப் பாவினை நீரில் நனைத்துப் பாக்களத்தில் விரித்துப் போடுகின்றனர். பின்னர் பாவின்மீது பசை தேய்க்க புல்லூருவி என்னும் கருவியைப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு இரண்டாவது முறையும் பசைபோடுவர். அப்பொழுது புல்லூருவியில் நல்லெண்ணெயும் சேர்த்துத் தேய்த்துப் பாவினை மேலாகவும், கீழாகவும் மாறி மாறி திருப்பிப்போட்டுப் புல்லூருவியால் தடவுகின்றனர். இதனை வெயிலில் காய வைத்து, பாவின் இடையிடையே நூலால் பிணி கட்டி பாவினைப் பெரிய கம்பில் சுற்றி எடுத்து இராட்டின்மூலம் பெரிய வீம்புத்தடியில் பாவைச் சுற்றுகின்றனர்.

இவ்வாறு பாவினை ஆத்திய பின்பு பாவினைத் தறியில் கொண்டு பொருத்துகின்றனர். பின்னர் பாவினை நிரடுவர். அதாவது வீம்புத் தடியில் உள்ள பாவிலிருந்து ஓர் இழையை, தறியிலுள்ள பாவிலிருந்து ஓர் இழையையும் எடுத்துக் கையால் நிரடுகின்றனர். இவ்வாறு நிரடும்போது கைகளில் வலியோ, காயமோ ஏற்படாமல் இருக்க, கைவிரல்களில் திருநீற்றினைத் தடவுகின்றனர். பாவினை நிரடுவதற்கென்று தனியாக ஆள்கள் வைத்துச் செய்வர். சிலர் தாங்களாகவே பாவினை நிரடுவதுமுண்டு. பாவை நிரடிய பின் பாவிலுள்ள நூலின் தரத்திற்கு ஏற்ற ஊடை நூலைத் தேர்ந்தெடுத்து நீரில் நன்றாக நனைத்து, நீர் வடிய பிழிந்து மிதமான ஈரப்பதத்துடன் எடுத்து இராட்டில் உள்ள பூட்டு விரலிலிட்டு குழல்களில் சுற்றுகின்றனர். இவ்வாறு நூலைக் குழல்களில் சுற்றி எடுப்பதைத் 'தார் சுற்றுதல்' என்று கூறுகின்றனர். தார் சுற்ற மரக் குழல்களைப் பயன்படுத்தினர். தற்போது பிளாஸ்டிக் குழல்களைப் பயன்படுத்தி தார் சுற்றுவதைக் காணமுடிகின்றது. களஆய்வின்போது சிறுவர் சிறுமியர் மிக எளிதாகத் தார் சுற்றிக் கொடுப்பதை காணமுடிந்தது. தார் சுற்றிய குழல்களை ஓடத்தினுள் நுழைத்து தறியிலுள்ள அச்சுப் பெட்டியில் வைத்து அதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் கயிற்றினைப் பிடித்து வலப்புறமாகவும், இடப்புறமாகவும் மாற்றி மாற்றி அடிப்பர். இதே நேரத்தில் இரு கால்களாலும் மிதியடியினையும் மாறி மாறி மிதித்து நெய்கின்றனர். இவர்கள் சேலை, வேட்டி, துப்பட்டா, துண்டு என்று பல ரகங்களில் தேவைக்கு ஏற்ப நெய்கின்றனர்.

இவ்வாறு நெய்த துணிகளைக் கூட்டுறவுச் சங்கங்களில் கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர். கூட்டுறவுச் சங்கங்கள் துணியின் தரத்தினைப் பரிசோதனை செய்து, கொள்முதல் செய்து நெசவாளர்களுக்குத் தகுந்த கூலியினை வழங்குகின்றனர். மிகவும் பழமைவாய்ந்த நெசவுத்தொழிலைப் பழமையான முறையினைப் பின் பற்றிச் செய்து வருவதால் இவர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைப்பது இல்லை. ஒரு நாள் நன்கு வேலை செய்தால் 60 முதல் 80 ரூபாய்தான் கிடைக்கும் என்று கூறுகின்றனர். எனவே, இளம் தலைமுறையினர் இத்தொழிலில் ஆர்வம் காட்டாமல் வியாபாரம் முதலான பிற தொழில்களைச் செய்து வருகின்றனர். முன்பு அனைவரது வீடுகளிலும் தறிகள் இருந்தன. தற்போது 30 சதவீத வீடுகளில் மட்டுமே தறிகள் காணப்படுகின்றன. அதில் முதியவர்கள் தங்கள் பொழுதுபோக்கிற்காக மட்டுமே இத்தொழிலினைச் செய்து வருகின்றதைக் காணமுடிகின்றது.

### *பிறத்தொழில்கள்*

இவ்வின மக்கள் பாரம்பரியமாகச் செய்துவந்த தொழில்களில் எந்தவிதமான முன்னேற்றமும், சமுதாய மதிப்பும் இல்லாத காரணத்தினால் இன்று இளம் தலைமுறையினர் வேறு தொழில்களுக்குச் செல்கின்றனர். முன்னர் ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் குடும்பத் தொழிலைச் செய்வது வழக்கம். தற்போது இருபது சதவீத மக்களே இத்தொழிலைச் செய்கின்றனர். மற்றவர்கள் வேறுதொழில்களான மாந்திரீகத் தொழில், பந்தல் கட்டுதல், கட்டட வேலை, அரசு வேலை, தொழிற்சாலை வேலை, ஒலி ஒளி அமைத்தல், விவசாயம், மரவேலை முதலிய பலவிதமான வேலைகளைச் செய்து வருகின்றனர். இளம் தலைமுறையினர் ஓரளவு கல்வியறிவு பெற்றிருப்பதன் விளைவாக வேறு தொழில்களுக்கு எளிதில் மாறிவிட்டனர். சமுதாயத்தில் மற்றவர்களைப் போன்று தங்களையும் மதிக்க வேண்டும் என்பதே இவர்களின் முக்கியமான எண்ணமாக உள்ளது.

### மாந்திரிகத்தொழில்

இவ்வின மக்கள் மருத்துவத் தொழிலுடன் மாந்திரிகத் தொழிலையும் நன்கு அறிந்து செய்து வந்துள்ளனர். ‘நோய்க்கும் பார்; பேய்க்கும் பார்’ என்ற வழக்கிற்கேற்ப இவர்கள் இரண்டையும் ஒரே நேரத்தில் செய்து வந்தனர். இவர்கள் மாந்திரிகத்தைத் தவறான வழிக்குப் பயன்படுத்தியதாகவும், அதனால் தங்கள் வாரிசுகளுக்கு இத்தொழிலைக் கற்றுக் கொடுப்பது இல்லை என்றும் தரவுகள் வழியே அறியமுடிந்தது. மாந்திரிகம் சம்மந்தமான ஏடுகள் வீட்டில் இருந்தால் குலம் சீரழிந்துவிடும் என்ற எண்ணத்தில் அத்தொழிலைச் செய்தவர்கள் இறந்தவுடன் அவர்களுடன் சேர்த்து ஏட்டினையும் எரித்ததாகக் கூறுகின்றனர். மாந்திரிகத் தொழில் செய்கின்ற சிலரைப் பார்த்து தகவல் திரட்ட நினைத்த போது ‘அவர்கள் அதுபற்றி எங்களிடம் எதுவும் கேட்காதே’ என்று கூறிச் சென்றுவிட்டனர். அவர்கள் வீட்டுப் பெண்கள் மாந்திரிகத்தைக் கேட்டு பாவத்தைச் சம்பாதிக்காதே என்று கூறினார்கள். இன்றும் அவர்கள் நோய்வாய்பட்டுக் கிடப்பவர்களுக்கு மந்திரித்து விபூதியினைக் கொடுத்து வருகின்றனர். இதனைப் பூசினால் நோய் மாறுவதாகக் கூறுகின்றனர். களஆய்வின்போது இவ்வின மக்கள் விபூதியைப் பூசி விடுவதையும் காணமுடிந்தது.

### பந்தல் கட்டுதல்

திருமணப் பந்தல்களைக் கட்டும் தொழில் இவர்கள் முன்பே அறிந்திருந்த தொழில் ஆகும். எனவே அதனை சிலர் முதன்மைத் தொழிலாகச் செய்கின்றனர். திருமணவீடுகளில் வீட்டின் முன்பு கூரைபோடுதல், அதனை அலங்காரம் செய்தல், மணவறை அமைத்தல் முதலியவற்றைச் செய்கின்றனர். இத்தொழில் மூலம் அதிக வருமானம் இவர்களுக்குக் கிடைக்கும். கோயில் திருவிழாக்கள், அரசியல் கூட்டங்கள் என்று பல்வேறு விதமான சூழல்களில் இவர்களுக்குப் ப்ணி கிடைக்கின்றது. மேலும் பாத்திரங்கள், பெஞ்சுகள், நாற்காலிகள் ஆகியனவற்றை வாடகைக்கும் விடுகின்றனர். இவ்வாறு, இதனை வியாபாரமாகச் செய்து வருகின்றனர்.

### கட்டடத் தொழில்

இவ்வின மக்கள் சிறுவயதிலே கட்டட வேலைக்குச் சென்று அத்தொழிலை முழுமையாகக் கற்றுக் கொண்டனர். வீடு அமைப்பது பற்றிய எல்லா தொழில் நுட்பமும் இவர்கள் அனுபவம் மூலம் அறிந்துள்ளனர். இன்று சொந்தமாக ஆள் வைத்து வேலை செய்யும் அளவிற்கு அத்துறையில் இவ்வினமக்கள் வளர்ந்துள்ளதைக் காணமுடிகின்றது.

### விவசாயம்

இவ்வின மக்களிடம் முன்பு சொந்தமான நிலங்கள் இல்லாமல் இருந்தது. இன்று இவர்களும் மற்ற இனத்தவர்களைப் போன்று நிலம் வாங்கி அதில் விவசாயம் செய்கின்றனர். இவ்வாறு இவ்வின மக்கள் மற்ற சாதியினரைப் போன்று பல துறைகளிலும் தங்கள் திறமைகளைக் காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### அரசு வேலை

அரசு வேலை எல்லாவின மக்களும் விரும்பும் ஒன்றாகும். இவ்வின மக்கள் அரசின் எல்லாத் துறைகளிலும் பணியாற்றி வருகின்றனர். இதில் வேடிக்கையான காரியம் அரசுப் பணியில் இருப்பவர்கள் நாங்கள் பார்பர் இல்லை உயர்ந்த சாதியினர் என்று கூறிக் கொள்வதுதான். கல்வி கற்றவர்கள் அரசு மருத்துவர்களாகவும், பொறியியல் வல்லுநர்களாகவும் இருப்பதைக் காணமுடிகின்றன.

**கல்வி**

மருத்துவ இனமக்கள் அதிக அளவில் கல்வியறிவு பெற்றவராக இல்லை. பத்தாம் வகுப்பு வரையே படித்தவர்கள் பலர் உள்ளனர். அதிகம் படித்தவர்கள் இன்று அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் உயர்ந்த பதவிகளில் உள்ளனர். இவ்வின மக்கள் கல்வியறிவில் குறைந்தவர்களாக இருந்தாலும் நாட்டு நடப்புகளை அதிகமாக அறிந்து வைத்துள்ளனர். இவர்கள் எளிதாக அனைவரிடமும் நன்கு பழகும் தன்மை உடையவர்களாக உள்ளனர். வயதானவர்கள் அதிகமாக ஐந்தாம் வகுப்பிற்குள் தான் படித்து இருக்கின்றனர். எனினும் தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுவதில் அதிக ஆர்வம் உள்ளவராக உள்ளனர். இதில் படிப்பினை இடையில் விட்டுவிட்டு வந்தவர்கள் தங்கள் பரம்பரைத் தொழிலுக்கே வந்துள்ளமையினைக் காணமுடிகின்றது.

**தகவல் பரிமாற்றம்**

இனக்குழு மக்களின் பண்பாட்டினை அறிந்துகொள்ள மொழி உதவுகின்றது. இதனை, "மானிடவியல் சார்மொழியியலார் பெரும்பாலும் மொழியின் வரலாறு பற்றி அறிவதிலும் நாட்டங்கொண்டுள்ளனர். அவற்றைப் புரிந்துகொள்வதன் மூலம் பண்பாட்டின் அமைப்பைப் புரிந்துகொள்ள முடியுமென நம்புகின்றனர். ஏனெனில், கருத்துப் புலப்படுத்தும் முறையை மொழி மட்டுமே வடிவமைக்கிறது. புற உலகைப் புரிந்து கொள்வதிலும் அவற்றை வெளிப்படுத்துவதிலும் மொழியின் ஆளுகையே மேலோங்கி நிற்கிறது. மொழியின் செல்வாக்கைப் பொறுத்தே அம்மக்களின் அறிதிறனும் (Cognition) அமைகிறது எனப் பக்தவத்சலபாரதி (1990:111) குறிப்பிடுகிறார்.

மருத்துவ இனமக்களுக்கென்று தனிப்பட்ட மொழியமைப்பு காண்பதற்கில்லை. இவர்கள் எந்த இன மக்களுக்குச் சேவைப்பணி செய்தார்களோ அவர்களின் மொழியமைப்பினையே இவர்கள் கொண்டுள்ளனர். இவர்களிடம் சில குழூஉச் சொற்கள் காணப்படுகின்றன.

மனிதன் தன் வாழ்வில் உன்னதநிலையை அடைவதற்குத் தகவல் தொடர்பியல் மிக இன்றியமையாததாகும். இன்று மக்களிடையே ஏற்பட்ட அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாகத் தகவல் தொடர்பில் பல்வேறு மாற்றமும் முன்னேற்றமும் அடைந்துள்ளது. செவிமடுத்தல் காணுதல் ஆகிய

குறியீடுகளின் வழியாகக் கேட்போரின் அறிவைத் தேடும் வண்ணம் ஒருநோக்கத்துடன் கூடிய தகவல்களைக் கூறும் கொடுக்கல் வாங்கல் செயல்முறையே தகவல்தொடர்பாகும் (1986:71). தகவல்தொடர்பின் வெற்றி தகவலை அறிவிக்கும் முறையில் அமைகிறது. எனவே ஒரு செய்தி பெறுநரின் உணர்வுகளைத் தூண்டி அவரைச் செயல்படச் செய்யும்போது, திறம்படச் சொல்லப்பட்ட செய்தியாகக் கருதப்படுகிறது என்று கிருட்டிணசாமி (1992:375) குறிப்பிடுகிறார். மக்களிடையே அறிவியல் வளர்ச்சியடையாத காலத்தில் மருத்துவ இனமக்களைத் தகவல்களைக் கொண்டு செல்லும் அல்லது தெரிவிக்கும் ஊடகமாகப் பயன்படுத்தியுள்ளனர்.

தகவல் பரிமாற்றம் தங்கு தடையின்றி நடைபெற பல்வேறு உத்திகள் காணப்படுகின்றன. அவற்றில் குறிப்பாக மருத்துவ இனமக்கள் விளித்துப் பேசுதல், குறிப்பாகக் கூறல், மறைபொருளாகப் பேசுதல் முதலிய உத்திகளைக் கையாளுகின்றனர். இவர்களின் தகவல் பரிமாற்றம் இருவழிகளில் நடைபெறுகின்றன.

- பிறமக்களுடன் தகவல் பரிமாற்றம்
- தங்களுக்குள் தகவல் பரிமாற்றம்

### பிறமக்களுடன் தகவல் பரிமாற்றம்

மருத்துவ இனமக்கள் சேவைப் பணிச் செய்கின்ற ஆதிக்கச் சாதி மக்களின் சடங்குகள், விழாக்களில் தகவல்களைப் பரிமாற்றம் செய்வதாகும்.

முற்காலத்தில் மருத்துவ இனப்பெண்கள் பேறுகாலம் பார்க்கும் மருத்துவச்சிகளாகச் செயல்பட்டனர். இவர்கள் ஒவ்வொரு கிராமங்களிலும் இருந்துள்ளனர். பெண்ணின் உடலில் ஏற்படும் உள்மாற்றத்தைப் பார்த்து மக்கள், ஊர் மருத்துவச்சியை அழைத்து உறுதிபடுத்தும் வழக்கம் முற்காலத்தில் இருந்துள்ளது. எனவே மருத்துவச்சிப் பெண்ணைப் பரிசோதனைச் செய்துவிட்டு, பெண் கருவுற்றிருக்கிறாள் என்றச் செய்தியினை நேரடியாகக் கூறாமல், வீட்டில் உள்ள பெரியவர்களான தாத்தா, பாட்டி, மாமனார், மாமியாரிடம், 'நீங்கள் தாத்தாயாயிட்டீங்க. பாட்டியாயிட்டீங்க. . .' என்று உறவுகளை வலியுறுத்தியே கூறுகின்றனர். குழந்தைப் பேறு பார்க்கும்போது பிறப்புச் செய்தியை

முதன்முதலில் அருகில் இருப்பவர்களுக்கு அறிவிப்பது அக்குழந்தையின் அழுகுரலே ஆகும். இதற்காக மருத்துவச்சி குழந்தையினைக் கிள்ளி அழவைப்பதும் உண்டு. பிறந்த குழந்தை ஆண் குழந்தையா? பெண் குழந்தையா? என்பதை மருத்துவச்சி நேரடியாகக் கூறாமல் தாயின் அம்மா அல்லது அப்பாவிடம் 'உங்களுக்குப் பேரன் பிறந்திருக்கிறான், பேத்தி பிறந்திருக்கிறாள்' என்று கூறிச் செய்தியினை வெளிப்படுத்துகின்றனர்.

சில சமுதாய மக்களின் பூப்புச் சடங்கினை முன் நின்று நடத்துபவர்கள் மருத்துவர்களே. பெண் வயதுக்கு வந்ததை ஆளாகிவிட்டாள், சமைந்துவிட்டாள், பருவம் அடைந்துவிட்டாள், பெண் பூப்படைந்துவிட்டாள் என்றெல்லாம் கூறுகின்றனர். பூப்புச் சடங்கின்போது மருத்துவர்கள் புரோகிதர்கள் போன்று தீட்டுக் கழிக்கும் சடங்கினைச் செய்கின்றனர். பெண் வயதுக்கு வந்துள்ளச் செய்தியினைத் தூரத்து உறவினர்களுக்குத் தெரிவிக்கும் வழக்கம் முற்காலத்தில் இருந்தது. தற்போது இப்பழக்கம் இல்லை. மருத்துவ இனப்பெண் தீட்டினைப் போக்கும் விதமாகச் சாணத்தினால் வீட்டை மெழுகி கடல் அல்லது தெப்பக்குளம் (கோயில்குளம்) நீரினால் வீடு முழுவதும், பெண்ணின் மீதும் தெளித்துத் தீட்டினைக் கழிக்கிறார்.

ஆதிக்கச் சாதி மக்களின் திருமண நிகழ்வில் மருத்துவர்களின் பணி மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். திருமணத்திற்கு முன்பு, பெண் கேட்டல், பெண் பார்த்தல் நிகழ்வுகள் இயல்பாக நடைபெறுவதுண்டு. இந்நிகழ்வின்போது பெண் பார்க்க வருபவர்கள் ஊர்க்குடிமகனிடம் பெண்ணைப் பற்றிய விபரம் கேட்கும் மரபு காணப்பட்டுள்ளது. ஏனெனில் மருத்துவர்கள் ஊர்வேலைச் செய்வதினால் ஊரில் உள்ள எல்லா மக்களைப் பற்றியும் நன்கு தெரிந்திருக்கும். எனவே பெண்ணின் குணநலன்களையும், குடும்பத்தைப் பற்றியும் விசாரிக்கும்போது இவர்கள் கூறுவதை நம்புகின்றனர். இதைப்போன்று மாப்பிள்ளையினைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் இவர்களிடம் வருவதுண்டு.

இவ்வாறு ஊரில் உள்ளத் தகவல்களை மற்றவர்களுக்குத் தருகின்ற ஊடகமாக விளங்கியுள்ளனர்; தற்போது இந்நிலை இல்லை. முற்காலத்தில் திருமணத்திற்குப் பின் நடைபெறும்

தாம்பத்திய நிகழ்வுகள் பற்றிய அறிவு மிகவும் குறைவாகவே பெண்களிடம் இருந்தது. எனவே திருமணத்திற்கு முன்னர் பெண்ணுடன் சில நாட்கள் தங்கி இருந்து தாம்பத்திய நிகழ்வுகள் குறித்த அறிவுரைகளை மருத்துவ இனப்பெண்கள் வழங்கியுள்ளனர். இதனால் இவர்கள் பெண்ணின் குணம், பண்புகள், உடலமைப்பு குறித்து நன்கு அறிந்து இருப்பதால் பார்த்திருக்கும் கணவன் இப்பெண்ணுக்கு பொருத்தமானவனா? இல்லையா? என்பதைச் சரியாகத் தெரிந்து கொண்டு மறைமுகமாகப் பெண்ணின் தந்தையிடம் அல்லது தாயிடம் கூறும் வழக்கம் இருந்துள்ளது. இவ்வாறு இவர்கள் தாம்பத்தியம் பற்றிய அறிவினை ஊட்டுவதால் மருத்துவச்சிக்குப் பெண் திருமணம் முடிந்து கணவன் வீட்டிற்குச் செல்லும்போது தட்சணையாக மடியில் தானியம் அல்லது காசு கொடுக்கும் வழக்கம் இருந்தது. தற்போது தாம்பத்திய அறிவுரைகள் தேவைப்படாத காரணத்தால் இம்முறை இல்லை.

இந்து நாடார் இனமக்களின் திருமணத்தின்போது புரோகிதர்களாகவும், செய்திகளை அறிவிப்பவர்களாகவும் மருத்துவர்கள் விளங்குகின்றனர். திருமணத்தன்று காலையில் ஊர்க்குடிமகன் முக்கியத் தெருவில் நின்று உரத்தக் குரலில் 'கால்நாட்ட ஊர் நாடாக்கமாருங்க வாருங்கள்' என்று அழைத்து; வீட்டின்முன் கால் நாட்டுகின்றனர். அதைப் போன்று திருமணநிகழ்வில் உரத்தக் குரலில் அனந்தரம் பண்ணுவதற்குச் சொக்காரர்களை வருமாறு அழைத்து; உறவினர்களை அறிமுகம் செய்தும் வைக்கின்றனர். பின் புரோகிதர்களைப் போன்று திருமணத்தை முன்நின்று நடத்தி வைக்கின்றனர்.

இறப்பு செய்தி மற்றவர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இறந்துவிட்டார் என்பதை, செத்துவிட்டார் என்று நேராக கூறாமல், தவறிவிட்டார், நம்மளவிட்டுட்டுப் போயிட்டார், ஆண்டவன் எடுத்துட்டான், மண்டைய போட்டுவிட்டான், காலமாகிவிட்டார் என்று பலவாறு கூறுகின்றனர்.

இறப்புச் செய்தியை மக்களுக்கு முதன்முதலில் அறிவிப்பவன் ஊர்க்குடிமகன்தான். இவர் இறந்த வீட்டின் முன்பு நின்று சங்கினை ஊதி இறப்புச் செய்தியினை ஊராருக்கு அறிவிக்கின்றார். மேலும் இறந்த வீட்டினை அடையாளப்படுத்தும்

விதமாகப் பச்சை தென்னை ஓலையினால் பந்தல் அமைக்கின்றார். வெளியூரில் உள்ள உறவினர்களுக்கு இறப்புச் செய்தியினை அறிவிப்பதும் ஊர்க்குடிமகனே. இஃது அவரது முக்கிய கடமையாகக் கருதப்பட்டது. எனவே கால்நடையாகவோ அல்லது மிதிவண்டியிலோ சென்று ‘நான் இன்னார் வீட்டில இருந்து வந்து இருக்கிறேன். வீட்டில் இன்னார் தவறிவிட்டார்’ என்று கூறிக் காலில் விழும் வழக்கம் இருந்தது. இதற்காகக் குடிமகனுக்கு பணம் கொடுப்பதும் உண்டு. தற்போது இந்நிகழ்வுகள் நடை பெறுவதில்லை. இறந்த வீட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளை உரிமையோடு முன்நின்று நடத்துபவன் குடிமகனே. இறந்தவரைக் குளிக்க வைக்க நீர்மாலை எடுக்கச் செல்லும்போது உறவுமுறைகளை அதாவது மச்சான்மார்களை அறிமுகப்படுத்திக் கோடித் துணியினை கட்டச் சொல்வதும் இவர்களே. இறப்புச் சடங்குகள் முடிந்த பின்னர் அடியேந்திரம் வைக்கும் நாளை வீட்டுக்காரர்களிடம் கேட்டு உரத்தக் குரலில் ஊர் மக்களுக்கு அறிவிக்கின்றார். இறந்தவரின் மகன்களை அடையாளம் காட்டும் விதமாகத் தலை மயிரை மழித்தும் விடுகின்றனர்.

மருத்துவ இனமக்கள் சேவைப்பணிச் செய்கின்ற ஊர் திருவிழாவில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். கோயில் நிகழ்ச்சிகளையும், கால்நாட்டுகின்ற செய்திகளையும், பூஜை நேரத்தையும் உரத்தக் குரலில் சங்கு ஊதி முற்காலத்தில் ஊராருக்கு அறிவித்துள்ளனர்.

## தங்களுக்குள் தகவல் பரிமாற்றம்

மருத்துவ இனமக்கள் தங்களுக்குள் பிறர் அறியாதவாறு தகவல்களைப் பரிமாறிக் கொள்கின்றனர். அதற்காக அவர்கள் சில குழூஉச் சொற்களைப் பயன்படுத்துகின்றமைக் காணமுடிகின்றது.

## குழூஉச் சொற்கள்

இனக்குழுவாக வாழ்ந்த மனிதன் தங்கள் இனக்குழுவினர்கள் மட்டுமே பேசுகின்ற சொற்களை உருவாக்கிக் கொண்டனர். இந்தச் சொற்கள் தொழில், வியாபாரம், வயது, பால், சாதி அடிப்படையில் மாறுபடும் தன்மையுடையது. இச்சொற்கள் தங்கள் குழுவினரை அடையாளப்படுத்துவதாக அமைந்துள்ளது. இச்சொற்கள் தனக்கெனத் தனிப்பரிமாணம் உடையது. இந்த வகையில் மருத்துவ இனமக்களிடமும் பல குழூஉச் சொற்கள் காணப்படுகின்றன.

மருத்துவ இனமக்கள் இசையின்மீது அதிக ஈடுபாடு உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். எனவேதான் அவர்கள் வாசிப்பதற்குக் கடினமான இசைக் கருவியான நாககுரம், தவில், பம்பை ஆகியனவற்றை இன்றும் வாசித்து வருகின்றனர். இசைக் கருவிகள் அதிக எடை உடையனவாக இருப்பது இல்லை அப்படி இருந்தால் அவற்றைத் தரையில் வைத்தே இசைப்பர். குறிப்பாக, தவில், பம்பை முதலியன அதிக எடையுடைய இசைக் கருவிகளாகும். இவ்வின மக்கள் பல மணி நேரம் அதனைத் தோளில் சுமந்தும், நடந்தும், நின்றும் வாசிக்கின்றனர். இவர்கள் ஆதிக்கச் சாதியினரின் விழாக்களுக்குச் செல்லும்போது அவர்களைப் பேர் சொல்லி அழைக்க முடியாது, அவர்கள் சாதியினைப் பற்றியும் கூற முடியாத நிலை இருந்தது. சாதி அடக்குமுறையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள இவர்கள் பயன்படுத்தியவைக் குழூஉச் சொற்கள் ஆகும். இந்தக் குழூஉச் சொற்கள் இசைத் தொழில் செய்பவர்களுக்கு மட்டுமே தெரியும். அவர்களின் வீட்டுப் பெண்களுக்குக் கூட இச்சொற்கள் தெரியாது. தொழிலுக்குச் செல்லும்போது ஆதிக்கச் சாதியினரின் முன்னால் தைரியமாகத் தங்கள் கருத்துகளைத் தங்களுக்குள் பரிமாறிக் கொள்ளவும், அவர்களைக் கிண்டல் செய்வதற்கும் இச்சொற்கள் மிகவும் உதவியாக இருந்துள்ளன.

இவர்கள் குழூஉச் சொற்களைப் பெரும்பாலும், கோவில் திருவிழா, திருமண வீடுகள், ஊர்வலம் ஆகிய நிகழ்வுகளில் பயன்படுத்துகின்றனர். இவர்கள் தங்கள் இனக்குழுவினரைச் சந்திக்கும் போது இச்சொற்களில் தான் பெரும்பாலும் தகவல்களைப் பரிமாறிக் கொள்கின்றனர். இவர்களிடம் சேகரிக்கப்பட்ட குழூஉச் சொற்களைச் சாதி பற்றிய குழூஉச் சொற்கள், எண் பற்றிய குழூஉச் சொற்கள், தொழில் பொருட்கள் சம்மந்தமான குழூஉச் சொற்கள், பிற குழூஉச் சொற்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

***சாதி சார்ந்தவை***

ஒவ்வொரு சாதியினரையும் குழூஉச் சொற்கள் மூலம் வேறுபடுத்திக் கூறுகின்றனர். எல்லா சாதிக்கும் வெவ்வேறு பெயர்கள் வைத்துள்ளனர். அவை,

| | | |
|---|---|---|
| நாடார் | - | பின்னங்காளி (பின்னையன்) |
| தேவர் | - | கரவட்டி (பாண்டியன்) |
| நாயர் | - | வெப்பத்தான் |
| கம்பர் | - | மூளக்காளி |
| யாதவர் | - | கொதம்பன் |
| ஆசாரி | - | சிம்ளன் |
| பிராமணர் | - | பூணி |
| குளுவன் | - | உழான் |
| பறையர் | - | பெக்கு (பெக்கன்) |
| வெள்ளாளர் | - | வெப்பத்தான் |
| பள்ளர் | - | கிளிஞ்சி |
| மருத்துவர் | - | குயிலான் |
| வண்ணார் | - | தும்பையன் |
| முஸ்லீம் | - | சோனையன் |

என்பவை ஏதோ ஒரு விதத்தில் அந்தச் சாதியினரை அடையாளப் படுத்த வேண்டி பயன்படுத்தியுள்ளனர்.

**எண் பற்றியவை**

எண்களைப் பற்றிய குழூஉச் சொற்கள் வியாபாரிகள் பயன்படுத்துகின்ற சொற்களை ஒத்தே இவர்களிடமும் காணப்படுகின்றது. அவை:

1. சாவட்டம்
2. தோவட்டம்
3. திலுவட்டம்
4. பாத்துவட்டம்
5. தட்டலு வட்டம்
6. தடவலுவட்டம்
7. நுழைக்கலுவட்டம்
8. வலுவட்டம்
9. தாயவட்டம்
10. புலுவட்டம்

என்று இவர்களின் தொழிலுக்குரிய ஊதியத்தைக் கூறுகின்றனர். மேலும் 100 என்பதைத் தவுல் கம்பு என்றும், 50 என்பதை ரையர் என்றும், ரூபாயினை ஈவார் எனவும் கூறுகின்றனர்.

### தொழில் பொருட்கள்

மருத்துவர்கள் இசைத் தொழிலுக்குக் கொண்டு செல்லும் ஒவ்வொரு பொருளையும் வெவ்வேறு பெயரிட்டுக் கூறுகின்றனர். தவுல்-கெத்தபீரி, பம்பை - இரண்டாம் கெடுபிடி (மந்தம்) நாதஸ்வரம் - கீணாம் என்றும் கூறுகின்றனர்.

### பிற சொற்கள்

ஆண்களைப் 'படிக்கான்' என்றும், பெண்களைச் 'சைமா', 'மசை' என்றும் கூறுகின்றனர். சாப்பாட்டினைக் 'கும்மாயம்' (டிப்பாஸ்), என்றும் அதிகமாகப் பேசுபவனைச் 'சிந்தையாபேசுவான்' என்றும், உறக்கத்தைக் 'கங்கல்' என்றும், உயரமானவனை 'நெடுவன்' என்றும், மோசமானவனை 'யாவுபடிக்கன்' என்றும், மீனை 'காந்தா' என்றும், அரிசியினைத் 'தொழிப்பான்' என்றும் போலிஸ்காரர்களைச் 'சைத்தாபடுக்கை' என்றும் கூறுகின்றனர்.

இக்குழூஉச் சொற்கள் அனைத்தும் முன்னோர்களால் பேசப்பட்டு வந்தவையாகும். இச்சொற்கள் இத்தொழில் செய்பவர்களைத் தவிர வேறு தொழில் செய்யும் மருத்துவருக்கும் தெரியாது. இத்தொழிலுக்குப் புதிதாக வருபவர் கூட எளிதில் இச்சொற்களைப் படித்து விடுகின்றனர். இச் சொற்களைத் திருப்பிப் போட்டுக் கூறுவதாகும். இக்குழூஉச் சொற்களால் சொல் விளையாட்டினைச் செய்வதாகவும் காணப்படுகின்றது.

### புழங்குபொருட்கள்

மனிதன் தன்னுடைய புற வாழ்க்கையில் பயன்படுத்தும் பொருட்கள் அனைத்தும் புழங்குபொருட்களாகும். அறிவியல் வளர்ச்சியின் காரணமாகப் புதுப்புது கண்டுபிடிப்புகளும் அவைத் தொடர்பானப் புழங்கு பொருட்களும் பெருகி கொண்டே வருகின்றன. மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்ந்துக் கொண்டிருப்பினும் மரபு வழிப்பண்பாடும் அவைத் தொடர்பானப் புழங்கு பொருட்களும் பயன்பாட்டில் இருப்பதைக் காணமுடிகின்றது. மானுடச் சமூகங்கள் அவர்கள் வாழும் சுற்றுப்புறச் சூழலுக்கும் காலத்திற்கும் ஏற்ப புழங்கு பொருட்களைச் சேகரித்துப்

பயன்படுத்துகின்றனர் என்று செல்ல பெருமாள் (1998:61) குறிப்பிடுகின்றார். மானிடக் குழு ஒன்றின் தொழில் நுட்பத்திறனும் புழங்குபொருள் சார்ந்தக் கலைத் தொழில் வேலைபாடமைந்த பொருள்களும் புழங்குபொருள் பயன்பாட்டினுள் அடங்கும் என்று லூர்து (2000:297) குறிப்பிடுகிறார். மானிடவியலார் பண்பாட்டைப் பொருள்சார் பண்பாடு, பொருள்சாராப் பண்பாடு என இரண்டாக வகைப்படுத்தி உள்ளனர். பொருள்சார் பண்பாடு என்பது மனிதனின் தேவைகளுக்காக அல்லது பயன்பாட்டிற்காக' உற்பத்திச் செய்து கொள்ளப்படும் அல்லது உருவாக்கிக் கொள்ளப்படும் பொருள் அனைத்தையும் குறிப்பதாகும். புழங்குபொருட்கள் பொருள்சார் பண்பாட்டினுள் அடங்குகின்றன. மருத்துவ இனமக்களிடம் காணப்படும் புழங்குபொருட்களை இரண்டாக வகைப்படுத்தப் பட்டுள்ளது. அவை,

1. வீட்டு உபயோகப் புழங்குபொருட்கள்
2. தொழிற்கள் புழங்குபொருட்கள்

என்பனவாகும்.

### வீட்டு உபயோகப் புழங்குபொருட்கள்

பழந்தமிழர்கள் தங்கள் வீட்டிற்குத் தேவையானப் பொருட்களை மண்ணாலும், மரத்தினாலும், நார்பொருட்களாலும், ஓலையினாலும், கல்லினாலும் செய்து பயன்படுத்தி வந்துள்ளனர். மருத்துவ இனமக்கள் பிற இனமக்களைப் போன்று பல்வேறுப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். ஆரம்பகாலத்தில் இவர்கள் அதிகமாக மண்பாண்டங்களிலேயே உணவுகளைச் சமைத்து உண்டனர். எனவே சோற்றுப்பானை, தண்ணீர்பானை (மண்குடம்), புளிப்பானை, உப்புப்பானை (உப்பு மரவை) முதலிய பானைகளைப் பயன்படுத்தியுள்ளனர். அதேப்போன்று குழம்புகள் சமைப்பதற்கு மீன்சட்டி, கிழங்குசட்டி, கறிச்சட்டி, மோர்சட்டி முதலிய சட்டிகளையும் பயன்படுத்தியுள்ளனர். இன்றும் மீன்குழம்பினை மண்சட்டியில் வைத்து சமைப்பதைக் காணமுடிகின்றது. மண்சட்டியில் மீன் சமைத்து உண்டால் நல்ல சுவையாக இருக்கும் என்று கூறுகின்றனர்.

உலோக பாத்திரங்களாக விலையுயர்ந்த கும்பாசட்டி, வட்டில், தழுவை, தாலம், கிண்ணம், வெற்றிலை தாம்பாளம் ஆகியவைகள் மருத்துவ இனமக்களிடம் அதிகமாகக் காணப்படவில்லை.

மரத்தினால் செய்யப்பட்டப் பொருட்களாக வீட்டின் கதவுகள் (முற்காலத்தில் மூங்கில்களால் கதவுகள் அமைத்து கொண்டதாகச் சில தகவலாளிகள் கூறினர்) ஜன்னல்கள், மசாலாப்பெட்டி, மரப்பெட்டி, ஏணி, உலக்கை, அரச்சவப்பெட்டி, மூங்கில் புட்டுக்குழல், சோத்து மரவை, குறுங்கட்டி ஆகியவைகளை மருத்துவ இனமக்கள் பயன்படுத்துகின்றனர்.

ஓலைப்பொருட்களை இவர்கள் தங்கள் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொண்டனர். தென்னை ஓலையினைக் கீற்று பின்னி வீடுகட்டவும், கிடுகு செய்து வேலிகளை அமைக்கவும், உறியினை வைப்பதற்கும் பலவிதங்களில் செய்து பயன்படுத்துகின்றனர். மேலும் பனை ஓலைகளைப் பயன்படுத்தி ஓலைப்பெட்டி, மிட்டாய்பெட்டி, உரப்பெட்டி, ஈக்காம்பெட்டி, வெற்றிலைப்பெட்டி, கடவப்பெட்டி முதலிய பெட்டி வகைகளையும் பயன்படுத்தியுள்ளனர்.

நெல் குத்துவதற்குப் பயன்படுத்துகின்ற உரல், ஆட்டுரல், திரிகல் முதலிய கற்களினால் செய்யப்பட்ட பொருட்களின் பயன்பாடு இவர்களிடத்தில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. வெட்டுக்கத்தி, அருவாமனை, திருவல் முதலியவைகளையும் பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது. தற்போது எல்லா இனமக்களைப் போன்று பல்வேறு விதமான புழங்குபொருட்களைப் பயன்படுத்துகின்றனர்.

### தொழிற்கள் புழங்குபொருட்கள்

தொழிற்கள புழங்குபொருட்களில் தொழில் சார்ந்த கருவிப்பொருள்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மருத்துவ இனமக்கள் தற்போது அதிகமாகச் சிகையலங்காரத் தொழில் மற்றும் இசைத்தொழிலும் செய்து வருகின்றனர். அத்தொழில்கள் சார்ந்த புழங்கு பொருட்கள் பற்றிய குறிப்புகள் இதுவரை வெளிவரவில்லை. அவற்றை வெளிக் கொணர்வதன் மூலம் மரபு வழித் தொழிற் கருவிகளை இளம்தலைமுறையினர் அறிவதற்கு வாய்ப்பாக அமையும்.

## சிகையலங்கார தொழில் கருவிகள்

சிகையலங்காரத் தொழில் கருவிகளாகச் சீப்பு, கண்ணாடி, கத்திரி, கத்தி, தீட்டுக்கல், வார், மிஷின், படிகாரம், துப்புக்கட்டை, வெள்ளைத் துணி, பம்பு, சேவிங் பிரஷ், சேவிங் சோப்பு முதலியவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

### சீப்பு

சீகையலங்காரம் செய்வதற்கு மிகவும் உதவியாக இருப்பது சீப்பு. இஃது முடியினை ஒழுங்குபடுத்தவும், முடியினை ஒரே அளவாக வெட்டுவதற்கும் அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் பலவிதமானச் சீப்புகளைப் பயன்படுத்துவதைக் காண முடிகின்றது. குறிப்பாகச் சுருள் சீப்பு, ரவுண்ட் சீப்பு, பெரிய சீப்பு, சிறிய சீப்பு எனப் பல்வேறு வடிவங்களில் பயன்படுத்துகின்றனர். முற்காலத்தில் மரத்தினால் ஆன சீப்புகளைப் பயன் படுத்தியுள்ளனர்.

### கண்ணாடி

மருத்துவர்கள் முகம் மற்றும் தலையினை அலங்காரம் செய்யும்போது வாடிக்கையாளர் தங்கள் அழகினைப் பார்ப்பதற்குக் கண்ணாடியினைப் பயன்படுத்துகின்றனர் முற்காலத்தில் ஊர் வேலைச் செய்யும்போது கையில் சிறிய அளவிலானக் கண்ணாடியினை எடுத்து செல்வது வழக்கம். சில நேரங்களில் ஆதிக்கச் சாதியினர் தங்கள் வீட்டில் உள்ள கண்ணாடியினை எடுத்து வந்து தங்கள் முகத்தையும் பார்த்துக் கொள்வதும் உண்டு. தற்போது சலூன் கடைகளில் பெரிய அளவிலான இரண்டு மூன்று கண்ணாடிகளைப் பயன்படுத்துகின்றனர். இஃது வாடிக்கையாளரின் முன் அழகினை மட்டுமின்றிப் பின்னழகினையும் பார்த்துக் கொள்ளும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

### கத்திரி

சிகையலங்காரம் செய்வதற்கு சீப்பினைப் போன்று கத்திரியும் முக்கியமானதாகும். இஃது முடியினைக் கத்திரிப்பதற்குப் பயன்படுகின்றது. இக்கத்திரியினை வாரத்திற்கு ஒரு முறை நன்கு தீட்டுகின்றனர். இவ்வாறு தீட்டுவதைச் 'சாணைப்பிடித்தல்' என்று கூறுவர். கத்திரி நன்கு வெட்டினால் தான் வேலை எளிதில் முடியும். இல்லையென்றால் கைவலி



ஏற்பட்டு வேலை முடிவதற்குத் தாமதமாகும். எனவே அதனை நன்கு வெட்டுமாறுச் சாணைப் பிடித்து வைத்திருப்பர். முடியினைக் கத்திரிப் பதற்குச் சின்ன கத்திரி, பிடிக்கத்திரி, பல் கத்திரி, என்று பலவிதமான கத்திரிகளைப் பயன்படுத்துகின்றனர். பல் கத்திரி முடி அடர்த்தியாக வளர்த்திருந்தால் அதன் அடர்த்தியினைக் குறைப்பதற்கு பயன்படுத்துகின்றனர். இஃது பார்ப்பதற்குப் பல்போன்று இடைவெளிகள் காணப்படும்.

**கத்தி**

இஃது முற்காலத்தில் முகத்தை அழகுபடுத்துவதற்கு அதாவது சேவிங் பண்ணுவதற்கு அதிகமாகப் பயன்படுத்தினர்.



இஃது உருக்கினால் செய்யப் பட்டது. இதனை நன்கு தீட்டி பிளைடு போன்ற பருவத்தில் வைத்திருப்பர். தற்போது இக்கத்தியின் பயன்பாடு காண்பதற் கில்லை. இதற்குப் பதிலாகத் தற்போது பிளைடு கத்தியினைப் பயன்படுத்துகின்றனர். இக்கத்தியானது மடக்கி வைத்துக் கொள்ளும் விதத்தில் காணப்படும். முற்காலத்தில் ஊர் வேலையின் போது இரண்டு அல்லது மூன்று கத்திகளை வைத்திருப்பர். அதில் ஒரு கத்தி முகத்தை மழிப்பதற்கும், இன்னொன்று கை அக்குள் பகுதியில் உள்ள மயிரை மழிப்பதற்கும் பயன்படுத்தினர். ஒரு கத்தியினைத் துணையாக வைத்திருப்பர். தற்போது இவை எல்லாவற்றிற்கும் ஒரே கத்தியையேப் பயன்படுத்துகின்றனர். இன்றும் பேச்சு வழக்கில்,

***வேலையில்லாத அம்பட்டன் கத்தியையும் கல்லையும்***
***தூக்கிட்டு எருமை மாட்டைச் செரச்சானாம்***

என்ற பழமொழி இவற்றை அடிப்படையாகக் கொண்டதே. முகத்தை மழிப்பதற்குக் கத்தியும், தீட்டுக்கல்லும் மிக முக்கியமாக இருந்தது என்பது புலனாகிறது. இன்று பழைய கத்தியினை மருத்துவர்கள் காய்கறி வெட்டுவதற்கும், வெற்றிலைப் பாக்கு வெட்டுவதற்கும், ஓலையிலிருந்து ஈக்கு எடுப்பதற்கும் பயன்படுத்துவதைக் களஆய்வில் காண முடிந்தது.

**தீட்டுக்கல்**

இதனைச் சாணைக்கல் என்றும் கூறுவதுண்டு. கத்தியினைச் சவரம் செய்ய தயார் செய்வதற்கு இக்கல்லில் தீட்டுகின்றனர். தீட்டும் போது கல்லில் தேங்காய் எண்ணெயினைத் தடவிக் கொள்வது வழக்கம். தீட்டுக் கல்லில் தீட்டும்போது கத்தி நல்ல பருவமாக (கூர்மையாக) இருக்கும். இக்கல்லானது பார்ப்பதற்குக் கருமையாக நடுவில் குழிந்தும் இரு பக்கம் உயர்ந்தும் காணப்படும். இதனைக் கவிஞர் தய். கந்தசாமி (2002:56),

> ***"பரம்பரை உழைப்பில்***
> ***பழைய அம்மியாய்***
> ***சாணைக்கல்"***

என்று சாணைக்கல்லின் வடிவத்தினைக் குறிப்பிடுகிறார். தற்போது பிளேடு கத்தியின் வருகையினால் சாணைக்கல்லின் பயன்பாடுகள் தேவையில்லாமல் போய்விட்டது.

**வார்**

கத்தியினைச் சாணைக்கல்லில் தீட்டிய பின்னர் அதனை மாட்டுத்தோலில் தேய்க்கின்றனர். அத்தோலினை 'வார்' என்று கூறுகின்றனர். கத்தியினைத் தோலில் தேய்க்கும்போது கத்தி நன்கு சூடாகும். சவரம் செய்வதற்கானப் பருவம் வரும்வரை தோலில் அடிக்கின்றனர். பருவமானது கை விரலினால் தடவிப் பார்த்து தெரிந்துக் கொள்வர். பருவம் சரியாக இருந்தால் சவரம் செய்வர். இல்லையெனில் மீண்டும் தோலில் தேய்ப்பார்கள். இத்தோலானது ஒரு முழம் நீளமுடையதாக இருக்கும். அதனைச் சுவரில் தொங்கவிட்டு தேய்ப்பார்கள். தோலில் கத்தியினைத் தேய்க்கும் பகுதி மிகவும் வழுவழுப்பாக இருக்கும்.

**மிஷின்**

முடியினை நீளம் குறைவாக எளிதில் வெட்டுவதற்கு மிஷினைப் பயன்படுத்துவர். இம்மிஷின் கையினால் இயக்கும் விதத்தில் இரு கைப்பிடிகளுடன் அமைந்திருக்கும். கைப்பிடிகளை அழுத்தும்போது முடியினை வெட்டும் வகையில் அமைந்திருக்கும். இம்மிஷினைத் தற்போது வயதானவர்கள் மட்டும் பயன்படுத்துவதைக் காண முடிகின்றது. போலீஸ் வெட்டு வெட்ட இவ் மிஷின் பெரிதும் பயன்படுகிறது.



தற்போது மின்சாரத்தின் உதவியுடன் முடியினை கத்தரிக்கும் மிஷின்கள் வந்துள்ளமையால் இதனுடைய பயன்பாடு குறைந்துவிட்டது.

**படிகாரம்**

முகத்தை மழித்தப்பின்பு காணப்படும் சிறுசிறு வெட்டுக்காயங்கள் எளிதில் குணமடைவதற்கும், அதிலுள்ள விஷத்தன்மை மாறுவதற்கும் படிகாரத்தைப் பயன்படுத்துகின்றனர். இஃது தற்போதும் சில இடங்களில் வழக்கில் காணப்படுகின்றது. இதற்குப் பதிலான நவீன லோஷன்களைப் பயன்படுத்துகின்றனர்.

**தூரப்புக்கட்டை**

சலூன் கடைகளில் தலை மற்றும் முகத்தினை அழகுபடுத்தும்போது முடிகள் கீழே அதிகமாக விழுகின்றன. அம்முடிகளைச் சுத்தம் செய்து அப்புறப்படுத்த தூப்புக்கட்டைப் பயன்படுகிறது. இஃது சுதம்பையின் முடிகளினால் செய்யப்பட்டதாகும். இதில் சுத்தம் செய்யும்போது முடிகள் முழுமையாக வந்துவிடுவதாகக் கூறுகின்றனர். தற்போது நவீன நைலான் முடிகளினால் ஆன தூப்புக்கட்டைகளைப் பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது.

**துணிகள்**

ஊர் வேலைச் செய்யும்போது ஆதிக்கச் சாதிகளின் வீடுகளுக்குச் சென்று சிகையலங்காரம் செய்வது வழக்கம். அப்போது அவர்களின் மீது முடி படாமல் இருக்க துணிகளால்

மூடும் வழக்கம் இல்லை. ஆதிக்கச் சாதியினர் விருப்பப்பட்டால் துணிகளால் உடலை மூடிக் கொள்ளலாம். சலூன் கடைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், முடி வாடிக்கையாளரின் மீது படக்கூடாது என்பதற்காகச் சிறிய துண்டு அல்லது வெள்ளைத் துணிகளைப் பயன்படுத்தலாயினர்.

## பம்பு

முடியினைச் சரியாக வெட்டுவதற்கு முதலில் ஈரப்படுத்துகின்றனர். அவ்வாறு ஈரப்படுத்துவதற்கு ஏர் பம்பு அல்லது பிரஸ் பம்புகளைப் பயன்படுத்துகின்றனர். ஊர்க்குடிமகனாகப் பணிச் செய்யும்போது கையினால் தண்ணீர் எடுத்துத் தடவுவார்கள். நவீன வளர்ச்சியின் காரணமாகத் தற்போது ஸ்பிரை பம்பினைப் பயன்படுத்துகின்றனர்.

## சேவிங் பிரஷ், சோப்பு

முகத்தினை மழிப்பதற்கு முதலில் சோப் நுரையினைப் பிரஷ் மூலம் உருவாக்கி தடவுகின்றனர். பிரஷ் முற்காலத்தில் குதிரையின் முடியினால் செய்யப்பட்டிருந்ததாகக் கூறுகின்றனர். தற்போது நைலான் நரம்புகளால் செய்யப்பட்ட பிரஷ்களே அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இஃது சோப்பு நுரையினை முகத்தின் எல்லா பகுதிகளிலும் ஒழுங்காகத் தடவுவதற்குப் பயன்படுகின்றது. இவ்வாறு சோப்பு நுரையினைத் தடவினால் முடி மழிக்கும் போது எளிதாகக் கஷ்டமின்றி வரும் என்பதால் அவ்வாறு செய்வதாகக் கூறுகின்றனர். முற்காலத்தில் சோப்பினைக் கையினால் தடவி அல்லது நுரை மட்டும் தடவி முகம் மழிப்பதுண்டு. தற்போது சோப்புக்குப் பதிலாக நவீன கிரீம்களைப் பயன்படுத்துகின்றனர்.

### இசைத்தொழில் கருவிகள்

மருத்துவர்கள் இசைத்தொழில் செய்வதற்குப் பல்வேறு விதமான கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் மரபுவழியாக இத்தொழிலைச் செய்து வருகின்றனர். இவ்விசையினை இரண்டாகப் பாகுபடுத்துகின்றனர். 1. பெரிய மேளம், 2. நையாண்டி மேளம் என்பனவாகும்.

1. **பெரிய மேளம்:** இஃது திருமணத்தின்போது அதிகமாக வாசிக்கின்றனர். இதற்கு இரண்டு நாதசுரக் கலைஞர்களும், இரண்டு தவில் கலைஞர்களும் ஓர் ஒத்து வாசிப்பவரும் செல்கின்றனர்.

2. **நையாண்டி மேளம்:** இஃது கோயில் திருவிழா மற்றும் நிகழ்த்துக் கலைகள் நடைபெறும் போதும் அதிகமாக வாசிக்கின்றனர். இரு நாதசுரக் கலைஞர்களும், இரு தவில் கலைஞரும், இரு பம்பை கலைஞரும் முதன்மையாகச் செல்கின்றனர்.

தொழிற் கருவிகளாக நாகசுரம், தவில், தாளம் (ஜால்ரா) ஒத்து அல்லது சுதிப்பெட்டி ஆகியவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

**நாகசுரம்**

தமிழகத்திற்குத் தனிச்சிறப்பு நல்கும் இசைக் கருவிகளுள் நாகசுரம் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. இக்கருவியினை நாதசுரம், நாதஸ்வரம் என்றும் மக்கள் கூறுவர். இக்கருவியின் ஓசை கனமுள்ளதாகவும், ஒலி பெருக்கியின் துணையின்றி நீண்ட தூரம் கேட்கும் ஆற்றலுடையதாகவும் இருக்கும். பழங்காலத்தில் இதனை நெடுவாத்தியம் என்று குறிப்பிட்டுள்ளனர். நாதசுரம் 'ஆச்சா' என்னும் ஒருவகை மரத்தினைக் கடைந்து குழலாக்கிச் செய்யப்படும் துளைக்கருவி ஆகும். நாதசுரத்தின் மேல் பாகம் சிறிதாகவும்



அடிப்பாகம் வரவரச் சற்றுப் பெருத்தும் காணப்படும். இக்கருவியின் மேலும் கீழும் இரண்டு 'அணைசு'கள் பொருத்தப்பட்டிருக்கும். முன்பு இந்த அணைசுகள் வெண்கலத்தினால் செய்யப்பட்டிருந்தன. இப்போது மரத்தால் செய்யப்படுகின்றது. இந்த அணைசில் செருகி, உதட்டினை வைத்து வாசிப்பதற்குச் 'சீவாளி' என்ற ஒன்றைப் பயன்படுத்துகின்றனர். சீவாளியை 'நறுக்கு' என்றும் குறிப்பிடுவர். நறுக்குத்தட்டையை (ஓலை) சுமார் ஐந்து செ.மீ நீளத்திற்கு வெட்டி நெல்லினை வேக வைக்கும் போது இதனையும் சேர்த்து வேகவைத்து பதப்படுத்துவர். பின் கிட்டிப் பலகையில் கொடுத்து நன்கு நெருக்கி, ஈரம் உலர்ந்த

பின் நூலினால் இறுகக்கட்டி தயார் செய்வதே சீவாளியாகும். நாதசுரத்தின் ஓசை வேறுபாட்டிற்கு இதுவே காரணமாகும்.

வெறும் சீவாளியினை மட்டும் வைத்து வாசிக்க முடியாது. அணைசிற்கும், சீவாளிக்கும் இடையே 'கெண்டை' என்ற பகுதி அமைந்திருக்கும். இது செம்புத் தகட்டினால் ஒரு அங்குலம் நீளத்தில் மேல் பாகத்தை விட அடிப்பாகம் சற்று விரிந்திருக்கும்படி குழாய் செய்து அதன் இருநுனிப்பகுதியிலும், தேங்காய் ஓட்டினால் செய்த வளையத்தை வைத்து சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும். இவ்வாறான கொண்டையானது அணைசோடு பொருத்தப் பட்டிருக்கும். இக்கொண்டையின் மேல் சீவாளியைச் செருகிவைத்து வாசிக்கின்றனர். சிலர் சீவாளியினைத் தாங்களாகவே செய்து கொள்வதும் உண்டு. வாசிக்கும்போது உதட்டில் அழுத்தினால் சீவாளியின் வாய் பகுதி ஒட்டிக் கொள்வதும் உண்டு. அதனைக் 'குச்சில்' என்று சொல்லப்படும் ஊசியினால் திறந்து கொள்வார்கள். நாதசுரத்தின் உடலின் மேல்பகுதியில் சமசீரான இடைவெளியில் ஏழு துளைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஏழு துளைகளின் மூலமாக ஏழு சுரங்களும் எழுப்பப்படுகின்றன. இத்துளைகள்ள அடுத்து சிறிது தள்ளி ஒரு துளையும் அதன் பக்கவாக்கில் பக்கத்திற்கு இருதுளைகள் வீதம் அமைக்கப்பட்டிருக்கும்.

இதன்கீழ் அணைசு வட்ட வடிவத்தில் கிண்ணம் போல அமைந்திருக்கும். இதன் வாய் விரிந்து இருப்பதால் நாதசுரத்தின் ஒலி நெடுந்தூரம் கேட்கின்றது. நாதசுரம் வாசிப்பது கஷ்ட சாத்யமானது. பெரிய நாதசுரம் 'பாரி வாத்யம்' எனவும் சாதாரண அளவிலுள்ள நாதசுரம் 'திமிரி' எனவும் வழங்கப்படுகிறது. நாதசுர கோஷ்டியைப் 'பெரிய மேளம்' என்று சொல்வதுண்டு. நாதசுர கோஷ்டியில் பங்கு கொள்பவர்கள், நாதசுரவித்வான், ஒத்து ஊதுபவன், தவில் வாசிப்பவன், தாளம் தட்டுபவன் முதலியோராவர். சில சமயங்களில் இரண்டாவது நாதசுரமும், தவிலும் கூட இருப்பதுண்டு. தமிழ்நாட்டின் மங்கள வாத்தியம் நாதசுரமே. நாதசுரம், நாணயம் என்ற பெயர்களில் இந்த வாத்தியம் குறிப்பிடப்படுகிறது என்பதாகக் கிருஷ்ணன் (2001:45) குறிப்பிடுகிறார். இக்கலையினை இவர்கள் குருகுல கல்வி முறையிலே முன்பு கற்றுக் கொண்டதாகக் குறிப்பிடுகின்றனர்.

தற்போது மூன்றாண்டுச் சான்றிதழ் படிப்பு முறையில் தமிழகத்தில் ஒருசில இடங்களில் கற்றுக் கொடுக்கின்றனர். தற்போது நாதசுரத்தை இசுலாமியர்களும், அந்தணர்களும் கற்றுக் கையாண்டு வருகின்றனர்.

நாதசுரத்தை வாசிக்கும்போது இடக்கை மேலும், வலக்கை கீழும் வைத்து வாசிப்பது மரபாகக் கருதுகின்றனர். வலக்கை மேலும் இடக்கை கீழும் வைத்து வாசிப்பவர்களும் உண்டு. சீவாளியை உதட்டில் வைத்து காற்றினை வாத்தியத்தினுள் செலுத்தப்படுகிறது. அதே சமயத்தில் கை விரல்கள் சுரத்துளைகளைத் தேவைக்கு ஏற்ப மூடியும் திறந்தும் ஒலி எழுப்பி வாசிக்கின்றனர். இந்த நாதசுரத்தின் நீளம் இரண்டரையடி (2 ½) ஆகும்.

**தவில்**

இது மிகப்பழமையான தோல் இசைக்கருவி என்று பஞ்சமரபு என்ற இசைநூல் குறிப்பிடுகிறது. இதன் நடுப்பகுதி பீப்பாய் போன்ற வடிவத்தில் இருக்கும். அது பலா, வேங்கை மரத்தினைக் குடைந்து பீப்பாய் போன்று செய்யப்பட்டுள்ளது. இதன் இரு வாய்ப்பகுதியும் மாட்டின் தோல் அல்லது கன்றின் தோலைப் பதப்படுத்தி மூடப் பட்டிருக்கும்.



இந்த இரு தோலையும் இறுக்கமாக வைப்பதற்கு முன்பு தோல் வாரினைப் பயன்படுத்துகின்றனர். இப்போது இரும்பு பட்டையின் மூலம் இறுக்கமாக்குகின்றனர். இதில் ஒரு வாய் சிறியதாகவும் மறுவாய் பெரியதாகவும் இருக்கும். பெரிய வாய் மிதமான தன்மை கொண்ட ஒலியும். சிறிய வாய்ப் பகுதி கடினமான ஒலியினையும் எழுப்புகின்ற தன்மை கொண்டதாக உள்ளது. இதனைத் தோளில் போடுவதற்குத் துணியினால் ஆன 'கச்சை'யினைப் பயன்படுத்துகின்றனர். இதனை வாசிக்கும்போது இடதுபுறத்தைக் கையாலும் வலதுபுறத்தைக் கம்பினாலும்

அடிப்பர். உச்ச ஒலியினை எழுப்பும்போது இருபுறமும் கம்பினால் அடிப்பதும் உண்டு. இதன் எடை சுமார் 22 கிலோ இருக்குமாம். இதனைத் தோளில் சுமந்துக் கொண்டே அடிக்க வேண்டும். இவர்கள் தொழில் செய்யும் இடத்திற்கு ஏற்ப அடிக்கின்ற இசையும் மாற்றம் பெறுகின்றது.

***பம்பை***

இரண்டு தோல் கருவிகள் ஒன்றாக வாசிக்கப்படுவது பம்பை ஆகும். இதனை அசுரவாத்தியம் என்றும் கூறுகின்றனர். ஒரே மாதிரியான இரண்டு தோலிசைக் கருவிகள்; இவற்றில் ஒன்றின் உடல் பகுதி மரத்தாலும், இன்னொன்றின் உடல்பகுதி பித்தளையாலும் செய்யப் பட்டிருக்கும். மரத்தினால் செய்யப்பட்டது பெண் பம்பை என்றும், உலோகத் தால் செய்யப்பட்டது ஆண் பம்பை என்றும் சில இடங்களில் அழைக்கப்படுகின்றன. பெண் பம்பையின் மேல் ஆண் பம்பை வைக்கப்பட்டிருக்கும். அங்காள பரமேஸ்வரி வழிபாடானது இக்கருவியுடன் தொடர்புடையது. கொடிய அரக்கனைக் கொன்று அவன் தோலை உரித்து அம்மனால் உருவாக்கப்பட்டது இவ்விசைக் கருவி என்ற கதை ஆனைமலைப் பகுதி செம்படவர்களிடம் வழக்கிலுள்ளது என்று பெருமாள், இராமச்சந்திரன் (2001,457-458) ஆகியோர் குறிப்பிடுகின்றார்கள். பெண் பம்பையினை 'மந்தம்' என்றும், ஆண் பம்பையினை 'விராணம்' என்றும் கூறுகின்றனர். ஆண் பம்பையைப் 'பலா' மரத்தினைக் குடைந்து செய்து வைத்திருப்பர். இதன் நீளம் 24 விரல் ஆகும். இதில் இருவாய்ப் புறங்களிலும் கன்றுக் குட்டியின் தோலினைப் பதப்படுத்திப் பொருத்தப் பட்டிருக்கும். இந்தத் தோலினை இறுக்கமாக வைப்பதற்கு ஒன்பது வார்களும் பயன்படுத்துகின்றனர். தோலின் விட்டம் ஏழு விரல் ஆகும். பெண் பம்பையான மந்தம் உலோகத்தினால் ஆனது. இதன் வாய்ப்பகுதி ஆட்டின் தோலினால் பொருத்தப்பட்டுள்ளது. இதன் விட்டத்தின்



அளவு பதினொன்று விரல் ஆகும். இந்தத் தோலினை இறுக்குவதற்கு பதினொன்று வார்களைப் பயன்படுத்துகின்றனர். இதனை கம்பினைப் பயன்படுத்தி வாசிக்கின்றனர். கம்பு சிறியதாகவும் முனைப்பகுதி சிறிது வளைந்தும் காணப்படும்.

***சமயம்***

பண்டைக்காலம் தொட்டே மனிதனிடம் சமய உணர்வுகள் இருந்து வருகிறது. தன்னைச் சுற்றியுள்ளவைகளைப்பற்றியும் தனக்கு அப்பாற்பட்ட ஆற்றலைப்பற்றியும் மனிதன் அறிய ஆசைப்பட்டதன் விளைவாக்ச் சமயமானது உருப்பெற்றது. சமயம் என்பதற்கு நேராக 'Religion' என்ற சொல் இரு பொருளில் வழங்கப்படுகின்றது. ஒன்று குறி சொல்ல அதாவது இறைவனின் திருவுள்ளத்தினை அறிவதற்குச் சில நிகழ்ச்சிகளையும் சாட்சிகளையும், அடையாளமாகக் கொள்வது என்று பொருள் மற்றொன்று இறைவனுடன் ஒன்றுபடுத்துவது அல்லது மீண்டும் பிணைப்பது என்று சாந்தி (2002:138) குறிப்பிடுகிறார். இவ்வுலகில் தெய்வத் தன்மை வாய்ந்தது ஒன்று உண்டு என்பது கருதி அதனுடன் தொடர்பு கொண்டுத் தனித்தனியாக மனிதன் அடையும் உணர்ச்சியும், நடத்தும் செயல்களுமே சமயமாகும் என்று ஞானசேகரன் (2002:5) குறிப்பிடுகிறார்.

சமயத்தின் தோற்றம் தெரிந்துக்கொள்ள முடியாத் மறைப்பொருளாகவே உள்ளது. இதனைக்குறித்து மிகுந்த கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. சமயத்தின் மிகப் பழைய உருவம் இயற்கையின் ஆற்றல்களின் வழியே அமைந்திருந்தது எனவும் வைத்துக் கொள்ளலாம். விலங்குநிலை உணர்வினின்றும் மனிதன் முதலில் உயரும்போது தன்னைச் சூழ்ந்திருக்கும் வலியுள்ள ஆற்றல்களின் மீது முழுமையாக சார்ந்திருப்பதை உணர்கின்றான். எனவேதான் தன்னைச் சூழ்ந்திருக்கும் ஆற்றல்களுக்கு பெயரினையும் வைத்துக் கொண்டான். அவை இந்து சமயம், கிறிஸ்தவ சமயம், இசுலாம் சமயம், பௌத்த சமயம் என்று பெயர் பெற்று தங்களுக்கென ஒரு கடவுளையும் பெற்றுக் கொண்டன.

இன்று இந்தியாவில் முதன்மையானச் சமயங்களாக இந்து கிறிஸ்தவம் மற்றும் இசுலாமிய சமயங்கள் காணப்படுகின்றன. மருத்துவ இன மக்கள் இம்மூன்று சமயங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றனர்.

## இந்து சமயம்

இந்து என்ற சொல்லானது கி.பி. 1962-ல் தான் பயன்பாட்டிற்கு வந்ததுள்ளது என்று ஆங்கில மொழி அகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐரோப்பியர்கள் வருகைக்கு முன்பு இந்து என்ற

சமயமே இல்லை. பௌத்தம், வைணவம், சைவம் என்று மூன்று விதமான சமயங்கள் விரவிகாணப்பட்டன. ஐரோப்பியர்கள் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்போது சமயம் பற்றிய முழுமையான அறிவு மக்களிடம் காணப்படாததால் பௌத்தம், கிறிஸ்தவம் தவிர்த்து மீதியுள்ள அனைவரையும் இந்து என்று பெயரிட்டனர். இதனையே தெய்வநாயகமும், சுப்பிரமணிய பிள்ளையும் (1977:89) ஐரோப்பியர்கள் இந்தியாவில் வந்தபோது இங்கு பல்வேறு மதங்கள் இருப்பதை அறியாத காரணத்தால் எல்லாம் ஒரே மதம் என்று எண்ணி அதற்கு 'இந்து மதம்' என்று பெயர் கொடுத்துவிட்டார்கள். ஆனால் இந்து மதம் என்ற சொல் தமிழ் இலக்கியத்திலும் சமஸ்கிருத இலக்கியத்திலும் இல்லாத சொல் என்று குறிப்பிட்டுள்ளனர்.

இதனைக் கலைஞர் இஸ்லாம், கிறிஸ்தவம், பவுத்தம் அல்லாத மக்களைப் பொதுவாக இந்துக்கள் என்று பெரளவில் சொல்லுவதைக் தவிர அந்த 'இந்து' என்பது சமுதாயப் பெயரா? இனப்பெயரா? மதப்பெயரா? என்பதற்கு யாதொரு விளக்கமும் இல்லை! இந்து என்றால் இந்தியன் என்ற வார்த்தையின் சுருக்கச் சொல் என்பதல்லாமல் அதற்கு வேறு கருத்து எதுவுமில்லை. பவுத்தம், கிறிஸ்தவம், இசுலாம் முதலிய மதங்களுக்கு மத கர்த்தாக்களின் பெயர்கள் இருக்கின்றன. சைவம், வைணவம் என்னும் மதங்களுக்குச் சிவன், விஷ்ணு என்ற மதக்கடவுள்களின் பெயர்கள் இருக்கின்றன. வைதீக மதம், ஸ்மார்த்த மதம் என்பவற்றுக்கு வேதம், ஸ்மிருதி என்ற நூல்கள் இருக்கின்றன. மதகர்த்தாக்கள் பெயர் இல்லாமல், கடவுள் பெயர் இல்லாமல், சம்மந்தப்பட்ட நூல்கள் இல்லாமல் குறிப்பிடத்தகுந்த ஆதாரம் இல்லாமல் ஒரு மதம் இருக்கிறது; அதுதான் இந்துமதம் என்றால் அந்த இந்து என்ற சொல் மதத்தைக் குறிப்பதாக யார்தான் ஒப்புக் கொள்ள முடியும்? (1995: 10, 11) என்று விதந்துரைக்கிறார்.

இந்து சமயத்தில் மருத்துவ இனமக்கள் இன்னும் பழமைத் தன்மையுடனே உள்ளதைக் காணமுடிகின்றது. இவ்வின மக்களிடம் பெருந்தெய்வ வழிபாடும், சிறுதெய்வ வழிபாடும் காணப்படுகின்றது. சமுதாயத்தில் உயர்ந்தோர், தாழ்ந்தோர், மேலோர், கீழோர், பெரியவர், சிறியவர் முதலிய பாகுபாடுகள் தோன்றி வளர்ந்ததைத் தொடர்ந்து, மனிதன்தனது நிலைமையைப் பிரதிபலிப்பது போலத் தெய்வங்களும் பெருந்தெய்வம், சிறுதெய்வம் எனப் பகுக்கப்பட்டன என்கிறார் கைலாசபதி (1966:49). இன்று பெருந்தெய்வம் என்று கூறப்படுபவை வசதி வாய்ப்புப் பெற்ற கோயில்கள், அதற்கென தனிச்சொத்துக்கள், சலுகைகள், புராணங்கள், பூசாரியாகப் பிராமணன் இருத்தல், உயிர்ப்பலி இல்லாத நிலை முதலிய தன்மைகளுடன் காணப்படுகின்றன. இவ்வின மக்கள் சிவன், முருகன், விநாயகர், கிருஷ்ணன், சனீஸ்வரன், சாஸ்தா முதலிய பெருந்தெய்வங்களை வழிபடுகின்றனர்.

பெருந்தெய்வ வழிபாட்டில் முதல் முதற் கடவுளாகக் கருதப்படுபவர் விநாயகர். ஆனால் விநாயகர் வழிபாடு பல்வர்கள் வாதாபியைக் கி.பி.700-இல் வென்றப் பிறகே பிள்ளையார் வழிபாடு தமிழகத்தில் தோன்றியதாகக் கருதப்படுகின்றது (1986:vi:215). இன்று விநாயகர் வழிபாடு பெருந்தெய்வ கோயில்களில் மட்டுமின்றிச் சிறு தெய்வ கோயில்களிலும் காணப்படுகின்றது.

இன்று அனைவரும் பயத்தினால் வழிபடுவது சனீஸ்வரர் வழிபாடாகும். 'சனியைப்போல் கொடுப்பாருமில்லை, சனியைப்போல் கெடுப்பாருமில்லை' என்ற பழமொழியினால் சனி ராசி நல்லதாகவும், கெட்டதாகவும் அமையும் என்பதை அறிந்து கொள்ளலாம். ஒன்பது கோள்களில் ஒன்றாகச் சனி இருந்து வருகின்றது. இதனை நீலன், சனி, சனி பகவான் என்று அழைப்பார் (1986, viii:709) சனியினால் பாதிக்கப்பட்டவர்கள் திருநள்ளாற்றில் வழிபட்டால் நன்மையுண்டாகும் என்று நம்புகின்றனர். இதற்கு இவ்வின மக்களும் விதிவிலக்கில்லை.

இவ்வின மக்கள் பெரும்பாலும் பெருந்தெய்வக் கோயில்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வழிபடச் செல்லுவதைக் கள ஆய்வின்போது காண முடிகின்றது. இவர்கள் புரோகிதர்கள் ஆகவும், பூசாரியாகவும் இருந்த வம்சவழியினர் என்பதால் அதிக

ஈடுபாட்டுடன் பெருந்தெய்வக் கோயில்களுக்குச் செல்லு கின்றார்கள் என எண்ணத் தோன்றுகின்றது.

சிறு தெய்வ வழிபாடானது பாமர மக்கள் தாங்களாகவே பூசைச் செய்து வழிபடுவது ஆகும். சிறு தெய்வங்கள் என்பவை பெரும்பாலும் கோயில் அமைப்பின்மை, பாமர மக்களின் நம்பிக்கை அடிப்படையிலான வாழ்வியல் மரபுகள், பாமர மக்களே பூசாரியாக இருத்தல், பொருளாதாரத்தில் கீழ் நிலையில் உள்ளவர்களே வழிபடுதல் ஆகிய தன்மைகளைப் பெற்றவையாகும் என்று திருநாகலிங்கம் (2001, i:166) குறிப்பிடுகிறார். இவ்வின மக்கள் முத்தாரம்மன், பத்திரகாளி, இசக்கி, சுடலைமாடன், வண்ணார் மாடன், வாதை முதலிய சிறு தெய்வங்களை வழிபடுகின்றனர்.

சிறு தெய்வ வழிபாட்டில் பெண் தெய்வங்களில் பத்திரகாளி மிகவும் முக்கியமாகக் கருதப்படுகின்றது. காளியானவள் பராசக்தியின் உடலிலிருந்து தோன்றியதால் கௌசிகை என்னும் கருமை நிறத்துடன் பார்க்க அஞ்சும் கோலத்தில் காணப்படுகிறாள் பத்திரகாளி அசுரர்களுக்கு அச்சத்தைத் தருபவளாக இருந்ததால் காளகத்திரி என்று பெயர் பெற்றதாக வாழ்வியல் களஞ்சியம் (1986, vii:283) குறிப்படுகிறது. மேலும் சங்க இலக்கியங்கள் கானமார் செல்வி (அகம்:348) காடுறைக்கடவுள் (பெரும்:41-42) என்று குறிப்பிட்டுள்ளன. இன்று காளி, கொற்றவை, துர்க்கை, பாளையத்து அம்மன், கண்ணாத்தாள், பிரம்ம சக்தி என்று பல பெயர்களினால் தமிழகத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வின மக்கள் 25 லிருந்து 50 குடும்பங்கள் ஒன்று சேர்ந்து கோயில் அமைத்து வழிபாடு செய்கின்றனர். அக்கோயிலில் வருடத்திற்கு ஒரு நாள் அல்லது மூன்று நாள்கள் திருவிழா நடத்துகின்றனர். கோயில்களில் இவர்களே பூசாரிகளாக இருக்கின்றனர். பல்வேறு இடங்களில் தொழில் செய்யும் இவ்வின மக்கள் எல்லோரும் திருவிழா நாளில் ஒன்றுகூடி ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் குறிப்பிட்ட தொகையினை வரியாக வசூலித்து திருவிழா நடத்துகின்றனர். கோயிலில் தலைவர், செயலாளர், பொருளாளர் நியமிக்கப்பட்டிருப்பர். அவர்கள் வரவு செலவு கணக்குகளைப் பார்த்துக் கொள்வார்கள். இவ்வாறு குமரி மாவட்டத்தில் 15-க்கு மேற்பட்ட சிறு தெய்வ வழிபாட்டுக் கோயில்கள் இவ்வின மக்களுக்கு உள்ளன.

ஊர் வேலைச் செய்யும் சிலர் தங்கள் வேலைச்செய்யும் சமுதாய மக்களின் கோயிலைத் தங்கள் கோயிலாகவும் கொண்டுள்ளனர். கோயிலில் திருவிழா காலத்தில் கோயில்பணிகளை முழுமையாகச் செய்கின்றனர். கோயிலைச் சுத்தம் செய்தல், பூசைக்குத் தேவையானப் பொருட்களை எடுத்துக் கொடுத்தல், மணியடித்தல் முதலிய பணிகளைச் செய்கின்றனர். இவர்கள் வரி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. எனினும் இவருக்கு ஒருவரி பங்கிற்குரிய பொருட்களைக் கொடுத்து விடுகின்றனர்.

வெளிமாவட்டத்தில் (திருநெல்வேலி) இருந்து இங்கு தொழில் செய்யும் இவ்வின மக்கள் திருவிழா காலத்தில் அவர்கள் ஊருக்குக் குடும்பத்துடன் சென்று வருவதையும் காணமுடிகின்றது.

## இசுலாம்

இசுலாமிய மதமானது இந்தியாவில் படையெடுப்பின் மூலம் பரவிற்று. இசுலாம் என்ற சொல்லுக்கு அரபி மொழியில் அமைதி, சாந்தம், அடைக்கலம் புகுதல், சான்றாண்மை என்ற பொருளுண்டு. ஒரு சமயத்தைத் தோற்றுவித்தவரின் பெயரையே அச்சமயத்திற்கு சூட்டுவதுண்டு. ஆனால் முகமது நபியால் தோற்றுவிக்கப்பட்ட சமயம் அவரது பெயர் வழங்கப்படாமல் இசுலாம் என்று வழங்கப்படுகின்றது. இவர்களின் புனித நூல் 'குர்ஆன்' இவர்களின் சமய போதனைகளாக முகமது நபியை இறைத்தூதராக ஏற்றுக் கொள்ளல், ஐந்து காலத் தொழுகை, ஈகை, நோன்பு, வாழ்வில் ஒரு முறையாவது 'கச்சு' (Haj) என்ற புனிதப் பயணத்தை மேற்கொள்ளுதல் என்பனவாகும். இப்போ தனைகளை ஏ்று பலர் இசுலாம் சமயத்தில் சேர்ந்துள்ளனர்.

இசுலாம் சமயத்தைச் சேர்ந்த மருத்துவரை 'ஒசா' என்று அழைக்கின்றனர். இவர்கள் மருத்துவர்களைப் போன்று இசுலாமிய மக்களுக்குச் சிகையலங்காரம் செய்கின்றனர். இசுலாமியரின் முக்கியச் சடங்காக கருதப்படும் 'சுன்னத்' என்ற சடங்கினைச் செய்பவரும் இவர்களே. இசுலாம் சமயத்தில் சாதிபாகுபாடுகள் அதிகமாகக் காணப்படுவதில்லை. எல்லோரும் இசுலாமியரின் மக்கள் என்ற நிலையே உள்ளது. இவர்கள் செய்யும் தொழிலை வேறுபடுத்திக் காட்டவே ஒசா என்று அழைக்கப் படுவதாகக் கூறுகின்றனர். முன்பு இவர்களுக்குப் பெண் கொடுத்து பெண் எடுக்கும் உறவு முறைப் பழக்கம் மறுக்கப்பட்டதாம்.

தற்போது பெண் கொடுக்கும் பழக்கம் மட்டும் வந்துள்ளது. பெண் எடுக்க இவர்கள் வேறு ஒரு ஒசா குடும்பத்திலிருந்துதான் எடுக்க வேண்டும். இவர்கள் இசுலாம் பள்ளிகளில் இமாம் (தலைவர்) ஆகவும் இன்று விளங்குகின்றமைக் குறிப்பிடத்தக்கதாகும்.

**கிறிஸ்தவம்**

கிறிஸ்தவ சமயத்தைத் தோற்றுவித்தவர் இயேசு கிறிஸ்து. இவர் தன்னுடைய சீடர்களிடம் உலகெங்கும் சென்று கிறிஸ்தவ மத நற்செய்திகளை அறிவிக்கும்படி கூறினார். அவருடைய கட்டளையின்படியே இந்தியாவிற்குத் 'தோமா' என்னும் சீடர் வந்தார். தோமா சேர நாட்டில் புகழ்பெற்று விளங்கிய முசிறி துறைமுகத்தில் கி.பி.52-ஆம் ஆண்டில் வந்து இறங்கினார். தற்போது கேரளாவிலுள்ள கொடுங்கனூர் (Cranganur) எனப்படும் பகுதியே அப்போதைய முசிறியாகும். அக்காலத்தில் பாலஸ்தீனமும், எகிப்தும் இந்தியாவுடன் வியாபாரம் செய்து கொண்டிருந்தது. அவர்களோடு சேர்ந்து தோமாவும் சேர நாடு வந்து சேர்ந்து யூதர்களுடன் தங்கி இறைப்பணியாற்றினார் (ரோஸ்லெட் டானிபாய், 2007:27-28). இவ்வாறு கேரளாவில் வந்து இறங்கி குமரி மாவட்டத்திற்கு வந்து தன்னுடைய இறைப்பணியினை ஆற்றினார்.

இதற்குபின்பு வணிகத்திற்காக டச்சுக்காரர்கள் இந்தியாவிற்குள் வந்தனர். அவ்வாறு வரும்போது தாங்கள் இருக்கும் இடத்தில் உள்ள மக்களையும் கிறிஸ்தவர்களாக மாற்றினர். இந்தியாவில் வறுமை, பொருளாதார சிக்கல், செய்கின்ற தொழிலில் போதிய வருமானம் இல்லாமை, நோய் ஆகியவற்றில் மக்கள் சிக்கித்தவித்துக் கொண்டிருந்த போது கிறிஸ்தவ சமய போதகர்கள் இம்மக்களுக்கு உதவிகள் செய்து தம் சமய கருத்துக்களையும் பரப்பினார். இதனால் மக்கள் விரும்பி கிறிஸ்தவ சமயத்திற்கு மாறினார்.

இந்திய வரலாற்றில் விடுதலைப் போராட்டங்கள் அதிகம் நடைபெற்றது குமரி மாவட்டத்தில்தான். இதில் தோள்சீலை போராட்டம் குறிப்பிடத்தக்கது. இது நாயர் இன மக்களின் அடக்குமுறையை எதிர்த்து நாடார் இன மக்கள் நடத்தியது. எனவே தான் இதனைச் 'சாணார் கலகம்' என்றும் கூறுவர். இந்தத் தோள்சீலை போராட்டமானது 1822-1823 வரையிலும், 1828-1830 வரையிலும் 1855-1859 வரையிலும் என்று மூன்ற கட்டங்களில் நடைபெற்றதாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

இப்போராட்டம் தாழ்த்தப்பட்ட மக்களின் பெண்கள் மேலாடை அணிவது மறுக்கப்பட்டிருந்தது. இதனை எதிர்த்து நடைபெற்றது ஆகும். இப்போராட்டத்தின் விளைவாக மீட் ஐயர் என்னும் மிஷனரி கர்னல் நிவாஸ் என்ற மேலை நாட்டு ரெசிடென்ட் துரைக்குக் கொடுத்த மனுவின் பேரில் பத்மநாபபுரம் நீதிமன்றத்தில் 23-05-1823-இல் கிறிஸ்தவப் பெண்கள் மேலாடை அணியலாம் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. கிறிஸ்தவப் பெண்கள் மேலாடை அணிந்ததை எதிர்த்து நாயர் இன ஆண்கள் இப்பெண்களின் மேலாடைகளைக் கிழித்து எறிந்தனர். இதனால் கி:பி. 1859-ல் திருவிதாங்கூர் மன்னர் கிறிஸ்தவப் பெண்கள் மேலாடை அணியலாம் என்று சட்டம் இயற்றினார். இதன்விளைவாகப் பெரும்பான்மைத் தாழ்த்தப்பட்ட மக்கள் கிறிஸ்தவர்களாக மதம் மாறினார்கள். அதன்பின்னர் ஆறுவருடம் கழித்து 1865 ஜூலை 1-ஆம் நாள் இயற்றப்பட்டச் சட்டம் திருவிதாங்கூரின் அனைத்துப் பெண்களும் மேலாடை அணிய உரிமையை அளித்தது.

இவ்வாறு பல்வேறுவிதமான காரணங்களினால் திருவிதாங்கூர் மக்கள் தானாகவும், சில காரணங்களுக்காகவும் கிறிஸ்தவ சமயத்தில் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்தனர். இவ்வாறு சேரும்போது மருத்துவ இனமக்களும் அவர்களுடன் சேர்ந்து கிறிஸ்தவர்களாக மாறினர். உயர் சாதிக்குச் சேவைச் செய்தவர்கள் மட்டும் மாறாமலே இருந்தனர். இவ்வாறு மாறியதில் கேரள முதலி சமுதாயத்தினர் குறிப்பிடத்தக்கவர்கள். மேலும் கிறிஸ்தவச் சமயத்தில் சேர்ந்த மருத்துவர்களுக்கு முதலில் அடிமைத்தனம் இருந்தது. பிற்காலத்தில் எல்லா மக்களைப்போலவும் மதிக்கப்பட்டதாகக் கூறுகின்றனர்.

கிறிஸ்தவர்களாக மாறிய மருத்துவர்களை இன்று இனம் காண்பது கடினமாக உள்ளது. அந்த அளவிற்கு அவர்களுக்குள் மாற்றம் அடைந்துள்ளமையை உணர முடிகின்றது. எனினும் ஒரு சிலர் கிறிஸ்தவர்களாக மாறினாலும் இன்றும் இந்து சடங்காச்சாரங்களைக் கடைபிடித்து வருவதையும் காண முடிகிறது. இவ்வாறு கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் முழுமையாக ஒடுக்குமுறையிலிருந்து தப்பினார்கள் என்று முழுமையாகக் கூறிவிடவும் முடியாது.

***இடம்பெயர்வு***

இடம்பெயர்வு என்பது மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள ஒரு செயல்பாடாகும். இவ்விடம் பெயர்தல் பல்வேறு சூழ்நிலையில் இன்றும் நிகழ்ந்துக் கொண்டுதான் இருக்கின்றது. இந்த இடம்பெயர்வுகள் ஏதேனும் சில முக்கியமான காரணங்களினால்தான் நடந்துள்ளன. இடம்பெயர்ச்சி என்பது ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வதாகும். தாவரங்களுக்கும், விலங்குகளுக்கும் இடம்பெயர்வே வாழ்க்கை நியதியாக இருப்பினும் அவை இடம்பெயர்ச்சியின் மூலம் மாபெரும் துன்பத்தை அனுபவிப்பதில்லை. பழங்குடிகள் உணவு, உறையுள் தேடி இடம்பெயர்ந்தனர். இஃது உலகளவில் நடைபெறக்கூடிய ஒன்று. இடப்பெயர்ச்சி மூலம் கிராமங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கும், ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கும், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கும் மக்கள் செல்கின்றனர் என்று சிங்காரவேலன் குறிப்பிடுவதாகத் தாமரைபாண்டியன் (2005:15,16) மேற்கோள் காட்டியுள்ளார். இவ்வாறு நடைபெறும் இடப்பெயர்வுகள் தற்காலிகமாகவும், நிரந்தரமாகவும் இருப்பதும் உண்டு. சிலர் தற்காலிகமாக இடப்பெயர்ச்சி அடைந்து பின் நிரந்தரமாகப் பெயர்ச்சி அடைந்து இருப்பதும் உண்டு. இடம்பெயர்வுகள் தொழில், இயற்கை சீற்றம், பங்காளிச் சண்டை, மகன் மறுத்தல், சாதிச் சண்டைகள்; அரசியல் ஆகியவற்றின் காரணமாகப் பெரும்பாலும் நடந்துள்ளன என்று தாமரைப் பாண்டியன் (மேலது, 18-20) குறிப்பிடுகிறார்.

மருத்துவ இனமக்கள் பெரும்பாலும், தொழில், சாதிய அடக்குமுறை இவைகளினால் இடப்பெயர்வு அடைந்துள்ளதைக் களஆய்வில் அறியமுடிந்தது. மருத்துவ இனமக்கள் ஆரம்பக் காலத்தில் உயர்ந்த சாதி மக்களுக்குச் சேவைச் செய்யும் சேவைச் சாதியினராக இருந்துள்ளனர். இவர்கள் ஏதேனும் ஒரு சாதியினருக்கு மட்டும்தான் சேவைச் (தொழில்) செய்ய வேண்டும் என்ற கட்டாயம் விதிக்கப்பட்டிருந்தது. இவர்கள் வேறு சாதியினருக்கு வேலை செய்தால் இவர்களை இழிவாகவும், பழித்தும், ஊரிலிருந்து விலக்கியும் உள்ளனர். எனவே தான் தாங்கள் சேவை செய்யும் சாதியினர் கொடுக்கும் சிறு ஊதியத்தில் (நெல், சாப்பாடு) மட்டுமே வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்த அடக்கு

முறையிலிருந்து மீள வேண்டி, இவர்கள் தங்கள் கிராமங்களிலிருந்து நகரங்களுக்கும், பிற மாநிலங்களுக்கும் இடம்பெயர்ச்சி அடைந்துள்ளனர். குமரி மாவட்டத்திற்குத் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து மருத்துவ இனமக்கள் இடம் பெயர்ந்து வந்துள்ளமையும், கேரளா மாநிலத்திலிருந்து மருத்துவர்கள் இடம் பெயர்ந்து வந்துள்ளமையும் களஆய்வில் காணமுடிகின்றது. இதேப்போன்று குமரி மாவட்டத்திலிருந்து மருத்துவர்கள் இடம்பெயர்ந்து திருநெல்வேலி, கேரளா பகுதிகளுக்கும் சென்றுள்ளனர். இவர்கள் கொங்குநாடு எனப்பட்ட தற்போதைய கோயம்புத்தூர் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து பல்வேறு பகுதிகளுக்கும் குடிவந்துள்ளனர் என்று Andre Benteille (1966: 89) குறிப்பிடுகிறார்.

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்து வந்த மருத்துவ இனமக்கள் குமரி மாவட்டத்தில் குடியேற்றப்பட்டனர். அவர்கள் தங்கள் தொழிலை இழிவாகக் கருதியமையால் நெசவுத் தொழிலுக்கு மாறினர். தம் இனத்தைக் கேரளமுதலி என்று மாற்றிக் கொண்டனர். உள்ளூரில் சேவை செய்வதற்கு மருத்துவர்கள் இல்லாததால் வெளியூரிலிருந்து அழைத்து வந்தும் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவ்வாறு இவ்வினமக்கள் தங்கள் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்பவும், தொழில் முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து குடியமர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## போதைப்பொருட்கள்

மருத்துவ இனமக்கள் பெரும்பாலும் போதைப்பொருட்களுக்கு அடிமையாகிக் காணப்படுகின்றனர். இவர்கள் காலையில் நன்கு குளித்து இறைவனை வணங்கி தொழிலுக்குச் செல்வது வழக்கமாகும். எனினும், மாலைப் பொழுதில் வீடு திரும்பும் போது பேரதைப் பொருட்களை அருந்திவிட்டுதான் வருவர். திருமண வீட்டில் காலையில் இவர்கள் அழகாக வந்து திருமணத்தை நடத்திக் கொடுப்பார்கள். மாலையில் விருந்தின்போது இலையெடுக்கும் நேரத்தில் பெரும்பாலும் போதையில் நிற்பதைத் தான் இன்றும் கிராமப்புறங்களில் காணமுடிகின்றது. இன்றைய இளந்தலைமுறையினர் போதைப்பொருட்களை அதிகமாகப் பயன்படுத்துவதில்லை.

முதியோர் இன்றும் கடை முடிந்து வந்ததும் மதுபானங்களைப் பயன்படுத்துவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இவர்களிடம் இதைப்பற்றிக் கேட்டால் தாங்கள் எல்லோரிடமும் பழகுவதால் தீய நண்பர்களுடைய நட்பு எளிதில் கிடைத்துவிடுகிறது. அவர்கள் மூலமாக மது பயன்படுத்தத் தொடங்கினோம் என்று கூறுகின்றனர். காலை முதல் இரவு வரை தாங்கள் நின்று கொண்டே பணி செய்வதால் ஏற்படும் உடல் சோர்வைப் (வலியை) போக்குவதற்கு மதுபானங்களை உட்கொள்வதாகவும் கூறுகின்றனர்.

திருமண வீட்டில் இலையெடுக்கும் நேரத்தில் அதிகமாக மதுபானம் அருந்தியதால் இலையினை முறையாக எடுக்க முடியவில்லை. இதனால் ஆதிக்கச் சாதியினர் தகாத வார்த்தைகளினால் ஏசுவதையும், அடித்துத் துன்புறுத்துவதையும் காணமுடிகிறது. என்னதான் திட்டினாலும், அடித்தாலும் இவர்களுக்காகப் பரிந்து பேச இவர்களின மக்களே முன்வருவதில்லை.

### மக்கட் பெயர்கள்

பெயரிடுதல் என்பது இன்று வந்த வழக்கம் அன்று. இதன் தொடக்க நிலையினை உறுதியாக வரையறுத்துக் கூற முடியாது. 'ஊரைச் சொன்னாலும் பெயரைச் சொல்லாதே' என்பது நடைமுறைப் பேச்சு வழக்காகக் காணப்படுகின்றது. மனிதனை மற்றவைகளிலிருந்து வேறுபடுத்தவும், ஒவ்வொருவரையும் இனங்கண்டு வேறுபடுத்தி அழைக்கும் வகையில் வைப்பதே பெயராகும். "பெயரிடப்படாத ஒருவனைத் தனி மனிதனாகவோ, குடும்பத்தில் ஓர் அங்கமாகவோ ஏற்றுக்கொள்ளும் வழக்கம் ஆதி கால மக்களிடையே காணப்படவில்லை" என்ற நயினாரின் (1983:60) கூற்றின் படி, ஏதேனும் ஒரு பெயரை இட்ட பின்பே தனிமனிதனாகக் கருதியுள்ளனர் என்பது புலனாகிறது. இப்பெயர்கள் நாளடைவில் மக்களின் கல்வி, நாகரிகம், பண்பாடு முதலிய கூறுகளைச் சார்ந்தே அமைந்துள்ளன.

### பெயர்களின் வளர்ச்சி

மக்கட்பெயர்கள் மதம், தொழில், சாதி, மொழி, அரசியல், இயற்கை அமைப்பு, நம்பிக்கைகள் முதலிய கூறுகளையொட்டியே நிலவுகின்றன. நாட்டில் நிலவுகின்ற முக்கியமான வரலாற்று

நிகழ்வுகளும், மக்களின் அனுபவங்களும் பெயர்களாக உருவெடுத்தன. ஆண்களுக்கும், பெண்களுக்கும் வெவ்வேறு அமைப்பில் பெயர்கள் இடப்பட்டன. பெயரிடுவதில் வளர்ச்சி பெற்ற நிலையில் அதற்கென சில குறிப்பிட்ட மரபினையும், நியதிகளையும் கடைப்பிடித்தனர். இதனால் காலப்போக்கில் மக்களிடம் பெயரிடும் மரபில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தன. இவற்றுள் முன்னோரைப் போற்றும் வகையில் அவர்களின் பெயரினை வைக்கும் மரபும், குலதெய்வத்தின் பெயர் அல்லது ஊர், பொது தெய்வத்தின் பெயர்களை வைக்கும் மரபும் குறிப்பிடத்தக்க பெயரிடும் முறைகளாக விளங்கின.

சமய மறுமலர்ச்சியாலும், நாகரிக வளர்ச்சியாலும் பிற்காலத்தில் மக்கள் பெயரிடும் முறையில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. எனவே தெய்வங்களின் பெயர்களை எல்லாவின மக்களும் சாதிப் பாகுபாடுகளின்றி வைத்துக் கொண்டனர். குழந்தை பிறந்தவுடன் பிறந்த நாள், கிழமை, நட்சத்திரம், ராசி இவைகளைக் கணித்து, இவற்றின் அடிப்படையில் பெயரிடும் மரபும் காணப்படுகின்றது. இவை எல்லாவற்றிற்கும் மேல் தொலைக்காட்சி, திரைப்படம் ஆகிய செய்தித் தொடர்புச் சாதனங்களால் பெயர்களில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தற்கால இளம் தலைமுறையினரின் பெயர்கள் மிகச் சிறியதாகவும் காணப்படுகிறது. தற்போது எண் கணித முறையில் மக்கட் பெயரிடுவது மிகவும் பிரபலமாக வளர்ந்து வருகின்றது.

### பெயர்களின் பயன்கள்

ஒரு நாட்டின் உண்மையான வரலாறு, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை அறிய கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள் எந்த அளவுக்குப் பயன்படுகின்றனவோ; அதே அளவுக்கு மக்கட்பெயர்களும் சிறந்த ஆதாரங்களாக விளங்குகின்றன. இதனை, ஒரு நாட்டின் வரலாறு, மதம், நாகரிகம், பண்பாடு ஆகியன அந்நாட்டு மக்கட் பெயர்களில் தம் முத்திரைகளைப் பதிக்கின்றன என்ற சார்லட் யங்கின் (1956:13) கூற்றுடன் ஒப்பு நோக்கத்தக்கதாக அமைந்துள்ளது. அதன் மூலம் மக்கட் பெயர்களின் பயன்பாட்டை அறிந்து கொள்ளலாம். மக்கட் பெயர்கள் காலந்தோறும் தனது கருத்திலும், வடிவத்திலும்

மாற்றமடைந்து வருகின்றன. ஒருவருடைய பெயரினை வைத்துக் கொண்டே அவர் எந்தச் சமுதாயத்தவர் என்பதையும், எந்த மதத்தினைச் சார்ந்தவர் என்பதையும் ஓரளவு புரிந்துக் கொள்வதற்கும் பயன்படுகின்றது.

## தற்கால பெயரிடும் முறை

தற்காலத்தில் பெயரிடும் முறையில் புதுமை, எளிமை, புதிய கருத்து முதலியவை சிறப்பிடம் பெறுகின்றன. அழைப்பதற்கு வசதியாக ஒலி உச்சரிப்பில் ஒன்று போல் இருக்குமாறு பெயரிடுவதையும் காணமுடிகின்றது. ஒரு வீட்டில் மூன்று குழந்தைகள் இருப்பின் பிரபா, பிரசன்னா, பிரியா அல்லது ஜெயசீலன், ஜெயசீலி, ஜெனிபர் என்று ஒலி உச்சரிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்துப் பெயரிடும் முறை இம்மக்களிடம் காணப்படுகின்றது. இவர்கள் நீண்டபெயர்களை வைத்துக்கொள்ள விரும்புவதில்லை. இரண்டு அல்லது மூன்று எழுத்துக்களைக் கொண்ட பெயர்களையே தேர்ந்தெடுக்கின்றனர். கிராமங்களில் உள்ளவர்கள் பழைய பெயர்களை அடியோடு விட்டு ஊரில் யாரும் வைக்காத பெயர்களை வைப்பதில் முக்கியத்துவம் கொடுப்பதும், உரிமை கொண்டாடுவதும் காணப்படுகின்றது. இவ்வாறு வைக்கப்படும் பெயர்கள் பிறமொழியினைத் தழுவியதாகவும், மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு அமைவதையும் காணமுடிகின்றது.

தற்போது மக்கட் பெயரிடுவது ஒரு சடங்காக மாற்றம் பெற்றுள்ளது. பெயரிடும் சடங்கு உளவியல் அடிப்படையிலானது. குழந்தையின் எதிர்காலம் கருதி நற்கருத்துடனும், நல்ல சிந்தனையுடனும் பெயரிடும் முறை அமைகின்றன. எனவே, பெயரிடுவதில் இம்மக்களின் நம்பிக்கைகளும் பெரும் பங்கு வகிக்கின்றன. உலகில் எவ்வளவுதான் அறிவியல் தொழில் நுட்பம் ஏற்பட்டாலும் நம்பிக்கைகளும் உயர் எண்ணங்களும் மனித வாழ்வை நிர்ணயம் செய்கின்றன. பெயரிடும் முறையில் யாருக்கு எதில் நம்பிக்கை இருக்கிறதோ, அதுவே ஓர் இனத்தின் மரபாகப் போற்றப்பட்டு வருகின்றது என்ற பாஸ்கரனின் (2003:20) கூற்று இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும். இன்று ஜோதிடம், ஜாதகம், கிளிஜோசியம், முத்துப்பார்த்தல், மந்திரித்தல், பஞ்சாங்கம் பார்த்தல் முதலிய பலவிதமான நம்பிக்கைகள் மக்கள் வழக்கில் உள்ளன.

மருத்துவ இனமக்களும் இதில் விதிவிலக்கல்ல. இவர்கள் தற்போது குழந்தையின் நட்சத்திரம் மற்றும் எண்கணிதம் (Numerology) ஆகியவற்றின் அடிப்படையில் பெயரிடும் மரபு காணப்படுகின்றது. பெயர்களை, ஆண் மக்கட்பெயர்கள், பெண் மக்கட்பெயர்கள், பொதுப் பெயர்கள் என்று வகைப்படுத்தலாம். பொதுப் பெயர்கள் என்பது இருபாலருக்கும் பொதுவாக வழங்கப்படுகின்ற பெயர்களைக் குறிக்கும். கள ஆய்வின் போது சேகரிக்கப்பட்ட மக்கட்பெயர்களைத் தெய்வங்களின் பெயர்கள், உறவுமுறைப் பெயர்கள், சாதிப் பெயர்கள், நம்பிக்கை அடிப்படையிலான பெயர்கள், திரைப்படம் தொடர்பான பெயர்கள், எண்கணிதப் பெயரிடுமுறை என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### தெய்வங்களின் பெயர்கள்

மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து காணப்படுவது தெய்வ வழிபாடாகும். பழங்காலத்தில் திணை அடிப்படையில் அமைந்த தெய்வங்களைத் தவிர மிகுதியான நாட்டுப்புறத் தெய்வங்களையும் மக்கள் வழிபட்டு வந்துள்ளனர். பாமர மக்கள் தங்கள் துன்பங்களைப் போக்கிக் கொள்ளவும், வாழ்வில் இன்பங்களைப் பெறவும் சிறு தெய்வங்களை வழிபட்டனர். இவ்வழிபாட்டு முறையில் காணப்படும் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவை மக்களின் பெயரிடும் முறைகளுக்கு நிலைகளனாய் அமைந்தன. இச்சிறு தெய்வத்தின் மீதுள்ள அச்ச உணர்வின் காரணமாகவும், வேண்டுதலினாலும், குழந்தையின் ஆயுள் நீடிக்க வேண்டும் என்பதற்காகவும் இச்சிறு தெய்வங்களின் பெயர்களை வைத்தனர். மருத்துவ இன மக்களிடையே சிறுதெய்வப் பெயர்களாக, "இசக்கியம்மை, சுடலையாண்டி, பத்திரகாளி, சுடலைமுத்து" முதலிய பெயர்கள் காணப்படுகின்றன.

இவ்வின மக்களிடம் பெருந்தெய்வப் பெயர்கள் அதிகமாக வழங்கப்பட்டு வருகின்றன. சமய மறுமலர்ச்சியின் காரணமாக இவ்வின மக்கள் பெருந்தெய்வங்களை அதிகமாக வழிபடுகின்றனர். இவர்களின் பெயர்களில் சைவ, வைணவச்சமயப் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. அவை, "முருகன், வள்ளியம்மா, பரமசிவம், செந்தில்வேல், பார்வதி, பரமாயி, கணேசன், தாணுமூர்த்தி, குமாரசுவாமி, வேலாயுதம், லெட்சுமி, சரஸ்வதி, பகவதியப்பன், மீனாட்சியம்மை, இராமகிருஷ்ணன், இராதாகிருஷ்ணன், விஷ்ணு, நாராயணன், ராமசுப்பு, ராமலெட்சுமி" முதலியனவாகும்.

இப்பெயர்கள் பெரும்பாலும் மருத்துவர்கள் மட்டுமின்றி எல்லா சாதியினரும் பயன்படுத்தும் பெயர்களாகவும் உள்ளன.

## *உறவுமுறைப் பெயர்கள்*

மனிதன் குடும்பமாக வாழத்தலைப்பட்ட போது உறவுமுறைகள் ஏற்பட்டன. தனிக்குடும்பம் என்னும் நிலையில் தொடங்கும் இரத்த உறவு குடும்பத்தின் அளவு பெருகப் பெருக அதன் எல்லையும் விரிகிறது. நேர் வழி உறவானது முப்பாட்டன், பாட்டன், தந்தை, மகன், பேரன், பேத்தி, கொள்ளுப் பேரன், கொள்ளுப்பேத்தி என இன்னும் மேலும் கீழும் விரிந்து செல்லும் என்று பக்தவத்சலபாரதி (1990:415) குறிப்பிடுகிறார். இவ்வுறவு முறையினை அடிப்படையாகக் கொண்டு பெயரிடும் மரபும் காணப்படுகிறது. கள ஆய்வின் போது, தாய், வள்ளியம்மா, பாலையா, சுப்பையா, தங்கையன் கோலம்மா, அம்மாவு முத்தாச்சி, அப்பு, ஞானம்மா முதலிய உறவினை அடிப்படையாகக் கொண்ட பெயர்கள் காணப்படுகின்றன. இவற்றில் உறவுமுறைகள் தனித்தும், முன்னொட்டாகவும், பின்னொட்டாகவும் வந்துள்ளமை காணமுடிகின்றது. இன்றைய இளைய தலைமுறையினரிடம் இப்பெயர்களைக் காண்பதற்கில்லை.

## *சாதிப்பெயர்கள்*

சமுதாய அமைப்பில் அக்காலத்தில் மக்கள் செய்து வந்த தொழிலுக்கு ஏற்ப சாதி அமைப்பினை உருவாக்கி நிலைபெறச் செய்தனர். இச் சாதிப் பெயர்கள் பல; அதாவது, மக்கட்பெயர்களில் சாதிப் பிரிவுகளைப் பல்வேறு நிலைகளில் வெளிப்படுத்து கின்றனர். குறிப்பிட்ட சாதிப்பெயரையே இயற்பெயராக இடுவதும் பிற பெயர்களோடு பின்னொட்டுகளாகச் சாதியைக் குறிக்கும் பெயர்களை இடுவதும் மரபாக உள்ளது என்ற பாஸ்கரன் (2003:121) கூற்றிற்கு ஏற்ப மருத்துவ இனமக்கள், *'பட்டு பண்டிதர், சண்முகம் பண்டிதர், தங்கவேல் பண்டிதர்'* என்று அழைக்கப்படுகின்றனர். இங்கு பண்டிதர், பண்டுவர் என்ற பெயர்கள் இவர்களின் பட்டப் பெயர்களாகும். இவர்கள் *மருத்துவத் தொழில்* செய்து வந்தமையால் பண்டுவர் என்று அழைக்கப்பட்டனர். இச்சொல் பின்னொட்டாகவும், அழைக்கும் போது தனிப்பெயராகவும் வழங்குகின்றன. தம் முன்னோர் செய்து வந்த - வருகின்ற தொழிலைக் குறிக்கும் வகையில் இங்ஙனம் அமைந்துள்ளன.

### நம்பிக்கை சார்ந்தவை

நம்பிக்கையாவது தனிமனித சமுகத்தின் நல்வாழ்வைக் கருதி தமது முன்னோர்களால் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வரும் செயல்களே நம்பிக்கையாக மாற்றம் பெற்றன. இதனை, தன்னுடைய சொந்தக் குணத்தை ஒரு சமூகம் மாற்றும் போது அல்லது இழக்கும் போது அவற்றிற்கு ஏற்ப முன்பே அமைந்திருந்த நடைமுறைகள் நம்பிக்கைகளாய் எஞ்சுகின்றன என்று தமிழவன் (1976:216) குறிப்பிடுகிறார். மக்கட் பெயர்கள் பெரும்பாலும் நம்பிக்கையின் விளைவாய் எழுந்த கலை வடிவங்களே ஆகும். இப்பெயர்கள் மக்கட்பேற்றின் பெருமையினையும், அதனை அளித்த இறைவனுக்கு நன்றி கூறும் விதமாகவும் அமைந்துள்ளன. குழந்தைப்பேறு இல்லாதவர்களைச் சமுதாயம் மதிப்பதில்லை. இதனால் இப்பேறு இல்லாதவர்கள் பல செயல்களைச் செய்வதும், இறைவனின் அருள் வேண்டி தவம் இருப்பதும், பல்வேறு விதமான நேர்த்திக் கடன்களைச் செய்வதும் வழக்கமாகும். இன்றும் கிராமப்புறங்களில் குழந்தை வரம் கொடுத்தத் தெய்வங்களுக்குத் தொட்டில் கட்டும் வழக்கம் காணப்படுகின்றது. இவ்வாறு பிறந்த குழந்தையினை இறைவனின் குழந்தைகளாகவே மக்கள் நம்புகின்றனர். எனவே இக்குழந்தைகளுக்குப் பெயரிடும் போது பிற பெயர்களிலிருந்து வேறுபடும் விதத்தில், *"புண்ணியம், பரமாயி, ஞானம்மா, ஞானபிரகாசம், ஞானப்பூ, ஞானக்கண், மாயவன், பாக்கியம்"* என்று பிறந்த குழந்தைகளை இறைவனாகக் காண்பதாலும், பெரும் புண்ணியமாகவும், பாக்கியமாகவும் கருதுவதாலும் அவ்வுணர்வின் அடிப்படையில் பெயரிடுகின்றனர். தெய்வ நம்பிக்கைகளின் தலையாய போக்கினை இப்பெயர்கள் உணர்த்துகின்றன. குழந்தைப் பேற்றினை அளவற்ற பெருஞ்செல்வமாகக் கருதுவதினால், *'செல்வம், செல்வகுமார், செல்வராணி, செல்லப்பன், தங்கம்'* என்ற பெயர்களைக் குடும்பத்தில், பெரும்பாலும் மூத்தக் குழந்தைக்கு இடுகின்றனர். பெயரிடுமுறையில் இறையுணர்வு தொடர்பான நம்பிக்கைகள் பெரும் பங்கு வகிப்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

### திரைப்படம் சார்ந்தவை

இன்று செய்தித் தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சியால் பண்பாடு, பழக்கவழக்கங்களில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளன. இவற்றுள் வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி, இதழ்கள்

முதலியவை முக்கியமானவையாகும். இவற்றின் மூலமாகப் பெயரிடுமுறையில் பல புதுமைகள் உண்டாயிற்று. திரைப்படத்தில் நடிக்கின்ற கதாநாயகர்கள் நாயகிகள் மக்களிடம் எளிதாகப் பிரபலமாகி விடுகின்றனர். எனவே மக்கள் "போலச் செய்யும் மரபில்" புதுமை ஒன்றினையே மனதில் கொண்டு இவ்வாறான பெயர்களைத் தங்கள் குழந்தைகளுக்குச் சூட்டுகின்றனர். இவ்வின மக்களிடம், *"மோகன்தாஸ், பிரவின்குமார், அருண்குமார், விக்னேஷ், சுருதிகா, சூர்யா, ரெஞ்சித், சுரேஷ், ஹரிஹரன்"* என்ற பெயர்கள் திரைப்படங்களின் தாக்கத்தால் ஏற்பட்டுள்ளன. திரைப்படத் துறை புதுப்புதுப் பெயர்களின் உருவாக்கத்திற்கு முக்கிய பங்கு வகிக்கின்றன.

**எண்கணித பெயர்கள்**

மக்கள் தங்கள் எதிர் காலத்தைச் சோதிடம், ஜாதகம், எண்கணிதம் ஆகியவற்றால் அறிந்துகொள்ள முடியும் என்று நம்புகின்றனர். தற்போது கிராமங்களில் கைரேகை, பெயர், இராசி, நட்சத்திரம் பார்த்துப் பெயரிடும் மரபு வழக்கில் உள்ளது.

கல்வியறிவு மிக்க மக்கள் எண்கணித முறையினைக் கடைப்பிடிக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் பிறந்ததேதி, மாதம், ஆண்டு ஆகிய மூன்றின் கூட்டுத் தொகை பிறந்த எண் என்பர். ஒவ்வொரு எழுத்துக்கும் ஓர் எண் உண்டு. அதனடிப்படையில் பெயர் எண் கணக்கிடப்படுகின்றது. பெயர் எண் கூட்டுத் தொகை இராசியில்லை என்றால் சில எழுத்துக்களைச் சேர்த்தோ அல்லது குறைத்தோ தங்கள் பெயரை இராசி உள்ளதாக மாற்றிக் கொள்ளலாம். இதையே எண்கணித முறை என்கின்றனர். ஆங்கிலத்தில் இதனை 'நியூமராலஜி' என்று அழைக்கின்றனர். அதாவது, நியூமராலஜி எனப்படுகிற; இந்த எண் எழுத்து விஞ்ஞானக் கலை நம் நாட்டில் மிகப் பழமையான காலம் தொட்டு வழக்கில் இருந்து வருகிறது. ஆனால் இடைக் காலத்தில் அது கிட்டத்தட்ட அறவே புதையுண்டு போய்விட்டது என்று தமிழ்வாணன் (1985:91) குறிப்பிடுகிறார். இவ்வாறு வாழ்க்கையில் முன்னேற்றம் அடையவும் எடுத்த காரியங்களில் வெற்றி பெறவும் பெயரிடுமுறைகளில் இம்முறை பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

**பேச்சுவழக்கு**

கிராமப்புறங்களில் தற்போது மருத்துவ இனமக்களை மரியாதையுடன் அழைப்பது இல்லை. இவர்களைப் பெரும்பாலும்

நாசுவன், அம்பட்டன், காவுதி, குடிமகன் என்றே அழைக்கின்றனர். திருமண நிகழ்வின்போது மட்டும் குடிமகன் என்ற பெயரில் மதிப்புடன் அழைக்கப்படுகின்றனர். குமரிமாவட்டத்தில் கல்குளம், விளவங்கோடு தாலுகாவில் அவர்களைக் காவுதி என்றே அழைக்கின்றனர். மற்ற பகுதிகளில் நாவிதன், அம்பட்டன் என்று வழங்குகின்றனர். இவர்களது வீட்டுப் பெண்கள் மருத்துவச்சி என்று அழைக்கப்படுகின்றனர். பொதுவாக, பெயர்கள் நட்சத்திரம், மீனாட்சி என அழைக்கின்றனர். நட்சத்திரம் என்னும் பெயர் நட்சத்திரம் போன்று அனைத்துப் பெண்களின் நல்வாழ்விற்கும் உரியவர்கள் என்பதைக் குறிக்கும் குறியீட்டுப் பெயராகவும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

### *பெயர்களின் அமைப்பு*

மக்கட்பெயர்களின் அமைப்பில் ஆண்பாற் பெயர்களுக்கும், பெண்பாற் பெயர்களுக்கும் சில மாற்றங்கள் காணப்படுகின்றன. இதனுள் சில இலக்கண மீறல்களும் காணப்படுகின்றன. ஆண்பாற் பெயர்களின் பின்னொட்டு விகுதி 'னஃகான் ஒற்றே அகடூஉ அறிச்சொல்' என்று நன்னூலார் னகரத்தை ஈறாகக் கொண்டு ஆண்பாற் பெயர்கள் முடியும் என்று குறிப்பிடுகிறார். கள ஆய்வின் போது சாமி, அப்பன், குமார், முத்து, பண்டிதர், மலை, கிருஷ்ணன், ராஜன், ராம் முதலிய ஆண்பாற் விகுதிகள் காணப்படுவதை அறியமுடிந்தது. இவற்றில் சில இலக்கண மீறல்களாக வருவதைக் காணமுடிகின்றது. (உ.ம்) 'கோபி, மணி, தங்கையா, சுயம்பு'.

பெண்பாற் பெயர்களின் பின்னொட்டு விகுதி 'ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்' என்று நன்னூலார் ளகரத்தை ஈறாகக் கொண்டு பெண்பாற் பெயர்கள் வரும் என்கிறார். கள ஆய்வின் போது வள்ளி, ஆத்தா, அம்மாள், லெட்சுமி, ஈஸ்வரி என்பன பெண்பாற் பெயர்களாக வருவதைக் காணமுடிகின்றது. இவற்றிலும் சில இலக்கண மீறல்களுடன் பெயர்கள் காணப்படுகின்றன. (உ.ம்) 'சரஸ்வதி, கனகலெட்சுமி, செல்வராணி'.முன்னொட்டாக லகர, ரகர, டகர எழுத்துக்கள் மொழி முதல் வராது என்பது தொல்காப்பியம். ஆனால், இம்மரபு மீறி பெயர்கள் வழங்கி வருவதையும் *'ராதாகிருஷ்ணன், லட்சுமணன், ரமேஷ்'* என்னும் பெயர்கள் மூலம் காணமுடிகிறது.

ஆண்பாற் முன்னொட்டாக ராம், வேல், செல்வ, சுவாமி, ஜெயா, பிரபா முதலியவைகளும், பெண்பாற் முன்னொட்டாக வள்ளி, ஜெயா, தமிழ், அம்மா முதலியவைகளும் கள ஆய்வின் போது சேகரிக்கப்பட்ட பெயர்களில் அதிகமாக வருவதைக் காணமுடிந்தது. அவ்வகையில், *'செல்வக்குமார், ராமகிருஷ்ணன், வள்ளியம்மை, ஜெயசீலி'* என்பனக் குறிப்பிடத்தக்கன. மருத்துவ இனமக்களிடம் வழங்கப்பட்டுவரும் மக்கட்பெயர்கள் இவர்களது பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் மற்றும் பண்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையிலான தங்கள் பொதுவான மனநிலையைப் பறைசாற்றுவனவாக அமைந்துள்ளன.

**சங்கம்**

'தங்கம் சாதிக்காததைச் சங்கம் சாதிக்கும்' என்ற பேச்சுவழக்கு இன்றும் கிராமப்புறங்களில் காணப்படுகின்றது. இதன்மூலம் சங்கம் அமைத்தால் எதையும் சாதிக்கலாம் என்பது புலனாகிறது. எனவேதான் இனக்குழுக்கள் தங்கள் கருத்துக்கள், பிரச்சனைகள் இவற்றை முன்னெடுத்துச் செல்லச் சங்கங்களை ஒரு ஊடகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். மருத்துவ இனமக்களும் தங்கள் கருத்துக்களை, பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குச் சங்கங்கள் அமைத்துக் கொண்டனர். 1917-ஆம் ஆண்டு பண்டித எஸ்.எஸ். அனந்தர் என்பவரால் 'தென்னிந்திய மருத்துவர் சமூகச் சங்கம்' என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இஃது மருத்துவத் தொழில் செய்தவர்கள் மட்டுமே இச்சங்கத்தினுள் அங்கம் வகித்தனர். இவர்களுடன் சிகையலங்காரம் செய்பவர்களையும் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் இது தமிழ்நாடு மருத்துவச் சமூக மத்திய சங்கம் என மாற்றம் பெற்றது. சிகையலங்கார தொழில் செய்பவர்களுக்காக மட்டும் தனியாகப் பின்னாளில் 'தமிழ்நாடு சவரத்தொழிலாளர் சங்கம்' என்ற பெயரில் சங்கம் தோற்றம் பெற்றது. இதன் பொறுப்பாளராக டாக்டர் சிவானந்தம் இருந்தார். இச்சங்கத்திற்குப் போட்டியாகத் 'தமிழ்நாடு மருத்துவர் சவரத் தொழிலாளர் நலச்சங்கம்' என்ற மற்றொரு சங்கம் உருவானது. இதன் முக்கியத் தலைவராக எம். நடேசன் இருந்தார். அதன்பின்னர் மருத்துவச் சமுதாயத்தில் பிறந்து இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு மறைந்த தியாகி விசுவநாததாஸ் அவர்களின் நினைவாக

அவருடைய பெயரில் 'தியாகி விஸ்வநாததாஸ் சிகையலங்காரப் பணியாளர் சங்கம்' தோற்றம் பெற்றது. தற்போது 'கடையுரிமையாளர் மற்றும் உடல் உழைப்பாளர் சங்கம்' என்ற அமைப்பும் உருவாகியுள்ளது.

முதன்முதலில் சங்கம் அமைத்த சமூகம் மருத்துவச் சமூகமே ஆகும். ஆனால் இச்சமூகத்தில் ஒரு சங்கம் மட்டும் இல்லை; பல்வேறு சங்கங்கள் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் சங்கங்களை முறையாகச் செயல்படுத்துவதற்கு நல்லத் தலைவர் இல்லாததே ஆகும். சங்க நிர்வாகிகள் முறையாகச் செயல்படாத காரணத்தினால் சங்கம் சிதைவடைந்து புதிய சங்கங்கள் தோற்றம் பெற்றுள்ளன. மேலும் மக்களிடையே போதுமான ஒற்றுமை காண்பதற்கில்லை. இவ்வளவு சங்கங்கள் வந்தப் பின்பும் இதுவரை சங்கத்தில் சேராத மக்கள் அதிக அளவில் காணப்படுகின்றனர். சிலர் சங்கத்தின்மீது நம்பிக்கைத்தன்மை இல்லை என்று கூறுகின்றனர். சங்கம் என்பது மக்களின் நலனுக்காக உருவாக்கப்படுவதே. ஆனால் இச்சமூக சங்கங்கள் அனைத்தும் மக்களுக்கு நலன்கள் எதுவும் செய்யவில்லை. சங்க நிர்வாகிகள் தங்கள் நலனுக்காகச் சங்கத்தைப் பயன்படுத்திக் கொண்டனர். களஆய்வின்போது ஒருவர் மாத சந்தா வாங்குவதற்கு மட்டுமே சங்கத்தின் சார்பில் வருவார்கள். மற்ற நேரங்களில் அவர்களைக் காணமுடிவதில்லை. நாங்கள் கொடுக்கும் சந்தா என்ன ஆனது? என்பது தெரியவில்லை. எனவேதான் எங்களுக்குச் சங்கத்தின்மீது நம்பிக்கையில்லாமல் போனது என்று கூறுகிறார்.

குமரி மாவட்டத்தில் தற்போது 'குமரி மாவட்ட சவரத் தொழிலாளர் சங்கம்' என்ற பெயரில் புதிய சங்கம் தோன்றியுள்ளது. இச்சங்கம் உள்ளவர்கள் ஏற்கனவே வேறு சங்கத்தில் இருந்தவர்கள்தான். மாநில சங்கத்திற்குத் தாங்கள் வருட சந்தா முறையாகச் செலுத்தி வந்தபோதும் எங்களுக்காக அவர்கள் எதுவும் செய்யவில்லை. எனவே நாங்களாகவே இச்சங்கத்தைப் பதிவுச் செய்து நடத்தி வருவதாகக் கூறுகின்றனர். மேலும் இச்சங்கம் தோற்றம் பெற்று ஒரு வருடத்தினுள் 30,000 ரூபாய் சேமித்து வைத்துள்ளதாகவும், மருத்துவ இனமக்களின் தேவைகளுக்கு ஏற்ப கடன் வழங்கப்படுகின்றது. மேலும் படிக்க வசதியில்லாத மாணவர்களுக்கு உதவிகள், சமூகத்தில் யாராவது இறந்தால் ஈமச்

சடங்கிற்கு 1000 ரூபாய், திருமணத்திற்கு 500 ரூபாய் என்று உதவிகள் செய்வதாகக் கூறுகின்றனர். வீடுகள் இல்லாத மருத்துவ இனமக்களுக்கு வீட்டுமனைப் பட்டா; நலவாரியத்தின்மூலம் கிடைக்கும் உதவிகளையும் சங்கத்தின்மூலம் வாங்கிக் கொடுப்பதாகக் கூறுகின்றனர்.

பண்டிதர் எஸ்.எஸ். ஆனந்தர் மக்களின் விழிப்புணர்ச்சிக்காகவும், நலனுக்காகவும், வளர்ச்சிக்காகவும் முதன்முதலில் சங்கம் ஆரம்பித்து செயல்படுத்தி வந்தார். ஆனால் இன்று அவரின் வழி நின்று இச்சங்கங்களை முறையாகச் செயல்படுத்துவதற்குப் பொதுநோக்கும், சமூகநோக்கும் உடைய நல்லத் தலைவர் கிடைக்காமல் மருத்துவ இனம் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இத்தகைய மருத்துவ இனம் மறுமலர்ச்சி அடைய ஆய்வு நோக்கில் சில வழிமுறைகள்:

❖ மருத்துவச் சமூக மக்கள் அனைவரும் தங்களின் விருப்பு வெறுப்புகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஒற்றுமையோடு வாழ்தல்.

❖ எல்லோரும் ஒன்று கூடி மாவட்ட வாரியாக நல்லத் தலைவரைத் தேர்வு செய்தல்; மாவட்டத் தலைவர்கள் தங்களை வழிநடத்த மாநிலத் தலைவர் ஒருவரைத் தேர்வு செய்தல். அல்லது இருப்பவர்களையே முழுமனதோடு ஏற்றுக் கொள்ளுதல்.

❖ ஒரே பெயரில் சங்கம் அமையுமாறுச் செய்தல்.

❖ மாவட்ட கிளைச் சங்கங்களின் நிர்வாக அமைப்புகளை நெறிப்படுத்தி மாநில அமைப்புகளோடு ஒருங்கிணைப்புச் செய்தல்.

❖ மருத்துவ இனமக்களின் எண்ணிக்கை இன்றும் சரியாகக் கணக்கிடப்படவில்லை. எனவே மக்கள் தொகையினைத் துல்லியமாகக் கணக்கிடுதல் வேண்டும். அப்போதுதான் சங்கத் தீர்மானங்களான அரசுக்கு வைக்கும்போது பயனுடையதாக இருக்கும்.

- ❖ சங்க வழிமுறைகளைப் பட்டியலிட்டு அவ்விதிமுறைக்குள் மாவட்ட, மாநில கிளைச் சங்கங்களைச் செயல்பட வைத்தல்.

- ❖ மருத்துவ இனத்தில் படித்தவர்கள் தங்களை மருத்துவ இனம் என்று கூறிக் கொள்வதில் வெட்கப்படுகின்றனர். அதனைப் போக்கிப் படித்தவர்களையும் அமைப்பினுள் கொண்டு வருதல்.

- ❖ சங்க வரவு செலவுகளை மாதந்தோறும் சங்கக் கூட்டத்திலேயே எல்லோரும் கேட்கும்படி கூறுதல்.

- ❖ இன்று அழகுநிலையங்களை மருத்துவ இனப்பெண்களை விட வேறு இனமக்களே அதிகமாகச் செய்கின்றனர். எனவே அதிக வருமானம் தருகின்ற அத்தொழிலை மருத்துவஇனப் பெண்களுக்கு இலவசமாகக் கற்றுக் கொடுக்க வழிமுறைகள் செய்தல். மருத்துவஇனப் பெண்கள் ஒன்று சேர்ந்து எல்லா மாவட்டங்களிலும் மகளீரமைப்புகள் உருவாக்குதல்.

- ❖ தேவையில்லாத செலவுகளைக் குறைத்து மக்களிடையே சேமிக்கும் பழக்கத்தை உருவாக்குதல். அப்போதுதான் மருத்துவஇனம் பொருளாதார அடிப்படையில் வளர்ச்சியடையும் என்பனப் போன்ற முதற்கட்ட பணிகளைச் செய்தால் கண்டிப்பாக மருத்துவச் சங்கமும் மருத்துவ இனமும் பெரும் வளர்ச்சியடையும் என்பது உண்மை.

### இதழ்கள்

சமுதாயத்தில் மிகவும் ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் சமுதாயம் விழிப்புணர்ச்சி அடையவும், அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறவும் ஆயுதமாக இதழ்களையும், பத்திரிகைகளையும் நடத்தி வருகின்றனர். ஆங்கிலேயர் ஆட்சி காலத்திலிருந்து இன்றுவரை பதிமூன்று பத்திரிக்கைகள் நடத்தி வருவதாக ரகுபதி (2006:80, 81) குறிப்பிடுகிறார். அவை,

| | |
|---|---|
| 1. மருத்துவன் (1929) | பண்டிதம் எஸ்.எஸ். ஆனந்தர். |
| 2 வழிகாட்டி | திருச்சி மனச்ச நல்லூர் மாணிக்கம் |
| 3 அம்பட்டன் | பெயர் தெரியவில்லை |

| | | |
|---|---|---|
| 4 | நாம் | ஆவுடையப்பன் |
| 5 | டீம் | ஏ.வி.பி. இளங்கீரன் |
| 6 | சமுதாய மடல் (1989) | சி. வைத்தியநாதன் |
| 7 | சமுதாயக் காவலன் | சி. வைத்தியநாதன் |
| 8 | ஒற்றுமைக்குரல் (1992) | பி. செல்வராஜ் |
| 9 | சோலை மலர் (1997-1999) | ஆசனா ஐ. தங்கவேல் |
| 10 | பண்டித ஆனந்தம் (2000-2002) | ஆசனா ஐ. தங்கவேல் |
| 11 | மருத்துவர் சமூக முரசு (2003) | எஸ்.எம். சாமி |
| 12 | பண்டிதம் (2003) | ஆசனா ஐ. தங்கவேல் |
| 13 | ஆனந்தர் குரல் | ஏ.வி.பி. இளங்கீரன் |

களஆய்வின்போது பண்டிதம், சமுதாய மடல் என்ற இரு பத்திரிகைகள் மட்டுமே சேகரிக்க முடிந்தது. இவற்றில் வழிகாட்டி, அம்பட்டன், நாம் ஆகிய பத்திரிகைகள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வெளிவந்தவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்பத்திரிகைகள் எல்லாம் திருநெல்வேலி, தூத்துக்குடி, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், சென்னை ஆகிய இடங்களில் மருத்துவ இனமக்களிடமே பெரும்பாலும் புழங்கி வருகின்றன. குமரி மாவட்டத்தில் இப்பத்திரிகைகள் இம்மக்களிடம் புழக்கத்தில் காண்பதற்கில்லை.

பண்டிதம் என்ற இதழ் மட்டும் இன்றும் திறம்பட வெளிவந்து கொண்டிருக்கின்றது. இவ்விதழில் அம்பேத்கர், பெரியார் ஆகியோர்களின் கருத்துகள், சிறுகதைகள், அயல்நாட்டுச் சிறுகதைகள், ஆய்வுக் கட்டுரைகள் முதலியவை தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்படுகின்றன. இதன் ஆசிரியர் ஆசனா. ஐ. தங்கவேல் ஆவார். இவர் தனியார் கல்லூரி ஒன்றின் ஆய்வுக்கூடத்தில் பணிபுரிந்து வருகின்றார். இவர் கடுமையான பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டே இவ்விதழை மருத்துவச் சமுதாய விழிப்புணர்ச்சி மாத இதழாக வெளியிட்டு வருகின்றார்.

# 2. மருத்துவர் சமூக உறவும் ஒடுக்குமுறைகளும்

மருத்துவ இனமக்கள் தாங்கள் சேவைச் செய்யும் ஆதிக்கச் சாதி மக்களுடன் நெருங்கிய உறவினை வைத்துள்ளனர். இவர்களைக் குடிமகன் என்று அழைப்பதன்மூலம் இவர்களுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவு புலப்படுகிறது. ஆதிக்க மற்றும் தாழ்த்தப்பட்ட சாதி மக்களின் குடும்ப நிகழ்வுகள் மருத்துவருக்குத் தெரியாமல் நடைபெறுவதில்லை. இந்த உறவுகள் தற்போதும் வழக்கிலிருந்து வருகின்றமை காணமுடிகிறது.

ஒவ்வொரு சாதி அல்லது இனக்குழுவினருக்கும் தங்களை அழகுபடுத்திக் கொள்ளவும், தங்கள் துணிகளைச் சுத்தப்படுத்தவும் நாவிதரும், வண்ணாரும் தேவைப்பட்டனர். எனவேதான் தங்கள் சமுகத்திற்கென்று தனித்தனியாக வண்ணார், நாவிதர்களைக் குடியமர்த்தினர். ஆரம்பகாலத்தில் இவர்கள் பிராமணர், வெள்ளாளர் ஆகிய சாதிகளுக்கு மட்டுமே சேவைப் பணி செய்து வந்தனர். பிற சாதி மக்களுக்கு இவர்கள் பணி செய்ய மறுத்தனர். கிராமங்களில் சாதி இந்துக்கள் பெற்று வந்த நாவிதர், வண்ணார் ஆகியோரது தொண்டுகள் நாடார்களுக்கு மறுக்கப்பட்டன (1979:39) என்று ஹார்டுகிரேவ் குறிப்பிடுகிறார். எனவே ஒவ்வொரு சாதியினரும் பிற்காலத்தில் தங்களுக்கென்று தனிப்பட்ட மருத்துவர்களைக் குடியமர்த்திக் கொண்டனர் என்பதை அறியமுடிகிறது. இங்ஙனம் குடியமர்த்தப்பட்டவர்கள் பரம்பரையாகத் தங்கள் இனமக்களுக்கே சேவைச் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் விதிக்கப்பட்டிருந்தது. அழகுபடுத்துதல் என்பது உடல் முழுவதையும் அழகுபடுத்துவதேயாகும். நகம் வெட்டுதல் தொடங்கி உடலில் அந்தரங்கப் பகுதிகள் வரை எல்லா இடங்களிலும் அழகுபடுத்தினர். ஆண்களுக்கு நாவிதர்களும், பெண்களுக்கு நாவிதிச்சிகளும் அழகுபடுத்தும் பணியினைச் செய்து வந்தனர். எனவே இவர்களுக்கு எல்லா மக்களிடமும் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. எனவே ஊரில் உள்ள எல்லாச் செய்திகளையும் எல்லோருடைய குணநலன்களையும், பண்புகளையும் இவர்கள் அறிந்திருந்தனர்.

### சடங்கியல் மரபில் மருத்துவர்

சடங்குகள் மனிதவாழ்வியலோடு பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. ஆதிக்கச் சாதியினரின் வாழ்வியல்ச் சடங்குகளில் மருத்துவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். இவர்களின் வாழ்வியல்ச் சடங்கினை மருத்துவரே முன்நின்று நடத்துகின்றனர். இதனால் இவர் சில நாட்களுக்கு முன்பே சடங்கு நிகழும் இடத்தில் தங்கி இருந்து பணியினைச் செய்கின்றனர். இச்சடங்குகளைச் செய்யும்போது சில இடங்களில் பிராமணர்கள் போலவும், சில இடங்களில் வெட்டியானைப் போன்றும் செயல்படுகின்றனர். தாழ்த்தப்பட்ட இனத்தவரான பறையர், பள்ளர், பழங்குடிகள் ஆகியோர்களுக்கு இவர்கள் சேவைச் செய்வது இல்லை. எனவே தற்போது ஒரு சில இடங்களில் அவர்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்களே இப்பணியினைச் செய்து வருகின்றனர். சடங்கியல் மரபில் சமூக உறவினை ஆதிக்கச் சாதியினரும் மருத்துவரும், தாழ்த்தப்பட்டவரும் மருத்துவரும் என இரண்டாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### ஆதிக்கச்சாதியினரும் மருத்துவரும்

இன்று ஆதிக்கச் சாதியினராக விளங்குகின்ற நாடார், நாயர், யாதவர், குலாலர், விஸ்வகர்மா, கிருஷ்ணவகை முதலிய சமுதாய மக்களிடம் மருத்துவ இனமக்களின் உறவுமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் நாடார் இனமக்களின் உறவுமுறை விரிவாகவும், மற்றச் சமூகத்தினரின் உறவுமுறைகள் இவர்களிடமிருந்து மாறுபட்டவை மட்டும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன.

### நாடார்

குமரிமாவட்டத்தில் நாடார் சமூகத்திற்கு ஊர் வேலை செய்யும் மருத்துவர்கள் 'குடிமகன்', 'காவுதி' என்னும் பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். இவ்வினத்தவர்களின் வாழ்க்கை வட்டச் சடங்குகள் அனைத்திலும் மருத்துவர்கள் முக்கியமானவராகக் கருதப்படுகின்றனர். இவர்கள் இல்லாமல் சடங்குகளே நடைபெறுவதில்லை எனலாம்.

### பிறப்புச் சடங்கு

பெண் கருவுற்று இருக்கும்போதே மருத்துவர்களின் பணி தொடங்கி விடுகின்றது. மருத்துவச்சி கருவுற்றத் தாய்க்குத் தேவையான மருந்துகளைத் தயார் செய்து கொடுப்பதுடன்

அறிவுரைகள் கூறி மனதைரியமும், நம்பிக்கையும் ஊட்டுகிறாள். பேறுகாலம் வரையிலும் தினமும் கவனித்துக் கொள்கிறாள். பிரசவம் எப்போது நடக்கும் என்பதைத் தனது அனுபவ முதிர்ச்சியின் காரணமாகக் கூறுகிறாள். பிரசவத்தையும் அவளே முன்நின்று நடத்தி, குழந்தை பிறந்ததும் அதற்குச் சேனைக் கொடுக்கும் சடங்கினையும் செய்கின்றாள். பேறுகாலம் பார்ப்பதற்கு ஊதியமாக நெல், தேங்காய், பணம் ஆகியவற்றைத் தட்சணை என்ற பெயரில் பெற்றுக் கொள்கின்றனர். தாய்க்குத் தினமும் குளிப்பதற்கு வேம்பு, நொச்சி, ஆடாதொடை முதலிய மருத்துவக் குணமுள்ள இலைகளைத் தண்ணீரில் கொதிக்க வைத்துக் குளிக்கக் கொடுக்கிறாள். குழந்தையினைப் பக்குவமாக எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுவதும் இவளே. நாற்பத்தொரு நாட்களும் குழந்தை இவளுடைய பாதுகாப்பில்தான் இருக்கும். குழந்தைக்கு வருகின்ற சிறிய நோய்களுக்கு இவர்களே மருந்தும் கொடுப்பர். இதற்கு ஊதியமாகச் சாப்பாடு மட்டுமே கொடுக்கப்பட்டது.

குழந்தைக்கு ஒரு வயது ஆனதும் மருத்துவரை அழைத்து முடி மழிக்குமாறு கூறுகின்றனர். முடி மழிப்பதை வீடுகளில் அல்லது கோயில்களில் வைத்துச் செய்கின்றனர். கோயில்களில் அல்லது வேறு மருத்துவர்களைக் கொண்டு முடி மழித்தாலும் இவர்களுக்குத் தட்சணையாகத் தேங்காய், நெல், பணம் கொடுக்கும் மரபு இன்றும் இருப்பதை அறியலாம்.

## பூப்புச் சடங்கு

பூப்புச் சடங்கினை மருத்துவர்கள் அந்தணர்களைப் போன்று நடத்துகின்றனர். சடங்கின்போது பூப்படைந்தப் பெண்ணின் தலையில் அத்தைமுறை உள்ளவர்களைத் தண்ணீர் ஊற்றுமாறு மருத்துவர் கூறுகின்றார். தண்ணீர் ஊற்றிக் குளிப்பாட்டிய பிறகு, அப்பெண்ணை அழகுப்படுத்தி நடுவீட்டில் அல்லது வீட்டின் முன் ‘குறுங்கட்டியில்’ (குறுங்கட்டி என்பது மரத்திலான இருக்கையினை குறிக்கும்). உட்கார வைக்கின்றனர். பெண்ணின் முன் தலைவாழை இலைபோட்டு தேங்காய், பழம், நிறை நாழி நெல் ஆகியவற்றை வைத்து வழிபடுவதை ‘பிள்ளையார் படையல்’ என்பர். தேங்காய்ப் பாலில் அருகம்புல்லை நனைத்து, அதைப் பெண்ணின் தலையின்மீது மூன்று முறை தெளித்துத் தீட்டுக் கழிக்கின்றனர். பின்னர், வண்ணார் கொடுக்கும் மாற்றுத்துணியினை (மாற்றுத்துணி என்பது வண்ணாத்தி தன்னிடம் உள்ள வெளுத்தத் துணியினை கொடுப்பதாகும். இதனை மாத்து என்றும் கூறுவர்.) அணிவித்து தீட்டுக்கழித்து வீட்டின் உள் அழைத்துச் செல்லுமாறு

கூறுகிறார். மீதிப்பாலைக் கூரையின் மீது அல்லது வெளியே விடுகிறார். அவ்வீட்டினை மாட்டுச் சாணத்தினால் அல்லது தண்ணீரால் கழுவி தூய்மைப்படுத்துவது மருத்துவச்சியின் கடமையாகும். இறுதியில் பிள்ளையாருக்குப் படையலாக வைத்த பொருட்களையும், தட்சணையாக வைத்த பணத்தினையும் இவர்களே எடுத்துக் கொள்ளுகின்றனர்.

## திருமணச் சடங்கு

நாடார் இனத் திருமணச் சடங்கில் மருத்துவர்கள் இல்லை என்றால் அது பெருங்குறையாகப் பேசப்படுவது வழக்கமாக உள்ளது. இங்கு மருத்துவர் உரத்த குரலில் சடங்குமுறைகளைக் கூறுவர். திருமணத்திற்கான முறைமைகள் (சடங்குகள்) அனைத்தையும் முறையாகச் செய்பவர்கள் இவரே ஆவார். திருமணச் சடங்கினைத் திருமணத்திற்கு முன்பு நடைபெறுபவை, திருமணத்தன்று நடைபெறுபவை என்று பகுத்தறியப்படுகின்றன.

## திருமணத்திற்கு முன்பு நடைபெறுபவை

நாடார் இனமக்களின் வீடுகளில் திருமணத்திற்கு முன்னர் அடுப்புவெட்டுதல், பந்தலுக்கு மண் அணைத்தல், வண்டு பிடித்தல், மிளகு இடித்தல், பாக்கு வெட்டுதல், பட்டை பிடித்தல், இலை எடுத்தல் முதலிய பணிகளை மருத்துவர்கள் செய்கின்றனர்.. தற்போது இவைகள் வழக்கிழந்தும் வேறு சடங்குகளாகவும் மாற்றம் பெற்றுள்ளன.

## அடுப்பு வெட்டுதல்

கிராமங்களில் திருமணத்திற்கு முன்னர் சமையல் செய்வதற்குத் தேவையான அடுப்பினை மருத்துவர்கள், மண்ணில் செய்து கொடுக்கும் மரபு காணப்பட்டது. இதனையே 'அடுப்பு வெட்டுதல்' என்பர். தற்போது இப்பழக்கம் மறைந்து வருகின்றது. ஆனால், சடங்கிற்காக இவர்கள் ஒரு வெட்டாவது வெட்டுமாறு கூறுவதைக் காணமுடிகின்றது. அடுப்பு வெட்ட தட்சணையாகப் பணம் கொடுப்பர்.

## பாக்கு வெட்டுதல்

திருமணத்திற்கு வருகைதரும் விருந்தினர்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் விருந்து சாப்பிட்ட பின்பு வெற்றிலை, பாக்கு போடுவது மரபு. அதற்குத் தேவையானப் பாக்கினை வெட்டி, அதன்மேல் தோலினை நீக்கி சாப்பிடுவதற்கு ஏற்ப வைப்பது இவர்களுடைய பணியே ஆகும். இதனைத் திருமணத்திற்கு முந்தைய நாள் மாலையில் செய்கின்றனர். பலவிதமான சடங்குகளும், மரபுகளும் மறைந்து போனாலும்

இன்றும் பாக்கு வெட்டிக் கொடுக்கும் வழக்கம் கிராமப்புறங்களில் இருந்து வருகின்றது கண்கூடாகும்.

## பந்தலுக்கு மண் அணைத்தல்

கிராமப்புறங்களில் திருமண வீட்டின் முன் பந்தல் போடும் மரபு உள்ளது. இந்த பந்தலுக்குள் மழைநீர் சமையல் கழிவுநீர் ஆகியவை பந்தலுக்குள் வராமல் இருப்பதற்கும் மண் அணைக்கும் மரபும் இருந்து வருகிறது. இதனை மருத்துவர்களே செய்கின்றனர். இதற்கு 'பிடிமண் வைத்தல்' என்னும் பெயருமுண்டு. தற்போது நவீன வசதிகளுடன் மண்டபங்கள் வந்தமையால் இப்பணியினைச் செய்ய வேண்டிய தேவைக் குறைந்து வருகிறது.

## வண்டு பிடித்தல் (அடை)

ஆரம்பக் காலத்தில் திருமண வீட்டில் உணவுப் பண்டங்களை மண் பானையில் சமைக்கும் மரபு இருந்துள்ளது. மண் பானையின் அடிப்பாகம் உருண்டு இருப்பதால் அது கீழே சரிந்து, விழாமல் இருப்பதற்கு வண்டு பிடித்து (அடை) வைப்பர். இந்த பணியினைச் செய்பவர்கள் மருத்துவர்களே. வைக்கோல், உலர்ந்த வாழையிலை (கரியிலை), கயிறு ஆகியவற்றைப் பயன்படுத்தி வட்ட வடிவில் செய்வதை வண்டு பிடித்தல் என்பர். உலோகப் பாத்திரங்கள் வந்த பின்பு இதன் பயன்பாடு குறைந்து வருகிறது.

## மிளகு இடித்தல்

திருமண வீடுகளில் சமையலுக்குத் தேவையான மிளகு, வத்தல், மல்லி, மஞ்சள், ஏலம், பட்டைகள் ஆகியவற்றை உரலிட்டு இடிப்பதை 'மிளகு இடித்தல்' என்பர். மருத்துவச்சிகள் இப்பணியை செய்கின்றனர். இதனை திருமணத்திற்கு சில நாட்களுக்கு முன்பே செய்யும் வழக்கம் காணப்படுகின்றது. இதற்கு உணவு மட்டுமே கூலியாகக் கொடுப்பர். தற்போது அரவை மில்களில் கொடுத்து இவைகளைப் பொடிக்கின்றனர்.

## பட்டைப் பிடித்தல்

திருமண விருந்திற்குத் தேவையான குழம்பு வகைகளை அண்டாவிலிருந்து எடுப்பதற்குப் பனை ஓலையில் செய்த பட்டைகளைப் (தோண்டி) பயன்படுத்தும் மரபு இன்றும் இருந்து வருகிறது. பனை ஓலைப் பட்டையினைப் பயன்படுத்துவதால் கையில் வெப்பம் அதிகமாகப் பாதிக்காது. இறந்தவீட்டில் கஞ்சி கொடுக்கும்போது இப்பட்டையினை பயன்படுத்துவது மரபு.

அதனை இவர்களே செய்து கொடுக்கின்றனர். தற்போது பட்டைகளைச் சந்தையிலிருந்து வாங்கி வருகின்றனர்.

## இலை எடுத்தல்

திருமணத்தின்போது விருந்து பரிமாறப்படுவது தமிழரின் மரபாகக் காணப்படுகின்றது. இவ்விருந்துகள் தலைவாழை இலைப்போட்டுக் கொடுப்பது வழக்கம். இலையில் சாப்பிட்டு முடித்த பிறகு எச்சில் இலையெடுத்தல், இருந்த இடத்தை அல்லது மேசையினைச் சுத்தம் செய்தல், கை கழுவுவதற்கு தண்ணீர் கொடுத்தல் ஆகியவை மருத்துவர்களின் பணியே ஆகும். கிராமப்புறங்களில் முன்னர், மாப்பிள்ளை வீட்டில் இருவேளைச் செலவும் (விருந்து), பெண்வீட்டில் ஒரு வேளைச் செலவும் வைத்திருந்தனர். ஆனால் தற்போது இருவீட்டிலும் ஒரு நேரச் செலவாக வைக்கும் வழக்கத்தை மிகுதியும் காணமுடிகிறது. ஒரு சில இடங்களில் இரு வேளை செலவு இப்போதும் நடைபெறுவதுண்டு. இந்நிகழ்வுகளில் இலையெடுப்பதற்குக் கூலியாக ஒரு பெட்டிச் சாப்பாடு கொடுத்தனர். தற்போது இலையெடுப்பதற்குத் தனியாகக் கூலி பேசியே செல்லுவதாகக் கள ஆய்வில் கூறுகின்றனர். திருமணத்தின் முந்தினநாள் வண்ணார் மாத்து கொடுக்கும்போது சடங்கிற்காக அல்லது மரபிற்காக மருத்துவச்சி உடன் இருப்பது தற்போதும் காணப்படுகிறது.

## திருமணத்தன்று நடைபெறுபவை

திருமணத்தன்று காலையிலிருந்து இரவு வரை பலவிதமான பணிகளை மருத்துவர்கள் மேற்கொள்ளுகின்றனர்.

உரிமைப்பட்ட மருத்துவரானவர், திருமணத்தன்று காலையில் குளித்து, இறைவனை வழிபட்டு முதல் நபராக திருமண வீட்டிற்கு வருகிறார். அவர் ஊரின் முக்கிய வீதிகள், தெருக்களில் நின்று உரத்தக் குரலில் 'கல்யாண வீட்டிற்குக் கால் நாட்ட ஊர் நாடாக்கமாருகள் வாருங்கள்' என்று மூன்றுமுறைக் கூறுகின்றார். இதனையே 'ஊர் அழைத்தல்' என்பர். இந்நிகழ்வு இன்று வழக்கிழந்து வருகின்றது. இதனைத் திருமணத்திற்கு முதல் நாள் எல்லா உறவினர்களையும் அழைக்கும் கடமை நாவிதருக்கே என்று வடிவேலன் (1976:82) குறிப்பிடுவது இங்கே ஒப்புநோக்கத் தக்கதாகும்.

## கன்னி வேலை

ஊர் அழைத்தபின்னர் மணமகனின் வீட்டிற்கு வந்து மணமகனின் முகத்தில் தேங்காய்பால் தடவி சவரம் செய்கின்றார். இதனைக் 'கன்னி வேலை' என்று கூறுகின்றனர். இதனைத் திருமணத்தின்போது மணமகனுக்கு 'மாப்பிள்ளைச் சவரம் செய்தல்' என்ற பெயரில் அவனது அந்தரங்கப் பகுதியிலிருக்கும் மயிரை மழிக்கின்ற சமயத்தில் மணமகனின் உடல் ஆரோக்கியம் சோதனை செய்யப்படுகிறது. இதனை 'மாப்பிள்ளைச் சவரம்' என்று விசுவநாத கண்டாராதித்தன் குறிப்பிடுவதாக ரகுபதி (2006:29) மேற்கோள் காட்டுகிறார். இதனையே மிகவும் சூசகமாய் 'கன்னிவேலை' என்று குறிப்பிடுகின்றனர். இதற்கு மணமகன் மருத்துவரின் மகிழ்ச்சிக்கேற்ப பணம் கொடுக்கின்றார். தற்போது இப்பழக்கம் நடைமுறையிலில்லை, மாறாக சடங்கிற்காகச் சவரக்கத்தியினை மணமகன் முகத்தில் வைத்து எடுக்கும் நிகழ்வு காணப்படுகின்றது.

**கால் நாட்டுதல்**

கன்னி வேலை முடிந்ததும் மருத்துவர் ஆலமரத்தின் சிறியக் கிளை ஒன்றினை வெட்டி வரும் வழக்கம் காணப்படுகின்றது. மணமகன் வீட்டின்முன் இரண்டு பெஞ்சுளைப்போட்டு ஒன்றின்மீது வெள்ளை வேட்டியை விரித்துப் போடுகிறார். அதற்குமுன் உள்ள பெஞ்சியில் பிள்ளையாருக்கு, நிறைநாழி, குத்து விளக்கு, வெற்றிலை, பாக்கு, பூ, பழம், சிறிது விபூதி ஆகியவற்றைப் படைக்கின்றனர். பனை ஓலைப் பெட்டியில் மண் கொண்டு வந்து பெஞ்சின் அருகில் வைக்கின்றனர். வெள்ளை வேட்டி விரித்த பெஞ்சில் மாப்பிள்ளையைத் தெற்குத்திசை நோக்கி அமரச்செய்வர். உரத்த குரலில் 'கால் நாட்ட மாப்பிள்ளை வீட்டுச் சொக்காரமார்கள் வாருங்கள்' என்று மூன்று முறை அழைக்கிறார். சொக்காரர்கள் வந்ததும் ஊர்த்தலைவரின் தலைமையில் ஆலமரக்கிளையைப் பெட்டியில் உள்ள மண்ணில் நாட்டுகின்றனர். சில இடங்களில் தரையில் குழி தோண்டி கால் நாட்டும் பழக்கமும் உள்ளது. முற்காலத்தில் தரையில் கால் நாட்டும் வழக்கம் இருந்தது. தற்போது வசதிக்காக பெட்டியில் கால் நாட்டுகின்ற பழக்கத்தையும் காணமுடிகிறது. கால்நாட்டும் வேளையில் பெண்களைக் குரவையிடுமாறு கூறுவர். கால்நாட்டும்போது ஆலமரக்கிளையில் மஞ்சள் தடவி வெற்றிலை வைத்துக் கட்டி; சந்தனம், குங்குமம்

வைத்து நாட்டுகின்றனர். கால் நாட்டி முடிந்ததும் மணமகன் வீட்டிலிருந்து கால் நாட்டியதற்கான ஊர்ப்பணத்தை இவரே வாங்கி ஊர்த்தலைவரிடம் கொடுக்கிறார். இங்ஙனம், மணமக்கள் ஆல்போல் தழைக்க வேண்டும் என்பதற்காக கால் நாட்டுகின்றனர்.

### மாப்பேத்து சடங்கு

சடங்கினை முன்நின்று நடத்தும் மருத்துவர், மாப்பிள்ளையின் தாய் மாமனை அழைத்து பந்தலில் தனியே அமரச் செய்கிறார். மணமகனின் தாயாரிடம் நார்பெட்டியில் அரிசி, துணி ஆகிய பொருட்களைக் கொண்டுவரச் செய்து தாய்மாமனின் காலின்முன் வைத்து வணங்குமாறு கூறுகிறார். தாய்மாமன் மற்றும் மாப்பிள்ளை ஆகியோரின் நெற்றிகளில் விபூதியைப் பூசிவிடுவார். மணமகனைத் தாய்மாமன் காலில் விழுந்து வணங்குமாறு கூறுவார். அப்போது தாய்மாமன் அன்பளிப்பாகப் பரிசுகளை மணமகனுக்கு கொடுக்கிறார். அதன்பிறகு தாய்மாமனின் மனைவியை வரவழைத்து நார்பெட்டியினை வீட்டிற்குள் எடுத்துச் செல்லக் கூறுகிறார். இதுவே 'மாப்பேத்து சடங்கு' என்று கூறப்படுகிறது. மருத்துவரின் மகிழ்ச்சிக்கேற்ப தாய்மாமன் அன்பளிப்பு வழங்குவார்.

### மணமகன் அனந்தரம்

மாப்பேத்து சடங்கு முடிந்ததும் சொக்காரமார்களை மாப்பிள்ளைக்கு அனந்தரம் செய்ய வருமாறு உரத்தக் குரலில் அழைக்கிறார். மாப்பிள்ளையின் முன்னால் தேங்காய் பாலில் ஆலிலைகள் அல்லது வெற்றிலையினைச் சிறு துண்டாகக் கீறிப்போட்டு ஒரு பாத்திரத்தில் மருத்துவர் வைத்திருப்பார். பாலில் கிடக்கும் ஆலிலை அல்லது வெற்றிலைத் துண்டின்மூலம் அனந்தரம் செய்வார்கள். அதாவது, பாலில் கிடக்கும் ஆலிலையை எடுத்து மணமகனின் முகத்திற்கு முன்னே சொக்காரர்கள் ஆரத்தி எடுப்பதுபோல் காட்டுவர்கள். இந்நிகழ்வுமூலம் சொக்காரர்களின் உறவு வெளிப்படும் என்று சாமுவேல்தாசன் (1987:16) குறிப்பிடுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது. அனந்தரம் செய்து முடித்தபின்னர் பிள்ளையாரையும், ஆலங்காலையும் தொட்டு வணங்கிச் செல்லுமாறு மாப்பிள்ளையிடம் மருத்துவர் கூறுகிறார். மணமகனை மருத்துவரும் சேர்ந்து அலங்காரம் செய்கிறார். அப்போது தன்னிடம் இருக்கும் கத்தி ஒன்றினைக் கொடுத்து, இடுப்பில் செருகி வைக்குமாறு பணிகிறார். மணமகன் கழுத்தில் போடும் மாலையில்

உள்ள பூவின் வாசனையில் துர்தேவதைகள் புகுந்துவிடக் கூடாது என்பதற்காக இவ்வாறு செய்கிறார். இந்நிகழ்வு தற்போது வழக்கிழந்து உள்ளது. மணமகன் வீட்டிலிருந்து புறப்படும்போது மருத்துவர் மணமகனுக்குக் குடை பிடித்து வருவது வழக்கம்.

### எதிர்மாலை சந்தனம்

மேளதாளங்கள் ஒலித்து முன் செல்ல மணமகனுக்கு மருத்துவர் குடையினைப் பிடித்து மணப்பெண் வீட்டின் உள்ள மணப்பந்தலின் முன் அழைத்து வருவார். மாப்பிள்ளை வருவதற்கு முன்பாக நடைபாதையில் மாத்து விரித்து வைத்திருப்பர். பந்தலுக்கு வெளியே நிற்கும் மணமகனை மணமகளின் சகோதரர்கள் மற்றும் பெண் வீட்டு மருத்துவர் ஆகியோர் குடைப்பிடித்து எதிர்மாலையும் சந்தனமும் கொண்டு வந்து வரவேற்பர். மணமகளின் சகோதரன், தான் வைத்திருக்கும் மாலையை மணமகனுக்குச் சூட்டி, அவர் அணிந்திருக்கும் மாலையை எடுத்துக் கொள்கிறார். அப்பொழுது மணமகனுக்குச் சந்தனம், குங்குமம் வைக்கும் சடங்கு இரு வீட்டு மருத்துவர்களின் வழிகாட்டுதலின் பேரிலும் நடைபெறுகிறது.

### மணமகள் வீட்டு மருத்துவர்

மணமகன் பந்தலில் வந்து அமர்ந்தவுடன் மருத்துவர் பெண்ணின் இளைய சகோதரியை அணையாவிளக்கு (வாடா விளக்கு) கொண்டு வருமாறு உரத்தக் குரலில் கூறுகின்றார். அவ்விளக்கினை மணமகனின் முன்னால் வைக்கச் சொல்லுகின்றார். அவருக்கு பரிசுப்பொருள் வழங்குகின்றனர். மாப்பிள்ளை வீட்டில் கால்நாட்டு சடங்கு நடைபெற்றது போன்று பெண்வீட்டிலும் நடைபெறுவது வழக்கம். பெண்வீட்டில் மணவறையின் பக்கத்தில் கால் நாட்டப்படுகின்றது.

### பெண் அழைத்தல்

மருத்துவர் மணவறையில் குத்துவிளக்கேற்றி வாழை இலையில் பழம், வெற்றிலை, பாக்கு முதலியவற்றை பிள்ளையாருக்குப் படைத்து வைக்கின்றார். இதன்பின் பெண்ணை அழைத்து வருமாறு உரத்தக் குரலில் கூறுகிறார். அப்போது மணப்பெண்ணின் மதனி (பெண்ணின் சகோதரன் மனைவி) மணப்பந்தலுக்கு அழைத்து வருகிறார்.

### மாமன் கல்யாணம்

ஆண், மகனுக்குப் பெண்ணைக் கொடுப்பதற்கு முன்னால் மாமன் கல்யாணம் நடத்துகின்றார்கள். பெண் இந்தச் சடங்கில்

முறைப்படி மாமனுக்கு உரியவள் என்பது நிரூபிக்கப்படுகிறது. ஆகவே, இந்த உறவை முறிப்பதற்கு மாமனுக்குப் பொருட்கள் பரிசளிக்கப்படுகின்றன; மாமனும் பரிசளிப்பதுண்டு என்று சாமுவேல்தாசன் (1987:15) உரைக்கிறார். மாமன் கல்யாணத்தை மருத்துவரே நடத்துவார். முதலில் தாய்மாமனை மணவறையில் அமரச்செய்து அவரின் நெற்றியில் விபூதி இட்டு, பெண்ணின் இரண்டு கைகளையும் சேர்த்து விரித்த நிலையில் வைத்து கையில் அரிசியினையும், தேங்காயினையும் வைப்பார். ஆல் இலையில் தேங்காய் பாலினை எடுத்து பெண்ணின் கையில் உள்ள தேங்காய், அரிசியின்மீது ஊற்றுவார். அப்போது பெண்ணின் கையிலும், தாய்மாமன் கையிலும் மஞ்சள் துண்டு வைத்து காப்புக் கட்டிவிடுவார். இச்சடங்கு மணமகன் முன்னிலையில் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மணப்பெண் அனந்தரம்

மாமன் கல்யாணம் முடிந்தவுடன் பெண் வீட்டாரைப் பார்த்து 'அனந்தரம் செய்ய பெண்வீட்டுச் சொக்காரமாரு வாருங்கள்' என்று உரத்த குரலில் மருத்துவர் அழைப்பார். உடனே பெண்வீட்டுச் சொக்காரமார்கள் தேங்காய் பாலினை ஆலிலையால் தெளித்து அனந்தரம் செய்வார்கள். இச்சடங்கு முடிந்தவுடன் மருத்துவர் கூறியவாறு மணப்பெண் தாய்மாமன், பெரியவர்கள் ஆகியோரை வணங்கி விடைபெறுகிறார். மாப்பிள்ளை வீட்டாரைப் பெண்ணுக்குத் துணி கொடுக்கச் செல்லுமாறு கூறுவார். மணமகனின் சகோதரிகளும் மதனியும் துணியினை எடுத்துச் சென்று பெண்ணை அலங்காரம் செய்கின்றனர்.

## தாலி கட்டுதல்

மணமகனை மணவறையில் வந்து அமருமாறு மருத்துவர் அழைப்பார். மணமகன் மணவறையில் வந்து அமர்ந்தவுடன் மணமகளை அலங்காரம் செய்து அழைத்து வருமாறு கூறுவார். மணமகளை மணமகனின் இடது பக்கத்தில் அமருமாறு செய்வார். சிவலிங்கம் பதித்த தாலியினை மணமகளின் சகோதரனிடம் கொடுத்து பெரியவர்களிடம் ஆசீர்வாதம் வாங்கி வருமாறு கூறுவார். மணமகனின் தந்தையை அழைத்து தாலியை எடுத்து மணமகனின் கையில் கொடுக்குமாறு கூறுவார். தாலி கட்டும்போது வலது கை முந்த வேண்டும் என்று மணமகனிடம் அறிவுறுத்துவார். இவர் 'கெட்டிமேளம் கெட்டிமேளம்' என்று உரத்தக்குரலில் கூற மேளம்

அடிக்கப்படுகின்றது. இவர் மங்களசச்சங்கினை ஊத தாலிக்கட்டும் சடங்கு நடைபெறுகிறது.

திருமணம் நடக்கும்போது மருத்துவர் புரோகிதருக்கு உதவியாக, அவருக்குத் தேவையான பொருட்களைத் திருமண வீட்டாரிடம் இருந்து உடனுக்குடன் வாங்கிக் கொடுப்பார். சில நிகழ்வுகளை உரத்தக் குரலில் சத்தமாகக் கூறுவார். மணமகளின் சகோதரனிடம் மணமக்களுக்கு சோறும் பழமும் கொடுக்குமாறும், சாப்பிட்ட பிறகு வெற்றிலையை மடித்துக் கொடுக்கக் கூறுவதும் இவரே. பெண்ணின் தந்தையிடம் மணமக்களின் கைப்பிடித்துக் கொடுக்குமாறு கூறுகின்றார். அவர் கூறியது போன்று மணமக்கள் மணவறையை மூன்றுமுறை சுற்றி வருவர். அவ்வாறு சுற்றும்போது முதலில் மணமகளின் சகோதரன் அணையாவிளக்கு (வாடாவிளக்கு) கொண்டுச் செல்ல; அதைத்தொடர்ந்து மணமக்களும், பின்னர் பேழைப்பெட்டிக்காரியும் (மணமகனின் சகோதரி) மணவறையைச் சுற்றுகின்றனர். தொடர்ந்து, மாப்பிள்ளை வீட்டுச் சொக்காரமார்களை அனந்தரம் செய்ய வருமாறு மருத்துவர் அழைப்பார். அவர்கள் அனந்தரம் செய்தபின் மீதி இருக்கும் தேங்காய்ப் பாலினை ஆலங்காலில் கொண்டுவிடுமாறு மாப்பிள்ளையின் சகோதரனிடம் கூறுவார்.

திருமணம் முடிந்ததும் மருத்துவர் கிண்ணத்திலிருக்கும் எண்ணெயினைத் தொட்டு மணமகனின் தலையில் வைக்குமாறு மணமகளிடம் கூறுவார். மணமகனையும் அதேப்போன்று மணமகளின் தலையில் வைக்குமாறு கூறுவார். மாப்பிள்ளை வீட்டு வாகனம் ஓட்டுநருக்கானப் படியினை வாங்கிக் கொடுப்பதும் இவர்களே. இன்று இம்மரபுகள் வழக்கிழந்தும், மாறுபட்டும் காணப்படுகின்றன. மருத்துவரின் இப்பணிகளைப் பற்றி சாமுவேல்தாசன் (1987:16) கூறும்போது, குடும்பத்திற்கு உகந்த நாவிதன் குடிமகன் எனக் கருதப்படுகிறான். திருமணத்திற்கு மாப்பிள்ளை வந்தபின் நாவிதன் ஊர்மக்களைக் கூவி அழைப்பான். மணநிகழ்ச்சிகள் நடைபெறும் போதும் உரத்தக்குரலில் நிகழ்ச்சிகளை அறிவித்துக் கொண்டிருப்பான். பந்தல் அலங்கரிப்புகூட நாவிதன் பொறுப்புதான் என்றும் கூற்று ஏற்புடையதாகும்.

## இறப்புச் சடங்கு

பண்டைய காலம் முதல் இன்றுவரை இறந்தவர்களுக்குச் செய்யும் சடங்குகள் சமுதாயம், மதம், நாடு முதலியவற்றிற்கு ஏற்ப பல மாறுபாடுகளுடன் விளங்குகின்றன. மனிதவாழ்வில் கடைசி அத்தியாயம் இறப்பு நிகழ்ச்சியாகும். இறந்தவரின் ஆன்மா சாந்தியடையவும், இருப்போர் துன்பமின்றி வாழவும் பல சடங்குகளை மக்கள் மேற்கொள்ளுகின்றனர். ஆதிகால மனிதர்களிடையே முதன்முதலில் தோன்றிய சடங்கு ஈமச்சடங்காகும். தொல்காப்பியர், இறந்தபின் செய்யும் சடங்குகளாகக் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். நாடார் சமுதாய மக்களின் இறப்புச் சடங்கில் மருத்துவர்களே முக்கியமானவராகக் கருதப்படுகின்றனர். இம்மக்களிடம் இறந்தவரை எரிக்கும் வழக்கமும், புதைக்கின்ற வழக்கமும் காணப்படுகின்றன.

## பந்தல் போடுதல்

இறப்புச் செய்தியினை முதலில் மருத்துவரிடமே தெரிவிக்கின்றனர். அவர் வீட்டின்முன்பு பச்சைத் தென்னை ஓலையினால் பந்தல் போடுவார் அல்லது வீட்டின் கூரையின் மேல் விரித்துப் போடுவார். அது துக்கம் விசாரிக்க வருபவருக்கு இறந்த வீட்டினை அடையாளப்படுத்திக் காட்டும் விதமாக அமையும். தற்போது பச்சைத் தென்னை ஓலையின்மையாலும், நாகரிக வளர்ச்சியின் காணரமாகவும் பச்சை ஓலைக்குப் பதிலாகக் கூரைவிரிப்புகளையே அதிகமாகப் பயன்படுத்துகின்றனர்.

## அறிவித்தல்

இறந்தவீட்டின் முன் நின்று மருத்துவர் சங்கினை ஊதி ஊராருக்கு இறப்புச் செய்தியினை முதன் முதலாக அறிவிப்பார். இறப்புச் செய்தியினை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறிவித்தல் மிக முக்கியமான பணியாகும். இந்த அறிவிக்கும் பணியினை இவர்களே செய்துள்ளனர். இறந்தவரின் உறவினர் வீடுகளுக்குச் சென்று 'நான் இன்னார் வீட்டில் இருந்து வருகின்றேன், வீட்டில் இன்னார் இறந்துவிட்டார்' என்று கூறுவார். இழவுச் செய்தியினைக் கேட்டவர்கள் இவர்களுக்குப் பணம் கொடுப்பதும் உண்டு. தற்போது இவர்கள் செய்தியினைக் கூறச் செல்வதில்லை. தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக இன்று தொலைபேசி மூலமாகவோ, நாளிதழ்கள் மூலமாகவோ பிற

தகவல் தொடர்பு சாதனங்கள் மூலமாகவோ செய்தியினை அறிவிக்கின்றனர்.

**நீர்மாலை**

மருத்துவர் இறந்தவரின் கால், நாடி ஆகியனவற்றைத் துணியினால் கட்டுவார். இறந்தவரின் தலைமாட்டில் வைக்கப்பட்டுள்ள இலையில் நெல், விபூதி, சாம்பிராணித்திரி இவற்றைப் படைத்து விளக்கேற்றி வைப்பார். இறந்தவரின் மகன்களை அழைத்து மண்குடத்துடன் ஊர்க்குளம் அல்லது ஆற்றில் சென்று குளிக்குமாறு கூறுவார். குளித்த பிறகு கோடியினைக் (புதுத்துணி) (கோடியினைச் சகோதரியின் கணவன் அதாவது அத்தான், *மாமா முறை உறவினர்கள் வாங்கிக் கொடுப்பர்*) கொடுக்குமாறு கூறுவார். கோடியைக் கட்டியபிறகு, மகன்களுக்குத் திருநீறு பூசி, மண்குடத்தில் தண்ணீர் எடுத்து மூத்த மகனின் தலையில் வைத்து மாத்தினை அதற்குமேல் விரிக்கும்படி கூறுவார். மாத்தினைப் பிடிப்பவர்களின் கைகளில் மாவிலைகளைக் கொடுப்பார். மாத்தின் உள்ளே மூத்த மகன் வர இவர் முன்னே சங்கினை ஊதிக்கொண்டே வீட்டிற்குத் திரும்பி வருவார். இதனை நீர்மாலை எடுத்தல் என்கின்றனர்.

அவ்வாறு நீர்மாலையைக் கொண்டு வந்தபிறகு பிணத்தை வீட்டிலிருந்து வெளியே கொண்டுவந்து முன்புறம் போடப்பட்டிருக்கும் கட்டில் அல்லது பெஞ்சின் மீது படுக்க வைப்பர். மருத்துவர் பிணத்தின் முகத்தில் சவரம் செய்வார். மகன்கள் நீர்மாலையின்போது கொண்டு வந்த நீரினை விடும்போது மருத்துவர் இறந்தவரை நீராட்டுகின்றார். நீராட்டி அழகுபடுத்த சோப்பு, விபூதி, களபம், பன்னீர், நல்லெண்ணெய், ஈஞ்சை, பவுடர் ஆகியவற்றைப் பயன்படுத்துவர். இதுகுறித்து, ஆண் பிணத்தை ஆண்களும், பெண்ணின் பிணத்தைப் பெண்களும் நீராட்டுவர் என்று கேலிண்டா (1991:80) குறிப்பிடுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மருத்துவர் இறந்தவருக்கு புதுத் துணி உடுத்து அவரை தெற்கு வடக்காகப் படுக்க வைப்பார். அவ்வுடலுக்கு மாலை அணிவித்து, பக்கத்தில் நிறைநாழி, சாம்பிராணித்திரி ஆகியவற்றைக் படைத்து வைப்பார் இரண்டு தட்டுகளை எடுத்து அதில் ஒன்றில்

பச்சரிசியும், மற்றொன்றில் தேங்காய் நீரும் வைப்பர். முதலில் பெண்களை வாய்க்கரிசி போட வருமாறு உரத்தக் குரலில் அழைப்பார். வாய்க்கரிசி இடுதல் என்பது பிணத்தின் வாயில் பச்சரிசியிட்டு தேங்காய் நீர் விடுவதைக் குறிப்பதாகும். பெண்கள் காசு வைத்து வாய்க்கரிசிப் போடுவர். அவர்கள் எல்லோரும் வாய்க்கரிசி போட்டு முடிந்ததும் வெள்ளை வேட்டித் துணியினால் பிணத்தின் முகத்தைத் தவிர மற்ற பாகங்கள் வெளியே தெரியாதபடி கட்டுவார். இவர் கட்டி வைத்த பாடையின் மீது பிணத்தை வைப்பர். தற்போது பாடைக் கட்டும் மரபு காண்பதற்கில்லை. மாறாக இறந்தவர்கள் படுத்து இருந்த கட்டிலைப் பாடையாகக் கொண்டுச் செல்லுவதைக் காணமுடிகின்றது. பாடையினைத் தூக்கும் முன்பு மண் சட்டியில் தீயினை வைத்து இறந்தவரின் மூத்த மகனிடம் மருத்துவர் கொடுப்பார். பிணத்தினை சுடுகாடு அல்லது புதைக்கும் இடத்திற்கு எடுத்துச் செல்லும் போது முன்னால் இவர் சங்கினை ஊதி ஒலி எழுப்பிக் கொண்டே செல்வார். இதனால் பிணம் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்வதை அறிந்துகொள்ள முடிகின்றது.

## குழிவெட்டுதல்

மருத்துவர்கள் பிணத்தைப் புதைக்கின்ற புதைகுழியினை வெட்டுவது வழக்கம். இதற்கு ஊதியமாகப் பணம் கொடுப்பார்கள். சில இடங்களில் ஊர்க்காரர்கள் இணைந்து வெட்டுவதும் உண்டு. அப்போது குழிவெட்டுவதற்கான அளவினை மட்டுமே இவர்கள் வெட்டிக் கொடுப்பார்கள். பிணத்தைச் சுடுகாட்டிற்குக் கொண்டு வந்ததும் மூன்று முறை குழியினைச் சுற்றும்படிக் கூறுவார். அவர் கூறியதற்கேற்ப சுற்றி முடிந்ததும் பிணத்தைக் குழிக்கரையில் இறக்கி வைப்பர். அப்போது ஆண்களை வாய்க்கரிசி போட வருமாறு அழைப்பார். அனைவரும் வாய்க்கரிசி போட்ட பிறகு கடைசியில் மூத்த மகனை வாய்க்கரிசி போடுமாறு அழைப்பார். அவனிடம் எஞ்சியுள்ள அனைத்து அரிசியையும் வாய்க்கரிசியாக போட்டு விடுமாறு கூறுவார்.

## கொள்ளிக்குடம்

வாய்க்கரிசிப் போட்ட பின் மூத்தமகனின் தோளில் மண்பானையில் தண்ணீர் எடுத்துக் கொடுத்து, மூன்று முறை குழியினைச் சுற்றுமாறு கூறுவார். ஒவ்வொரு சுற்றுக்கும் இவர் வெட்டுக் கத்தியினால் பானையைக் கொத்தி ஓட்டை போடுவார்.

இவ்வாறு மூன்று ஓட்டைகள் ஆயுத எழுத்து வடிவத்தில் போடுவார். கடைசி சுற்று சுற்றி முடிந்ததும் பானையினைப் பின்நோக்கிப் போடுமாறு சொல்லி; இவர் அதனை மண்வெட்டியின் பின் புறத்தால் தட்டி உடைப்பார். சில இடங்களில் பிணத்தைக் குழியில் வைத்து அதன்மீது கதம்பை அடுக்கிய பின்பு கொள்ளிக்குடம் உடைக்கும் வழக்கமும் காணப்படுகின்றது. அப்போது இறந்தவரின் குடும்பக்காரர்களையும், மகன்களையும் அழைத்து கூடி நின்று 'அப்போ' 'அப்போ' என்று சப்தமிட மற்றவர்களும் சப்தமிட்டுக் கொண்டே குழியினை மூன்று முறை சுற்றுவர். இறந்தது பெண்ணாக இருந்தால் 'அம்மோ' 'அம்மோ' என்று சப்தமிடுவர். குழியில் அடுக்கப்பட்ட கதம்பை அல்லது விறகின்மீது ஈஞ்சையினைப் பரப்புவார். மூத்தமகனிடம் சடலத்தின் தலை, கால், இடை ஆகிய உறுப்புக்களில் தீச்சட்டியில் கொண்டு வந்தத் தீயினை வைக்குமாறு கூறுவார். அதன் பிறகு, இவர் பிணத்தின் தலையைப் பிடிக்கவும் மற்றவர்கள் காலைப் பிடித்துத் தூக்கி மூன்றுமுறை அசைத்து-ஆத்தி தலையைக்கமத்தி அல்லது நிமிர்த்தி வைப்பர். மகன்களின் தலையிலிருந்து சிறிது முடியினைச் சவரக் கத்தியினால் மழித்து குழியில் போடுவார். அதன்மீது கதம்பை அடுக்கி வைக்கோல் பொதிந்து மண்பூசுமாறு கூறுவார். மகன்களுக்குக் குழிக்கரையில் வைத்து மொட்டை அடிப்பதும் உண்டு. இல்லையென்றால், ஏழாம்நாள் சடங்கு நடைபெறும்போது மொட்டையடிப்பர். சனிக்கிழமை இறந்திருந்தால் இவர் கோழிக் குஞ்சு ஒன்றினைக் கொண்டு வரச்செய்து, அதன் தலையினை அறுத்து இரத்தத்தைக் குழியைச் சுற்றி விடுவார். இது 'சனிப்பிணம் தனியே போகாது' என்ற நம்பிக்கையின்பாற்பட்டது.

தொடர்ந்து குழிக்கரையில் வண்ணாரை மாத்து விரிக்கும்படி கூறுவார். இவர் வாய்க்கரிசியில் போட்டக் காசுகளை ஊர்த்தலைவரிடம் அப்படியே ஒப்படைப்பார். அவர்கள் மாத்தில் அமர்ந்து அப்பணத்துடன் அவர்களுக்குரிய கூலியினையும் சேர்த்து இருவருக்கும் சமமாகக் கொடுப்பார்கள். கூலியினைக் கொடுக்கும்போது இவர்களின் முகத்தைப் பார்க்காமல் இடது கையினால் கொடுக்கின்றனர். இடது கையில் பணம் கொடுப்பது என்பது இழவு வீட்டில் மட்டுமே உள்ள நடைமுறையாகும். அதன்பிறகு பதினாறாம் நாள் சடங்கு எப்பொழுது நடைபெறும் என்பதை ஊர்த்தலைவர் ஆலோசனை செய்து கூறுவார். அதனை மருத்துவர் உரத்தக் குரலில் அறிவிப்பார். இவர் இறந்தவர் பயன்படுத்திய பொருட்களில் தேவையானவற்றை மட்டும் எடுத்துவிட்டு மீதியினை எரித்துவிடுகின்றார்.

## அடியந்திரம்

இறந்தவருக்கு நடத்தப்படும் சடங்கினை 'அடியந்திரம்' என்று வழங்குகின்றனர். இதனை, 'அஸ்தி எடுத்தல்' என்றும் 'ஏழாம் நாள் சடங்கு' என்றும், 'ஏழாம் நாள் காரியம்' என்றும் பலவாறு கூறுகின்றனர். இச்சடங்கினை வசதிக்கேற்ப செய்வார்கள்.

## மூலைக்கு வைத்தல்

ஈமக்காரியம் செய்வதற்கு முந்தையநாள் இரவில் வீட்டில் வைத்து மூலைக்கு வைத்தல் சடங்குச் செய்கின்றனர். அன்று பிள்ளையாருக்குப் படையல் வைப்பர். இவர் வைக்கோலால் வண்டு பிடித்து அதில் புதிய மண்பானையினை வைத்து, அதனுள் விரியாத தென்னம்பூவினை வைத்து பானை முழுவதும் நெல் நிறைப்பார். பூசைப்பொருட்களைப் படையல் வைத்து விளக்கு ஏற்றி வைப்பார். உப்புப் போடாமல் அவித்த பெரும்பயறையும், கருப்புக்கட்டியையும், உறவினர்கள் கொண்டு வந்த எல்லா விதமான பண்டங்களையும் சேர்த்து ஒரே இலையில் படைப்பார். இறந்தவரின் மூத்த மகனை வீட்டின் வெளியே வடக்குத் தெற்காக உட்கார வைத்துக் கையில் காப்புக் கட்டுவார். இதன்பின் மருத்துவர் மூன்று முறை சங்கினை ஊதுவார். அப்பொழுது இறந்தவரின் உறவினர், மகன்களுடன் சேர்ந்து ஒருவர் மற்றொருவரின் தோளைப் பிடித்துக்கொண்டு தரையினைப் பார்த்து 'அப்போ, அப்போ' என்று சப்தமிடுவார்கள். அதன் பின்பு பிள்ளையாருக்குப் படையல் வைத்த இடத்தில் இறந்தவரின் குழந்தைகளை அழுமாறு கூறுவார். அவர்கள் அழுகின்ற சத்தத்தில் தென்ன்ம்பூ தானே விரிய வேண்டும் என்று கூறுவார். மருத்துவர் எல்லாம் முடிந்த பின் படையல் வைத்தப் பண்டங்களில் தனக்குத் தேவையானவற்றை முதலில் எடுத்துக் கொள்ளுவார். எஞ்சியவற்றை உறவினர்கள் பங்கிட்டுக் கொள்கின்றனர்.

## அஸ்தி கரைத்தல்

மறுநாள் அதாவது ஏழாம்நாள் காலையில் ஐந்து மணிக்கே மருத்துவர் இறந்தவரின் வீட்டிற்குச் சென்றுவிடுவார். இவருடன் இறந்தவரின் மகன்கள் மற்றும் உறவினர்களும் சேர்ந்து குழிக்கரைக்குச் சூரியன் உதிக்கும் முன்பே சென்று விடுவார்கள். இவர் இறந்தவரின் மகன்களுக்கு ஏற்கனவே மொட்டையடிக்காமல் இருந்தால் அன்று மொட்டையடிப்பார். இதன்பின் மகன்களுக்குத் திருநீறு பூசி விடுவார். மகனிடம் குழியின் தலை, கால்,

இடைப்பகுதிகளிலிருந்து எலும்புகளை மண்வெட்டியின் மூலம் எடுக்குமாறு கூறுவார். எலும்பினை எடுத்து அதனை வெள்ளைத்துண்டில் வைத்துக் குழியின் இருபுறமும் இரண்டு பேர் நின்று பிடிக்க இவர் முறையே தண்ணீர், பன்னீர், பசுமாட்டின் கோமம், இளநீர், பால், வாசனைத் திரவியம், தேன் இவற்றால் சுத்தம் செய்வார். அந்த எலும்புகளை வேக வைக்காத பச்சை மண்பானையில் வைத்து அவற்றைச் சிவப்புத்துணியினால் கட்டி, பூவினால் அலங்காரம் செய்வார். புதைக்குழியினை மண்ணால் மூடி அதை செம்மைப்படுத்தி தலைப்பகுதி உயர்ந்து இருக்குமாறு செய்வார். மூத்தமகனிடம் நவதானியங்களை குழியின்மேல் விதைக்குமாறு கூறுவார். தென்னங்கன்றினை குழியின் நடுவில் நடுவார் அல்லது இரவு வீட்டில் வைத்த தென்னம் பூவினை நட்டு வைப்பர். குழிக்கரை முழுவதையும் பூவினால் அழகுபடுத்துவார்.

இறந்தவரின் மூத்தமகன் அஸ்திப்பானையினை தலையில் வைத்து நடந்து செல்ல, மருத்துவர் அவருக்கு முன்னால் சங்கினை ஊதி ஒலி எழுப்பிக் கொண்டே வருவார். அஸ்திப் பானையினை வீட்டின் முற்றத்தில் வைப்பர். பெண்கள் அதில் பூபோட்டு வணங்குவர். இதன்பின் அஸ்தியைக் கரைப்பதற்கு ஆறு அல்லது கடலுக்கு எடுத்துச் செல்வார்கள். மருத்துவர் கடலுக்குக் கொண்டு சென்றதும் கடற்கரை மணலில் பொம்மை போன்ற உருவம் பிடித்து, அதின்மேல் அஸ்தி பானையினைப் போடுமாறு கூறுவார். அவ்வாறு போடும்போது அப்பொம்மை உருவத்தின் மீது வைத்து பானையினை உடைப்பார். மகனின் கையில் முன்தினம் கட்டிய காப்பினை அறுத்து திரும்பிப் பார்க்காமல் கடலில் குளிக்கும்படி கூறுவார். நீராடி வந்த பின்பு மகன்களுக்குத் திருநீறு பூசி விடுவார். சடங்கின் முடிவில் அனைவருக்கும் விருந்து அளிப்பர். இவர் தமக்குரிய ஊதியமாக அரிசி, தேங்காய், நெல், பணம் முதலியவற்றைக் கேட்டு வாங்கிக் கொள்வார்.

***நாயர்***

நாயர் இன மக்களுக்குச் சேவைப் பணியினைச் செய்கின்ற மருத்துவர்களை விளக்குத்தலைவன், விளக்குத்தலை நாயர் என்று அழைக்கின்றனர்.

நாயர் இனமக்களின் குழந்தைப் பேற்றினை மருத்துவச்சிகளாக விளங்கும் விளக்குத்தலைநாயர் இனப்பெண்களே பார்க்கின்றனர். இவர்கள் குழந்தை பிறந்த இருபத்தெட்டாம்நாள் நூல்கட்டும் சடங்கினைச் செய்கின்றனர்.

அன்று மருத்துவர்கள், பிள்ளையார் தெய்வத்திற்கு நிறைநாழி நெல், வெற்றிலை, பாக்கு ஆகியவற்றைப் படையல் வைத்து விளக்கேற்றி வைக்கின்றனர். இதற்குப் பூசையில் வைத்த பொருட்களும், பணமும் ஊதியமாகக் கொடுக்கின்றனர். பூப்படைந்தப் பெண்ணை நாயர் இனமக்களும் தீட்டாகவே கருதுகின்றனர். எனவே தீட்டுக் கழித்தல் சடங்கினை இவர்களை வைத்தே நடத்துகின்றனர்.

நாயர் இன மக்களின் திருமணத்தின்போது குடிமகனாகிய விளக்குத் தலைநாயர்கள் எப்போதும் பக்கத்தில் இருக்க வேண்டும் என்ற விதிமுறையினை வைத்துள்ளனர். இதனால் திருமணத்தன்று குடிமகன் முழுமையாக அங்கே இருந்து சடங்குகளை நிறைவேற்றுகின்றார்.

இவர்களின் சமுதாயத்தில் இறப்பு நிகழ்ந்து விட்டால் முதலில் மருத்துவரிடம்தான் தகவலைக் கூறுகின்றனர். இறந்தவரின் உடலை நீராட்டுவதற்கு இறந்தவரின் மகள் பக்கத்தில் இருக்கும் கிணற்றில் அல்லது ஆற்றில் சென்று நீரெடுத்து வருவது வழக்கம். நீராட்டிய பின் புது ஆடையினை அணிவித்து வீட்டினுள் தெற்கு வடக்காகப் படுக்கவைக்கின்றனர். அந்த உடலைச் சுற்றி மருத்துவர் மாலை, சிவப்பு ஆடை முதலிய பொருட்களை வைப்பதுடன் தலையருகில் நிறையினை வைப்பார். அதாவது, இலையில் நிறைநாழி நெல், விளக்கு, பத்தி, தென்னம் பூ, தேங்காய், கிழிகட்டிய தேங்காய் முதலியவை வைப்பதை நிறை என்கின்றனர்.

இவ்வினமக்களிடம் பெரும்பாலும் இறந்தவரை எரிக்கும் வழக்கமே காணப்படுகின்றன. மருத்துவர் ஈமச்சடங்கு முடிந்ததும் உறவினர்களை அழைத்து மூன்றுமுறை மாங்குச்சி போட்டு வணங்குமாறு கூறுகின்றார். இவர்கள் பத்தாம்நாள் அஸ்தியெடுக்கும் சடங்கினைச் செய்கின்றனர். அதற்கு முந்தினநாள் மாலை வீட்டின் கன்னிமூலையில் மருத்துவர்கள் விளக்கேற்றி, பூசைப்பொருட்கள் வைத்து இறந்தவரின் குழந்தைகளை ஒப்பாரி வைக்குமாறு கூறுகின்றார். அவ்வாறு ஒப்பாரி வைத்து முடித்த பிறகு அனைவருக்கும் உப்பு போடாமல் அவித்த பயறு கொடுக்கும் வழக்கம் காணப்படுகின்றன.

பத்தாம்நாள் காலையில் இறந்தவரின் மகன்களைக் குழிக்கரைக்கு அழைத்துச் சென்று குழியிலிருந்து எல்லெடுத்து (எலும்பெடுத்து) அதனை, சுத்தம் செய்து இரண்டு கலசங்களில் இடுவர். இந்தக் கலசங்களில் ஒன்று பெரியதாகவும், மற்றொன்று

சிறியதாகவும் இருக்கும். கலசத்தினைச் சிவப்புத்துணிகளால் கட்டிப் பூக்களால் அலங்காரம் செய்கின்றார். இரண்டு கலசங்களையும் சேர்த்து மகனிடம் கொடுத்து; வண்ணாரை மாத்து விரிக்கும்படி கூறி தரையில் பாதம் படாமல் வீட்டின் முற்றத்தில் கொண்டு வைக்குமாறு கூறுகின்றார். வீட்டில் பெண்களையும், ஆண்களையும் அஸ்தியினை வணங்குமாறு செய்கின்றார். சிறிய கலசத்தில் உள்ள அஸ்தியினை ஒரு வருடம் வரை வீட்டில் வைத்து வணங்குமாறு கூறி; வீட்டில் உள்ளவர்களிடம் கலசத்தை ஒப்படைக்கின்றார். பெரிய கலசத்தில் உள்ள அஸ்தியினைக் கடலிலோ, ஆற்றிலோ சென்று மருத்துவரே முன்நின்று கரைக்குமாறு செய்கின்றார். அடக்கம் முடிந்தவுடன் ஊர்த்தலைவன் (பிரமாணி) மருத்துவருக்குரிய பணத்தினை அளிப்பார். இதனைக் 'கட்டைக்கானம்' என்று இவர்கள் கூறுகின்றனர்.

**யாதவர்**

யாதவர்கள் என்பவர்கள் ஆடு, மாடு மேய்த்தலையும், வளர்த்தலையும் தொழிலாகக் கொண்டவர்கள். இவர்கள் குமரி மாவட்டத்தில் புதுக்க நாட்டிடையர், பூவண்டர், காங்கேயர், குட்டை இடையர், மஞ்சனக்கார இடையர், வல்ல இடையர், நம்பி இடையர் எனப் பல பிரிவுகளில் இருப்பதாக் ராஜேஷ் (2006:12) குறிப்பிடுகிறார். இவர்களுக்கும் மருத்துவர்களுக்கும் வாழ்வியலில் சில சமுகஉறவுகள் காணப்படுகின்றன.

மருத்துவ இனப்பெண்களே இவர்களுக்கும் பேறு காலத்தில் மருத்துவச்சியாகப் பணியாற்றுகின்றனர். யாதவர்கள் குழந்தை பிறந்த இருபத்தெட்டாம் நாள் நடைபெறும் சடங்கினைச் 'சட்டிப்பானைத் தொடுதல்' என்பர். இச்சடங்கில் மருத்துவச்சி முதன்மையாக அழைக்கப்படுகின்றாள். அன்று இவர்களுக்கு அரிசி, தேங்காய், காய்கறிகள், பணம் ஆகியவற்றை நன்றி கூறும் விதமாகக் கொடுக்கின்றனர். மருத்துவச்சி அவர்கள் கொடுத்த பணத்தின் ஒரு சிறுபகுதியினைக் குழந்தையிடம் கொடுப்பதும் உண்டு.

இவர்களின் பூப்புச் சடங்கில் மருத்துவர்கள் தற்போது அதிகமாக இடம்பெறுவதில்லை. மருத்துவர்களுக்குப் பதில் அந்தணர்களைப் பயன்படுத்தி தீட்டினைக் கழிக்கின்றனர். முற்காலத்தில் இவர்கள்தான் புனித நீரினை வீட்டிலும்,

பெண்ணின் மீதும் தெளித்துத் தீட்டுச் சடங்கினை நிறைவேற்றியதாகக் களஆய்வின்போது முதியவர்கள் கூறினர்.

இவ்வின மக்களின் திருமணச் சடங்குகளை அந்தணரே நடத்தி வைக்கின்றார். மருத்துவர்களின் பங்களிப்பு இவர்களின் திருமணச் சடங்கில் அதிகமாகக் காண்பதற்கில்லை. இவர்கள் 'அரசாணின் கட்டுதல்' என்ற சடங்கினை மட்டுமே செய்வதைக் காணமுடிகின்றது. திருமணத்தில் தாலிகட்டுவதற்கு முன்னால் மணமேடையில் உள்ள இரு தூண்களிலும் மாவிலை, தர்ப்பைப்புல், சிறிய வாழைக்கன்று அல்லது சிறிய வாழைக்குலை இவற்றைச் சேர்த்துக் கட்டுகின்றனர். இவ்வாறு கட்டுவதை யாதவர்கள் 'அரசாணிக் கட்டுதல்' என்று கூறுகின்றனர். இதனை, நம்பி இடையர், பூவண்டர் ஆகிய பிரிவினரிடையே அரசாணிக் கட்டுதல் சடங்கை நாவிதனே செய்கின்றான். ஆனால் புதுக்க நாட்டிடையர் பிரிவில் வயது முதிர்ந்த பெரியவர் இச்சடங்கைச் செய்கின்றனர் என்று இராஜேஷ் (2006:32) குறிப்பிடுகிறார். திருமணம் முடிந்தபின்பு இவர்கள் தங்களுக்குக் கொடுக்க வேண்டிய படியினைக் கேட்டுப் பெற்றுக் கொள்கின்றனர்.

யாதவர்கள் இறப்புச் சடங்கில் சிதைக்குத் தீ மூட்டிய பின்பு கொள்ளிக்குடம் உடைக்கும் வழக்கமும் காணப்படுகிறது. அப்போது மருத்துவர் உறவுமுறை மைத்துனரிடம் வெட்டுக்கத்தியைக் கொடுத்து ஒரு சுற்றுக்கு ஒரு ஓட்டைவீதம் மூன்று ஓட்டை இடுமாறு கூறுவார். மூன்றாவது முறை சுற்றி முடிந்ததும் மருத்துவர் சிதையின் பின்பக்கமாகப் பானையினை வாங்கி மண்வெட்டியின் பின்னால் தட்டி உடைப்பார். உடைந்த ஓட்டில் சிறிது நீர் எடுத்து மைத்துனரிடம் கொடுத்து தலைப்பகுதியில் விடுமாறு கூறுவார்.

இறந்தவரின் உடலை எரியூட்டிய மறுநாள் காலையில் மூலைக்கு வைத்தல் நிகழ்ச்சி நடைபெறும். அதன் பின்பு பிற இனத்தவர்களைப் போன்று அஸ்தி எடுக்கச் செல்கின்றனர். அஸ்தியினை எடுத்து வீட்டிற்குக் கொண்டு வந்து பெண்கள், உறவினர்கள் காசு, பூ ஆகியவற்றை வைத்து வணங்குமாறு செய்வார்.

பதினோறாம்நாள் சடங்கு நடத்துவதும் உண்டு. அன்று மருத்துவர் குளத்தங்கரையில் தென்னை ஓலை முடைந்து ஒரு சிறிய கூடாரத்தை அமைக்கின்றார். மூத்தமகனிடம் உணவும்,

மீன்குழம்பும் சிறிய பானையில் கொண்டு வைக்கச் சொல்லுவார். இறந்தவரை எரித்த இடத்தில் அன்று மொட்டையடிக்கவில்லை என்றால், பதினாறாம் நாள் இதனைச் செய்வார்கள். உணவும் மீனும் இலையில் வைத்துப் படையலிடுகின்றனர். அந்த உணவினைக் குளத்தில் கரைக்குமாறு கூறுவார். ஒரு குடத்தில் தண்ணீர் கொண்டுவரச் சொல்லி தங்க மோதிரமும், வெள்ளிக் கொலுசும் இட்டு மோதிரத்தை எடுக்குமாறு கூறுவார். மோதிரத்தை எடுத்ததும் 'தீமை போய் நன்மை கண்டேன்' என்று கூறச் செய்கிறார். அதன் பிறகு உறவினர்களுக்கு விருந்து பரிமாறப்படும். இவருக்கு ஊதியமாக யாதவர்கள் காய்கறி, அரிசி, உணவு, பணம் ஆகியவற்றைக் கொடுக்கின்றனர். இறப்புச் சடங்கை முன்நின்று நடத்துவது இவர்களின் முக்கிய கடமையாகும்.

### விஸ்வகர்மா

'விஸ்வகர்மா' என்னும் சொல் தங்க ஆசாரி, மர ஆசாரி, இரும்பு வேலைச் செய்யும் கொல்லர் இவர்களைப் பொதுவாகக் குறிப்பதாகும். இவர்கள் தமிழகத்தில் எல்லா இடங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றனர். இவர்களுக்கு மருத்துவ இனமக்கள் பல பணிகளைச் செய்கின்றனர். விஸ்வகர்மா மக்கள் "நல்லதுக்கும் கெட்டதுக்கும் நாசுவன் வேணும்" என்று கூறுகின்றனர். இதை நடைமுறை வாழ்விலும் காணமுடிகிறது. மருத்துவச்சி இவ்வினத்தவர்களிடமும் பேறுகாலப் பணிகளைச் செய்கின்றாள். குழந்தை' பிறந்த 41-ஆம் நாள் வீட்டைச் சுத்தம் செய்து புனித நீர்த் தெளித்துத் தீட்டைப் போக்குகின்றாள். குழந்தைக்கு நூல் கட்டுதல் நடைபெறும் நாளில் கூலியாக அன்று இவர்கள் கேட்பதைக் கொடுத்துவிடுகின்றனர். பூப்புச்சடங்கிலும் தீட்டுக்கழித்தல் சடங்கினை இவர்களே செய்கின்றனர். மருத்துவர் திருமணத்தின்போது காலையிலே வந்து மணவறையில் பிள்ளையாருக்குப் படையல் வைப்பது, நவதானியங்களை நன்கு நனைத்து வைப்பது முதலிய பணிகளைச் செய்கின்றனர்.

பிற இனத்தவர்களைப் போன்றே இவர்களுக்கு மருத்துவர்கள் இறப்புச் சடங்குகளைச் செய்கின்றனர். நீர்மாலை எடுக்கும் போது மூத்தமகனுக்கு ஆறு சுற்று நூலில் பிரிபோட்டு அதனைக் கழுத்தில் (அந்தணர்கள் போடுவது போன்று) போடுமாறு செய்கின்றார். சுடுகாட்டில் பிற இனத்தவரைப் போன்று அடக்கம் முடிந்த பிறகு மருத்துவர் மாத்து விரிக்குமாறு வண்ணாரிடம் தெரிவிக்கிறார். அதில் ஊரார் அமர்ந்து 'காடாத்து நாள்' என்றைக்கு நடத்தலாம் என்று முடிவு செய்வர். அதனை உரத்தக் குரலில்

மருத்துவர் கூறுகின்றார். அதில் வைத்தே இவர்களுக்குரிய ஊதியத்தை வழங்குகின்றனர்.

காடாத்துச் சடங்கினை விஸ்வகர்மா இனத்தவர்கள் மூன்றாவது அல்லது ஐந்தாவது நாள் வைக்கின்றனர். காடாத்து அன்று உறவினர்கள் மருத்துவரை அழைத்துக்கொண்டு சிதையினை எரியூட்டிய இடத்திற்குச் செல்வர். அங்கு எலும்பெடுத்து சுத்தம் செய்து பின்னர் கடலில் கரைக்கின்றனர். இதற்காக மருத்துவருக்குக் காய்கறி, உணவு, பணம் முதலிய பொருள்கள் பரிசளிக்கப்படுகின்றன.

இறந்த நாற்பத்தொன்றாம்நாள் அடியேந்திரம் எடுக்கும் வழக்கம் காணப்படுகின்றது. அன்று ஆற்றங்கரை அல்லது குளத்தங்கரைக்குச் சென்று பலிச்சோறு சமைத்து, அதில் மூன்று பிண்டங்களை-உருண்டை பிடித்து வைக்குமாறு மருத்துவர் கூறுவார். அவரது கூற்றிற்கு ஏற்ப அதில் ஒன்றினைக் காகத்திற்கும் இரண்டு பிண்டங்களை மூத்த மகனின் தலையிலும் வைத்து ஆற்றில் கரைக்கின்றனர். இதனைப் பலியிடுதல் என்றழைக்கின்றனர். பிண்டத்தைப் பலியிட்ட பின் குளித்துவிட்டு வரும் மகனிடம் மருத்துவர், *"நன்மை கண்டதுண்டா தீமை கண்டதுண்டா"* என்று கேட்க, மகன் நன்மை கண்டதுண்டு என்று பதில் கூறுமாறு சொல்வார். சடங்கின் நிறைவில் எல்லோருக்கும் உணவு வழங்கப்படும். இவருக்குப் பணம் காய்கறிகள் ஆகியவைப் பரிசளிக்கப்படுகின்றது.

### கிருஷ்ணவகை சமுதாயம்

குமரி மாவட்டத்தில் கிருஷ்ணவகை சமுதாயத்தினரைக் 'குறுப்பு' என்று பட்டப்பெயரிட்டு அழைக்கின்றனர். இவர்களுக்குச் சேவைப் பணி செய்கின்றவர்கள் 'விளக்குத்தலைநாயர்' என்றே அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பேறுகாலச் சடங்கில் மருத்துவச்சியின் பணியை முக்கியமாகக் கருதுகின்றனர்.

பூப்புச் சடங்கில் மருத்துவர்களின் பங்கு அதிகமாக இல்லை. இவ்வினத்தவர்கள் அந்தணர்களை வைத்து தீட்டுக்கழித்தல் சடங்கினை நிகழ்த்துகின்றனர்.

திருமணத்தின்போது குறிப்பிட்ட சில வேலைகளை மருத்துவர்களே செய்கின்றனர். திருமணப் பந்தலில் படையல் வைக்க இவர்கள் சாணியினை உருட்டி அதில் மூன்று

அருகம்புல்லினை வைத்து, 'சாணிப் பிள்ளையார்' செய்து வைக்கின்றனர். அதற்கு இவர்களுக்குத் தரும் ஊதியம் 'அம்பட்டப்படி' என்று வழங்கப்படுகின்றது.

இறப்புச் சடங்கின்போது மருத்துவர் முழுமையாக முன்னிலைப் படுத்தப்படுகிறார். நீர்மாலையினை மூத்த மருமகனும், மகளும் எடுத்து வருமாறு கூறுவார். பிணத்தைக் குழிக்கரையின் பக்கத்தில் இறக்கி வைத்து, மருமகனையும், மகனையும் இரண்டாவது நீர்மாலை எடுத்து வருமாறு கூறுவார். மகனின் தலையில் கொள்ளிக் குடத்தை வைத்து ஒவ்வொரு சுற்றுக்கும் ஒரு துளை வீதம் மூன்று துளைகளைப் போடுமாறு மச்சானிடம் கூறுவார். அவர் அதன்படிச் செய்வார். கடைசி சுற்று முடிந்ததும் திரும்பி நிற்குமாறு கூறி; மருத்துவரே குடத்தை வாங்கி உடைப்பார். வண்ணார் மாத்து விரித்து, அதில் பெரியவர்கள் உட்கார்ந்து அம்பட்டப்படியும், அஸ்தி எடுக்கும் நாளையும் முடிவு செய்கின்றனர்.

மூன்றாம் நாள் அஸ்தியினை எடுத்து வீட்டிற்குக் கொண்டு வந்ததும், மருத்துவர் சாணிப் பிள்ளையார் பிடித்து வைத்து அதில் அஸ்தியினை வைப்பார். பின் எல்லோரும் பூப்போட்டு வணங்குமாறு உரத்தக் குரலில் கூறுவார். அதனைக் கடலில் கரைப்பர். இறந்தது முதல் பத்து நாள் வரை 'அம்மாடி தாயாரே' என்னும் ஒப்பாரிப் பாடலைப் பாடி கும்மி அடிப்பார்கள். இதனை மருத்துவச்சி (நாவிதிச்சி) முதலில் பாட மற்றவர்கள் சேர்ந்து பாடுவார்கள். தற்போது மருத்துவச்சி இல்லாமல் கிருஷ்ணவகை சமுதாயப் பெண்கள் இப்பாட்டினைப் பாடுவதைக் காணமுடிகிறது. பாடி முடிந்ததும் தேனீரும், அவித்தப் பயறும் இறந்தவர் நினைவாக வைத்திருப்பர். அதனை பாடல் பாடும் பெண்களுக்கு வழங்குவார்கள்

**குலாலர்**

குமரி மாவட்டத்தில் குலாலர் இனமக்கள் அங்கங்கே சிறு சிறுக் குழுவாக வாழ்கின்றனர். இவர்கள் மண்பாண்டம் செய்வதைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்கள் மருத்துவரை நாவிதன் என்றே அழைக்கின்றனர்.

குலாலர் சமுதாயத்தில் உள்ள பெண்களுக்குப் பேறுகாலம் பார்ப்பதில் மருத்துவச்சி பெரும்பங்கு வகிக்கிறாள். குழந்தை பிறந்தவுடன் மருத்துவச்சி தொப்பிள் கொடியினை அறுத்து நூல்

கட்டுவதை வெளிப்படுத்தும் முகமாக இவ்வினப் பெண்கள் குரவையிடுகின்றனர். மருத்துவச்சி குழந்தையின் அடிவயிற்றில் உள்ள அசுத்தங்கள் வெளியே வருவதற்காக முதன்முதலில் பனங்கற்கண்டினை நீரில் கரைத்து மூன்றுமுறை சேனைத் தொட்டு வைக்கின்றாள். குழந்தையினைச் சுத்தமாகக் குளிப்பாட்டி வயதில் முதிய குலாலர் பெண்களிடம் கொடுக்கின்றார். இதனை 'பிள்ளை மாற்று' என்று கூறுவர். அப்படி பிள்ளை மாற்றும்போதும் பெண்கள் குரவையிட்டுத் தங்கள் மகிழ்ச்சியினை வெளிப்படுத்துவர். ஆண் குழந்தை பிறந்தால் மருத்துவச்சிக்குச் சேலை, பணம் முதலியவற்றைப் பரிசாகக் கொடுக்கின்றனர்.

குழந்தைப் பிறந்த பதினாறு அல்லது இருபத்தொன்றாம்நாள் 'வீடு தொடுதல்' நிகழ்ச்சியினைக் குலாலர் சமுதாயத்தினர் செய்கின்றனர். அன்று மருத்துவச்சி வீட்டினைச் சுத்தம் செய்து மகப்பேறடைந்தப் பெண்ணை, வெந்நீரில் குளிக்க வைத்து அந்நிகழ்ச்சிக்குத் தயார் செய்கின்றாள்; வீடு தொடும் அன்றே நூல்கட்டும் நிகழ்ச்சியும் நடைபெறும். அப்போது மருத்துவச்சி வீட்டின் முற்றத்தைத் தண்ணீர்த் தெளித்து அதில் கோலமிட்டு அழகுசெய்வாள். பின்னர் தாம்பாளத்தில் இருக்கும் பச்சரிசி மீது குழந்தையை நிற்க வைத்து; அரைஞாணம் (நூல்) கட்டுகின்றாள். குழந்தையினை முதன்முதலில் தொட்டு எடுத்த மருத்துவச்சியை முதன்மைப்படுத்துவதற்காக அவ்வாறு செய்கின்றனர்.

பூப்பு மற்றும் திருமணத்தில் மருத்துவர்களின் பங்கு அதிகமாகக் காண்பதற்கில்லை. பூப்புச் சடங்கினை அந்தணர்களை அழைத்து இவர்கள் செய்கின்றனர்.

இறப்புச் சடங்கிற்குப் பந்தல் போடும்போது இறந்தவர்களுக்குப் பிடித்தமான தின்பண்டங்களை வாங்கி மருத்துவர்களிடம் கொடுக்கின்றனர். அதையும் இவர்களே பந்தலில் கட்டித் தொங்கவிடுகின்றனர். *"பந்தலிலே பாவைக்காய் பரலோகம் உங்களுக்குப் பாவைக்காய் எங்களுக்கு"* என்று பாடிக் கொண்டே பாடையினைத் தூக்கும்போது அங்குள்ளவர்கள் தொங்கவிடப் பட்டுள்ள தின்பண்டங்களைப் பறித்தெடுத்து உண்பார்கள்.

மருத்துவர் நீர்மாலைத் தண்ணீரில் பிணத்தைக் குளிப்பாட்டி அழகு செய்து, வாய்க்கரிசி போட வருமாறு அழைக்கின்றார். இறந்தவர் மறுபிறப்பில் பசியின்றி வாழ வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்கின்றனர் என்கிறார் கே.கே.பிள்ளை (1975:285). பெண்கள் வாய்க்கரிசி போட்டு முடிந்ததும் பாடையில் இறந்தவரைக் கொண்டு சென்று ஈமச்சடங்கு செய்கின்றார்.

மூன்றாம் நாள் அஸ்தி எடுத்து கரைக்கும் நிகழ்வினை மருத்துவர் செய்கின்றார். இதற்குரிய ஊதியத்தை இவர்கள் கேட்டு வாங்கிக்கொள்வது வழக்கம்.

### தாழ்த்தப்பட்டவரும் மருத்துவரும்

சடங்கியல் மரபில் தாழ்த்தப்பட்டவர்களான பள்ளர், அருந்ததியர், பழங்குடியினர் ஆகியோர்களது சமூக உறவுநிலை கூறப்பட்டுள்ளது.

### பள்ளர்

பள்ளர் என்னும் தாழ்த்தப்பட்டோருக்குச் சேவைச் செய்வதை மருத்துவர்கள் இழிவாகக் கருதுகின்றனர். எனவே இவர்களுக்குச் சேவை செய்யும் மருத்துவர்களிடம் உயர்ந்த சாதிக்குச் சேவை செய்யும் மருத்துவர்கள் எந்தவிதமான உறவும் வைத்துக் கொள்ளுவதில்லை. குறிப்பாகப் பெண் கொடுத்தல், வாங்கல் வைத்துக் கொள்ளுவதே இல்லை. இவர்களுக்குச் சேவைச் செய்யும் மருத்துவர்களைக் குடிமகன் என்றே அழைக்கின்றனர். இவர்களின் வாழ்வியலில் பிறப்பு, பூப்புச் சடங்கில் மருத்துவரின் பங்கு அதிகமாக இல்லை. இறப்புச் சடங்கில் மட்டும் இவர்களின் பங்களிப்பு தற்போது அதிகமாக உள்ளது. இவர்களுக்கு ஊதியமாக முன்பு, திருமணமானவர் ஒவ்வொரு தலைக்கும் மூன்று மரைக்கால் நெல் கொடுத்துள்ளனர். நெல் இல்லையென்றால் அதற்குத் தகுந்தாற் போல் ஆறு மாதத்திற்கு ஒரு முறை பணம் கொடுப்பார்கள். இவர்கள் மாதத்தில் ஒரு முறை எல்லோருக்கும் சவரம் செய்ய வேண்டும் என்று விதிமுறை வைக்கப்பட்டிருந்தது.

திருமணத்தின்போது மருத்துவர்கள் பிற ஆதிக்கச் சாதியினருக்குச் செய்வது போன்றே பணியினைச் செய்கின்றனர். இறந்த வீட்டின் முன்பு நின்று இரட்டைச் சங்கினை ஊதி ஊருக்கு இழவுச் செய்தியினை அறிவிப்பதும் இவருடைய பணியே. நீர்மாலை எடுக்க குளத்திற்குச் செல்லும்போதும் முன்னால் சங்கினை ஊதிக் கொண்டே செல்வார். பிணத்தினை வீட்டிலிருந்து வெளியே எடுத்துவந்து முகச்சவரம் செய்து எண்ணெய்த் தேய்த்துக் குளிப்பாட்டி அழகுபடுத்துவார். அதன் பிறகு பாடையினையும் இவரே கட்டி வைப்பார். பாடையில் பிணத்தைத் தூக்கிக் கொண்டுச் செல்லும் போது முன்னால் மூத்த மகனிடம் கொள்ளிச் சட்டியினைக் கொடுத்துச் சங்கினை ஊதிக் கொண்டே சுடுகாட்டிற்குக் கொண்டு செல்வார்.

வாய்க்கரிசி போடுபவரின் தலையின்மீது இவர் வெட்டுக் கத்தி"யினால் மூன்று சுற்றுச் சுற்றித் 'தலக்கழிச்சி' விடுவார். கடைசியாக மூத்த மகனை வாய்க்கரிசி போடுமாறு கூறுவார். கொள்ளிப்பானையில் நீர் எடுத்து தோளில் வைத்து மூன்றுமுறை சுற்றச் சொல்லி ஒவ்வொரு சுற்றுக்கும் ஒரு துளை வீதம் போடுவார். கடைசி சுற்றில் பின்பக்கமாகப் பானையைப் போடச்சொல்லி இவரே வாங்கி உடைப்பார். மகனுக்கு மொட்டை அடித்து விட்டு கொள்ளிச்சட்டியில் கொண்டு வந்த தீயினை மூத்த மகனிடம் போடுமாறு கூறுவார். அதன் பின்பு பிணத்தை மூன்றுமுறை அசைத்து-ஆத்தி வைக்குமாறு கூறி இவர் தலைமாட்டைப் பிடித்து ஆத்துவார். பின் தலைக்கமத்தி வைக்குமாறு கூறுவார். அதன் மேல் கதம்பை அடுக்கி வைக்கோல் போட்டுப் பொதிந்து வைப்பார். வண்ணார் மாத்து விரிக்க அதன்மேல் அமர்ந்து பின்னர் உள்ள சடங்குகளை இவர் ஊராருக்குத் தெரிவிப்பார். இவருக்குரிய முறைத்தனத்தைக் (ஊதியம்) கொடுப்பார். மூன்றாம் நாள் அஸ்தி எடுக்கும் நிகழ்வு நடைபெறும். தீட்டுக்கழித்தல் சடங்கை ஒன்பது அல்லது பதினைந்தாம் நாளில் வைப்பர். அன்று மருத்துவரின் கூற்றுப்படி மூத்தமகன் படையல் வைப்பார். இவருக்குரிய ஊதியம் அன்றே வழங்கப்படுகிறது.

### அருந்ததியர்

குமரிமாவட்டத்தில் அருந்ததியர்கள் குறைந்த அளவிலே காணப்படுகின்றனர். இவர்கள் மருத்துவர்களைவிடத் தாழ்ந்த சாதியினராகக் கருதப்படுகின்றனர். மருத்துவர்கள் முற்காலத்தில் இவர்களுக்குச் சேவையோ, தொழிலோ செய்யவில்லை. இதனை, இவர்கள் துணியை இவர்களே துவைத்துக் கொள்ள வேண்டும் இவர்களது முடியை இவர்களே வெட்டிக்கொள்ள வேண்டும். சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்புவரை அருந்ததியர் யாரும் முடிவெட்டுவதில்லை. நீளமாக முடியை வளர்த்திருந்தனர். அம்முடியைக் கொண்டைப்போட்டு வைத்திருந்தனர். ஆனால், முகச்சவரம் செய்ய வெவ்வேறு வழிவகைகளைக் கடைப்பிடித்தனர். பிளேடு வாங்கி அதைச் சோளத் தட்டையில் இணைத்து முகச்சவரம் செய்ததாகவும், சிலர் தாங்கள் தோல் அறுக்கப் பயன்படுத்தும் கூர்மையான கத்தியை நன்கு தீட்டி, பின் சிலேட்டில் எண்ணெய் தடவி, அதிலும் கத்தியைத் தீட்டி கூர்மையாக்கி இறுதியில் தோலில் தீட்டி முகச்சவரம் செய்தார்கள் என்று மாற்கு

(2001:222) குறிப்பிடுகிறார். பறையருக்கு வேலை செய்யும் சவரத் தொழிலாளர்கள் அருந்ததியர்களுக்கு என்று சில கத்திகளைத் தனியாக வைத்திருந்தனர். அந்தக் கத்திகளை அவர்களிடமிருந்து வாங்கி சவரம் செய்து கொண்டனர். கத்திக்குக் கூலியாக அவருக்கு வருடத்திற்கு மூன்று மரக்கால் தானியம் கொடுத்தனர். அதேபோல ஒருவர் இறந்துவிட்டால் அவருக்குச் சவரம் செய்யக் கத்தியைக் கடன் வாங்கியுள்ளனர். அதற்கு ஒரு ரூபாய் கூலியாகக் கொடுத்தனர். சவரத் தொழிலாளிகளை அருந்ததியர்கள் மரியாதையுடன் 'அப்பச்சி' என்றே அழைத்தனர் (மேலது, 2001:222) என்றும் குறிப்பிட்டுள்ளார். எனினும் அருந்ததியரோடு மிக நெருங்கிய உறவினை மருத்துவர்கள் வைத்துக் கொள்வதில்லை. ஒரு சில நிகழ்வுகளுக்கு மட்டும் பழக்கத்தின் அடிப்படையில் செல்கின்றனர்.

குழந்தைப் பேற்றினை அருந்ததியர் இன வயதான தாய்மார்களே பார்க்கின்றனர். அவர்கள் அக்கிராமத்தில் இல்லாத சமயத்தில் மருத்துவ இனப்பெண்களை அழைத்து வந்து பேறுகாலம் பார்த்துள்ளனர். இவர்களிடம் பேறு பார்த்தலுக்காகப் பணம் மட்டுமே பெற்றுக் கொண்டனர். வேறு எந்தப் பொருள்களையும் வாங்குவதும், சாப்பிடுவதும் இல்லை. ஏனெனில் இவர்களை மருத்துவர்கள் தீட்டாகக் கருதியிருக்கலாம். குழந்தை பிறந்து ஒரு வயது ஆனதும் முடியிறக்கி காதுகுத்தும் வழக்கம் அருந்ததியரிடம் உள்ளது. அப்படி முடியிறக்கும்போது மருத்துவரை அழைத்துப் போவதும் உண்டு அல்லது கோயிலில் இருக்கும் மருத்துவர்களை வைத்து மொட்டையடிப்பதும் உண்டு. இறப்பின்போது இறந்தவரின் மகன்களுக்கு மொட்டை போடுவதற்கு மட்டுமே இவர்களை அழைக்கின்றனர். வேறு எல்லாவிதமானச் சடங்குகளையும் அவர்களே செய்கின்றனர். சிலவற்றிற்கு இன்று அந்தணர்களை அழைப்பதும் உண்டு; என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

***பழங்குடியினர்***

பழங்குடியினரிடம் மயிரினைக் குறைத்துக் கொள்ளும் நாகரிகம் முற்காலத்தில் காணப்படவில்லை. அவர்கள் நீண்டத் தலைமுடியினைக் கொண்டிருந்தனர். அத்தலைமுடியினைச் சிக்குகள் இல்லாமல் பேணுவதற்கு மரத்தினால் செய்யப்பட்ட கொம்பு சீப்பினைப் (ஓனக்கருப்பான்) பயன்படுத்தினர். சீப்பினைப் பயன்படுத்தி ஆண்களும், பெண்களும், விதவிதமாகக்

கொண்டைகளை முடிந்து வைத்து இருந்தனர். பழங்குடி மக்கள் தங்கள் தொழில் மற்றும் தேவைக்காகச் சமவெளிப் பகுதிக்கு வருவது வழக்கம். அப்பொழுது சமவெளி மக்களைப் போன்று தங்கள் தலை மயிரினையும் அழகுபடுத்திக் கொண்டனர். அதாவது மயிர்களைக் கொம்பு சீப்பினால் கோதி தலை உச்சியில் மொத்தமாகப் பிடித்துக் கட்டி அந்த இடத்தில் கத்தி அல்லது அரிவாள் கொண்டு வெட்டுவர். இதனைக் கிராப் என்று கூறுகின்றனர். குழந்தைகளுக்குத் தலைமுடியினை ஐந்து வயதிற்கு மேலே வெட்டுவார்கள். இதன்பின்பு முகத்தை அழகுபடுத்தும் கலையையும் கற்றுக் கொண்டனர். அதற்கு கத்தியைத் தீட்டி, அதை மாட்டுத் தோலில் நன்கு அடித்துப் பக்குவம் செய்தனர். இக்கருவியால் தலை மற்றும் முகத்தை மழித்துக் கொண்டனர்.

பிற சமூக மக்களுக்குப் பேறுகாலத்தை மருத்துவ இனப்பெண்களே பார்ப்பார்கள். ஆனால் காணிப்பழங்குடி மக்கள் பேறுகாலத்தை தாங்களே பார்த்துக் கொள்கின்றனர். இதனை, “காணிக்குடியிலுள்ள வயது முதிர்ந்த பெண்கள் அனைவரும் பொதுவாக மருத்துவச்சிகளாகச் செயல்படுகின்றனர்” என்று தர்மராஜ் (2005:14) குறிப்பிடுகிறார். தொப்புள்கொடியினைக் காணி மருத்துவர்கள் வேய்க் கொடி (ஈத்தல் கொடி)யினால் அறுக்கின்றனர். குழந்தைப் பிறந்தபின் காணி இனப் பெண்களே முதல் முடியை மழிக்கும் சடங்கினைச் செய்வது குறிப்பிடத்தக்கது. இதனை குழந்தை வளர்ந்து ஒரு வயது எட்டியதும் முடி வெட்டுவர். முதல்முறை வெட்டப்படும் முடி சேகரித்து வைக்கப்படும். இம்முடிக்கு நோய் அகற்றும் ஆற்றல் உண்டு என்று நம்பப்படுகின்றது என்பதாக ஸ்டீபன் (1997:31) குறிப்பிடுவது இங்கு ஒப்பு நோக்கத்தாக அமைந்துள்ளது.

காணிப்பழங்குடி மக்களில் சிலர் தற்காலத்தில் சவரத் தொழிலைப் படித்து சலூன் கடைகளை வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் காணிப் பழங்குடி மக்களுக்கு மட்டுமின்றி அனைவருக்கும் சிகையலங்காரம் செய்கின்றனர். மருத்துவ இனமக்கள் பல்வேறு காரணங்களினால் மலையடிவாரத்திற்கு இடம் பெயர்ந்து குடியேறியுள்ளனர். இதன் காரணமாக அங்கு சலூன் கடைகள் தோற்றம் பெற்றன. பழங்குடியினர் நாகரிகத்தில் மாற்றம் பெற்று, மற்ற மக்களைப் போன்று சமூக மாற்றம் அடைவதற்கு இதுவும் காரணமாகும். மருத்துவர்களுக்கும் பழங்குடியினருக்கும் உள்ள சமூக உறவு

நிலையினால் பழங்குடிகள் வாழ்வில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

**சமூக உறவுகளும் - சிக்கல்களும்**

மருத்துவ இனமக்கள் பல்வேறு விதங்களில் எல்லா இனமக்களுக்கும் உறவு பாலமாக விளங்குகின்றனர். இவர்களின் சேவைப்பணி வேண்டி ஆதிக்கச்சாதியினர் இன்றும் இவர்களைக் கொத்தடிமைகளாகவே பணிச்செய்ய கட்டாயப்படுத்துகின்றனர். இவர்களின் சேவைப் பணிக்கான ஊதியத்தைப் பணமாக கொடுக்காமல் தானியங்களையே கொடுத்தனர் . அத்தானியங்கள் (நெல்) தரமிக்கதாக கொடுக்கப்படுவதில்லை. பொக்கு (சூடடி நெல்) கலந்து தானியங்களையே கொடுத்தனர். இஃது இவர்களைச் சுரண்டுவதற்கான உளவியல் வெளிப்பாடாக ஆதிக்கச் சாதி இந்துக்கள் வைத்துக் கொண்டவையாகும். இதனை கிருஷ்ணமூர்த்தி (1975:37), வண்ணார், நாவிதர் முதலிய ஏவலாளர்களும் ஊராரின் இக் குறைந்த பங்கிலேயே தங்கள் வாழ்க்கைத் தேவையை நிறைவுச் செய்ய வேண்டியதாய் இருந்தது என்று குறிப்பிடுகிறார். இதன் மூலம் ஆதிக்க சாதியினர்; இவர்களை பொருளாதார நெருக்கடிக்குள்ளே வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்திருப்பது புலனாகிறது. மேலும் இவர்கள் வளர்ச்சியடையாமல் இருப்பதற்காக இவர்கள் தொட்டால் தீட்டு என்றும் குறிப்பிடுகின்றனர். இவர்களின் பணிகள் அழுக்கினைக் கையாளுவதால் காணப்படுவதால் இவர்களது தொழில் அசுத்தமானது என்று கருதுகின்றனர். உடலில் இருந்து நீக்கப்படும் மயிர் மற்றும் நகத்தினைத் தொடுவதால் அதனைத் தொடுபவர்களும் அசுத்தத்திற்குள்ளாகின்றனர். அதனால் சவரத் தொழிலாளர்களின் தொடுதலும் மேல் சாதியினரைத் தீட்டுப் பட்டவர்களாகக் கருதுமாறு செய்கிறது என்று சீனிவாஸ் (1996:59) குறிப்பிடுகிறார்.

இறப்புச் சடங்கின்போது, இறந்த உடலினைக் குளிப்பாட்டி, சவரம் செய்து, அழகுபடுத்தி சுத்தமாகச் சொர்க்கத்திற்கு அனுப்புவதென்பது இறந்தவரின் குடும்பத்திற்கு நன்மை உண்டாக வேண்டும் என்ற சுயநலம் காரணமாகத்தான் அதனைச் செய்யுமாறு ஆதிக்கச் சாதியினர் கட்டாயப் படுத்துகின்றனர்.

இப்பணிகளைச் செய்வதற்குச் சிறிது காலதாமதமாகச் சென்றால் ஆதிக்கச்சாதியினரின் வசைச் சொற்களைக் கேட்க

வேண்டிய அவலநிலையும் இருந்து வருகிறது. இதனை, ஏண்டா நாயே! என் சவுரியத்திற்கு நீ இல்லை. இப்ப எதுக்கடா வந்திருக்கே. தொலையடா சனியனே நாளைக்கு நல்லது கெட்டதுல பாத்துக்கிறேன் என்றார் பெரியவர். 'இல்ல வலி தாங்க முடியல சாமி' 'இந்தக் கதையெல்லாம் எங்கிட்ட சொல்லாதடா பரதேசி. உங்களை எல்லாம் நடு வீட்டுக்குள்ள விட்டா, இன்னும் செய்வதுக்கு மேலயும் செய்வ ஓடிப்போ நாயே....' (தினமணி கதிர், 03-08-2008) என்று சவரக்கத்தி சிறுகதையில் மருத்துவர்கள்மீது ஆதிக்கச்சாதிகள் வசைமொழிகளைப் பயன்படுத்துவதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இதேபோன்று வாழ்வியல் சடங்குகள் செய்யும்போது தவறுகள் செய்வதால் ஆதிக்கச்சாதியினரின் கைகள் இவர்களைப் பதம்பார்த்து விடுகிறது. இது பெரும்பாலும் இறப்புச் சடங்கு மற்றும் திருமண விருந்து நிகழ்வின்போது தான் அதிகமாக நடைபெறுகிறது. இதற்குக் காரணம் இவர்களும், ஆதிக்கச் சாதியினரும் அதிகமாக மதுபானம் அருந்திவிட்டு வருவதினால் ஏற்படுகின்ற வாய் தகராறாகும். அவ்வாறு, அடிபட்ட சிறிது நேரத்தில் இவர்கள் சமாதானப்படுத்தப்படும் நிலையும் காணப்படுகின்றது. அவ்வாறு இவர்கள் சமாதானப்படாமல், 'சடங்குகளைச் செய்ய மாட்டேன்' என்றால் வேறு ஒருவரை ஊர்க்குடிமகனாகப் பணியமர்த்தி விடுவோம் என்று அச்சுறுத்தும் நிகழ்வும் காணப்படுகின்றது. இதனைப் புதுமைப்பித்தன் (2001:86) தன்னுடைய 'நாசகாரக்கும்பல்' என்ற சிறுகதையில் 'சவத்துப் பயல்களைச் சரிக்கட்டிப் பாருங்க, இல்லாட்டா அங்கயெப்போல மலையாளத்து அம்பட்டன குடியேத்திப் போடுவோம்... என்று மூட்டைக்கட்டி வந்து இலவச அபிப்பிராயம் சொல்லிவிட்டுச் சென்றனர் பலர்' என்று குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம் ஊர் வேலைசெய்யும் இவர்கள் ஒத்துவராமல் இருந்தால் உடனே வேறு ஒருவரைக் குடியமர்த்தும் வழக்கம் இருந்துள்ளமை புலனாகிறது. இவ்விதமான அச்சுறுத்தலுக்குப் பயந்து மீண்டும் சமாதானமாகப் பணியினைச் செய்கின்ற நிகழ்வும் காணப்படுகின்றது.

இவர்கள் ஊர்வேலை செய்யும்போது நினைத்த நேரத்தில் எங்கும் சென்றுவர முடிவதில்லை. ஆதிக்கச் சாதியினரின் வீடுகளில் எதிர்பாராமல் -திட்டமிட்டு நடைபெறுகின்ற இன்ப-துன்ப நிகழ்ச்சிகளின்போது கண்டிப்பாக ஊர்க்குடிமகனாக வேலை செய்பவர் இருக்க வேண்டும் என்பது கட்டாயம். அவ்வேளையில் இவர்களைச் சொந்த காரியங்களுக்குக் கூட வெளியூர் செல்ல அனுமதிப்பதில்லை. ஆதிக்கச் சாதியினரின் சடங்குகள் அனைத்தும் முடிந்த பின்னரே இவர்களது சொந்த

காரியங்களுக்குச் செல்ல வேண்டும். எனவேதான் 'ஆண்டு கூடி ஆவணி கூடி, வண்ணார் நாவிதருக்கு முறையே கிடையாது' என்ற பழமொழி வழக்கில் உள்ளது. அதாவது, தங்கள் வீட்டுச் சடங்குளைக் கூட ஊரில் ஆதிக்கச் சாதியினரின் சடங்கியல் நிகழ்வுகள் இல்லாத சமயத்தில்தான் செய்ய வேண்டும். இதுவே தற்போதும் வழக்கமாக உள்ளது என்பதைக் குறிப்பிடவே மேற்கண்ட பழமொழி பயன்படுத்தப்பட்டு வருகின்றதை அறியமுடிகிறது.

ஊர்ச்சோறு எடுப்பதற்காக ஆதிக்கச்சாதியினரின் வீடுகளுக்கு அன்றாடம் இவ்வினப் பெண்கள் செல்வது வழக்கம். ஊர்ச்சோறு என்பது ஆதிக்கச்சாதியினர் தங்கள் குடும்பத்தினருக்குத் தேவையானது போக மீதமுள்ள உணவினைக் கொடுப்பதாகும். அப்போது 'சோற்றுக்குத் தண்ணீர் ஊற்றிவிட்டோம்; சோறு இன்னும் சமைக்கவில்லை; சோறு தீர்ந்துவிட்டது' என்பது போன்ற காரணங்களைக் கூறிச் சோறு எடுக்கவரும் பெண்களின் மனதைப் புண்படுத்துபவரும் உளர். அப்பெண்களிடம் பாலியல் வன்முறையில் ஈடுபடுபவரும் உளர். இதனை, கிராமங்களில் மிகச் சொற்ப எண்ணிக்கையில் இவர்கள் இருப்பதால் இவர்களின் பெண்களிடம் பலரும் தவறாக நடந்து கொண்டனர். இக்காரணமே அவர்களைக் கிராமங்களை உதறிதள்ளிவிட்டு நகரங்களுக்குக் குடிபெயரச் செய்தது என்று ரகுபதி (2006:39) குறிப்பிடுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும். இத்தகைய ஊர்ச்சோறு வாங்குவது என்பது இவர்கள் விருப்பப்பட்டு வாங்குவது இல்லை. இவர்களுக்கு முறையாகக் கூலியைக் கொடுக்காத ஆதிக்கச் சாதியினர் இவர்களின் உழைப்பினைச் சுரண்டுவதற்காக மேற்கொண்ட வழிமுறையே ஊர்ச்சோறு கொடுப்பது ஆகும். இவர்கள் கிராமங்களில் மிகக் குறைவான எண்ணிக்கையில் இருப்பதால் ஆதிக்கச் சாதியினரை எதிர்க்கும் துணிவும், தைரியமும், சுயகௌரவமும் இல்லாமல் போயிற்று.

இவ்வாறு பல்வேறு விதமான ஒடுக்கு முறைகளுக்குள்ளான இவ்வின மக்களுக்கு ஆதிக்கச்சாதியினருடனான சமூக உறவானது பெரும் சிக்கலையும், இழிவினையும், மனகசப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. இவர்கள் இத்தகைய பணிகளைச் சுயவிருப்பத்துடன் செய்வதில்லை. ஆதிக்கச்சாதியினரின் கட்டாயத்தின் பேரிலும், பிழைப்பிற்கு வேறுவழியில்லாமலும் செய்துவருகின்றனர். இவர்களுள் பெரும்பான்மையோர்

இத்தொழிலினைத் தம் குழந்தைகள் செய்வதற்கு அனுமதிப்பதில்லை. தற்போது, சலூன் கடைகள் அதிக வருமானம் தருகின்ற ஒரு தொழிலாக இருந்தாலும், பழைய மனக்கசப்பு, இழிவுத்தன்மை ஆகியன இன்றும் இவ்வின மக்களிடம் பசுமரத்தாணிபோல் உள்ளது. எனவேதான் இத்தொழிலினைத் தம் சந்ததிக்குக் கற்றுக் கொடுக்க இம்மக்கள் முன்வருவதில்லை என்பது புலனாகிறது.

இவர்கள் இவ்வாறு பல்வேறு விதமான கொடுமைகளுக்கும், இழிவுத்தன்மைகளுக்கும் உட்பட்டாலும் இவர்களின் கீழுள்ள தாழ்த்தப்பட்ட பறையர், பள்ளர், அருந்ததியர்களுக்குப் பணிச்செய்ய மறுப்புத் தெரிவித்துள்ளனர். கீழ்ச்சாதியினருக்குப் பணிச் செய்வதைத் தீட்டாகக் கருதியதைப் பறையர் என்பதைத் தெரியாமல் இளம் அம்பட்டர் ஒருவர் அவருக்குச் சவரம் செய்ததற்காகத் தீட்டுக் கழித்தார் என்று தர்ஸ்டன் (1986,i:28) குறிப்பிடுகிறார். இதன்மூலம் இவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சவரம் செய்வதைத் தீட்டாகக் கருதியுள்ளமை அறியமுடிகின்றது. எனினும், தற்போது தாழ்த்தப்பட்டவர்களின் சடங்கியல் மரபுகளில் இவர்கள் பணி செய்வதைக் காணமுடிகின்றது. இதற்குப் பொருளாதார நெருக்கடியே பெரும் காரணமாகக் கூறலாம். முன்பு ஒரு சமுதாயத்திற்குச் சேவைப்பணிச் செய்பவர்கள் கடைசி வரை அந்தச் சமுதாயத்திற்கு மட்டும்தான் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் விதிக்கப்பட்டிருந்தது. நாகரிக வளர்ச்சியால் சலூன் கடைகள் வந்தப்பிறகும் எந்தச் சாதி என்று கேட்டுச் சவரம் செய்யும் வழக்கம் முற்காலத்தில் காணப்பட்டது. தற்போது, ஒரு சில மருத்துவர்கள் எல்லா சமுதாயத்தினருக்கும் பணிச் செய்வதைக் காணமுடிகிறது. இவர்கள் தங்கள் மீதுள்ள கட்டமைப்புகளை உடைத்துள்ளமை புலனாகிறது.

## சமூக உறவின் நிலைப்பாடு

வாழ்க்கை வட்டச் சடங்குகளில் எல்லாம் மருத்துவர்களின் சமூக உறவுநிலை பெரும்பாலும் ஆதிக்க, அடித்தள சாதியினரிடையே ஒன்றுபோலவே காணப்படுகின்றது. சில நிகழ்வுகள் மாறுபட்டும் காணப்படுகின்றது. தற்போது புரோகிதர்களை வைத்து இச்சடங்குகளைச் செய்தாலும் அவர்களும் மருத்துவர்கள் செய்வது போன்றே சடங்குகளை நிகழ்த்துவதைக் காணமுடிகிறது.

மருத்துவர்கள் சமூக நிலையில் தாழ்த்தப்பட்டவராக இருந்தாலும், எல்லா சமுதாய மக்களின் வாழ்க்கை வட்டச் சடங்கிலும் இவர்களின் பங்களிப்பு மிகவும் தேவையாகும். திருமணம், பூப்பு ஆகிய சடங்குகளை இவர்கள் பிராமணர்களைப் போன்று முன்நின்று நடத்துகின்றனர். இதனால் இவர்கள் பிராமணர்களுக்கு ஒப்பாகக் கருதப்பட்டனர். முற்காலத்தில் நாடார், நாயர் இனமக்களுக்குச் சடங்குகள் செய்ய பிராமணர்கள் மறுத்ததால் இவர்கள் சடங்கியல் மரபில் செல்வாக்குப் பெற்றனர். தற்போது, பிராமணர்கள் தொழிலடிப்படையில் எல்லா இனத்தவருக்கும் திருமணம், பூப்புச்சடங்குகளை நடத்த தொடங்கியதன் விளைவாக இவர்கள் இச்சடங்கு நிகழ்வுகளிலிருந்து புறம் தள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.. அவ்வாறு புறம் தள்ளப்பட்டாலும் சடங்கியல் மரபுகளைப் பிராமணர்க்கு முறைப்படி சொல்லிக் கொடுப்பதற்கு மருத்துவர்களையே குருக்களாகப் பயன்படுத்திக் கொண்டனர். எனினும் இறப்புச் சடங்கினைச் செய்வதற்குப் பிராமணர்கள் முன்வரவில்லை. எனவே எல்லா இனத்தவரும் இவர்களை வைத்தே இறப்புச் சடங்கினைச் செய்வதைக் காணமுடிகின்றது.

பெரும்பான்மையான ஊர்களில் ஊர்வேலை செய்யும் மருத்துவர்கள் இல்லையென்றாலும் கடைகள் வைத்திருப்பவர்களை அழைத்தே சடங்குகளை நிகழ்த்துகின்றனர். அதிலும் அனுபவம் உள்ளவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அழைப்பதைக் களஆய்வின்மூலம் அறியமுடிகின்றது. சில இடங்களில் இறப்புச் சடங்கினைச் செய்வதற்கு மருத்துவர்கள் இல்லாத நிலையில் வெளியூரிலிருந்து இவர்களை அழைத்து வருவதையும் காணமுடிந்தது.

இவர்கள். ஒரு சமூகத்திற்கு அல்லது இனத்திற்கு மிகவும் முக்கியமாகப் பயன்படுகின்ற சாதியினராக இருந்தாலும் இவர்களுக்கு முழுமையான மரியாதையோ, அங்கிகாரமோ சமூகங்கள் கொடுப்பதில்லை. இவர்கள் திருமணத்தைப் புரோகிதர் போன்று நடத்தி வைத்துவிட்டு, விருந்து பரிமாறும்போது அருந்ததியர்கள் போன்று எச்சி இலையினை எடுத்துச் சுத்தம் செய்யுமாறு கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இறப்புச் சடங்கின் போது எல்லா விதக் காரியங்களையும் இவர்களே முன்நின்று நாட்டாமைபோல அதிகாரத் தொனியுடன் நடத்துகின்றனர். இந்நிகழ்வில் இவர்கள் கூறுவதையே ஆதிக்கச் சாதியினர் வேதவாக்காகக் கருதி செய்கின்றனர். என்றபோதும், காரியம்

முடிந்த பின்னர் கூலி வாங்குவதற்காகக் கைகளைக் கட்டிக் கொண்டு கூனி குறுகி நிற்கும் நிலையும் காணப்படுகிறது. இவ்வாறு ஆதிக்கச் சாதியினர் தேவைக்கேற்ப ஒவ்வொரு நிகழ்வுகளிலும் இவர்களை மேலே தூக்கி வைத்துப் பின்னர் கீழே போடுவதையும் ஒரு வழக்கமாகவே கொண்டுள்ளனர். இவை பாரம்பரியமாக நிகழ்ந்து வருவனவாகும். இன்றும் முதியவர்கள் மிகவும் பெருமையுடன் 'நாங்கள் அரசனின் அரண்மனையில் எங்கு வேண்டுமானாலும் சென்று வர உரிமையுண்டு' என்று கூறிக் கொள்வதையும் காணமுடிகின்றது. இவர்கள், ஆதிக்கச்சாதியினரால் உயர்வாகக் கொள்ளப்படும் சிறிது நேரத்தினை மட்டுமே மனதில் கொண்டு தம் நிலை உயர்ந்ததாகக் கருதிக் கொள்கின்றனர்.

இன்று நாகரிக வளர்ச்சியாலும், பொருளாதார வளர்ச்சியாலும் இவ்வின மக்கள் விழிப்புணர்ச்சி அடைந்திருந்தபோதும் தங்களை மருத்துவர்கள் என்று உணர்வுப்பூர்வமாக வெளிப்படுத்திக்கொள்ள இயலாமல் இருப்பதைக் காணமுடிகின்றது. களஆய்வின்போது சிலர் தாங்கள் இந்தச் சாதியில்லை என்று கூறுவதையும், சிலர் தங்கள் சாதிப்பெயரை வெளியே சொல்வதற்குக் கூச்சப்படுவதையும் காணமுடிந்தது. குறிப்பாக, சிறுபான்மையினர் விழிப்புணர்ச்சி அடைந்திருந்தாலும் பலர் இன்றும் பழைய நிலையிலேயே கிராமப்புறங்களில் இருந்து வருவதை பார்க்க முடிந்தது.

## ஒடுக்குமுறை

ஆரியர்கள் இந்தியாவில் உள்ள பூர்வீககுடிகளான மக்களை ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்குவதற்கு பயன்படுத்திக் கொண்ட முதன்மையான ஆயுதம் மனுதர்மம் ஆகும். மனுவின்மூலம் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என மக்களைப் பிரித்து வகைப்படுத்தினர். அதுவரை தொழில் அடிப்படையில் பாகுபடுத்தப்பட்டவர்கள் வர்ண அடிப்படையில் பாகுபடுத்தினர். அதற்குக் கீழும் சேவைச் சாதிகள் எனப்பட்ட பஞ்சமர்களை அடிமைகளாக வைத்திருந்தனர். மேலும் மனு பிராமண, சத்திரிய வைசிய சூத்திரர் போக பஞ்சமர்கள் என்பதே இல்லை (2000:10.4) என்று கூறுகிறது. இதிலிருந்து பஞ்சமர்களாகியச் சேவைச் சாதியினரை மக்களாகக் கூடப் பார்ப்பணர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றறிய முடிகின்றது.

இதனால்தான் தீண்டாமை என்ற கொடுமையை மக்களிடையே ஏற்றத் தாழ்வுகளை வேறுபடுத்திக்காட்ட கொண்டு வந்தனர். சாதியினைக் குறித்து ஆய்வு செய்த ஹட்சன் (1983:80), கி.பி. 1937-ஆம் ஆண்டு மக்களிடையே இருந்து வந்தச் சாதீய தீண்டாமை நிலையினை, நம்பூதிரி, பிராமணர்களிடமிருந்து நாயர்கள் ஏழு அடி தூரத்திலும், ஈழவன் 32 அடி தூரத்திலும், செருமன் 64 அடி தூரத்திலும் நாயாடி (மருத்துவர்) 74 அடி தூரத்திலும் நின்று பேச வேண்டும். அதற்குப் பக்கத்திலிருந்து பேசினால் தீட்டு பட்டதாகக் கருதினர் என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு பக்கத்திலிருந்து பேசித் தீட்டு பட்டுவிட்டால் அதனைப் போக்குவதற்குத் 'தீட்டுக்குளியல்' மேற்கொண்டதாகப் பெருமாள் (2003:78) குறிப்பிடுகிறார்.

மருத்துவம், இசையென்று மேல்நிலையில் இருந்த மருத்துவ இனமக்களை ஆதிக்கச் சாதியினர் தங்களின் நலனுக்காக அடிமைப்படுத்திக் கொண்டனர். உதாரணமாக, கி.பி. 1872-ஆம் ஆண்டு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்குள் நாடார் இனமக்கள் நுழைய முடியாது. இதனை மீறி ஏழு நாடார்கள் கோயிலுக்குள் நுழைந்தார்கள். இதனால் கோயில் நிர்வாகம் அவர்களின்மீது நீதிமன்றத்தில் வழக்கு மேற்கொண்டது. அப்போது டோபி, பார்பர் முதலிய இதர கீழ்சாதியினர் கோயில் கொடிமரம் வரை செல்ல அனுமதி இருக்கும்போது நாடார்கள் நுழைந்தால் புனிதம் கெட்டுவிடாது என்று சொல்லி அவர்களை விடுதலைச் செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டார். இதன்மூலம் மருத்துவ இனமக்கள் முன்னரே மேல்நிலையில் இருந்துள்ளமை அறியமுடிகிறது. இவர்கள் ஆதிக்கச் சாதியினரால் மூன்று நிலைகளில் தங்கள் உரிமைகளை இழந்து மற்றும் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகியுள்ளனர். அவை,

1. கோயில் பூசாரி பணியினைத் தட்டிப் பறித்தல்
2. மருத்துவத் தொழிலைப் பறித்தல்
3. சவரத் தொழிலினைச் செய்யுமாறு கட்டாயப்படுத்துதல்

என்பனவாகும்.

## கோயில் பூசாரி பணியினைத் தட்டிப் பறித்தல்

மருத்துவர்களை முதன்முறையில் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தியவர்கள் பிராமணர்களே ஆவார். பிரமாணர்கள் வருகைக்கு முன்பு தமிழகத்தில் இனக்குழு, தொழில் பிரிவுகளே இருந்தன. இதனை, ஆரியர் வருகைக்குப் பிறகுதான் தமிழகத்தில் சாதி வேற்றுமைகள் தலைத்தூக்கத் தொடங்கின. ஆரியர் வருகைகககு முன்பு தமிழ்நாட்டில் சாதி முறை என்பதே இல்லை என்று சீனிவாச ஐயங்கார் (1979:61) குறிப்பிடுகிறார். பிராமணர்களின் குணங்களாகக் கூறும்போது, இந்தியாவை எந்த அந்நியன் ஆக்கிரமித்தாலும் அவனைப் பூரணக் கும்ப மரியாதையோடு வரவேற்று அவனது அடக்குமுறை ஆட்சிக்குத் துணை புரிந்து மக்களை அடிமைப்படுத்தித் துப்புகள் கொடுத்து, அதன் மூலம் மனுதர்ம விதிப்படியான தங்கள் சமூக மேநிலையைத் தக்க வைத்துக் கொள்ளக் கற்றவர்களே பார்பனர்கள் ஆவர் (2005:5).

இந்தியாவில் குடியேறிய ஆரியர்கள் (பிராமணர்கள்) அக்காலத்தில் நாட்டையாண்ட மன்னர்களையே ஏமாற்றி யாகங்கள் நடத்துமாறு செய்துள்ளனர். அதாவது அஃது அசுவமேத யாகம் ஆகும். இஃது இராஜாக்கள் ஒரு ஆண் குதிரையை அவிழ்த்து விட்டு, அடித்து விரட்டி விடுவார்கள். அக்குதிரை எங்கெங்கு சென்று விட்டு வருகிறதோ அந்த எல்லை வரைக்கும் போரிட்டு ஜெயித்து விட்டு அந்த வெற்றியை கொண்டாடுவதற்காக நடத்தப்படும் யாகம்தான் அசுவமேத யாகம். ஓடிக்களைத்து வந்த அந்தக் குதிரையை கட்டிப்போட்டு விடுவார்கள். அக்குதிரையோடு ஒரு பெண் குதிரையைச் சேர்த்து விடுவார்கள். இயற்கை உந்துதலால் ஆண் குதிரையின் உறுப்பு நீண்டிருக்கும். அப்போது ஓரிரவு முழுவதும் சம்மந்தப்பட்ட இராஜா வீட்டுப் பெண்கள் முக்கியமாக ராணி குதிரையின் உறுப்பைக் கைகளால் இரவில் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். இந்தக் கடமை முக்கியமாக ராணிக்குதான். அஸ்வமாகிய குதிரையை இராஜாவின் பத்தினி ராணி வழிபட வேண்டிய முறையே ஆகும்.

இரவு இந்த கடமை முடிந்ததும் மறுநாள் அந்த ஆண் குதிரையை அப்படியே அக்கினியில் போட்டு பஸ்பமாகும்வரை எரித்து விடுவார்கள். இதுதான் அஸ்வமேதயாகம். மக்களைப் போலவே, இராஜ குடும்பத்தினரும் பிராமணர்கள் மந்திர

யாகத்துக்குக் கட்டுப்பட்டிருந்தார்கள். யாகம் முடிந்ததும். ஏ... இராஜா, இந்த யாகத்தை நல்ல விதமாகப் பூர்த்தி செய்தாகிவிட்டது. இதற்காக நீ பொன்னும் பொருளும் தட்சணை கொடுத்தாய். அஃதோடு யாகத்தில் பங்கு கொண்ட உன் இராணியையும் நியதிப்படி நீ எங்களுக்குத் தட்சணையாக்கிப் பிறகு அழைத்துக் கொண்டு செல்ல வேண்டும் என்றார்கள் (தாத்தாசாரியார், 2005: 23, 34). இவ்வாறு மன்னனையே ஏமாற்றியவர்கள் மருத்துவர்களை மட்டும் விடுவார்களா?

மருத்துவர்கள் முற்காலத்தில் கோயில் பூசாரியாக இருந்துள்ளனர். இதனைப் பூரி சகன்னாதர் ஆலய எல்லையில் அம்பட்டரும் அவர்கள் சமைக்கும் உணவும் எல்லா மேல் சாதியராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. பிராமணர்கள் கூட அதனைத் தீட்டுப்பட்டதாகக் கருதுவதில்லை. அந்தப் புகழ் பெற்ற கோயிலின் பூசாரியும் அதிகாரபூர்வமான புரோகிதரும் ஓர் அம்பட்டனே என்று தர்ஸ்டன் (1986, i:42) குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கதாகும். இக்கோவில் இன்னும் மருத்துவ இமைக்கனே பூசாரிகளாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய உயர்வு மிக்க மருத்துவச் சாதியினரிடமிருந்து கோயில் பூசாரி பணியினைப் பறிக்கப்பட்டதை, அக்னி ஹோத்ரம் ராமானுஜ தாத்தாச்சாரியார் (2005: 266-270) என்பவர் தமது நூலில், மலையின மக்களான மருத்துவ சாதியினரின் சொந்த தெய்வமான காளிகோயில் பிராமணர்களின் சதியினால் ஆணாதிக்கம் செய்யப்பட்டு வெங்கடாச்சலபதி கோயிலாக மாற்றப்பட்டது என்பதை எடுத்துரைக்கிறார். அஃது இன்று திருப்பதிக் கோயில் மிகவும் புகழ்வாய்ந்த கோயில். ஆனால் முற்காலத்தில் இந்தக் கோயிலில் பூசை செய்தவர்கள் மருத்துவ இன (அம்பட்டர்) மக்களாவார். பிராமணர்கள் காளி சிலையினை வழிபட்டு வந்த மலையின மக்களைப் பார்த்து, நீங்கள் இப்படிப் பூசை செய்தால் பலன் எதுவும் இல்லை. எங்களுக்குத்தான் முறையான பூசைகளை எப்படிச் செய்ய வேண்டும் என்று தெரியும் எனக்கூறிக் கோயிலுக்குள் நுழைந்தனர். பின்னர் காளி சிலையின் பெண் உருவத்தை மாற்றி ஆண் உருவமாக வடிவமைத்து விட்டனர். காளியின் கைகளில் நகங்களைச் சுருட்டி அதனை நாகக்காப்பாக்கி கை உருவத்தையும் மாற்றி விட்டனர். இதனை மலையின மக்கள் எதிர்க்க அவர்கள் நாங்கள் இந்தத் தெய்வத்தை 'ப்ராப கண்டா'

(Famous) ஆக்க போகிறோம். இது சைவர்களின் தெய்வம்.... சிவபெருமான், காளி கிடையாது என்று கூறினர்.

மக்கள் போராடத் தொடங்கிய போது அவர்கள்; பொறுங்கள் உங்களுக்கும் பலன் கிடைக்க வேண்டும்; 'உங்களின் பூர்வீகத் தொழிலைக் கூறுங்கள்' என்று கூற இவர்கள் வேட்டையாடுவது, தேனெடுப்பது, முடி மழிப்பது என்று தாங்கள் செய்யும் தொழிலைக் கூறினர். அப்போது முடி மழிப்பவர்களைப் பார்த்து இனிமேல் கோயிலுக்குள்ளே யார் வந்தாலும்...; தரிசனம் செய்ய யார் வந்தாலும்...; உங்களிடம் உட்கார்ந்து தலையைக் காட்டி முடிகளை மழித்துக் கொண்டுதான் உள்ளே வர வேண்டும். இது இன்று முதல்'க்ரமம்' அதற்கேற்ற தட்சணையை நீங்கள் வாங்கிக் கொள்ள வேண்டும். உள்ளே என்ன தட்சணையோ அதை நாங்கள் எடுத்துக் கொள்வோம். இதில் உங்களுக்கும் பலன். எங்களுக்கும் பலன்; உங்களுக்கும் தட்சணை, எங்களுக்கும் தட்சணை உங்களுக்கும் அனுக்ரஹம் எங்களுக்கும் அனுக்ரஹம் எனக்கூறி ஏமாற்றி விட்டனர். மலை மக்களான அம்பட்டையார்கள் தங்கள் தெய்வமான காளியை வழிபடும் உரிமையை இழந்து வெளியே அமர்ந்து மொட்டையடிக்க ஆரம்பித்தனர். பிராமணர்கள் உள்ளே சென்று மலை மக்களில் பூர்வீக உரிமைகளை மொட்டையடித்தார்கள். இவ்வாறு மருத்துவ இனமக்களின் பூர்விக உரிமையாகக் கோயில் பூசாரி பணியினைப் பறித்துக் கொண்டனர். அன்று முதல் இன்று வரை மருத்துவர்கள் கோயிலின் வெளியே அமர்ந்து, வரும் பக்தர்களுக்கு மொட்டையடிக்கின்றமைக் குறிப்பிடதக்கதாகும்.

பூசாரி என்பவர் கோயிலில் மக்களின் குறைகளைக் கடவுளிடம் கூறுதல், அர்ச்சனைச் செய்தல் முதலிய பணிகளைச் செய்யும் இடைத்தரகராகவே காணப்படுகின்றனர். ஆனால் ஆதிகால பூசாரிகள் மருத்துவம், மாந்திரீகம் ஆகியவற்றைச் செய்தனர். இதனை, பூசாரி என்ற வார்த்தை மருத்துவம், மந்திர சக்தி, பேய் விரட்டுதல் ஆகியப்பணிகளை உள்ளடக்கியதே என்று மாம்மென் (1942:199) குறிப்பிடுகிறார். ஆதிகால மனிதன் தனது அனைத்துத் தேவைகளுக்கும் சடங்குகளையே செய்தான். இத்தகைய சடங்குகள் பொருள் முதல் கூறுகளைக் கொண்டிருந்தது. மேலும் மந்திரங்களைச் செய்த புராதன மந்திரவாதிகளில் இருந்து பிற்கால பூசாரிகள் உதித்தார்கள் என்று சட்டோபாத்யாயா (1999:83) குறிப்பிடுகிறார். காணிக்கார

பழங்குடியில் பிலாத்தி நோய் நீக்கும் மருத்துவராகவும், மந்திரவாதியாகவும் பூசாரியாகவும் செயல்படுகிறார். நோயுற்றவருக்கு ஆவி வழிபாட்டுச் சடங்குகளை இவர் நடத்துகிறார். நோய் நீங்காத நிலையில் மருந்தும் கொடுக்கிறார் என்று தர்மராஜ் (2004:74,75) குறிப்பிடுகிறார். ஆதிகால மனிதன் ஒருவனுக்கு நோய் ஏற்படுவதற்குப் பேய் பிசாசு ஆகியவைகள் காரணம் என்று நம்புகின்றான். எனவேதான் 'நோய்க்கும் பார், பேய்க்கும் பார்' என்றும் பழமொழி வழக்கில் காணப்படுகின்றது.

பேய் பிசாசுகளை மந்திரத்தால் ஓட்டிவிடலாம் எனக் கூறுகின்றனர். 'கோடங்கி' என்னும் தோற்கருவியை இசைத்துப் பேயை ஓட்டுவார்களாம். எந்தப் பேய் என அறிதலைக் 'கணியிடுதல்' எனக் குறிப்பிடுகின்றனர். கத்தியின் பிடியிலுள்ள வளையம்போல இரும்பு செய்து பணம் நேர்ச்சை வைத்து, அவ்வளையத்தை மண்புற்றில் வைத்து இனித் தங்களைத் துன்புறுத்தக் கூடாது என வேண்டிக் கொள்கின்றனர். கோழி, அரிசி, பணம் ஆகியவற்றை நேர்ச்சை செய்து மந்திரம் செபித்துப் பேய் ஓட்டுகின்றனர் என்று டாக்டர் நசீம்தீன் (1989:69) குறிப்பிடுகிறார். தமிழகத்தில் பழங்குடிகள், மருத்துவர், பள்ளர், பாணர், நாடார் முதலிய சாதியைச் சார்ந்தவர்கள் பூசாரியாகக் காணப்படுகின்றனர்.

பார்ப்பனப் பூசாரிகள் மருத்துவம், மாந்திரீகம் அறிந்திருக்கவில்லை. இவர்கள் நோய்களை நீக்குவதும் இல்லை. இதனைத் தர்மதீதா, பார்ப்பனப் பூசாரிகள் இருந்திருக்கின்றனர்; இவர்கள் மருத்துவம் செய்திருக்கவில்லை, அதனைப் புறக்கணித்தனர் (2004:18) என்று குறிப்பிடுகிறார். பவுத்தத் துறவிகள் மருத்துவம் செய்தலை அச்சமயத்தின் கொள்கையாகக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே ஆதிகால மனிதன் தனக்கு ஏற்பட்ட அம்மை நோய், காலரா முதலிய பல்வேறு விதமான நோய்களுக்குத் தீர்வு காண பெரும்பாலும் பூசாரிகளையே நாடினர். இதனால் போரில் ஏற்பட்ட விழுப்புண், வெட்டுகாயங்களுக்கு ஆரம்ப காலத்தில் பூசாரிகளே மருத்துவம் செய்து இருக்கலாம். போரில் அல்லது நோயில் மூக்கிழந்தோருக்கு மாற்று மூக்குகள் வைத்து ஒட்டுறுப்பு அறுவை முறை, சமூகத்தினர் சற்று அறுவெறுப்புடன் நோக்கிய நாவிதரின் கண்டுபிடிப்பே என்று கோசாம்பி (1989:32) குறிப்பிடுகிறார். எட்கர் தர்ஸ்டன் (1993, iv:240), கிராமத்து நாவிதனும் குயவனுமே நமது அறுவைச் சிகிச்சை மருத்துவர்கள். நாவிதன் கட்டிகள், காயங்கள், கொப்புளங்கள்

ஆகியவற்றுக்கு மருத்துவம் பார்க்கிறான். குயவன் எலும்பு முறிவு, மூட்டு விலகல் ஆகியவற்றிற்கு மருத்துவம் பார்க்கின்றான் என்று கூறுகின்றார்.

இவ்வாறு ஆதிகால பூசாரிகள்; பூசாரிப் பணியோடு, மருத்துவம், மாந்திரீகம் ஆகியவற்றையும் அறிந்து வைத்துக் கொண்டு மக்களிடையே வருகின்ற நோய்களைப் பல்வேறு விதங்களில் நீக்கினார்கள். ஆனால் பார்ப்பனர்கள் பூசாரிப்பணியினை மட்டும் கையில் எடுத்துக் கொண்டு அர்ச்சனையும், இறைவனை அழகுபடுத்துவதையும் மட்டுமே செய்வதைக் காண முடிகின்றது. இவர்கள் சமஸ்கிருத மொழியில் இறைவனுடன் பேசுவதாகக் கூறிக் கொள்ளுகின்றனர். அதோடு இல்லாமல் ஒவ்வொரு கடவுளுக்கும் தனி புராண கதைகளைக் கூறி மக்களை நம்பும்படிச் செய்துவிட்டனர். இதனை, ஆரியர்கள் யாகம், பூசை முதலான சாத்திரங்களைப் புகுத்தி ஆளும் அரசர்களுடன் இணைந்து தமிழர்களை மனுவைத் துணையாகக் கொண்டு ஒடுக்கலாயினர். சங்க காலத்தில் தச்சர், கொல்லர், பறையன், புலையன், பாணன், துடியன் முதலிய பிரிவுகள் இருந்ததாகச் சங்ககாலப் பாடல்கள் வழியாக அறியமுடிகிறது. இவை ஆரியர் வரவால் வன்மை பெற்றது. சிற்றரசர்கள் மற்றும் சேர, சோழ, பாண்டிய அரசர்கள் மேற்கொண்ட போர்களின் வாயிலாகச்சிறை பிடிக்கப் பட்டவர்களைக் கொண்டு அடிமைகள் உருவாக்கப்பட்டனர். இவை ஆரியர்கள் பிற்காலத்தில் அடிமைச் சமூகத்தைக் கட்டமைப்பதற்குப் பெரிதும் உதவியது என்று சாதுசெல்லப்பா (1997:48,49) குறிப்பிடுகிறார். இவ்வாறே பூசாரியாக இருந்த மருத்துவ இனமக்களிடமிருந்து பூசாரி பணியினைப் பறித்துக் கொண்டு சவரத் தொழிலுக்குத் தள்ளி விட்டுள்ளமைக் குறிப்பிடத்தக்கது.

## மருத்துவத் தொழிலைத் தட்டிப் பறித்தல்

மருத்துவ இனமக்கள் பாரம்பரியமானத் தொழில் மருத்துவத் தொழில் ஆகும். இத்தொழிலை அனுபவம் வாயிலாகவும், ஏட்டின் மூலமும் இவர்கள் கற்றுக்கொண்டனர். இவர்கள் நாடி பார்த்து மருத்துவம் செய்வதில் கை தேர்ந்தவர்களாக இருந்தனர். பிராமணப் பெண்கள் முற்காலத்தில் வீட்டை விட்டு வெளியே வருவது இல்லையாம். எனவே அப்பெண்களுக்கு நாடிபார்ப்பதற்கு; வீட்டின் உள் இருக்கும் பெண்ணின் கையில் நூல் கட்டி அதனை வெளியே இருக்கும் மருத்துவர் பிடித்து நாடியினைப் பார்த்து மருந்து கொடுத்து நோயினைக்

குணப்படுத்தும் அளவிற்குத் திறமையுடையவர்களாக இருந்தனர். கை நாடி மிகவும் துல்லியமாகக் கணக்கிடுவதற்குப் பட்டுத் துணியினைக் கையின்மீது விரித்து அதன் மீது நாடி பார்த்துள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர்.

மருத்துவத் துறையில் வளர்ச்சியடையாத காலத்தில் பெண்களுக்கு மகப்பேறு பார்க்கும் பணியினை மிகவும் திறம்படச் செய்தவர்கள் 'மருத்துவச்சி' என்றும் அழைக்கப்பட்டனர். சமுதாயத்தில் முதன் முதலில் மருத்துவ இனப் பெண்களே மகப்பேறு பார்க்கும் மருத்துவச்சிகளாக இருந்துள்ளனர். மருத்துவச்சிகள் மருத்துவர்களைப் போன்று நாடி பார்ப்பதில் நல்ல அனுபவம் உள்ளவராகக் காணப்பட்டனர். தாயின் நாடித் துடிப்பினைப் பார்த்து மிகவும் துல்லியமாகக் குழந்தைப் பிறக்கும் காலத்தைக் கூறும் திறமையுள்ளவர்களாக விளங்கினர். எனவே பேறுபார்க்கும் போது முதலில் தாயின் நாடியினைப்பிடித்து பார்த்து எப்போது குழந்தைப் பிறக்கும் என்பதை அனுபவ பூர்வமாகப் புரிந்துகொண்டு கூறுகின்றனர்.

மகப்பேறு பார்க்கும் மருத்துவ இன மருத்துவச்சியின் சிறப்பினைச் சிறப்பு பெயரகராதி (1970:518), காந்தபுரத்திலிருந்து கொங்கு நாட்டை அரசாண்டு வந்த அரசனுடைய மகள் கருப்பமுற்றாள். மகப்பேறு காலம் நெருங்கியது வயிற்று வலியும் மிகுதியாகியது. வல்லமையுள்ள பல மருத்துவச்சிகள் மருத்துவம் பார்க்க வந்தார்கள். மகப்பேறு இனிது நிகழாமல் தொல்லை மிகுதியாகியது. சிலர், குழந்தையின் தலை திரும்பி விட்டது என்றார்கள். பெண்ணோ வயிற்று வலி துன்பம் பொறுக்க முடியாமல் துடித்தாள். சிலர் குழந்தைக்குத் தலை பெரிதாக இருக்கிறது, எளிதாக வெளியே வர மாட்டாது என்றார்கள். 'தாயுஞ்சேயும் இத்தொல்லையில் இருந்து மீள்வது அரிது' என்றார்கள் சிலர். சிலர் குழந்தையை மாய்த்து வெளியே இழுத்து விட்டுப் பெண்ணினுடைய உயிரை மட்டும் காப்பாற்றலாம் என்றார்கள். பெண்ணினுடைய தந்தையோ செய்வதறியாது திகைத்து வருந்தினார். தாயுஞ்சேயும் இருவரையுமே காப்பாற்றி விட வேண்டும். அவ்வாறு காப்பாற்றியவர்கட்குத் தக்கவாறு நன்கொடை வழங்குவேன் என்று சொன்னார். எவரும் முன் வரவில்லை.

இறுதியில் நறையூர் நாட்டினளாகிய மங்கலையென்னும் ஒரு நாவிதச்சி 'இருவ்ரையும் நான் காப்பாற்றி விடுகிறேன்' என்று கூறிக் கொண்டு முன் வந்தாள். அவள் ஆயுர்வேதத்தில் வல்லவள்.

பிள்ளைப் பேறுகளைப் பார்ப்பதிலும் வல்லவர். பெண்ணை நன் முறையில் படுக்க வைத்துச் சிறிது நேரத்தில் வயிற்றைக் கீறிக் குழந்தையை வெளியே எடுத்துவிட்டாள். ஒரு நல்ல மருந்தைத் தடவிக்கீறிய புண்ணையும் விரைவில் ஆற்றிவிட்டாள். கருப்பமுற்ற பெண் இறந்தால் வயிற்றையறுத்துக் குழந்தையை எடுத்துத் தனியே புதைப்பது வழக்கம். அவ்வாறு எடுப்பதில் இவள் தேர்ச்சி பெற்றிருந்த படியினாலேஅரசனுடைய மகளையும் அவளுடைய வயிற்றிலிருந்த குழந்தையையும் காப்பாற்றிவிட்டாள். அரசன் மிகுந்த மகிழ்ச்சியடைந்து 'பட்டி' என்னும் ஊரை அம் மருத்துவச்சிக்கு நன் கொடையாக வழங்கினான். அவ்வூர் அவருடைய பெயரால் 'மங்கலைப்பட்டி' என்று வழங்கலாயிற்று. இதன்மூலம் மருத்துவச்சியானவள் அறுவை சிகிச்சையிலும் தேர்ச்சி பெற்று விளங்கினமை அறியமுடிகிறது. எனவேதான் மருத்துவத்தின் இன்றியமையாமையறிந்தே, பண்டைக்காலத்தில் ஊர் மருத்துவனுக்கு இறையிலி நிலம் மானியமாக விடப்பட்டது. அது மருத்துவப்பேறு எனப்பட்டது (S.I.1, II.43) என்று கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

இவ்வாறு இவர்கள் செய்த மருத்துவத் தொண்டிற்கு மகிழ்ந்த தமிழ் மன்னர்கள் மருத்துவரும் அவர்கள் மரபினரும் நலமாய் வாழ வேண்டும் என்னும் கருத்தோடு இவர்களுக்கு நன்கொடையாக அங்கங்கே சிற்றூர்களும், நிலங்களும் தானமாகக் கொடுத்தனர். அவ்வகையில் மருவத்தூர், மருத்துவன் குடி, மருந்தூர், மருத்துவனேந்தல், மருந்தகம், மருத்துவ வலவசை, மருத்துவன்சேரி மருத்துவக் குறிச்சி முதலியன குறிப்பிடத்தக்கவையாகும். கி.பி. 17-ம் நூற்றாண்டுகட்குப்பின் விட்டுக் கொடுக்கப்பட்ட நன்கொடை நிலங்கள் வைத்தியனேந்தல், வைத்தியனோடை, வைத்தியன் பொட்டல், வைத்தியன் திடல் முதலிய பெயர்கள் இன்றும் வழக்கத்தில் உள்ளதாக இராஜகோபால் (பண்டிதம், ஏப். 2003:4) குறிப்பிடுகிறார்.

மருத்துவத் தொழிலை மிகவும் சிறப்பாகச் செய்துவந்த மருத்துவர்களிடமிருந்து இத்தொழில் எவ்வாறு மறைந்து போனது என்பதை நாம் ஆராய வேண்டியது அவசியமாகும். மருத்துவ இன மக்களின் மருத்துவ முறைகள் முரட்டுத் தனமாகவே காணப்பட்டன. இவர்கள் நோயாளியின் நிலையினை கவனத்தில் கொள்வதில்லை. அதே போன்று இவர்களிடையே மாந்திரீகம் காணப்படுவதால் இவர்களிடம் மருத்துவம் செய்து கொள்வதற்கு மக்கள் பயந்தனர். அதே போன்று மனித உடலை கிழித்து அறுவை

சிகிச்சை செய்யும்போதும் அதனைப் பெரும் பொருட்டாக எடுத்து செய்வதில்லை. ஏனெனில் அனுபவத்தின் காரணமாக எளிதாகக் கத்திகளைக் கையாள்வதினால் மக்களிடையே பயம் பற்றிக் கொண்டது. சில நேரங்களில் இவர்களின் மருத்துவத்தின் மூலம் உயிர் இழப்புகளும் ஏற்பட்டுள்ளன. இதே போன்று பெண்கள் பேறுகாலம் பார்க்கும் போதும் அத்தொழிலைச் சிரமத்துடன் செய்வதில்லை. குழந்தை தலை மாறிக் கிடந்தால் இவர்களே கைகளைவிட்டு திருப்பி எடுப்பது; கொடி சுற்றிப் பிறந்தால் அக்கொடியினை எளிதாக இழுத்து எடுப்பது இவை பார்ப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். ஆனால் இவர்கள் அதைச் சர்வ அபோமாக எடுத்து விடுவதாகக் கூறுகின்றனர். குழந்தை வெளியே வராமல் மிகவும் சிரமத்தைக் கொடுத்தால் உடனே கத்தியினைப் பயன்படுத்தி வயிற்றை அறுத்து எடுத்து விடுவர். இதில் இன்றைய மருத்துவர்களைப் போன்றே மருத்துவச்சியும் செயல்பட்டுள்ளனர். இதனால் பல நேரங்களில் உயிர் சேதம் ஏற்படுவதுண்டு. இதனால் இவர்களிடம் பேறு பார்ப்பதற்குக் கிராமபுற மக்கள் அஞ்சினார். எனவே இதற்கு மாற்றுவழியாக மருத்துவமனைகள் வரவே மக்கள் அதனையே பெரிதும் விரும்பிச் சென்றனர் என்று கூறுகின்றனர்.

மருத்துவத் தொழில் சிதைவிற்கு அக்காலத்தில் மருத்துவர்களுக்கும் ஆன்மிகவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட போட்டியே காரணம் எனலாம். மருத்துவர்கள் மக்களுக்கு உண்டாகும் நோய்களை அதிகப் பொருட் செலவின்றி மிக எளிமையாகக் குணப்படுத்தி வந்தனர். ஆனால் ஆன்மிகவாதிகள் மக்களுக்கு ஏற்படும் நோய்களுக்குக் கடவுள், சாஸ்திரம் என்று கூறி அதற்கு அதிகப் பொருட்களையும் மக்களிடமிருந்து வசூலித்தனர். இதனால் மக்கள் ஆன்மிக வாதிகளிடம் மருத்துவம் செய்வதைக் குறைத்துக் கொண்டனர். இஃது அவர்களின் வாழ்வாதாரத்தின் மீது கடும் பாதிப்பினை ஏற்படுத்தியது. இதுவே மருத்துவர்களுக்கிடையிலான போட்டிகளுக்குக் காரணமாக அமைந்தது. ஆன்மீகவாதிகளுக்கு இவர்களின் மீது தீராத ஆத்திரம் ஏற்பட்டது. எங்களை ஒழிக்கத் திட்டமிட்டனர். இச்சூழலில் அரசன் ஒருவனுக்குத் தீராத நோய் ஏற்பட்டது மருத்துவர்கள் அவருக்கு தொடர்ச்சியாக மருத்துவம் செய்து வந்தோம். ஆனால் ஆன்மீகவாதிகள் அரசனைச் சந்தித்து சில மந்திரங்களை உச்சரித்து வந்தால் உங்கள் நோய் குணமாகும் என்றனர். அரசன் அதையும் செய்தார். எங்களின் சித்த மருந்து மெதுவாக வேலை செய்ய ஆரம்பித்தது. இக்காலத்தில் அவர் மந்திரமும் சொல்லிக் கொண்டிருந்தார். அவரின் நோய் குணமானது. இதற்கு காரணம் ஆன்மீகவாதிகளின் மந்திரம்தான் என்று நம்பி, ஆன்மீகவாதிகளின்

வேண்டுகோளை ஏற்று அரசன் மருத்துவர்களை எண்ணெய்ப் பாத்திரத்தில் போட்டுப் பொசுக்கினான், கழுவிலேற்றிக் கொன்றான் (ரகுபதி, 2006:16,17) என்ற வாய்மொழி செய்தியினை குறிப்பிட்டுள்ளார். தமிழக வரலாற்றினைப் பார்க்கும்போது சமணர்கள் கழுவேற்றப்பட்ட வரலாற்றுடன் இவ்வாய் மொழிச்செய்தி பொருந்தி நிற்கிறது.

இவ்வாய்மொழிச் செய்தியினை ஆராயும்போது வைணவராக இருந்த மருத்துவர்கள் அனைவரும் தங்கள் மருத்துவ தொழிலை விட்டு சைவர்களாக மாறியிருக்கலாம், சமணர்கள் படுகொலை செய்வதற்கு மருத்துவம் காரணமாக இருந்திருப்பதைப் பெரிய புராணம் கூறுகின்றது. இதற்கு அஞ்சி சமண மருத்துவர்கள் சைவத்திற்கு மதம் மாறியுள்ளனர்.

மருத்துவர்கள் தங்களின் மருத்துவப் பணியிலிருந்து முற்றிலும் நீக்கப்பட்ட சூழல் ஆங்கிலேயர் ஆட்சி காலத்திலிருந்து தொடங்குகின்றது. இக்காலத்தில்தான் சித்த மருத்துவம் சிதையுற்று அலோபதிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஏனெனில் ஆங்கிலேயர்கள் கொண்டுவந்த அலோபதி மருத்துவம் மக்களிடையே திணிக்கப்பட்டது. இதனால் மக்கள் அதுநாள் வரை பயன்படுத்தி வந்தச் சித்த மருத்துவத்தை மறந்து அலோபதி மருத்துவத்தை மேற்கொண்டனர். இதனால் மெக்காலே கல்வித் திட்டத்தின் அடிப்படையில் அலோபதி மருத்துவ மெடிக்கல் காலேஜ் ஆரம்பிக்கப்பட்டது. (Caplan, Lionel, 1977:200) இங்கு பயிற்சி பெற்ற மேல் நாட்டவரும், உள்நாட்டவரும் மக்களுக்கு மருத்துவம் செய்தனர். ஆனால் இந்திய மருத்துவத்துறையில் மேல்தட்டுப் பதவிகளைப் பிரிட்டிஷ் மருத்துவர்களே வகித்தனர். (Jeffery Roger, 1978:102) கிராமப்புற மக்களின் மருத்துவத் தேவைகளை மருத்துவச் சாதியினைச் சேர்ந்த 'தாதிகள்' எனப்பட்ட பெண் மருத்துவர்களும், வைத்தியர்கள் எனப்பட்ட மருத்துவ சாதி ஆண்களும் பார்த்தனர். மருத்துவச் சாதி பெண் மருத்துவர்களையும் பயிற்சியளிக்கப்பட்ட பெண் மருத்துவர்களையும் இணைத்துப் பேறுகாலப் பணிகளை மேம்படுத்துவதற்காக காலனியாட்சியாளர்கள் முயற்சிகள் மேற்கொண்டனர். ஆனால் மருத்துவசாதி ஆண்களை மருத்துவப் பணியில் ஈடுபடுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டதாகக் குறிப்புகள் இல்லை. காலனியாட்சியாளர்களின் மேற்குறிப்பிட்ட முயற்சியானது பயிற்சியளிப்பதற்கான போதிய வசதியின்மையின் காரணமாகத் தோல்வியிலேயே முடிந்தது என்று கிருஷ்ணசாமி (1947:424, 425) குறிப்பிடுகிறார்.

ஆங்கிலேயர்கள் தொடங்கிய மருத்துவக் கல்லூரிகளில் ஆதிக்கச் சாதியினரே பெரும்பாலும் பயின்றனர். மேலும் கிறிஸ்தவத்திற்கு மதமாறிய மருத்துவர்களுக்கும் இக்கல்லூரியில் மருத்துவம் கற்கும் வாய்ப்பு வழங்கப்படவில்லை. ஏனெனில் மருத்துவ இனத்தவர் மேல் சாதியினரும் அல்ல; அதேப் போன்று குறிப்பிட்ட தகுந்த எண்ணிக்கையில் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்களும் இல்லை. எனவே இவர்களுக்கு அலோபதி மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவக் கல்வி பயிலும் வாய்ப்புகள் கிடைக்கவில்லை. காலனிய அரசு தனக்கு விசுவாசமான இந்தியர்களை உருவாக்குவதற்குத் தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியர்களுக்கு மருத்துவக் கல்வியும் வழங்கியது. காலனிய வெளியேற்றத்திற்குப் பின்னர் மேற்கத்திய கல்வி கற்றோரே அதிகாரத்தினையும் கைப்பற்றினர் (Banerji, 1978:926). ஆங்கிலேயர் ஆட்சி முடிவுக்கு வந்தபிறகும் இந்திய அரசாங்கம் மருத்துவ இனத்தையும் அது சார்ந்த தொழிலையும் நசுக்கி அழிப்பதில் கவனம் செலுத்தி வருகின்றமைக் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு நசுக்குவதற்கு காரணம்? இவர்கள் ஊருக்கு ஒருவர் இருவர் தானே இருக்கிறார்கள். இவர்கள் ஒன்று சேரவும் மாட்டார்கள், போராடவும் மாட்டார்கள் என்பது தான்.

களஆய்வின்போது அரசு மருத்துவமனையில் சில மருத்துவச்சிகள் பணிபுரிந்ததாகக் கூறுகின்றனர். அவர்களுக்கு மாதம் 100 ரூபாய் முதல் ஊதியம் வழங்கப்பட்டதாகக் கூறினர். ஆனால் அவர்களுக்கு அரசு ஓய்வூதியம் எதுவும் அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் ஓராண்டிற்கு 14,000 மருத்துவர்களும், 9000 செவிலித் தாய்களும் படித்துப் பட்டம் பெறுகின்றனர். ஆனால் செவிலித்தாய்களின் தேவையானது மருத்துவர்களின் எண்ணிக்கையிலிருந்து மூன்று மடங்கு ஆகும் என்று தாமஸ் (1989:182) குறிப்பிடுகிறார். இதில் மிதமுள்ள செவிலித் தாய்களாக மருத்துவ இனப் பெண்களைக் குறைந்த தொகுப்பு ஊதியத்தில் பணியமர்த்திக் கொண்டனர். இவர்கள் தங்கள் திறமைக்கு ஏற்ற ஊதியம் கிடைக்காததை எதிர்த்து போராட ஒற்றுமையும், சங்கம் முதலிய அமைப்புகளும் காணப்படவில்லை.

திருநெல்வேலி பாளையங்கோட்டையில் சித்த மருத்துவக் கல்லூரியில் ஆரம்ப காலத்தில் கல்லூரி பேராசிரியர் முதல்வர்களாக மருத்துவச் சாதியினரே பணியாற்றியுள்ளனர், ஏனெனில் இவர்கள் மருத்துவத்தில் அனுபவம் மிக்கவராக இருந்தமையால் அவ்வாறு பணியில் அமர்த்தினர். ஆனால் குறிப்பிட்ட அளவு மாணவர்கள்

பயிற்சி பெற்றபின்பு மீண்டும் மருத்துவச் சாதியினருக்கு அங்கு பேராசிரியர் உட்பட இதரப் பணிகள் எதற்கும் முன்னுரிமை வழங்கப்படவில்லை. எனவே அரசாங்கமும் மருத்துவ இனமக்களைத் தேவைக்கு ஏற்ப கறிவேப்பிலை போன்று பயன்படுத்திக் கொள்வதைக் காணமுடிகின்றது.

மருத்துவத் தொழில் மருத்துவ சாதியினரை விட்டு மறைவதற்கு முக்கியமான காரணம் இவர்களிடம் அறியாமை என்று கூறலாம். ஏனெனில் மருத்துவம் சார்ந்த பல ஏடுகள் மருத்துவ இனமக்களிடம் காணப்பட்டன. இதனை அவர்கள் ஏதோ காரணத்திற்காகத் தங்கள் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுப்பதில் ஆர்வம் காட்டவில்லை. அவ்வாறு குழந்தைகள் ஆர்வத்துடன் ஏட்டினைக் கேட்டால் அதனை முழு மனதுடன் கொடுக்காமல் சபித்துக் கொடுத்துள்ளனர். கள ஆய்வில் ஒருவர் தம் முன்னோர்கள் மருத்துவத்தைத் தவறான வழியில் பயன்படுத்தியமையால் ஏற்பட்ட சாபத்தினால், இத்தொழில்மூலம் யாரும் முன்னேற முடியாது என்ற எண்ணத்தினாலும் கற்றுக் கொடுப்பது இல்லை என்றும் கூறுகின்றனர். சில இடங்களில் ஒருவர் இறந்த உடன் அவருடன் சேர்த்து அவர் சேகரித்து வைத்திருந்த மருத்துவ ஏடுகளையும் சேர்த்து எரித்து அல்லது புதைத்து விட்டதாகக் கூறுகின்றனர். ஏடுகள் வீட்டில் இருந்தால் ‘தரித்திரியம்தான் பிடிக்கும்’ என்று ஒருவர் கூறினார். இதன்மூலம் அவர்கள் எந்த அளவிற்கு ஏடுகளை அவமதித்துள்ளனர் என்பதைப் புரிந்துக் கொள்ள முடிகின்றது. இவர்கள் ஓலைச் சுவடிகளை முறையாகப் பாதுகாத்திருந்தால் இன்று மருந்து கண்டுபிடிக்க முடியாத நோய்களுக்குக்கூட இவர்கள் மருந்து கண்டுபிடித்திருக்கலாம். மேலும் சித்த மருத்துவத்தில் தலைசிறந்து விளங்கியிருக்கலாம் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

மருத்துவ இனமக்கள் ஓலைச் சுவடிகளை முழுமையாகப் பாதுகாக்கவில்லை என்பது உண்மை. குமரி மாவட்டத்தில் பல ஓலை ஏடுகள் இவ்வாறு அழிந்து விட்டதாகக் கூறியது குறிப்பிடத்தக்கது. இவர்கள் எந்தச் சாபத்தினால் இவ்வாறு செய்துள்ளனர் என்பது மறை பொருளாகவே உள்ளது. முன்னர் கூறிய முதன்மை கதையின் அடிப்படையில் இத்தொழில் செய்தால் வம்சம் வளமுடன் வாழமுடியாது என்பதால் இவ்வாறு செய்தார்களா? என்பது ஆய்விற்குரியது ஆகும். அரிய பொக்கிஷங்களான ஓலைச் சுவடுகள் இன்று மருத்துவச் சாதியினரிடம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சவரத்தொழிலினைச் செய்யுமாறு கட்டாயப்படுத்துதல்

மருத்துவத் தொழிலினைச் செய்து வந்தவர்கள் பல்வேறு காரணங்களினால் ஆதிக்கச்சாதியினரால் சவரத் தொழிலுக்குள் தள்ளப்பட்டுள்ளனர். போரில் விழுப்புண் பட்டவர்கள், தலையில் அடிப்பட்டவர்கள், வெட்டுக்காயம் ஏற்பட்டால் அந்த வெட்டுகாயம், விடுப்புண் விரைவாகக் குணமடைவதற்கு அதனைச்சுற்றியுள்ள உரோமங்களைக் கத்தியினால் நீக்கி சுத்தம் செய்து மருந்து வைத்துக் குணப்படுத்தினர். இந்த உரோமங்களை நீக்கிய இடங்கள் அழகாகக் காணப்பட்டதால் பிற்காலத்தில் இவர்கள் சவரத் தொழிலுக்குத் தள்ளப்பட்டதாகக் கூறுகின்றனர். இவ்வாறு சவரத் தொழிலுக்குத் தள்ளப்பட்டவர்கள் உடனடியாக வரவில்லை. இவர்கள் மருத்துவம் செய்யும்போது மயிர் மழித்தல் பணியையும் சேர்த்து செய்துள்ளனர். ஏனெனில் மருத்துவம் செய்வதற்கு மயிர் மழித்தல் தேவையாக இருந்துள்ளது. ஆனால் மருத்துவம் செய்பவர்கள் மயிர் மழித்தல் செய்யக்கூடாது செய்தால் அது தாழ்வு என்பதில்லை; எந்தப் பார்ப்பர் குடும்பமும் உள்நாட்டு மருத்துவத்தில் நிபுணராகிக் கொள்ளலாம். ஆனால் ஒரு முறை அம்மருத்துவத்தில் நிபுணரானப் பின்னர் பார்ப்பர் தொழிலைச் செய்யக் கூடாது அது தாழ்வு என்று கமலா கணேஷ் (1972:70) குறிப்பிடுகிறார். இதிலிருந்து சைவ வெள்ளாளர் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் கோட்டைப்பிள்ளை சாதியினர் சமூக மருத்துவர்களை மருத்துவர் என்றும் மயிர் மழிப்பவர் என்றும் இரண்டாகப் பிரித்துள்ளனர் என்பது தெளிவு. இதில் மருத்துவர்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்ட காலத்தினைக் கமலா கணேஷ் குறிப்பிடவில்லை.

இவ்வாறு மருத்துவமும், சிகையலங்காரமும் செய்து வந்த மருத்துவர்கள் மராத்தியர் காலத்தில்தான் முதன்முதலில் கிராமங்கள்தோறும் குடியமர்த்தப்பட்டனர். இவர்கள் அக்கிராமத்தில் உள்ள ஆதிக்கச் சாதியினருக்குச் சேவைச் செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். இதனால் இவர்கள் ஒரு கிராமத்திற்கு இரண்டு அல்லது மூன்று குடும்பங்கள் வசித்து வந்தன. ஒவ்வொரு கிராமத்திலும் மருத்துவர்கள் சுமார் இரண்டு / மூன்று குடும்பங்கள் முதல் அதிகபட்சம் பத்து/பதினைந்து குடும்பங்கள் வரையிலும் வசித்து வந்தனர் (Gough, Kathleen, 1981:20) இவர்கள் குடியிருப்புகள் ஆதிக்கச் சாதியினரின் குடியிருப்பை விட்டு சற்றுத் தொலைவிலே அமைந்திருந்தன. ஏனெனில் இவர்கள் ஆதிக்கச் சாதியினரின் நிலத்திலே குடியமர்த்தப்பட்டனர். சேவைச் செய்யும் காலம் வரை அவ்விடத்தில் இவர்கள் தங்கிக் கொள்ளலாம். இவர்கள் குடிமகன் என்று அழைக்கப்பட்டனர். ஏனெனில் ஆதிக்கச்சாதி மக்களின் வீட்டில் நடைபெறும் பிறப்பு

முதல் இறப்பு வரையுள்ள அனைத்துப் பணிகளையும் மருத்துவரே பார்த்துக் கொள்வார். இதற்கு ஊதியமாக ஆதிக்கச் சாதியினரே ஆண்டுக்கு இவ்வளவு என்று பட்டியலிட்டுக் கூறுவர். இவ் ஊதியத்தை மட்டுமே கொண்டு பரம்பரைப் பரம்பரையாக இத்தொழிலைச் செய்யுமாறு கட்டாயப்படுத்தினர். இஃது பொருளாதார அடிப்படையில் இவர்கள் வளர்ச்சியடையாமல் இருப்பதற்கு ஆதிக்கச் சாதியினரால் போடப்பட்ட முட்டுக்கட்டையாகும்.

## இன்றைய நிலை

தற்போது இவ்வின மக்கள் தங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டமைப்புகளை உடைத்து வருகின்றனர். குமரி மாவட்டத்தில் விவசாயத் தொழில் நலிவடைந்து இரப்பர் தொழில் வளர்ச்சிப் பெற்றமையால் இவர்களுக்கு ஊதியமாகக் கொடுக்கப்படுகின்ற தானியங்களை ஆதிக்கச்சாதியினரால் சரிவர கொடுக்கமுடியாமல் போனது. எனவே அதற்குப் பதிலாகப் பணம் ஊதியமாகக் கொடுப்பதாகத் தீர்மானித்தனர். அப்பணத்தினையும் எல்லோராலும் கொடுக்க முடியாத சூழல் ஏற்பட்டதன் விளைவாக, இவர்களின் மீது கட்டமைக்கப்பட்டிருந்த மரபுகளை ஆதிக்கச்சாதியினரே பெரும்பான்மையும் விலக்கிக் கொண்டனர்.

சலூன் கடைகளின் வளர்ச்சி மற்றும் இவர்களிடையே ஏற்பட்ட சிறிய அளவிலான சமுக விழிப்புணர்ச்சியின் காரணமாக, இவர்கள் பிணங்களுக்குச் சவரம் செய்தல், அந்தரங்கப்பகுதியில் மயிர் மழித்தல் முதலிய இழிச் செயல்களைச் செய்ய மறுத்து விட்டனர். எனினும், இன்றும் ஒரு சில இடங்களில் வயதானவர்கள் பழைய கட்டமைப்புக்குள்ளேயே இருந்து வருகின்றனர் என்பது நிதர்சனமான உண்மையாகும். இவ்வின மக்கள் ஆங்காங்கே சிறுக் குழுக்களாக இருப்பதால் இவர்களால் இன்றும் கிராமங்களில் பஞ்சாயத்து தலைவர், உறுப்பினர் போன்ற பதவிகளைக்கூட அடைய முடியாத நிலையே நிலவுகின்றது. பிற ஒடுக்கப்பட்ட சாதிகளுடன் ஒப்பிடும் போது இவர்கள் மீதுள்ள ஒடுக்குமுறைகள் மற்றும் கட்டமைப்புகளுக்குத் தீர்வுக் காணவும் ஒடுக்கு முறைகளைப் பேசுவதற்கும், போராடுவதற்கும் சாதீய அடிப்படையிலான வலுவான அமைப்புகள் இல்லாதது குறிப்பிடத்தக்கது. இளையத் தலைமுறையினர் தங்கள் சாதிப்பெயர்களை வெளிப்படையாகக் கூறி அமைப்புகள் மூலம் போராடினால் இவர்களும் மற்ற சாதியினரைப் போன்று மேன்மை அடைய வாய்ப்புள்ளது. மேலும் இவ்வினமக்கள் தங்களின் பாரம்பரிய மருத்துவப் பணியினைச் செய்வதில் ஆர்வம் காட்டுவது மிகவும் அவசியமானதாகும்.

## 3. சடங்குகளும் நம்பிக்கைகளும்

இனக்குழு மக்கள் தங்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளான பிறப்பு, இறப்பு, பூப்பு, திருமணம் தொடர்பாகப் பல சடங்குகளைச் செய்து வருகின்றனர். தனி சாதி அல்லது குழுவில் வாழும் மக்களிடையே இச்சடங்குகளில் ஒற்றுமைக் கூறுகள் காணப்படுகின்றன. மருத்துவ இனமக்கள் தனிக் குழுவாகச் சேர்ந்து வாழ்வது மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இவர்கள் ஏதேனும் ஒரு சாதி மக்களைச் சார்ந்து வாழ்வதால், அவர்களுக்கு என்று தனிப்பட்டச் சடங்கு முறைகள் இதுவென்று உறுதியாகக் கூறமுடியாது. இவர்கள் எந்த இன மக்களைச் சார்ந்து வாழ்கின்றார்களோ அந்த மக்களின் சடங்கு முறைகளையே இவர்களிடம் பெரும்பாலும் காணமுடிகிறது. திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து குமரிமாவட்டத்திற்கு இடம்பெயர்ந்து அல்லது குடியமர்த்தப்பட்ட ஒரு பிரிவினரின் வாழ்வியல் சடங்குகள் இங்கு ஆய்ந்துரைக்கப்படுகின்றன.

### சடங்கின் தோற்றம்

மனிதனானவன் ஒருமைப்பாடு, ஒழுங்கு, குறிக்கோள் ஆகியவற்றுடன் வாழத் தலைப்பட்ட போது ஏற்படுத்திக் கொண்ட சம்பிரதாயச் சாத்திரமே சடங்கு ஆகும். இதனைக் கம்பர் (கம்.பா.87), மறையவன் சடங்கு காட்ட என்று குறிப்பிடுகிறார். செந்தமிழ் அகராதி (1997:376) சடங்கு என்பதற்குக் கிரியை அல்லது மதத் தொடர்பான செய்கை என்றும் விளக்கம் அளிக்கின்றது. மனிதன் கருவுயிர்த்தல் முதல் இறப்பு வரை பல படிகளைக் கடக்கிறான். ஒவ்வொரு படியின் முக்கிய நிகழ்ச்சியைக் குறிப்பதற்காகவும், அதன் சிறப்பையும், பண்பையும், பலனையும் நினைவூட்டுவதற்காகவும் பல சிறப்புச் செயல்கள் செய்யுமாறு ஒவ்வொரு இனத்தாரும் சில விதிகளை உண்டாக்கி இருக்கிறார்கள். அச்சிறப்புச் செயல்கள் பிரவேசச் சடங்குகள் (தண்றங்ள் க்ங் ல்ஹறள்ள்ஹஞ்ங்) எனப்படும்.

ஆரம்பத்தில் தேவதைகளும், இறந்த ஆவிகளும் மக்களுக்குக் கேடு செய்யக்கூடும் என்ற நம்பிக்கையில் சடங்குகள் நடத்தப்பட்டன என்று கலைக்களஞ்சியம் (1956.ண்ஸ்:392) குறிப்பிடுகிறது. குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் தொடர்ந்து மக்களால் கையாளப் படுமானால் அவை சடங்குகள் என்று பெயர் பெறுகின்றன என்று சக்திவேல் (1980:12) விளக்கம் தருகிறார்.

சடங்கின் தோற்றத்திற்குச் சாதி நிலைக்களமாக அமைகின்றது. ஒரு சாதியில் பிறந்த மனிதனை அந்தச்சாதியே சடங்குகளைச் செய்யும்படித் தூண்டுகிறது. இதனை, சாதி என்பது ஒரு தனி மனிதன் பிறந்தது முதல் இறுதி வரை, தான் பிறந்த சாதியின் மணம், வாழ்வு, பிறப்பு, இறப்பு, பாவம், புண்ணியம் ஆகிய சடங்குகள் எவ்வெவ்வகையில் செயல்படுத்த வேண்டும் என்பதற்கு வழிகாட்டி மக்களை ஒன்றுத் திரட்டி அச்சாதியினுள் இருப்பதற்கு வகை செய்தது என்னும் வில்சனின் (1985:212) கூற்று ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அமைந்துள்ளது.

### பிறப்புச் சடங்கு

பிறப்புச் சடங்குகள் இனத்திற்கு இனம், சமயத்திற்குச் சமயம் மாறுபட்டவையாக உள்ளன. இச்சடங்கு பெண் கருவுற்றது முதல் குழந்தைக்குப் பெயர் சூட்டப்படும் வரை நடைபெறுகின்றது. மனித வாழ்க்கையின் தொடக்க நிகழ்ச்சியாக அமைவது பிறப்பு ஆகும். தமிழ் இலக்கியங்கள் குழந்தைப் பேற்றின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளன. குறிப்பாகத் 'தலைவி சூலுறும் பக்குவ காலத்தில் தலைவன் அவளைப் பிரிந்திருக்கக் கூடாது' என்ற கருத்தினைத் தொல்காப்பியர் (தொல்.1132) குறிப்பிடுகிறார்.

***மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்***<br>***நன்கலம் நன்மக்கட் பேறு*** *(திரு.60)*

என்று திருவள்ளுவரும் குழந்தைப் பேற்றிற்கு அக்கால சமுதாயம் தந்த முக்கியத்துவத்தை உணர்த்துகிறார். மானுட சமுதாயத்தில் குழந்தைப்பேறு உடையவர்களே பேறு பெற்றவர்களாகக் கருதப்படுகின்றனர். 'குழந்தையைப் பெற்றவர்களே இவ்வுலகில் புகழோடு வாழ்ந்து மறுமை அடைவர்' என்ற கருத்தினை அகநானூறும் வலியுறுத்துகின்றது. 'பிள்ளை பெறாதவர்களுக்குப் போரிலிருந்து உயிர்ப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது' என்று புறநானூறு சான்றளிக்கிறது. பெண்ணின் தலையாயக் கடமை குழந்தை பெற்றுத் தருவதே என்பதை, *"ஈன்று புறந்தருதல் எந்தலை*

கடனே" என்று புறநானூறு (புறம்: 312) கூறுகிறது. தாலாட்டுப் பாடலில் தாய் குழந்தைக்காக ஏங்கியதை,

***சோறு தண்ணி குடியாம முப்பது நாள் உண்ணாம***
***எவருக்கும் தெரியாம நெஞ்சம் துவளாம***
***பெற்றெடுத்த தங்கமே!***

என்னும் பாடலடிகளால் உணரமுடிகிறது. பிறப்புச் சடங்கினை; குழந்தை பிறப்புக்கு முன் உள்ள சடங்குகள், பேறுகாலச் சடங்குகள் மற்றும் குழந்தை பிறந்த பின் உள்ள சடங்குகள் என்று மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளன.

## குழந்தைப் பிறப்புக்கு முன் உள்ள சடங்குகள்

மருத்துவ இனமக்கள் குழந்தைப் பிறக்கும் முன்பு பிறக்கப் போகும் குழந்தை நோயின்றிப் பிறக்கவும், குழந்தைப் பிறப்பு எளிதாக நடப்பதற்காகவும் சில சடங்குகளைச் செய்கின்றனர். பெண் கருவுற்றிருப்பதைக் கர்ப்பமாகியிருக்கிறாள், முழுகாமல் இருக்கிறாள், குளியாமல் இருக்கிறாள், பிள்ளை உண்டாகி யிருக்கிறாள், மசக்கையாயிருக்கிறாள், சூலியாகி யிருக்கிறாள் என்று பலவாறு கூறுகின்றனர். இவ்வார்த்தைப் பிரயோகம் மற்றும் சடங்கு மாற்றங்கள் குறித்து, பெண் கருவுற்றது முதல் குழந்தை பிறக்கும் வரையிலும் நடைபெறும் சடங்குகள் சாதிக்குச் சாதி, சமயத்திற்குச் சமயம் வேறுபடுவதும் மாறுபடுவதும் இயற்கை என்று சண்முகசுந்தரம் (1980:128) குறிப்பிடுகிறார். தற்போது அதிகமாக Pregnant ஆகி இருக்கிறாள் என்று ஆங்கிலத்தில் கூறுகின்றனர். பிறப்புக்கு முன் உள்ள சடங்காகக் கருவுற்றமை அறிதல், சீனி பழம், சினை இட்லி கொடுத்தல், சீமந்தம் செய்து தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்லுதல் முதலியவை நடைபெறுகின்றன.

### பெண் கருவுற்றமை அறிதல்

பெண்ணானவள், தாய்மையடைந்துள்ளதை அவள்தான் முதலில் அறிகிறாள். இதனை 'தாய்மைக்குத் தெரியாத சூலுண்டோ?' என்ற பழமொழி உணர்த்துகின்றது. பெண் கருவுற்றிருக்கிறாள் என்றறிந்ததும் தாய்வீட்டார் வந்து பார்ப்பார்கள். பெண் உணவு உண்ண இயலாமலும், வீட்டு வேலைகள் செய்ய முடியாமலும் துன்பமடைவாள். இதனை 'மசக்கை' என்று கூறுகின்றனர். இந்த மசக்கை காலம் கழியும் வரை கருவுற்றப் பெண்ணின் தாய் தன்மகளுடன் தங்கி இருந்து நன்கு

கவனித்துக் கொள்வாள். நன்றாக வேலைச் செய்ய முடியும் என்ற நிலை வந்த பிறகு தனது ஊருக்கு வந்து விடுவது வழக்கம்.

### சீனியும் பழமும் கொடுத்தல்

மருத்துவச் சமுதாயத்தில் பெண் கர்ப்பமான ஐந்தாவது மாதத்தில் பெண் வீட்டிலிருந்து உறவினர்கள் வந்து கணவன் வீட்டாரைச் சார்ந்த உறவினர்களுக்குப் பழமும், சீனியும் கொடுக்கின்றனர். இதனை 'அரிபழம் போடுதல்' என்றும் கூறுகின்றனர். இவ்வாறு செய்வதால் பெண் மனம் மகிழ்ச்சியடைவாள்; பேறுகாலம் சுகமாக இருக்கும் என்றும் நம்புகின்றனர்.

### சினை இட்லி

பெண் கருவுற்ற ஏழாம் மாதம் தாய் வீட்டிலிருந்து பெண்ணைப் பார்க்க வரும் உறவினர்கள் இட்லி உணவை தயார் செய்து எடுத்து வருவார்கள். அதனை ஊரில் உள்ள உறவினர்கள் நண்பர்களுக்கு வழங்குவது மரபு. இதனை 'சினை இட்லி' என்று கூறுகின்றனர். இந்தச் சடங்கு பெண் கருவுற்றிருக்கும் செய்தியினைக் குறிப்பால் உணர்த்துகின்றது.

### சீமந்தம்

மருத்துவச் சமுதாயத்தில் கருவுற்றப் பெண்ணுக்கு ஏழாவது அல்லது ஒன்பதாவது மாதத்தில் சீமந்தச் சடங்கு செய்கின்றனர். அன்று பெண்ணுக்குத் திருமணப் புடவையைக் கட்டுமாறு செய்து கைகள் இரண்டிலும் கண்ணாடி வளையல்களைச் சுமங்கலி பெண்கள் அணிவிக்கின்றனர். இதனை 'சூலிக்காப்பு' என்று கூறுகின்றனர். இச்சடங்கில் கலந்துக் கொள்ளும் எல்லாப் பெண்களுக்கும் கண்ணாடி வளையல்கள் கொடுக்கப்படுகின்றன. மேலும், பெண்ணின் தந்தை வெள்ளிப் பாத்திரத்தில் வெற்றிலையை மடக்கிப் பணம் வைத்து மாப்பிள்ளையின் தந்தையிடம் கொடுப்பார். இதனைச் சீமந்தச் சுருள் என்பர். இந்தச் சீமந்தச் சடங்கு பெண்ணை மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கில் நடைபெறுகிறது.

### தாய்வீட்டிற்கு அழைத்துச் செல்லுதல்

கணவன் வீட்டில் வைத்துச் செய்யக்கூடிய சடங்குகள் முடிந்தபின்பு ஏழாவது அல்லது ஒன்பதாவது மாதம் தாய்வீட்டிற்கு அழைத்துச் செல்லுகின்றனர். பெண்ணை அழைத்துச் செல்லும்போது கணவன், மனைவியைப் பார்க்கக் கூடாது என்று

கூறுகின்றனர். அத்தோடு பெண்வீட்டார் 'போய் வருகிறோம்' என்று சொல்லாமல் சென்றுவிடுவது மரபு.

## பேறுகாலச் சடங்குகள்

தலைப்பிள்ளையின் பேறுகாலம் பெண்ணின் தாய் வீட்டிலும், மற்ற குழந்தைகளுக்குக் கணவன் வீட்டிலும் மகப்பேறு நடைபெறுகின்றது. பேறுகாலத்திற்காகத் தாய் வீட்டிற்கு வந்தபின் குழந்தை பிறப்பதற்கு முன்னால் கணவன் வீட்டிற்குத் திரும்பக்கூடாது என்ற வழக்கம் காணப்படுகின்றது.

மருத்துவ இனப்பெண்களே ஊரிலுள்ள மற்ற இனத்தாருக்கும் மருத்துவச்சியாக இருப்பதால் தம் இனத்தாருக்கும் இவர்களே பேறுபார்க்கின்றனர். பிரசவ வலி எடுத்ததும் வீட்டின் உத்திரத்தில் ஒரு சேலையைக் கட்டித் தொங்க விடுகின்றனர். பெண் தனக்கு மிகுந்த வலி எடுக்கும்போது அந்தச் சேலையை இறுகப்பிடித்துக் கொள்கிறாள். பெரும்பாலும் வீட்டில் வைத்தே பேறுகாலம் பார்க்கின்றனர். இவர்களால் முடியவில்லை யென்றால்தான் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லுகின்றனர். தற்போது எல்லாப் பெண்களுக்கும் மருத்துவமனையிலேயே பேறுகாலம் நடைபெறுகின்றது. அங்கு மருத்துவயினப் பெண்கள் பேறுகால உதவியாளராகப் பணிபுரிந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## *செய்தி அறிவித்தல்*

மருத்துவச்சிப் பிறந்த குழந்தை ஆணாக இருந்தால் ஏழு குரவையிடுவாள்; பெண்ணாக இருந்தால் குரவையிடுவதில்லை. ஆனால் மற்ற இனத்தாருக்குப் பேறுகாலம் பார்க்கும்போது பெண் குழந்தை பிறந்தால் மூன்று அல்லது ஐந்து குரவையிடுகிறார்கள். இதனை மாற்கு (2001:199) பிறக்கும் குழந்தை ஆணாக இருந்தால் பெண்கள் எல்லோரும் குரவையிடுவர். குரவை சத்தத்தை வைத்துப் பிறந்தது ஆண் குழந்தை என்று மற்றவர்கள் அறிந்து கொள்வர். பெண் குழந்தைப் பிறந்தால் குரவையிட மாட்டார்கள் என்னும் இவரது கூற்று இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

## *குழந்தை பிறந்தபின் செய்யும் சடங்குகள்*

குழந்தை பிறந்த பின்னர் சேனை கொடுத்தல், இழைகட்டுதல், பெயரிடுதல், கணவன் வீட்டிற்கு அழைத்துச் செல்லுதல், முடி எடுத்தல் முதலிய சடங்குகள் நடைபெறுகின்றன.

## சேனைக் கொடுத்தல்

குழந்தை பிறந்து சிறிது நேரத்திற்குப் பிறகு சேனைக் கொடுக்கும் வழக்கம் காணப்படுகிறது. சேனையாக விளக்கெண்ணெய், கருப்பட்டி, வெள்ளைப்பூண்டு, நீத்தண்ணீர், பனங்கற்கண்டு ஆகியனவற்றைச் சேர்த்துக் குழைத்துக் குழந்தையின் நாக்கில் தடவுகின்றனர். வயதானவர்கள் முதலில் குழந்தைக்குச் சேனைக் கொடுக்கின்றனர். சேனைக் கொடுப்பது ஒரு மருந்தாகவும், ஒரு சம்பிரதாயமாகவும் நடக்கிறது. சேனைக் கொடுப்பதால் குழந்தையின் வயிற்றில் உள்ள கழிவு மலம் எளிதாக வெளியேறவும் பயன்படுகிறது. குழந்தை பெற்றப் பெண்கள் வலிமையற்றவர்களாக இருப்பதால் அவர்களால் அதிகமாக வேலைச் செய்ய முடிவதில்லை. எனவேதான் அவர்களை இருபத்திரண்டு நாட்கள் ஒதுக்கி வைக்கின்றார்கள். அந்த நாள்களில் வீட்டில் ஒரே இடத்தில் தனியாக இருக்க வேண்டும். எந்தப் பொருளையும் தொடுவதற்கு அனுமதிப்பதில்லை. தொட்டால் தீட்டுப்பட்டதாகக் கருதுகின்றனர். பேறுகாலத்தில் பத்திய மருந்துகளையே அதிகமாகச் சாப்பிடக் கொடுக்கின்றனர்.

## இழைகட்டுதல்

குழந்தை பிறந்த பதினேழாவது நாள் குழந்தையின் இடுப்பில் கருப்புக் கயிறு அல்லது தங்கக் கொடியினைக் கட்டுகின்றனர். அன்று பெண்வீட்டார் குழந்தைக்கு மோதிரம், கோடி (புதுத்துணி), வளையல் முதலியவற்றை அணிவிப்பார்கள். குழந்தைப் பிறந்த மகிழ்ச்சியினைக் கொண்டாடுவதற்காக இச்சடங்கு நடத்தப்படுகின்றது.

## பெயரிடுதல்

பிறந்தக் குழந்தையினைச் சுட்டி அழைப்பதற்குப் பெயரிடுதல் மிகவும் முக்கியமான நிகழ்வாக அமைந்துள்ளது. பண்டைய காலத்திலேயே குழந்தைக்குப் பெயர்சூட்டிக் கொண்டாடி உள்ளனர். சிலப்பதிகாரத்தில்,

***மாமுது கணிகையர் மாதவி மகட்கு***
***நாம நல்லுரை நாட்டுது மென்று***
***தாமின் புறாஉந் தகை மொழி கேட் டாங்க*** (சிலம்பு-அடை, 25-29)

என்றப் பாடலடிகள் மூலம் குழந்தைக்குப் பெயரிடும் தன்மையினை அறியமுடிகிறது. குழந்தைக்குப் பெயர் வைக்க வேண்டும் என்று நினைத்தவுடனே குடும்பத்தில் உள்ள தாத்தா, பாட்டி, அல்லது இறந்தவர்களின் பெயர்களை அவர்களின் நினைவாக வைக்க

எண்ணுவார்கள். இறந்த முன்னோர்களின் பெயர்களை இடும் வழக்கம் காணப்படுகிறது. இறந்தவர்கள் மீண்டும் தங்களுடைய குடும்பத்தில் பிறக்கின்றனர் என்ற நம்பிக்கையின் காரணமாக முன்னோரின் பெயரை வைக்கின்றனர். இதனை, சங்குரச்சு பொட்டு இட்டு உனக்கு சந்திரன்னு பெயருமிட்டு என்ற தாலாட்டுப் பாடல் வரிகள்மூலம் அறியமுடிகிறது.

## கணவன் வீட்டிற்கு அழைத்துச் செல்லுதல்

குழந்தைப் பேற்றிற்காக ஒன்பதாம் மாதத்தில் அழைத்துவரப்பட்டப் பெண்ணை மகப்பேறு முடிந்து நாற்பத்தொன்றாம் நாள் தாய் வீட்டில் இருந்து கணவன் வீட்டிற்கு அழைத்துச் செல்வார்கள். அப்போது கணவன் வீட்டார் பெண்ணின் வீட்டில் வைத்து விருந்து வைக்கின்றனர். பெண் தனது குழந்தையுடன் கணவன் வீட்டிற்குச் செல்லும்போது தாய் வீட்டிலிருந்து அவளுக்கும், குழந்தைக்கும், புத்தாடை எடுத்துக் கொடுக்கின்றனர். குழந்தைக்கு அணிகலன்கள் அணிவித்தும் அனுப்புகின்றனர்.

## *பிறப்புச் சடங்கில் வண்ணாத்தியின் பங்கு*

குழந்தை பிறந்து பதினாறு நாள் வரை வண்ணாத்தி அப்பெண்ணுக்கு மாற்றுச் சேலை கொடுக்கிறாள். அழுக்குச் சேலையை வண்ணாத்தி எடுத்துச் செல்லும்போது அவளுக்கு எண்ணெய், சீயக்காய் முதலியனவற்றைக் கொடுக்கிறார்கள். வண்ணாத்தி பதினாறு நாட்களும் அந்த வீட்டில் உணவு வாங்கமாட்டாள். பதினாறாம் நாள் தீட்டு கழித்தபின்பு வண்ணாத்திக்கு உணவு கொடுத்து, ஒரு புது புடவையும் கொடுக்கின்றனர்.

## முடி எடுத்தல்

குழந்தை நோய் நொடியின்றி நீண்ட காலம் வாழ வேண்டும் என்னும் காரணத்தினால் முடியினைக் கோவிலுக்குக் காணிக்கையாக வழங்குகின்றனர். தாங்கள் நேர்ந்து கொண்ட தெய்வத்தின் முன்னிலையில் வைத்து முடி எடுப்பதை மரபாகக் கொண்டுள்ளனர். குழந்தைக்கு ஒரு வயது ஆனதும் முடி எடுக்கும் வழக்கம் எல்லா இனத்தவரிடமும் காணப்படுகிறது.

## பூப்புச் சடங்கு

மனிதன் தன் வாழ்க்கை வட்டத்தில் பலவிதமானச் சடங்குகள் செய்தாலும் 'சடங்கு' என்ற பெயரால் நடத்தப்படுவது

'பூப்புச்சடங்கு' ஆகும். இச்சடங்கு பெண்களுக்குரியது என்பதால் 'சடங்கு' என வழங்கப்பட்டது. பெண்ணின் பருவங்கள் ஏழு என்று கூறுவர். அவற்றுள் ஒன்று மங்கைப் பருவமாகும். பெண் பூப்பின்போது மங்கைப் பருவத்தை அடைகிறாள். பெண் பூப்படைதல் என்பது மணவாழ்க்கைக்குத் தயாராகிவிட்டாள் என்பதைக் குறிப்பதாகும். பூப்படைவதைச் சமைந்துவிட்டாள், சடங்காகிவிட்டாள், வயதுக்கு வந்துவிட்டாள், பெரியவளாகிவிட்டாள் என்றும் கூறுகின்றனர்.

பெண் பூப்படைந்த நாள் முதல் பதினாறு நாள் வரையில் பல சடங்குகளைச் செய்கின்றனர். சிலர் முப்பது நாட்களுக்குப் பின்னர் இச்சடங்கினைக் கழிக்கின்றனர். பெரும்பாலும் பதினாறாவது நாளில் தான் சடங்கு கழிக்கும் நிகழ்ச்சியை இம்மக்கள் நடத்துகின்றனர்.

## பூப்பெய்தும் காலம்

மனிதர்களிடையே இன்று வருங்காலத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வம் மிகுதியும் காணப்படுகிறது. எனவேதான் ஜாதகம் எழுதப்படுகிறது. பெண்களுக்குப் பிறப்புச் சாதகத்தை விடவும், பூப்புச் சாதகம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. எனவே பூப்படைந்த நாள், நேரம், நட்சத்திரம் முதலியவற்றைக் குறித்து வைக்கின்றார்கள். இந்தப் பூப்பு சாதகப்படியே திருமண வாழ்வு அமையும் என்றும் நம்புகின்றனர். மருத்துவர் சமுதாயத்தில் பூப்பு ஜாதகம் பார்ப்பது ஒரு மரபாகக் காணப்படுகின்றது. பூப்படையும் நேரம் பெரும்பாலும் காலை நேரமாகவே இருக்கும் என்று இவ்வினத்தார் கூறுகின்றார்கள்.

## தாய்மாமன் சீர்

பெண் தான் பூப்படைந்தச் செய்தியைத் தன் தாய்க்குச் சொல்லுவது இல்லை. பெண்ணின் தாய் தன் மதிநுட்பத்தினால் தெரிந்து கொள்வாள் அல்லது வயதான பெண்கள் மூலம் கேட்டுத் தெரிந்து கொள்கிறாள். பூப்படைந்தவுடன் தாய்மாமனுக்கு முதலில் தகவல் கூறுகின்றனர். அதன்பின்பு பிறருக்குத் தெரிவிக்கின்றனர். பெண் பகல் பொழுதில் எப்போது பூப்படைந்தாலும் மாலையில்தான் அவளுக்குத் தண்ணீர் ஊற்றி நீராட்டுகின்றனர். தாய்மாமன் செய்தி அறிந்துப் பெண்ணிற்குப் புடவை, பூ, மாலை, அலங்காரப் பொருட்கள், வெற்றிலை, பாக்கு, பழம், மஞ்சள், தேங்காய் முதலியவற்றையும் சீர்களாகக் கொண்டு வரும் வழக்கம் உள்ளது. முன்னர் மேளதாளத்தோடு வருவதுண்டு. தற்போது

இந்நிலை காணப்படுவதில்லை. அவ்வாறு தாய்மாமன் சீர் கொண்டு வரும்போது,

*காரேறி வாராவ கண்ணனூர் மாமன்*
*தேரேறி வாராவ தேவலோகத்துப் பாண்டி மன்னன்*
*முந்தி மின்னனும் மேமுந்தி கொஞ்சுதுனும்*
*தாலி மின்னுதுன்னும் தாயத்து கொஞ்சுதுன்னும்*
*சமத்துள்ள பாண்டியனுக்கு*
*என்னென்ன சீதனங்கள் பால்மாடு நூறாம்*
*பணத்திலே ஆயிரமாம் பெட்டி வரும் பேழை வரும்*
*பொன்னாலே தாலி வரும் சீனிக் குதிரை வரும்*
*சிவகாசி மேளம் வரும் அடிங்கப்பா மேளத்தை*
*அச்சுதவனுக்குத் தாலிகட்ட கொட்டுங்க மேளத்தைக்*
*கோபாலனுக்குத் தாலிகட்ட*

என்று பாடல்கள் பாடும் வழக்கம் காணப்பட்டது. தற்போது இந்தப் பாடல்களை யாரும் அதிகமாகப் பாடுவது இல்லை.

### தண்ணீர் ஊற்றுதல்

பெண் பூப்படைந்த அன்று மாலை தாய்மாமன் சீர் கொண்டு வந்தபின்பு உறவினர்கள் எல்லோரையும் 'தண்ணீர் ஊற்றப் போகிறோம் வாருங்கள்' என்று பெண்ணின் தாய் அழைப்பாள். எல்லோரும் வந்த பிறகு தண்ணீர் ஊற்றுவதற்குரிய ஏற்பாடுகள் நடைபெறும். தண்ணீர் ஊற்றும் இடத்தில் பெண்கள் மட்டுமே இருப்பார்கள். வருகின்ற பெண்கள் பழம், வெற்றிலை, பாக்கு, பூ, மஞ்சள், முட்டை, எண்ணெய் முதலான பொருள்களைக் கொண்டு வருவர். பூப்பெய்தியப் பெண்ணைக் கிழக்குத்திசை பார்த்து ஒரு பலகையில் அமரச்செய்து பெண்ணின் மதனி அல்லது மாமிமுறை உள்ளவர்களில் ஒருவர் தலைக்குத் தண்ணீர்விடுவாள். பெண்கள் எல்லோரும் குலவையிடுவர். இந்த நேரத்தில் சிலர் பூப்புப்பாடல்கள் பாடுவதும் உண்டு. இப்பாடல்களை 'வாத்துமானம்' என்று இம்மக்கள் கூறுகின்றனர்.

*கல்லால் கிணறு வெட்டிக் கசத்தால் கயிரோடி*
*கல்லறைக்கும் கீழே கண்டேன் கணையாழி*
*ஒரு அரைக்குக் கீழே இருக்கா இராஜா மகள்*
*ஆத்திலே குளிச்சா அலை வாழை தட்டும் என்பார்*
*குளத்திலே குளிச்சா குலைவாழை தட்டும் என்பார்*
*முத்தத்திலே குளிச்சா முருங்கமரம் தட்டும் என்பார்*

*வளவிலே குளிச்சா வன்னிமரம் தட்டும் என்பார்*
*செங்கழுனி ஓடையிலே சேர்ந்து தலை முழுகி*
*வயிர முடிப்பந்தலிலே வந்து தலைதுவட்டி*

இவ்வாறு பாடல்களைப் பாடி, தலைக்குத் தண்ணீர் விடுகின்றனர். இந்தப் பாடல்களை இளம் பெண்கள் பாடுவதில்லை; அவர்களுக்குத் தெரிவதும் இல்லை. வயதானவர்கள்தான் பாடுகின்றனர். தண்ணீர் ஊற்றிய பின் தாய்மாமன் கொண்டு வந்த புதிய ஆடைகளைக் கொடுத்து அலங்காரம் செய்து ஒரு டம்ளர் பாலும், கோழி முட்டையும், சிறிது நல்லெண்ணெயும் சேர்த்துப் பெண்ணை சாப்பிடுவது செய்வார்கள். தொடர்ந்து சிலநாள்கள் மேற்கூறிய உணவினையும் கொடுப்பர். எல்லா குடும்பத்திலும் பூப்பெய்திய நாளே மாமன் கோடி (புதுத்துணி) எடுத்துக் கொடுப்பது இல்லை. சடங்கு நடக்கும் அன்று கோடி எடுத்துக் கொடுக்கும் வழக்கமும் உள்ளது.

### விலக்கி வைத்தல்

பூப்படைந்த நாள் முதல் பெண்ணைத் தனியே ஒரு மூலையில் அமரச் செய்கின்றனர். இதனைச் சக்திவேல் (1980:62) பழைய பழங்குடி மக்கள் பெண்கள் பருவம் அடைந்தவுடன் தனிக்குடிசையில் வைக்கின்றனர் என்று குறிப்பிடுகிறார். தனியாக இருக்கும் பெண்ணின் அருகில் இரும்பு பொருட்கள் மற்றும் உலக்கையையும் போட்டுப் பெண்ணைக் காண வருகிறவர்கள் அவளைத் தொடாமல் பார்த்துக் கொள்வர். பூப்பெய்தியப் பெண் தீயச் சக்திக்கு ஆட்பட்டவள் என்ற நிலையில் தீண்டத்தகாதவர் களாகவும் கருதப்படுகிறார். இப்பெண்ணைப் பதினாறு நாட்கள் வரை வீட்டில் ஒரு தனியிடத்திலோ, வீட்டின் திண்ணையிலோ திரையால் மறைத்துத் தனியாக வைத்துப் பின்னர் நீராட்டிக் குடும்பத்தோடு இணைத்துக் கொள்வர் என்று காந்தி (1980:90,91) குறிப்பிடுகிறார். இம்முறையினைத் தற்போதும் எல்லாவிதமான மக்களிடமும் காணமுடிகிறது.

### பொங்கிப் போடுதல்

பருவமடைந்த பெண்ணிற்கு உறவினர்கள் விருந்து வைக்கும் நிகழ்ச்சியைப் 'பொங்கிப் போடுதல்' என்று கூறுகின்றனர். முதலில் பெண்ணின் தாய்மாமன் வீட்டிலிருந்து வந்து ஆட்டிறைச்சியுடன் உணவு சமைத்துக் கொடுப்பர். அதன்பின்பு பெண்ணின் சித்தப்பா, பெரியப்பா மற்ற உறவினர்களும் பொங்கிப் போடுவார்கள். இந்நிகழ்ச்சி பதினாறு நாள்களும் நடைபெறும்.

பெண்ணிற்கு உணவு கொடுக்கும்போது மற்றவர்களுக்குத் தெரியாமல் கொடுப்பார்கள் அவர்கள் உணவினைப் பார்த்தால் உணவு உடலுடன் சேராதெனவும், பெண்ணிற்குத் துன்பம் ஏற்படும் என்றும் கருதுகின்றனர்.

### மாத்து வாங்குதல்

பூப்பெய்தியப் பெண் தனியாக இருக்கும் பதினாறு நாட்களும் நீராடிய பின்பு அணிவதற்குரிய ஆடைகளை வண்ணாத்தி கொண்டு வந்துக் கொடுக்கிறாள். அந்த ஆடைகளை அப்பெண் அணிவது வழக்கமாக உள்ளது. இதையே மாத்து வாங்குதல் என்று கூறுகின்றனர். 'மாற்று வாங்குதல்' என்பது தான் பேச்சு வழக்கில் மாத்து வாங்குதல் என மாறிற்று. இதனை,

***வெள்ளிக்கிழமையிலே விடிய இரண்டு நாழிகையிலே***
***சாமக் குழியிலே மே முந்திச் சேலையிலே***
***மேகம் பதிச்சது போல் கீழ் முந்திச் சேலையிலே***
***கிண்ணம் பதிச்சது போல் ஆழந்துறையிலே***
***அழுக்கெடுக்கிற வண்ணானே நீலத்துறையிலே***
***நின்னடிக்கிற வண்ணானே வண்ணானை எங்கே***
***சோபனம் சொல்லிப் போறதுக்கு***

என்னும் வாத்துமானப் பாடலடிகள் மூலம் உணரலாம். இவ்வழக்கம் எல்லா இனத்தவரிடமும் காணப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### பூப்புனித நீராட்டுவிழா

பெண் பூப்படைந்து பதினாறு நாள் கழித்துத் தீட்டு நீங்கி வீட்டிற்குள் சேர்த்துக். கொள்ளப்படுகிறாள். அதற்காகப் 'புனித நீராட்டு விழா' நடத்துகின்றனர். சிலர் முப்பதாவது நாளிலும், சிலர் வசதியின்மையால் சில மாதங்கள் கழித்தோ, திருமணத்தன்றோ இவ்விழாவை நடத்துகின்றனர். இவ்விழாவைக் குறிப்பிட்ட நாளில் எந்த நேரத்தில் நடத்துவது என்பது பற்றிச் சோதிடரிடம் கேட்டு வருவார்கள். அழைப்பிதழ்கள் அச்சடித்து உறவினர்களை அழைக்கின்றனர். அழைப்பிதழ் 'பூப்புனித நீராட்டு விழா' அல்லது 'மஞ்சள் நீராட்டு விழா' என்று அச்சடிக்கப்பட்டிருக்கும். சில நேரங்களில் வாய்மொழியாக அழைப்பு விடுத்தலும் உண்டு. விழாவிற்கு வரும் உறவினர்கள் பரிசுப்பொருட்கள் கொண்டு வருவார்கள். தாய்மாமன் பெண்ணிற்குப் பட்டாடைகளுடன், பழக்குலை, வெற்றிலை, பாக்கு, பூ, மஞ்சள், அழகுசாதனப்

பொருட்கள், நகைகள் ஆகிய சீர்களைக் கொண்டு வருவார். இவ்வாறு கொண்டு வரும்போது,

*தாயில்லாப் பிள்ளை என்று தரக்குறைவா பேசாதிங்க*
*மாமன் இல்லாப் பிள்ளையென்று மதிப்பு குறைவா பேசாதீங்க*
*மாமாவுண்டு மாமாவுண்டு வண்ணக் கட்டிலில்*
*வந்தேற மாமாவுண்டு குறுங்கட்டிலிலே*
*குதிச்சேர மாமாவுண்டு இந்த சபையிலே அம்மனைக் கும்பிடம்மா*
*கும்பிட்ட கைக்கு என்னென்ன அடையாளம்*
*பூசிக் குளிக்க போதாப் பொடி மஞ்சள்*
*உடுத்துக் குளிக்க ஒன்பது முழம் கண்டாங்கி*
*நெத்திக்குக் குப்பி நிலம் பார்க்கும் கண்ணாடி*
*கொண்டைக்குக் குப்பிவிட்டார் தாய்மாமன்*
*போடுங்க ஒரு குலவை பொன்னால ஒரு குலவை*

மாமனின் கடமைகளையும், அவர் கொண்டு வரும் சீர்களையும் பெருமையுடன் கூறிப் பாடுகின்றனர்.

### நீராட்டுதல்

தாய்மாமனும், உறவினர்களும் வந்த பின்னர் பூப்படைந்த பெண்ணை நீராட்டுகின்றனர். அதற்கு முற்றத்தில் நிறைக் குடங்களில் நீர் வைக்கப்பட்டிருக்கும். பெண்ணின் மதனிமுறை உள்ளவள் பெண்ணை அழைத்து வந்து முற்றத்தில் ஒரு பலகையில் கிழக்குத் திசை நோக்கி உட்கார வைத்து முதலில் தண்ணீர் ஊற்றுவாள். பின்னர் மற்ற பெண்களும் தண்ணீர் ஊற்றுவார்கள். அப்பெண்ணின் உடம்பு முழுவதும் மஞ்சள் பூசிக் குளிக்கச் செய்வர். நீராட்டும்போது பெண்கள் குரவையிடுவார்கள்.

### சடங்குக் கழித்தல்

பெண்ணை நீராட்டிய பிறகு அலங்காரம் செய்வர். பெண்ணின் மதனியே அலங்காரம் செய்கிறாள். தாய்மாமன் எடுத்து வந்த புடவையினைக் கட்டி, பெண்ணிற்கு மாலை அணிவித்து வீட்டின் முன்னால் அமைக்கப்பட்டிருக்கும் மேடையில் அமரச் செய்வார்கள். சிறு வயதுடையப் பெண்ணின் அத்தை மகனை அல்லது மகளை மாப்பிள்ளை போன்று அலங்காரம் செய்து மேடையில் பெண்ணிற்கு அருகில் அமரச் செய்வார்கள். பெண்ணின் மதனி ஒரு தட்டில் சோறும், இன்னொரு தட்டில் பாயாசமும் வைத்து அத்தட்டுகளைப் பெண்ணின் தலையை மூன்று

முறை சுற்றுவாள். இந்தச் சோறும், பாயாசமும் வண்ணாரிடம் கொடுக்கப்படும். தாய்மாமன் வந்து பெண்ணிற்குத் திருநீறுபூசி அன்பளிப்பு கொடுப்பார். பெண் பெரியவர்கள் காலில் விழுந்து வணங்குவாள். தற்போது அந்தணர்களை அழைத்தும் இச்சடங்கு நடத்தப்படுகிறது. இந்த நிகழ்ச்சியையே 'சடங்கு கழித்தல்' என்கிறார்கள். இவ்வாறு சடங்கு கழிப்பதன் மூலம் தீட்டு நீங்கிவிட்டதாக நம்புகின்றனர். பெண் மணவாழ்க்கைக்குத் தயாராகிவிட்டாள் என்பதால் இந்நிகழ்ச்சி மங்கலமாகக் கருதப்படுகிறது.

## திருமணச் சடங்கு

திருமணம் என்பது ஓர் ஆணும், பெண்ணும் இணைந்து வாழ்வதற்காகச் சமுதாயத்தால் ஏற்படுத்தப்பட்ட ஓர் ஏற்பாடு ஆகும். திருமணம் எல்லா இன மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். ஒவ்வொரு இன மக்களிடமும் மாறுபட்ட ஒன்றுபட்ட திருமணச் சடங்கு முறைகள் காணப்படுகின்றன. இதனைத் திருமணம், மதம், இனம், பண்பாடு, மனப்பாங்கு ஆகியவற்றிற்கு ஏற்ப மாறுபடும் இயல்பானது என்று காந்தி (1980:11) குறிப்பிடுகிறார். மனித மனம் தன்பால் உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திய முறையே திருமணமாகும் என்று பக்தவத்சலபாரதி (1990:368) குறிப்பிடுகிறார்.

திருமணம் என்ற சொல்லுக்குத் தமிழ்ப் பேரகராதி 'தெய்வீகக் கூட்டம்' எனப் பொருள் தருகிறது. இன்று பேச்சு வழக்கில் 'கல்யாணம்' என்று சுட்டியுரைக்கின்றனர். மணமுறையினைப் பண்டைத் தமிழர் 'வதுவை' (அகம்,86), மன்றல் (கலி, 28) என்ற சொற்களால் குறிப்பிட்டுள்ளனர். தொல்காப்பியர், *"மறையோர் தேயத்து மன்றல் எட்டினுள்" (தொல் பொருள், 89)* என்று எண்வகை மணங்களாகப் பிரம்மம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். தமிழர்களிடையே மூன்று விரும்பத்தக்க மணமுறைகள் நிகழ்கின்றன. அவை,

1. அக்கா மகளை மணப்பது.
2. அத்தை மகளை மணப்பது (தந்தையின் சகோதரியின் மகளை மணப்பது).
3. தாய்மாமன் மகளை மணப்பது (தாயின் சகோதரன் மகளை மணப்பது). இவர்கள் மூவரும் உரிமைப் பெண்கள், முறைப் பெண்களுமாவர். இந்த மூன்று வகையான திருமண

முறைகளும் அடிப்படையில் முறை மணத்தை மையமாகக் கொண்டவையாகும் என்று பக்தவத்சல பாரதி (2002:41) தமிழர் திருமணமுறைகளைக் குறிப்பிட்டுள்ளார். மருத்துவ இனமக்களிடையே இம்மூன்று விதமான மணமுறைகளும் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## திருமணச் சடங்குமுறை

மருத்துவ இனமக்கள் உறவுமுறைத் திருமணம் செய்யும் வழக்கம் கொண்டவர்களாவர்; இவர்கள் பெரும்பாலும் அக்கா மகளைத் திருமணம் செய்கின்றனர். இவர்கள் திருமணச் சடங்குகள், 1. திருமணத்திற்கு முன் நடைபெறுபவை, 2. திருமணத்தன்று நடைபெறுபவை, 3. திருமணத்திற்குப் பின் நடைபெறுபவை என்று மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளன.

## திருமணத்திற்கு முன் நடைபெறுபவை

மருத்துவ இனமக்கள் பெண் வயதுக்கு வந்தவுடன் அவளுக்கு ஏற்ற மாப்பிள்ளையைப் பார்க்கும் பணியைத் தொடங்குகின்றனர். இவர்களிடையே ஜாதகம் பார்க்கும் வழக்கம் காணப்படுகின்றது. மாப்பிள்ளைக்கும், பெண்ணுக்கும் பொருத்தம் இருக்கிறதா? என்று பார்க்கின்றனர். பொருத்தம் இருந்தால் மட்டுமே திருமணம் உறுதிச் செய்யப்படுகிறது. அதன்பிறகே வரதட்சணை பற்றிப் பேசுகின்றனர். வரதட்சணை அவரவர் தகுதிக்கேற்ப நிலமாகவோ, பணமாகவோ, நகையாகவோ வழங்கப்படுகின்றது.

## நிச்சயம் செய்தல்

திருமணத்திற்கான முயற்சிகள் மேற்கொண்ட பின்னர் "நிச்சயதார்த்தம்" செய்யப்படுகிறது. நிச்சயதார்த்தமானது 'பட்டுக் கட்டுதல்', 'நிச்சயதாம்பூலம்' 'வெற்றிலை கைமாறுதல்' என்றச் சொற்களால் வழங்கப்படுகின்றது. நிச்சயதார்த்தம் பெண்வீட்டில் வைத்துதான் நடைபெறுகிறது. மாப்பிள்ளை வீட்டார் முறைப்படி மூன்று தாம்பாளத்தில் பொருட்கள் கொண்டுச் செல்வர். அதில் குங்குமம், மஞ்சள், வெற்றிலை, பாக்கு, தேங்காய், பூக்கள், நிச்சயதார்த்தப்பட்டு, கனி வகைகள் முதலியன இருக்கும். திருமண நாளைப் பஞ்சாங்கம் பார்த்துக் குறித்து, மண ஓலையினை வாசிக்கின்றனர். இரண்டு தாம்பாளத்தட்டில் மஞ்சள், வெற்றிலை, குங்குமம், பழங்கள் வைத்து மணமகனின் தந்தையும், மணமகளின் தந்தையும் தாம்பாளத்தை மாற்றுகின்றனர். மாப்பிள்ளையின் சகோதரி பெண்ணை அலங்கரித்து நிச்சயதார்த்தப்பட்டினைக் கட்டி அழைத்து வருவாள். மாப்பிள்ளை பெண்ணின் விரலில் மோதிரம்

அல்லது காப்பு இடுவார். உறவினர்கள் பெண்ணின் நெற்றியில் திருநீறு இட்டு வாழ்த்தித் தகுதிக்கு ஏற்ப பணம் கொடுக்கின்றனர். பின்னர் கால்நாட்டும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அழைப்பிதழ்கள் இருவீட்டார் அழைப்பாக அச்சிடப் படுகின்றன. மணமகன் வீட்டில் அழைப்பிதழ் அச்சிட்டுப் பெண் வீட்டாருக்கு வழங்குகின்றனர். குலதெய்வத்தின் கோயிலில் முதல் பத்திரிகை வைத்து வழிபட்ட பின்னர் முதலில் தாய் மாமன்மார்களுக்கு ஒரு ரூபாய் சுருள் வைத்து பத்திரிகை கொடுப்பது வழக்கம். மருத்துவச் சமுதாயத்தில் பிறப்பு முதல் இறப்பு வரை நடத்தப்படும் சடங்குகளில் தாய்மாமன் முக்கியமானவராகக் கருதப்படுகிறார். திருமணம் பெரும்பாலும் மாப்பிள்ளை வீட்டில் வைத்துதான் நடைபெறும். ஒரு சில வீடுகளில் மணமகள் வீட்டில் வைத்து நடைபெறுவதுமுண்டு.

## திருமணத்தன்று நடைபெறுபவை

திருமணத்தன்று காலையில் குலதெய்வத்தினை வழிபட்டு மாப்பிள்ளை வீட்டார் பெண்ணை அழைத்துவர சொல்கின்றனர். இதனை 'பெண் அழைப்பு' என்று கூறுகின்றனர். பெண் அழைக்க வரும்போது ஒரு தாம்பாளத்தில் வெற்றிலை, பாக்கு, மஞ்சள். குங்குமம், பழம் முதலியவற்றைக் கொண்டு வருகின்றனர். மணப்பெண் இறைவனை வழிபட்டு குத்துவிளக்கினை ஏற்றி வைக்கிறாள். பெண்ணை அமரச் செய்து உறவினர்கள் திருநீறு இட்டு வாழ்த்துகின்றனர். நல்ல நேரம் பார்த்துப் பெண்ணை மாப்பிள்ளை வீட்டார் அழைத்துச் செல்லுகின்றனர். அவர்களுடன் பெண் வீட்டார் அனைவரும் உடன் செல்வது வழக்கம். பெண் மாப்பிள்ளை வீட்டிற்கு வந்தவுடன் ஆரத்தி எடுத்துப் பெண்ணை உள்ளே அழைத்துச் செல்கின்றனர். பின்னர் காலை விருந்து பெண் வீட்டாருக்குக் கொடுக்கின்றனர்.

மணவறையில் (மணமகன் வீடு) முளைப்பாரி வைக்கப்படுகிறது. திருமணத்தை ஐயர் முன்நின்று நடத்தி வைக்கிறார். மணவறையில் குத்துவிளக்கு, சாணிபிள்ளையார், நிறைநாழி, பச்சரிசி, புழுங்கலரிசி ஐந்து கும்பம் முதலியவற்றை வைத்து பிள்ளையாருக்கு வழிபாடு செய்வர். மணமகளை மணமேடைக்கு அழைத்து அமரச் செய்து தகப்பனார் குறைதீர்த்தல் சடங்கு நடத்துகின்றனர். அதாவது ஐயர் மணமகனின் தந்தையை அழைத்து இரண்டு மாலை அணிவித்து தந்தைக்கும் மகனுக்குப் பாலும், பழமும் கொடுப்பது ஆகும். இதேபோன்று பெண்ணிற்கும் நடைபெறுகிறது.

**மாமன்குறை தீர்த்தல்**

ஐயர், மாப்பிள்ளையின் தாய்மாமனை அழைத்து அவர் கழுத்தில் இரண்டு மாலைகளை அணிவிப்பார். தாம்பாளத்தில் வேட்டியும் துண்டும் வைத்துக் கொடுக்க, அவற்றை அணிந்துக் கொண்டு மணவறையில் இருப்பார். ஐந்து முளைப்பாரியில் மூன்று முளைப்பாரியை ஐயர் முக்காலியின் மேல் வைப்பார். தாய்மாமன் கையில் நவதானியத்தைக் கொடுத்து அதை அவர் மணமகனிடம் கொடுக்க அதை மணமகன் முளைப்பாரியின் மேல் வைப்பார். இதே சடங்கு மணமகளுக்கு அவளது தாய்மாமனால் நடத்தப்படுகிறது.

**காப்புக்கட்டுதல்**

இந்து மருத்துவர் சமுதாயத்தில் 'காப்பு கட்டுதல்' முக்கியச் சடங்காகக் கருதப்படுகிறது. மஞ்சள் கயிற்றில் மஞ்சள், வெற்றிலை, இரும்பு மோதிரம் வைத்து கட்டியிருக்கும் கயிற்றைக் 'காப்புக்கயிறு' என்கிறார்கள். காப்புக்கயிற்றைத் தாய்மாமன் மணமகனின் வலது கையிலும்; பெண்ணின் தாய்மாமன் மணமகளின் வலது கையிலும் கட்டுகின்றனர். மணமக்கள் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்பதற்காகக் காப்புக் கட்டப்படுகிறது. ஒரு தாம்பாளத்தில் முகூர்த்த வேட்டி, துண்டு, சட்டை, ஆகியவற்றை வைத்து மணமகனின் கையில் கொடுக்க, மணமகளுடைய பட்டுப்புடவைய்ய மணமகளிடம் கொடுத்துவிட மணமகனின் அக்கா மணமகள்ளை அலங்காரம் செய்து அழைத்து வருவாள். பின்னர், ஓமகுண்டம் வளர்த்து அக்னி சாட்சியாகத் திருமணம் நடைபெறுகிறது.

**தாலி கட்டுதல்**

திருமணத்தில் தாலிக் கட்டும் வழக்கம் தமிழரது பண்பாடாகும். பழங்காலத்திலிருந்தே இப்பழக்கம் இருந்துள்ளது. 'ஈகை யரிய இழையணி மகளிர்' (புறம்-127) என்பது தமிழ்ப் பெண்கள் தாலியணியும் வழக்கத்தைக் குறிக்கும் சங்கநூல் சான்றாகும். தங்கத்தாலியைப் பற்றி ஔவையார், *'பொற்றாலி யோடெவையும் போம்'* என்றும், *'வலியுடை யுரத்தின் வான்பொற்றாலி' (பெருங்கதை, 1813)* என்று பெருங்கதையும், *'காயிற்கடை யொழுகிய காமர் தூமணி செயத்தகு கோவை' (சிலம்பு, 6)* என சிலப்பதிகாரத்திலும். தாலியைப் பற்றியச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. மருத்துவச் சமுதாய மக்களின் தாலியின் நடுவில் பிள்ளையாரும் இரண்டு பக்கமும் நட்சத்திரச் சிறகும்

கொண்ட அமைப்பாகும். அரச இலை வடிவத் தாலியையும் பயன்படுத்துகின்றனர். இந்தத் தாலி அமைப்பினை வேறு இனமக்களும் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஐயர் தாம்பாளத்தில் வைத்து தாலியினை ஆசீர்வாதம் வாங்கி வரச்செய்து; அக்னி சாட்சியாகத் திருமாங்கல்யத்தை எடுத்து மாப்பிள்ளையிடம் கொடுக்க அவர் மணமகள் கழுத்தில் மூன்று முடிச்சுப் போடுகிறார். தாலி கட்டி முடிந்ததும் பெண்ணும், மாப்பிள்ளையும் கழுத்தில் கிடக்கும் மாலையினை மூன்று முறை மாற்றுகின்றனர். மணமகளின் அக்கா மணமக்களுக்குப் பாலும் பழமும் கொடுக்கின்றார். பெரியவர்கள் மணமக்களுக்குத் திருநீறு பூசி வாழ்த்துகின்றனர்.

### கன்னி தானம்

மணமகளின் தந்தை மாப்பிள்ளையின் கையைக் கீழும் மணமகளின் கையை மேலும் வைத்து 'என் மகளைத் தருகிறேன்' என்று தண்ணீர் ஊற்றி தாரை வார்த்து 'கன்னி தானம்' செய்கிறார். இரண்டு பேரின் கைகளையும் பட்டுத் துணியால் கட்டி வைக்கின்றார். மணவறையினை மைத்துனர் மாப்பிள்ளை கையைப் பிடித்து மூன்றுமுறை சுற்றி வலம் வருவார்கள். பின்னர், மணமக்களை வீட்டின் உள் அழைத்துச் செல்கின்றனர். அப்போது வீட்டு நடையில் பெண்ணின் முறை மாப்பிள்ளைகள் உள்ளே விடாமல் நடை செறுத்து நடைப் பணம் கேட்பர். உடனே மணமகன் அவர்கள் கேட்கும் பணத்தைக் கொடுக்க வேண்டும். பணம் பெற்றவுடன் முறை மாப்பிள்ளைகள் வழி விடுவார்கள். மருத்துவச் சமுதாயத்தில் நடைச் செறுப்பு முக்கியச் சடங்காக உள்ளது. மணமக்கள் இல்லத்தில் வந்து அமர்ந்தவுடன் மணமகளின் அண்ணன் மாப்பிள்ளையின் வேட்டியில் ஐந்து ரூபாயை முடித்து வைத்துவிட்டு கையில் கட்டிருக்கும் பட்டுத்துணியை அகற்றி இருவருக்கும் விடுதலைக் கொடுக்கின்றார். பிறகு மணமக்களைச் சகோதரிகள், நண்பர்கள் கேலி செய்துப் பாடுகின்றனர். அதன்பிறகு மணமகள், வீட்டின் கன்னிமூலையில் குத்துவிளக்கு ஏற்றி வைத்து வணங்குகிறாள். தொடர்ந்து 'சட்டி பானை' தொடுதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதாவது மணமகள் மணமகன் வீட்டில் உள்ள உப்பு, புளிப்பானை, மிளகு, பழையச் சட்டி ஆகியவற்றைத் தொடச் செய்கின்றனர். இதுவும் மருத்துவச் சமுதாயத்தில் ஒரு முக்கியமானச் சடங்காகக் கருதப்படுகின்றது.

## பொழுதுபோக்கு விளையாட்டுகள்

திருமணம் முடிந்த அன்று மாலையில் மணமக்கள் ஒருவரை ஒருவர் நன்கு பழகிக் கொள்ளவும், அவர்களிடம் உள்ள தயக்கத்தைப் போக்கவும் பல விளையாட்டுக்களை வைக்கின்றனர். இவை இன்று சடங்காக நிலைபெற்றுள்ளன. அவை பல்லாங்குழி, பூப்பந்து, பப்படம் அடித்தல், நலுங்கு, எண்ணெய் சடங்கு, ஒலுசைச் சடங்கு என்பனவாகும்.

### பல்லாங்குழி

இது முத்துக்களை வைத்து விளையாடும் விளையாட்டு ஆகும். மரப்பலகையில் ஏழுக் குழிகள் இருக்கும். அதில் முத்துக்களைப் போட்டு மணமக்கள் மட்டுமே விளையாடுவார்கள். இருவருக்கும் உதவியாக நண்பர்கள் உடன் இருப்பார்கள். இறுதியில் மணமகனை வெற்றியடையச் செய்வதே வழக்கமாகக் காணப்படுகிறது.

### பூப்பந்து

பூவினைப் பந்து போன்று சுருட்டி மணமக்களை எதிரெதிரே இருக்குமாறு செய்து கையில் கொடுப்பர். அவர்கள் ஒருவர் மீது ஒருவர் பூப்பந்தினை வீசி விளையாடுவார்கள். இதனைப் பூப்பந்து விளையாட்டு என்று கூறுகின்றனர்.

### பப்படம் அடித்தல்

நன்கு பொரிந்த பப்படத்தை மணமக்கள் இருவரின் கையிலும் கொடுத்து ஒருவர் தலையில் மற்றொருவர் மாறி மாறி அடித்து உடைத்து விளையாடுவது ஆகும்.

### நலுங்கு

மணமக்கள் எதிரெதிரே அமருவர். இவர்களுக்கிடையே தேங்காயினை இருவரும் மாறி மாறி உருட்டி விளையாடுவர். இதுவே நலுங்கு விளையாட்டு ஆகும். அப்போது இருவீட்டாரும் மணமக்களை கேலிச் செய்து பாடுகின்றனர்.

*தண்ணிர் குடமெல்லாம் தழும்புதடி*
*உன் கருப்பு*
*வாசற் படியெல்லாம் வழுக்குதடி*
*உன் கருப்பு*
*பஞ்சியும் பருத்தியும் அடைத்த*
*தலையில*
*சம்மங்கி எண்ணெய் பெற்றியோ*
*பொன்மயிலே*

என்று மணமகனின் தங்கை மணப்பெண்ணைக் கேலிச் செய்கிறார் பதிலுக்கு மணப்பெண்ணின் தங்கை மணமகனைப் பார்த்து,

*ஈச்சம்பழத்திலும் எங்க அத்தான்*
*இருண்ட கருப்பாச்சு*
*நாவல் பழத்திலும் எங்க அத்தான்*
*நல்ல கருப்பாச்சு*
*எட்டுக்கு மேல படிக்கவும் இல்ல*
*எட்டுக்கு மேல எழுதவும் தெரியாது*
*சைக்கிள் ஓட்ட னாச்சும் தெரியாது*
*மோட்டார் ஓட்ட முகப்புத் தெரியாது*

என்று கேலிச் செய்து பாடுகின்றார்.

### எண்ணெய் சடங்கு

மணமக்கள் இருவரும் ஒருவர் தலையில் மற்றவர் எண்ணெய், சீயக்காய் பவுடர் தேய்த்து விளையாடுவதாகும். விளையாடி முடிந்த பிறகு இருவரும் குளிக்கச் செல்கின்றனர்.

### ஒலுசைச் சடங்கு

மணமக்கள் குளித்த பின்பு ஒலுசைச் சடங்கு நடைபெறுகிறது. ஒலுசை என்றால் மணமகள் கொண்டு வந்தச் சீர்களை மணவறையில் வைத்து எல்லோரும் கூடி நிற்க கணக்கிடுவதாகும். இந்தப் பொழுதுபோக்கு விளையாட்டுகள் எல்லாம் மணமக்களிடையே நெருக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்தில் நடைபெறுகிறது.

### திருமணத்திற்குப் பின் நடைபெறுபவை

திருமணம் முடிந்த மறுநாள் மணமக்களின் கையில் கட்டப்பட்டிருக்கும் காப்பு அறுக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. காலையில் வீட்டின் முன் மணமக்கள் பொங்கலிடுகின்றனர். மறுவீடு செல்லுதல், மாமியார் வீடுகாண செல்லுதல் முதலிய நிகழ்வுகள் நடைபெறுகின்றன. திருமணம் முடிந்த ஐந்தாம் நாள் அல்லது ஏழாம்நாள் முளைப்பாரியினை ஆற்றிலோ அல்லது குளத்திலோ கொண்டுக் கரைக்கின்றனர். கரைத்துவிட்டு வரும்போது மணமகள் நிறைகுடத் தண்ணீர் எடுத்து வந்து வீட்டினுள் வைக்குமாறுச் செய்வார்கள்.

திருமணம் முடிந்த ஏழாம் நாள் திருமாங்கல்யம் பிரித்துக் கட்டும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதாவது, மஞ்சள் கயிற்றில் கட்டியிருந்தத் தாலியினைப் பிரித்துத் தங்கச்செயினில் கோர்த்துப்

போடுவதாகும். சுமங்கலிப் பெண்கள் குரவையிட்டுக் கொண்டே செய்கின்றனர். சுமங்கலிப் பெண்களுக்கு மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்கு கொடுக்கப்படுகிறது. ஒரு வருடம் கழித்து மணமக்கள் கடலில் குளித்து மலையின் மீது இருக்கும் இறைவனைத் தரிசிக்க வேண்டும். இதனைக் 'கடலாடி, மலையாடி' என்று கூறுகின்றனர்.

## இறப்புச் சடங்கு

இறப்புச் சடங்குகள் சமுதாயத்திற்குச் சமுதாயம், நாட்டுக்கு நாடு, இடத்திற்கு இடம் மாறுபாடுகளுடன் காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. மருத்துவ இனத்தின் ஒவ்வொரு உட்பிரிவினரிடையேயும் வேறுபட்ட, ஒன்றுபட்ட இறப்புச் சடங்குகள் காணப்படுகின்றன. மருத்துவர்கள் தாங்கள் எந்தச் சமுதாயத்தினருக்குச் சேவைச் செய்கின்றார்களோ அந்தச் சமுதாயத்தின் இறப்புச் சடங்கினை ஒத்தே இவர்களின் இறப்புச் சடங்குகள் காணப்படுகின்றன.

மருத்துவ இனமக்கள் இறப்பினைத் துக்கம், துட்டி, கருமாந்திரம், சிவலோக பதவி அடைதல், மரித்தல், செத்துப் போதல், அமரரானார், இறைவனடிச் சேர்ந்தார். இன்னுயிர் நீத்தார் எனப் பல சொற்களால் கூறுகின்றனர். உயிர்போகும் நிலையில் உள்ளவர்களை மன அமைதிச் செய்ய உறவினர்கள் பால் ஊற்றுவார்கள்; சிலருக்கு இளநீர்க் கொடுக்கின்றனர். அதனை குடித்தவுடன் அவர்கள் உயிர் போய்விடும். உயிர் வதைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இளநீர் விஷம் போன்றது என்று களஆய்வில் தகவலாளிகள் கூறுகின்றனர்.

### உயிர் பிரிந்தவுடன் செய்வன

இறந்தவுடன் இறப்புச் செய்தியினைச் சங்கொலி எழுப்பி ஊரார்க்கு அறிவிக்கின்றனர். இறந்தவரின் பிள்ளைகள் வெளியூரில் இருந்தால் அவர்களுக்கும் இறப்புச் செய்தியினை அறிவிக்கின்றனர். இறப்புச் செய்தியினைக் கூறுவதைத் 'துட்டி சொல்லி விடல்' என்கின்றனர். இதனை இராமநாதன் (1982:203), பறையர்கள் வாயிலாக உற்றார் உறவினர்க்குச் செய்தி அனுப்பப்படும். அவ்வாறு செய்தி கொண்டு வரும் பறையருக்கு இறந்தவரின் உறவினர்கள் நெல், கம்பு முதலிய தானியங்களைக் கொடுப்பர் என்கிறார். மருத்துவர் இனத்தவரில் ஒருவரே இறப்புச் செய்தியினை உறவினர்களுக்கு கூறுவதற்கு செல்கின்றனர்.

## விளக்கேற்றுதல்

இறந்தவரின் நாடி, கால் கைகளைக் கட்டிய பின்பு வீட்டின் ஒரு மூலையில் படுக்க வைப்பர். அதன் பக்கத்தில் நிறைநாழி நெல் வைத்துக் குத்துவிளக்கினையும் ஏற்றி வைப்பர். வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய் முதலியவற்றை ஒரு தட்டில் அல்லது இலையில் வைத்து விளக்கின்முன் வைப்பர். தெய்வத்தையும், இறந்தவரையும் வணங்கித் தேங்காயினை உடைத்து விளக்கின் முன் வைப்பர். அதன்பிறகே இறந்தவரின் மனைவி, மகன்கள் பிணத்தின் கால்மாட்டில் அமர்ந்து ஒப்பாரி வைப்பார்கள். இந்த அழுகை ஒலியினைக் கேட்டுப் பக்கத்து வீட்டார்களும் வந்து, கட்டிப் பிடித்து அழுவார்கள். இறந்தவரின் பெண் பிள்ளைகள் மாலையுடன் மேளம் அடித்துக் கொண்டே வருவர். இந்த மேளத்தைத் 'துட்டி மேளம்' என்று கூறுவர். பிணத்தைச் சுடுகாட்டிற்குக் கொண்டுச் செல்லும் வரை இந்த மேளம் அடிக்கப்படும். தற்போது இவ்வழக்கம் நடைமுறையில் இல்லை. இவ்வாறு வரும்போது வாய்க்கரிசி போடுவதற்கானத் தானியமும், இறந்தவரைக் குளிப்பாட்டுவதற்குரிய எண்ணெயும், சீயக்காயும் கொண்டு வருவர். சிலர் ஒரு கூடையில் நெல், இளநீர் கொண்டு வருவதும் உண்டு. இதனை 'வாய்க்கரிசிக்கூடை' என்று கூறுவர். இறந்தவர்களுக்கு மச்சான்மார் புத்தாடை எடுத்து வருவர். இதனைக் 'கோடி' என்று கூறுவர். கோடி எடுத்துவருவது சிறப்பாகப் பேசப்படுகின்றது. இதுகுறித்து, மிக நெருங்கிய உறவினரின் கோடி பிணத்திற்கு உடுத்தப்படும். ஏனையவை பிணத்தின் மேலே போர்த்தப்படும் என்று இராமநாதன் (1982:204) குறிப்பிடுகிறார். குமரி மாவட்டத்தில் பிணத்தின்மீது கோடி உடுத்தப்படுவதில்லை. நீர்மாலை எடுக்க செல்லும்போது மகன்களுக்கு இக்கோடியானது உடுக்கக் கொடுக்கப்படுகின்றது.

## நீர்மாலை எடுத்தல்

இறந்த வீட்டிற்கு உறவினர்கள் அனைவரும் வந்து சேர்ந்த பின்பு நீர்மாலை எடுக்கச் செல்கின்றனர். இறந்தவரின் ஆண் மக்கள் ஆற்றிலோ, குளத்திலோ குளித்துவிட்டு விபூதி பூசி, கோடியினை உடுத்தி குடத்தில் நீர் எடுத்து வருவார்கள். இதனை 'நீர் மாலை எடுத்தல்' என்கின்றனர். அந்த நீர்க் குடத்தில் மாவிலைகளைச் செருகி வைத்திருப்பர். நீர்மாலை எடுக்க ஆண்கள் மட்டுமே செல்வர். இவ்வாறு நீர்மாலை எடுத்துக் கொண்டு வரும்போது வண்ணார் மாத்தாகச் சேலையோ, வேட்டியோ கொடுக்க அதனை உடன் செல்பவர்கள் விரித்துப் பிடித்துக்கொள்ள, நீர்க்குடம்

கொண்டு வருபவர் நடுவில் வருவார். இப்படிக் கொண்டுவரும் நீரினைக் கொண்டே இறந்தவரை நீராட்டுவார்கள்.

## நீராட்டுதல்

நீர்மாலைத் தண்ணீரை வீட்டிற்குக் கொண்டு வந்தபிறகு இறந்தவரை வீட்டின் வெளியே கொண்டு வந்து, ஒருவர் காலில் முட்டுக்கொடுத்து உட்கார வைத்துக் கொள்வார். இறந்தவர் ஆணாக இருந்தால் இறுதியாக முகச்சவரம் செய்வர். இறந்தவரின் தலையில் உறவினர் ஒருவர் எண்ணெய் வைத்து தண்ணீர் ஊற்றுவார். இறந்தவர் ஆணாக இருந்தால் மூத்தமகள் தான் எண்ணெய் வைப்பாள். இறந்தவரின் தீட்டினைப் போக்குதற்காகவும், இறுதியாக இவ்வுலக இன்பத்தை முடித்துப் புனிதராகிப் போகிறார் என்பதற்கு அடையாளமாகவும் 'குளிப்பாட்டுதல்' சடங்கினைச் செய்கின்றனர். நீராட்டிய பின் இறந்தவருக்குப் புது ஆடையை அணிவிப்பர். இறந்தவர் பெண் என்றால் முதலில் பிறந்த இடத்துக் கோடியை அணிவிப்பர். பின் நெற்றியில் சந்தனம் பூசுவர். நாலணாக் காசைப் பொட்டாக வைத்தும், கழுத்தில் பூமாலை அணிவித்தும் அலங்காரம் செய்கின்றனர்.

## வாய்க்கரிசி போடுதல்

நீராட்டி முடிந்ததும் பெண்கள், உறவினர்கள் கொண்டு வந்த நெல்லினை அரிசியாக்கி, மஞ்சள் தடவி இறந்தவரின் வாயில் போடுவர். இதனை 'வாய்க்கரிசி போடுதல்' என்கின்றனர். பெண்கள் பிணத்தைச் சுற்றி நின்று மாரடித்துப் பாடுகின்றனர்.

### மாரடித்தல்

இறந்தவரை அலங்கரித்து வைத்தபின் பெண்கள் எல்லாரும் சேர்ந்து வீட்டின்முன் நாட்டடப்பட்டப் பந்தலைச் சுற்றி மாரடிக்கின்றனர். இந்தப் பந்தல் பச்சைத் தென்னை ஓலையால் அமைக்கப்பட்டிருக்கும். இப்பந்தலுக்கு எந்தவிதமான அலங்காரமும் செய்வதில்லை. இதற்குத் தென்னை மட்டை பந்தல்காலாகப் பயன்படுத்தப்படுகின்றது. பெண்கள் எல்லோரும் இந்தப் பந்தலைச் சுற்றி நின்றுக் கொண்டு,

*மருதச் சரவிளக்கு தாயாரம்மா மாதாவே*
*மங்காத நெய்விளக்கு தாயாரம்மா மாதாவே*
*மருதயிலே காத்தடிச்சி தாயாரம்மா மாதாவே*
*மங்குனது என்ன விதம் தாயாரம்மா மாதாவே*

*சீமைச்சர விளக்கு தாயாரம்மா மாதாவே*
*சிந்தை நெய்விளக்கு தாயாரம்மா மாதாவே*
*சீமையிலே காத்தடிச்சி தாயாரம்மா மாதாவே*
*சிந்தினது என்ன விதம் தாயாரம்மா மாதாவே*
*பட்டு உடை உடுத்தி தாயாரம்மா மாதாவே*
*தூரத்திலே போனேன்னா தாயாரம்மா மாதாவே*
*பட்டை விலை மதிப்பார் தாயாரம்மா மாதாவே*
*பாவிபடும் பாதரவை யார் அறிவார் தாயாரம்மா மாதாவே*
*துயிலை உடுத்தி தாயாரம்மா மாதாவே*
*தூரத்திலே போனேன்னா தாயாரம்மா மாதாவே*
*என் துயிலை விலை மதிப்பார் தாயாரம்மா மாதாவே*
*என் துயரத்தை யார் அறிவார் தாயாரம்மா மாதாவே*
*வாழைக்கா பட்டுடுத்தி தாயாரம்மா மாதாவே*

என்று ஒருவர் மாரடிக்கும் பாடலைப் பாடித் தம் இரு கைகளையும் மார்பில் அடித்துக் கொள்ள மற்றப் பெண்களும் அவ்வாறே பாடிக் கொண்டு மாரடித்து அழுகின்றனர். உறவினர்கள் இழவு வீட்டிற்குள் வந்ததும் இழவு வீட்டுப் பெண்கள் புதிதாக வந்த பெண்களுடன் சேர்ந்து மாரடித்து ஒப்பாரி வைப்பர். மாரடிக்கப் பெண்கள் இல்லை என்றால் அது இழிவாகக் கருதப்படும் என்பதற்காக இவ்வாறு செய்கின்றனர். குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து இடம்பெயர்வு அடைந்து குமரிமாவட்டத்தில் தங்கியிருப்பவர்கள் அதிகமாக மாரடித்தல் சடங்கினைச் செய்கின்றனர்.

### பாடைக் கட்டுதல்

இறந்தவரைச் சுடுகாட்டிற்குத் தூக்கிச் செல்லுவதற்குப் பாடை கட்டப்படுகிறது. இதனைப் பலவிதமாகக் கட்டுகின்றனர். அவை, பாடை, தேர், சப்பரம் என்பனவாகும். குமரிமாவட்டத்தில் பாடைகட்டும் வழக்கமே மிகுதியும் உள்ளது. திருநெல்வேலி, மதுரை முதலிய மாவட்டங்களில் தேர் போன்ற அமைப்பில் பாடை கட்டுவர். தேரினைச் சுற்றி நால்புறமும் இளநீர், மாலை ஆகியவற்றைக் கட்டித் தொங்கவிடுவர். பிணத்தை உட்கார்ந்த நிலையில் வைத்தே தூக்கிச் செல்வர். தற்போது அதிகமாகப் பாடைக் கட்டுவதே இல்லை; பிணத்தைக் கட்டில்களில் வைத்துத் தூக்கிச் செல்லுவதையே காணமுடிகிறது.

### பாடையை எடுத்தல்

பாடையினை இறந்தவரின் மகன்கள், மருமகன், உடன் பிறந்தோர் தூக்குகின்றனர். பிணத்தைத் தோளில் தூக்கிக் கொண்டு

தெருவைக் கடந்தவுடன் பின்னால் அழுது கொண்டு வரும் பெண்களை மற்றப் பெண்கள் தண்ணீர் தெளித்து வீட்டிற்கு அழைத்து வருவர். முச்சந்தி வரை பிணத்தின் தலை வீட்டை நோக்கியபடித் தூக்கிச் செல்வர். அதன்பின் தலைப்பாகம் சுடுகாடு நோக்கி இருப்பது போன்று மாற்றிப் பிடித்து தூக்கிச் செல்கின்றனர்.

இறந்தவர் ஆணாக இருந்தால் அவரது மனைவிக்குக் கோடிப் போடுபவர்கள் மட்டும் முச்சந்தியிலிருந்து திரும்பி வந்து அம்முறையை செய்துவிட்டு சுடுகாட்டிற்கு செல்வர். கோடிப் போடும்போது இறந்தவரின் மனைவியைப் பெண்கள் குளிப்பாட்டி வீட்டின் முன் போடப்பட்டுள்ள பந்தலில் உரலைப் போட்டு அதன்மேல் உட்கார வைத்திருப்பர். இறந்தவரின் மனைவியின் சகோதரர் முதலில் கோடிப் போடுகிறார்; இது பிறந்த இடத்துக் கோடி எனப்படும். பின்னர் மூத்த மகன் தாய்க்குக் கோடிப் போடுவார். இறந்தவரின் சகோதரரும் கோடிப் போடுவார்கள்; இது புகுந்த வீட்டுக் கோடி எனப்படும். இந்தக் கோடியினைக் கொண்டு வரும்போது எதிரில் யாரும் வரக்கூடாது என்று கூறுகின்றனர்.

**சுடுகாட்டில் செய்வன**

சுடுகாட்டிற்குச் சென்றதும் குழியினை மூன்றுமுறைச் சுற்றிவந்து பிணத்தைக் கீழே வைக்கின்றனர். பிணத்தின் நெற்றியில் உள்ள நாணயத்தை, இறப்புச் சடங்கினை முன்னின்று நடத்துபவர் எடுத்துக் கொள்வார். பிணத்தின் உடலில் அணிகலன்கள் இருந்தால் அவற்றையும் எடுத்து உறவினரிடம் ஒப்படைத்து விடுவர். சுடுகாட்டில் வந்திருப்பவர்கள் வாய்க்கரிசிப் போடுவார்கள். வாய்க்கரிசிப் போடப்படும் பணத்தை இறப்புச் சடங்கை முன்னின்று நடத்துபவர்கள் எடுத்துக் கொள்கின்றனர்.

மருத்துவ இனத்தில் இறந்தவர்களைப் புதைக்கின்ற வழக்கமும், எரிக்கின்ற வழக்கமும் காணப்படுகின்றது. புதைக்கும்போது இறந்தவர் பயன்படுத்தியப் பொருட்களையும் சேர்த்து குழியினுள் வைக்கின்றனர். பின்னர் மூத்த மகனிடம் முதலில் மண்ணை அள்ளிப் போடச் செய்வர். தொடர்ந்து உறவினர்கள் எல்லோரும் ஒவ்வொருவராக குழியில் மண்ணைப் போடுகின்றனர். அக்குழியினை முழுவதும் மண்ணால் மூடி மேடு அமைக்கின்றனர். பிணத்தை எரிப்பதற்குக் குழியில் கதம்பைகளை

அல்லது விறகு கட்டைகளை அடுக்குகின்றனர். அதன்மீது ஈஞ்சையினைப் பரப்பி, பிணத்தை படுக்க வைப்பர்.

இறந்தவரின் ஆண் மக்கள் கொள்ளி வைக்கும் சடங்கைச் செய்கின்றனர். இறந்தவருக்கு ஆண் பிள்ளை இல்லை என்றால் அவரது சகோதரனின் மகன் கொள்ளி வைப்பார். மகள் வயிற்றுப் பேரனும் கொள்ளி வைப்பதுண்டு. இறந்தவர் பெண் என்றால் அவள் கணவனும், மகனும் கொள்ளி வைக்கின்றனர். இதனை இறப்புச் சடங்கின்போது சிதையைத் தீயூட்ட உரிமையுள்ள இறந்தவரின் மகனை அவன் கையில் ஒரு வெண்கலப் பாத்திரத்துடன் பிணத்தைச் சுற்ற வைத்து எரியூட்ட வேண்டிய குறிப்பிட்ட இடத்தைக் கனலாகியிருக்கும் கரியை வைத்து அடையாளம் காட்டுகின்றார்கள் என்று தர்ஸ்டன் (2003.V.40) குறிப்பிடுகிறார். மகன் கொள்ளி வைத்தால் பெற்றோர் மேலோகம் செல்வர் என்பது நம்பிக்கையாகக் காணப்படுகிறது. மகன் பெற்றோருக்கு முன் இறந்தால் தந்தை மகனுக்குக் கொள்ளி வைப்பார். இதனை,

***மூத்த மகன் கொள்ளி முழங்கி வரும் கைலாசம்***
***நடுவு மகன் கொள்ளி நடுங்கி வரும் கைலாசம்***
***இளைய மகன் கொள்ளி இரங்கி வரும் கைலாசம்***

என்ற ஒப்பாரிப் பாடல் வரிகள்மூலம் மூத்த மகன் கொள்ளி வைத்தால் கைலாசம் முழங்கும் என்றும், நடு மகன் கொள்ளி வைத்தால் கைலாசம் நடுங்கும் என்றும், இளைய மகன் கொள்ளி வைத்தால் கைலாசம் இரங்கும் என்கிறது. எனவே கொள்ளி வைப்பதற்கு மூத்த மகனே உரியவன் என்பதை அறியமுடிகிறது.

பிணத்தை எரித்த பின், இறந்தவரின் மகன்கள் சுடுகாட்டிலேயே மொட்டை போட்டுக் கொள்வர். இதனை மருத்துவ இனத்தவரே செய்கின்றனர். தந்தையோ, தாயோ இறந்துவிட்டால் அவர்களுக்காக மொட்டைப் போடுதலை மூத்தமகன் தன் கடமையாகவும், பெருமையாகவும் கருதுகின்றான். எனவே, இறந்தவர்களுக்குக் கருமம் செய்வதற்காக மொட்டையிடும் வழக்கம் எல்லா சமுதாயத்திலும் காணப்படுகின்றது. இறந்தவர்கள் தெய்வத்திற்கு ஒப்பாவதால் தெய்வத்தின் முன்னால் மொட்டையிடுவது போல இறந்தவர்களுக்காகத் தலைமுடியை எடுக்கின்றனர். மொட்டையடித்தலின் நோக்கத்தை, 'என் தாய் வயிற்றில் நீர் எங்களுக்குத் தந்த அந்த முடியையே உமக்குக்

காணிக்கையாகத் தந்து இன்று முதல் எங்கள் தீட்டையும் மாற்றிப் புது ஜீவிதத்துக்குள் வருகிறோம்' என்று தகவலாளர்கள் கூறுகின்றனர்.

## தாலி வாங்குதல்

இறந்தவருக்குக் கொள்ளி வைத்து வீடு திரும்பியதும் இறந்தவரின் மனைவியின் தாலியைக் கழற்றுவதை ஒரு சடங்காகச் செய்கின்றனர். இறந்தவரைக் குளிக்க வைத்த இடத்தில் வைத்து மனைவியைப் பெண்கள் குளிப்பாட்டுவர். பின்னர் வீட்டின் முன் போடப்பட்ட உரலில் உட்கார வைத்துத் தாலியைக் கழற்றுகின்றனர். கணவன் மனைவி உறவினை அறுப்பதற்கு அடையாளமாக அவர் கட்டியத் தாலியினை வயதானப் பெண்கள் அறுக்கின்றனர். இதனைத் 'தாலி வாங்குதல்' என்று கூறுகின்றனர். அப்போது அப்பெண்,

***ஆத்துக்குள்ளே கல்லுருட்டி அருவங்கொடிப் பந்தலிட்டு***
***தான் அருமை மகா தாலி வாங்க ஐவருக்கும் சம்மதமோ***
***குளத்துக்குள்ள கல்லுருட்டிக் கோவங் கொடிப் பந்தலிட்டு***
***நான் குழந்த மகா தாலி வாங்க நம்ம கோத்திரத்துக்கும்***
***சம்மதமோ***
***தாலியிலே கல் பதிச்சி தலை வாசலில் பேரெழுதி***
***தாலி இழந்த எனக்குத் தகுந்த வயசாச்சோ***
***பீலியில கல் பதிச்சு எனக்குப் புறவாசலால் பேரெழுதி***
***பீலி கழத்தி வைக்க எனக்குப் பெரிய வயசாச்சோ***

என்று வருந்துகிறாள். திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த மருத்துவர்களிடையே துக்கம் விசாரிக்க வருபவர்கள் மொய் கொடுத்துவிட்டுச் செல்லும் வழக்கம் காணப்படுகிறது. இது தங்கள் இனத்தில் ஏற்பட்ட இழப்பு துன்பத்தைத் தாமும் ஏற்கும் பொருட்டு உறவினர்களால் ஏற்படுத்தப்பட்ட சடங்காகும். இறந்தவர் வீட்டில் அன்றைய தினம் உணவு சமைப்பது இல்லை.

## இரண்டாம் நாள் சடங்கு

இறந்தவரை எரித்திருந்தால் அதற்கு அடுத்த நாள் அஸ்தி எடுக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. காலையில் குழிக்கரைக்கு ஆண்கள் எல்லோரும் சென்று எரிந்த எலும்புகளைத் தலை, கால், இடை என்னும் மூன்று பகுதிகளிலிருந்தும் எடுக்கின்றனர். பின்னர் அதனைத் தண்ணீர், பால், இளநீர், கோமயம், பன்னீர், தேன் இவற்றினால் சுத்தம் செய்து பச்சை மண்பானையில் எடுத்து வீட்டிற்குக் கொண்டு வருவர். பிறகு அஸ்தியை வீட்டில் உள்ள பெண்கள் பால் ஊற்றி பூ போட்டு வணங்குவர். பின் கடலிலோ

ஆற்றிலோ சென்று அதனைக் கரைக்கின்றனர். புனிதத் தலங்களுக்குக் கொண்டுச் சென்று கரைத்தால் இறந்தவர்களுக்குச் சிறப்பு எனக் கருதுகின்றனர். பிணத்தை எரிக்காமல் புதைத்திருந்தால் குழிக்கரைக்குச் சென்று புதைத்த இடத்தை மண்வெட்டியால் ஒழுங்குபடுத்தி மேலேச் சுண்ணாம்பு நீரைத் தெளிக்கின்றனர். குழியின் மேலே பத்தி ஏற்றி வைத்து மாலை போட்டு அதனைத் தொட்டு வணங்கி, நீராடிவிட்டு வீட்டிற்கு வருகின்றனர்.

இறந்த மறுநாள் மாலையில் வீட்டில் இறந்தவரை வைத்திருந்த மூலையில் விளக்கேற்றி வைத்து அவருக்குப் பிடித்தமான உணவுப் பண்டங்களைப் படையல் வைத்து வணங்குவர். இறந்தவரின் பெண் மக்கள் இச்சடங்கிற்கானச் செலவை ஏற்றுக் கொள்வர். இச்சடங்கு கருமாதிச்சடங்கு நடக்கும் வரை தினமும் மாலையில் நடைபெறும். அப்போது பெண்கள் ஒப்பாரி பாடுவர். இழவு வீட்டிற்குச் சென்றவர்கள் குளித்து விட்டு அல்லது கால்களைக் கழுவி விட்டுத்தான் தங்கள் வீட்டிற்குச் செல்கின்றனர். 'துட்டி வீட்டுப் பொருட்கள் கருமாதி முடியும் வரை தீட்டானவை' என்று எண்ணுகின்றனர். இவ்வாறு, பொருட்கள் வைப்பதை 'மூலைக்கு வைத்தல்' என்று கூறுகின்றனர். மூலைக்கு வைக்கும் சடங்கில் ஆண்கள் கலந்து கொள்வதில்லை.

### பதினாறாம் நாள் சடங்கு

இறப்பு நிகழ்ந்த வீட்டினர் அனைவரும் பதினாறு நாட்கள் முடியும் வரை தலையில் எண்ணெய் வைக்க மாட்டார்கள். கருமாதி அன்று அதாவது பதினாறாம் நாள் எண்ணெய் வைத்துக் குளிப்பர். முதலில் கொள்ளி வைத்தவர் தலையில் எண்ணெய் வைக்கின்றனர். பின்னர் வீட்டில் உள்ள எல்லோரும் எண்ணெய் வைத்துக் குளிக்கின்றனர். எண்ணெய் முழுக்குடன் தீட்டுக் கழிந்து விடும் என்றும் இம்மக்கள் நம்புகின்றனர். பின் கோடியினை இறந்தவர் நினைவாக விளக்கின் முன் வைத்து வணங்கி எடுத்து கட்டிக் கொள்வார்கள். இறுதியில் நல்ல விருந்து வைத்து அதை அனைவரும் உண்பார்கள்.

### ஓராண்டுக்குப் பின் செய்வன

இறந்து ஒருவருடம் ஆன பின்பு இறந்த நாளில் இறந்தவரை நினைத்து வணங்குகின்றனர். இதனைத் 'திதி ஆண்டு' என்று கூறுவர். வீட்டினை வெள்ளை அடித்துத் தூய்மைப் படுத்துவர். இறந்தவரின் சமாதியைத் தூய்மைப்படுத்தி விளக்கேற்றி வணங்குவர். அன்று வீட்டில் குத்துவிளக்கினை ஏற்றி அதன் முன்பு படையல் செய்து குடும்பத்தினர், உறவினர் எல்லோரும் வணங்குவர். இறந்தவரை வணங்குவதால் அவர்கள்

தங்கள் குடும்பத்தை மேன்மையடையச் செய்வார்கள் என்பது அவர்களின் நம்பிக்கையாக உள்ளது.

வாழ்வியல்ச் சடங்குகள் அனைத்தும் மருத்துவர்கள் எந்தச் சமூக மக்களுடன் சமூக உறவு வைத்துள்ளார்களோ அவ்வின மக்களின் சடங்கியல் மரபுகளை ஒட்டியே செய்வதைக் களஆய்வின்போது காணமுடிகிறது. அவர்களுக்கு இவர்கள் செய்யும் காரியங்களை இவர்களின் இன முதியவர் ஒருவர் முன்நின்று செய்கின்றார்.

வாழ்வியல் சடங்குகளில் தாயின் வயிற்றில் குழந்தை உருவானது முதல் இறப்பு வரை நடக்கும் சடங்குகள் சங்கிலித் தொடர் போன்று அமைந்துள்ளன. உயிர் தோன்றுவதும், மறைவதும், மீண்டும் தோன்றுவதுமான ஒரு சுழற்சி முறையைக் கொண்டதே மானிடப் பிறப்பாகும் குழந்தைப் பருவம் மாறி விடலை, இளமைப் பருவம் மாறி முதுமை எனக் காணப்படுவது சுழற்சி முறையாகும். இச்சுழற்சி காலங்களில் தான் சடங்குகள் நிகழ்த்தப் பெறுகின்றன இச்சடங்குகள் மாறாத நிகழ்ச்சிக் கூறுகளின் மூல வடிவமாக அமைந்துள்ளன. பிறந்த உயிரானது பிறப்பு முதல் இறப்பு வரை பயணம் செய்கிறது. அப்பயணம் வாழ்க்கையின் துவக்கத்தில் இருந்து படிப்படியாக வளர்ச்சியை நோக்கிய நிலையில் செல்கிறது. முழு உடல் வளர்ச்சியடைந்த பிறகுத் தொடங்குவது மணவாழ்க்கைப் பயணம். இஃது இனவிருத்தியாக அமைகிறது. இப்பயணத்திற்குத் தேவையான உணவு, உடை, தேடுதல் முயற்சிகள் தற்கால நாகரிக வளர்ச்சியாக வளர்ந்திருக்கிறது.

பிறந்து இறக்கும் இந்த வாழ்க்கைப் பயணம் பலக் கட்டங்களைத் தாண்டி வளர்வதால் இறப்புக்குப் பின் வாழ்வு உண்டு என்பதை மனிதன் நம்புகின்றான். இந்த நம்பிக்கை உலகம் முழுவதும் காணப்படுவதாகும். இந்நம்பிக்கையின் அடிப்படையில் தான் இறந்த பின் பல்வேறு விதமானச் சடங்குகளைச் செய்கின்றனர். இவ்வாறு சடங்குகள் ஒரு மனிதனின் வாழ்க்கைச் சுழற்சியில் பெரும்பங்கு வகிப்பதையும், அவை நம்பிக்கையாக மாற்றம் பெற்றுள்ளதையும் காணமுடிகின்றது.

**நம்பிக்கைகள்**

நாட்டுப்புற இலக்கிய வகைமைகளுள் மிகவும் முக்கிய கூறாக விளங்குவது நம்பிக்கையாகும். நம்பிக்கையே வாழ்க்கையின் அடிப்படை. நம்பிக்கையில்லை என்றால் வாழ்க்கையே இல்லை என்ற நிலையில்தான் இன்றைய சமுதாயம் வாழ்ந்து வருகின்றது.

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையில் பல்வேறு நிலைகளில் பல்வேறு வகையான நம்பிக்கைகள் இடம்பெறுகின்றன. அவை, மனிதனின் பழக்க வழக்கங்களையும் பண்பாட்டையும் புலப்படுத்துகின்றன. மனித மனத்தின் விளைவால் நம்பிக்கை தோன்றுகிறது. இயற்கையால் படைக்கப்பட்டுள்ள பொருட்களுக்கும், மனிதனின் செயல்களுக்கும் தொடர்பு உண்டு என்ற கருத்தின் அடிப்படையில் அவை தோன்றியதாகவே காட்சித் தருகின்றன. அச்சத்தின் காரணமாக இயற்கையின் தோற்றத்தினையும் செயல்பாடுகளையும் தனது வாழ்வியல் நடப்புகளோடு இணைத்து நோக்கிய நிலையில் நம்பிக்கை தோற்றம் பெற்றன என்று நம்பிக்கைக்கு விளக்கம் அளிக்கிறார் காந்தி (1980:103,104). நம்பப்படுவது நம்பிக்கை; நம்பிக்கை என்பதற்கு விசுவாசம் என்றும் பொருள் கொள்ளலாம். நம்பிக்கைக்கு ஆங்கிலத்தில் Hope, Faith, Belief, Confidence, Trust, Assurance ஆகிய சொற்கள் உள்ளன. ஒரு செயலுக்கு இன்ன பயன் விளையுமென்று செயல் நடைபெறும் முன்னரே நம்புவது நம்பிக்கை என்பதாகச் சுரேந்திரன் (1979:32) குறிப்பிடுகிறார். தமிழ்ப் பேரகராதி (1956:2155), நம்பிக்கை என்பதற்கு விசுவாசம், ஆளை நம்பியொப்புவிக்கப்பட்டது, உண்மை என்று பொருள் கூறுகிறது. தன்னுடைய சொந்தக் குணத்தை ஒரு சமூகம் மாற்றும்போது அல்லது இழக்கும்போது அவற்றிற்கு முன்பே அமைந்திருந்த நடைமுறைகள் நம்பிக்கைகளாக எஞ்சுகின்றன என்று தமிழவன் (1976:6) குறிப்பிடுகிறார். இதுகுறித்துச் சக்திவேல் (1992:178) கூறும்போது நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு, மக்கள் சமுதாயத்தில் அது பாதுகாக்கப்படுகின்றன. மனிதனின் தன்னிலை உணர்வும், சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன என்கிறார்.

நம்பிக்கைகள் மரபு வழியில் காலங்காலமாக ஒரு தலைமுறையினரிடமிருந்து மற்றொருத் தலைமுறையினருக்குப் பரவி வருகின்றது. மருத்துவ இனமக்களிடம் பலவிதமான நம்பிக்கைகள் காணப்படுகின்றன. அவர்களிடம் களஆய்வில் சேகரிக்கப்பட்ட நம்பிக்கைகளை அதன் தன்மைகள் அடிப்படையில் ஆவி தொடர்பான நம்பிக்கைகள், தெய்வம் தொடர்பான நம்பிக்கைகள், பூப் பற்றிய நம்பிக்கைகள், மருத்துவம் பற்றிய நம்பிக்கைகள், கனவு, சகுனம் பற்றிய நம்பிக்கைகள், தொழில் சார்ந்த நம்பிக்கைகள், பெண்கள் தொடர்பான நம்பிக்கைகள், மந்திரம் தொடர்பான நம்பிக்கைகள் என ஒன்பது வகையாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன.

## ஆவி

மருத்துவ இனமக்களிடையே ஆவிகள் பற்றிய நம்பிக்கைகள் காணப்படுகின்றன. இவர்கள் இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்ய எடுத்துச் செல்லும்போது கடுகினை வீசிக் கொண்டேச் செல்கின்றனர். புதைக்கும் இடத்தில் ஓட்டைச் சிரட்டை ஒன்றினை வைத்து விட்டுச் செல்கின்றனர். இஃது இறந்தவர்களின் ஆவியானது வீட்டிற்குத் திரும்பி வந்துவிடக் கூடாது என்பதற்காகச் செய்யப்படுகின்றது. ஆவியானது ஓட்டைச்சிரட்டையும், கடுகும் தன்னுடன் வந்தது; அவற்றை எடுக்காமல் வீட்டிற்குச் செல்லக்கூடாது என்று நினைத்து ஓட்டைச் சிரட்டையில் கடுகினை எடுத்துப் போட்டுக் கொண்டே வரும். அப்போது கடுகானது ஓட்டை வழியே சிதறி கீழே விழும். ஆவி அதனைப் பொறுக்கி வரும் முன்னர் பொழுது புலர்ந்துவிடும். இதனால் ஆவியானது வீட்டிற்கு வராது என்று நம்புகின்றனர்.

பேய் பற்றிய நம்பிக்கைகள் பண்பட்ட மற்றும் பண்படாத மக்களிடையே உலகெங்கும் காணப்படுகின்ற நம்பிக்கையாகும். மருத்துவ இனமக்களும் பேய்களை நம்புகின்றனர். நள்ளிரவு நேரங்களில் வீட்டிற்கு வரும்போது தன்னுடன் தீய ஆவிகளும் வருவதாக நம்புகின்றனர். எனவே வீட்டிற்கு வெளியே சிறிது நேரம் நின்று அதன்பின் 'காறி துப்பி' விட்டு வீட்டிற்குள் செல்வார்கள். அவ்வாறு செய்தால் பேய்கள் உள்ளே வராது என்றும் நம்புகின்றனர். கருவுற்ற தாய்மார்கள் இரவு நேரங்களில் வீட்டைவிட்டு வெளியே செல்லக்கூடாது. மீறிப்போனால் அவர்களுக்குப் பேய்கள் துன்பத்தை விளைவிக்கும் என்றும் நம்புகின்றனர்.

## தெய்வம்

மனிதர்கள் தங்கள் துன்பங்களை அல்லது குறைகளை இறைவனிடம் சொல்லி வேண்டுவது வழக்கமாகும். தங்கள் குறைகள் நீங்கினால் இறைவனிடம் வேண்டியதைச் செய்கின்றனர். குழந்தையில்லாதவர்கள் தங்களுக்குக் குழந்தைப் பிறந்தால் கோவிலுக்கு வேண்டுதல் பொருட்களைத் தருவதாக வேண்டுகின்றனர். வாரத்திற்கு ஒரு நாள் வீதம் நோன்பு விரதம் இருக்கின்றனர். பெண்கள் நல்ல கணவன் கிடைத்தால், திருமணம் முடிந்த மறுவருடம் கோவில் தேரினை வடம்பிடித்து இழுப்பதாக வேண்டிக் கொள்கின்றனர். அதன்படி வடம்பிடித்து தேரினை இழுத்தால் தங்கள் வாழ்க்கை வளமையுடன் இருக்கும் என்று நம்புகின்றனர். குழந்தை கொடி சுற்றிப் பிறந்தால் தாய்மாமனுக்கு ஆகாது என்று நம்புகின்றனர். தாய்மாமன் கோவிலுக்கு

வழிபாடுகள் செய்தால் இந்தத் தோஷம் தீர்ந்துவிடும் என்னும் நம்பிக்கையும் காணப்படுகின்றது.

### கன்னிச்சாவு

குடும்பத்தில் திருமணம் ஆகாதவர் இறப்பதைக் 'கன்னிச் சாவு' என்று அழைக்கின்றனர். ஒவ்வொரு வீட்டிலும் கன்னிமூலை என்ற பகுதி காணப்படுகிறது. அதில் கன்னிக்குத் துணிகளை வைத்து வழிபடுகின்றனர். இறந்தவர் ஆணாக இருந்தால் ஆண்களுக்குரிய துணியும், பெண்ணாக இருந்தால் பெண் களுக்குரிய துணியும் வைக்கின்றனர். இத்துணியை ஒரு ஓலைப்பெட்டியில் பொதிந்து வைத்திருப்பர். இறந்த கன்னியின் ஆவி அதில் இருப்பதாக நம்புகின்றனர். இந்த ஆவி குடும்பத்தைக் காப்பாற்றும்; நல்லதைச் செய்யும் என்றும் நம்புகின்றனர். பண்டிகை நாட்களில் கன்னிக்குப் படையல் வைத்த பின்னரே உணவு உண்கின்றனர். மருத்துவச் சமுதாய மக்களின் குடும்ப நிகழ்வுகள் அனைத்திலும் கன்னிச் சாவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் காணமுடிகின்றது.

### பூப்பற்றியவை

பூ என்பது முகத்தில் உன்னியோ, பருக்களோ வருவதே ஆகும். பூ வந்தால் தெய்வக் குற்றம் என்று நம்புகின்றனர். எனவே, கோவிலுக்கு உப்பும், மிளகும் வாங்கிப் போடுகின்றனர். அவ்வாறு செய்வதால் அவை மறைந்துவிடும் என்று நம்புகின்றனர்.

### கனவு

மனிதனின் அடக்கி வைக்கப்பட்டிருந்த விருப்பத்தின் மறைமுகமான வெளிப்பாடே கனவு என்று உளவியல் அறிஞர் சிக்மன் பிராய்ட் கூறுகிறார். எல்லா மக்களும் கனவு காண்பதுண்டு. கனவு காணாத மனிதனே இல்லை. கனவில் தீய கனவும் உண்டு; நல்ல கனவும் உண்டு. புறநானூறு,

*எயிறு நிலத்து விழவு மெண்ணெ யாடவும்*
*களிறு மேல கொள்ளவுங் காழக நீப்பவுங்*
*வெள்ளி நோன் படை கட்டிலொடு கவிழவும்*
*கனவினரியன . . .*

என்று தீய கனவு நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறது. இவ்வின மக்கள் நல்ல கனவு கண்டால் தீமை நடக்கும் என்றும், தீய கனவு கண்டால் நல்லது நடக்கும் என்றும் நம்புகின்றனர். திருமணம் நடைபெறுவதாகக் கனவு கண்டால் தம்மை சார்ந்த உறவினர் வீட்டில் சாவு நடைபெறும் என்றும், சாவு நிகழ்வு கண்டால் தம்மை சார்ந்தவர்களின் இல்லத்தில் திருமணம் நடக்கும் என்றும் நம்புகின்றனர். இத்தகைய நம்பிக்கை பொதுவாக அனைத்து இனத்தவர்களிடமும் காணப்படுகிறது.

**சகுனம்**

குடும்பத்தில் அல்லது சமுதாயத்தில் நல்ல நிகழ்வுகள் நடைபெறும்போது நல்ல நாள் பார்க்கும் பழக்கம் இன்றும் மக்களிடம் பரவலாகக் காணப்படுகிறது. இதேபோன்று ஒரு நிகழ்ச்சிக்கு வெளியே செல்லும்போது சுமங்கலி வந்தால் நல்ல சகுனம் என்றும், அமங்கலி வந்தால் தீய சகுனம் என்றும் நம்புகின்றனர். பல்லியினை ஒரு நிமித்தமாக மக்கள் பார்க்கின்றனர். பல்லி எந்தத் திசையிலிருந்து சத்தமிடுகிறதோ அதை வைத்து நல்லது, கெட்டது என்று கூறுகின்றனர். பல்லியின் பலனைப் பற்றி,

*முதைச்சுவற் கலித்த மூரிச் செந்தினை*
*ஓங்குவணர்ப் பெருங்குரல் உணீஇய பாங்கர்ப்*
*பகுவாய்ப் பல்லி பாடு ஓர்த்துக் குறுகும்*
*புருவைப் பன்றி* (அகம்.88)

என்று அகநானூறு குறிப்பிடுகிறது. இவ்வின மக்கள் பல்லி வீட்டின் வடக்கே இருந்து சத்தமிட்டால் தீமை என்றும், தெற்கே இருந்து சப்தமிட்டால் நல்லது என்றும் நம்புகின்றனர்.

**சடங்கியல்**

மருத்துவ இனமக்களின் திருமண முறைகள் ஒவ்வொரு உள் பிரிவினரிடமும் ஒவ்வொரு விதத்தில் காணப்படுகிறது. அவர்களில் ஒரு பிரிவினரிடம் திருமணத்தின்போது 'முளைப்பாரி' வைக்கும் சடங்கு காணப்படுகின்றது. திருமணத்தின்போது ஒன்பதுவிதமான தானியவகைகளை எடுத்து அவற்றைச் சிறிய பானையில் தனித்தனியே வைத்துத் தண்ணீர் விடுகின்றனர். ஏழு நாள் கழித்து நவதானியங்கள் நன்கு செழித்து வளர்ந்திருந்தால் அவர்கள் வாழ்க்கை வளமுடன் இன்பமாய் இருக்கும் என்று நம்புகின்றனர். செழித்து வளரவில்லை என்றால் வாழ்வில் இன்னல்கள் ஏற்படப் போவதாக நம்புகின்றனர்.

**தொழில்**

மருத்துவ இனமக்கள் ஐந்து விதமான தொழில்கள் செய்து வருகின்றனர். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற வாக்கிற்கு ஏற்ப இவர்கள் தொழில் சாதனங்களைப் பூஜை அறையில் வைப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். தொழிலுக்கு வெளியே செல்லும்போது இறைவனை வணங்கி நல்ல எதிர்ப்பு (நன் நிமிர்த்தம்) பார்த்துச் செல்வது வழக்கம். எதிர்ப்புக்குப் பிள்ளைகளையோ, சுமங்கலி பெண்களையோ வரும்படிக் கூறுவதும் உண்டு. அவ்வாறு சென்றால் தொழில் திறம்பட நடக்கும் என்று நம்புகின்றனர். தீட்டு நாட்களில் பெண்கள் தொழில் கருவிகளைத் தொடுவதும் இல்லை.

இவ்வினப் பெண்கள் குழந்தைப்பேறு பார்க்கச் செல்லும்போது தமது குலதெய்வத்தை வணங்கி விபூதி எடுத்துச் செல்கின்றனர். இந்த விபூதியினைப் பிரசவ வேதனையில் இருக்கும் பெண்ணின் நெற்றி, மற்றும் வயிற்றில் தடவிய பின்தான் பேறு பார்க்கிறார்கள். இவ்வாறு செய்தால் குழந்தை எளிதாகப் பிறந்துவிடும் என்றும் நம்புகின்றனர்.

### பெண்கள்

இன்றைய சமூகத்தில் குழந்தைப்பேறு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. குழந்தை இல்லாதவர்களை இச்சமூகம் மலடி என்ற பட்டம் கொடுத்து இழிவாகப் பார்க்கும் நிலை உள்ளது. இது குறித்து,'ஒரு கூட்டுக் குடும்பத்தில் கணவனுடன் வாழ்கிற ஒரு பெண் விரைவில் தாய்மைப்பேறு அடையாவிட்டால் அவளை அக்குடும்பத்தினர் குறை கூறத் தொடங்குகின்றனர். குழந்தையால் தமக்குக் குடும்பத்திலும், சமூகத்திலும் ஒரு தகுதியும், பாதுகாப்பும் கிடைப்பதை பெண் அறிந்து கொள்கிறாள். இதனால் தாய்மைப்பேறு அடையவேண்டும் என்ற இயல்பான உந்துதலினால் ஒரு பெண் விரதமிருந்து வழிபாடு செய்கின்றாள் என்று சுப்பிரமணியம் (1976:180) குறிப்பிடுகிறார். இவ்வினப் பெண்கள் குழந்தை வரம் வேண்டி அரசமரத்தினைச் சுற்றுகின்றனர். மரத்தினால் தொட்டிலும், குழந்தையும் செய்து அதனை இசக்கியம்மன் கோவிலில் கட்டித் தொங்க விடுகின்றனர். அவ்வாறு செய்வதன் மூலம் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையும் காணப்படுகின்றது.

பெண்கள் கர்ப்பமாக இருக்கும் போது அவர்கள் நல்லவற்றையே நினைக்க வேண்டும். அவ்வாறு நினைத்தால் மட்டுமே நற்பண்புள்ள குழந்தைப் பிறக்கும் என்றும் நம்புகின்றனர். கருவுற்றப் பெண்கள் இரவு நேரங்களில் தனிமையில் வெளியேச் செல்லக் கூடாது; அதை மீறிச் சென்றால் குழந்தைக்குக் கேடு நேரிடும் என்றும், கருச்சிதைவுக்கூட ஏற்படும் என்றும் நம்புகின்றனர். கருவுற்ற காலத்தில் பெண்களைச் சந்தோஷமாக வைத்திருக்க வேண்டும். விரும்பிய பொருட்களை வாங்கிக் கொடுக்கவேண்டும் என்றும், வாங்கிக் கொடுக்காமல் இருந்தால் குழந்தைக்குத் துன்பம் நேரிடும் என்றும் நம்புகின்றனர்.

வீட்டில் குளவி என்னும் பூச்சி கூடுகட்டினால் குழந்தைப்பேறு உண்டாகும் என்ற நம்பிக்கையும் காணப்படுகின்றது. பொதுவாகக் கருக்கொண்டுள்ள பெண் வீட்டில் இருக்கும் நிலையில் வீட்டில் உள்ளவர் கனவு காணுவதை வைத்து பிறக்கப் போவது ஆண்குழந்தையா அல்லது

பெண்குழந்தையா என்பதை அறிந்து கொள்கின்றனர். குழந்தை பிறக்கும் போது அதன்மீது கொடி சுற்றிப் பிறந்தால் தாய்மாமனுக்கு ஆகாது என்று நம்புகின்றனர். இதற்குத் தீர்வாக எண்ணெயினைப் பாத்திரத்தில் எடுத்து அதில் தாய்மாமன் முகத்தைப் பார்த்தால் தீங்கு மாறும் என்றும் நம்புகின்றனர்.

குழந்தை பிறந்த பிறகு தொப்புள் கொடியினைத் தாய் குளிக்கும் இடத்தில் புதைத்தால் பால் அதிகமாகச் சுரக்கும் என்று நம்புகின்றனர். பெண்களின் தலைமுடி முழங்கால் வரை நீளமாக வளர்ந்து இருந்தால் அது கணவனுக்கு ஆகாது என்றும் நம்புகின்றனர். இங்ஙனம், பெண்கள் குறித்த நம்பிக்கைகள் இச்சமூகத்தினரிடையே இருந்து வருகின்றதை அறியமுடிகிறது.

**மந்திரம்**

மருத்துவ இன முதியோர்கள் மந்திரங்கள் செய்யும் மாந்திரிகத் தொழிலையும் செய்து வந்துள்ளனர்; தற்போது, வழக்கில் இல்லை. அது தொடர்பான சில நம்பிக்கைகளை மட்டும் காணமுடிகின்றது. மானிடவியலாரின் நோக்கின் படி இயற்கையின் இயக்க விதிகளைப் புரிந்துக் கொள்ள இயலாத ஆதிமனிதன் இயற்கையைக் கட்டுப்படுத்தவும், அதனிடமிருந்து சில பயன்களைப் பெற்றுக் கொள்ளவும் உருவாக்கிய ஒன்றே மந்திரமாகும் என்கிறார் சிவசுப்பிரமணியன் (1988:1). இது பற்றி லூர்து (1981:1), மந்திரம் என்பது ஒரு மாலையை நாம் உண்டாக்கி அதனால் இயற்கையை நாம் கட்டுப்படுத்துவதாக எண்ணி அவ்வாறு கட்டுப்படுத்துவதன் மூலம் உண்மையாகவே இயற்கையைக் கட்டுப்படுத்துவதாக நம்புகின்றனர் என்று குறிப்பிடுகிறார். மந்திரம் என்பது போலச் செய்தல் என்றக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது என்று கைலாசபதி (1966:93) குறிப்பிடுகிறார். இவ்வினத்து மக்களும் நோய்கள் மந்திரத்தினால் குணமாகி விடும் என்று நம்புகின்றனர். கள ஆய்வின் போது கிடைத்த மந்திரம் தொடர்பான நம்பிக்கைகளை இரண்டாக வகைப்படுத்தலாம். அவை 1. நன்மைபயக்கும் மந்திர நம்பிக்கை, 2. தீமை பயக்கும் மந்திர நம்பிக்கை என்பனவாகும். மருத்துவ இன மக்கள் மந்திரம் செய்பவர்களாக இருப்பதால் நோயாளியின் உடலைத் தொட்டு மந்திரம் செய்தால் நோய் குணமாகும் என நம்புகின்றனர்.

நன்மை பயக்கும் மந்திர நம்பிக்கை என்பது ஒருவருக்கோ அல்லது ஒரு சமுதாயத்துக்கோ நன்மை பயப்பதாக அமையும். இதனைத் 'தூய மந்திரம்' என்பர். மந்திரச் சடங்குகளும் மந்திரச்சொற்களும் ஒரு தனி மனிதனின் நலனுக்கோ குழு அல்லது சமுதாயம் முழுவதன் நலனுக்கோ பயன்படுத்துவது தூயமந்திரம்

என்கிறார் சிவசுப்பிரமணியன் (1988:29). ஒருவருக்கு நோய் ஏற்பட்டால் மிளகு, உப்பு, கடுகு, பாஞ்சியிலை அல்லது வேப்பிலை, முச்சந்தி மண் ஆகியவற்றை ஒன்றாகப் பொட்டலமாகக் கட்டி வாய் பேசாமல் உடல் முழுவதும் தடவி பின் நெருப்பில் இடுகின்றனர். பொட்டலத்தில் உள்ள பொருட்கள் நோய் உள்ளவரின் உடலைத் தொடும் போது அப்பொருட்களின் வழியே நோய் நெருப்பில் அழிந்துவிடும் என்று நம்புகின்றனர்.

ஒருவருக்கு அல்லது ஒரு சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கும் நோக்கில் செய்யப்படுவது தீய மந்திரம் ஆகும். ஏவல், பில்லிசூனியம் வசியப்படுத்துதல் முதலியவைகளும் தீய மந்திரத்தினுள் அடங்கும். ஒருவருக்குத் தீமை செய்ய வேண்டுமானால் அவருடைய உருவ பொம்மை ஒன்றினைச் செய்து, மந்திரம் சொல்லி எந்தப் பாகத்தில் முள்ளினால் குத்து கின்றார்களோ அந்தபாகம் செயலிழந்துப் போகும் என்றும் கூறுகின்றனர். தற்போது இம்மக்கள் இத்தகைய மந்திரங்களைச் செய்வதில்லை. மாறாக, நோய் வந்தால் மந்திரம் சொல்லி விபூதியினைக் கொடுப்பார்கள்; அதனைப் பூசினால் நோய்தீரும் என்று நம்புகின்றனர்.

பருவமடைந்த பெண்ணின் உடல் வளர்ச்சியைக் கண்டு மற்றவர்கள் திருஷ்டி போட்டுவிடக் கூடாது என்பதற்காகக் ‘கண்ணேறு கழித்தல்’ என்னும் சடங்கைச் செய்கின்றனர். வெள்ளைத் துணியில் சுண்ணாம்பைத் தடவி மூன்று பிரிவாகக் கிழித்துத் தலையைச் சுற்றிப் பின்னர் அதனை எரித்து விடுகின்றனர். அத்துடன், முச்சந்தி மண், மிளகாய்வற்றல், உப்பு, வெள்ளைத்துணி இவற்றைக் கொண்டு பெண்ணின் உடல் முழுவதும் தடவி, தலையைச் சுற்றி, மூன்று முறை துப்பி விட்டு அடுப்பில் போடுகிறார்கள். இவ்வாறு செய்தால் கண்ணேறு மாறிவிடும் என்று நம்புகின்றனர்.

புதிய வீடுகட்டும் போது கண்ணேறு படாமல் இருக்க மனிதனைப் போன்று உருவப் பொம்மையினைச் செய்து வைப்பதும், பூசணிக்காயைக் கட்டித் தொங்கவிடுவதும், சீனிக்காரத்தைக் கட்டித் தொங்கவிடுவதும், திருக்கள்ளிச் செடியினைக் கட்டித் தொங்க விடுவதும் வழக்கமாக இருந்து வருகின்றது. இவற்றைச் செய்தால் வீடு கட்டும் போதும், கட்டி முடித்தப்பிறகும் தீங்கு வராது என்று எல்லாவின மக்களும் நம்புகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# 4. வாய்மொழி வழக்காறுகள்

இனக்குழு மக்களின் பண்பாட்டினை அறிந்து கொள்வதற்குப் பல மூலங்கள் துணைபுரிகின்றன. அவற்றுள் வாய்மொழி இலக்கியங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. இவை காலங்காலமாக இனக்குழு மக்களிடம் காணப்படுகின்ற உணர்ச்சியோட்டங்களையும், அனுபவ நிலையினையும் வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. இவ்வாய்மொழி இலக்கியங்களின்மூலம் மக்களின் பண்பாடு, பழக்கவழக்கம், நாகரிகம், நம்பிக்கைகள், உறவுமுறைகள், வரலாறு, வாழ்க்கைமுறை முதலியவற்றை அறிந்து கொள்ளலாம். களப்பணியின்போது மருத்துவ இனமக்களிடம் சேகரிக்கப்பட்ட வாய்மொழி இலக்கியங்கள் இங்கு பகுத்தாரயப்பட்டுள்ளன.

## வாய்மொழி வழக்காறுகள்

களஆய்வின்போது சேகரிக்கப்பட்ட வாய்மொழி வழக்காறுகளை இரண்டாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை, 1. நிலைத்த மரபுத்தன்மை கொண்டவை, 2. நிலையற்ற மரபுத்தன்மை கொண்டவை என்பனவாகும்.




## நிலைத்த மரபுத்தன்மை கொண்டவை

இனக்குழு மக்களிடையே வெவ்வேறு சூழ்நிலைகளில் எவ்வித மாற்றமும் இன்றி வழங்கி வருகின்ற வழக்காறுகளை நிலைத்த மரபுத்தன்மை கொண்ட வழக்காறுகள் எனலாம். அவற்றுள் பழமொழிகளும், விடுகதைகளும் குறிப்பிடத் தக்கவையாகும்.

## பழமொழிகள்

நாட்டார் இலக்கிய வகைமைகளுள் மிகவும் பழமையானவைப் பழமொழிகளாகும். இவை மிகப்பழங்காலத்திலிருந்தே மக்களின் நாவில் பயின்று வழங்கி வருகின்றன. பழமொழிகள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் வாய்ந்தவை. இதனைத் தொல்காப்பியர்,

> ***"நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்***
> ***மென்மை என்றிவை விளக்கத் தோன்றிக்***
> ***குறித்துப் பொருளை முடித்தற்கு வருஉம்***
> ***ஏது நுதலிய முதுமொழி"*** (தொல். சொல்: 165)

என்று கூறுகிறார். பழமொழியினை மலையாளத்தில் பழஞ்சொல் என்றும், தெலுங்கில் நாதுடி என்றும், கன்னடத்தில் நான்னுடி என்றும், ஆங்கிலத்தில் Proverbs, old sayings என்றும் கூறுகின்றனர். பழமொழியினை, பழகுமொழி, தொன்னெறிமொழி, முதுமொழி, முதுசொல், தொன்றுபடுகிளவி, தொன்றுபடு பழமொழி, பழமொழி, வாய்மொழி, அறம், நெடுமொழி, பல்லவையோர் சொல், பண்டைப் பழமொழி, சொலவு, மூதுரை, பழஞ்சொல், மூத்தோர் சொல் வார்த்தை, வழக்கு, உரை, பழைய நெறிகளாய் வரும் சொல், பழ வார்த்தை, உலக மொழி, உபகதை, சுலோகம், சொலவடை, வசனம், எழுதா இலக்கியம், வாய்மொழி இலக்கியம், எழுதாக்கிளவி, கேள்வி, சுருதி, நீதிமொழி, முதுமை, மொழிமை, முன் சொல் என்று பெருமாள் (1987:105,106) முப்பத்து நான்கு சொற்களில் குறிப்பிடுகிறார்.

பழமொழியைச் சொலவடை என்றும் கூறுவர். பழங்கதைகளையும், இன்ப துன்ப செய்திகளையும் எடுத்துரைப்பதால் 'உபகதை' என்ற பெயர் உண்டு என்று ஞானதாஸ் *(2001:11)* குறிப்பிடுகிறார். பழமொழிகள் மக்களின் அனுபவ முதிர்ச்சியையும் அறிவுக்கூறுகளையும் விளக்கும் சான்றாகத் திகழ்கின்றன. இவை மக்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து வழங்கப்படுகின்ற பழைய மொழியாகும். பழமொழி என்பது உலகுக்கு உணர்த்தும் உண்மையைச் சிறிய வாக்கியத்தின் மூலம் சுருக்கிக் கூறுவதாகும். அது முழுமையாக இல்லாவிடினும் அதை விளக்கிக் கூறும்போது முழுக் கருத்தும் வெளிப்படும் என்று துர்கா பகவத் *(1958:46)* குறிப்பிடுகிறார். பழமொழியானது எளிதில் கவனிக்கக்கூடிய சேகரிக்கக்கூடிய தொன்மை வாய்ந்ததாக

இருப்பினும் புரிந்துக்கொள்ளல் கடினம் (என்கிறார் ரிச்சார்ட்டார்சன் 1972:117). பழமொழிகளைச் சூழ்நிலைக்கேற்ப மக்களின் அன்றாட வாழ்க்கையில் கையாள்கின்றனர். இவை எவ்விதமான கட்டுப்பாடுகளுமின்றி எல்லா இடங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன. பழமொழிகளைப் பெரும்பாலும் எல்லா விதமான சூழல்களிலும் மக்கள் கையாளுகின்றனர். இவைகள் படித்தவர்களிடையே குறைவாகவே வழக்கில் வழங்கப்பட்டு வருகின்றன. மருத்துவ இனமக்கள் அதிகமாக பழமொழிகளை கையாள்கின்றமை காணமுடிகிறது.

## இலக்கியத்தில் மருத்துவர்கள் குறித்த பழமொழிகள்

இலக்கியங்களில் மருத்துவர்களைப் பற்றியப் பழமொழிகள் அதிகமாகக் காணப்படவில்லை. மாறாக, பழமொழி நானூறு, ஜெயங்கொண்டார் சதகம் ஆகிய நூற்களில் இவர்களைப் பற்றிய ஒருசிலப் பழமொழிகள் இடம்பெற்றுள்ளன. அவை,

***"நாவிதன் வாள் சேப்பிலைக்கும் கூர்ந்துவிடல்"*** (1954: 264)

***"நாவிதன் செய்தியை அறிந்து குடுமியைப்***
***பத்திரப்படுத்தல் நலம்"*** (ஜெய, 1986:66)

என்பவைமூலம் அறியலாம்.

## பழமொழியின் வகைப்பாடுகள்

தமிழில் பழமொழிகள் குறித்த ஆய்வுகள் பல வந்துள்ளன. அதில் அறிஞர்கள் பழமொழிகளைப் பலவாறு வகைப்படுத்தி ஆய்வுச் செய்துள்ளனர். அவற்றை ஒவ்வொருவரும் ஒன்றுபட்டும், மாறுபட்டும் வகைப்படுத்தியுள்ளனர். சக்திவேல் பழமொழிகளை 1.அளவு, 2. பொருள், 3. அகரவரிசை, 4. அமைப்பியல், 5. பயன் என்ற அடிப்படையில் ஐந்தாக வகைப்படுத்தியுள்ளார். காந்தி தமிழ்ப் பழமொழிகளை, 1. உருவத்தை அடிப்படையாகக் கொண்ட பழமொழிகள், 2. பொருளை அடிப்படையாகக் கொண்டப் பழமொழிகள் என இரண்டாக வகைப்படுத்தியுள்ளார். டாக்டர் நசீம்தீன் பழமொழிகளை, 1. அறம் வலியுறுத்துவன, 2. விதியின் வலிமை உணர்த்துவன, 3. வாழ்வியல் உண்மைகளை உணர்த்துவன என்று மூன்றாக வகைப்படுத்தியுள்ளார். இதனைத் தர்மராஜ் 1. முரண் அற்றப் பழமொழிகள், 2. முரண் உடைய பழமொழிகள், 3. சமநிலைப் பழமொழிகள், 4. அறிவுரை, 5. வினா, 6. உவமைத்தொடர், 7. பொதுவானவை என்று ஏழாக வகைப்படுத்தியுள்ளார்.

களஆய்வின்போது சேகரிக்கப்பட்ட பழமொழிகள் இரண்டாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை, 1. மருத்துவர்கள் தங்களுக்குள் வழங்கி வருபவை, 2. இவர்களைப் பற்றி மற்றவர்கள் வழங்கி வருபவை என்பனவாகும். இவர்கள் தங்களுக்குள்ளே வழங்கி வருபவைகளை 1. சாதி சார்ந்தவை, 2. விலங்கு சார்ந்தவை, 3. பறவைகள் சார்ந்தவை, 4. தாவரங்கள் சார்ந்தவை, 5. இயற்கை சார்ந்தவை, 6. வாழ்வியலை உணர்த்துபவை என்று ஆறாக வகைப்படுத்தப் பட்டுள்ளன. மற்றவர்கள் இவர்களைப் பற்றிக் கூறும் பழமொழிகள், 1. தொழில் சார்ந்தவை, 2. தொழில் சாரர்தவை என்று இரண்டாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.




## மருத்துவர்கள் தங்களுக்குள் வழங்கி வருபவை

இவ்வின மக்கள் தங்களுக்குள்ளே வழங்கி வருகின்ற பழமொழிகளைச் சாதி சார்ந்தவை, விலங்கு சார்ந்தவை, பறவைகள் சார்ந்தவை, தாவரங்கள் சார்ந்தவை, இயற்கை சார்ந்தவை, வாழ்வியலை உணர்த்துபவை என ஆறாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.

### *சாதி சார்ந்த பழமொழிகள்*

சாதியினை அடிப்படையாகக் கொண்ட பழமொழிகளை, 1. தங்களைப் பற்றித் தாங்களே வழங்கி வருபவை, 2. பிற

சாதியினைப் பற்றி வழங்கி வருபவை என இரண்டாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## தங்களைப் பற்றித் தாங்களே வழங்கி வருபவை

மருத்துவ இனமக்கள் தங்கள் சாதி சார்ந்த பழமொழிகளைத் தாங்களே பயன்படுத்தி வருகின்றனர்.

*இருப்பவன் ஒழுங்காயிருந்தால்*
*சிரைப்பவன் ஒழுங்காய் சிரைப்பான்*
*வேலையில்லா அம்பட்டன்*
*எருமை மாட்டைச் செரச்சானாம்*

## பிற சாதியினரைப் பற்றியவை

இவ்வின மக்கள் பிற இனத்தவரிடம் உறவு வைத்திருப்பதால், அவர்களைப் பற்றிய பழமொழிகளும் இவர்களிடையே வழங்கி வருகின்றன.

*சாணான் உறவு சட்டிக்க பெட்டிக்க*
*வண்ணானுக்கு வண்ணாத்தி மேல ஆசை*
*வண்ணாத்திக்குக் கழுதை மேல ஆசை*

*குசவனுக்குப் பல நாள் வேலை*
*தாடிக்கார போத்திக்கு ஒருநாள் வேலை*

*சாலியர் உறவு சப்பட்ட உறவு*
*கம்மாளன் உறவு புத்திகட்ட புத்தி*

### விலங்குகள்

மனிதனை விலங்குகளின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு கூறுவதுண்டு. பழமொழிகள் விலங்குகளைப் பற்றியதாக இருந்தாலும் அது மனிதனைச் சுட்டுவதாகவும், அறிவுறுத்துவ தாகவும் விளங்குகின்றன.

*ஒட்டக்காரனைப் பிடிச்சாலும் ஒட்டக்காரன்*
*வீட்டு நாயைப்பிடிக்க முடியாது*

*கொல்லன் இருக்கிற இருப்பைப் பார்த்து*
*குரங்கு பூண் அடிச்சி கேட்டதாம்*
*சீனிக்கிழங்கு தின்ன பண்ணி*
*செவியறுத்தாலும் நிற்காது*

**பறவைகள்**

மக்கள் பேச்சு வழக்கில் பறவைகளின் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு பல பழமொழிகளைக் கூறுகின்றனர். இவ்வின மக்களும் அதிகமாகப் பறவைகள் சார்ந்த பழமொழிகளைப் பயன்படுத்துகின்றனர்.

*களைப்புல் போட்டு வளர்த்தாலும்*
*க்காடை காட்லதான் பறக்கும்*

*வௌவாலுக்கு மரமே கதி*
*அதன் குஞ்சுக்கும் அதுவே கதி*

*கருடன் இடமானால் கையில் பொருள் சேரும்*
*காடை இடமானால் நாட்டை ஆளலாம்*

**தாவரங்கள்**

தாவரங்களுக்கும் மனிதனுக்கும் நெருங்கியத் தொடர்புண்டு மனித வாழ்க்கையின் ஒரு அங்கமாக இவைக் கருதப்படுகின்றன. நமது முன்னோர்கள் தாவரங்களைக் கூர்ந்து நோக்கி அவற்றின் இயல்பு மற்றும் பயன்பாட்டை அனுபவ அடிப்படையில் கண்டு பழமொழிகளாக உருவாக்கியுள்ளனர். இப்பழமொழிகள் தாவரங்களின் தன்மையையும், மக்களின் பண்பாட்டையும் அறிந்துகொள்ளும் விதத்தில் உள்ளன.

*முற்றின மரத்தில் வைரம் பாய்ந்திருக்கும்*

*அரச மரத்தைச் சுற்றியதும்*
*அடி வயிற்றைப் பார்த்துக் கொண்டது போல*

*பனை வைத்தவன் பார்த்து சாவான்*
*தென்னை வைத்தவன் தின்னுட்டுச் சாவான்*

**வாழ்வியலை உணர்த்துபவை**

மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரையிலுள்ள ஒவ்வொரு நிகழ்வுகளையும், சடங்குகளையும் நன்கு அறிந்து ஆராய்ந்து அவற்றைப் பழமொழிகளாக உருவாக்கியுள்ளான். அவை பிறப்பு, திருமணம், இறப்பு, உணவு, உடை, உறையுள், அணிகலன் என்று வழங்கி வருகின்றன.

*செத்த பிணத்திற்கு அருகே*
*நாளைச் சாகும் பிணம் அழுகிறது*

*கம்பளி விற்றப் பணத்திற்கு மயிர்முளைத்திருக்கிறதா?*

**இவர்களைப் பற்றி மற்றவர்கள் கூறுபவை**

இவர்களைப் பற்றிய பழமொழிகளை வேறுசமுதாய மக்களிடம் அதிகமாகச் சேகரிக்க முடிந்தது. அவ்வாறு சேகரிக்கப்பட்டவை இரண்டாக வகைப்படுத்தப் பட்டுள்ளன. அவை, தொழில் சார்ந்தவை, தொழில் சாராதவை என்பவையாகும்.

## தொழில் சார்ந்தவை

மருத்துவர்களிடம் சவரத்தொழில், இசைத்தொழில், மருத்துவத்தொழில் ஆகியவைச் சார்ந்த பழமொழிகள் உள்ளன.

### சவரத்தொழில்

சவரத்தொழிலின் தன்மை, கருவிகள் மருத்துவர்களின் பண்புகள் முதலியவற்றை இப்பழமொழிகள் வெளிப் படுத்துகின்றன.

*வேலையில்லாத அம்பட்டன் எருமை மாட்டைச் செரச்சானாம்*

*வேலையில்லாத அம்பட்டன் கத்தியையும், கல்லையும்*
*தூக்கிட்டுக் கரிப்பானையைச் செரச்சானாம்*

*இருப்பவன் செம்மையாக இருந்தால்*
*சிரைப்பவன் செம்மையாகச் சிரைப்பான்*
*செய்கிறது சிரைக்கிற வேலை*
*நினைக்கிறது சிரஸ்தார் வேலை*

*வேலையில்லாத அம்பட்டன் பெண்டாட்டி மயிரைச் செரச்சானாம்*

*அம்பட்டன் குப்பையைக் கிளறினால் மயிர்தான்*

*நாவிதன் வேலைக் கேட்டானாம்*

*அரசன் குடுமி தன் கைக்குள் வேண்டுமென்று*

*அம்பட்டன் வேலை செய்தால் சரியாய் செய்யணும்*

*அலுத்து சலித்து அம்பட்டையன் வீட்டிற்குப் போனா*
*இழுத்துப்பிடித்து தலையைச் செரச்சானாம்*

*இனி கத்தியும் கல்லும் எடுத்துக் கொண்டு*
*போக வேண்டியது தான்*

*ஆண்டு கூடி ஆவணி கூடி*

*வண்ணார் நாவிதர்களுக்கு முறையே கிடையாது*
*வண்ணாரும், நாவிதனும் இல்லையினா ஊர் நாறி விடும்*

*வேலையில்லாத நாசுவன் வேலிக்காட்டிற்குத்*
*தண்ணீர் இறைத்தானாம்*

## இசைத்தொழில்

மருத்துவர் செய்கின்ற இசைத்தொழில்களான பெரியமேளம், நையாண்டி மேளம் தொடர்பான பல்வேறு பழமொழிகள் காணப்படுகின்றன.

*காரியம் முடிந்த பிறகு கொட்டுக்காரனுக்கு என்ன வேலை*

*கொட்டுக்காரன கோபுரத்திலும் தூக்கி வைப்பாங்க*
*சாக்கடையிலும் தூக்கித் தள்ளுவாங்க*

*நாதசுரம் தெரியாதா? மத்தளம் போல் இருக்கும்*

## மருத்துவத் தொழில்

*செல்லிக்குச் சிரங்கு,*
*சிறுக்கிக்கு அரையாப்பு,*
*பார்க்க வந்த பரிகாரிக்குப் பக்கப் பிளவை*

## தொழில் சாராதவை

தொழிலைக் குறிப்பிடாமல் இவர்களைப் பற்றிய பிற செய்திகளைக் கொண்டு பழமொழிகள் அமைந்துள்ளன.

*பரியாரி உறவு தெருவாசல் மட்டும்*

*நாலுத் தலைமுறைத் தாண்டினால்*
*நாவிதனும் நமக்குச் சொந்தக்காரன்*

*சுத்தம் இருந்தால் அம்பட்டனும் பெண் கேட்பான்*
*புதிய வண்ணானையும் பழைய அம்பட்டனையும் தேட வேண்டும்*
*நாவிதரில் பழையவன் வண்ணாரில் புதியவன்*

*எதிர்த்த வீடு ஏகாலி வீடு*
*அடுத்த வீடு அம்பட்டக்குடி*

## பழமொழிகளின் அமைப்பு

பழமொழிகளின் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுச் செய்த சக்திவேல் (2004:42) 1. எதிர்மறைப் பழமொழி, 2. உடன்பாட்டுப் பழமொழி, 3. எதிர்மறை உடன்பாட்டுப் பழமொழி என மூன்று வகைப்படுத்தியுள்ளார். களஆய்வில் கிடைத்துள்ள பழமொழிகள் கீழ்க்காணும் அமைப்பில் வகைப்படுத்தப்பட்டு விளக்கப்படுகின்றன. (i) மோனை அமைப்பு, (ii) எதுகை அமைப்பு, (iii) இயைபு அமைப்பு, (iv) உவமை அமைப்பு, (v) வினாநிலை எதிர்நிலை, (vi) காரண சமநிலை, (vii) நேரெதிர் முரண் அமைப்பு, (viii) சமநிலை அமைப்பு, (ix) எதிர்மறை அமைப்பு என்பனவாகும்.

**மோனை**

முதல் எழுத்து ஒன்றி வருவது மோனையாகும்.

***அரசனுக்கு வணங்கியத்தலை***
***அம்பட்டனுக்கும் வணங்கும்***

இதில் 'அ'கரம் ஒன்றி வந்துள்ளமையைக் காணலாம்.

**எதுகை**

இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும்.

***தட்டினால் தட்டான்***
***தட்டாவிட்டால் கெட்டான்***

இதில் 'ட்' என்ற இரண்டாம் எழுத்து ஒன்றி வந்துள்ளது.

**இயைபு**

சீர்கள் இயைந்து வருவது இயைபு ஆகும்.

*'பிறந்தால் அதிகாரி வயிறு,*
*இல்லையென்றால் பரியாரி வயிறு*

இதில் 'வயிறு' என்ற சொல் இயைந்து வந்துள்ளது.

**உவமை**

ஒரு பொருளை இன்னொரு பொருளுடன் ஒப்பிடுவது உவமையாகும்.

***அம்பட்டன் பல்லக்கு ஏறினது போல***
***ஒருநாள் கூத்துக்கு தலை சிரைத்தலை போல***

இதில் 'போல' என்ற உவமஉருபு இடம்பெற்று ஒன்றுடன் ஒன்று உவமைப்படுத்துவதாக அமைந்துள்ளது.

**வினாநிலை எதிர்நிலைப் பழமொழி**

பழமொழிகள் வினாநிலையும், அதற்குரிய பதிலை எதிர்மறையாகவும் பெற்றுக் காணப்படுகின்றன.

***அம்பட்டன் வீட்டில் மயிருக்குப் பஞ்சமா?***

இதில் அம்பட்டனின் தொழில் மயிர் சிரைத்தல். எனவே அவர் வீட்டில் மயிருக்குப் பஞ்சமா? என்ற வினாநிலையும்; 'மயிருக்குப் பஞ்சம் இருக்காது' என்ற எதிர்மறைக் கருத்தும் காணப்படுகிறது.

**காரண சமநிலைப் பழமொழி**

இவ்வமைப்பில் காரணம் சமநிலைப் பெறுவதாக அமைகின்றது.

***யாருக்கும் தலை வணங்காதவன்***
***நாவிதனுக்கு தலைவணங்குவான்***

இதில் யாருக்கு முன்னாலும் தலை வணங்காதவன் மருத்துவரின் முன்னால் தலை வணங்குவான் என வருகிறது. இங்கு தலை வணங்குதலாகிய காரணம் சமநிலையில் உள்ளதைக் காணமுடிகின்றது.

### நேரெதிர் முரண்

இவ்வமைப்பில் ஒரு பகுதி மற்றப்பகுதிக்கு முரணாக அமைந்திருக்குமாறு வருவதாகும்.

***கல்லைக் கண்டால் நாயைக் காணோம்***
***நாயைக் கண்டால் கல்லைக் காணோம்***

இதில் கல்லைக் கண்டால் நாயையும், நாயைக் கண்டால் கல்லையும் காணவில்லை என்னும் கருத்து நேரெதிராக முரண் தன்மையில் அமைந்துள்ளது.

### சமநிலை

இவ்வமைப்பில் இரண்டுப் பொருள்களைச் சமநிலைப் பெறுமாறு விளக்கவுரைப்பது ஆகும்.

***உள்ளூர் மாப்பிள்ளையும் உழுகிற மாடும் சமம்***

இதில் 'சமம்' என்ற சொல் வெளிப்படையாகச் சமநிலையை வெளிப்படுத்துவது.

### எதிர்மறை

இவ்வமைப்பு நேர் சமநிலையை மறுப்பதாகும்.

***பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்தது***

இப்பழமொழியில் பிள்ளையார் பிடிக்கச் சென்று குரங்காய் முடிந்தது என்பது எதிர்மறைப் பொருளாய் அமைந்துள்ளது.

### விடுகதைகள்

நாட்டார் வழக்காறுகளில் விடுகதைகள் மக்கள் மனங்களை எளிதில் ஈர்க்கும் தன்மையுடையன. விடுகதை என்பது மரபு வடிவமான நேரடியான அல்லது மறைமுகமான முழுமையான அல்லது முழுமையற்ற ஒரு வினாவாகும் என்று லூர்து (1998:57) விளக்கமளிக்கிறார். விடுகதை என்ற சொல்லிலேயே அதற்கான பொருள் அடங்கிக் கிடப்பதைக் காணலாம். ஏதேனும் ஒரு புதிரைக் கொண்ட கூற்றே விடுகதையாகும். அது விடுவிக்கப்பட வேண்டிய முக்கியமான கதையாகும்.

விடுகதை என்ற சொல் விட்டக்கதை, விடுகின்ற கதை, விடும் கதை என்று வினைத்தொகையில் அமைந்த முக்காலப் பொருளையும் தருகிறது. விடுகதை என்பது திகைப்பும், மலைப்பும், ஏற்படுத்தக்கூடிய புதிர் நிறைந்த ஒரு வாய்மொழி இலக்கிய வடிவம் ஆகும். தொல்காப்பியர் இதனை பிசி (சொல்:158) என்று

குறிப்பிட்டுள்ளார். ஒருவர் இட்ட விடுகதையினை விடுவிக்கத் துடிக்கும்போது, அவனுக்குத் தடுமாற்றமும், குழப்பமும் ஏற்படுத்துகின்றது. அந்த மறைபொருளுடைய கூற்றினை ஆழ்ந்த சிந்தனை அறிவினால் விடுவிப்பதே விடுகதை எனவும் கூறலாம்.

### சூழல்

விடுகதைகள் பொதுவாக மாலை நேரங்களிலும் இரவு நேரங்களிலும் பொழுதுபோக்கிற்காகவும், பலர் ஒன்றாகக் கூடுகின்ற பொதுவிடங்களிலும், திருமணவீடு, சடங்குவீடு, பள்ளிக்கூடம், பணியிடங்கள் ஆகிய இடங்களில் போடுவதற்கான களமாக உள்ளது. இதில் சிறுவர், சிறுமியர், பெண்கள் அதிகமாக ஆர்வத்துடன் பங்குப் பெறுகின்றனர். இவை, பெரும்பாலும் மற்றவரை மகிழ்விக்கவும் அறிவுத்திறனைப் பரிசோதிக்கவும் போடுகின்றனர்.

விடுகதைகளைக் குழுவாக இருந்து போடுகின்றனர். ஒவ்வொரு குழுவையும் இரண்டாகப் பிரித்து ஒரு குழுவினர் விடுகதைகளைப் போட மற்ற குழுவினர் அதனை அழிப்பார்கள். மேலும் ஒருவர் விடுகதைப் போட மற்றவர்கள் அனைவரும் சேர்த்து அதனை அழிப்பதுண்டு. இந்தச் சமயத்தில் யாராவது ஒருவருடைய பெயரைக் கூறி ‘நீ பதில் சொல்’ எனக் கூறுவதுமுண்டு. இவ்வாறு ஆள் மாற்றியும் விடுகதைகளைப் போடுகின்றனர். இதனைப் பொழுதுபோக்கிற்காகவும் விளையாட்டாகவும் போடுகின்றனர். சில சமயங்களில் ஒருவருக்குப் பதில் தெரியவில்லை என்றால் அது சம்மந்தமான சில சான்றுகளைக் கூறுவதும் உண்டு.

## விடுகதையின் அமைப்பு

விடுகதைகள் அவற்றின் அமைப்பு நிலையில் பதினொன்று வகையாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. அவை, 1. வினா வடிவில் விடுகதை, 2. வினா இல்லாத விடுகதை, 3. மறுப்புக் கூறல் பாங்கு, 4. உரையாடல் பாங்கு, 5. கதையமைப்பு, 6. இரு பிரச்சனை ஒரு காரணம், 7. தற்கூற்றுப் பாங்கு, 8. விளக்கநிலைப் பாங்கு, 9. முரண்தன்மை, 10. ஒரு சொற்றொடரில் வரும் விடுகதை, 11. இரு பொருளில் வரும் விடுகதை என்பனவாகும்.

‘அறை நிறைய நாற்காலி’ - அது என்ன? விடை: பற்கள் ஒரு வினா ஒரு விடையில் அமைந்துள்ளது.

'அகந்தவாய் அசுரன்
ஆடிக்கொண்டே இருப்பான்
அவனுக்குள்ளே கறுப்பர் கோடி
அரைபட்டு சாறாய் வடிவான்
அவைகள் என்ன?' விடை: செக்கு, எள், புண்ணாக்கு

பல வினா பல விடையில் இதில் காணப்படுகிறது.

'அப்பன் செந்தலை
ஆத்தாள் முழு மொட்டை
முழுமொட்டை வயிற்றிலே கொழுக்கட்டை
கொழுக்கட்டை வயிற்றிலே கீச்சு கீச்சு'

விடை: கோழிக்குஞ்சு

இது பல வினா ஒரு விடை அமைப்பில் அமைந்துள்ளது.

'அடர்ந்த காட்டின் நடுவே ஒரு பாதை' விடை: தலை வகிடு

இவ்விடுகதை வினா இல்லாத அமைப்பை உடையது.

'அலை அலையாய் ஆடிவரும்
கடலும் அல்ல
நிலையாய் இருக்காது
நிலவுமல்ல' விடை: புகை

இது மறுப்புக் கூறல் பாங்கில் அமைந்துள்ளது.

'ஆசைப்பட்டது எப்பம்? - நீ
தெருவில போனியே அப்பம்
கையப் பிடிச்சது எப்பம்? - நாம
கண்டு மகிழ்ந்தோமே அப்பம்
வருத்தப்பட்டது எப்பம்?
பாதி நொளஞ்சுச்சே அப்பம்
பிரியப்பட்டது எப்பம்?
பூரா நொளஞ்சுச்சே அப்பம்.
காசு கொடுத்தது எப்பம்? - நாம
இருந்துட்டு எந்திரிச்சமே அப்பம்' - அது என்ன?

விடை: வளையல் போடுதல்

இவ்விடுகதை உரையாடல் அமைப்பிற்குச் சான்றாகும்.

'கறுத்தக் காளையும் வெள்ளைக் காளையும் தண்ணிக் குடிக்கப் போனது, வெள்ளைக் காளை வீட்டிற்கு வந்தது

கறுத்தக் காளைத் தண்ணியோடு போனது - அது என்ன?'

விடை: உளுந்து

கதையமைப்பினைக் கொண்டுள்ளது.

'தச்சன் குண்டி தேய்வது ஏன்?

தாசி முலை பருப்பதுவும் ஏன்?' விடை: பலகைப்பட்டு

இரு பிரச்சனை ஒரு காரணம் பற்றியதாக அமைகிறது.

'மஞ்சக்குளிச்சு மலர்ந்து நிக்கயில
மாட்டேன்னியே மாமா - நான்
புள்ள பெத்த மய்க்கா நாளு
புடுங்கவா வந்த மாமா' - அவள் யார்?

விடை: நிலக்கடலை

இது தற்கூற்று அமைப்பினைக் கொண்டுள்ளது.

விளக்குநிலைப் பாங்கு விடுகதைகளின் விடைகள் விளக்கிக் கூறும் நிலைகளில் அமையும். இத்தன்மையில் ஒரு விடுகதை மட்டுமே காணப்படுகின்றது.

நாலுகாலுடா அண்ணா
உனக்கு நாளைக்கே சாவு
அடலாவுல கண்ணா
உனக்கு யாருடா சொன்னா
குடலில்லா மன்னன்
கூப்பிட்டு சொன்னான்' - அது என்ன?

விடை: ஒரு ஆடு தண்ணீர் குடித்துக் கொண்டிருக்கும்போது அங்கு வந்த நண்டு ஒன்றை மிதிக்க; அப்போது நண்டு ஆட்டைப் பார்த்துக் கூறியது. நாலுகாலு அண்ணாச்சி உனக்கு நாளைக்கே சாவுன்னு. ஆடு திகைத்து விலாவில் கண்ணையுடைய நண்டைப் பார்த்து விலாவிலே கண்ணு உனக்கு யாருடா சொன்னா என்றது. அதற்கு நண்டு கொட்டு அடிக்கிறவன் கூப்பிட்டுச் சொன்னான் என்றது. குடலை எடுத்துவிட்டு வெறும் தோலை வைத்துக் கொட்டு தயார் செய்யப்படுவதால் கொட்டினைக் குடலில்லா மன்னன் என்று சுட்டப்பட்டது.

இரவில் சுமப்பான் பகலில் சுருள்வான் - அவன் யார்?

விடை: பாய்

கறுப்புக் காகம் ஓடிப்போச்சு
வெள்ளைக்காகம் நிக்குது - அது என்ன?

விடை: உளுந்து

இஃது முரண்தன்மையில் அமைந்த விடுகதையாகும். இவற்றில் இரவு, பகல், கறுப்பு, வெள்ளை என்றும் முரண்பாடுகள் அமைகின்றன.

விரல் இல்லாமலே ஒரு கை - அது என்ன? விடை: உலக்கை இது ஒரே ஒரு சொற்றொடரில் அமைந்துள்ள விடுகதையாகும்.

அறிவின் மறுபெயர்
இரவில் வருவது - அது என்ன? விடை: மதி

கல்லிலே காய்ப்பது
தண்ணீரில் மலர்வது - அது என்ன?
விடை: சுண்ணாம்புக்கல்

இஃது இரண்டு பொருட்களை அடியேற்றி வரும் தன்மையுடைய விடுகதைகளாகும்.

விடுகதைகளில் பெரும்பாலும் உவமைத்தன்மையுடையனவாக உள்ளன. உவமை என்பது ஒரு பொருளுக்கு மற்றொரு பொருளை ஒப்புமைப்படுத்திக் கூறுவதாகும். இதனைத் தொல்காப்பியர்,

***வினை பயன்மெய் உருஎன்ற நான்கே***
***வகைபெற எந்த உமைத்தோற்றம்*** (தொல்.பொருள், 395)

என்று கூறுகிறார். (உ.ம்)

வட்ட நிலாவை வெட்டிப்பார்த்தால்
வகை வகையாய்
பவளப் புதையல்கள் - அது என்ன?
விடை: மாதுளம் பழம்

இதில் மாதுளையை வட்ட நிலவுக்கும், அதன் உள்ளே உள்ள விதைகளைப் பவள புதையலுக்கும் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

உருவகம் என்பது உவமானத்துக்கும் உவமேயத்திற்கும் உள்ள வேறுபாட்டை நீக்கி கேட்டார்க்கு இரண்டும் ஒன்று என்பதோர் உணர்வுதோன்றக் கூறுவது ஆகும். இதனைத் தண்டியலங்காரம்,

***உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து***
***ஒன்றென மாட்டின, துருவக மாகும்*** (தண்டி, 36)

என்று விளக்கமளிக்கிறது. (உ.ம்)

ஐந்து வீட்டிற்கு ஒரு முற்றம் - அது என்ன?

**விடை:** கை

ஐந்து விரல்களை வீடாகவும் உள்ளங்கையை முற்றமாகவும் உருவகப்படுத்தி கூறுகின்றார்.

## நிலையற்ற மரபுத்தன்மை கொண்டவை

நாட்டுப்புறப் பாடல்களும், கதைகளும், சூழலுக்கு ஏற்பவும் கூறுபவர் மற்றும் கேட்போரின் மனநிலைக்கு ஏற்பவும் மாறுபடும் தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றன. இதனால் இவை நிலையற்ற மரபுத்தன்மை கொண்டவையாகக் கொள்ளப் படுகின்றன.

## பாடல்கள்

பாடல்கள் அவற்றின் தன்மைக்கு ஏற்ப ஐந்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை தாலாட்டுப்பாடல், குழந்தை வளர்ச்சிநிலைப் பாடல், விளையாட்டுப் பாடல், ஒப்பாரிப்பாடல், வாத்து மானம் (பூப்புப்பாடல்) என்பவையாகும்.




## தாலாட்டுப் பாடல்

குழந்தைகளை மகிழ்ச்சிப்படுத்தும் அல்லது தூங்கச்செய்யும் நோக்கில் தாலாட்டுப் பாடல்கள் பாடப்படுகின்றன. தால் என்ற சொல்லுக்கு நாக்கு என்று பொருள். நாவினை அசைத்துப் பாடுவதால் தாலாட்டு என்று பெயர் பெற்றது. தாயின் கற்பனை வளத்தின் வெளிப்பாடே தாலாட்டுப்பாடல் ஆகும். வாய்மொழியாக வழங்கி வரும் இப்பாடல் குழந்தையின் உடல், உள்ள வளர்ச்சிக்குப் பயன்படுவதாகவும் உள்ளது. குழந்தையின் அழுகை சிணுங்கலால் உணர்ச்சிகளின் நரம்புகளையே மீட்டி வருகிறது என்கிறார் தமிழண்ணல் (1966:12).

முதன்முதலாகத் தமிழ் இலக்கியத்தில் தாலாட்டுப் பாடிய பெருமை பெரியாழ்வாருக்குரியது. அவர் இறைவனைத் தாலாட்டுப்

பாடி தூங்க வைப்பதாகப் பாடியுள்ளார். அத்துடன், *"குழவி மருங்கினும் கிழவதாகும்" (தொல். புறம், 82)* என்று தொல்காப்பியத்திலும் தாலாட்டின் கூறுகள் இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. மருத்துவ இனமக்கள் தாலாட்டினைத் துயிலிடுதல் என்றும் ஓராட்டு, ராராட்டு, தாலாட்டு என்றும் பல்வேறு பெயர்களில் அழைக்கின்றனர். இப்பாடலைக் குழந்தையின் தாய், பாட்டி, அத்தை, சகோதரி, சித்தி முதலியோர் பாடுவார்கள். இளைய தலைமுறையினரிடம் தாலாட்டுப் பாடும் வழக்கம் மிகவும் குறைந்து காணப்படுகிறது. வயதானவர்களே அதிகமாக இப்பாடலைப் பாடுகின்றனர்.

## தாலாட்டின் தொடக்கம்

தாலாட்டுப்பாடலின் தொடக்கம் பெரும்பாலும் நாவினால் ஓசை உண்டாக்கக்கூடியனவாகிய,

***வாவாவோ வாவாவோ***
***கண்ணான கண்மணியே***
***வாவாவோ வாவாவோ*** என்றும்

***ஆராரோ ஆரிராரோ***
***கண்ணே கண்மணியே***
***ஆராரோ ஆரிராரோ*** என்றும்

***ராராரோ ராரிராரோ***
***ராராரோ ராரிராரோ***

என்பன போன்ற ஓசைகளுடன் தாலாட்டுத் தொடங்கப்படுகிறது. இப்பாடல் குழந்தையைத் தூங்க வைக்க நினைக்கும் போதோ, குழந்தை அழும்போதோ தொடங்குகிறது. இந்த ஓசையானது குழந்தையின் அழுகையினை நிறுத்தும் முகமாகக் காணப்படுகிறது. இப்பாடல் குழந்தை தூங்கும் வரை தொடரும். நான்கு அடிகள் பாடியதும் குழந்தை தூங்கிவிட்டால் உடனே தாலாட்டும் நிற்கும். இல்லை என்றால் தொடர்ந்து நீண்டுக் கொண்டே செல்லும். இவர்களிடமிருந்து திரட்டப்பட்ட பாடல்கள் பெரும்பாலும் குறுகிய அமைப்புடையனவாகவே காணப்படுகின்றன.

## குழந்தையைப் புகழ்தல்

'காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு' என்பதுபோல பல்ப் பாடல்களில் தாய்மார்கள் தன் குழந்தையினைக் கண்ணே, மணியே, மயிலே, மொட்டே, கரும்பே, முக்கனியே, மாணிக்கமே,

தேனே, மீனே, இளநீரே, அரும்பே, பூவே என்று பலவாறு புகழ்வதை,

*பொன்னே கரையாதே பொன்மணியே கண்ணுறங்கு*
*தேனே கரையாதே என் தெவிட்டாத தேன் குழலே*
*மானே மறுவாதே என் மாணிக்கமே கண்ணுறங்கு*
*இஞ்சி இலையாட என் எலுமிச்சமே கண்ணுறங்கு*
*என் உறக்கமுள்ள பாலகனே தோகை மயிலே கண்ணுறங்கு*

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

### தாய் மாமன் பெருமை

தமிழ்ச் சமூகத்தில் தாய்மாமனை மிகவும் முக்கியமானவராகக் கருதுகின்றனர். பெண்ணின் தலைப்பிரசவம் தாயார் வீட்டில்தான் நடைபெறும். குழந்தை பிறந்தவுடன் அதற்குத் தொட்டிலிடுகின்றனர். அதனையும் தாய்மாமனே செய்வார். குழந்தை பெண்ணாக இருந்தால் அதற்குத் தொட்டிலிடும் நாள் தொடங்கி, காதுகுத்து, மஞ்சள் நீர், திருமணம் வரை தாய்மாமன் சீர்தான் பெரிதாகப் பேசப்படும். எனவே ஒரு பெண்ணுக்கு அண்ணன், தம்பி உறவுகள் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இதனை மனதில் வைத்துக்கொண்டு தான் அப்பெண் குழந்தையை தாலாட்டும்போது தன்னுடைய அண்ணன், தம்பி காதுபட அவர்களைப் புகழ்ந்து பாடுகிறாள்.

தாய் தன் உடன் பிறந்தவர்கள் மூன்று பேருண்டு என்பதனையும் அவர்கள் குழந்தைக்கு மரத்தொட்டில் கொண்டு வருவார்கள் என்றும் வெள்ளையானையில் வந்து குழந்தையினைப் பள்ளியில் சேர்ப்பார்கள் என்பதை,

*மாமன் வருவாரோ மரத்தொட்டில் கொண்டு*
*தாலாட்ட கண்ணே கனியமுதே*
*மாமன்மார் மூவர் தம்பி வருவார்*
*வெள்ளை யானையும் கொண்டு*
*உன்னைப் பள்ளியில் சேர்த்திட வருவார்*
*கண்ணே கண்மணியே கண்ணுறங்காயோ*

என்னும் பாடலடிகளால் அறியலாம்.

குழந்தையினைத் தாலாட்டும்போது தாய்மாமன் பெருமைகளை புகழ்ந்துக் கூறுகின்றனர். அப்போது அவர்கள் செய்து வருகின்ற தொழில்களான மருத்துவம், சிகையலங்காரம், இசைத்தொழில் குறித்தும் புகழ்ந்து பாடுகின்றார்.

*நாட்டு மூத்தமவன் குடியரசுத்தலைவன் தானே*
*ஊருக்கு மூத்தமவன் உன் மூத்தமாமன் தானே*
*ஊர் முழுக்க உள்ள சனம் அவன நம்பி தர்னிக்க*
*பெவசு உள்ள மாமன் உனக்குன்னு இருக்காருன்னு*
*அருமைப்பிள்ளையே கொஞ்சம் தூங்கு*
*இளைய மாமன் இசையினிலே*
*இசையாத சாமிகளே இம்மண்ணிலில்லை*
*அது கேட்டு வராத சாமிக்கு வல்லயத்தில்*
*வந்திறங்கி ஊளையிட்டு ஆடுமே*

என்ற பாடலடிகளால் தெரியலாம்.

### தாய்மாமன் சீர்

தாயில்லாப் பொண்ணுக்குச் சீர் இல்லை என்பார்கள். அதுபோன்று தமையன் இல்லாத பெண்ணுக்குச் சீர்வரிசை மட்டுமில் பலமும் இல்லை. சமூகத்தில் தாய்மாமன்களுக்கு அதிக முக்கியத்துவமுண்டு. ஒரு பெண்ணின் உடன்பிறந்தோர் ஐந்து பேரில் ஒவ்வொருவரும் என்ன சீர்கள் தர வேண்டும் என்பதை,

*மூத்த மாமன் பிள்ளைக்குத் தங்கப்பொட்ட கொண்டருவார்*
*இரண்டாம் மாமன் பிள்ளைக்குச் செங்கை சிவந்திடவே*
*மிருக்கம் பூ போல இரண்டு*
*கைக்கும் தங்க வளையல் கொண்டருவார்*
*மூணாம் மாமன் பிள்ளைக்குத் முத்து மாலை*
*கொண்டருவார்*

எனவரும் பாடலடிகள் சுட்டுகின்றன.

### தந்தையின் பெருமை

தாய் குழந்தையினைத் தாலாட்டும்போது கணவனின் பெருமைகளாக அவரது வேலை, அவரது செல்வம் ஆகியவற்றைப் பாடுகின்றாள். இதில் தன் கணவன் மிகச் சாதாரணமான வேலைக்குச் சென்றாலும் அதனையும் பெரிய வேலையாகப் பெருமைப்படுத்திக் கொள்கிறாள். இவர்களின் தொழில் திறமைகளையும் இத்தாலாட்டுப் பாடல்களில் காணமுடிகின்றது.

*உன் தகப்பன் ஊரில் பெரிய பண்டிதன்டா*
*மருத்துவம் அவருக்குக் கை வந்த கலையடா - மகனே*
*அவர் கை நாடிக்கு எந்த நோயும் ஒளியாதுடா*

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. இங்கு கணவனைப் பண்டிதர் என்று அறிமுகப்படுத்துவதையும் உணரலாம்.

*நாட்டை ஆளும் மன்னருக்கே*
*வேலைச் செய்பவரு உன் அப்பா*
*பாலைத் தொட்டுச் சவரம் செய்த கையோடு*
*உன் பால் முகத்தைப் பார்க்க வராரு*

*ஊருக்கே வேலைச் செய்பவர் உன் அப்பா*
*என் மாணிக்க ரெத்தினமே என் மகளே*
*அவருடைய கைப்படாத தலையே*
*ஊரில் இல்லை என் செல்ல மகனே*

என்ற பாடலடிகள் மூலம் நாட்டையாளும் மன்னரை தொட்டு சவரம் செய்வதை பெருமையாகக் கருதியுள்ளமை புலனாகிறது.

## தாய்வீட்டுப் பெருமை

தாயானவள் பிறந்த வீட்டின் பெருமைகளை எங்கும் விட்டுக் கொடுப்பது இல்லை. தன் தாயின் பெருமைகளாக, பேறுகாலம் பார்ப்பதைக் கூறுகின்றாள். தாயினைக் கைராசிக்காரி, குறித்த நேரம் தப்பாமல் குழந்தை பிறக்கும், ஊரில் அவள் கையில் பிறக்காத, இளம் தலைமுறையினர் எவரும் இல்லை என்பதை,

*உம் பாட்டி நட்சத்திரம் நான் குறிச்சா தப்பாது*
*பேறுப்பார்க்கும் மருத்துவச்சி - அவ தெருவினிலே நடக்கையிலே*
*கைராசிகாரியின்னு ஊரேல்லாம் மெச்சுடா*
*ஊராரு பெத்தமெல்லாம் - பழுதின்றி உசுராயெடுத்தவடா*
*பேறுகாலம் வந்திச்சின்னா பேணி பார்ப்பவடா*
*பேறுபார்த்த பின்னாடி பேத்து மசால் அரைச்சவடா*
*ஊருமெச்சும் உன்பாட்டி ஒனக்குன்னு இருக்கையில*
*பதறாமல் நீயுந்தான் கண்ணுறங்கு*

என்ற பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது.

### தெய்வத்தைப் புகழ்தல்

திருமணத்திற்கு பின்பு பெண் குழந்தைப்பேற்றிற்கு ஏங்கி தவிக்கின்றாள். குழந்தைப் பேறு இல்லாதவர்களை மலடி என்று பெயரிட்டு அழைப்பது சமூகத்தில் காணப்படுகிறது. எனவே குழந்தைப் பேறு தந்த தெய்வத்தைப் புகழும் நிலையில் திருச்செந்தூர் முருகன், மண்டைக்காடு பகவதியம்மன், சுசீந்திரம் தாணுமாலையன் முதலிய தெய்வத்தைப் புகழ்ந்துரைப்பதை,

*மண்டைக்காடு போகையிலே*
*அம்மா பகவதியம்மை கண் திறந்து*
*பிள்ளை வரம் தந்ததே*
*தவமிருந்து பெத்த என் செல்லமே*
*சுசீந்திரம் கோவிலுக்குப் போகையிலே*
*தாணுமாலையர் தந்த செல்வமே - உனக்குக்*
*காணிக்கை நேர்ந்தோம் கைநிறையப் பொருளேந்தி*
*காணிக்கைக் கொண்டுப் போகையிலே*

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

**குழந்தையின் அழகு**

தாய் குழந்தையின் உடலின் ஒவ்வொரு அசைவையும் அதன் அழகினையும், குழந்தைக்குச் சங்கு உரைத்துப் பொட்டு இட்டதையும், பொன் உரைத்துப் பொட்டு இட்டதையும், உறங்காத குழந்தைக்கு ஓலை மற்றும் துரும்பு கொண்டு மை எழுதி அழகு செய்ததையும்,

*பொன்னுரைச்சுப் பொட்டிட்டு அய்யா*
*உன் பவளத் தொட்டிலிலே*
*சங்குரச்சுப் பொட்டு இட்டு உனக்கு*
*சந்திரன்னு பெயருமிட்டு*
*என் பொன்னே பொன்மணியே நீ உறங்கு*
*உறங்காத கண்ணுக்கு ஓலைக்கொண்டு மை எழுதி*
*தூங்காத கண்ணுக்குத் துரும்பு கொண்டு மை எழுதி*
*பொட்டிட்டுப் பூ வைத்து என் கண்ணுக்குப் பூச்சரங்கள் கொண்டு வந்து*
*வண்ண வளையலிட்டு என் கண்ணனுக்கு*
*வைரக்கல் மோதிரம் இட்டு*
*பட்டு உடை அணிந்து என் கண்ணே*

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

**பெயரிடுதல்**

தாலாட்டுப் பாடலில் அன்றாடம் வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் சடங்குகள் வெளிப்படுகின்றன. வீட்டில் வைத்து நடைபெறும் சடங்கில் பெயரிடுதல் முக்கியமானதாகும். தாலாட்டுப் பாடலில் குழந்தைக்குச் சந்திரன் எனப் பெயரிடுதலை,

***சங்குரைச்சு பொட்டு இட்டு உனக்கு சந்திரன்னு பெயருமிட்டு***

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

## குழந்தைப் பேற்றிற்காகத் தாய் ஏங்கிய தன்மை

திருமணமான பின்பு பெண் குழந்தைப் பேற்றிற்காக ஏங்கி இரண்டு நிலைகளை மேற்கொள்கிறார். அவை 1. நோன்பு இருத்தல், 2. இறைவனுக்குக் காணிக்கை செலுத்துதல் என்பனவாகும். நோன்பு இருந்து குழந்தை பெற்றதை,

***சோறு தண்ணி குடியாம முப்பது நாள் உண்ணாம***
***எவருக்கும் தெரியாம நெஞ்சம் துவளாம***
***பெற்றெடுத்த தங்கமே!***

என்னும் பாடலடிகளால் உணரலாம். குழந்தைப்பேறு வேண்டி முருகன் கோவிலுக்குக் காணிக்கை நேர்ந்ததன் பயனாகத் தனக்குக் குழந்தை பிறந்ததை,

***காணிக்கை நேர்ந்தோம் கை நிறையப் பொருளேந்தி***
***காணிக்கைக் கொண்டுக் கோயில் போகையிலே***

என்னும் பாடலடிகளால் அறியமுடிகிறது.

## தண்டனை வழங்கல்

குழந்தையின் அழுகைக்குக் காரணமானவர்கள் யார் என்று வினவி, அவர்களுக்குத் தண்டனை வழங்குவதாகத் தாய் பாடுகின்றாள். அவர்களுக்குரிய தண்டனையாகக் 'கைக்கு கை விலங்கும், காலுக்குக் கால் விலங்கும் போடுவோம்' என்பதை,

***அடிச்சாரைச் சொல்லி அழ கண்ணே***
***கைவிலங்கு போட்டு வைப்போம்.***
***தொட்டாரைச் சொல்லி அழுகண்ணே***
***கால் விலங்கு போட்டு வைப்போம்***

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

## உறவு முறைகள்

குழந்தையின் அழுகையை நிறுத்துவதற்காகவே தாலாட்டுப் பாடுகின்றனர். குழந்தையின் அழுகைக்குரிய காரணத்தை வினவும் நிலையில் குழந்தையின் உறவினர்களான தாத்தா, பாட்டி, மாமா, மாமி, அம்மா சித்தி முதலிய உறவு முறைக்காரர்கள் அடித்தார்களா? என்று கேட்பதை,

*தாத்தாஅடித்தாரோ தங்க கம்பாலே*
*பாட்டி அடித்தாரோ பால்வார்க்கும் கையாலே*
*மாமா அடித்தாரோ மல்லிகைப் பூ செண்டாலே*
*மாமி அடித்தாரோ மாதுளம் கம்பாலே*
*சித்தி அடித்தாரோ செவந்திப் பூ கையாலே*

என்னும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

## குழந்தை வளர்ச்சி நிலைப்பாடல்

குழந்தை வளர்ச்சி நிலையின் ஒவ்வொரு காலக்கட்டத்திற்கு ஏற்ப பாடல்களும் மாறுபடுகின்றன. குழந்தை அழுகின்ற போது தாலாட்டுப் பாடுவது போன்று தவழும் போதும், உணவு ஊட்டும் போதும், சாய்ந்தாடும் போதும், கைவீசும் போதும், கைதட்டும் போதும் பெற்றோரும் உறவினர்களும் மகிழ்ந்துப் பாடி அச்செயல்களைக் குழந்தையைச் செய்யுமாறுத் தூண்டுவர். சிரிப்பூட்டும் போதும், நாப்பயிற்சி அளிக்கும் போது பாடுவதும்; பாடவைப்பதும் உண்டு. மருத்துவ இனமக்களும் தங்கள் குழந்தைகளை வளர்க்கும் போது அழுகையினை நிறுத்துவதற்கும், சோறூட்டுவதற்கும் பல பாடல்களைப் பாடுவதைக் காணமுடிகிறது.

அழுது கொண்டிருக்கும் குழந்தைகளைச் சிரிப்பூட்ட பாடல்களைப் பாடிக் குழந்தையினைக் 'கிச்சிலம்' மூட்டுவார்கள். அதாவது கைகளின் அக்குள் பகுதியிலோ, கழுத்துப் பகுதியிலோ கைவைத்து வருடுவர். இவ்வாறு குழந்தைக்குக் கூச்சம் ஏற்படுத்தும் போது குழந்தை சிரிக்கிறது. இதனைக் கிச்சி கிச்சி மூட்டுவது என்றும் கூறுவர். அப்போது,

*தங்க வள தரிசு வள*
*தட்டான கொத்தின கொத்துவள*
*தாக்கள் வள மூக்கு வள குரல்வள*

என்று அழுதுக் கொண்டிருக்கும் குழந்தையின் கை, கை அக்குள், மூக்கு, கழுத்து இவற்றில் வருடிச் சிரிக்க வைக்கின்றனர். தாய்க் குழந்தைக்குச் சோறூட்டும் போது எதையாவது காட்டிச் சோறூட்டுவது மரபு. அதாவது நிலவு, மரம், குருவி, ஆடு என்று தன் பக்கத்தில் இருப்பனவற்றைக் காட்டிச் சோறூட்டுவதுண்டு. அப்போது குழந்தை அவற்றைப் பார்த்துக் கொண்டே சாப்பிடும். இதனை,

*குருவி ஒன்று வந்தது குழந்தை அருகில் நின்றது*
*பாவம் அதற்குப் பசித்தது பாப்பா நெல்லைக் கொடுத்தது*
*குருவி அந்த நெல்லினைக் கொத்திக் கொத்தித் தின்றது*
*பசியும் நீங்கிப் பறந்தது பாப்பா இன்பம் கொண்டது*

பாடலாகப் பாடிக் குருவியைக் காட்டிக் குழந்தைக்குச் சோறூட்டுவார்கள். இப்படி, சோறூட்டுவதால் குழந்தை தன்னையறியாமல் அதிக உணவு உண்ணும் என்பதற்காக இதனைச் செய்கின்றனர். குழந்தை திருத்தமாகப் பேசுவதற்கு நாவுக்குப் பயிற்சி அளிக்கின்றனர்.

*யாரு தச்ச சட்ட எங்க தாத்தா தச்ச சட்ட*
*கருவாடு வாருக வாருக கருவாடு*
*உரலுக்க இடையில ஒலக்க உருளுது*
*அம்மிக்க இடையில குழவி உருளுது*
*கடல் அலையிலே ஒரு உரலிட உருளுது பெரளுது*
*தத்தளிக்குது தாளம் போடுது*

இந்தப் பாடல்களைக் குழந்தையின் பெற்றோர், உறவினர்கள், பெரியவர்கள் கூறுமாறு சொல்ல; குழந்தை நாக்குத் தடுமாறி உளற சிரிக்கிறது. மீண்டும் முயற்சி செய்யுமாறு கூறுவர். அப்போது குழந்தையின் நாக்கு நன்கு திருந்தி வரும் என்பதற்காகவே இந்த நாப்பயிற்சி பாடல்களைக் குழந்தைகளுக்குக் கூறுவார்கள். சிறுவர் சிறுமியர்களுக்கு நாப்பயிற்சி கொடுக்கும் போது வேறு சில பெயருண்மைகளில் பாடல்களாக மாறுபட்டுவரும். இப்பாடல்கள் குழந்தைகள் திருந்திய உச்சரிப்பைப் பெறுவதற்கும் 'ல'கர, 'ள'கர, 'ழ'கர என்னும் எழுத்துகளின் வேறுபாடுகளை உணர்ந்து கொள்ளவும் பயன்படுகின்றன.

## விளையாட்டுப் பாடல்கள்

மனிதனின் அன்றாட வாழ்வில் சிறுபிள்ளைகள் செய்யும் ஒவ்வொரு அசைவினைக் கூட விளையாட்டு என்கின்றனர். பிள்ளைப் பருவம் முதல் முதுமைப் பருவம் வரை வயதிற்கு ஏற்ப விளையாட்டுகளும் விளையாட்டுக் களமும் மாற்றம் பெறுகின்றன. ஓய்வு வேளையில் மன மகிழ்ச்சிக்காகச் செய்யக் கூடிய எளிய அல்லது வேடிக்கையானச் செயல்களே விளையாட்டெனலாம் என்று பாலசுப்பிரமணியம் (1980:14) வரையறுத்துள்ளார். சக்திவேல் (1996:246), விளையாட்டு என்பது வெளிதூண்டல்களின்றி மகிழ்ச்சியூட்டும் செயல்களில் இயற்கையாக ஈடுபடுவதாகும் என்று விளக்கம் அளிக்கிறார். இவ்வாறு ஒவ்வொரு விளையாட்டும்

விளையாடும் போது பாடல்களைப் பாடிக் கொண்டே விளையாடுவார்கள். இவ்வினக் குழந்தைகள் வேற்றினக் குழந்தைகளுடன் சேர்ந்தும் தனியாகவும் பாடி விளையாடுகின்றனர்

ஆய்வின் அடிப்படையில் ஒவ்வொரு அறிஞரும் விளையாட்டினை வயது, தன்மை அடிப்படையில் பல்வேறு விதமாக வகைப்படுத்தியுள்ளனர். கள ஆய்வின் போது சிறுவர், சிறுமியர் விளையாடும் விளையாட்டுகளே அதிகமாகக் கிடைக்கப்பெற்றன.

### கை விளையாட்டுப்பாடல்

இவ்விளையாட்டில் கைகளை மட்டுமே பயன்படுத்திக் குழந்தைகள் விளையாடுகின்றனர். வட்டமாகச் சிறுவர்கள் அமர்ந்துத் தங்கள் கைகளைத் தரையில் கமத்தி வைப்பார்கள். அவ்விளையாட்டின் தலைவன்,

*ஓரம்மா கடைக்குப் போனா*
*ஒரு டஜன் மிட்டாய் வாங்கினா*
*அதன் நிறம் என்ன? - ப, ச், சை*

என்ற பாடலை ஒவ்வொரு விரல்களுக்கும் ஒரு வார்த்தை வரும்படியாகப் பாடுவார்கள். இதில் நிறத்தின் கடைசி எழுத்து எந்த விரலில் வருகிறதோ அந்த விரலை மடக்கவேண்டும். இவ்வாறு விளையாடும் போது யாருடைய விரல்கள் அனைத்தும் முதலில் மடங்குகிறதோ அவர் வெற்றியடைகிறார். இதைப் போன்று விரல்களைக் குவித்துக் கமத்தி வைத்து,

*குப்பவாரி குப்பவாரி*
*மொழுகி மொழுகி*
*கோலம் போட்டுக் கோலம் போட்டு*
*தீ மூட்டி தீ மூட்டி*
*தோசக் கல் வச்சி*
*எண்ணைத் தடவி எண்ணைத் தடவி*
*மாவூத்தி மாவூத்தி*
*மறித்து வைத்து மறித்து வைத்து*
*தோச வெந்தாச்சா*
*வேகலை*
*வெந்தாச்சா*
*வெந்தாச்சி*

என்று பாடி விட்டு ஒருவர் எழுந்து நான் குளித்து விட்டு வருகிறேன் என்று கூறிவிட்டுச் சிறிது நேரம் கழித்து வந்து,

*தோச எங்க?*
*காக்கா கொண்டுப் போச்சி*
*காக்கா எங்க?*
*மரத்தில*

*மரம் எங்க?*
*வெட்டி முறிச்சாச்சி*
*வெட்டி முறிச்ச விறகு எங்க?*
*எரிச்சாச்சி*

இவ்விளையாட்டின் மூலம் வீட்டில் தோசை செய்யும் விதம், வீட்டில் வேலை செய்தால் அம்மாவின் அன்பு கிடைக்கும் என்ற தகவலை எடுத்துரைப்பதாக அமைகிறது.

## கபடி விளையாட்டுப் பாடல்

'கபடி என்ற சொல் தமிழ்ச் சொல் அல்ல. மாறாக இந்தி மொழியில் கபடி என்றால் மூச்சுவிடாமல் என்றுப் பொருள். பாண்டிய நாட்டிலும், வடநாட்டிலும் கபடி என்று அழைத்தாலும், சோழ நாட்டிலும், கொங்கு நாட்டிலும் சடுகுடு என்றப் பெயரில் தான் அழைக்கப்படுகின்றது. குமரி மாவட்டத்தில் கி.பி. 1970 வரை சடுகுடு விளையாட்டு என்றே இதனைக் குறிப்பிட்டு வந்தனர் என்று குமரி ஆதவன் (2007:37) குறிப்பிடுகிறார். இந்த விளையாட்டினைச் சிறுவர்களும், பெரியவர்களும் விளையாடுகின்றனர். சம எண்ணிக்கையில் ஏழுபேர் இரு குழுவாகப் பிரிந்து விளையாடுகின்றனர். இதில் மூச்சடக்கிக் கபடி கபடி என்று பாடிச் செல்வர். அப்போது,

*கபடி விளையாடவே, காலு கை முறியவே*
*மட்ட வைத்து கெட்டவே, புட்டவித்து தட்டவே தட்டவே*

என்றும்,

*குடுகுடு சல்லி, கூண்டுச் சல்லி*
*கூண்டு மரைக்கால், மாராயம் மாராயம் மாறலாம்*

என்றும்,

*சடுகுடு சல்லி, குப்பன் சல்லி*
*இராகுத்தன் சல்லி, வேத்து வடியும் சாராயம்*
*காத்து இருந்து பூசைப் பண்ணும்*
*காவடி பண்டாரம்*

என்று ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விதமாகப் பாடல்களைப் பாடி விளையாடுவதைக் காணமுடிகிறது.

## பட்டம் விடுதல்

சிறுவர்கள் பள்ளி விடுமுறைக் காலத்தில் விளையாடும் விளையாட்டில் பட்டம் விடுதல் ஒன்றாகும். இந்த விளையாட்டு

ஏப்ரல், மே மாதங்களில் மட்டும் விளையாடப்படுவதைக் காணலாம். பட்டங்களுக்கு நீளமாக வால் வைத்து பறக்க விடுவார்கள். கையில் இருக்கும் நூலின் அளவின் அடிப்படையில் தான் பட்டம் வானில் உயரே பறக்கும். இவ்வாறு பட்டத்தைப் பறக்க விடும் போது,

***பட்டம் அதோ பறக்குதே, பாம்பு போலப் பாயுதே***
***வட்ட வானை நோக்குதே, வானில் நீந்திச் செல்லுதே***
***நூலால் கட்டி இருக்குதே, வளைந்துக் காற்றில் ஏறுதே***
***பறந்துப் பறந்து உயருதே, பந்து நூலைத் தீர்க்குதே***
***சிறுதாய் கண்ணில் காணுதே, சிந்தை எல்லாம் ஈர்க்குமே!***

என்று பட்டத்தினைப் பற்றிப் பாடிக்கொண்டே பறக்க விடுகின்றனர்.

**ஊஞ்சல் பாடல்**

குமரி மாவட்டம் கேரளாவில் இருந்து பிரிந்து தமிழ்நாட்டோடு சேர்ந்து இருந்தாலும் மலையாள மக்களின் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம் இவைகள் இன்றும் குமரி மாவட்டத்தில் காணப்படுகின்றன. ஓணப் பண்டிகையினை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுபவர்கள் மலையாள (கேரள) மக்கள். அவற்றின் தாக்கத்தால் இன்றும் குமரி மாவட்டத்தில் கேரளா தமிழ்நாடு எல்லைப்பகுதியில் உள்ள மக்கள் ஓணப் பண்டிகையினைக் கொண்டாடுவதைக் காணமுடிகிறது. இப்பண்டிகைக் காலத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க விளையாட்டு ஊஞ்சல் விளையாட்டு ஆகும். ஊஞ்சலை ஒவ்வொரு வீட்டின் முன்னும் கட்டி அதில் அமர்ந்து பாட்டுப் பாடி ஆடுவார்கள். பெண்கள் அதிகமாக ஊஞ்சல் பாட்டுப் பாடுகின்றனர். அவ்வாறு பாடும் போது அவர்கள் புதிதாக எடுத்த புடவையினைப் பற்றியும், அணிகலன்கள் பற்றியும், ஊஞ்சல் போட்டுத் தந்த அண்ணனைப் பற்றியும், ஓணத்தின் போது வீட்டின் முற்றத்தில் கோலம் இடுவதைப் பற்றியும் சிறப்பாக எடுத்துக் கூறுவதைக் காணமுடிகிறது. ஊஞ்சல் பாடல்களைப் பெரும்பாலும் மலையாளம் கலந்தேப் பாடுகின்றனர்.

***ஊஞ்சலில் ஆடணும் பாடிடணும்***
***மஞ்ச புடவை உடுத்திட வேணும்***
***எங்கும் மலையாள தேசத்தில் போகும்***
***பொன்னானி மூக்குத்தி பூவிரிச்சு***

*போவிடாம் நேரத்தே காலத்தேப் போ*
*ஓணப் புடவை உடுத்திக் கொண்டு*
*வந்றெந்தும் குஞ்நுங்கள் ஆய பூக்கள்*
*மாவேலி நாடுகள் வாண்டும் காலம்*

ஊஞ்சல் பாடலானது விளக்குத்தலை நாயர்கள் அதிகமாகப் பாடுகின்றமை காணமுடிகிறது.

## கேலிப் பாடல்கள்

விளையாடும் போது சிறுவர் சிறுமியர் ஒருவரை மற்றொருவர் கேலிச் செய்யும் விதமாகப் பாடல்களைப் பாடி விளையாடுகின்றனர். இந்தப் பாடல்களைச் சூழலுக்கு ஏற்ப பாடுவதும் உண்டு. பெரியவர்களும் இத்தகைய கேலிப் பாடல்களைப் பாடுவதுண்டு. இப்பாடல்களை, மற்றவர்களைச் சிரிப்பூட்டவும் பாடுவார்கள். உடல் பருமனாக இருப்பவர்களைக் கேலிச் செய்யும் போது,

*தொந்தி மாமா வந்தாராம், தொப்பிய கீழ வச்சாராம்*
*சாக்குப் பைய எடுத்தாராம், சந்தக் கடைக்குச் சென்றாராம்*
*சறுக்கி கீழே விழுந்தாராம், பரக்க பரக்க பார்த்தாராம்*
*பார்த்தவரெல்லாம் சிரித்தாராம்*
*சிரித்தவர்க்கெல்லாம் சீனிமிட்டாய் கொடுத்தாராம்*

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம்.

## வினா - விடைப்பாடல்கள்

இப்பாடல்களை இரண்டு பேர் பாடுவார்கள். ஒருவர் கேள்வி கேட்க மற்றவர் விடை கூறுவார். பின் விடையினைக் கேள்வியாகக் கேட்பார். இப்படி மாறி மாறி வரும். இந்தப் பாடல்கள் அறிவுத் திறன் மற்றும் கேள்வி கேட்கும் திறன்களை வளர்த்துக் கொள்ள மிகவும் உதவுகின்றன.

*ராஜா ராஜா பேசுவியா?*
*பேசுவதற்குப் பல்லியா?*
*பல்லியானா பதுங்காதா?*
*பதுங்குவதற்கு வெள்ளமா*
*வெள்ளமானா உடைக்காதா?*
*உடைப்பதற்குத் தேங்காயா?*
*தேங்காயானா தூங்கர்தா?*
*தூங்குவதற்கு ஔவாலா,*

*ஔவாலானா கௌவாதா?*
*கௌவுவதற்கு நாயா*
*நாயானா கொலைக்காதா?*
*கொலைப்பதற்கு வாழையா*
*வாழையானா வழுவாதா?*
*வழுவுவதற்குப் பாம்பா?*
*பாம்பானா கொத்தாதா*
*கொத்துவதற்குக் கோழியா?*
*கோழியானா கூவாதா*
*கூவதற்குக் கோவிலா?*
*கோவிலானா கும்பிட்டுக்கோ*

என்னும் பாடல் மூலம் அறியலாம்.

**எண்ணுப் பாடல்**

இவ்விளையாட்டின் போது முதலில் இரண்டு பேர் கைக் கோர்த்து உயர்த்திப் பிடித்து நிற்பார்கள். மற்றச் சிறுவர்களும் சிறுமியர்களும் ரயில் வண்டி போல முன் நிற்பவர்களைப் பிடித்துக் கொண்டு கைக் கோர்த்து நிற்பவர்களின் இடையிடையே நுழைந்து பத்துச் சுற்றுகள் சுற்றுவார்கள். ஒவ்வொரு சுற்றும் சுற்றும்போது,

*ஒரு குடம் தண்ணியெடுத்து ஒரு பூ பூத்தது*
*இரண்டு குடம் தண்ணியெடுத்து இரண்டு பூ பூத்தது*
..................................................................................
*ஒன்பது குடம் தண்ணியெடுத்து ஒன்பது பூ பூத்தது*
*பத்து குடம் தண்ணியெடுத்து பத்து பூ பூத்தது*

என்னும் எண் அடிப்படையிலான பாடல்களைப் பாடுகின்றனர். பத்தாவது சுற்றில் பத்துக்குடம் தண்ணியெடுத்துப் பத்து பூப் பூத்தது என்றுக் கூறியதும் கைக்கோர்த்து நிற்பவர்கள் ஒரு சிறுமியை அல்லது சிறுவனைச் சிறைப்படுத்திக் கொள்ள; சிறையிலிருந்து விடுவதற்கு ஒவ்வொன்றாய் பணயம் கேட்கிறார்கள். கடைசியில் இராஜா மகளைக் கட்டித் தருவதாகச் சொன்னதும் விட்டுவிடுவார்கள். இதனை,

*இம்புட்டு பணம் தாறோம் விடுடா துலுக்கா*
*விட மாட்டேன் மலுக்கா*
*இம்புட்டு நகை தாறோம் விடுடா துலுக்கா*
*விட மாட்டேன் மலுக்கா*
*ராஜா மகளைக் கட்டித் தாறோம் விடுடா துலுக்கா*
*விட்டு விடுகிறோம் மலுக்கா*

என்ற பாடலடிகளால் அறியலாம்.

**ஒப்பாரிப் பாடல்**

இறப்பு என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் நிர்ணயிக்கப்பட்ட ஒன்றாகும். எனினும் இறப்பினை ஏற்றுக் கொள்ள மனித மனம் மறுக்கிறது. இந்த உணர்வுகளே ஒப்பாரியாக வெளிப்படுகிறது. ஒப்பாரியானது இறந்தவரின் ஆவி சாந்தி அடையப் பாடப்படுகிறது. ஒப்பாரி என்பதற்குச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதி, ஒப்ப + ஆரி எனப்பிரித்து ஒப்புச் சொல்லி அழுதல் எனப் பொருள் தருகிறது. இறந்தவரை எண்ணி இருப்பவர்கள் ஒப்பிட்டு அழுவது ஒப்பாரியாகும். இதனை, இறந்தவர்களின் இழப்பை எண்ணி இறந்தவர்களையும், தம்மையும் ஒப்பிட்டுப் பாடுவது ஒப்பாரியாகும் என்று சக்திவேல் (1992:59) விளக்கம் அளிக்கிறார். இது குறித்து சுப்பிரமணியன் (1976:47), வாழ்வின் முன்னுரை தாலாட்டானால் முடிவுரை ஒப்பாரியாகும். தாலாட்டுக் கலங்கரை விளக்கமாயின் ஒப்பாரி நினைவுச் சின்னமாகும் என்று குறிப்பிடுகிறார். இங்ஙனம், இறந்தவரின் புகழ், நன்மை, தீமைகள் மற்றும் அவரால் ஏற்பட்ட இழப்புகளை எண்ணிப் பாடுவது ஒப்பாரி எனலாம். தமிழில் ஒப்பாரியைப் பிலாக்கணம், கையறு நிலை, இரங்கற்பா, அளவுப் பாட்டு, இழவுப்பாட்டு, அழுகைப் பாட்டு என்று பலவகையாகச் சொல்வர் என்று சண்முகசுந்தரம் (1997:43,44) குறிப்பிடுகிறார். தொல்காப்பியர்,

***இளிவே இழவே அசைவே வறுமையென***
***விளிவில் கொள்கை அழுகை நான்கே***

என்று கூறுகிறார். இழிவு என்பதைத் தந்தை தாய் முதலான சுற்றத்தாரையும், இன்பம் பயக்கும் நுகர்ச்சி முதலியவற்றையும் இழத்தல் என்றுரைக்கிறார்.

தற்போது ஒப்பாரிப் பாடல் ஒப்புக்காக அதாவது தங்களைப் பார்ப்பவர்களுக்காக மட்டுமே பாடுவது வழக்கமாக உள்ளது. மருத்துவ இன மக்கள் இரண்டு விதமாக ஒப்பாரிப் பாடுகின்றனர். 1. தங்களுக்காகப் பாடுவது 2. மற்றவர்க்காகப் பாடுவது. இதில் மற்றவர்களுக்குப் பாடுவதை மாரடிப்பாட்டு, அம்மாடி தாயரப்பாட்டு என்று கூறுகின்றனர். ஒப்பாரியை இவர்கள் இழவுப் பாட்டு, சாவுப் பாட்டு, ஒப்பாரி என்று பலவாறு அழைக்கின்றனர். களஆய்வின்போது சேகரிக்கப்பட்ட பாடல்களை பொருளடிப் படையில் பகுப்பாய்வுச் செய்து அவற்றின் பொதுக் கூறுகளும், தனிக்கூறுகளும் இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளன. பொதுக் கூறாக, 1. ஆண் இறப்புக்குப் பாடும் ஒப்பாரி. 2. பெண் இறப்புக்குப் பாடும் ஒப்பாரி எனப் பாகுபடுத்தப்பட்டுள்ளது.

## ஆண் இறப்புக்குப் பாடும் ஒப்பாரி

ஆண்கள் இறந்தால் பாடுகின்ற ஒப்பாரிப்பாடல்களின் தனிக் கூறுகளாக, 1. அண்ணன் இறப்புக்கு வருந்தித் தங்கை பாடுவது. 2. மகன் இறப்புக்கு வருந்தித் தாய் பாடுவது. 3. கணவன் இறப்புக்கு வருந்தி மனைவி பாடுவது. 4. தந்தையின் இறப்புக்கு மகள் பாடுவது. 5. மாமியின் கொடுமை. 6. கணவனை இழந்த பெண் தாலி கழற்றும் போது பாடும் பாடல் முதலிய தன்மையில் வகைப்படுத்தித் தரப்பட்டுள்ளன.

*நான் தெருவிலே விழுந்தப் பணம்*
*என்னைத் தேடுவார் அந்தப் பணம்*
*நான் காட்டிலே விழுந்தப் பணம்*
*நான் கள்ளனுக்கு அந்தப் பணம்*
*நான் மாரோடு சாய்ந்த மக்கா*
*நான் மண்ணோடு சாய்ந்தம்மா*
*நான் நெஞ்சோடு அணைஞ்ச மக்கா*
*நான் நிலையில்லா நிற்கிறேனே*
*ஒத்த விலங்கிட்ட நான் ஒடி பிழைப்பேன்னு*
*என்ன இரட்டை விலங்குப் போட்டுக்*
*காவலுக்கு இராசப்பாளையன் வைச்ச*
*நான் பெத்த மகனே கொள்ளிக்கு உன்னப் பெத்த*
*நான் கொள்ளியில்லாமல் ஆவிட்டேனே*
*ஊரார் பிள்ளைகளை நான் முதலில் தொட்டு*
*ஊராருக்கு மருத்துவம் செய்து காப்பாற்றினேனே*
*நான் பெத்த மகனே உன்னை நான்*
*காப்பாற்ற முடியாத மகா பாவியாயிட்டேனே*
*என் மகனே என் மகனே*

என்ற பாடலடிகள் மகன் இறப்புக்கு வருந்தி தாய் பாடுவதாக அமைந்துள்ளது. இதன் மூலம் இவ்வினப் பெண்கள் பேறு காலம் பார்த்து, ஊரில் உள்ள எல்லோருக்கும் மருத்துவம் செய்துள்ள செய்தியினையும் அறியமுடிகிறது.

*செரட்டையைக் கையில் தந்து*
*தெருவிலே தள்ளி விட்டாள்*
*பெட்டியைக் கையில் தந்து*
*புறத்தே தள்ளிவிட்டாள்*
*தண்ணி எடுக்கா விட்டால் என்*
*பிள்ளைகளைத் தாகத்தைத் தீர்க்க விடமாட்டாள்*
*நீ பெத்தப் பிள்ளையையும் என் கூட*
*நாங்க என்ன கஷ்டம் அடைகிறோம்*

என்னும் பாடலடிகள் கணவன் இறந்த பிறகு பெண்ணுக்குப் புகுந்த வீட்டில் மதிப்பில்லை. ஊரில் நடக்கும் இன்ப துன்ப நிகழ்ச்சிகளுக்கு அவளை அழைப்பதில்லை. அப்பெண்ணின்மீது மாமியார் நடத்தும் கொடுமைகளை எடுத்துரைக்கின்றன.

## பெண் இறப்புக்குப் பாடும் ஒப்பாரி

பெண் இறந்தால் பாடும் ஒப்பாரி கூறுகளாக, 1. தாய் இறப்புக்கு மகள் பாடுவது, 2. தாய் இறந்ததைக் கேட்டு மகள் வீட்டிற்கு வரும் நிலை, 3. மாமியார் இறப்புக்கு மருமகள் பாடுவது, 4. தாய் இறந்த பின் வரும் பிரச்சினைகள் போன்றவைகளாகும்.

*பத்துக் கால் பெட்டிவண்டி பாதையிலே நிற்கும் வண்டி*
*பாதுகாக்கும் கணேசருக்குப் பால்பூசை செய்தாலும்*
*பாசமுள்ள தாயாரே நான் என்னைக்குக் காணப்போறேனோ*
*வண்ணக் கொடிகாரி வரிகாம்பு வெத்தலையாம்*
*சின்னக் கொடிகாரி சிறுகாம்பு வெத்தலையாம்*
*சிறுத்துப் பறிக்கையிலே சிறுசிலேயே தாயிழந்தேன்*

என்ற பாடலடிகள் தாய் இறப்புக்கு மகள் பாடுவதாக அமைந்துள்ளது. தாய் தனக்குச் சீர் செய்து சீராட்டியதையும், தாய் வீட்டிற்குச் சென்றால் தன் பசியறிந்து உணவு சமைத்ததையும், எதையும் தன்னிடம் சொல்லும் அம்மா சொல்லாமல் இறந்துவிட்டாளே என்று வருந்துகிறாள்.

*எனக்கு மண்டபத்திற்கு மேலே மயில் இருந்து தெண்டலிடும்*
*எனக்குக் கூடத்துக்கு மேல குயில் இருந்து தெண்டலிடும்*
*நான் சாதிப் புறம்பானேன் நான் நாசுவன் பிள்ளையானேன்*
*நான் நாசுவன் பிள்ளையென்று இளக்காரமா பேசுவாங்க*

என்ற பாடலடிகள் தாய் இறந்த பின்பு அவரது குழந்தைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தாயைக் கொன்றவன் எனப் பழித்தல், சாதியில் குறைந்தவன் என ஒதுக்குதல், வேலை செய்ய அனுமதிக்காமை முதலியவை சமூகத்தில் நிலவி வந்ததை உணர்த்துகின்றன.

## வாத்து மானம்

மருத்துவ இனமக்கள் பூப்புப்பாடலை வாத்துமானம் என்று கூறுகின்றனர். இப்பாடல்களில் பெண்ணின் தாய்மாமன் பெருமைகளும் சிறப்புகளும் தாயின் மனநிலையும் வெளிப்படுவதாக அமைந்துள்ளது.

*காரேறி வாராவ கருமனூர் அண்ணாச்சி*
*தேரேறி வாராவ தேவலோகத்து பாண்டி மன்னன்*

*முந்தி முன்னனுமே முற்றிச் கொஞ்சுதுன்னும்*
*தாலி மின்னுதுன்னும் தாயத்து கொஞ்சுதுன்னும்*
*சமத்துள்ளப் பாண்டியனுக்கு என்னென்ன சீதனங்கள்*
*பால்மாடு நூறாம் பணத்திலே ஆயிரமாம்*
*பெட்டி வரும் பேழை வரும் பொன்னாலே தாலிவரும்*
*சீனிக் குதிரை வரும் சிவகாசி மேளம் வரும்*
*அடிங்கப்பா மேளத்தை அச்சுதனுக்குத் தாலிகட்ட*
*கொட்டுங்க மேளத்தைக் கோபாலன் தாலிகட்ட*

இப்பாடல் பெண்ணின் தாயானவள் தன் சகோதரன் வருவதைப் பற்றிப் பூப்புச் சடங்கின்போது பாடுகிறாள். அப்போது தன் அண்ணன் வருவதையும், தன் பெண்ணுக்குச் சீதனமாகப் நூறு பால்மாடுகளும், ஆயிரம் ரூபாயும், பெட்டிகளுடன் பொன்னாலே தாலியும் கொண்டு வரும் செய்தியையும் எடுத்துரைக்கின்றாள்.

**உறவுமுறைச் சடங்கு**

பூப்புச் சடங்கில் உறவுமுறையில் உள்ள எல்லோரும் வந்து பெண்ணிற்கு அனந்தரம் செய்து வாழ்த்தும் நிகழ்வுகள் காணப்படுகின்றது. பூப்புப்பாடலில்; அண்ணன்மார், சித்தப்பா, பெரியப்பா அனந்தரம் செய்து சீர் செய்வதை,

*அண்ணாச்சிமார்கள் எல்லாம் அனந்தரம் செய்வாங்கோ*
*பெரியப்பாமார்கள் எல்லாம் பெருமைகள் செய்வாங்க*
*சித்தப்பாமார்கள் எல்லாம் சீதனங்கள் செய்வாங்க*
*எண்ணெய்க்குள் கிடக்கும் ரூபாயை எண்ணிக்*
*கொடுத்திடுங்க*
*பெண்ணோட பிறவிகளா வெங்கி முடிஞ்சிக்குள்ளே*

என்ற பாடலடிகளால் அறிந்து கொள்ளலாம்.

பூப்பெய்திய பெண்ணின் வீட்டில் வண்ணான், வண்ணாத்தியின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். பூப்பெய்திய பெண்ணிற்குப் பதினாறு நாட்களும் மாற்றாடைக் கொண்டு வந்து கொடுப்பதுவும் நீராட்டு விழாவிற்குப் பந்தலில் போடப்படும் துணி கொண்டு கொடுப்பதும் வண்ணாத்தியின் கடமையாகும். இதனை,

*வெள்ளிக்கிழமையிலே விடிய இரண்டு நாழிகையிலே*
*சாமக் குழியிலே மே முந்திச் சேலையிலே*
*மேகம் பதிச்சது போல் கீழ் முந்திச் சேலையிலே*
*கிண்ணம் பதிச்சது போல் ஆழ்ந்துறையிலே*
*அழுக்கெடுக்கிற வண்ணானே நீலத்துறையிலே*
*நின்னடிக்கிற வண்ணானே வண்ணானே எங்கோ*
*சேர்பனம் சொல்லிப் போறதுக்கு*

என்ற வாத்துமானம் பாடலடிகள் மூலம் உணரலாம்.

பூப்புப் பாடலின் தொடக்கத்தைச் சாதாரணமாகத் தொடங்குகின்றனர். முடியும்போது குரவை சத்தம் போடுமாறு கூறி முடிக்கின்றனர். பூப்படைந்த பெண்ணின் வீட்டில் சடங்கு நடைபெறும் போது பெண்கள் குரவையிடுவது மிகவும் அவசியமாகக் கருதப்பட்டது. இதனை,

*போடுங்கம்மா ஒரு குலவை, பொன்னால் ஒரு குலவை*
*இன்னொரு குலவை, இருவாய் மஞ்சரிய*

என்ற பாடலடிகளில் வலியுறுத்துகின்றனர்.

**வாத்துமானத்தின் பொருண்மை**

பூப்புப் பாடலில் பெரும்பான்மையும் தாய்மாமனின் பெருமைகள், சிறப்புகள், கொண்டு வரும் சீர்கள், முறைப்பையனின் சிறப்புகள், திருமணத்தின்போது செய்யும் சீர்கள் இவற்றையே முதன்மைப்படுத்திப் பாடுகின்றனர். பூப்புப் பாடலைப் பெண்ணின் தாய்ப் பாடுவதும் உண்டு. அவ்வாறு தாய் பாடும்போது தாய்மாமன் என்னென்ன செய்ய வேண்டும் என்பதை அறிவுறுத்தும் படியே பாடுகின்றனர். சில சமயங்களில் பூப்புச் சடங்கின் போதே திருமணத்தைப் பேசி முடிவாக்கும் வழக்கமும் இவ்வின மக்களிடம் உள்ளது. இதனை,

*கொல்லம் கழிச்சி கோவிந்தவனம் கழிச்சி*
*ரெட்டியார் பட்டியிலே தன்னுடைய*
*குமரனுக்குக் கல்யாணம் என்று சொல்லி*
*பங்குனி மாதம் பதினேழாம் தேதி*
*புதன்கிழமை நல்ல முகூர்த்தம் என்று சொல்லி*
*ஒன்பது களஞ்சியிலே ஒசந்த மணிச் சவடிகளாம்*
*பத்து களஞ்சியிலே பதக்க மணிச் சவடிகளாம்*

என்ற பாடலடிகள் மூலம் தெரியலாம். திருமணம் பேசும்போது வரதட்சணையுடன் பெண்ணை மணம் முடித்துத் தருவதையும் அதனை இரண்டு வீட்டாரும் சம்மதிப்பதையும்,

*சித்திரை மாதத்திலே சிறு முருங்கை பூத்தது போல்*
*வைகாசி மாதத்திலே வாழைக்குலை சாய்ந்தது போல்*
*வாக்குடனே தேக்கு வெட்டி வண்டிப் பணமேத்தி*
*குத்துவிளக்காம் குதில் நிறைந்த வெண்கலமாம்*
*ஒரு சோடி மாடாம் ஒரு கோட்டை விதப்பாடாம்*
*தாரேன் என்று சொல்லிச் சம்மதிச்சார் தாய்த் தகப்பன்*

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. பாடலின் மூலம் இவ்வினமக்கள் சிறிதளவில் விவசாயம் செய்து வந்துள்ளமையும் வெளிப்படுகின்றது.

**கதைகள்**

மனிதன் தன் எண்ணங்களை வெளிப்படுத்தத் தொடங்கிய காலத்திலேயே கதைகள் தோற்றம் பெற்று விட்டன எனலாம். வேட்டையாடச் சென்று திரும்பிய மனிதன் தனது அனுபவத்தைப் பிறருக்குக் கூற முற்பட்ட அன்றே கதைகள் தோன்றியது என்று கலைக்களஞ்சியம் (1956.iii:189) குறிப்பிடுகிறது. மனிதர்கள் சிறு குழுக்களாக வாழ்ந்த போது அவர்கள் தாங்கள் கண்டறிந்த நிகழ்வுகளை ஓய்வு நேரங்களில் கூறி மகிழ்ந்தனர். அவ்வாறு கூறப்பட்டு வந்த செய்திகள் கற்பனையுடன் புனைந்துரைக்கப்பட்டு நாளடைவில் கதைகளாகத் தோற்றம் பெற்றன என்று தர்மராஜ் (2004:306) குறிப்பிடுகிறார். இந்திய இலக்கியத்தின் மிகப் பழமையான உருவம் கதை தான். கவிதை தோன்றும் முன்னரே கதைகள் தோன்றின. இக்கதைகளே கவிதையின் பொருளாயின என்று சண்முகசுந்தரம் (1982:4) கூறுகிறார். நாட்டுப்புறக் கதைகள் சமுதாயத்தினைத் திரித்து மறைத்து வைக்கப்பட்டுள்ள உலகியல் உண்மை என்கிறார் டாக்டர் நசிம்தீன் (1989:124). தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே நாட்டுப்புறக் கதைகள் வழக்கில் இருந்தன என்பதை,

***பொருளொடு புணராப் பொய் மொழியானும்***
***பொருளொடு புணர்ந்த நகை மொழியானும்*** (தொல்:செய்: 168)

என்னும் நூற்பாவால் அறியமுடிகிறது. கதை என்பதற்குத் தமிழ்ப் பேரகராதி (1956,ii:914), பெரிய சகிதம், இதிகாச புராணங்கள், பெருங்கதை, பொடி வார்த்தை, விசித்திரக்கதை, கட்டுக்கதைகளில் சொல்விதம், சம்பாஷனை என்னும் ஒன்பது பொருள்களைக் கூறுகின்றன. தமிழ் மொழியகராதி (1987:374), காரணச்சொல், சம்பாஷனை, சரிதம், சொல், சொல்லெனேவல், தண்டாயுதம் என்னும் ஏழு பொருள்களைத் தருகின்றது. எனவே கதை என்ற சொல் பல பொருள்களில் வழங்கி வந்த போதும் அஃது உணர்த்தும் பொருள் ஒன்றாக அமைகிறது.

**கதையின் நடை**

வாய்மொழிக் கதைகள் பாடல் வடிவிலும், உரைநடை வடிவிலும் காணப்படுகின்றன. உரைநடை வடிவில் அமைந்துள்ள கதைகள் மட்டும் இங்குக் கதைகள் என்னும் பெயரில் கையாளப்படுகிறது. செய்யுள் வடிவில் காணப்படும் குறுங்கதைகள் சிலவற்றை எழுதாத கதைகள் என்று அரவிந்தன் (1977:245) எடுத்துக் காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

**கதையின் வடிவம்**

நாட்டுப்புறக் கதைகளுக்கென்று சில வரையறைகள் உள்ளன. கதை சொல்பவரின் கற்பனைக்கும், கேட்பவரின் ஆர்வத்திற்கும் ஏற்பக் குறுகியதாகவும், நெடியதாகவும் அமைகின்றது. கதை சொல்பவரின் மனநிலைக்கு ஏற்ப மாறுபடும் தன்மை கொண்டது. ஒவ்வொரு முறையும் மாறாமல் பிழையும் பிசிரும் இல்லாமல் கதை சொல்வது என்பது முடியாத காரியம். எனவே காலப்போக்கில் கதைகள் மாறுதலைப் பெறுகின்றன என்று லூர்து (1997:60) குறிப்பிடுகிறார்.

**கதை பரவுதல்**

நாட்டுப்புறக் கதைகளின் மூல ஆசிரியர் யார் என்று அறிய முடியாதபடி பரந்து விரியும் இயல்புடையன. இக்கதைகள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பரவுவதற்குப் பல அடிப்படைக் காரணங்கள் உள்ளன. அவை,

- ❖ தொழில் செய்யும் போது களைப்பு ஏற்படாமலிருக்கும்படி கதைகளை மாறி மாறி கூறுதல்
- ❖ திருமணமான பெண்; பிறந்த இடத்தில் உள்ள கதைகளைப் புகுந்த இடத்தில் உள்ளவர்களிடம் கூறுதல்
- ❖ கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களின் போதும்; வீட்டிலோ, வெளியிலோ பொழுது போக்கிற்காகவும் பெண்கள் கதை கூறி மகிழ்வது
- ❖ மக்களிடையே ஏற்படுகின்ற தொடர்புகள்

ஆகியனவாகும்.

**கதை கூறுவோர்**

கதையினைச் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் கூறுகின்றனர். இதில் ஆண்களை விடப் பெண்களே அதிகமாகக் கதைகளைக் கூறுகின்றனர். குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பு தாய்மார்களுக்கு அதிகமாக இருப்பதால் குழந்தைகளுக்குப் பலவிதமான கதைகளைக் கூறி மகிழ்விக்கின்றனர். இத்தகைய கதை சொல்லுவதில் தாத்தாக்களை விடப் பாட்டிகளே கெட்டிக்காரர்கள் என்ற பொன்னம்மாளின் (1980:3) கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது. கதை கூறுபவர்களின் பால் மற்றும் வயதிற்கு ஏற்ப கதையின் மையப்பொருள் மாற்றம் அடைகின்றது. சிறுவர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் கதைகளையே பெரும்பான்மையும் கூறுகின்றனர். ஆண்கள் தங்களிடையே கதை

கூறும் போது பாலியல் கதைகளைக் கூறி மகிழ்வதும் உண்டு. இதனை, ஆண்கள் தங்களுக்கிடையேயும், பெண்கள் தங்களுக்கடையேயும் பாலியல் கதைகளைக் கூறி மகிழ்வதாக சத்தியமூர்த்தி (1997:28) குறிப்பிடுகிறார்.

## கதையின் நோக்கம்

கதைகளை மக்கள் கூறுவதற்குச் சில அடிப்படையான நோக்கங்கள் காணப்படுகின்றன. மக்கள் மகிழ்ச்சியடைவதற்காகவும், தங்கள் பொழுது போக்கிற்காகவும், கேலித் தன்மையை வெளிப்படுத்தும் ஊடகமாகவும்; தன்னையும், தன் பாரம்பரியத்தையும் மற்றவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவும்; அறக்கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காகவும்; நகைச்சுவை, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் வாழ்வியல் உண்மைகள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதற்காகவும் கதைகளைக் கூறுகின்றனர்.

## கதையின் பயன்

வாய்மொழியாக வழங்கப்படும் கதைகளால் கேட்போர் பயனடைகின்றனர். கதைகள் கூறுவோர், கேட்போர், கூறப்படும் சூழல் ஆகியவற்றிற்கு ஏற்ப தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதோடு குழந்தைகளின் அறிவுத் திறனையும். வளர்க்கின்றன. அறக்கருத்துக்களைக் கதைகளாகக் கூறுவதால் அவற்றைக் கேட்கும் குழந்தையும் அவற்றையே கடைபிடிக்கும் என்ற எண்ணமும் மக்களிடையே காணப்படுகிறது.

## வகைப்பாடு

நாட்டுப்புறக் கதைகளை வகைப்படுத்தி ஆய்வுச் செய்தால் ஆய்வு வலுப்பெறும் என்ற அடிப்படையில் அறிஞர்கள் பலவாறு கதைகளை வகைப்படுத்திக் கூறியுள்ளனர். சண்முகசுந்தரம் (1980:96) கதைகளை, 1. மனிதர் கதைகள், 2. மிருகக் கதைகள், 3. மந்திரக் கதைகள், 4. தெய்வக் கதைகள் என்று நான்கு வகையாகப் பகுத்துள்ளார். கிருட்டிண சாமி (1980:12-13) இதனை ஐந்து வகையாகவும் சக்திவேல் (1992: 72-73), ஆறு வகையாகவும் லூர்து (1992:72-73) ஒன்பது வகையாகவும், ராஜநாராயணன் பத்தொன்பது வகையாகவும், வகைப்படுத்தியுள்ளார்கள். இவ்வாறு நாட்டுப்புறக் கதைகளைப் பல்வேறு அறிஞர்களும் பொருள் அடிப்படையில் வகைப்படுத்தி இருந்தாலும் நாட்டுப்புறக் கதைகளின் வகைப்பாடுகளில் ஒற்றுமைக் கூறுகள் காண்பதற்கில்லை.

களஆய்வின் போது சேகரிக்கப்பட்ட இருபத்திரண்டு கதைகள் பொருள் அடிப்படையில் எட்டு வகையாகப் பாகுபாடு செய்யப்படுகின்றன. அவை, 1. மருத்துவர்களைப் பற்றிய கதைகள், 2. விலங்கு கதைகள், 3. நீதிக் கதைகள், 4. பழமொழிக் கதைகள், 5. சமுதாயக் கதைகள், 6. விசித்திரக் கதைகள், 7. புதிர்க் கதைகள், 8.வேடிக்கைக் கதைகள் என்பனவாகும்.




## மருத்துவர்களைப் பற்றியக் கதைகள்

மருத்துவர்களைப் பற்றிய கள ஆய்வில் ஏழு கதைகள் சேகரிக்கப்பட்டன. இக்கதைகள் இவ்வின மக்களை அடையாளப் படுத்துவனவாகவும், பண்பாட்டினை வெளிப்படுத்தும் விதத்திலும் அமைந்துள்ளன.

## பூதத்தைப் பிடித்த நாசுவன்

ஒரு ஊருல ஒரு நாசுவன் இருந்தான். அவனுக்குத் தெனமும் வேலைக்குப் போய்க் கெடச்சிய பணத்திலே தான் அவனும், பிள்ளை, பொண்டாட்டியும் சாப்பிட்டுப் பொழச்சிட்டு இருந்தினும். அப்பிடி இருக்கச்சிலே மாப்பிளெ வேலைக்கிப் போகாததெப் பாத்த அவ. அவனுக்க மேல கோவப்பட்டு அவனுக்க வேல கருவி எல்லாத்தெயும் ஒரு கெட்டாக் கெட்டி கைல குடுத்து அவன வீட்ட விட்டு வெரட்டிட்டா.

எல்லாத்தையும் கொண்டு அவென் காட்டுக்குப் போனான். வழியிலெ ஒரு பூதம் அவனப் பாத்திட்டு. அது ஓடனே ஓடி இவனெப் பிடிக்க வந்தது. நாசுவென் தனெக்க கைல இருந்த பொட்டலத்தைப் பிரிச்சி உள்ளே இருந்த கண்ணாடிய எடுத்து அந்தப் பூதத்துக்க மொகத்துக்க முன்ன காட்டினான். பூதம் திரும்பிய எல்லா தெசையிலெயும் காட்டினான். பூதம் அதக் கண்டு பயந்து நா ஒன்னெய பிடிக்க வந்தா நீ என்னெயம் விட பெலசாலி பூதத்தைப் பிடிச்சி அடக்கி வச்சிருக்கிய. நான் ஒனெக்கு அடிம; ஒனெக்கு என்ன வேணும்னு உண்டோ நீ எனெட்ட கேளு நான்

தல்லாம்னு சொல்லிச்சாம். நாசுவன் ஒனேட்ட உள்ள தெரவியம் எல்லாம் தாண்ணு கேட்டான். பூதம் பயந்து எல்லாத்தெயும் குடுத்துச்சாம். அவென் எல்லாத்தெயும் ஒரு மூட்டையா கெட்டி வீட்டுக்குக் கொண்டு வந்து மனைவி, பிள்ளக்கூட சந்தோஷமா வாழ்ந்தானாம்.

***கதை கூறியவர்:*** பார்வதி, 95,
வில்லுக்குறி,
குமரி மாவட்டம்.

இக்கதையின்மூலம் நாவிதன் தொழில் கருவியாகக் கத்தியும், கத்திரியும் மட்டுமே கொண்டு செல்வதில்லை. கண்ணாடியையும் எடுத்துச் செல்லும் வழக்கம் இருந்துள்ளமைப் புலனாகிறது.

**குஞ்சுராமன்**

சித்திரை மகாராஜ ஆட்சிகாலத்தில் குஞ்சிராமன்னு ஒருத்தன் இருந்தான். அவன் அம்பட்டன் குடியில பிறந்தவன். அவனுடைய தொழில் அரண்மனையில் தீவெட்டி பிடிக்கியது. மகாராஜா இராத்திரி வீதி உலா வரச்சில வெளிச்சத்திற்காகத் தீவெட்டியைப் பிடிச்சிட்டு நிக்கனும். அப்படி குஞ்சிராமன் நிக்கும்போது மகாராஜா வரும் நேரத்தில் தீவெட்டியினை ஊதி அணைச்சிட்டான். உடனே மகாராஜா பந்தம் பொழிந்ததே (அணைந்ததே) குஞ்சிராமா? என்றுக் கேட்க, பனி வெள்ளத்தில பந்தம் அணைச்சிட்டது மகாராஜா என்று கூறினான். உடனே மகாராஜா இது மதியா? விதியா? குஞ்சிராமா என்று கேட்க மதிதான் மகாராஜா என்று கூறினான் குஞ்சிராமன்.

***கதை கூறியவர்:*** மீனாட்சி, 70,
சூரங்குடி,
குமரி மாவட்டம்.

இக்கதை கலைஞர் கருணாநிதி முதன்முறையாக முதலமைச்சர் ஆகும்போது வீதியில் இருந்த மக்கள் 'மகாராஜாவையே ஏமாற்றிய குஞ்சிராமன் இப்போம் ஆட்சிக்கு வந்திருக்கிறான்' எப்படி எல்லாம் மக்களை ஏமாற்றுவானோ என்று கூறியதாகத் தகவலாளர் மீனாட்சி நினைவுப்படுத்திக் கூறினார்.

**திருட்டுப் பிடிக்கிற பஞ்சாங்கம்**

ஒரு ஊருல ஒரு நாசுவென் இருந்தான். அவனுக்கு ஊரில சேவிங்கு பண்ணினா ரெண்டணாத்தான் கெடைக்கும். அந்த ரெண்டணாவைக் கொண்டு குடும்பம் நடத்த முடியுமா?. குடிக்கத்தான் முடியுமா? நாவிதன் பொண்டாட்டி நாவிதிச்சி ஊர்

சாப்பாடு எடுக்க போவாள். அப்போ பெரியவங்க சொன்னது அவன் நினைவுக்கு வந்தது. கெட்டவங்க பட்டணம் போகணும்னு அவன் யோசன பண்ணினான். விருப்பத்த பொண்டாட்டிக்கிட்ட சொன்னான். ஏடி நான் பட்டணம் போறேன். பெரியவங்க சொல்லி இருக்காங்க நான் நூறு காசு சம்பாதித்தாதானே நல்லா இருக்க முடியும்.

அவளும் கடன் வாங்கி ஒரு நூறு ரூபாய் அளவுக்குக் கையில கொடுத்து கட்டுச் சோறும் கட்டிக் கொடுத்தாள். இவரும் பட்டணம் போனாரு. இங்க ரெண்டணாக் கெடச்சது; ஆனா பட்டணத்தில நாலணா தான் கெடைச்சது. அது இவருடைய செலவுக்கே பத்தாது. அடக் கடவுளே அங்கவிட்டு இங்கு வந்தா ரெண்டணாதான் மேல கெடச்சிது இதவச்சி என்னதான் பண்ணமுடியும். யோசனப் பண்ணிட்டே மூனு, நாலு மாசம் அங்க கெடந்தான். இவன் மனைவி ஒரு நாளைக்கு மூனு கடிதாசிப் போட்டாள். இவனோ கோபத்தில கடிதாசிய கிழிச்சிப் போட்டான். பட்டணம் வந்து ஏமாந்தாச்சி; ஒன்பது மாசமாச்சி இனிமே நாம இந்த ஊருல கெடந்தா நமக்கு சரிப்படாது; நாம வீடுபோயிச் சேர்ந்திருவோம்னு கிளம்பினான்.

ஊருக்கு ராத்திரி பதினோரு மணிக்கு வாரான். வரும்போது பேக் ஒன்னு வாங்கி அந்த பேக் பையி நெறையா ஒட்டாங்குச்சியைப் பொறுக்கித் தூக்கமுடியாத அளவுக்குக் கொண்டுவந்தான். கொண்டு போன கத்தியையும் நல்லா சாணப்பிடிச்சி அந்த பேக்லயே வச்சிட்டான். இவன் வரும்போது மனைவி எதுக்க போயி வரவேற்று பைய வாங்கி வந்தா வீட்டில் வந்ததும் திருடன் தொந்தரவு அதிகமாக இருக்குதுன்னு சொல்லி மாவுப்பொட்டியில் கொண்டுபோயி ஒட்டாங்குச்சியைப் பூட்டி வச்சிட்டாரு. நாவிதிச்சி ஊருல 200ரூபாய்க்குப் போல கடன் வாங்கி வச்சிருந்தா எம்புட்டு பணம் கொண்டு வந்திருக்கியன்னு கேட்டுக் கொண்டே இருந்தாள். அடியே சம்பாதிச்சிச் சம்பாதிச்சிப் பேங்குல போட்டுத் திருட்ட பிடிக்கிற பஞ்சாங்கம் வாங்கிட்டு வந்தேன்னு சொன்னான். அதுக்கு ஒரு லட்சத்துக்கு மேல கொடுத்து இத வாங்கினேன். அப்புறம் சின்ன திருட்டு, பெரிய திருட்டு எது நடந்தாலும் அத பிடிச்சிக் கொடுத்தா நூறு, முந்நூறு கொடுப்பாங்க நாம பணக்காரனா ஆகிடலாம் என்று சொன்னான். அவன் அடபாவி மனுசா நெருப்ப அள்ளிக் கொட்டிட்டியே வயத்துல என்றாள். அவனும் சும்மா தான் புளுவினான். அவளோ கடனை நினைத்துக் கொண்டே ராஜாவூட்டுக்குப் போனாள் சாப்பாடு எடுக்க.

ராஜாவூட்ல இரண்டு பேரு வேலை செய்ராவ அவங்க பேரு அங்குனி, தங்குனி இரண்டு பேரும் சகோதரிக. இவளுவ ராஜா வீட்ல உள்ள அண்டா, வெள்ளிக்குடம், வெள்ளிதவா, கிண்ணம், தட்டு எல்லாத்தையும் திருடி கொண்டு போயி புளியமரத்துக்க கீழ ராத்திரி புதைச்சிவிட்டாளுவ. ராஜா ஒரு நாள் வந்து கணக்கு எடுத்தாக்கா அதுல நாப்பது ஐம்பது சாமானம் குறையுது. வேலை செய்றவங்க ஐயா சாமி நாங்க என்னங்க பண்ணுவோம். நாங்க வெலக்கி தானுங்க வைக்கிறோம், என்றாளுக. சரி நான் புடிச்சிக் காட்டுறேன்னு ராஜா சொன்னார். அந்த நேரத்தில் நாவிதிச்சி அங்க வந்தாள். அவள் ராஜா எங்க ஊட்டுக்காரர் பட்டணத்தில இருந்து சம்பாதிச்சு திருட்டு பிடிக்கிற பஞ்சாங்கம் வாங்கி வந்திருக்காருங்க. அதவச்சி திருட்டு சாமான்களைப் பிடித்துவிடலாம்னு சொன்னாள்.

அப்படி என்றால் உன் புருஷனைக் கண்டுபிடிச்சி தரச்சொல்லு நான் அம்பதாயிரம் ரூபா அள்ளிக் கொடுத்துடுறேன் என்றான். அப்படி பிடிச்சி குடுக்கலன்னு வச்சிக்க அவன வெட்டிப் பலிக் கொடுத்துடுவேன்னு சொல்லிட்டான். அவளுக்கு என்னத் தெரியும் இவன் பொய் சொன்னது. ஊட்டுக்குப் போய்ச் சாப்பாட்டை வைத்து விட்டு நடந்ததைச் சொன்னா. அவனுக்கு உயிர்ப் போயிரும் போல இருந்தது. ஒட்டாங்குச்சியைப் பொறுக்கி வச்சிருக்கிறேன்னு உண்மையைச் சொன்னான். அடபாவி எங்கிட்ட பொய் சொல்லி மாட்டிட்டியே மனுசா என்றான் அவள். நான் சாகப்போறேன் நீ தாலி அறுக்கப்போறாடி என்றான். அவனுக்குத் தைரியம் சொன்னாள். அப்புறம் தான் அவன் சாப்பிட்டான்.

மறுநாள் கிடுகிடுன்னு ராஜாவூட்டுக்குப் போனான். யாருன்னு கேட்டார் ராஜா. ஐயா சாமி நான் திருட்டுப்பிடிக்கிற பஞ்சாங்கம் கொண்டாந்திருக்கன்னான். ஓ திருட்டு பிடிக்கிற பஞ்சாங்கம் வாங்கிவந்து வச்சிருக்காயே அத வச்சி காணாம போன அம்பது சாமானத்தைக் கண்டு பிடிச்சி கொடுத்தின்னா உனக்கு என்ன வேணும்னார். அம்பதாயிரம் ரூபா வேணும்னு கேட்டான் அவுரு சரின்னுட்டு ஒரு வாரம் கொடுத்தாரு. அதுக்கு இவன் ராஜா நான் நாலு நாளையில புடுக்கிறங்கன்னு சொன்னான். ஒரு வாரத்திற்கும் நாலு நாளுக்கும் வித்தியாசம் அவனுக்குத் தெரியல. சரி நாலு நாளையில பிடிக்கனும்னு சொன்னாரு. இவனும் சரின்னு சொல்லிட்டு வீட்டிற்கு வந்துட்டான். இரண்டு நாளா இவன் சாப்பிடவே இல்லை. மூனு நாளாச்சி, ஏய் அங்க வேல செய்றவங்க பேரு என்னன்னு கேட்டான் பொண்டாட்டிக்கிட்ட. ஒருத்திபேரு

அங்குனி, ஒருத்தி பேரு தங்குனி இரண்டு பேரும் அக்கா தங்கச்சியாம் என்றான். நான் பிடிச்சிட்டேன்னு சொல்லிட்டுக் கடகடன்னு போனான் அவளுவ தண்ணீர் பிடிக்கிற நேரம் இவனுக்குத் தெரியும் அவளுவ தண்ணீர் பிடிக்கிற இடத்தில் இவன் போயி நின்னு சூரியன் அவர்கள் மீது பட்ட உடனே,

*"சந்திர சூரியரே, மாதாவே பிதாவே*
*அங்குனி தான் எடுத்தாளோ*
*தங்குனி தான் எடுத்தாளோ*
*யாரு உயிரு போவப் போகுதுன்னு"*

என்றான் இவன். சும்மா இருந்த அவளு அய்யய்யோ சாமி எங்க பேரு தான் அங்குனி, தங்குனி நாங்க தான் பதுக்கி வச்சிருக்கோம். எங்கள காட்டிக் குடுக்கக் கூடாது என்றாளுவ. சரி எங்க வச்சியிருக்கிறீகன்னு கேட்டான். புளியமரத்துக்க கீழ பள்ளம் வெட்டி பொதச்சி வச்சிருக்கிறோம் எங்க சம்பளத்தைக் கொய்யா மரத்துக்க கீழ ·வெட்டி புதைச்சு வச்சிருக்கிறோம் என்று கூற மறுநாள் காலமே ராஜாவ பாக்க போனாரு. என்ன நாவிதா புடிச்சிட்டியா? பஞ்சாங்கம் என்ன சொல்லுது? என்றார். ராஜா, புடிச்சிட்டேன் இங்க வாங்க இந்த மரத்துக்க அடியில தான் காணாம போன சாமான்கள் இருக்குன்னான். அதுபோல கொண்டு செல்லுங்க காணாமல் போன சாமான்கள் கருத்து போய் இருந்து. சரி யாரு எடுத்தான்னு சொல்லு பார்ப்போம்னார்.

தெற்கேயிருந்து கருப்பா ரெண்டு பேரு, மேற்க இருந்து செவப்பா ரெண்டு பேரு, கிழக்க இருந்து தடியா ரெண்டு பேரு, வடக்க இருந்து ஒல்லியா ரெண்டு பேரு நாலு ரெண்டும் ஆறு பேரு செஞ்ச வேலைங்க; ஆளு தான் சரியா தெரியல ராஜா என்றான். சரி புடிச்சிட்டியே சரி இந்தா அம்பதாயிரத்தை வாங்கிக்கோ என்றார். பணத்தை வாங்கிட்டுப் போய் சந்தோஷமா குடும்பம் நடத்தினான்.

**கதை கூறியவர்:** கோலம்மாள், 41,
வில்லியனூர்,
பாண்டிச்சேரி.

இக்கதையினைக் கூறும் போது தகவலாளி இடையில் நிறுத்தி கதை பெரிதாக இருந்தால் ஒன்றுமில்லை தானே என்று கேட்டார். பரவாயில்லை என்று கூறிய பிறகே கதையினைத் தொடர்ச்சியாகக் கூறினார். இடை இடையே தகவலாளியின் கணவன் கதையை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். இக்கதையின் மூலம் தொழிலுக்காக இவர்கள் நகர்பகுதிக்கு இடம் பெயர்ந்து சென்றுள்ளமை மற்றும் இவர்களின் புத்திசாலிதனம், நாவண்மை தன்மை புலனாகிறது.

## இராஜாவும் அம்பட்டனும்

ஒரு ஊரில் அம்பட்டையன் ஒருத்தன் இருந்தான். அவனுக்கு ஒரு எலுமிச்சை அளவு தங்கம் கிடைத்தது. அதனால அவன் மிகவும் சந்தோஷமா இருந்தான். அவன் பேச்சி தோரணையும் மாறிட்டு.

ஒருநாள் அரசனுக்குச் சவரம் செஞ்சிட்டிருந்தான். அப்போம் அரசன் இவனிடம் ஏம்பா நம்ம குடிமக்கள் எல்லோரும் எப்படி இருக்கிறாங்க தெரியுமா? என்று கேட்டான். அதற்கு அவன் அதையேன் கேட்கிறீங்க குடி மக்கள் எந்தக் குறைவுமில்லாம ஆளுக்கொரு எலுமிச்சை அளவு தங்கம் வச்சிக்கிட்டுச் சந்தோசமா இருக்காங்க என்று சொன்னான்.

அரசனுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. தனது மந்திரியிடம் இதைப் பற்றி விசாரித்தார். மந்திரி மன்னா நாளையும் அவனிடம் கேளுங்கள் என்று கூறினார். மந்திரி ஒருவரை அனுப்பி அம்பட்டையன் வீட்டிலிருந்த தங்கத்தைத் திருடி வருமாறு செய்தார். மறுநாள் அம்பட்டையன் அரசனுக்கு வேலை செய்து கொண்டிருக்கும் போது அரசன் ஏம்பா! நம்ம குடிமக்கள் எப்படி இருக்கிறாங்க என்று விசாரித்தார். அதற்கு அதுவா, அவங்கவங்க இருந்த தங்கத்தையும் இழந்துட்டுக் கஷ்டப்படுறாங்க மன்னா, என்று பதில் சொன்னான்.

மன்னன் மந்திரியை விசாரித்தபோது உண்மை விசயம் புரிந்தது. தன்னைப் போல் மற்றவர்களையும் எண்ணுவதைக் கண்டுபிடித்தான்.

*கதை கூறியவர்:* குட்டப்பன், 57,
பெருவிளை,
குமரி மாவட்டம்.

இக்கதையின்மூலம் ஊரில் உள்ள நிகழ்வுகளை மன்னன் மற்றும் பெரியவர்கள் அம்பட்டனிடம் கேட்கும் வழக்கம் இருந்துள்ளதை அறியமுடிகின்றது.

## அம்பட்டனும் நம்பூதிரியாதல்

ஒரு ஊரில் அம்பட்டன் ஒருத்தன் இருந்தானாம். அவன் தினமும் மகாராஜாவுக்குச் செரச்சிட்டு வருவானாம், ஒரு நாள் மகாராஜாக்குச் செரைக்க போச்சில அவரு நல்லா தூங்கிட்டு இருந்தாரு. அம்பட்டையன் அவருக்க தூக்கத்தக் கலைக்காமலே செரச்சிட்டு வந்திட்டான். மகாராஜா தூக்கம் எழுந்து இன்னும் அம்பட்டையன் வரலயா? என்று கேட்க மந்திரி வந்துட்டுப்

போயிட்டான் மகாராஜா என்று கூறினார். எனக்குச் செரைக்காமலாப் போனான் என்று கேட்டார். இல்லை மன்னா செரைச்சிட்டுத் தான் போனான் என்று கூற, மகாராஜா கண்ணாடியில் மொகத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டாரு.

தன்னை எழுப்பாமலேயே செரச்சிட்டுப்போன அம்பட்டனை அழைத்து வரச் செய்தார் மகாராஜா. என்னை எழுப்பாமல் நீ செரச்சிட்டுப் போனதால உனக்கு என்னவேணும் கேள் என்று கூற, உடனே அம்பட்டன் நான் நம்பூதிரி ஆகணும் என்று கேட்டான். (நம்பூதிரிகள் திருவிழாவின்போது யானைமீது பரிவட்டம் கட்டி செய்வதைப் பார்த்த ஆசையில்) மகாராஜாவும் நீ நம்பூதிரி ஆகிக்கோ என்று கூறிவிட்டார்.

ஒரு நாள்மகாராஜா வீதியில் உலாவும்போது ஒரு கழுதையின் அலறல் சத்தம் கேட்டது. இவரு திரும்பி பார்க்கும்போது மந்திரி ஒரு கழுதையினைச் செங்கல் வைத்து தேய்த் தேய்ன்னு தேய்த்துக் கொண்டிருந்தார். மகாராஜா மந்திரியிடம் ஏன் மந்திரி கழுதையை இப்படி பாடாய் படுத்துகிறீர் என்றார். அதற்கு மந்திரி இந்தக் கழுதையினை நான் குதிரையாக்க போறேன் என்று கூறினார். எப்படி கழுதைக் குதிரையாக மாறும் என்று மகாராஜா கேட்க, மந்திரி அம்பட்டன் நம்பூதிரி ஆகும்போது ஏன் கழுதைக் குதிரையாக மாறாது என்று கேட்டார் மந்திரி. அப்போது தான் மகாராஜாவுக்குத் தான் செய்தது தவறு எனப் புரிந்து அம்பட்டனைப் பார்த்து நீ அம்பட்டனாகவே இரு என்று கூறினார். எந்த விதமான பரிசும் கிடைக்காமல் வெறுங்கையோடு வீட்டுக்குப் போனான்.

***கதை கூறியவர்:*** முருகன், 65,<br>வில்லுக்குறி,<br>குமரி மாவட்டம்.

இக்கதையினைக் கூறி முடிந்ததும் தகவலாளர் முருகன் எங்கள் இனமக்களும் படிப்பறிவு இல்லாததால் அன்று யானையின் மீது பரிவட்டம் கட்டி செல்வதைப் பார்த்து நம்பூதிரி ஆகனும்னு ஆசைப்பட்டார்கள். அவன் பொன்னையோ, பொருளையோ கேட்டிருந்தா நாங்க நல்லா இருந்திருப்போம் என்று ஆதங்கத்துடன் கூறிவிட்டு, இப்போதும் மருத்துவர்கள். பெரும்பான்மையும் இப்படி தான் இருக்கிறார்கள் என்று கூறினார்.

இக்கதையின் மூலம் மக்கள் தொழில்களை அவ்வளவு நுட்பமாகச் செய்துள்ளனர் என்பது புலனாகின்றது. இக்கதையின் மாற்று வடிவங்கள் பல கிடைத்துள்ள.

## அம்பட்டன் கதை

ஒரு ஊருல ஒரு ராஜா இருந்தாராம். அந்த ஊர்ல ஒரு அம்பட்டன். ராஜாவுக்கு வாரம் ஒரு நாளைக்கு வந்து சேவிங் பண்ணிட்டு போவான். ஒரு நாள் சேவிங் பண்ண அம்பட்டன் வந்தான். அந்த ராஜா நல்லா தூங்கிட்டு இருந்தான், அம்பட்டன் சேவிங் பண்றதுக்கு ராஜா நல்லா தூங்கிட்டிருக்கிறாரேன்னு பார்த்தான். அடடா என்னடா நம்ம ராஜா சேவிங் பண்றதுக்கு வரும் போது நல்லா தூங்கிட்டு இருக்காரே? எப்டி எழுப்புறது? அப்படின்னு சொல்லிட்டு, ராஜா அறியாத வகையில சேவிங் பண்ணினான். ராஜா தூங்கி எந்திரிச்சி பாத்தாரு. பார்டா! எப்பம்டா சேவிங் பண்ணிருக்குன்னு பார்த்தான். உடனே அந்த அம்பட்டனை வரச்சொன்னான். நீ எப்படி எழுப்பாமல் செஞ்சே? என்று ராஜா கேட்டார். தூங்கிட்டு இருந்தீங்க சரி, உங்க தூக்கத்த கலைக்கக் கூடாதுன்னு தூங்கும்போதே சேவிங் பண்ணிட்டுப் போயிட்டேன். அப்படின்னு அம்பட்டன் சொன்னான். உடனே அரசன் அடேயப்பா! நீ பரவாயில்ல! இவ்வளவு சிறப்பா சேவிங் செஞ்சிட்டியே! உனக்கு என்னவாவது வெகுமதி செய்யனும் அப்படின்னு சொல்லி அந்த அரசன், நீ இனிமே அம்பட்டனே இல்ல அய்யரு சாதியில உன்ன சேத்துடுறேன். எல்லா அம்பட்டனும் ஒரு இடத்துக்கு வாங்க; அய்யருங்கெல்லாரையும் அங்க வரச் சொல்லுறேன். அய்யரு எல்லாம் வந்து ஒரு ஏரியில யாகம் பண்ணி ரெண்டு சாதியுங்கொண்டு வந்து ஒண்ணா சேத்துப் புடறேன்னு ராஜா சொன்னார். அதே மாதிரி தமுக்கு அடிச்சிப்புட்டான்.

எல்லா அய்யர்களும் இந்த எடத்துக்கு வாங்க எல்லா அம்பட்டன்களும் அந்த எடத்துக்கு வாங்க அப்படின்னு சொல்லி தமுக்கு அடிச்சிப்புட்டான். அய்யருக்கெல்லாம் ரொம்ப கவலையாப் போச்சி. என்னடாயிது நம்ம அரசன் இப்படி ஒரு தீர்ப்பு சொல்லிட்டானே. அவங்க ரொம்ப கீழ்ச் சாதியாச்சே. அந்தச் சாதியக் கொண்டு வந்து நம்ம சாதியில சேர்க்கறானே என்று அய்யருங்களுக்கெல்லாம் ரொம்பக் கவலை. ஆனா அம்பட்டர்களுக்கு எல்லாம் பரவால்ல! நம்ம ஒசந்த சாதியில சேர்றோம்னு அவங்களுக்கு மகிழ்ச்சியா இருக்குது. அய்யருக்கு

ரொம்ப கவலையாப் போச்சி. ஆனா ராஜா சொன்னபடி தானே கேட்டாகணும். ராஜாவ மீறி பேசக் கூடாதில்லா. அதனால வாயை மூடிட்டு இருந்தாங்க. சரின்னுட்டு ஒரு குறிப்பிட்ட எடத்துக்கு அய்யருகெல்லாம் வந்து சேர்ந்துட்டாங்க. அங்க ஒரு பெரிய யாகம் நடத்துறாங்க. யாகம் செஞ்சு தானே ரெண்டு சாதியும் ஒண்ணா கலக்கணும். அதுக்காக அங்க யாகம் நடத்திட்டிருக்காங்க. அரசன் தேரின்மீது ஏறி எடத்துக்கு வந்தான். அரசன் வந்திட்டிருக்கும்போது அரசனைத் திருத்தனும்னு அமைச்சர் யோசன பண்ணினான். ஒரு கருப்பு நாய் குட்டியப் புடிச்சிட்டு வந்தான். அந்த அரசன் வர்ற வழியில ஒரு ஆத்துல கொஞ்சம் தண்ணீர் ஓடிட்டிருந்தது. அந்தத் தண்ணியில கருப்பு நாய்குட்டிய கொண்டு போயி செங்கட்டியால் தேய்த்துக் கொண்டிருந்தார்.

அது நையி நையின்று கத்துது. அந்த அரசன் அங்கிருந்து வந்துட்டிருக்கான். அமைச்சர் செய்வதை அரசன் பார்த்தான். டேய் என்னது நாய் குட்டிய கொண்டு போய் இப்படி தண்ணில கல்லைக் கொண்டு தேய்க்கிற? என்ன பண்ணுறோன்னு அரசன் கேட்டான். அதற்கு அமைச்சர், இத தேய்ச்சி வெள்ளையாக்கப் போறேன்னு சொன்னான். அதுக்கு ராஜா ஏன்டா, மடப்பயலே! அது பொறந்ததே கருப்பா பொறந்திருக்கு, அதைப்போயி இப்படி தேய்சின்னா அது வெள்ளையாகுமா? அப்படின்னு சொன்னான். அதற்கு அமைச்சர் அரசே நீங்க அம்பட்டனைக் கொண்டு வந்து அய்யரு சாதியாச் சேக்கப்போறீங்க. அப்படி சேர்க்கும்போது கருப்பு நாய் ஏன் வெள்ளை நாய் ஆகாது. அதனால தான் நான் போட்டுத் தேக்கிறேன்னு சொன்னான். அப்பவே அரசன் திருந்திவிட்டான். அடடே! கருப்பு நாய் வெள்ள நாய் ஆவாது; அம்பட்டன் அய்யராக மாட்டான். நம்மதான் தெரியாது தீர்ப்பு சொல்லிப்புட்டோம். அது வேணாம்ன்னு எல்லாரையும் போக சொல்லிட்டான். இப்படி அமைச்சரால் அரசன் திருந்திட்டான்.

*கதை கூறியவன்:* லெட்சுமி, 56,
செண்பகராமன்புதூர்,
குமரி மாவட்டம்.

## கழுவில் ஏற்றிய நாவிதன் கதை

ஒரு ஊருல வியாபாரி ஒருத்தன் இருந்தானாம். அவன் கப்பல்களில் சரக்குகளை ஏற்றிப் பெருசா வியாபாரம் செய்து வந்தான். அத்தோடு அவன் தருமங்கள், நோன்புகள் பலச் செய்து வந்தானாம். அவனுக்க கெட்டக் காலத்திற்கு அவனுக்க

பொருளைக் கொண்டு சென்ற கப்பல் கவிழ்ந்து விட்டது. அதனால அவன் சீக்கிரமே பரம ஏழையாகி விட்டானாம். அவன் ஒரு நாளைக் கழிப்பது ஒரு யுகம் போல கஷ்டப்பட்டான். அதனால சாப்பிடாம இருந்து உயிரை விட முடிவுச் செய்து அப்படியே தூங்கி விட்டான்.

அப்போது அவனுக்க கனவில ஒரு துறவி வந்து உன் முற்பிறப்பில் ஏழைக்கு உதவி செய்ய வேண்டி நிறைய தங்க காசு தந்தாய். ஆனால், அதை பணத்தாசையால் நானே வைத்துக் கொண்டேன். என் எண்ணம் முழுவதும் தங்கமாக இருந்ததால் நான் தங்கமாக மாறிட்டேன். ஆனால் வெளிப் பார்வைக்குத் துறவி போல இருக்கிறேன். அதனால் நீ தடி எடுத்து எனக்க தலையில் அடித்தால் நான் முழுமையாகத் தங்கமாக மாறி விடுவேன் நானும் பேரின்பம் கொள்வேன் என்று கூறி மறைந்தார். திடீரென கனவு கலைந்து விழித்துப் பார்த்து திடுக்கிட்டான்.

மறுநாள் காலமே ஒரு துறவி பிச்சை எடுக்க வந்தாரு. அப்போம் நாவிதன் வியாபாரியின் மனைவியின் காலில் உள்ள நகங்களை வெட்டிக் கொண்டிருந்தான். வியாபாரிக்குக் கனவு ஞாபகம் வரவே ஒரு தடி எடுத்து துறவியை அடித்தான். துறவி தங்கமாக மாறி விழுந்தார். இதனை நாவிதன் பார்த்துட்டான். வியாபாரி இதனை யாரிடமும் கூறாமல் இருக்க சிறிது தங்கம் கொடுத்தான்.

ஆனால் நாவிதன் இது போன்று துறவிகளைத் தடியால் அடித்தால் தங்கமாக மாறிவிடுவார்கள் என்று நினைத்து, ஒரு தடியை எடுத்து கொண்டு துறவிகள் இருக்கும் மடத்திற்குச் சென்று அங்கிருந்த துறவிகளின் தலையில் ஓங்கி அடிக்கத் தொடங்கிவிட்டான். இதில் சில துறவிகள் இறந்தனர்.

பல துறவிகள் அடிப்பட்டுக் கிடந்தனர். உடனே காவலாளிகள் வந்து நாவிதனைப் பிடித்து அரசனிடம் கொண்டு சென்றனர். அரசன் ஏண்டா இப்படிச் செய்தே என்று கேட்க வியாபாரியின் கதையினைச் சொன்னான். விசாரித்த அரசன் எதையும் யோசிக்காமல் துறவிகளைக் கொலைச் செய்தமையால் நாவிதனைக் கழுமரத்தில் ஏற்றும் படி உத்தரவிட்டான்.

*கதை கூறியவர்:* தனபால், 74,
குஞ்சுதமூர்த்தி,
சிதம்பரம்.

இக்கதையின் மூலம் சேவைப் பணியின்போது நாவிதர்கள் மக்களின் கை, கால்களில் உள்ள நகங்களை வெட்டி சுத்தம் செய்யும் பணியினைச் செய்துள்ளனர் என்பது தெரிந்துக் கொள்ள முடிகின்றது.

கள ஆய்வின்போது மருத்துவரின மக்களிடம் சேகரிக்கப்பட்ட கதைகள் அனைத்தும் அவர்களை இழிவுபடுத்தும் வகையில் காணப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இது அவர்களுடைய தாழ்வு மனப்பான்மையின் அடிப்படையிலும், ஒடுக்கு முறையின் அடிப்படையிலும் தோற்றம் பெற்றுள்ளன என்பதை அறியமுடிகிறது.

**விலங்கு கதைகள்**

விலங்குகளின் குணங்களையும், பண்புகளையும் அடிப்படையாகக் கொண்டு கதைகளைக் கூறுகின்றனர்.

**காக்காவும் நரியும்**

ஒரு மரத்தில ஒரு காக்கா கூடு கட்டி இருந்துதாம் காக்கா முட்டையிட அதனை ஒரு பாம்பு தெனமும் வந்து தின்னுட்டுப் போயிவிடுமாம். இப்படி தினமும் நடக்க; காக்கா நரியிடம் போய் ஐடியா கேட்டுது. நரியும் ஒரு ஐடியா கொடுத்துது. அதன்படி காக்கா, ராணி குளிக்கும்போது கழற்றி வைத்திருக்கும் நகையை எடுத்து வந்து பாம்பு புற்றினுள் போட்டதாம். காகத்தை விரட்டி கொண்டே ராணியின் சேவகர்கள் வந்தனர். நகையினைப் புற்றினுள் போட்டதால் புற்றினை உடைத்தனர். சப்தம் கேட்டு வெளியே வந்த பாம்பு அடிபட்டு செத்தே போனது.

**நரியும் தப்பும்**

ஒருத்தன் வெள்ளரித் தோட்டம் போட்டிருந்தான். அந்தத் தோட்டத்துக்குத் தெனமும் ஒரு நரி வந்து வெள்ளரிக்காய பறிச்சி சாப்பிட்டுட்டு ஒரு காய்ல சூத்த தடவி அது தீட்டு போட்டுட்டு போயிடும். அத பார்த்த தோட்டக்காரன் காய்ல பிளைட செருகி வைச்சிட்டான். மறுநாள் அந்தக் காயில போய் சூத்த துடைச்சிடுச்சிது. பிளைடு அறுத்து ரத்தம் வந்திருச்சி. அப்போம் அந்த வழியா ஒரு தப்படிக்கிற பையன் வாரான். அவனிடம் நான் இந்த காய தாரேன் நீ தப்ப விட்டுட்டு போவியானு? கேட்டுது. அந்த ஏனாதி பயன் தப்ப விட்டுட்டு தீட்டத்த வாங்கிட்டான். இவன் இத எப்படி சாப்பிடணும்னு கேட்டான். அது இத கட்டி உயர தொங்க விட்டுட்டு அதன் கீழ இலை போட்டு சாப்பிடும்போது

இத ஒரு குத்து குத்தி சாப்பிடுண்ணு சொல்லிச்சி. இந்த நரி தீட்டு கொடுத்துட்டு தப்பு வாங்கினேன் என்று டண்டணக்கு டண்டணக்கு சொல்லிட்டே போயிட்டு அவன் சாப்பிடும்போது அதில ஓட்டை போட்டான். அதிலிருந்து நாறி ஒரே வாடையாக வந்தது. நரி சந்தோசமா தீட்டு கொடுத்து தப்பு வாங்கினேன் என்று கூறிக் கொண்டே சென்றது.

## நரியின் தந்திரம்

ஒருவன் தன் வீட்டின் பக்கத்தில் ஒரு மரக் கன்றினை நட்டான். அதற்குத் தெனமும் தண்ணீர் பாச்சினான். மரக் கன்று நல்லா வளர்ந்து பெரிய மரமானது. அவன் தினமும் அம்மரத்தின் நிழலில் தான் இளைப்பாருவான். அவனுடைய பிள்ளைகளும் அதன் மூட்டில் தான் விளையாடுவார்கள்.

ஒரு நாள் அவன் ஒரு ஆசாரியைக் கூட்டிட்டு வந்து இந்த மரத்துல எத்தன கதவு, எத்தன சன்னல் கிடைக்கும் என்று அளவு எடுத்து ஆலோசனை பண்ணி வெட்டத் திட்டமிட்டான்.

அப்போது அந்த ஊருல ஒரு புலியின் தொல்லை அதிகம் எனவே ஊர் மக்கள் அந்தப் புலியினைத் தந்திரமாக ஒரு கூண்டினுள் அடைத்து விட்டனர். அந்த வழியே ஒரு சாமியாரு கோயிலுக்கு இறைவனை வணங்குவதற்குச் சென்று கொண்டிருந்தாராம். அப்போம் புலியானது சாமி, சாமி என்னைக் காப்பாற்றுங்கள் என்று கூறிச்சாம். நான் என்ன பண்ணணும் என்று சாமியாரு கேட்க, என்னை கூண்டில் இருந்து வெளியே திறந்து விடுங்க உங்களுக்குப் புண்ணியமா போகும் உதவுங்கள் என்றது.

சாமியாரு நீ ரொம்ப மோசமானவன், நான் உன்ன திறந்து விட்டால் முதலில் நீ கொல்வது என்ன தான். எனவே திறந்து விடமாட்டேன் என்றார். உடனே புலி சத்தியம் செய்தது; சத்தியமா நான் உன்னைச் சாப்பிட மாட்டேன்னு. உடனே சாமியார் சரி என்று கூண்டைத் திறந்து விட்டார்.

கூண்டைத் திறந்து விட்டப்பிறகு தான் புலிக்கு வயிறு பசி அதிகமாக இருந்துது. அது சாமியாரிடம் எனக்குப் பசி அதிகமாக இருக்குது நான் உன்னை விட மாட்டேன் என்றது. சாமியார் நீ என்னைச் சாப்பிடமாட்டாய் என்று சத்தியம் செய்திருக்கிறாய் என்று கூறினார். அது விடுவதாக இல்லை. உடனே சாமியார், அதோ

ஒரு மரம் இருக்கிறது மரத்திடம் சென்று நடந்ததைக் கூறி நியாயம் கேப்போம் என்றார். அப்படி கேட்டபோது மரம், புலியே மனிதர்களே இப்படி தான் என்று தன் கதையினைக் கூறியது. எனவே நீ சாமியாரைச் சாப்பிடுவது தான் சரி என்றது.

அந்த நேரம் பார்த்து நரி அண்ணாச்சி வராரு. அதனிடம் நியாயம் கேட்போம் என்று கூற நரியிடம் நடந்தவற்றைக் கூறினார் சாமியார். நரி நியாயம் பேச இது இடம் இல்லை முதலில் இருந்தே செய்யுங்கள் என்று கூறி புலியிடம் நீ முதலில் எங்கு இருந்தாய் என்று கேட்க கூண்டுக்க உள்ள சரி உள்ளே போ என்று கூறியது. புலி நமக்கு நியாயம் கிடைக்கும் என்று கூண்டுக்குள்ள போச்சி நரி கூண்டை அடைத்து விட்டுச் சொன்னது. நன்மை செய்தவனையே கொல்லப் பாக்கிறாய். உன்னை ஊர் மக்கள் வந்து கொல்லுவாங்க கூண்டுல கிட என்று சொல்லிச்சாம். சாமியார் தப்பினார்.

## நீதிக் கதைகள்

நீதிக்கருத்துக்களை மக்களுக்கு எடுத்துக் கூறும் முகமாகக் கூறப்படுகின்ற கதைகளை நீதிக்கதைகள் எனலாம்.

## மன்னனும் மந்திரி மனைவியும்

ஒரு நாட்டை ஒரு மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்குத் தெனமும் பிடிச்சது ஒவ்வொரு நாளும் ஒரு பெண்; அவனுடைய அந்தப்புரத்தில் இருக்க வேண்டும் என்பதே. மன்னன் வெளியே உலா வரும்போது அவன பார்க்கும் பெண்கள் அதுவும் அழகானப் பெண்கள் யாராக இருந்தாலும் உடனே "இன்று உன் வீட்டில் விருந்து" என்று கூறிவிட்டு சென்று விடுவான். அந்தப் பெண்ணுங்க அந்தப்புரத்திற்குப் போய் சமையல் செய்து மன்னனைச் சந்தோஷப்படுத்த வேணும். (தகவலாளர் சில மோசமான வார்த்தைகளால் திட்டிக் கொண்டே) இப்படியே நடந்து கொண்டிருக்கும்போது ஒரு நாள் மந்திரியின் மனைவியை மன்னன் பார்த்து விட மந்திரியிடம் மந்திரி இன்று உன் வீட்டில் தான் விருந்து என்று கூறினான். மந்திரி மிகுந்த மனவருத்தத்துடன் மனைவியிடம் நடந்ததைக் கூறினான். மந்திரி மனைவி இவ்வளவுதான நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறினாள்.

மந்திரி மனைவி வழக்கம்போல அந்தப்புரத்திற்குச் சென்று சமையல் செய்து பல விதமான கலர் பாத்திரங்களில் ஓரே

குழம்பினை எடுத்து வைத்தாள். மன்னன் சாப்பிட அமர்ந்து ஒவ்வொரு பாத்திரமாக எடுத்து சாப்பிட்டுப் பார்த்தார். எல்லாம் ஒரே விதமான சுவையுடனே இருந்தது. மந்திரி மனைவியிடம் என்ன எல்லாக் குழம்பும் ஒரே சுவையுடன் இருக்குதே என்று கேட்டான். மந்திரி மனைவி ஆமாம் மன்னா எல்லாம் ஒரே குழம்புதான்; ஆனால் அது இருக்கும் பாத்திரங்களின் கலர்களும், அளவும்தான் வேறு வேறு ஆனால் சுவை ஒன்று தானே. அதே போன்றுதான் பெண்கள் எல்லோரிடமும் ஒன்று போல் தான் இருக்கும். அதனால மனைவி இருக்கும்போது மற்ற பெண்களிடம் செல்வது நல்லதா மன்னா என்று கூறினாள்.

மன்னன் தலைக் குனிந்து சென்றான். அதன்பின்பு எந்தப் பெண்களையும் தன் அரண்மனை அந்தப்புரத்திற்கு அழைப்பதே இல்லையாம்.

## இளமை

ஒரு ஊருல வயதான அம்மாவும், அப்பாவும் இருந்தனர்; அவர்களுக்கு ஒரு மகன். அவனுக்கு வெளிநாட்டில வேலை கிடைச்சிச்சி. மகனுக்குப் பெண் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அம்மாவும், அப்பாவும் மகனிடம் எங்களுக்கு ரொம்ப வயசு ஆகிடிச்சி, இளமையா இருக்க ஏதாவது மாத்திரை அனுப்புமாறு கேட்டாங்க மகனும் இளமையாக மாறக் கூடிய மாத்திரையினை அனுப்பி கொடுத்தான். கொஞ்ச நாளைக்கு அப்புறம் மகன் தன்னுடைய திருமணத்துக்காக ஊருக்கு வந்தான். வரும்போது ஒரு சிறுமி செடிகளுக்குத் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தாள். இவனைப் பார்த்த சிறுமி ஏல எப்படி இருக்கா எப்பம்ல வந்தா என்று கேட்டாள். மகனுக்கு எதுவும் புரியல; ஒரு சின்ன பிள்ள இப்படி பேசுதேன்னு திட்டினான். ஏம்ல நான் தான் உன் அம்ம மக்கா என்று சிறுமி கூறினாள். நீ இளமையா மாற கொடுத்த மாத்திரையை நிறைய சாப்பிட்டு இப்படி ஆகிட்டேன் மக்ளே என்றாள். சரிமா அப்பா எங்கம்மா என்று கேட்க அப்பா அதிக மாத்திரத் தின்னுட்டுத் தொட்டில்ல கை குழந்தையா படுத்து இருக்கிறாரு பாரு மக்கா என்றாள். மகனுக்கு ஆச்சரியம் தாங்க முடியல்ல.

## கறுப்பு முட்டை

ஒரு ஊர்ல ஏழை விவசாயி ஒருத்தன் இருந்தான். அவனுக்குச் சொந்த நிலமேகிடையாது. எனவே அடுத்தவரின்

வயலுக்கு வேலைக்குச் செல்வான். ஒரு நாள் இவன் ஆற்றில குளித்துக் கொண்டிருக்கும் போது ஒரு சாக்கு மூட்டை ஒன்று வந்தது. அத இவன் எடுத்து பார்க்கும் போது உள்ளே பலவகையான விலையுயர்ந்த பொருட்கள், நகைகள் இருந்துச்சாம். அவற்றை எல்லாம் எடுத்து கொஞ்சம் வசதியுடன் வாழ்ந்தானாம். நிலங்கள் வாங்கி சொந்தமாக விவசாயம் செய்யத் தொடங்கிட்டான். இவனைப் பார்த்த பக்கத்து வீட்டுக்காரர்கள் நீ எப்படி இவ்வளவு வசதியானாய் என்று கேட்க அவன் உண்மையினை உழறிவிட்டான்.

அடுத்த நாளில் இருந்து பக்கத்து வீட்டுக்காரனுக்கும் அவனைப்போல் ஆகனும்னு ஆசைப்பட்டுத் தினமும் ஆற்றங்கரையைப் பார்த்துக் காத்து இருந்தான். இப்படி இருக்கும்போது ஒரு நாள் பெரும் வெள்ளம் வர அதில் ஒரு கருப்பு மூட்டை வருவதைப் பார்த்துப் பக்கத்துவீட்டுக்காரன் இறங்கி எடுக்க கருப்பு மூட்டை அவனை விடவில்லை. காரணம் அது கருப்பு மூட்டையில்லை கரடி . . .

### பழமொழிக் கதைகள்

பழமொழியினை அடிப்படையாகக் கொண்டு கதையினைக் கூறுகின்றனர். இதனைப் பழமொழிக் கதைகள் எனலாம்.

### நிலவே சாட்சி

ஒரு ஊருல அண்ணன் தம்பி ரெண்டு பேரு இருந்தாவ. இரண்டு பேரும் விவசாயம் செய்து வந்தாங்க. ஒரு நாள் அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையே வாய்க்கால் தகராறு வந்திச்சி. இதுல தம்பி அண்ணனை வெட்டிக் கொன்று விட்டான். இறக்கும்போது - அண்ணன் இதுக்கு நிலவே சாட்சி என்று கூறிவிட்டு இறந்துட்டான். அண்ணனின் உடலை வயலில் புதைத்துட்டான். தம்பியின் வீட்டின் பின்னால் ஈஞ்சை படப்பினால் வேலி அமைந்து இருந்தான்.

பல நாட்கள் கழித்து தம்பிகாரன் கட்டிலில் படுத்து நிலவைப் பார்த்து நிலவே சாட்சினு சொன்னானே எங்க சாட்சி சொல்லிச்சி என்று நிலவைப் பழித்து நிலா சாட்சி கூறவா போகுது என்று வாய்விட்டுக் கூற; பக்கத்தில் படுத்திருந்த மனைவி என்ன என்று கேட்க அவன் சொல்லாமல் இருந்தான். அவள் நோண்டி நோண்டி கேட்க இவன் நடந்த உண்மையினைக் கூறிவிட்டான். இதனால் மனைவி பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் கூறக் கடைசியில எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. போலீஸ் வந்து இவனைப்

பிடிக்க விரட்டியது. இவன் பின் பக்கம் வழியே தப்பநினைக்கும்போது ஈஞ்சைப் படப்பில் மாட்டி ஓட முடியாமல் மாட்டிக் கொண்டான். இக்கதையானது,

*"புறவாசலில் ஈஞ்சம்படப்பை நடாதே;*
*உற்ற இரகசியத்தை மனைவியிடம் சொல்லாதே"*

என்ற பழமொழியை விளக்குவதாக அமைந்துள்ளது.

## சமுதாயக் கதைகள்

சமுதாயப் பிரச்சனைகளை அடியொற்றிக் கூறுகின்ற கதைகளைச் சமுதாயக் கதைகள் எனலாம்.

## தவில் வித்துவான்

பட்டிக்காட்டில ஒரு கலியாணம். அதுவோ சுத்துப்பட்டிக்குச் சங்கீதம் என்றால் துட்டுக்கு எத்தனை என்று கேட்பார்களாம் அப்படி ஒரு பட்டிக்காடு.

முகூர்த்தத்துக்காக மேளக்கச்சேரி கொண்டு வந்திருக்கிறார்கள்னு மேளம் ரொம்பக் களைகட்டியிருச்சி. ஆனால், எதிரே உட்கார்ந்து இருந்து அனுபவிப்பவர்களைதான் காணோம். தவுல் வாசிப்பவனுக்கு இது மிகவும் வருத்தமாக இருந்தது.

தற்செயலாகக் கல்யாண வீட்டிற்கு ஒரு கிழவர் வந்தார். அவருடைய தலை கழுத்தில் நிலைக் கொள்ளாமல் வயதாகிவிட்டதால் கிடுகிடுன்னு ஆடிக் கொண்டே இருந்தது. முகூர்த்த நேரமாதலால் கல்யாண வீட்டில் ஒரே கூட்டம். கிழவருக்கு உட்கார இடம் கிடைக்காததால் தவுல் வாசிப்பவனுக்கு எதிரே கொஞ்சம் தள்ளி ஒரு இடம் இருந்தது. அங்கே போய் உட்கார்ந்துக் கொண்டு, பேசாமல் தவுல் அடிப்பவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

கிழவரைக் கண்டதிலிருந்து தவுல்காரனுக்கு ஒரே கொண்டாட்டம். இந்நேரம் வரைக்கும் யாருமே தன்னுடைய வாசிப்பை அனுபவித்துக் கேட்கல இதோ ஒரு நல்லவர் வந்துவிட்டார். என்று மிகவும் மகிழ்ச்சியடைந்து வெளுத்து வாங்கினார் மேளத்தை.

முகூர்த்தம் முடிந்ததும் மேளமும் நின்றது. தவுல்காரன் வியர்வையைத் துடைத்துக் கொண்டே கிழவனைச் சிரித்த முகத்துடன் பார்த்தான். பார்த்தால் கிழவனின் தலை இன்னும் ஆடிக் கொண்டே இருந்தது. பாவம் தவுல்காரன். ரொம்ப நொந்து விட்டான்.

### முனிவரின் சாபம்

ஒரு முனிவர் அவருக்க பொண்டாட்டியுடன் தனியே வாழ்ந்து வந்தாரு. அப்போம் அவருக்க வீட்டுக்குத்; தண்ணீர் குடிக்க ஒருத்தன் போனான். அப்போம் முனிவரின் பொண்டாட்டியின் அழகில மயங்கி அவளை ஒரு நாளாவது அனுபவிக்கனும் என்ற ஆசை வந்தது. அதற்கான தருணத்தை எதிர்ப்பார்த்துக் காத்து இருந்தான். ஒரு நாள் முனிவர் தவம் செய்ய போன பிறகு இவன் புத்திசாலித்தனமா முனிவரைப் போல வேஷமிட்டு அவர் வீட்டுக்குச் சென்று மனைவியை அனுபவித்துவிட்டான். முனிவர் தன் மனைவியை எவனோ கெடுத்துப்போட்டான் என்று தெரிந்து கோபத்தில் மனைவியைக் கெடுத்தவன் பூனையாகப் போகும்படி சாபம் இட்டார். முனிவரின் மனைவியை அனுபவித்து மகிழ்ந்த அவன் பூனையாக மாறி பின் வருத்தப்பட்டான். தன் காமத்தினால் ஏற்பட்ட வினையை எண்ணினான்.

### மகாவீரன்

ஒரு நாட்டில ஒரு குறும்புகார மந்திரி இருந்தான். அரசனுக்கு நம் நாட்டிற்கு ஒரு நல்ல வீரன் வேண்டும் என்று மந்திரியாரிடம் கூறினார்: அப்போம் அவரு ஒவ்வொரு மனிதர்களையா பார்த்துக் கொண்டு வரும்போது ஒரு பிச்சைக்காரன் ஒரே நேரத்தில் நூறு கொசுக்களை அடிச்சிக் கொன்று விடுவான். உடனே மந்திரி இவன் தான் மகாவீரன் என்று கூறி அவனுடைய துணிகளை மாத்தி வீரனாக மாற்றி விடுங்கள் என்று வீரனைக் குதிரையின் மேல் ஏறுமாறு கூறுவான்; பயத்தில பிச்சைக்காரன் ஓடிவிடுவான். அவனைப் பிடித்துக் குதிரையின் மீது கட்டி வைப்பாங்க. கையை மட்டும் கட்ட மாட்டாங்க. அந்த குதிரை போர் எங்கு நடக்குதோ அங்கதான் நிற்கும் வேறு எங்கும் நிற்காது. குதிரை வேகமாகச் சென்று கொண்டிருந்தது. தூரத்தில் எதிரி நாட்டு மன்னர்கள் நூறு பேருக்கு மேல் நின்றார்கள். இவன் பயத்தில் பனைமரத்தினைப் பிடிக்க குதிரையின் வேகத்தில் பனைமரம் கீழே விழுந்தது. எதிரிபடை வீரர்கள் ஒரே நேரத்தில் பனைமரத்தையே புடிங்கிட்டான். இவன் நம்மைக் கொன்றுவிடுவான் என்று நினைத்துப் பயந்து ஓடிவிட்டார்கள். இவனுக்கு மகாவீரன் என்று பட்டமும் கொடுத்தாங்க.

### புருஷனுக்குக் காட்டாத கோலம்

ஒரு ஊருல புருஷனும் பொண்டாட்டியும் இருந்தாங்களாம். அவங்களுக்குக் கல்யாணமாகி ஒரு பதினைந்து வருஷம் இருக்குமாம். அவங்கரெண்டு பேரும் சொந்தக்காரர் திருமணத்திற்குப் போக வேண்டி ஒரு ஆற்றினைக் கடந்து மறு பக்கம் போனுமாம். அப்படி ஆற்றில் இறங்கி மறு கரைக்குப்

போகச்சில ஆற்றில் ரொம்ப தண்ணீர் வந்து அவர்களைத் தண்ணீர் அடித்து சென்றது.

இவங்க ரெண்டு பேரும் அலறிகிட்டே தண்ணில போனாங்க. அப்படி கத்திக்கிட்டே போகும் போது ஆற்றங்கரையில் நின்ற ஒருவன் பார்த்திட்டே நின்னான். "அவனிடம் இவர்கள் காப்பாற்றும்படி கூறினர். உடனே அவன் வந்து காப்பாத்திடுவேன் எனக்கு என்ன தருவீங்க அப்படின்னு கேட்க என்ன வேண்ணாலும் தாரோம் இப்ப இருக்கிற சூழலில் எதுவும் எங்கிட்ட இல்ல. புருஷனிடத்தில் காட்டாத ஒன்ன உனக்குக் காட்டறேன்னு அப்படி அந்தப் பொண்ணு தண்ணில அலறிகிட்டே சொல்லிச்சாம்.

இவன் உடனே இறங்கி காப்பாத்திப்புட்டான். ரெண்டு பேரும் கரையில் வந்து விட்டார்கள். புருஷனுக்குப் பதினைந்து வருசமா காட்டாதது என்னவாகயிருக்கும் என்று யோசித்து இவனுக்கு ஒரே பூரிப்பாக இருந்தது. ஆசையாகவும் இருந்தது பார்ப்பதற்கு.

அப்புரம் அந்தப்பொண்ணு அவுங்க ஊட்டுக்காரரைக் கொண்டு தூரமா மறைத்து நிறுத்தி விட்டு வந்து என் வீட்டுக்காரருக்குப் பதினைந்து வருஷமா காட்டாததை உங்களுக்குக் காட்டுறேன்னு சொல்லிட்டுப் பக்கத்திலே இருந்தவர்களிடம் இருந்து வெள்ளை வேட்டியினை வாங்கிச் சீலையாக உடுத்திடுச்சி. வச்சிருந்த குங்குமத்தையும் அழிச்சிடுச்சி, தலையில் இருந்த பூவையும் எடுத்திடுச்சி அப்படியே விதவை கோலத்துல நின்னுச்சு.

ஏங்க பதினைந்து வருசமா புருஷனுக்கிட்ட காட்டாததைக் காட்டுறேன்னு சொல்லிட்டு இப்படி நிற்கிறீங்களேன்னு கேட்டான். எம்புருசனுக்கிட்ட காட்டாதது எங்கிட்ட எதுவுமேயில்ல. இந்த ஒரே ஒரு விதவை கோலம் மட்டும் தான் புருசனுக்கிட்ட காட்டினது கிடையாது. உனக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாத்திட்டேன்னு சொல்லிட்டு அந்தப் பொண்ணு புருசனோட போயிடுச்சாம்.

**பானைக் குழந்தை**

ஒரு ஊருல அம்மா அப்பா இருந்தாங்களாம். அவர்களுக்குக் குழந்தையே இல்லையாம். அப்போம் ஒரு சாமியாரிடம் போவாங்களாம். அவரு ஒரு எலுமிச்சை பழம் கொடுத்து, நீ சோறு கீழே சிந்தாமல் சாப்பிட்டால் நல்ல பிள்ளை பிறக்கும்; சிந்தினால் பானை பிள்ளை பிறக்கும்னு சொல்லுவாரு. இவர்களுக்குச் சோறு கீழே சிந்தி விட்டதாம். பானை பிள்ளை

பிறந்ததாம். இந்தக் குழந்தை ஒரு இடத்தில நிற்கும்போது ஒருத்தருக்கு வாந்தி வர எங்க துப்புவதுனு பார்க்க இந்தப் பானையில துப்புன்னு சொல்ல, அதுல வாந்தி பண்ணுன உடனே பானை குழந்தை அம்மா அம்மா கதவைத் திறங்கமா என்னைக் கூட்டுங்கம்மானு, கூற அம்மா கூட்டுவாங்க வாந்தியா வரும். நீ எங்க போனா? உன்ன வளர்க்கிறதுக்குப் பதிலா நான் சாகலாம்ன்னு அடிக்கடி அம்மா சொல்லுவாங்க. ஒரு நாள் ஆற்றங்கரையில வந்து நிற்குமாம். அப்போம் அந்த ஆற்றில ஒரு ராஜாவும் ராணியும் குளிக்க வந்தாங்க. அப்போம் நகைகளை எங்க வைப்பதுன்னு பார்க்க பானையில போட்டுட்டுப் பிறகு எடுத்துக்கலாம்னு சொல்லிப் போட்டாங்களாம். இது குடுகுடுன்னு வீட்டிற்குப் போய் அம்மா அம்மா கதவ திறங்கம்மானு சொல்லிச்சாம். இப்பமும் என்ன காரியம் பண்ணிட்டு வந்திருக்கானு திட்டிட்டே சுத்தம் செய்ய வேண்டி கீழே தட்டுவாங்களாம் நகை முழுவதும் வந்து விழுமாம்; அப்புறம் இவங்க பணக்காரங்க ஆகிடுவாங்களாம்.

### பேன் கதை

இரண்டு பேன் இருந்துச்சாம். ஒரு பேனு கருப்பாகவும் இன்னொரு பேனு வெள்ளையாகவும் இருந்துச்சாம். கருப்புக் கலர் பேனு வெள்ளைக்கலர் பேனுக்கிட்ட கேட்டிச்சாம் நீ மட்டும் எப்படி வெள்ளையா இருக்க. நான் கருப்பாலா இருக்கிறேனேன்னு கேட்டிச்சாம். அதுக்கு அந்தபேனு நான் ஆத்தில போய்த் தேய்த்தேய்ன்னு தேய்த்தேன் வெள்ளையாகிட்டேன்னு சொல்லிச்சாம். அதுவும் ஆத்தில போய்த் தேய்த்தேய்ன்னு தேய்ச்சிச்சாம். ஆறு முழுவதும் இரத்தமாகிச்சாம். அப்போம் ஒரு மாடு தண்ணி குடிக்க வந்திச்சாம். (மாடும் ஆறும் பேசுதாம்) ஆறே ஆறே நேற்று வரை வெள்ளைக்கலர்ல போனாய் இன்னக்கி எப்படி சிவப்பா போறான்னு கேட்டிச்சாம். அதுக்கு ஆறு 'ஒரு பேன் செத்து ஒரு ஆறு இரத்தம்; மாட்டுக் கொம்பு உடைய'ன்னு சாபம் கொடுத்திச்சாம். மாட்டோட ஒரு கொம்பு உடைஞ்சிப் போச்சி. இந்த மாடு ஒரு மரத்துப் பக்கத்தில வந்தது மரம் கேட்டிச்சாம். மாடே மாடே நேற்று வரை இரண்டுக் கொம்புடன் இருந்தா இப்போம் ஒரு கொம்புல இருக்கிறானு கேட்டது மாடு, 'ஒரு பேன் செத்து ஓராறு இரத்தம்; மாட்டு கொம்பு ஒடிய மரத்தில் இலை உதிருன்னு' சொல்லிச்சாம். மரத்தில உள்ள இலை எல்லாம் உதிர்ந்துவிட்டதாம். ஒரு பாப்பா எண்ணெய் வாங்க கிண்ணத்தைக் கொண்டு வரும்போது ஏ மரமே நேற்று

இலையோட எவ்வளவு அழகா இருந்த; எப்படி உன் இலை எல்லாம் உதிர்ந்ததுன்னு கேட்டிச்சாம். உடனே மரம் 'ஒரு பேன் செத்து ஒரு ஆறு இரத்தம் மாட்டுக்கொம்பு உடைக்க மரத்தின் இலை உதிர, உன் கையில கிண்ணம் ஒட்டன்னு' சொல்லிச்சாம். அதுவும் ஒட்டிக்கிச்சாம்.

இந்தப் பிள்ளை கடைக்காரனிடம் போய் எண்ணெய் வாங்கிடுச்சாம். கடைக்காரன் இந்தச் சோறு எடுத்துக் கொடுன்னு கேட்டாராம். நீரே எடுத்துகிடுமுன்னுச் சொல்ல அது முடியாதுன்னு சொல்ல என்னாண்ணுக் கேட்டாராம். ஒரு பேன் செத்து ஒரு ஆறு இரத்தம், வந்து மாட்டுக் கொம்பு உடைய, மரத்தின் இலை உதிர என் கையில கிண்ணம் ஒட்ட உன் சூத்தில சோறு ஒட்டன்னு சொல்லிச்சாம் சோறு ஒட்டிச்சாம். அப்போ அந்த வழியா இராஜா குதிரையில வந்தாராம். அவரு வெளிய கூப்பிட்டாராம். என்னால வர முடியாது. நீ வேணுமானா உள்ள வான்னு சொல்லிச்சாம். எதனால வரமாட்டன்னு இராஜா கேட்டாராம் 'ஒரு பேன் செத்து, ஒரு ஆறு இரத்தம், மாட்டுக்கொம்பு உடைய, மரத்தின் இலை உதிர, பாப்பா கையில கிண்ணம் ஒட்ட, என் சூத்தில சோறு ஒட்ட, உன் சூத்தில குதிரை ஒட்டன்னு' சொன்னாராம். இராஜாவுக்க சூத்தில குதிரை ஒட்டிச்சாம். ஒரு வீட்டில ஒரு பொண்ணு டிவி பாத்திட்டு இருந்திச்சாம். இராஜா குடிக்க தண்ணீர் கேட்க அந்தப் பொண்ணு நீ வந்து குடிச்சிக்கான்னு சொல்லுச்சாம் இராஜா நான் வர முடியாதுன்னு சொன்னாராம் எதனால வர முடியாதுன்னு கேட்க ஒரு பேன் செத்து, ஒரு ஆறு இரத்தம், மாட்டுக்கொம்பு உடைய, மரத்தின் இலை உதிர, பாப்பா கையில கிண்ணம் ஒட்ட, கடைக்காரன் சூத்தில சோறு ஒட்ட, என் சூத்திர குதிரை ஒட்ட, உன் சூத்தில டிவி ஒட்டன்னு சொல்லிச்சாம்'. அந்தப் பொண்ணுக்க சூத்தில டி.வி. ஒட்டிச்சாம் எல்லோரும் ரொம்ப கஷ்டப் பட்டாங்களாம். அதுக்க பிறகு சாபம் நீங்கி நல்லா இருந்தாங்களாம்.

### புதிர்க் கதைகள்

விடுகதை அமைப்பில் அமைந்த கதைகள் புதிர்க் கதைகள் ஆகும். இஃது வெளிப்படையாக ஒன்றனை விளக்குவதாகவும் இலை மறைக் காயாக அதன் உட்கருத்தைக் குறிப்பிட்டு உணர்த்துவதாகவும் அமைவது இதன் இயல்பாகும்.

### அண்ணனும் தம்பியும்

ஒரு ஊருல அண்ணன் தம்பி ரெண்டு பேரு. அதில அண்ணனுக்கு மட்டும் திருமணம் முடிந்து இருந்தது. அண்ணியார்

பாசமாக ரெண்டு பேருக்கும் சமைத்து போடுவா. திடீரென ஒரு நாள் கணவன் மனைவிக்குள் சண்டை வந்தது. பொண்டாட்டி அவளுக்க அம்மா வீட்டிற்குப் போயிட்டாங்க. தம்பி அண்ணனிடம் அண்ணி எங்கே என்று கேட்க அவ கோவிச்சிட்டு அவ தள்ள வீட்டுக்குப் போயிட்டான்னு சொல்ல, தம்பிக்காரன் அண்ணனிடம் அண்ணியை வீட்டுக்கு வர சொன்னான். அண்ணனும் அவளை அழைக்கச் சென்றான். அவள் வர மாட்டேன் வர வேண்டுமென்றால் கரக்காத பால், ஈ இல்லாத தேன், திரிக்காத திரி மூன்றையும் கொண்டு வந்தா நான் வாரேன் என்று கூறிவிட்டாள்.

அவன் திரும்பி வந்து தம்பியிடம் அவள் கூறியதைச் சொன்னான். உடனே தம்பிக்காரன் நான் போய் அண்ணிய கூப்பிட்டு வாரேன்னு கூறிசென்று அன்'பால்' வந்'தேன்' எழுந்'திரி' அண்ணி என்று கூறி அழைத்து வந்தான்.

## வேடிக்கைக் கதைகள்

நகைச்சுவை உணர்வைத் தூண்டும் வகையில் அமைகின்ற கதைகள் வேடிக்கைக் கதைகள் ஆகும்.

## வெறும் குழல்

ஒரு ஊரில் இரண்டு கல்யாணம்; கிடைத்த மேளமோ ஒன்றே ஒன்று தான். முதற் கல்யாண வீட்டிற்குப் போயிருந்தது மேளம்.

இரண்டாவது கல்யாணம் ஒரு பாட்டி வீட்டில். அந்தப் பாட்டி பேத்திக்கு மிகவும் சிறப்பாகக் கல்யாணம் நடத்தி வைத்துக் கொண்டிருந்தாள். ஆனால், இந்த மேளம் மட்டும் இப்படி அமைந்து விட்டதே நம்ம வீட்டுக்கென்று தனியாக அமையலையே என்று தொணதொணத்துக் கொண்டிருந்தாள்.

கல்யாண வீட்டிற்கு வந்திருந்த உள்ளூர் சம்மந்தக் காரர்களில் சிலர் வேடிக்கை ஆசாமிகள் இருக்கதானே செய்வார்கள். அவர்கள் பாட்டியை விட்டு இன்று ஒரு வேடிக்கை காண்பிக்க வேண்டும் என்று தங்களுக்ள்ளேயே பேசி முடிவு செய்து கொண்டார்கள்.

முகூர்த்தத்திற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்தாயிற்று. புரோகிதர் வந்தாயிற்று ஆசாரிக்கூட நேரத்திற்குத் தாலி செய்து கொண்டு வந்துவிட்டான். மேளம் ஒன்று வர வேண்டியதுதான் பாக்கி எங்கே மேளம்? மேளம் எங்கே? என்று திருமண வீட்டில் ஒரே சலசலப்பு பொறியாக இருந்தது. பாட்டிக்கோ ஒன்றுமே ஓடல.

கடைசியாக ஒரு வாக்கில் மேளக்காரர்களும் வந்து விட்டனர். வந்த அவர்கள் உட்கார்ந்து இருந்தார்கள். ஒருவன் போய்ப் பாட்டியைத் தனியாகக் கூப்பிட்டு அவருடைய காதில் என்னமோ சொன்னான். அவ்வளவுதான் பாட்டி வேகமாக வந்தா. நாதஸ்வரம் வாசிக்கப் போறவனிடம் என்னய்யா, நீ அந்த வீட்டில் எல்லாத்தையும் வாசித்துவிட்டு இங்க வெறும் குழலையா கொண்டு வந்திருக்கா? எனக்கு என்ன ஒண்ணும் தெரியாதுன்னு நினைச்சியா? எங்கே காட்டு, குழலைப் பார்ப்போம்? என்று இரைத்தாள். வேடிக்கை ஆசாமிகளுக்கு ஒரே குஷி கல்யாண வீடு சிரிப்பால் அதிர்ந்தது.

## ஆறு மாதத்தின் ரகசியம்

ஒரு ஊருல ஒரு புரோக்கர் இருந்தாரு, அவரு கல்யாணப் புரோக்கர் அவருக்கும் அவருடைய பொண்டாட்டிக்கும் பயங்கர சண்டை. அப்போது ஒருத்தன் தனக்குப் பெண் பார்த்து தருமாறு சொல்லுறான். உடனே அவர் யோசித்துவிட்டு ஒரு பெண்ணு இருக்கு, அழகா இருக்கும் எப்படி முடித்துவிடலாமான்னு கேட்டாரு. அவனும் சரி பெண்ணுக்கு என்ன வயசுன்னு கேட்டார். அவரு பத்தொன்பது வயசும், ஆறு மாசமும் என்று கூறினார். இவன் சரி முடித்துவிடலாம் என்று கூறினான். திருமணம் முடிந்தது ஆறு மாதம் கழித்து அவன் இருவடைய வீட்டின் முன்பு கோபத்தில் வந்து நின்றான். என்ன என்றால், எனக்குக் குழந்தை பிறந்துவிட்டது என்றான். உடனே இவர் மகிழ்ச்சியானச் செய்தி என்றான். உடனே, நீர் என்னிய ஏமாற்றிவிட்டீர் என்று சப்தமிட்டான். உடனே புரோக்கர் நான் பொய்ச் சொல்லுவதே இல்லை. நான் முன்னமே சொன்னேனே பெண்ணுக்குப் பத்தொன்பது வயசும், ஆறு மாசமும்னு; இது தான் அந்த ஆறு மாசம் என்றார்.

## நண்டுகதை

ஒரு ஊருல புருசனும், பொண்டாட்டியும் இருந்தாங்களாம். அவங்களுக்குக் குழந்தையே இல்லையாம். குழந்தை இல்லாமல் இருக்கும்போது புருஷன்காரன் நீ சோறு கொண்டு வான்னு சொல்லிட்டு வயல் உழப்போவாராம். இந்தம்மா, நாம கூழ்ச் செய்திருக்கோமே இது கூட நண்டு கறி வச்சா நல்லா இருக்குமேன்னு நண்டு பிடிக்க போனாங்களாம். போகும்போது ஒரு வளையில மூணு நண்டு இருந்துச்சாம். மூணு நண்டையும்

பிடிச்சி, முறிச்சிட்டு நாலாவது நண்டைப் பிடிக்கும்போது அம்மா அம்மா என்னை முறிச்சாத நான் உன் பிள்ளை மாதிரின்னு சொல்லிச்சாம். இந்த நண்டா எனக்குப் பிள்ளையா வரப்போகுதுன்னு சொல்லிட்டு மீண்டும் முறிக்க போன போது முறிக்காதம்மா நான் உன் பிள்ளை மாதிரி என்ன விட்டிடம்மான்னு சொல்லிச்சாம். இந்தம்மா மூணு நண்டையும் குழம்பு வைச்சிட்டு இந்த நண்ட மட்டும் வீட்டிற்கு எடுத்துட்டு போனாங்களாம்.

ஒரு நாள் அந்தம்மா சோறு கொண்டு செல்லும்போது நண்டு அம்மா அம்மா இன்னைக்கு நான் சோறு கொண்டு போறேன் நீங்க வீட்டில இருங்கன்னு சொல்லிச்சாம். சரின்னு கொடுத்து விட்டாங்களாம். இது வயலுக்குக் கொண்டு போய் அப்பா நான் சோறு கொண்டு வந்திருக்கேன்னு கூப்பிட்டாம். அவரு நமக்குப் பிள்ளை இல்லையே எங்க சப்தம் வருதுனு எல்லா இடமும் பார்க்கிறாரு, ஆள் கண்ணுக்குத் தெரியல. உடனே நண்டு, அப்பா நீ வடக்க பாக்கிறாப்பா, நீ தெற்க பார்க்கிறாப்பா, கிழக்க பார்க்கிறாப்பா, மேற்க பார்க்கிறாப்பா நான் தான்பா உன் பிள்ளை பள்ளத்தில விழுந்திட்டேன் எழுந்திருக்க முடியலப்பா நீ வாப்பான்னு கூப்பிடிச்சாம். அந்தச் சத்தத்த கூர்ந்து கவனிச்சிப் போயி பள்ளத்தில விழுந்து கிடந்த நண்ட தூக்கி கரையில விட்டாரு. இனி நான் தான் உன் பிள்ளைப்பான்னு சொல்லி இலை போட்டு சோறு பரிமாறிச்சு.

அப்புறம், எப்பா நீ வீட்டிற்குப் போப்பா நான் வயலை உழுகிறேன்னு சொல்லிச்சாம். அவரு வேணாம்னு சொன்னாரு. இது வலுக்கட்டாயமாகச் சொன்னதைக் கேட்டு அவரு சரின்னு சொல்லிட்டு வீட்டுக்கு வந்திட்டாரு. அது கலப்பைக்க மேல ஏறி இருந்து உழுதுச்சாம். அந்த நேரம் மழை வந்திச்சாம். உடனே நண்டு ஒரு வளைக்குள்ள போயிருச்சி. அப்போ வயலுக்க இந்த கரையில இருந்து அந்த கரை வழியா வந்த ஆம்பளைங்க ஆள் இல்லாமல் மாடு மட்டும் நிக்குதுன்னு சொல்லிட்டு இந்தக் கரையில இருந்து அந்த கரைக்கு மாட்டை ஓட்டிட்டு போயிட்டாங்களாம். இத பாத்த நண்டு கட்ட கயறு இருக்கு, அடிக்க குச்சி இருக்கு மாட்டை அவிழ்க்காதடான்னு சொல்லிச்சாம். ஏதோ கத்துதுன்னு அவங்க மாட்ட ஓட்டிக்கிட்டுப் போயிட்டாங்க. மாட்ட களவு கொடுத்த நண்டு அழுதுகிட்டே ஓடி வந்தது. நான் பாட்டுக்கு

உழுதுட்டு இருப்பேனே. நீ இப்படி மாட்டைக் களவு கொடுத்திட்டியேன்னு வருத்தப்பட்டாரு. நீ அதை எல்லாம் நினைச்சிக் கவலைபடாதப்பா, எனக்கு எள்ளும், கொள்ளும் வறுத்துக் கொடு நான் மாட்டை கண்டுபிடிச்சி ஓட்டிட்டு வாரேன்னு சொல்லிச்சாம். அவரும் வறுத்துக் கொடுத்தாரு. நண்டு, மாட்டைத் தேடிப் போகும்போது தேள் ஒன்னு அண்ணே என்ன சாப்பிட்டிட்டு போறீங்கன்னு கேட்டுது.

நான் போற இடத்துக்கு வாரியான்னு கேட்டுட்டு அதுக்கும் தின்னக் கொடுத்துட்டுக் கூடவே கூட்டிட்டுப் போச்சு. வழியில பாம்பு ஒன்னு அண்ணே என்னன்னே தின்னுட்டுப் போறிய எனக்குக் கொடுத்துட்டு போங்கண்ணேன்னு கேட்டது, நான் போற இடத்து வந்தா தருவேன்னு சொன்னது. அப்படி, அதுவும் கூட வந்திச்சாம். கொஞ்சம் தள்ளிப் போனதும் நட்டுவாகாலி, அண்ணே என்னண்ணே தின்னுட்டுப் போறீய எனக்கும் தாங்கண்ணேன்னு கேட்டது. இது நாங்க போற இடத்துக்கு வாரியா தாரேன்னு சொல்லிச்சி. அதுவும் கூட வந்துச்சாம். இப்படி எல்லாத்தையும் அழைச்சிட்டுப் போய் மாட்ட களவாண்டவன் வீட்டுக்குள்ள இருந்த விளக்கு பக்கத்தில தேள நிக்க வச்சிருச்சி. நட்டுவாகாலிய விளக்குமாறில் வச்சிருச்சி பாம்ப கொண்டு நடுவீட்டில வச்சிருக்கு. இவைகளை அடிக்க கும்பலா எல்லாரும் கூடிய போது மாட்டை நண்டு அவிழ்த்திட்டுப் போயிடிச்சாம்.

மாட்டை ஓட்டிட்டு வந்த மறுநாள் காலையில அம்மா அப்பா நான் மாட்ட ஓட்டி வந்து தொழுத்தில கட்டிட்டேன்னு சொன்னதும் அம்மாவும் அப்பாவும் சந்தோசப்பட்டாங்க.

### கழுவில் ஏறிய நாவிதன் கதை

ஒரு ஊருல வியாபாரி ஒருத்தன் இருந்தானாம். அவன் கப்பல்களில் சரக்குகளை ஏற்றிப் பெருசா வியாபாரம் செய்து வந்தான். அத்தோடு அவன் தருமங்கள், நோன்புகள் பலச் செய்து வந்தானாம். அவனுக்க கெட்டக் காலத்திற்கு அவனுக்க பொருளைக் கொண்டு சென்ற கப்பல் கவிழ்ந்து விட்டது. அதனால அவன் சீக்கிரமே பரம ஏழையாகி விட்டானாம். அவன் ஒரு நாளைக் கழிப்பது ஒரு யுகம் போல கஷ்டப்பட்டான். அதனால சாப்பிடாம இருந்து உயிரை விட முடிவுச் செய்து அப்படியே தூங்கி விட்டான். அப்போது அவனுக்க கனவில ஒரு துறவி வந்து உன் முற்பிறப்பில் ஏழைக்கு உதவி செய்ய வேண்டி நிறைய தங்க

காசு தந்தாய். ஆனால், அதை பணத்தாசையால் நானே வைத்துக் கொண்டேன். என் எண்ணம் முழுவதும் தங்கமாக இருந்ததால் நான் தங்கமாக மாறிட்டேன். ஆனால் வெளிப் பார்வைக்குத் துறவி போல இருக்கிறேன். அதனால் நீ தடி எடுத்து எனக்க தலையில் அடித்தால் நான் முழுமையாகத் தங்கமாக மாறி விடுவேன் நானும் பேரின்பம் கொள்வேன் என்று கூறி மறைந்தார். திடீரென கனவு கலைந்து விழித்துப் பார்த்து திடுக்கிட்டான்.

மறுநாள் காலமே ஒரு துறவி பிச்சை எடுக்க வந்தாரு. அப்போம் நாவிதன் வியாபாரியின் மனைவியின் காலில் உள்ள நகங்களை வெட்டிக் கொண்டிருந்தான். வியாபாரிக்குக் கனவு ஞாபகம் வரவே ஒரு தடி எடுத்து துறவியை அடித்தான். துறவி தங்கமாக மாறி விழுந்தார். இதனை நாவிதன் பார்த்துட்டான். வியாபாரி இதனை யாரிடமும் கூறாமல் இருக்க சிறிது தங்கம் கொடுத்தான். ஆனால் நாவிதன் இது போன்று துறவிகளைத் தடியால் அடித்தால் தங்கமாக மாறிவிடுவார்கள் என்று நினைத்து, ஒரு தடியை எடுத்து கொண்டு துறவிகள் இருக்கும் மடத்திற்குச் சென்று அங்கிருந்த துறவிகளின் தலையில் ஓங்கி அடிக்கத் தொடங்கிவிட்டான். இதில் சில துறவிகள் இறந்தனர்; பல துறவிகள் அடிப்பட்டுக் கிடந்தனர். உடனே காவலாளிகள் வந்து நாவிதனைப் பிடித்து அரசனிடம் கொண்டு சென்றனர். அரசன் ஏண்டா இப்படிச் செய்தே என்று கேட்க வியாபாரியின் கதையினைச் சொன்னான். விசாரித்த அரசன் எதையும் யோசிக்காமல் துறவிகளைக் கொலைச் செய்தமையால் நாவிதனைக் கழுமரத்தில் ஏற்றும் படி உத்தரவிட்டான்.

# 5. நாட்டுப்புற மருத்துவம்

மனித இனப் பண்பாட்டுக் கூறுகளில் நாட்டுப்புற மருத்துவமும் ஒன்றாகும். இது தமிழ் மண்ணில் தோன்றிய கலைகளுக்கெல்லாம் முதன்மையான கலையாக விளங்குவது, உயிர் காக்கும் மருத்துவக் கலையே ஆகும். மருத்துவ இன மக்கள் தங்களை ஆதிமருத்துவர் என்று கூறுவதை உறுதிச் செய்யும் விதத்தில் கள ஆய்வின்போது அவர்களிடம் இருந்து மருத்துவமும், மருத்துவ முறைகளும் சேகரிக்க முடிந்தன. இவர்கள் பெரும்பாலும் நாடி பார்த்தே நோயினைக் தீர்மானிக்கின்றனர். நோயின் தன்மைக்கு ஏற்ப மருந்துகளை இவர்களே தயார் செய்துக் கொடுக்கின்றனர். இவர்களில் சிலர் நோய்க்கான கை மருந்துகளையும் சிலர் நோய்தீர்க்கும் வழிமுறைகளையும் கூறுகின்றனர். களஆய்வின் போது பேறுகால மருத்துவமுறை, மருத்துவம் பற்றிய நம்பிக்கைகள் மற்றும் காய்ச்சல், இருமல், சளிக்கட்டு, வயிற்று வலி, காது வலி, காது குத்து, காது சீழ் வடிதல், பல் வலி, முடி உதிர்தல், பொடுகு, முகப்பரு, வாய்ப்புண், மூல நோய், மஞ்சள் காமாலை, தேமல், சொறிச் சிரங்கு, அம்மை நோய், மூட்டு வலி, புண், தீப்புண், தலைவலி முதலிய நோய்களுக்குச் பல்வேறு விதமான மருந்துகளும், மருத்துவ முறைகளும் சேகரிக்கப்பட்டன.

## நாட்டுப்புற மருத்துவம்

மருத்துவம் என்ற சொல் வைத்துவம் > மைத்துவம் மருத்தன் > மருத்தம் > மருத்துவம் என்று திரிந்து அமைந்ததாகத் தெரிகிறது என்று சேகர் (1987:479) குறிப்பிடுகிறார். நோய் பார்த்து மருந்து கொடுப்பவர் மருத்துவர் எனப்பட்டார். மருத்துவர் பற்றிய பெயர் குறிப்புகளாக அறவோன் (நற்:126) மருத்தன், மருத்துவன் (கலி.137:24-25) வைத்தியன் (புறம், 173:11) முதலிய பெயர்களைச் சங்க இலக்கியத்தில் காணமுடிகிறது. பொதுவாக நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு நோய்கள் இருக்கின்றன. இதில் மனிதனுக்கு நாலாயிரம் நோய்களும், விலங்குகளுக்கு நானூற்று நாற்பத்தெட்டு நோய்களும் இருக்கின்றன. வாதம், பித்தம், சிலேத்துமம் என்ற மூன்று நாடிகளும் துடிப்பில் மிகினும், குறையினும் அதுவே நோய் தோன்ற அடிப்படை காரணமாக அமைகின்றது.

நோயினைக் கண்டறிய சங்க காலத்தில் இரண்டு முறைகளைக் கையாண்டனர். முதல்முறை சரம் பார்த்து நோயைக் கணித்தல் அதாவது மூச்சோட்டம் பார்ப்பது, ஒரு நிமிடத்தில் 360 சரவோட்டம் நடைபெறுகின்றது. இதை வைத்தும்; இன்னொரு முறையில் நாடி பார்த்தும் நோயினை முடிவு செய்தனர். நாடி பார்ப்பதற்கு ஏற்ற நேரத்தைச் சித்தர்கள் வரையறுத்துக் கூறியுள்ளனர். சித்திரை, வைகாசி ஆகிய இரு மாதங்களில் விடியற்காலையிலும், ஆனி, ஆடி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் மத்திய காலத்திலும். மார்கழி, தை, மாசி ஆகிய மாதங்களில் மாலையிலும், பங்குனி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் இரவிலும் நாடி பார்த்து அறிய வேண்டும். (மேலது:481). நான்கு மணி நேரத்திற்கு ஒருமுறை நாடி மாறும் தன்மை கொண்டது என்று கூறுகின்றனர். மனித உடலில் 72,000 நாடி வகைகள் உள்ளதாகக் கூறுகின்றனர். இத்தனை நாடிகளையும் கண்டறிந்து மருத்துவம் செய்வது என்பது இயலாத ஒன்றாகும். எனவே இவர்கள் பத்து முக்கியமான நாடிகளை அறிந்துக் கொண்டு அதில் மூன்று மிக முக்கியமான நாடிகளைக் கொண்டு நோய்களைக் கண்டறிவர். முக்கியமான பத்து நாடிகள் இடகலை, பின்கலை, சுழிமுனை, சிங்குவை, புருடன், சுத்தி, காந்தாரி, சங்குனி, அலும்புடை, குரு என்பனவாகும். மிக முக்கியமான மூன்று நாடிகளாக இடகலை - வாதம். பின் கலை - பித்தம், சுழிமுனை - கபம் எனவும் கூறுவர். அதாவது வாதம், பித்தம், கபம் (சிலேத்துமம்) என்பன முக்கிய நாடிகள் ஆகும். இவற்றின் அடிப்படையில் பிற நாடிகளையும் கண்டறிந்து நோய்க்கு மருந்து கொடுப்பர்.

உடலில் வாதம் அதிகமானால் நாவில் புளிப்புச்சுவை அதிகமாகும். பித்தம் அதிகமாகும்போது கசப்புத்தன்மை அதிகமாகும். சிலேத்துமம் அல்லது கபம் அதிகமானால் இனிப்புசுவை அதிகரிக்கும்; முறையே உடல் குளிரும், சுடும், வியர்க்கும் நாடிகள் இசை நரம்பின் துடிப்பினைப் போல இணைந்து நடக்கும் என்று நாடியின் கூறுகளை ஜெயகுமாரி (2007:300) குறிப்பிடுகிறார்.

உடலில் வாதம், பித்தம், கபம் குறிப்பிட்ட அளவு இருந்தால் நோய் இல்லை. நோய் இருந்தால் நாடி வேறுபடும். நாடி பார்க்கும்போது நாடி சரியாகக் கிடைக்கவில்லை என்றால் மரணத்திற்கான அறிகுறி என்று குறிப்பிடுகின்றனர். அனுபவம் வாயிலாகப் நாடி பார்த்து மிகவும் எளிதாக நோயினையும், நோயின்

நிலைமையினையும் அறிந்து கொள்கின்றனர். மருத்துவ இனமக்கள் சற்று முரட்டுத்தனமான வைத்தியத்தைச் செய்கின்றனர். கட்டிகள் என்று வருபவர்களை உடனே கத்தியால் வெட்டி உடைத்து பின் மருந்தினை வைத்து விடுவர். இதனாலே இவர்களிடம் மருத்துவம் செய்வதற்கு மக்கள் அஞ்சுகின்ற நிலமை இருந்தது. இவர்கள் சவரத்தொழிலுக்குப் பயன்படுத்தும் கத்தியினையே அறுவை சிகிச்சைக்கும் பயன்படுத்தினர். சில இடங்களில் இவர்கள் நாடி பார்க்கும்போது பட்டுத்துணியினைக் கையில் போட்டு நாடி பார்ப்பார்கள். எல்லாவிதமான நாடிகளும் சரியாக அளவிடப் பட்டுத்துணியினைப் பயன்படுத்தியுள்ளனர்.

இவ்வளவு திறமையாக மருத்துவம் செய்து வந்தமையால்தான் இவர்களை 'மருத்துவர்', 'பண்டிதர்' என்று அழைத்தனர். ஆங்கிலேயர்கள் இந்தியாவினுள் வந்த பிறகு இவர்களுடைய நாட்டு வைத்தியம் நலிவடையத் தொடங்கியது. எல்லோரும் எளிமையான மருத்துவ முறையான ஆங்கில மருத்துவத்தை நாடிச் சென்றமையால் இவர்களுக்கு வருமானம் இல்லாமல் போனது. எனவே மருத்துவத் தொழிலை விட்டு பலர் சவரத்தொழிலுக்கு மாறினர். அதில் பெரும்பான்மையோர் மலேசியா, சிங்கப்பூர், இலங்கைக்குச் சென்று சவரத்தொழிலைக் கற்றுக் கொண்டனர். மருத்துவம் சம்மந்தமான ஏடுகள் பல இவர்களிடம் காணப்பட்டன. அந்த ஏடுகளை இளம் சந்ததியருக்குக் கற்பித்தும், அதன் பயன்களைக் கூறாமலும் கொடுத்துச் சென்றனர். அவர்கள் இறந்தபின்பு அவர்களுடன் சேர்த்து மருத்துவ ஏடுகளையும் புதைத்துவிட்டனர். இவ்வாறு அதிகஅளவிலான ஏடுகள் அழிந்துவிட்டன. இன்று இவர்களிடம் மருத்துவ ஏடுகள் கிடைப்பது அரிதாகிவிட்டது. இவர்கள் வீட்டுப்பெண்களும் மருத்துவம் பார்க்கும் 'மருத்துவச்சி'களாக விளங்கினர். அவர்களுக்குப் பேறுகாலத்தில் தேவைப்படும் மருந்துகளை இவர்களே தயார் செய்து கொடுப்பர். குழந்தை வயிற்றிலே இறந்துவிட்டால் அதற்கும் இவர்கள் மருந்து தயார் செய்து கொடுக்கின்றனர். இது பெரிய அளவு மருந்தாக இருப்பதில்லை. நாய் எலும்பு அது கிடைக்கவில்லை என்றால் மனிதனின் எலும்பினை மாவு போல் பொடியாக்கி தாயினுடைய காலின் அடிப்பாகத்தில் தடவுமாறு கொடுத்து அனுப்புவர். அவ்வாறு செய்வதன்மூலம் இறந்த குழந்தை தானே வெளியே வந்துவிடும் என்கின்றனர்.

### மருத்துவச்சி

மருத்துவம் வளர்ச்சியடையாத காலத்தில் பெண்களுக்கு மகப்பேறு பார்க்கும் பணியினை மிகவும் திறம்பட செய்தவர்களே 'மருத்துவச்சி' என்று அழைக்கப்பட்டனர். சமுதாயத்தில் முதன்முதலில் மருத்துவ இனப்பெண்களே மகப்பேறு பார்க்கும் மருத்துவச்சிகளாக இருந்துள்ளனர். மருத்துவச்சி என்பது இன்றும் கிராமப்புறங்களில் நாவிதப் பெண்களைக் குறிப்பதாகவே உள்ளது. வேறு இனப்பெண்களும் மருத்துவச்சிகளாக இருந்துள்ளதைக் கதைப்பாடல்கள் கூறுகின்றன.

*மருத்துவச்சி வண்ணாத்தி வந்து மகிழ்ந்திருக்க*

(அபி மன்ன, பா. 7)

என்றும்

*"மிக்க புகழ் பெற்றதொரு மெல்லிமணி மாலைப்பிள்ள*
*பக்குவமாய் மருத்துவத்தில் பயிற்சிமிக உடையவனாம்*
*வாசமுள்ள வள்ளியூரில் வாழ்ந்திருக்கும் குறமகளிர்*
*நாகவள்ளி குறத்திமகள் நல்லமணி மலைப்பிள்ளை"*

(மாரி, பா. 5)

என்றும் வருகின்ற பாடல் வரிகளில் வண்ணார், குற மகளிர் மருத்துவச்சியாக இருந்துள்ளமைக் கூறப்பட்டுள்ளது. களஆய்வின்போது நாடார், வண்ணார் மற்றும் மருத்துவ இனப்பெண்களும் மருத்துவச்சிகளாக இருந்துள்ளமையைக் காணமுடிகிறது.

மருத்துவ இனபெண்கள் மருத்துவர்களைப் போன்று நாடி பார்ப்பதில் நல்ல அனுபவம் உள்ளவராகக் காணப்பட்டனர். தாயின் நாடித்துடிப்பினைப் பார்த்து மிகவும் துல்லியமாகக் குழந்தை பிறக்கும் காலத்தைக் கூறும் திறமையுள்ளவர்களாக விளங்கினர்.

## இலக்கியத்தில் மருத்துவச்சி

கதைப்பாடல்களில் மருத்துவப் பெண்கள் வயோதிகப் பெண்களாகவே காட்டப்படுகின்றனர். ஏனெனில் வாழ்க்கையில் அனுபவமேறியவர்களே மருத்துவம் பார்க்க தகுதியுடையவர் என்பது கருத்து. குழந்தைப்பேறானது, ஒரு தாய் உயிரொன்றை உலகுக்கு வழங்கத் தன் உயிருடன் போராடும் பேராபத்துடைய நிலையாகும். அந்நிலைக்கு உதவும் தகுதி முதியவருக்கே உண்டு என்பதாகும். 'நரைத்த தலை, ஒட்டி உலர்ந்த கன்னம், குழி விழுந்த கூர்மையாக விளங்கும் கண்கள், குளறிய குரல், தொங்கி விழுந்த மார்பு, கூன் விழுந்த முதுகு, சூம்பிய கை கால்கள், சுருக்கு விழுந்த

சருமம், நடுங்கும் தலை, தண்டூன்றித் தளர்ந்த நடை முதலான உடலமைப்பைக் கொண்டு மருத்துவப் பெண்கள் காணப்படுவதாக ஐவர் ராசாக்கள் கதை, சேர்வைக்காரன் கதை, மெச்சுப்பெருமாள் பாண்டியன் கதை, சிதம்பரநாடார் கதை முதலிய நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. குழந்தை பேற்றிற்குத் தேவையானப் பொருட்களை மருத்துவச்சி கொண்டு வருவதைப்பற்றி,

***"ஊணுதடி கையில் எடுத்தா***
***கொப்பிள் அறுப்பதற்கு***
***கொப்புளு கத்திய கையில எடுத்து மடியில் வைத்தார்"***

(பொன்னிறத்தாள், பா: 114-116)

என்று தொப்புள் கொடியினை அறுப்பதற்குக் கத்தியினை எடுத்து வருவதைப் பொன்னிறத்தான் கதைப்பாடல் விளக்குகிறது.

வயிற்று நோவு (வலி) பிள்ளை பிறப்பதற்கு அறிகுறியாகக் கருதப்படுகிறது. உடனே அக்கால வழக்கப்படி மருத்துவச்சிக்கு ஆளனுப்புவார்கள். மருத்துவச்சி குழந்தை துரிதமாகப் பிறந்திட வேண்டுமென்று இறைவனை வேண்டுகிறார். இதனை,

***"புத்திரதை அருள் செய்த புகழ் செந்தூர் வடிவேலா***
***காயத்தை விட்டுக் கரையேற்றிக் காத்தருள வேணுமையா***
***அரிகரி நாரணரே அதி ஸ்ரீ கிருஷ்ண பெருமானே***
***மலடிலிருந்து முத்தாயி மயக்கமதைத் திருமையா"***

(சேர்வை: 301-304)

என்று சேர்வைக்காரன் கதைப்பாடலில் பேராபத்தில் மருத்துவச்சி தன் மருத்துவத் திறமையை நம்பாது இறைவனை வேண்டுவதைக் காணலாம். குழந்தை பிறந்த பிறகுத் தாயின் வயிற்றுவலிக்கு மருந்து கொடுப்பதை,

***"காய மிளகு புளியுடன் சுக்கு***
***கடைச்சரக்கு ஒன்றையரைத்துத் திரட்டி***
***கூசாமல் சேலையைக் கட்டியிறுக்கிக்***
***கும்பக்கடிக்கு மருந்து கொடுத்தாள்"*** (சிதம்: 37)

என்று சிதம்பர நாடார் கதைப்பாடல் குறிப்பிடுகிறது. இதில் வயிற்றுவலியினைக் 'கும்பக்கடி' என்று குறிப்பிட்டுள்ளது. வயிறு சுருங்குவதற்கு வயிற்றைத் துணியினால் இறுக்கிக் கட்டி இந்த மருந்தைக் கொடுப்பதை விளக்குகிறது.

இதைப்போன்று வைரமுத்து (1994:80), தன்னுடைய இரு நாவல்களிலும் மருத்துவச்சியின் மருத்துவ முறையினைச்

சுட்டிக்காட்டியுள்ளார். அவருடைய கள்ளிக்காட்டு இதிகாசத்தில் மருத்துவச்சியாக முருகாயி என்னும் கதாப்பாத்திரத்தைப் படைத்துப் பேறுகால மருத்துவ முறையினைச் சித்தரித்துள்ளார். முருகாயி செல்லத்தாய்க்கு மருத்துவம் பார்க்கிறார். பிள்ளை எப்பப் பிறக்கும் என்பதைத் தெரிந்து கொள்ள பிள்ளை பிறக்கும் வழித்தடத்தில் நிதானமாய், சூதானமாய் விரல்விட்டுப் பார்த்தாள் முருகாயி. அளவு தெரியும் அவளுக்கு; அஃது ஒரு விரல் சுத்தளவு இருந்தால் ஒரு மாசம் ஆகும் பிள்ளை பெற; மூன்று விரல் சுத்தளவு இருந்தால் பதினெட்டு நாட்களாகும்; ஆனால் செல்லத்தாய்க்கு ஐந்துவிரல் சுத்தளவு இருந்தது. அது இன்னைக்கே இப்பவே என்கிற பிரசவவலிதான் முடிவுக்கு வந்தாள் முருகாயி என்று குழந்தை பிறக்கும் நேரத்தைக் கணித்துள்ளதையும், குழந்தை பிறந்தவுடன் குழந்தையின் வாய்க்குள் விரல்விட்டு அக்கி எடுத்தாள் வெள்ளைத் துணியால் மேனி துடைத்தாள் தலைகீழாகப் பிடித்துக் கொஞ்ச நேரம் குழந்தையை அழவிட்டாள். பின்னர் முருகாயி நான்கு விரல் கடைவிட்டு தொப்புழ்க் கொடியறுத்து மூடிப்போட்டாள் (மேலது, 1994:81) என்று குழந்தை பிறந்த பிறகுச் செய்யும் செயல்களையும் வைரமுத்து முருகாயி என்னும் நாவிதப்பெண் பாத்திரம் மூலம் எதார்த்தமாகக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பேறுகால மருத்துவம்

ஊரில் உள்ள பெண்களுக்கு வலி வந்தவுடன் மருத்துவச்சிக்கு ஆள் அனுப்புகின்றனர். மருத்துவச்சி எந்த வேலை செய்து கொண்டிருந்தாலும் (வயல் வேலை, வீட்டு வேலை) ஊர் மக்கள் உடனே அனுப்பிவிடுவது வழக்கம். மருத்துவச்சி வந்தவுடன் தாயின் கையைப் பிடித்து நாடி பார்த்துக் குழந்தை எப்போது பிறக்கும் என்பதை அனுபவபூர்வமாகப் புரிந்துக்கொண்டு உறவினர்களிடம் தெரியப்படுத்துகின்றனர். குழந்தை நேராக இருந்தால் எளிதாகப் பிறக்கும் தலைமாறிக் கிடந்தால் பிறப்பதற்கு முன் தாயையும், மருத்துவச்சியையும் மிகவும் கஷ்டப்படுத்திவிடும் என்று தகவலாளி கூறுகின்றார். பிரசவ வேதனையில் துடிக்கும் பெண்ணைத் தனி அறையில் இருக்க வைத்து மருத்துவச்சியை அழைத்து வந்து சீரகத்தால் செய்யப்பட்ட கசாயம் வைத்துக் கொடுக்கின்றனர் என்று சற்குணவதி (2004:132) குறிப்பிடுகிறார்.

குழந்தை பிறக்கும் போது வெந்நீர், தேங்காய் எண்ணெய் அல்லது வேப்பெண்ணெய், சிறிது துணியும் வாங்கிக்

கொள்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் தனியாகப் பிரசவம் பார்ப்பது இல்லை. உடன் யாரையாவது அழைத்துச் செல்வது வழக்கம். பெரும்பாலும் தன்னுடைய மகளையே அழைத்துச் செல்வார். இவர்கள் எண்ணெயினைத் தாயின் வயிற்றில் கீழிருந்து மேல்நோக்கித் தடவி குழந்தையை ஒதுக்கிக் கொடுத்துக் குழந்தை நேராக வரும்படி செய்ததும் பெண்ணுக்கு வலி அதிகமாகும். முதலில் கன்னிக்குடம் உடைந்து கழிவுகள் வெளியே வரும். பின் குழந்தை பிறக்கிறது. சிலருக்குக் கன்னிக்குடம் உடைந்து காலதாமதமாகியும் குழந்தை பிறக்கலாம். குழந்தை பிறக்கும்போது இவர்கள் கையில் எண்ணெய் தடவி பிறப்புறுப்பை விரல் கொண்டு பெரிதாக்கி விடுவர். இது குழந்தை வெளிவர எளிதாக இருக்கும். முதலில் குழந்தையின் தலை வெளியே வரும். தலை வந்தவுடன் தோள்பட்டை வெளியே வரும்வரை மிகவும் கஷ்டமாக இருக்கும். பின்னர் மற்ற பாகங்கள் எளிதாக வந்துவிடும். குழந்தை தலைமாறிக் கிடந்தால் குழந்தை பிறக்க கடினமாகிவிடும். இவர்கள் கைப்போட்டு குழந்தையினை மாற்றி எடுக்கின்ற அளவிற்கு அனுபவமிக்கவராக இருந்தனர். குழந்தை பிறக்கும்போது ஒருவர் தாயின் வயிற்றை அமுக்கி பிடிக்குமாறுச் செய்கின்றனர்.

குழந்தை பிறந்தவுடன் அழாமல் இருந்தால் தொப்புள் கொடியினை அறுக்காமல் வெந்நீரில் இடுகின்றனர். அப்போது தாயிடமிருந்து உயிர் தனியே பிரித்து குழந்தைக்கு உயிர் வந்து அழும். அதன்பின் நான்கு விரல் இடைவெளி விட்டு கொடியில் கல் பார்த்து கல் இல்லாத இடத்தில் 'பண்ணரிவாள்' அல்லது கத்தி, பிளேடு கொண்டு அறுக்கின்றனர். கொடியினுள் காற்று புகாதவாறு முடிச்சி இடுகின்றனர்.

தொப்புள் கொடியில் உள்ள கல்லின் நிறத்தையும், அவை இருக்கும் தொலைவினையும், எண்ணிக்கையினையும் கணக்கிட்டு அடுத்து எத்தனை குழந்தைகள் உள்ளன என்பதையும், அடுத்த குழந்தை ஆணா? பெண்ணா? என்பதையும் கூறிவிடுகின்றனர். தொப்புள் கொடியிலுள்ள கல் பக்கத்தில் இருந்தால் அடுத்த ஆண்டே குழந்தை பிறக்கும் என்றும், இடைவெளிவிட்டு இருந்தால் அடுத்த குழந்தை பிறக்க அதிக நாட்களாகும் என்றும் சரியாக கூறிவிடுகின்றனர். கல்லானது ஆட்டாம் புழுக்கை (ஆட்டின் எரு) போன்று கறுப்பு நிறத்தில் இருந்தால் அடுத்த குழந்தை ஆண் குழந்தையாக இருக்கும் என்றும், வெள்ளை நிறத்தில் பிசின்

போன்று இருந்தால் பெண் குழந்தையாக இருக்கும் என்றும் கூறுகின்றனர். கல் எதுவும் இல்லையென்றால் பிறந்த குழந்தையின் குண்டியில் சுழி இருக்கும்; அதுவும் இல்லையெனில் இனி குழந்தைப் பாக்கியமே இல்லை என்று தீர்மானமாகவேக் கூறுகின்றனர். அறுத்த தொப்புள் கொடியினைத் தாய் குளிக்கும் இடத்தில் அல்லது அம்மிக் கல்லின் பக்கத்தில் புதைக்குமாறு கூறுகின்றனர். கொடியினை நாயோ பிற உயிர்களோ எடுத்துச் செல்லக்கூடாது என்றும், கொடியினை நனையுமிடத்தில் புதைத்தால் தாய்க்கு மிகுதியான பால் சுரக்கும் என்றும் நம்புகின்றனர்.

குழந்தை கொடி சுற்றி இருந்தால் தாய்க்கு முட்டை, பெருஞ்சீரகம் இவற்றை வறுத்து நீர் கொடுத்தாலோ அல்லது வெந்தயம், கிராம்பு இவற்றை வறுத்து நீர்க்கொடுத்தால் குழந்தை சிறிது நேரத்தில் பிறக்கும். சிலருக்குப் பெருஞ்சீரகம் அதிகமாக ஒத்துக்கொள்ளாது. குழந்தைப் பிறந்தவுடன் அதன் மீதுள்ள செடியினை (கொடி) அது செல்லுகின்ற வழியாக கைவிரலை விட்டு இழக்கிவிட்டு கையினை எடுத்துவிடுகின்றனர். பின் கொடியினை இழுத்து எடுக்கின்றனர். குழந்தை கொடி சுற்றிப் பிறக்க காரணம் தாய் கர்ப்பக் காலத்தில் முறையாகப் படுக்காமல் உருண்டு புரண்டு படுப்பதே காரணம் என்று கூறுகின்றனர்.

பிறந்த குழந்தையின் மேல் வெள்ளை நிறத்தில் பிசின் போன்ற படிவு காணப்படும். இதனை 'மக்கு' என்று கூறுகின்றனர். அதனைச் சுத்தம் செய்வதற்கு மஞ்சள் அல்லது எண்ணெய் தடவி துணியினால் துடைத்து சுத்தம் செய்கின்றனர். குழந்தையின் வாயில் உள்ள அக்கியினைக் கைவிட்டு எடுக்கின்றனர். வெள்ளைபூண்டு, உள்ளி இவற்றை நசுக்கி தண்ணீர் கொடுக்கின்றனர். இதில் தேன் அல்லது கற்கண்டு கலந்தும் சேனை கொடுக்கின்றனர். குழந்தையின் வயிற்றில் உள்ள கழிவுகள் வெளியே வருவதற்காகவும், ஒரு சடங்கிற்காகவும் இவ்வாறு செய்வதாகக் கூறுகின்றனர். இரண்டாவது குழந்தையாக இருந்தால் சேனை கொடுக்கும்போது மூத்தக் குழந்தைக்கும் ஒரு சொட்டு சேனை கொடுப்பது மரபாக உள்ளது. இஃது உடன்பிறப்பு பாசத்திற்கு அடையாளமாகக் கொடுக்கப்படுவதாகக் கூறுகின்றனர். தேவரின மக்கள் கல்லினை உரசி சேனை கொடுக்கின்றனர். வெள்ளாளர், நாடார் மருத்துவ இனமக்கள் பனங்கற்கண்டு, தேன், முந்திரிப்பழம் முதலியவற்றைக் கலந்து சேனை கொடுக்கின்றனர்.

குழந்தையை முதன்முதலில் தொடுபவள் மருத்துவச்சியே. எனவே இவர்கள் குழந்தையினைத் தாயிடம் கொடுக்கும்போது குழந்தையைத் தலைகீழாகத் தூக்கிக் குண்டியில் தட்டிவிட்டு,

*கண்டத கேட்டத சொல்லாத*
*காட்டு மடத்தில தங்காத*
*கூடாதாரோடு கூடாத*
*கோள் சொல்லாத*

என்றுகூறிக் குழந்தையினைத் தாயின் கையில் வைத்தபடியே 'பிள்ளை உனக்கு, பணம் எனக்கு' என்று மூன்று முறை கூறித் தாயிடம் கொடுக்கின்றனர். இவர்களுக்குச் சேவைத் தட்சணையாக அரிசி, தேங்காய், துணி, பணம் ஆகியவற்றைக் கொடுக்கின்றனர்.

இவர்கள் குழந்தை பிறக்கும்போது மட்டும் பணி செய்வது இல்லை. பெண் கருவுற்று இருக்கும்போதே அவர்களுக்குத் தேவையான மருந்துகள் அரைத்துக் கொடுப்பதும், அறிவுரைகளைக் கூறுவதும் இவர்களுடைய பணியாகும். குழந்தை பிறந்த பிறகு எண்ணெய் வைத்துக் குளிப்பாட்டுதல் ஆகிய பணிகளையும் செய்கின்றனர். அவர்களுக்கு வரும் நோய்களுக்கும் மருத்துவம் செய்கின்றனர். பெண்கள் சம்மந்தமான அனைத்து மருத்துவத்தையும் இவர்களே பார்த்துக் கொள்கின்றனர். இவர்கள் குழந்தைப் பேற்றினைச் சற்று முரட்டுத்தனமாகப் பார்ப்பதினால் மக்கள் பயத்தின் காரணமாக மருத்துவமனையினை நாடிச் செல்கின்றனர். மருத்துவமனைகளிலும் பேறுகால உதவிகள் செய்வதற்கு இவர்களே பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

## மருத்துவம் பற்றிய நம்பிக்கைகள்

மருத்துவ இனமக்கள் கைமருத்துவம், மூலிகை மருத்துவம் ஆகியவற்றைச் செய்கின்றனர். நாடி பார்த்து மருத்துவம் செய்யும்போது கிழக்கு திசை நோக்கி அமர்ந்திருந்தே செய்வார்கள். மருந்து தயார் செய்யும்போது அவற்றை யாரிடமும் சொல்லவோ, அது குறித்துப் பேசவோ கூடாது. அவ்வாறு கூறினால் மருந்து பலன் தராது என்று நம்புகின்றனர். மருத்துவப் பச்சிலைகளைச் சேகரித்தல். மருந்து தயாரித்தல் மருத்துவம் செய்தல் என்று ஒவ்வொரு நிலைகளிலும் பல்வேறு விதமான நம்பிக்கைகளைக் கடைபிடிக்கின்றனர். மருத்துவத் தொழில் செய்யும் மருத்துவ இனப் பெண்கள் (மருத்துவச்சி) எதிரே வந்தால் நல்ல சகுனமாக மக்கள் நினைக்கின்றனர். பௌர்ணமி, அமாவாசை நாட்களில் மருந்து சாப்பிட்டால் அது பயன் தராது என்றும் நம்புகின்றனர். சில மருந்துகளை இரவு நேரங்களில் தயார் செய்கின்றனர். ஆளரவமற்ற

நேரங்களில் தயார் செய்தால்தான் பயனளிக்கும் என்று நம்புகின்றனர். இவ்வாறு ஒவ்வொரு மருந்தையும் சில நம்பிக்கையின் அடிப்படையில் தயாரித்துப் பயன்படுத்துகின்றனர்.

**முடி உதிர்தல்**

முடியின் வளர்ச்சிக்குத் தேவையானப் புரதசத்துக் கிடைக்காமல் இருக்கும் போது முடிகள் உதிர்கின்றன. சிலருக்குப் பரம்பரையாக முடி உதிர்ந்து விடுவதும் உண்டு. இவ்வின மக்கள் முடி உதிராமல் இருப்பதற்கும், வளர்வதற்கும் பல விதமான மருத்துவமும், பல மருந்து முறைகளையும் கூறுகின்றனர். அவை,

1. சீந்தில் கொடியினை இடித்துச் சாறு பிழிந்து அதில் சமப் பங்கு நல்லெண்ணெயைக் கலந்து கொள்ளவும். ஆலமரத்தின் மெல்லிய விழுதுகளை எடுத்து உலர்த்தி இடித்து, சலித்த தூளும் சமப் பங்கு ஓரிலைத் தாமரையின் வேரையும் எடுத்து அரைத்துக் கொள்ளவும். இவ்விழுதுகளை எண்ணெய் கலவையுடன் சேர்த்து நன்கு காய்த்து மெழுகு போல் வரும் பக்குவத்தில் வடித்தெடுத்து தலையில் தேய்த்துக் குளித்து வந்தால் உதிர்ந்த முடியும் முளைத்து வரும்.
2. கரிசலாங் கண்ணிச் சாறு, கருந்தும்பை சாறு, இவற்றுடன் நல்லெண்ணெய், எட்டிப்பழம், கல்கம், இவற்றைச் சேர்த்துக் காய்ச்சிய தைலத்தைத் தலையில் தடவி வந்தால் வழுக்கை மாறி முடி வளரும்.
3. அதிமதுரத்தை இடித்துப் பொடித்து அதனை எருமைப் பால் விட்டு அம்மியில் அரைத்துப் பாலிலேயே குழைத்துத் தலையில் தேய்த்துக் குளித்து வந்தால் முடி அடர்த்தியாக வளரும்.
4. பசும் பாலைச் சுண்டக் காய்த்து அதனுடன் தேங்காய் எண்ணெயைச் சேர்த்து நன்கு காய்த்து அதனைத் தினமும் தலையில் தேய்த்து வந்தால் முடி உதிராது, முடி வெளுக்கவும் செய்யாது.
5. செம்பருத்திப் பூவினை நன்கு அரைத்து தேங்காய் எண்ணெய் விட்டு நன்கு காய்த்து தினமும் தலையில் தேய்த்து வந்தால் முடி உதிராது.
6. ஆத்துகோமட்டிக் காயினை இரண்டாகப் பிளந்து தலையில் எலுமிச்சை பழம் தேய்ப்பது போன்று தேய்த்து வந்தால்

முடி அடர்த்தியாக வளரும். தலையில் புளு வெட்டு இருந்தாலும் மாறும்.

7. கையாந்திரா, கொடுப்பக் கீரை, கறிவேப்பிலை, செம்பருத்திப் பூ, மருதோன்றி இலை (சிறிது) ஆகியவற்றைச் சேர்த்து அரைத்துச் சாறு பிழிந்து நன்கு வத்தும் வரை கொதிக்க வைத்துப் பின் அதனுடன் தேங்காய்ப் பாலினைச் சேர்த்து கொதிக்க வைத்து எடுத்து, அதனுடன் தேங்காய் எண்ணெயும் சேர்த்து எடுத்து தலையில் தேய்த்து வந்தால் முடி கருப்பாகும். முடி நன்கு வளரும்.
8. வேப்பிலையைச் சிறிது எடுத்து, நீரில் நன்கு வேக வைத்து, ஒரு நாள் கழித்து மறுதினம் வேக வைத்த நீரைக் கொண்டு தலையில் தேய்த்து வந்தால் முடி உதிர்வது நின்று விடும்.
9. கறி வேப்பிலையை மை போன்று அரைத்து, தேங்காய் எண்ணெயில் கலந்து காய்த்துத் தலையில் தேய்த்து வர, தலைமுடி அடர்த்தியாகவும், கருப்பாகவும் வளரும்.
10. காய்ந்த நெல்லிக் காயைத் தூளாக்கி, தேங்காய் எண்ணெயுடன் கலந்துக் கொதிக்க வைத்து, வடிகட்டி தேய்த்து வர, முடி கருமையாகும். முடி உதிர்வதையும் தடுக்கும்.
11. மருதோன்றிப் பூவைத் தேங்காய் எண்ணெயில் ஊற வைத்து, பின் வெயிலில் வைத்து சூடாக்கி தொடர்ந்துத் தேய்த்து வந்தால் வழுக்கைத் தலையிலும் முடி வளரும்.
12. தாமரைப் பூவினைக் கசாயம் வைத்து, காலையிலும், மாலையிலும் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் நரைமுடி மாறி விடும்.

### பொடுகு

எண்ணெய்ச் சத்து குறைவின் காரணமாகத் தலையில் உமி போன்று பொடுகுகள் வருகின்றன. இவற்றால் தலை கடிப்பதுடன் தலையில் புண்களும் ஏற்படுகின்றன. இதற்கு மூன்று விதமான மருத்துவமும், பல மருத்துவப் பொருட்களும் பயன்படுத்தும் பழக்கம் உள்ளது.

1. வெந்தயத்தைப் பாலில் ஊற வைத்து நன்கு மைப் போன்று அரைத்துத் தலையில் தேய்த்துச் சிறிது நேரம் கழித்துக் குளித்தால் பொடுகு மாறும்.
2. குப்பை மேனியுடன், உப்பு சேர்த்து நன்கு அரைத்துத் தலையில் தேய்த்துப் பத்து நிமிடங்கள் கழித்துக் குளிக்க வேண்டும். இவ்வாறு ஒரு வாரம் செய்தால் பொடுகு மாறும்.

3. வேப்பகோமட்டி காயினை வேக வைத்து, அதனைத் தலையில் தேய்த்துச் சிறிது நேரம் கழித்துச் சிகைக்காய் பொடி போட்டுக் குளித்து வந்தால் பொடுகு இருந்த இடம் தெரியாமல் போகும்.

**காய்ச்சல்**

உடலில் வெப்பம் எப்போதும் குறிப்பிட்ட அளவில் இருக்க வேண்டும், அது அதிகமாகும் போது காய்ச்சல் நோய் வருகிறது, உடலில் நோய் எதிர்ப்பு தன்மை குறைவாக இருந்தாலும், பிற நோய்களின் அறிகுறியாக இருந்தாலும் காய்ச்சல் தான் முதலில் ஏற்படுகிறது, காய்ச்சல் வரும் முன்பே உடலில் வலியும், சோர்வும் ஏற்படும், வாய் கசப்பு ஏற்பட்டு உணவு உண்ணும் விருப்பம் இருக்காது. காய்ச்சல் ஏற்படும் போது இம்மருந்துகளைப் பயன்படுத்துகின்றனர்.

1. நொச்சி, ஆடாதொடை, நேனாஇலை, தூதுவளை, துளசி, வேப்பிலை கொழுந்து, கிருஷ்ண காந்தி, விளறு, மிளகு,இவற்றைச் சேர்த்து நன்கு அவித்து கசாயம் போட்டுக் குடித்தால் காய்ச்சல் குணமாகும்.
2. கசகசா, சீனிக்காரம், உள்ளி, சிறுதும்பை, பெருந்தும்பை, வெள்ளைஎருகு, கருநொச்சி, துளசி, இவற்றைச் சேர்த்து அவித்துச் சாறு பிழிந்து தேங்காய் எண்ணெய் சேர்த்துக் காய்த்துத் தலையில் தேய்த்தால் எந்தக் கடும் காய்ச்சலாக இருந்தாலும் தீரும்.
3. அகத்திக் கீரையை நன்கு அரைத்து சாறு எடுத்து உடல் முழுவதும் நன்கு தடவி விட்டால் காய்ச்சல் குணமாகும்.
4. சுக்கு, துளசி வேர் இரண்டையும் நன்கு வேக வைத்து அதில் கிடைக்கும் சாறை இரண்டு நாட்கள் குடிக்கும் போது காய்ச்சல் குணமடையும்.
5. வெங்காயச்சாறை அரைக் கரண்டி அளவு தினமும் இரண்டு வேளைகள் வீதம் நான்கு நாட்கள் கொடுத்து வந்தால் காய்ச்சல் நீங்கும்.
6. துளசி இலையை நீரில் போட்டுக் காய்த்து வடிகட்டி அதனுடன் தேன் அல்லது கற்கண்டு கலந்து ஒரு நாளைக்கு மூன்று வேளை வீதம் கொடுத்து வந்தால் காய்ச்சல் குணமாகும்.
7. சுக்கு, ஆடாதொடை, விஷ்ணு காந்தி, பற்பாடகம், கண்டங் கத்தரி, எல்லாம் ஒரே அளவில் எடுத்து இடித்து அதனுடன் சிறிது தண்ணீர் கலந்து நல்ல சுண்ட காய்ச்சி எடுக்கவும். அந்நீரைத் தினமும் மூன்று நேரம் அரைச்சங்கு வீதம் குடித்து வந்தால் நோய் குணமடையும்.

8. விஷ்ணு காந்தி இலையைப் பால் விட்டு மை போல நன்கு அரைத்துப் பின் அதனைத் துணியினால் வடிக்கட்டி மூன்று வேளை சாப்பிட்டால் காய்ச்சல் குணமாகும்.
9. சுக்கு, திப்பிலி, சீந்தில் கொடி, இவைகள் ஒவ்வொன்றிலும் சிறிது எடுத்துச் சதைத்து சிறிது நீர் விட்டுக் கொதிக்க வைத்து, நீர் பாதியாகக் குறையும் படி காய்த்து ஒரு சங்கு வீதம் மூன்று நாட்கள் கொடுத்தால் காய்ச்சல் குணமடையும்.
10. வேப்பிலையை நன்கு வறுத்து சூட்டோடு தலைக்கு வைத்துத் தூங்கினால் காய்ச்சல் குணமாகும் என்று கூறுகின்றனர்.

**இருமல்**

நெஞ்சில் ஏற்பட்ட சளியினால் நாசி உலர்ந்து இருமல் ஏற்படுகிறது.இது சளியினாலும், குளிர்ந்த உணவுப் பொருட்களை உட்கொள்வதினாலும், தொண்டை உஷ்ணத்தினாலும் வருகின்றது. இதனை நீக்க:-

1. சுக்கு, மிளகு, திப்பிலி, அரிதாரம், வாய்விளங்கம், வங்கப்பச்சை, ஏலக்காய், பெருஞ்சீரகம், கார்கோல் அரிசி, அக்கரா, ஜாதிக்காய், ஆகியவற்றைச் சேர்த்து நன்குப் பொடியாக்கி இஞ்சிச் சாறுடன் கலந்துத் தினமும் சாப்பிட்டு வந்தால் இருமல் குணமடையும்.
2. இஞ்சியினை இடித்து அரைக் கரண்டி சாறும் மாதுளம் பழத்தின் சாறு ஒரு கரண்டியும் எடுத்துக் கலந்து பாதியளவுக் காலையிலும், மாலையிலும் சாப்பிட்டு வந்தால் இருமல் குணமாகும்.
3. அம்மான் பச்சரிசி இலையை நன்கு சுத்தம் செய்து உரலில் போட்டு இடித்து சாறு பிழிந்து அந்தச் சாறை வடிகட்டி ஒரு கரண்டிக்குக் கால் கரண்டி சர்க்கரை சேர்த்து, ஒரு வாரம் தொடர்ந்து காலையில் எழுந்தவுடன் குடித்து வந்தால் இருமல் குறையும்.
4. எலுமிச்சம் பழச்சாறுடன் இஞ்சிச் சாறினைக் கலந்துச் சிறிது உப்பும் சேர்த்துச் சாப்பிட்டால் இருமல் மாறும், இதைப் போன்று இஞ்சிச் சாறுடன், மாதுளம் பழச்சாறும் சம அளவு கலந்துத் தேன் கலந்துத் தினமும் மூன்று நேரமும் சாப்பிட்டு வந்தால் இருமல் தீரும்.
5. முருங்கைப்பட்டை, வேப்பம்பட்டை, கருப்புக்கட்டி, சுக்கு, நல்ல மிளகு, ஆகியவற்றைப் பொடித்து ஒரு டம்ளர் தண்ணீரில் சுண்டக் காய்த்து கால் டம்ளர் அளவாக்கி அதனுடன் முட்டையினைக் கலந்து குடித்தால் இருமல் காணாமல் போய்விடும்.
6. ஓமவல்லி இலைச் சாறில் அல்லது திருநீற்றுப் பச்சிலைச் சாறில் சர்க்கரைக் கலந்து சாப்பிட்டு வந்தால் இருமல் குணமாகும்.

7. திப்பிலித் தனியாக உரலில் போட்டு இடித்து மாவாக்கித் (தூளாக்கி) தேனில் குழைத்துத் தினமும் சிறிது சாப்பிட்டு வந்தால் இருமல் தீரும்.
8. பனைவெல்லத்தை பாலில் கலந்து மூன்று வேளையும் குடித்து வந்தால் இருமல் குறையும்.
9. பாலைச் சுண்டக் காய்த்து அதில் சுத்தமான மஞ்சள் பொடியைச் சேர்த்துக் காலையிலும், மாலையிலும் சாப்பிட்டால் இருமல் மாறும்.
10. குப்பை மேனி இலைச்சாறு, துளசி இலைச்சாறு இரண்டையும் சேர்த்துத் தினமும் ஐந்து துளிகள் சாப்பிட்டால் இருமல் குணமாகும்.
11. பார்லி அரிசியைச் சிறிது தண்ணீரில் வேக வைத்து இறக்கித் தெளிய வைத்து அந்த நீருடன் இரண்டு தேக்கரண்டி தேனைக் கலக்கித் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இருமல் தீரும்.

***சளிக்கட்டு***

குளிர், சலதோசம் ஆகியவற்றால் சளிக்கட்டு ஏற்படுகின்றது. இது நுரையீரல் பாதையை அடைத்து மூச்சி விட முடியாமல் கஷ்டபடுத்தும். இதனைக் குணப்படுத்த,

1. அதிமதுர வேரினைப் பொடிச் செய்து அதனைப் பசும் பாலில் கலந்துச் சாப்பிட்டால் சளிக்கட்டு நீங்கும்.
2. மிளகினை நெய்யில் வறுத்துப் பொடித்துச் சர்க்கரை பாகில் கலக்கி, அதனைச் சுண்டைக்காய் அளவில் உருட்டி வைத்துக் கொண்டு, அதில் ஒன்றை வாயில் அடக்கிக் கொண்டு, உமிழ் நீரை மட்டும் விழுங்கி வந்தால் சளி, சலதோசம் நீங்கும்.
3. கடுக்காயை நெருப்பில் சுட்டு அதனை உடைத்து வாயில் போட்டு, அடக்கிக் கொண்டு உமிழ் நீரை மட்டும் விழுங்கினால் சளி குறையும்.
4. குப்பைமேனியினை நன்கு அரைத்து அதன் சாறுடன் உப்பும் சேர்த்துக் கொடுத்தால் குழந்தைகளுக்குச் சளி குணமடையும்.
5. கண்டங்கத்தரி, ஓமவல்லி இலை, வெற்றிலை, நொச்சி, ஆடாதொடை இலை, இவற்றை அரைத்து 'வாளம்' என்னும் மருந்தினால் வேக வைத்துப் பக்குவப்படுத்தி சிறு சிறு உருண்டையாக உருட்டி கொடுத்தால் குழந்தைகளுக்குச் சளி குறையும்.
6. தெற்றிப்பூவை நன்குக் காய வைத்து அதனைப் பொடிச் செய்து வேப்பெண்ணெயில் குழைத்துச் சாப்பிடக் கொடுத்தால் சளிக்கட்டு குணமடையும்.

7. குப்பைமேனி இலையினைக் காய வைத்துப் பொடிச் செய்து, வேப்பெண்ணெயில் குழைத்துச் சாப்பிடக் கொடுத்தால் சளி வெளியேறும்.குப்பைமேனி இலையினைச் சாறுப் பிழிந்து கொடுத்தாலும் சளி வெளியேறி குணமடையும்.
8. சுக்கு, மிளகு, இஞ்சி இவற்றை மாவு போல் அரைத்து, அதனுடன் துளசி சாறும் சேர்த்துச் சாப்பிட்டால் சளி குணமாகும். சாப்பிட கஷ்டமாக இருந்தால் சிறிது சர்க்கரையும் சேர்த்துக் கொள்ளலாம் என்கின்றனர்.
9. கடுக்காயினை நன்கு பொடித்து, தூளாக்கி அதனைக் கரிசலாங்கண்ணிச் சாறுடன் சேர்த்து உள்நாக்கில் தடவினால் சளி வெளியே வந்து விடும்.
10. வாழைத் தண்டை வேக வைத்துச் சாப்பிட்டு வந்தாலும் சளி குறையும்.
11. இஞ்சி, கொஞ்சி வேர், முருங்கைப் பட்டை ஆகியவற்றை இடித்துச் சாறுப் பிழிந்து தண்ணீரில் கலந்து ஒரு வாரம் தினமும் சாப்பிட்டு வந்தால் சளி குணமாகும்.
12. திப்பிலி, அதிமதுரம், தாளிசப் பத்திரி இவற்றை இடித்துப் பொடியாக்கித் தேனில் கலந்து தினமும் காலையிலும், மாலையிலும் சாப்பிட்டு வந்தால் ஒரு வாரத்தில் சளி கட்டு குணமடையும்.
13. கருந்துளசி இலையின் சாறைப் பிழிந்துத் தினமும் சில துளிகள் வீதம் சாப்பிட்டு வந்தால் சளிக்கட்டு காணாமல் போகும்.

**வயிற்று வலி**

இவ்வின மக்கள் வெட்டிய தலை முடிகள் வயிற்றில் போவதனால் வயிற்றுவலி வரும் என்கின்றனர். மட்டுமின்றி, கிருமிகளினாலும் வயிற்று வலி ஏற்படும். இதைப் போக்க,

1. வேப்ப இலையினை மை போல அரைத்துக் குடித்தால் வயிற்றுவலி குணமாகும்.
2. காலையில் வெறும் வயிற்றில் வெந்தயத்தைச் சாப்பிட்டால் வயிற்று வலி மாறும்.
3. சாப்பிடும் போது முடி வயிற்றின் உள்ளே போய் வலி ஏற்பட்டால் வாழைப்பழம் மூன்றோ, நான்கோ சாப்பிட்டால் குணமாகும்.
4. மஞ்சள், சுண்ணாம்பு இவற்றை சேர்த்து நன்கு கலக்கி வைத்து பின் அதனைத் தெளிய வைக்க வேண்டும். தெளிந்த நீரினை வெறும் வயிற்றில் குடித்தால் வயிற்றுப்போக்கு நீங்கும்.

5. சாரணை வேர், மலை தாங்கி வேர், பிரண்டை வேர், புளிச்சல் வேர், பாரஞ்சி கிழங்கு வேர், கோரை வேர், ஆகியவற்றை சிறு சிறு துண்டாக வெட்டி ஒவ்வொரு துண்டையும் தண்ணீருடன் சேர்த்து உருண்டையாக்கி தினமும் ஒவ்வொன்று வீதம் மூன்று நாள்கள் சாப்பிட்டால் வயிற்று வலி குணமாகும்.
6. பிஞ்சு மாதுளம் காயினையும், கசகசாவையும் சேர்த்து அரைத்து வெந்நீரில் கலந்துச் சாப்பிட்டால் வயிற்று வலி குணமாகும்.
7. இஞ்சியினைப் பிழிந்து சாறு எடுத்தும் கொடுப்பர்.
8. காயத்தையும் வயிற்று வலிக்குச் சாப்பிடுமாறு கொடுப்பர்.
9. எலுமிச்சைப் பழச்சாறுடன் சிறிது அதிகமாக உப்பு கலந்து குடித்தால் வயிற்று வலி குணமடையும்.
10. நீர்ப்பகுதியில் வளர்ந்துள்ள முருங்கை கொழுந்தினை நன்கு சாறு பிழிந்து குடித்தால் வயிற்றுவலி உடனே நீங்கும்.

**காதில் ஏற்படும் நோய்கள்**

தலை நீரினாலும், நுண்கிருமிகளினாலும், தண்ணீர் காதினுள் செல்வதினாலும், காது பருவினாலும், காதினுள் குச்சி வைத்து குடைவதினாலும் காதுவலி ஏற்படுவதாகக் கூறுகின்றனர். இதனைப் போக்க,

1. வெற்றிலையை இடித்துச் சாறு பிழிந்து எடுத்து ஒரு காதுக்கு இரு துளிகள் வீதம் விட்டு, பஞ்சினால் அடைத்து விட வேண்டும். இவ்விதமாக மூன்று நாட்கள் விட்டு வந்தால் காது குத்து மாறும்.
2. வேப்பெண்ணெயை அப்படியே காதில் இரு துளிகள் வீதம் விட்டு வந்தால் காது வலி, காது குத்தல் நீங்கும்.
3. சிற்றா மல்லி வேர், பேரா மல்லி வேர், இவற்றில் தயார் செய்த தைலங்களைக் காது வலிக்குப் பயன்படுத்துவதாகக் கூறுகின்றனர்.
4. கருந்துளசி சாறினை எடுத்து இரண்டு துளிகள் வீதம் ஒரு வேளை மட்டும் விட்டால் காது வலி குணமடையும்.
5. மஞ்சள் கலர் அடித்த பழுத்த எருக்கன் இலையினைத் தீயில் வதக்கிச் சாறு பிழிந்து, இரண்டு சொட்டுகள் வீதம் இருவேளை காதில் விட்டால் காதுவலி குணமாகும்.
6. மருதோன்றி வேரை உரலில் இட்டு இடித்து இரண்டு துளிச் சாறினை ஒரு வேளை மட்டும் காதில் விட்டால் காது வலி நீங்கும்.

7. வாழைக் கிழங்கை நசுக்கிச் சாறு எடுத்து இளஞ் சூடாக்கி ஒரு வேளைக்கு மூன்று சொட்டுகள் வீதம் காதினுள் விட்டு காந்தப் பஞ்சியினால் அடைத்து வந்தால் சீழ் வடிதல் குணமடையும்.
8. கற்றாழையைத் தீயில் வாட்டி, வதக்கி அதனைச் சாறு பிழிந்து, ஒரு வேளை மட்டும இரண்டு துளிகள் காதில் விட்டால் சீழ் வடிதல் குணமாகும்.
9. துளசி இலைச் சாறு, கரிசலாங்ககண்ணி இலைச்சாறு இரண்டையும் கலந்து ஒரு வேளைக்கு இரண்டு துளிகள் வீதம் காதினுள் விட்டு வந்தால் இரண்டு நாள்களில் சீழ்வடிதல் குறைந்து விடும்.

### பல் வலி

புழுக்கள் பல்லை அரிப்பதாலும், அசுத்த இரத்தம் கட்டுவதாலும் பல்வலி ஏற்படுகிறது. இதற்கு இரண்டு விதமான மருத்துவமும், பல மருந்துப் பொருட்களும் பயன்படுத்தும் வழக்கம் உள்ளது.

1. கடுக்காய்த் தோலின் சூரணம், ஓமம், இலவங்கம், சிறிது உப்பு இவற்றைப் பொடித்து உமிக்கரியுடன் சேர்த்து பல் துலக்கினால் பல் வலி மாறும்.
2. ஓமம், கிராம்பு இரண்டையும் பொடிச் செய்து அத்துடன் சிறிது கற்பூரத்தையும் சேர்த்துச் சொத்தையுள்ள, வீக்கமுள்ள ஈறுகளின் மேல் அழுத்தி அப்பி வைத்து ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் கழித்து வெந்நீரில் வாயைக் கொப்பளித்தால் பல்வலி நீங்கும்.

### முகப்பரு

முகப்பருவானது எண்ணெய்ப் பசை அதிகமாக இருப்பதனாலும், புரதச்சத்துக் குறைவினாலும், குறிப்பிட்ட பருவத்தில் வருவதாகும். இதற்கு ஐந்து விதமான மருத்துவமும் பல வகையான மருந்துப் பொருள்களும் பயன்படுத்தும் பழக்கம் மருத்துவ இனமக்களிடம் உள்ளது.

1. பருக்கள் உள்ள இடத்தில் புனுகு வாங்கி பூசிவிட்டால் முகப்பரு காணாமல் போகும்.
2. குக்கில் நவநீதம் என்னும் மருந்தைப் பருக்களின் மேல் தடவி விட்டால் முகப்பரு மறைந்து விடும்.
3. தாமரைக்கிழங்கு, அல்லிக்கிழங்கு, அருகம்புல், அதிமதுரம், சந்தனம் ஆகியவற்றைச் சேர்த்து மைப் போல அரைத்து

முகப்பருவின் மேல் பூசினால் முகப்பரு இருந்த இடம் தெரியாமல் போகும்.

4. பசும்பாலில் பூண்டினைப் போட்டுச் சுண்ட காய்த்து, அவற்றை அரைத்து, பூசினால் முகப்பரு மறையும்.
5. கடலை மாவு, சிறுபயறுபொடி இவையிரண்டையும் சேர்த்துத் தண்ணீரில் குழைத்து முகப்பருவின் மேல் பூசி வந்தால் முகப்பரு மறைந்து முகம் அழகாக மாறும்.

### வாய்ப்புண்

வாய்ப்புண் உடலின் வெப்பத்தின் காரணமாக வருகின்றது. இதற்கு மூன்று விதமான மருத்துவ முறையைப் பயன்படுத்து யகின்றனர். பலவகையான மருத்துவப் பொருள்களையும் உபயோகப்படுத்துகின்றனர்.

1. வாய்ப்புண்ணுக்குப் பல்லாவதி லேகியம் மிகவும் உகந்தது, என்று இவ்வின மக்கள் அதையே வாங்கி சாப்பிடுகின்றனர்.
2. மணத்தக்காளி கீரையை துவரம் பருப்புடன் சேர்த்துச் சமைத்துச் சாப்பிட்டால் வாய்ப்புண் மாறும்.
3. தேங்காயைச் சிறிது எடுத்து மென்று கொண்டுப் பாலைக் கொஞ்சநேரம் வாயில் வைத்திருந்து விழுங்க வேண்டும். இவ்விதம் தினமும் காலையிலும் மாலையிலும், தொடர்ந்து மூன்று நாட்கள் சாப்பிட்டால் வாய்ப்புண் குணமடையும்.

### மூலநோய்

மூலநோய்க்கு ஐந்து வகையான மருத்துவமும், பல வகையான மருந்துப் பொருட்களும் இவ்வின மக்கள் பயன்டுத்துகின்றனர்.

1. கொம்பரக்கு என்னும் கடைச்சரக்கை நன்குப் பொடிச் செய்து, அதனைச் சிறிது தேனில் குழைத்துச் சாப்பிட்டால் மூலநோய் குணமடையும்.
2. பச்சைத் தவளையையோ, ஆமையையோ காரம் குறைத்து கறி சமைத்துக் சாப்பிட்டால் மூலநோய் தீரும்.
3. வெங்காயத்தை உப்பு சேர்த்து வதக்கி, வெங்காய சாதம் செய்து தினமும் மூன்று வேளை சாப்பிட்டால் மூலத்தில் இரத்தம் போவது நின்று விடும்.
4. கருணைக் கிழங்கைச் சிறு துண்டுகளாக வெட்டி, அதனுடன் துவரம் பருப்பினையும் சேர்த்து சாம்பார் தயார் செய்து சாப்பிட்டு வந்தால் மூலநோய் குணமாகும்.
5. பொன்னாங்கண்ணிக் கீரையை உள்ளிப் பூண்டுடன் சேர்த்துச் சமைத்து உண்ண ஆரம்ப காலத்து மூல வேதனை நிற்கும். மூன்று மாதம் விடாமல் சாப்பிட்டால் மூல நோய் முழுமையாகக் குணமடையும்.

## மஞ்சள் காமாலை

உடல் வெப்பத்தின் காரணமாக சாதாரணமாகவே மஞ்சள்காமாலை ஏற்பட்டு முற்றிய பின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் தன்மை உடையது. இந்நோய் ஏற்பட்டால் வாய் கசக்கும். நீர் தாகம் அதிகமாக இருக்கும். கண், தோல், முகம் முதலிய பகுதிகள் மஞ்சள் நிறத்தில் மாறும். இதற்கு,

1. கீழாநெல்லி, வெங்காயம், சீரகம் இவை மூன்றையும் நன்றாகப் பால்விட்டு மை போல அரைத்து அதனைத் துணியில் வடிகட்டி, அச்சாறினை உள்ளுக்குள் ஒரு நேரம் அல்லது இரண்டு நேரம் குடிக்கக் கொடுத்தால் காமாலை தீர்ந்து விடும். இந்த மருந்தினைச் சாப்பிட்ட பின்பு மோர் சாதனங்களை அதிகமாக உட்கொள்ள வேண்டும்.
2. கீழாநெல்லியினை நன்கு அம்மியில் வைத்து அரைத்து, ஒரு கழச்சிக் காய் அளவு எடுத்து, பச்சைப் பாலில் (காய்க்காத பாலில்) கலந்து குடிக்க வேண்டும். பாலும், சோறும் ஆகாரமாகக் கொண்டால் காமாலை நோய் குணமடையும்.
3. திராட்சைக் கசாயத்தில் சிவதை வேர் சூரணத்தை வெந்நீரில் கலந்து குடித்தால் காமாலை குணமடையும்.
4. கொத்தமல்லி இலையினை நன்கு இடித்துச் சாறுப் பிழிந்து அரைக்கரண்டி அளவு எடுத்துப் பசும்பாலில் கலந்து குடித்தால் காமாலை குணமாகும்.
5. குப்பமேனி வேரும், வெள்ளைச் சாரணை வேரும் சேர்த்துப் பசும் பாலுடன் நன்கு அரைத்து மூன்று நாட்கள் காலையிலும், மாலையிலும் சாப்பிட்டு வந்தால் காமாலை குணமாகும்.
6. நன்னாரி வேரினை நன்குப் பொடிச் செய்து, அதில் ஒரு சிட்டிகையளவு தேனில் கலந்துச் சாப்பிட்டால் காமாலை நோய் குணமாகும்.
7. முள்ளங்கி இலையினை நன்கு இடித்துச் சாறுப் பிழிந்து வடிகட்டி தினமும் ஒரு சங்களவு சாறு குடித்து வந்தால் பத்து நாளில் காமாலை நோய் குணமாகும்.
8. மஞ்சள் கரிசலாங்கண்ணி இலையை அரைத்துச் சுண்டைக்காய் அளவு எடுத்து இரு வேளை சாப்பிட்டால் காமாலை குணமடையும்.
9. மொந்தன் வாழைப்பழம் சாப்பிட்டு வந்தால் மஞ்சள் காமாலை குணமாகும்.

**தேமல்**

தோலின் மேற்பகுதியில் ஆங்காங்கே வெள்ளை நிறத்தில் சிறுசிறு தழும்புகள் போல் பரவி வரும். இந்நோயினை தேமல் என்று கூறுகின்றனர். இதற்கு,

1. களபமும், எலுமிச்சைப் பழச்சாறும் கலந்துத் தினமும் தேய்த்து வந்தால் தேமல் மாறும்.
2. கீழாநெல்லி, கொத்தமல்லி இவற்றின் இலைகளைப் பால் சேர்த்து அரைத்துச் சிறிது நேரம் கழித்து குளித்தால் குணமாகும்.
3. தொட்டால் சுருங்கி இலையினை இடித்து சாறுப் பிழிந்துத் தினமும் இரு வேளை தேமல் உள்ள இடத்தில் தடவி வந்தால் ஐந்து நாட்களில் குணமாகும்.
4. வெற்றிலையுடன் வெள்ளைப் பூண்டினையும் சேர்த்து மை போல நன்கு அரைத்துத் தடவி வந்தால் இரண்டு நாளில் குணமாகும்.

**சொறிசிரங்கு**

சுகாதாரம் இல்லாத நீரில், மண்ணில், குழந்தைகள் விளையாடுவதால் சொறிசிரங்கு ஏற்படுகிறது. இதனால் உடலில் அரிப்பும் அதனால் உண்டாகும் எரிச்சலும் மிகுந்த துன்பம் தரும். இதற்கு,

1. பூண்டுத் தளையினை நன்கு அரைத்து, எல்லா இடங்களிலும் தடவி விட்டுச் சிறிது நேரம் கழித்துச் சிகைக்காய் போட்டுக் குளித்தால் சிரங்குக் குணமாகும். இதனை மூன்று நாள் செய்தால் பூரணமாய் குணமடையும்.
2. பூவரசு மரத்தின் பூவைப் பறித்து அம்மியில் அரைத்து, அதனை உடலில் பூசி வந்தால் சொறி சிரங்கு குணமாகும்.
3. பழுத்த பூவரசம் இலையினைச் சுட்டு அதனுடன் தேங்காய் எண்ணெய் சேர்த்துக் குழப்பி தினமும் காலையிலும் மாலையிலும் பூசி வந்தால் ஒரு வாரத்தில் சிரங்கு நீங்கும்.
4. மருதோன்றி இலையுடன் மஞ்சள் சேர்த்து அரைத்து அதனுடன் தேங்காய் எண்ணெயும் சேர்த்து நன்கு கலந்து வடித்துத் தினமும் இருவேளை வீதம் ஐந்து நாட்கள் பூசி வந்தால் சிரங்கு குணமடையும்.

**அம்மை நோய்**

காலநிலை மாற்றத்தாலும், உடல் உஷ்ணத்தினாலும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தோர்களின் உடம்பில் அம்மைநோய் என்று அழைக்கப்படும் பொக்கன் நோய் தோன்றுகிறது.

இந்நோயின் அறிகுறியாக இலேசான காய்ச்சலுடன் திடீரென உடலில் கொப்பளங்கள் தோன்றும். இதற்கு,

1. அகத்தி மரப்பட்டையைத் தண்ணீரில் போட்டு ஊறவைத்து அதனைக் குடிநீராக்கி நான்கு வேளைகள் குடித்து வந்தால் அம்மைநோய் குணமடையும்.
2. அதிமதுரம் பொடியுடன் வேப்பங் கொழுந்தையும் சம எடை அளவு சேர்த்து, தண்ணீர் விட்டு நன்கு அரைத்து, பின் குன்றி மணி அளவாய் மாத்திரைப் போன்று தட்டி நிழலில் உலர்த்தித் தினமும் மூன்று வேளை இரண்டு மாத்திரைகள் வீதம் சாப்பிட்டு வந்தால் பத்து நாளில் அம்மைநோய் குணமாகும்.
3. கறி வேப்பிலையும், கசகசாவும், கஸ்தூரி மஞ்சள் ஒரு சிறிய துண்டும் சேர்த்து நன்கு அரைத்து, முகத்தில் தடவி, அரை மணி நேரம் கழித்துக் கழுவ வேண்டும். இவ்வாறு தினமும் செய்து வந்தால் ஒரு வாரத்தில் குணமாகும்.
4. வேப்பிலையுடன் மஞ்சளும் சேர்த்து அரைத்துப் பூசி வந்தால் அம்மைநோய் குணமடையும்.

### மூட்டு வலி

வயது அதிகமாகும்போது இயல்பாகவே மூட்டுவலி ஏற்படுகிறது. இஃது நடக்கும்போது மிகுந்த வலியினை ஏற்படுத்தும். இதற்கு,

1. அத்திப் பாலினைத் தினமும் மூட்டில் பூசி வந்தால் மூட்டு வலி குணமடையும்.
2. ஊமத்தம் இலையை நல்லெண்ணெயில் நன்கு வதக்கி அதனை மூட்டில் தினமும் கட்டி வந்தால் மூட்டுவலி நீங்கும்.
3. தவசி முருங்கை இலையை ஒரு சட்டியில் போட்டு நன்கு சூடாக்கி அரைத்து முட்டில் பூசி வந்தால் மூட்டுவலி மாறும்.
4. விளக்கெண்ணெயில் முருங்கை இலையை நன்கு வதக்கிக் கிளி கட்டி இதமான சூட்டில் முட்டில் ஒத்தடம் கொடுத்து வந்தால் மூட்டுவலி நீங்கும்.

### புண்

உடலில் எதிர்பாராமல் இயற்கையாகவும், செயற்கையாகவும் புண்கள் ஏற்படுகின்றன. இதனை குணப்படுத்த,

1. அத்திப் பட்டையை ஒரு கைப்பிடி அளவு எடுத்து இரண்டு டம்ளர் தண்ணீரில் கொதிக்க வைத்து இறக்கி வடிகட்டித் தினமும் இருவேளை, அந்நீரினால் புண்ணினைக் கழுவி வந்தால் புண் விரைவில் ஆறிவிடும்.

2. காசில் கட்டி, கடுக்காய் இவை இரண்டையும் சம அளவு எடுத்துப் பொடியாக்கித் தேங்காய் எண்ணெயில் கலந்து புண்ணில் இருவேளை பூசி வந்தால் குணமடையும்.
3. காட்டாமணக்குப் பாலைப் புண்ணில் தினமும் இருமுறை தடவி வந்தால் விரைவில் ஆறிவிடும்.
4. குப்பைமேனி இலையை உலர்த்தி, நன்கு பொடிச் செய்து, அதனை நீரில் கலந்துப் புண்ணில் போட்டால் குணமாகிவிடும்.

### தீப்புண்

மனித வாழ்க்கை தீயோடு மிகுந்த தொடர்பு உடையது. எனவே எதிர்பாராத சூழ்நிலையில் தீப்புண்கள் ஏற்படுகின்றன. அதற்கு,

1. தேங்காய் எண்ணெயுடன், சுண்ணாம்பின் தெளிந்த நீரினைக் கலந்து தடவினால் தீப்புண் குணமாகும்.
2. முள்ளங்கிக் கீரையைச் சாறு பிழிந்து தேங்காய் எண்ணெயில் கலந்து தடவி வந்தால் ஒரு வாரத்தில் குணமடையும்.
3. வெந்தயத்தை நன்கு மைப் போல அரைத்துத் தடவி வந்தால் தீப்புண்ணால் ஏற்படும் எரிச்சல் தணியும்.
4. வேப்பங்கொழுந்தைப் பசும் மோர் விட்டு, நன்கு அரைத்து தீப்பட்ட இடத்தில் தடவி வந்தால் ஏழுநாளில் குணமாகும்.
5. புளியும், உப்பும் கலந்து தடவினால் தீப்பட்டபுண் எளிதில் குணமடையும்.

### தலைவலி

தலைவலியானது அதிக மனஅழுத்தத்தின் காரணமாக ஏற்படுவதாக கூறுகின்றனர். இதற்கு,

1. அகத்திக் கீரையினைச் சாறு பிழிந்து, நெற்றியில் பூசி வந்தால் தலைவலி நீங்கும்.
2. இஞ்சியினை நன்கு அரைத்து, தலை வலியுள்ள இடத்தில் கனமான பற்றுப் போட்டால் தலைவலி மாறும்.
3. குப்பைமேனி இலையினை உலர்த்தி, அதனைப் பொடியாக்கி, அந்தப் பொடியினைத் தலையில் தேய்த்து வந்தால் தலைவலி குணமடையும்.
4. கொத்தமல்லி இலையினை சாறுப் பிழிந்து அதனுடன் கற்பூரம் கலந்து, ஒரு நாள் இருவேளை வீதம் பூசி வந்தால் தலைவலிக் குணமாகும்.
5. சந்தனம், இராமிச்சம் வேர், பெருங்காயம், வேப்பம் பிசின் இவற்றை நன்கு இடித்துப் பொடிச் செய்து அதனைத் துணியில் கட்டி நல்லெண்ணையில் நனைத்துத் தீ கொழுத்தி அதன் புகையினைச் சுவாசித்து வந்தால் தலைவலி மாறும்.
6. புதினாக் கீரையினைச் சாறுப் பிழிந்து, அதனை நெற்றியில் தடவி வந்தால் தலைவலி குணமடையும்.

**நீர்க்கடுப்பு**

உடலில் ஏற்படும் அதிக வெப்பத்தின் காரணமாக நீர்க்கடுப்பு நோய் ஏற்படுகிறது. இதற்கு,

1. நன்றாகப் பழுத்த மாதுளம் பழத்தின் சிவந்த முத்துக்களில் கைப்பிடி அளவு எடுத்து, கொஞ்சம், கொஞ்சமாக வாயில் போட்டு மென்று தின்ன வேண்டும். இவ்விதமாகக் காலை, மாலை, மறுநாள் காலை ஆக மூன்று வேளை சாப்பிட்டால் போதும் நீர்க்கடுப்பு நின்று விடும்.
2. கோ மூத்திர சிலாஜது என்னும் மருந்தின் ஒரு மிளகளவு எடுத்து வாயில் படாத வண்ணம் சாப்பிடுவதால் மூத்திரம் சம்பந்தமான எல்லா விதமான நோய்களும் குணமடைந்துவிடும்.

**வயிற்றில் கல் மறைதல்**

1. வயிற்றில் உள்ள கல், கட்டி மறைய வாழைத்தண்டு, வாழைப் பூ, வெள்ளரிக்காய், வெள்ளரி வித்து ஆகியவற்றை மருந்தாகப் பயன்படுத்துகின்றனர். இவற்றைச் சாப்பிடும் போது கல் தானே வெளியே வந்து விடும்.
2. நெருஞ்சியின் வித்தினை இடித்துப் பொடியாக்கி மோரில் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் குடலில் உள்ள எல்லா விதமான கற்களும் கரைந்து விடும்.

**மலேரியா**

1. வெப்பாலையரிசி, பேய்ப்புடல் பச்சிலை, கடுகு, ரோகிணி, இவற்றை நன்றாகக் காய்த்து கசாயம் வைத்து சாப்பிட வேண்டும்.
2. நில வேம்பு, சீந்தில்கொடி, சந்தனக் கட்டை, சுக்கு, நெல்லி முள்ளி, கோரைக் கிழங்கு, சீந்தில்கொடி, இவற்றினைச் சேர்த்து கசாயம் காய்த்து சிறிது தேனும் சேர்த்துச் சாப்பிட்டால் மலேரியா குணமடையும்.
3. வசம்பு, காசுக் கட்டி பேய்ப்புடல், கோரைக் கிழங்கு, சீந்தில்கொடி, நிலவேம்பு, மல்லி, ஆடாதொடை இவற்றை இடித்துச் சாறு பிழிந்து வடி கட்டிக் கொள்ளவும். மாலை சாப்பாட்டிற்கு முன் ஒரு அவுன்ஸ் வீதம் மூன்று நாள் சாப்பிட ஜுரம் குணமடையும்.

**விஷக் கடி**

எதிர்பாராத சூழ்நிலையில் விஷ பட்சிகள் மூலமாக விஷக்கடி நோய்கள் ஏற்படுகின்றன. இதற்கு,

1. தேள் கொட்டின இடத்தில், ஆறு வெங்காயத்தைக் குறுக்கு வசமாக வெட்டி எடுத்து, வெட்டிய பகுதியினைக்

கொட்டுவாயின் மேல் வைத்து அழுத்தி தேய்த்தால் உடைந்த முள் வெளியே வந்து விடும், கடுப்பும் நின்று விடும். இதே போன்று 12 வெங்காயத் துண்டுகளையும் தேய்த்து விட்டால் விஷம் இறங்கி கடுப்பு நீங்கி விடும்.

2. நாயுருவி வேரைப் பச்சையாக மென்று, அதன் சாறை மட்டும் உட் கொண்டால் விஷம் இறங்கி விடும்.
3. தும்பை இலையினைக் கொஞ்சம் எடுத்து, நன்றாக மென்று தின்றும், தும்பை இலையினை நன்கு அரைத்துக் கொட்டு வாயில் பற்றுப் போட, விஷம் இறங்கி கடுப்பு நீங்கி விடும்.

## பெண்கள் தொடர்பான நோய்கள்

1. சித்திர மூலம் என்னும் தாவரத்தின் வேர், சிறிதுபுளி, மிளகாய் இவை மூன்றையும் அரைத்து சாப்பிட்டால் இரண்டு நாள்களில் கர்ப்பமாகி இருப்பவர்களின் கரு கலைந்து விடுவதாக இவ்வினமக்கள் கூறுகின்றனர். மேலும் தினமும் காலையில் வெறும் வயிற்றில் சிறிது துளசியிலையினை சாப்பிட்டு வந்தால் கர்ப்பம் உண்டாகாது.
2. சோற்றுக் கற்றாழையின் தண்டுப் பகுதியின் உட்பகுதியினை அல்லது ஈச்சங்குருத்தினை தினமும் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் பெண்களுக்கான வெள்ளைப்படுதல் நோய் மாறும்.
3. பெண் பருவம் அடையாமல் இருந்தால் தூதுவளையின் வேரினை நன்கு அரைத்து இரண்டு வாரம் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடக் கொடுத்தால் விரைவில் பருவம் அடைவதாகக் கூறுகின்றனர்.

## மனநோய்

பசுவின் நெய் ஒரு கிலோ, பசுவின் மூத்திரம் அரை லிட்டர், பசுவின் கோமியப்பால் கால் லிட்டர், பசுவின் பால் நான்கு லிட்டர், பசுவின் தயிர் ஒரு லிட்டர், இவற்றை எல்லாம் சேர்த்து நன்கு காய்ச்ச வேண்டும். மெழுகு போன்ற பதம் வந்தவுடன் இறக்கி விட வேண்டும். அதனை வடிகட்டி வைத்துக் கொள்ள வேண்டும். அதனை மனக் கோளாறு உள்ளவர்களுக்குக் கொடுத்தால் மிகுந்த பலன் அளிக்கும் என்று கூறுகின்றனர். இதனைப் பஞ்சகவ்யகிருதம் இலேகியம் என்று கூறுகின்றனர்.

## பல்லாவதி லேகியம்

மாந்தளிர், மாம்பழுப்பிலையின் நடுவில் உள்ள ஈக்கு, இஞ்சி, மாதுளம் பழத்தின் தோல், நெற்பொரி, வியவத்தின் வேர், கரும்பு; இந்த ஏழு மருந்துகளையும் வகைக்கு 8 கிராம் வீதம் எடுத்து,

நான்கு லிட்டர் தண்ணீர் விட்டு, அது ஒரு லிட்டர் ஆகும் வரை நன்கு காய்த்து, பின் ஆறியதும் மருந்துகளைக் கசக்கிப் பிழிந்து எறிந்து விட்டு கஷாயத்தை வடிகட்டிக் கொள்ளவும். இக் கசாயத்துடன் வெல்லம் முப்பது பலமும், ஆங்காச் சர்க்கரை பத்து பலமும் இட்டு, நன்கு கரைத்து வடிகட்டிக் கொள்ள வேண்டும். இந்தக் கசாயத்தை நன்கு காய்த்து, கம்பிப் பதத்தில் பாகை இறக்கி வைத்துக் கொண்டு அதில் கோரைக் கிழங்கு, மல்லி, சீரகம், இலவங்கப்பட்டை, சுக்கு, திப்பிலி, மிளகு, இவற்றைச் சேர்த்து, நன்கு கிளறி லேகியமாக்கிக் கொள்ள வேண்டும். இதனைச் சாப்பாட்டிற்கு முன் நெல்லிக்காய் அளவு எடுத்து, தினம் இரண்டு வேளை சாப்பிட்டு வந்தால் உடல் வலிமை பெறும். மெலிந்த உடலை உடையுவர்கள் சாப்பிட்டால் நல்ல உடல் வலிமை ஏற்படுவதாகக் கூறுகின்றனர்.

**சண்ட மாருத செண்பூரம்**

பூரம்-10, லிங்கம்- 8, விரம்- 2, வேண்டியளவு கந்தகம்- 2, இரச செந்தூரம் - 22 முதலியவைப் பயன்படும் பொருள்களாகும்.

முதலில் செந்தூரத்தை மருந்துக் கல்லில் வைத்து, மூன்று மணி- நேரம் அரைக்க வேண்டும். பின்பு லிங்கம், பூரம், கந்தகம், இவற்றை ஒவ்வொன்றையும் வரிசையாகப் போடும் போது மூன்று மணி நேரம் வீதம் அரைக்க வேண்டும். மொத்தம் பதினைந்து மணி நேரம் அரைக்க வேண்டும். அரைத்து முடித்த பின் அதில் அரிசி எடையளவு எடுத்து அதனுடன் தேன், பனை வெல்லம், சேர்த்துச் சாப்பிட வேண்டும், இது எல்லா விதமான நோய்களுக்கும் பயன்படுத்தலாம். இவை அனைத்தும் பாசாணங்களே. எனவே அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தக் கூடாது என்று கூறுகின்றனர்.

மருத்துவத்துறையில் முன்னேறாத இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் அதற்கு முந்தைய காலங்களிலுமே மருத்துவ இனப்பெண்கள் மகப்பேறு வைத்தியம் பார்த்தனர். அறிவியலின் அற்புதமான வளர்ச்சியால் அன்று அவர்கள் ஆற்றிய கடமைகள் பல இன்று நடைமுறையில் காண்பதற்கில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மருத்துவ இனமக்கள் பரம்பரையாகக் கை வைத்திய முறைகளைப் பின்பற்றி வருகின்றனர். இவ் மருத்துவ முறைகள் இயற்கையில் கிடைக்கும் மூலிகைகள், பச்சிலைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இத்தகைய மருத்துவ முறையினால் எந்தவிதமான பக்க விளைவுகளும் ஏற்படுவதில்லை.

## துணைநூற்பட்டியல்

அரவிந்தன், மு.வை., 1977, **தமிழக நாட்டுப்புற பாடல்கள்,** பாரிநிலையம், சென்னை.

அரிமா, சே., நரிப்பையூர், 1994, **வஞ்சிக்கப்பட்ட வைரங்கள்,** திலகவதி பதிப்பகம், சென்னை.

அவினாசிலிங்கம், தி.க., 1956, **கலைக்களஞ்சியம்,** தொகுதி 3, 4 தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னை.

அன்னிதாமசு, 2000, **தமிழர் சமூகவியல்,** உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

இராசமாணிக்கம்பிள்ளை, 1954, **பழமொழி நானூறு,** சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை,

இராமசுவாமிப்புலவர், 1963, **தனிப்பாடல் திரட்டு,** சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

இராமநாதன், ஆறு., 1982, **நாட்டுப்புறப்பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்,** மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

இராமகிருட்டினன், ஆ.ந., 1983, **தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்,** சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை.

இராஜேஷ், ப., 2006, **கன்னியாகுமரி மாவட்ட யாதவ மக்களின் வாழ்வியல்,** பாரதி பிரஸ், நாகர்கோவில்.

இலாசரஸ், ஜி.பி., 1997, **செந்தமிழ் அகராதி,** உலக இலக்கிய கழகம், சென்னை.

இளம்பூரணர் (உ.ஆ.), 2000, **தொல்காப்பியம்,** சைவசித்தாந்த நூற் பதிப்பு கழகம், சென்னை.

எட்கர் தர்ஸ்டன், 1986, **தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்,** தமிழாக்கம் க.ரத்னம், தொகுதி ஒன்று தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

எட்கர் தர்ஸ்டன், 1987, **தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்,** தமிழாக்கம் க.ரத்னம், தொகுதி (2, 3) தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

எட்கர் தர்ஸ்டன், 2003, **தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்,** தமிழாக்கம் க.ரத்னம், தொகுதி (4, 5, 6) தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

எட்கர் தர்ஸ்டன், 2005, **தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்,** தமிழாக்கம் க.ரத்னம், தொகுதி ஏழு தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

ஐயன்பெருமாள் கோனார், 1992, **கோனார் தமிழ்க் கையகராதி,** பழனியப்பா பிர்தர்ஸ், சென்னை.

கந்தசாமி, தய்., 2002, **தனி இருட்டு,** விடியல் பதிப்பகம், கோவை.

கருணாநிதி, மு., 1995, **யாரால்? யாரால்? யாரால்?,** பாரதி பதிப்பகம், சென்னை.

கதிர்வேற் பிள்ளை, நா., 1987, **தமிழ்மொழியகராதி,** ஏசியன் எஜிகேஷனல் லிட், புதுடில்லி.

கலியபெருமாள், கா., 1980, **தமிழர் திருமணமுறைகள்,** உலகத்தமிழ் எழுத்தாளர் பதிப்பகம், சென்னை.

கலியபெருமாள், எஸ்., 2002, **தமிழர் உண்மை வரலாறு,** பாலம் வெளியீடு, சென்னை.

கழனியூரன், 2001, **நாட்டுப்புற வழக்காறுகள்,** ரிஷபம் பதிப்பகம், சென்னை.

காந்தி, க., 1980, **தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்,** உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.

கிருஷ்ண மூர்த்தி, வே. (தொ.கு), 1975, **சோழர் கால உற்பத்திமுறை முதலியக் கட்டுரைகள்,** ஆய்வு வட்ட வெளியீடு சென்னை.

கிருஷ்ணன், ஆர்.வி., 2001, **சங்கீத சாரம்,** இசைத் தகவல் தொடர்பு மையம், சென்னை.

கிருட்டிணசாமி, வே., 1992, **தகவல் தொடர்பியல்,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

கைலாசபதி, க., 1966, **பண்டையத் தமிழர் வாழ்வும் வழிபாடும்,** பாரிநிலையம், சென்னை.

கோசாம்பி, டி.டி., 1989, **பண்டைய இந்தியா அதன் பண்பாடும் நாகரீகமும் பற்றிய வரலாறு,** எஸ்.ஆர். என். சத்யா (மொ.பெ) நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ், சென்னை.

கோபால கிருஷ்ணன், 1956, **மதுரைத் தமிழ்ப் பேரகராதி,** பாகம்-1, 2 அசோக் நகர், சென்னை.

கோவேந்தன், 1998, **தந்தை பெரியார் சிந்தனைக் களஞ்சிம்,** தொகுதி I, கவிதா பப்ளிகேஷன், சென்னை.

சக்திவேல், சு., 1992, **நாட்டுப்புற இயல் ஆய்வு,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

சக்திவேல், சு., 1980, **நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம்,** தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சசிவல்லி, வி.சி., 1989, **பண்டைத் தமிழர் தொழில்கள்,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

சண்முகசுந்தரம், சு., 1980, **நாட்டுப்புற இயல்,** மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

சத்திய மூர்த்தி, அ.ம., 1997, **தமிழ் நாட்டுப்புறக் கதைகள் ஓர் ஆய்வு,** மகேந்திரன் பதிப்பகம், அம்பாசத்திரம்.

சற்குணவதி, 2004, **தமிழக நாட்டுப்புறவியல்,** மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை.

சட்டோபாத்யாய, தேவிபிரசாத், 1999, **உலகாயதம்-பண்டைய இந்தியப்பொருள் முதல்வாதம்-ஓர் ஆய்வு,** சென்னை.

சாமிநாதையர், உ.வே. (பதி.), 1969, **சீவக சிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்,** கபிர் அச்சுகூடம், சென்னை.

சாமுவேல்தாசன், 1987, **திருமண சுரண்டல்கள்,** அமைதி நீதிக்காப்பகம், கன்னியாகுமரி.

சிதம்பரனார், சாமி, 2003, **எட்டுத்தொகையும் - தமிழர் பண்பாடும்,** அறிவு பதிப்பகம், சென்னை.

சிங்காரவேலு முதலியார், ஆ., 1981, **அபிதானசிந்தாமணி,** ஏசியன் ஏஜீகேஷ்னல் சர்வீஸ், புதுதில்லி.

சிவசுப்பிரமணியன், ஆ., 1988, **மந்திரம் சடங்குகள்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

சிவகுமார், நட., 1999, **தமிழகத்தில் சாதி சிலக் குறிப்புகள்,** தடயங்கள், டார்னிக் பதிப்பகம், தக்கலை.

சுகுமாறன், கு., 2005, **சேரர் வரலாறும் மக்கள் வாழ்வியலும்,** சாந்தினி பதிப்பகம், நாகர்கோவில்.

சுதந்திரம், கே.ப., 2004, **தமிழர் தம் மரபுவழி வாழ்வியல் இயக்கத்தின் செயற்பாடுகள்,** பாடுமின் பதிப்பகம், சென்னை.

சுந்தரேசன், சி., 2007, **தஞ்சை வழிபாட்டு மரபுகள்,** குந்தவைப் பதிப்பகம், தஞ்சாவூர்.

சுப்பிரமணியன், சி., 1997, **கொங்கு நாட்டின் மங்கல வாழ்த்துப்பாடல்,** தன்னானே பதிப்பகம், பெங்களூர்.

சுப்பிரமணியன், பா.ரா., 1976, **தமிழக நாட்டுப் பாடல்கள்,** தமிழ்ப் புத்தக நிலையம், சென்னை.

சுரேந்திரன், இரா., 1979, **நாட்டுப்புற இலக்கியம் நலம் தரும் விளக்கம்,** தேன் தமிழ்ப் பதிப்பகம், சேலம்.

செல்ல பெருமாள், ஆ., 1998, **சமூக மானிடவியல்,** இலக்கியத் தேடல், திருநெல்வேலி.

சேகர், கே.எம்., 1987, **தமிழ் இலக்கியத்தில் மருத்துவம்,** அகத்தியலிங்கம் (பதி) ஆய்வுக்கோவை, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் அண்ணாமலைநகர்.

சோமலே, 1981, **தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்,** நேஷனல் புக் டிரஸ்ட், புதுதில்லி.

ஞானசேகரன், தே., 2002, **கொங்கு நாட்டுப்புற தெய்வ வழிபாடு,** அறிவகம், கோவை.

ஞானத்தாய், மு., 2001, **உறவுமுறைப் பெயர்ப் பழமொழிகள் - ஓர் ஆய்வு,** காவியா முத்து பதிப்பகம், காஞ்சிபுரம்.

டாக்டர் நசீம்தீன், 1989, **இடுக்கி மாவட்டப்பழங்குடி மக்களின் வழக்காற்றியல்,** அன்னம் வெளியீடு, சிவகங்கை.

டொமினிக் ஜீவா, 1982, **தற்காலத் தமிழ்ச் சிறுகதைகளில் வறுமையும், சாதியமும்**, கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை.

தர்மராஜ், யோ., 2004, **காணிக்கார பழங்குடி மக்களின் வழக்காற்றியல்**, தென்னிந்திய வரலாற்று ஆவணப்பதிப்பகம், நாகர்கோவில்.

தமிழ்வாணன், 1985, **அதிர்ஷ்ட எண்கள்**, மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

தமிழண்ணல், 1966, **தாலாட்டு**, பாவை நிலையம், காரைக்குடி.

தமிழவன், 1976, **நாட்டுப்புற நம்பிக்கைகள்**, சர்வோதய இலக்கிய பண்ணை, மதுரை.

தாமரைப்பாண்டியன், சு., 2005, **நாட்டுப்புற வழக்காறுகளில் மக்கள் இடம்பெயர்வும் வரலாறும்**, சேகர் பதிப்பகம், சென்னை.

திருநாகலிங்கம், ஆ., 2001, **புதுச்சேரி வட்டார நாட்டுப்புற கதைகள் காட்டும் சமுதாயம்**, திருமகள் நகர், வேலராம்பட்டு, புதுச்சேரி.

திருலோக சீதாராம், 2000, **மனுதர்ம சாஸ்திரம்**, அலைகள் வெளியீட்டகம், சென்னை.

திவாகர முனிவர், 1958, **சேந்தன் திவாகரம்**, சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

தேவநேயப்பாவணர், ஞா., 1966, **பண்டைத் தமிழக நாகரிகமும் பண்பாடும்** (முதல்பாகம்), தமிழ் மண் பதிப்பகம், சென்னை.

நடராசன், நல்., 2000, **கொங்கு வேளாளர் வரலாறு**, பல்லவி பதிப்பகம், ஈரோடு.

நயினார், ம., 1983, **பேரும் பெருமையும்**, சோபிதம் பதிப்பகம், நாகர்கோவில்.

நாகசாமி, இரா., 1969, **தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள்**, தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, சென்னை.

நாராயணசாமி ஐயர், 1976, **நற்றிணை**, சைவசிந்தாந்த நூற்பதிப்புக்கழகம் சென்னை.

பகவதி, கே., 1980, **தமிழர் ஆடைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,** சென்னை.

பக்தவத்சல பாரதி, சி., 1990, **பண்பாட்டு மானிடவியல்,** மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

பரமசிவம், தொ., 1997, **அறியப்படாத தமிழகம்,** சுதர்சன் புக்ஸ், நாகர்கோவில்.

பாலுசாமி, நா. (பதி.), 1986, **வாழ்வியல் களஞ்சியம்,** தொகுதிகள் 1-11, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பாலசுப்பிரமணியன், இரா., 1980, **தமிழர் நாட்டு விளையாட்டுகள்,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

பாஸ்கல் கிஸ்பர்ட், எஸ்.கே., 1964, **சமுகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்,** நாராயணன் ஜே. (மொ.பெ) தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை

பாஸ்கரன், கா., 2003, **தமிழியல் ஆய்வில் மக்கட்பெயர்கள்,** தேன்மொழி பதிப்பகம், கோயமுத்தூர்.

பிங்கால முனிவர், 1968, **பிங்கல நிகண்டு,** கழக வெளியீடு, திருநெல்வேலி.

பிள்ளை, கே.கே., 1975, **தமிழக வரலாறும் மக்களின் பண்பாடும்,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

புதுமைப்பித்தன், 2001, **ஒருநாள் கழிந்தது,** காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.

பெருமாள், அ.க., இராமச்சந்திரன், நா. (பதி.), 2001, **நாட்டார் நிகழ்த்துக் கலைகள் களஞ்சியம்,** தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், சென்னை.

பெருமாள், அ.நா., 1987, **தமிழில் கதைப்பாடல்,** உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

பொன்னம்மாள், ஆர்., 1980, **பாட்டி சொன்னக் கதைகள்,** வானதி பதிப்பகம், சென்னை.

மகாதேவன், கதிர், 1986, **தொன்மம்,** இலட்சுமி வெளியீடு, மதுரை.

மருததுரை, அரு, 2003, **நாட்டுப்புற பண்பாட்டுக் கூறுகள்,** அருணா வெளியீடு, திருச்சிராப்பள்ளி.

மாணிக்கவாசகன், 1998, **புறநானூறு,** உமா பதிப்பகம், சென்னை.

மாற்கு, 2001, **அருந்ததியர் வாழும் வரலாறு,** நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை.

முருகையன், மு., 1999, **காலந்தோறும் சாதி,** காரனோஷன் பதிப்பகம், புதுச்சேரி.

ரகுபதி. கோ., 2006, **ஆதிமருத்துவர் சவரத்தொழிலாளராக்கப்பட்ட வரலாறு,** வல்லினம் பதிப்பகம், புதுவை.

ரசூல், ஹெச்.ஜி., 2000, **மைலாஞ்சி,** சரம் பதிப்பகம், தக்கலை.

ராமானுஜ தாத்தாச்சாரியார், 2005, **இந்து மதம் எங்கே போகிறது?,** நக்கீரன் பப்ளிகேஷன்ஸ், சென்னை.

ரெஜித்குமார், த., 2009, **மரபுவழித் தொழில்கள்,** காவ்யா பதிப்பகம், சென்னை.

ரெஜித்குமார், த., 2011, **புழங்கு பொருள் பண்பாடு,** காவ்யா பதிப்பகம், சென்னை.

ரோஸ்லெட்டானிபாய், ஜே., 2007, **கவியமுதப் போதினி,** ஜோதி பதிப்பகம், பார்வதிபுரம், நாகர்கோவில்.

லூர்து, தே., 1998, **நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்,** நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம் பாளையங்கோட்டை.

வசந்தா, ஜி., 2000, **தஞ்சை மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள் ஓர் ஆய்வு,** தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

வடிவேலன், இரா., 1976, **கொங்குநாட்டு நாட்டுப்புற இலக்கியம்,** அருணோதயம் பதிப்பகம், சென்னை.

வானமாமலை, நா., 1992, **தமிழர் வரலாறும் பண்பாடும்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

வையாபுரிப்பிள்ளை, 1982, **தமிழ்ப்பெயரகராதி,** சென்னை பல்கலைக்கழகம், சென்னை.

வைரமுத்து, இரா., 2004, **கள்ளிக்காட்டு இதிகாசம்,** சூர்யா லிட்ரேச்சர் (பி) லிட், சென்னை.

வேலம்மாள், இரா., 1968, **தமிழ் இலக்கியத்தில் அணிகலன்கள்,** வள்ளுவர் கல்லூரி வெளியீடு, திருநெல்வேலி.

ஸ்டீபன், ஞா., 1997, **கொக்கறை காணிக்காரர் வாழ்வும் பண்பாடும்,** திணை வெளியீட்டகம், நாகர்கோவில்.

ஹார்டு கிரேவ், 1979, **தமிழக நாடார் வரலாறு,** முருகன் பப்ளிகேஷன்ஸ், தூத்துக்குடி.

ஜெயகுமாரி, 2007, **காவியநாடி மருத்துவச் சுவடியில் நாடிக் கூறுகள்,** ஞாலத்தமிழ் பண்பாட்டு ஆய்வு மையம், மதுரை.

**சிறப்பு பெயரகராதி,** 1970, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

**அகநானூறு,** 1981, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ், சென்னை.

**தமிழ் லெக்சிகன்,** 1982, தொகுதி 1-6, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

**தமிழ் லெக்சிகன் சப்ளிமெண்ட்,** 1939, சென்னை பல்கலைக்கழகம், சென்னை.

## ஆங்கில நூற்கள்

Abrahams, Roger and Alan Dandes, 1972, **'Riddltes' Folk lore and Folk life an Introduction,** Ed. Richard M. Dorson, Chicago University Press.

Andre Benteille, 1966, **Caste Class and Power,** Asia, Publishing house, Mumbai.

Banerji, D., 1972, **Social and cultural foundations of Health services systems,** Economics political weekly IX.

Bhagwat, Durga, 1958, **An out line of Indian Folk lore,** Popuiar prakashan, Mumbai.

Caplan, Lionel, 1977, **Social mobility in metropolitan centers:** Christians in Madras city, contributions to Indian sociology.

Dharmatheertha, 2004, **The Menace of Hindu Imperialism, Aloysius**, G. (el) Delhi: Media House.

Edgar, Thurston, 1987, **Castes and Tribes of Southern India,** Vol - 7, Asian Educational Services, Madras.

Eric Patridge, 1956, **Name this Child,** Oxford University Press, Mumbai.

Franz Boas, 1959, **Race Language and culture,** The Macmillan company, New York.

Ganesh, Kamala, 1993, **Boundary walls-caste and woman in a Tamil Community** Delthi: HPC.

Gough, Kathleen, 1981, **Rural society in Southeast Indian,** Londan: combridge.

Hulton, J.H., 1983, **Castes in India,** Oxford University Press, Mumbai.

Jeffery, Roger, 1978, **Allopathic medicine in India-A case of Deprofess-inonalisation**, Economic and political weekly XIII.

Kolenda, Pauline, 1991, **Purity and pollution in Madan,** T.M. (ed) Religion in India, Oxford, New Delhi.

Krishnaswami, S.Y., 1947, **Rural problems in Madras-Monograph,** Madras: Government Press.

Kumar, Dharma, 1987, **The Forgo item sector,** Services in Madras, The Indian Economic and Social History Review, Chennai.

Kunjan Pillai, N., 1931, **Census of India,** Trivancore, Vol. XXVIII.

Malley, L.S.S., 1974, **Indian caste customs,** Vikas publishing house Pvt. Ltd., New Delhi.

Mammen, K., 1942, **Kerala Culture, Its Genesis and Early History,** Trivandrum city press.

Nagam Aiyar, 1989, **The Trivancore State Manual,** Vol (1,11), Asian Educational Services, Chennai.

Nelson, J.H., 1989, **The Madras Country A Manual**, Asian Educational Services, Chennai.

Pillai, K.K., 1975, **The Social History of the Tamils,** University of Madras, Chennai.

Richerd Dorson (Ed), 1972, **Folklore and Folk life An Introduction,** Chicago University Press.

Sadhu Chellappa, 1997, **Varnashrama dharma?,** Agni Ministries, Chennai.

Sharma, K.L., 1973, **Downward Social Mobility Some observations,** Sociological Bulletin.

Singh, K.S., 2001, **People of India Tamil Nadu,** Anthropological Survery of India, East-West Press Pvt. Ltd, Chennai.

Siva kumar, S.S. Chithra, 1979, **Class and Jatiat Asthapuram and Kanthapuram - some comments towards a structure of Interests,** Economic and politician Weekly XIV.

Srinivas, M.N., 1996, **Village, Caste Gender and Methods**, Essays in Indian Social Anthropology, New Delhi Oxford.

Thomas, J.W., 1989, **Tamil Nadu and Health priorities**, Economic and Political weekly XXIV.

Velu Pillai, T.K., 1940, **Trivancore State Mannual Vol. I,** The Government of Trivancore.

William Benton (pub), 1985, **Encyclopedia Brittannica Vol. 9,** Geroge Newnes Limited, London.

**The Encyclopedia Americana,** 1985, Vol. 24, Grolier Incorporated, Connectient.

**The New Encyclopedia Britannica,** 1992, Encyclopedia Britannica, Chicago.

## தகவலாளர் விபரம்

**(பெயர், பாலினம், வயது, சாதிப்பிரிவு, தொழில், முகவரி, தகவல் சேகரித்த நாள் என்ற அடிப்படையில் அமைந்துள்ளது)**

1. அழகுராஜ், ஆ., ஆண், 28, மருத்துவர், சவரத்தொழில், குதிரைப்புந்திவிளை, வில்லுக்குறி (அஞ்சல்), கல்குளம் (வட்டம்), கன்னியாகுமரி (மாவட்டம்), 16.02.06.
2. அம்மாயி, ஆர்., பெண், 70, மருத்துவர், இல்லை, புன்னத்து விளை, மேக்காமண்டபம் (அ) கல்குளம் (வ) கன்னியாகுமரி (மா), 26.06.06.
3. அமராவதி, மா., பெண், 47, நாவிதர், இல்லை, கோயில்தட்டுவிளை, வில்லுக்குறி (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 14.7.06.
4. அருவி, இரா., பெண், 79, காணிக்காரர், கூலிவேலை, மணலிக்காடு, கோதையாறு (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 13.01.09.
5. ஆசிர்வாதம், சு., ஆண், 78, மருத்துவர், சவரத்தொழில், சன் தெரு, களியங்காடு, கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 15.04.08.
6. ஆறுமுகம், இரா., ஆண், 45, நாவிதர், காமராசர் பல்கலைகழகம், வடபழஞ்சி (அ), மதுரை (மா), 14.09.07.
7. இராயப்பன், த., ஆண், 78, கேரளமுதலி, வைத்தியர், தாந்தவிளை, மூலச்சல் (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 7.02.06.
8. இரமேஷ், மு., ஆண், 44, விளக்குத்தலை நாடார், சவரத்தொழில், அரசுவிளை, தக்கலை (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 18.07.06.
9. இராஜேந்திரன், ஆ., ஆண், 67, நாவிதர், சவரத்தொழில், சாரோடு, மூலச்சல் (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 9.7.06.

10. இராதாகிருஷ்ணன், வி., ஆண், 44, செட்டியார், பாலவிளை, கருங்கல் (அ) விளவங்கோடு (வ), கன்னியாகுமரி (மா), 7.8.07.

11. இராமையன், கோ., ஆண், 72 மருத்துவர், சித்தவைத்தியம், மேலத்தெரு, கணக்காரப்பட்டு (அ), சிதம்பரம் (மா), 16.08.07.

12. இரவிசந்திரன், ப., ஆண், 23, நாவிதர், சவரத்தொழில், உண்ணாமலை சிட்டி சாவடி, கோண்டூர் (அ), கடலூர் (மா), 17.08.07.

13. இரமேஷ், இரா, ஆண், 32, மருத்துவர், சவரத்தொழில், புதுச்சேரி மெயின் ரோடு, கொற்கை (அ), கும்பகோணம் (மா), 20.08.07.

14. இராஜமாணிக்கம், செ., ஆண், 49, அருந்ததியர், துப்புரவாளர், மாணிக்கவாசகர்புரம், நாகர்கோவில் (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 10.07.08.

15. இராமு, எஸ்., ஆண், 68, காணிக்காரர், விவசாயம், மணலிக்காடு, கோதையாறு (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 13.01.09.

16. உதயகுமார், சே., ஆண், 47, மருத்துவர், சவரத்தொழில், என்.ஜி.ஓ. காலனி, நாகர்கோவில் (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 24.07.07.

17. ஐயப்பன், செ., ஆண், 40, விஸ்வகர்மா, மரத்தொழில், காரவிளை, வில்லுக்குறி (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 20.02.08.

18. கணேசன், சி., ஆண்; 64, மருத்துவர், ஆசிரியர், புன்னத்துவிளை, மேக்காமண்டபம் (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 24.06.06.

19. கமலம், மு., பெண், 55, மருத்துவர் (காவரா), இல்லை, மருத்துவர் காலனி, காட்டுப்புதூர், அழகியபாண்டிபுரம் (அ), தோவாளை (வ), கன்னியாகுமரி (மா), 17.12.06.

20. கணேசன், ஆ., ஆண், 34, மருத்துவர், சவரத்தொழில், மேலத்தெரு, குருசடி, நாகர்கோவில் (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 18.07.07.

21. கலியமூர்த்தி, வெ., ஆண், 60, மருத்துவர், சவரத்தொழில், மேலத்தெரு, கணக்கரப்பட்டு உத்தம சேரமங்கலம் (அ), சிதம்பரம், (மா), 15.8.07.

22. கணேசன், செ., ஆண், 54, மருத்துவர், சவரத்தொழில், பாலக்கரை, வலங்கைமான் (அ), திருவாரூர் (மா), 18.08.07.

23. கலிம்பா, இரா., பெண், 62, மருத்துவர், பேறுபார்ப்பது (மருத்துவச்சி), மேலவீதி, கணக்காரப்பட்டு, உத்தம சேரமங்கலம் (அ), சிதம்பரம் (மா), 16.08.07.

24. கபீர், சா., ஆண், 60, ஒசா, சவரத்தொழில், A.P.M.A, 4-வது பள்ளித்தெரு, தக்கலை (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 23.7.08.

25. குப்புசாமி, த., ஆண், 68, மருத்துவர், வைத்தியர், மகாதானத்தெரு, மயிலாடுதுறை (அ), நாகை (மா), 19.08.07.

26. குமரஅருள், இரா., ஆண், 35, மருத்துவர், சவரத்தொழில், மேட்டுத்தெரு, சின்ன காலப்பட்டு (அ), பாண்டிச்சேரி (மா), 17.8.07.

27. குமாரசுவாமி, வே., ஆண், 59, கேரளமுதலி, அரசுவேலை, அனந்தம் பாலம், நேசமணிநகர், நாகர்கோவில் (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 19.07.07.

28. குட்டப்பன், சோ., ஆண், 57, மருத்துவர், ஊர்வேலை, புதுத்தெரு, பெருவிளை, பார்வதிபுரம் (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 18.07.07.

29. குமார், ரா., ஆண், 54, மருத்துவர், சவரத்தொழில், சுந்தரபாண்டிபுதூர், தென்காசி (அ), திருநெல்வேலி (மா), 17.05.07.

30. கெச்சனியன், வி., ஆண், 38, கிருஷ்ணவகை, விவசாயம், திருவிடைக்கோடு, வில்லுக்குறி (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 18.02.08.

31. கோபி, ம., ஆண், 76, விளக்குத்தலை நாயர், சவரத்தொழில், நாவிதர் காலனி, பூங்காம்பெரம்பு, மணலிக்கரை (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 29.09.06.

32. கோபி, நா., ஆண், 59 விளக்குத்தலை நாயர், சவரத்தொழில், அண்ணாநகர்காலணி, திருவிதாங்கோடு, அழகியமண்டபம் (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 26.07.06.

33. கோலம்மாள், ஆர்., பெண், 70, நாவிதர், இல்லை, வட்டவிளை பாலம், சூரங்குடி (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 18.07.07.

34. கோவிந்தசாமி, சு., ஆண்., 80, மருத்துவர், மருத்துவம், மேலவீதி, கணக்காரப்பட்டு, உத்தமசேரமங்கலம் (அ), சிதம்பரம் (மா), 16-08-07.

35. கோவிந்தராஜ், து., ஆண், 75, பரியாரி, ஊர்வேலை, காளியம்மன் கோயில்தெரு, பண்டிதசோழ நல்லூர், வலங்கைமான் (அ), திருவாரூர் (மா), 24-08-07.

36. கோமதி, ஆ., பெண், 71, மருத்துவர், மருத்துவச்சி, சன்தெரு, களியங்காடு (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 20.04.08.

37. சசி, ச., ஆண், 28, காணிக்காரர், சவரத்தொழில், மேதகமலை, கோதையாறு (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 13.01.09.

38. சந்திரசேகரன், இரா., ஆண், 56, மருத்துவர், சவரத்தொழில், கீழநல்லம் பூ, இராமநகர் (அ), வலங்கைமான் (வ), திருவாரூர் (மா), 18.8.07.

39. சசிகுமார், க., ஆண், 50, மருத்துவர், ஊர்வேலை, புதுச்சேரி மெயின்ரோடு, கொற்றை (அ), திருவாரூர் (மா), 20.8.07.

40. சரவணன், க., ஆண், 41, நாவிதர், சவரத்தொழில், வில்லியனூர் கோர்ட்மேடு, பாண்டிச்சேரி (மா), 17.08.07.

41. சரஸ்வதி, தா, பெண், 65, விளக்குத்தலை நாயர், மருத்துவச்சி, பூங்காம்பெரம்பு, மேக்காமண்டபம் (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா) 29.9.06.

42. சசிதரன், அ., ஆண், 57, மருத்துவர், சவரத்தொழில், பள்ளிவிளை, நாகர்கோவில் (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 25.07.07.

43. சிவதானு, க., ஆண், 85, மருத்துவர், ஊர்வேலை, தோப்புவிளை, புலியூர்க்குறிச்சி, தக்கலை (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 24.06.06.

44. சிங்காரம், சு., ஆண், 90, பரியாரி, சவரத்தொழில், குஞ்சுதமூர்த்தி விநாயகர் தெரு, உத்தமசேரமங்கலம் (அ), சிதம்பரம் (மா), 15.08.07.

45. சுயம்பு, அ., ஆண், 43, மருத்துவர், பந்தல்கட்டுதல், சுடலைமாடன் கோயில்தெரு, சூரங்குடி (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 18.07.08.

46. சுயம்பு, நா., ஆண், 61, மருத்துவர், ஊர்வேலை, சர்ச்தெரு, ஆசாரிப்பள்ளம் (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 19.07.07.

47. சுந்தரம், ச., ஆண், 72, மருத்துவர், நாதஸ்வரம் வாசித்தல், புன்னத்துவிளை, மேக்காமண்டபம் (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 24.06.06.

48. செல்வகுமார், கோ., ஆண், 25, மருத்துவர், நாதஸ்வர வித்துவான், மணக்காவிளை, வில்லுக்குறி (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 14.02.06.

49. சுவாமிநாதன், ச., ஆண், 83, மருத்துவர், சவரத்தொழில், சரல்விளை, வில்லுக்குறி (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 06.02.06.

50. செல்லப்பன், தா., ஆண், 67, நாவிதர், ஊர்க்குடிமகன், கூட்டமாவு, முளகுமூடு (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 7.7.06.

51. செல்லத்துரை, கு., ஆண், 48, கேரளமுதலி, சவரத்தொழில் கல்லுவிளை, கூட்டமாவு (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 7.07.06.

52. செல்வகுமார், ஆர், ஆண், 31, மருத்துவர், சவரத்தொழில், மருத்துவர் காலணி, காட்டுப்புதூர், அழகியபாண்டிபுரம் (அ), தோவாளை (வ), கன்னியாகுமரி (மா), 17.12.06.

53. செல்லப்பன், எம், ஆண், 30 மருத்துவர், சவரத்தொழில், மேலப்பள்ளம் ரோடு, வில்லுக்குறி (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 15.07.07.

54. செல்வராஜ், க., ஆண், 51, பரியாரி, சவரத்தொழில், கெத்தங் கொடித்தெரு, சிதம்பரம் (மா), 15.08.07.

55. செல்லப்பன், செ., ஆண், 55, மருத்துவர், சவரத்தொழில், 3-ஆம் தெரு, வடக்குகோணம் (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 19.07.07.

56. சோமசுந்தரம், ந, ஆண், 42, மருத்துவர், வைத்தியத்தொழில், மாடங்குடி, கும்பகோணம் (அ), வலங்கைமான் (வ), தஞ்சாவூர் (மா), 18.08.07.

57. சோமன், கே, ஆண், 52, விளக்குத்தலை நாயர், சவரத்தொழில், மருத்துவர் காலணி, காட்டாத்துறை (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 15.08.06.

58. சோமன், க., ஆண், 47, மருத்துவர், மேளம்வாசிப்பது, பண்டாரக்காடு, வில்லுகுறி (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 29.06.06.

59. தனபால், கோ, ஆண், 74, மருத்துவர், வைத்தியம், வேணுகோபாலபிள்ளை தெரு எதிரில், சிதம்பரம் (அ), சிதம்பரம் (மா), 15.08.07.

60. தாசன், சி., ஆண், 52. சாம்பவர், கூலிவேலை, கரிஞ்சான்கோடு, வில்லுக்குறி (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா) 18.03.08.

61. தாசன்., வ, ஆண், 70, கேரளமுதலி, சவரத்தொழில், தென்கரை, புலியூர்க்குறிச்சி, தக்கலை (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 30.06.06.

62. தியாகராஜன், எஸ்., ஆண், 69, மருத்துவர், சவரத்தொழில், குஞ்சுதமூர்த்தி விநாயகர்தெரு, சிதம்பரம் (அ), சிதம்பரம் (மா), 15.08.07.

63. திருநர்வுக்கரசன், கி, ஆண், 45, பரியாரி, ஊர்வேலை, கணக்காரப்பட்டு, உத்தமசேரமங்கலம் (அ), சிதம்பரம் (மா), 16.08.07.

64. திருமலை அம்மாள், கொ, பெண், 75, காணிக்காரர், கூலிவேலை, மணலிக்காடு, கோதையாறு (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 13.01.09.

65. துரை, சு, ஆண், 43, மருத்துவர், சவரத்தொழில், சரல்விளை, வில்லுக்குறி (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 14.02.06.

66. தேவேந்திரன், சி, ஆண், 53, மருத்துவர், நாதஸ்வரம் வாசித்தல், ஈச்சன்விளை, அகஸ்திஸ்வரம் (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 29.06.06.

67. நடராசன், ஆ, ஆண், 30, மருத்துவர், சவரத்தொழில், மருத்துவகாலனி, ஆசாரிப்பள்ளம் (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 19.07.07.

68. நடேசன் பத்ரோஸ், மூ., 65, நாவிதர், ஊர்வேலை, பிருந்தாவனத்தெரு, பண்டாரக்காடு, வில்லுக்குறி (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா) 22.11.07.

69. நாகராஜன்., பி., ஆண், 28, மருத்துவர், ஆசிரியர், பாரதிநகர், வில்லுக்குறி (அ) கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 26.11.08.

70. நீலகண்டன், வே., ஆண், 70, விளக்குத்தலை நாயர், சவரத்தொழில், ராஜ்சலூன், தக்கலை (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 16.07.06.

71. பத்மாதேவி, ச., பெண், 60, நர்யர், இல்லை, நேதாஜிநகர், அருமனை (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 27.11.08.

72. பட்டு, கோ., பெண், 65, மருத்துவர், மருத்துவச்சி, ஒடக்கறிதெரு, தில்லை ஸ்தானம், திருவையாறு (அ), தஞ்சாவூர் (மா), 18.11.07.

73. பகவதியப்பன், செ., ஆண், 49, மருத்துவர், சவரத்தொழில், இந்திராகாலனி, இறச்சக்குளம் (அ), தோவாளை (வ), கன்னியாகுமரி (மா), 25.7.07.

74. பன்னீர்செல்வம், ஆ, ஆண், 41, விளக்குத்தலை நாயர், சவரத்தொழில், மருத்துவர் காலனி, காட்டாத்துறை (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 15.08.06.

75. பண்டாரம், சி., ஆண், 90, மருத்துவர், தவுல்கலைஞர், பண்டாரக்காடு, வில்லுக்குறி (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 22.07.06.

76. பார்வதி, சி., பெண், 95, மருத்துவர், மருத்துவச்சி, மணக்காவிளை, வில்லுக்குறி (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 14.02.06.

77. பாபு, பி., ஆண், 44, விளக்குத்தலை நாயர், சவரத்தொழில், படத்துவிளை, மூலச்சல் (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 8.7.06.

78. பாக்கியம், செ., பெண், 85, மருத்துவர், மருத்துவச்சி, நாவிதர் காலனி, அஞ்சுகிராமம் (அ), தோவாளை (வ), கன்னியாகுமரி (மா), 20.02.07.

79, பிரபாகரன், இரா., ஆண், 35, நாவிதர், சவரத்தொழில், கம்பன்பாகூர், இரண்டாம்தெரு, பாண்டிசேரி (மா), 17.08.07.

80. மணி, ஆர்., ஆண், 40, மருத்துவர், சவுண்ட்ஸ், புன்னத்துவிளை மேக்காமண்டபம் (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 26.06.06.

81. மணி, வி., ஆண், 48, மருத்துவர், சவரத்தொழில், மருத்துவர்காலனி, காட்டாத்துறை (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 15.08.06.

82. மணி. ப., ஆண், 56, நாவிதர், சவரத்தொழில், சிவன்கோயில் தெரு, கீழபுத்தேரி, புத்தேரி (அ), தோவாளை (வ), கன்னியாகுமரி (மா), 25.07.07.

83. மணிகண்டன், சூ., ஆண், 50, ஆசாரி, நகைத்தொழில், காரவிளை, வில்லுக்குறி (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 18.12.08.

84. மாயவன், நா., ஆண், 60, பரியாரி, ஊர்வேலை, மேலத்தெரு, கணக்காரப்பட்டு, உத்தமசேரமங்கலம் (அ), சிதம்பரம் (மா), 16.08.07.

85. முருகன், சு., ஆண், 65, விளக்குத்தலைநாயர், சவரத்தொழில், கீழப்பள்ளம், வில்லுக்குறி (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 26.04.06.

86. முருகன், சு., ஆண், 48, மருத்துவர், சவரத்தொழில், மருத்துவர் காலனி, காட்டுப்புதூர், அழகியபாண்டிபுரம் (அ), தோவாளை (வ), கன்னியாகுமரி (மா), 17.12.06.

87. முருகன், கோ., ஆண், 55, நாவிதர், சவரத்தொழில், மார்க்கெட், கோதையாறு (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 24.07.06.

88. முருகன், ஆ., ஆண், 60, காவரா, மேளம்வாசித்தல், குதிரைப்பந்திவிளை, வில்லுக்குறி (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 16.07.06.

89. முத்தையா, பா., ஆண், 56, நாவிதர், சவரத்தொழில், செட்டிக்குளம், நாகர்கோவில் (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 18.07.07.

90. முத்துராஜ், ம., ஆண், 51, மருத்துவர், சவரத்தொழில், உன்னம் பாறைவிளை, செருப்பாலூர் (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 07.03.07.

91. முருகையன், த., ஆண், 63, மருத்துவர், ஊர்வேலை, மகாதானத்தெரு, மயிலாடு துறை (அ), நாகை (மா), 19.08.07.

92. முகமது பாத்திமாள், பீ., பெண், 90, ஒசாத்தி, இல்லை, A.P.M.A, பள்ளித்தெரு, தக்கலை (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 3.09.08.

93. முகமது யூசுப், சா., ஆண், 50, ஒசா, சவரத்தொழில், ரசக்தெரு, இடலாக்குடி, நாகர்கோவில்(அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 15.08.08.

94. முருகன், கோ., ஆண், 79, மருத்துவர், சவரத்தொழில், மார்க்கெட், கோதையாறு (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 13.1.09.

95. மீனாட்சி, அ., பெண், 63, விளக்குத்தலை நாயர், இல்லை, மருத்துவர் காலனி, பண்டாராக்காடு, வில்லுக்குறி (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 17.05.07.

96. மீனாட்சி, ஐ., பெண், 78, காவரா, மருத்துவச்சி, சுடலைமாடன் கோயில் தெரு, வடக்கு சூரங்குடி (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 18.07.07.

97. மீனாட்சி சி., பெண், 63, விளக்குத்தலை நாயர், மருத்துவச்சி, பிலாவிளை, கருங்கல் (அ), விளவங்கோடு (வ), கன்னியாகுமரி (மா), 17.05.07.

98. மேரி, கா., பெண், 38, மருத்துவர், கூலிவேலை, வட்டவிளை, சூரங்குடி (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 18.07.07.

99. மோகன், ஆர்., ஆண், 43, மருத்துவர், தவுல்கலைஞர், வெள்ளியாவிளை, பாலப்பள்ளம் (அ), விளவங்கோடு (வ), கன்னியாகுமரி (மா), 14.02.06.

100. மோகன்தாஸ், ப., ஆண், 45, மருத்துவர், சவரத்தொழில், ஹைகிரவுண்ட், திருநெல்வேலி (மா), 30.04.07.

101. ராஜன், செ., ஆண், 45, மருத்துவர், சவரத்தொழில், இராமன்புதூர், நாகர்கோவில் (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 7.03.07.

102. ராமகிருஷ்ணன், வே., ஆண், 53. மருத்துவர், நடத்துனர், வத்தக்காவிளை, சூரங்குடி (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 18.07.07.

103. ரோஜா, து., பெண், 39, மருத்துவர், இல்லை, பெரியவிளை, ஈத்தாமொழி, (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 18.07.07.

104. லெட்சுமி, தி., பெண், 56, மருத்துவர், நெசவுத்தொழில், முத்துநகர், செண்பகராமன்புதூர் (அ), தோவாளை (வ), கன்னியாகுமரி (மா), 28.07.07.

105. யாசீர், மு., ஆண், 29, ஒசா, வியாபாரம், வேர்கிளம்பி மேக்காமண்டபம் (அ), கல்குளம் (வ), கன்னியாகுமரி (மா), 30.11.07.

106. வளர்மதி, ரெ,. பெண், 39, மருத்துவர், இல்லை, ஓடக்கறிதெரு, தில்லை ஸ்தானம், திருவையாறு, (அ) தஞ்சாவூர் (வ), திருவாரூர் (மா), 18.11.07.

107. ஜானகி, கு., பெண், 50, மருத்துவர், இல்லை, நாசுவக்குடி, வல்லன்குமாரன்விளை, நாகர்கோவில் (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 24.7.07.

108. ரூபன், தா., ஆண், 51, மருத்துவர், ஊர்வேலை, நல்லத்தம்பிதெரு, நேசமணிநகர், நாகர்கோவில் (அ), அகஸ்திஸ்வரம் (வ), கன்னியாகுமரி (மா), 19.07.07.

109. ஜெயராமன், சு., ஆண், 65, பரியாரி, சவரத்தொழில், வேணுகோபாலபிள்ளைத் தெரு, சிதம்பரம் (மா), 15.08.07.



முனைவர். த.ரெஜித்குமார்

ஆதிக்கச் சாதிகளின் தனித்தக் கூறுகள் மட்டுமே பொது புத்தியில் மீண்டும் மீண்டும் சொல்லப்படுகிறது. ஒடுக்கப்பட்டவர்களைப் போலவே அவர்களது தனித்தக் கூறுகளும் மறைக்கப்பட்டு விடுகின்றன. நூலாசிரியர் மருத்துவர்களின் மறைக்கப்பட்ட வரலாறு, மருத்துவக்கலை, இசைக்கலை, சடங்கியல் முறைமைகள் ஆகியவற்றை வெளிக்கொணர்ந்து தந்துள்ளார்.

முனைவர் யோ. தர்மராஜ்

தங்களைப் பற்றித் தாழ்வுமனப்பான்மையில் உழலும் ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களைப் பற்றிப் பெருமிதம் கொள்வதற்கு அருமருந்தாக அமைவது இந்நூல்.

முனைவர் ஆறு. ராமநாதன்.

